கலைஞரின்
கடிதங்கள்

7

04.08.1978- முதல்
01.07.1979 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 7

04.08.1978 - 01.07.1979

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00

CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

42214
894.811
கலை

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
582. விழுப்புரம் - ஒரு பாடம்!	04-08-1978	23
583. "என்ன விநோதம் பார்!"	06-08-1978	27
584. நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஒரு எச்சரிக்கை!	08-08-1978	31
585. விழுப்புரத்தில் விழாவாம்!	9-08-1978	35
586. வீண் மிரட்டல் வேண்டாம்!	10-08-1978	39
587. நல்ல முடிவு ஏற்பட!	12-08-1978	43
588. "அந்தோ! தேசியமயமே!!"	13-08-1978	46
589. புதிய சிந்தனை தேவை!	14-08-1978	49
590. ஒலிக்க வேண்டிய ஒரே குரல்!	18-08-1978	54
591. "மகாத்மியம்" மறைந்து விடுமா?	19-08-1978	57
592. "என்ன நடக்கிறது டெல்லியிலே!"	20-08-1978	62
593. சட்டம் யார் கையில்?	21-08-1978	66
594. அதுதானே பரிதாபம்!	6-09-1978	70
595. காத்திட்ட கரமும்; களைப்பாற்றிய கரமும்!	15-09-1978	74
596. உறுதி பூணுவோம்!	17-09-1978	77
597. பேரவை நிகழ்ச்சி - ஒரு விளக்கம்!	19-09-1978	79
598. சென்னையில் செப்டம்பர் 24!	22-09-1978	85

599. அராஜகம் - தொடர்கதையா?	29-09-1978	87
600. அலைமோதும் ஆர்வம்!	30-09-1978	90
601. மதுரையின் எழுச்சி!	05-10-1978	96
602. இரு கரம் பிடித்து!	07-10-1978	100
603. துக்ளக் தர்பார்!	09-10-1978	104
604. வாழ்க இளஞ்செழியன்!	10-10-1978	107
605. புதுவை ஜனநாயகம்!	12-10-1978	110
606. நீ சிந்திய இரத்தம்!	13-10-1978	114
607. பாவம்; பலவீன இதயம்!	14-10-1978	118
608. ஒருமித்த உணர்வைக் காட்டிட...!	18-10-1978	122
609. தெளிவான சிந்தனை!	20-10-1978	126
610. அக்டோபர் 23!	22-10-1978	131
611. இரண்டில் ஒன்று!	24-10-1978	135
612. காலம் பதில் சொல்லும்!	25-10-1978	140
613. இரட்டை மனிதர்!	26-10-1978	144
614. அரசு அமைக்கும் பாதை!	29-10-1978	147
615. எச்சரிக்கை கூட்டங்கள்!	10-11-1978	152
616. இவராவது விளக்குவாரா?	14-11-1978	156
617. பாடமா? படுகொலையா?	15-11-1978	161
618. வண்டிக்காரன் மகன்!	18-11-1978	166
619. வாழ்க அந்த அஞ்சா நெஞ்சம்!	26-11-1978	171

620. ஏற்றிடுக, என் வேண்டுகோள்!	28-11-1978	174
621. கடந்த காலம்; மறந்திட வேண்டாம்!	30-11-1978	178
622. எச்சரிக்கையும் - பதிலும்!	04-12-1978	182
623. அம்பேத்கார் நினைவு நாளில்....	06-12-1978	186
624. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்!	09-12-1978	189
625. அணி திரண்டே ஆக வேண்டும்!	11-12-1978	194
626. நானே களப்பலியாகிறேன்!	12-12-1978	198
627. அன்பில் அழைக்கிறார்!	16-12-1978	202
628. கூடுவோம்! கொடி உயர்த்துவோம்!	21-12-1978	206
629. நனைந்தாய் வாழி உடன்பிறப்பே!	27-12-1978	211
630. அந்தக் கனல் அணையாது!	04-01-1979	215
631. நமது துக்கத்தை அறிவிக்கும் நாள்!	06-01-1979	219
632. உண்மை, ஒருநாள் வெளிவரத்தான் போகிறது!	10-01-1979	223
633. அதிசயத்திலும் அதிசயம்!	11-01-1979	228
634. இணைந்து பொங்கட்டும் இந்த நாளில்!	14-01-1979	231
635. வேம்பினும் தாழ்ந்தவனா தமிழன்?	19-01-1979	234
636. உணர்ச்சிப்பூவின் ஒரு இதழ்!	23-01-1979	238
637. யாரை எதிர்க்கிறோம்; இப்போது!	24-01-1979	242
638. அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறோம்!	05-02-1979	246

639. குழப்பத்திற்கு மேல் குழப்பம்!	07-02-1979	250
640. பொய்யிலே பிறந்த புலவர் பெருமான் யார்?	13-02-1979	255
641. தீர்ப்பு எழுதுகிறாரா?	15-02-1979	262
642. திருவண்ணாமலைப் பாசறை!	16-02-1979	264
643. உன் கடமையும் தொடருமென நம்புகிறேன்!	19-02-1979	267
644. முதுகெலும்பை முறித்த படலம்! (1)	02-03-1979	270
645. முதுகெலும்பை முறித்த படலம்! (2)	03-03-1979	273
646. முதுகெலும்பை முறித்த படலம்! (3)	04-03-1979	278
647. செஞ்சிக்கோட்டை வாலிபன்!	14-03-1979	284
648. ஏழை எளியோரை வதைக்கும் சட்டம்!	15-03-1979	288
649. ஈரோடு விழா! எழுச்சி விழா!	17-03-1979	293
650. மாவீரன் மடிந்தான்!	05-04-1979	296
651. அந்தோ! தாய்க்குலமே!	08-04-1979	299
652. நடக்கட்டும் கண்டனக் கூட்டங்கள்!	17-04-1979	303
653. அரிப்பு அடங்கும்! எரிச்சல் கிளம்பும்!	23-04-1979	306
654. வினோபாவின் உயிரைக் காக்க!	24-04-1979	311
655. இதோ ஒரு எம்டன் குண்டு!	28-04-1979	316
656. தஞ்சை, திருச்சி மாநாடுகள்!	05-05-1979	321
657. கல்லில் செதுக்க வேண்டிய கருத்து!	14-05-1979	324

658. என் விழி உன்னைத் தேடும்!	20-05-1979	327
659. அவர் சொன்ன அந்த உதாரணம்!	26-05-1979	331
660. இதோ ஒரு முரண்பாட்டு முழக்கம்!	27-05-1979	336
661. உதவாதினி ஒரு தாமதம்!	31-05-1979	340
662. அந்த வாழ்த்து போதும் எனக்கு!	02-06-1979	345
663. இன்னமும் நடிக்கிறார் அவர்!	06-06-1979	350
664. என் எண்ணமெல்லாம் உன் மீதே!	10-06-1979	354
665. வெற்றிக் காற்று வீசுகிறது!	13-06-1979	357
666. தோழமை அணி தொடர்ந்திடும் பணி!	23-06-1979	360
667. இதோ ஒரு நெருப்புக்கோழி!	24-06-1979	365
668. எதிர்காலப் பலன்களை எட்டுவது எப்படி?	26-06-1979	371
669. ஒப்பிட்டுக் காட்டுக! உண்மைகளை உணர்த்துக!	27-06-1979	376
670. அறிக்கையும் அவலமும்! 1	28-06-1979	379
671. அறிக்கையும் அவலமும்! 2	29-06-1979	382
672. அறிக்கையும் அவலமும்! 3	30-06-1979	388
673. அறிக்கையும் அவலமும்! 4	01-07-1979	394

582. விழுப்புரம் - ஒரு பாடம்!

உடன்பிறப்பே,

விழிகளைக் குளமாக்கி, நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் காட்சிகள் வீதிகள் தோறும்! கதறியழுவோர் - கைபிசைந்து நிற்போர் எங்கள் கதி என்ன என்று ஏக்கக் குரல் எழுப்புவோர்; எரிந்து கிடக்கும் குடிசைகள், கடைகளின் முகப்புகளில் எல்லாம்!

எங்கப்பாவைக் காணோம்!

என் பிள்ளை எங்க போச்சோ தெரியலிங்க!

நாதியத்தவளா நடுத்தெருவிலே நிக்கிறேங்க!

கட்டத் துணியில்லீங்க!

ஒரே மகன் என்னைக் காப்பாத்திகிட்டு இருந்தான். அவன் பிணமாயிட்டானே!

இந்தக் கடைதான் எங்க வயத்துக்கு சோறு போட்டுகிட்டு இருந்துச்சு! அது கருகிக்கிடக்கிற கொடுமையைப் பாருங்க!

இப்படி ஓலமும், அழுகுரலும் கல்நெஞ்சினரையும் கலங்க வைக்கும். சில மணி நேரங்கள்தான் விழுப்புரத்தில் இருந்தோம். நடந்து முடிந்த பெரும் அமளியின் வடுக்களைப் பார்க்கவே இயலாமல் இதயத்தில் கூர்வேல்கள் பாய்வது போன்ற உணர்ச்சியினைப் பெற்றோம் என்றால், அந்த அமளியின் கொடுமைகளை அனுபவித்த மக்களின் துடிப்பும் தவிப்பும் எங்ஙனம் இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை.

மின்னல் வேகத்தில் திடீரென சில இடங்களில் யாரும் எதிர்பாராவண்ணம் நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுவது உண்டு. அதனை ஏன் முன்கூட்டித் தடுத்திருக்க நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது என்று வினா எழுப்புவதில் பொருளிருக்க முடியாது; நான் ஏற்றுக் கொள்கிறேன் அந்தக் கருத்தை!

ஆனால், விழுப்புரம் சம்பவம் பயங்கர உருக் கொள்வதற்கு முன்பு அதற்கான அடையாளங்கள் தெளிவாகத் தென்பட்டிருக்கின்றன. தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்கான காலமும் நேரமும் போதிய அளவுக்கு - அரசுக்கும், அதிகாரிகளுக்கும் இருந்திருக்கிறது! இருந்தும் அலட்சியப்போக்கின் காரணமாக இத்தகைய படுகொலைகளும், தீவைப்புக்களும் தடுப்பதற்கு இயலாமற் போய்விட்டன என்பதுதான் அனைவரது கருத்தாக இருக்கிறது.

கடந்த ஜூலைத் திங்கள் 23-ஆம் நாள் ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடக்கிறது! அதனையொட்டி கொதிப்பும் குமுறலும் எழுகிறது! வன்முறைகள் கிளர்ந்தெழுகின்றன! 24-ஆம் நாள் முதல் காலவரையின்றிக் காய்கறி மார்க்கெட்டுகள் மூடப்படும் என்று வியாபாரிகள் துண்டு அறிக்கை வெளியிட்டு அவ்வாறே கடைகளை மூடுகிறார்கள். அதுவரையில் கடலூரில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கண்விழிக்கவில்லை. மாவட்ட காவல்துறை அதிகாரியும் அதுபற்றி அக்கறை காட்ட முன்வரவில்லை!

அரசாங்கமோ சென்னையைவிட்டு, மதுரையைத் தலைநகரமாக்கிக் கொண்டு மாநகராட்சித் தேர்தல் வேலைகளில் அதிகாரிகளை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறது! மதுரையை மீட்கும் சுந்தரபாண்டியன்; கடலூர் பாண்டியனை (கலெக்டர்) விழுப்புரத்தை மீட்கச் சொல்லி 24-ஆம் தேதியே அனுப்பியிருந்தால் - பனிரெண்டு அரிஜன உயிர்கள் மீட்கப்பட்டிருக்கும்! தீயின் நாக்குகளில் இருந்து வீடுகள், குடிசைகள், கடைகள் மீட்கப்பட்டிருக்கும்.

அல்லது கடலூர் பாண்டியனாவது கொஞ்சம் இரக்க உள்ளம் கொண்டு தானாக முன் வந்து 24-ஆம் தேதி மாலையே தடை உத்திரவைப் பிறப்பித்திருந்தால் நிலைமைகள் இந்த அளவு மோசமாகியிருக்காது!

25-ஆம் தேதி காலையில் தீவைப்புக்களும் கொலைகளும் அடுக்கடுக்காக நடைபெறத் தொடங்குகின்றன. அன்று மாலைதான் மாவட்ட ஆட்சித் தலைவர் சாவதானமாகத் தடையுத்தரவைப் பிறப்பிக்கிறார்.

பிணங்கள் விழுந்த பிறகு, வீடுகள் கடைகள் நாசமுற்ற பிறகு இரண்டு அமைச்சர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அதிலும் அந்த மாவட்டத்து அமைச்சர் போனதாகத் தெரியவில்லை.

அந்தத் தொகுதியில் ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினரும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியதாகத் தெரியவில்லை.

சென்ற அமைச்சர்கள் இருவரும் விடுதியிலேயே தங்கிவிட்டு, நிருபர்களுக்கு அறிக்கைகளைக் கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டனர்.

முதலமைச்சர்தான் போகவில்லை; அவருக்கு அடுத்துள்ள நிதியமைச்சராவது சென்றிருக்கக் கூடாதா?

முதலமைச்சரைக் கேட்டால் சொல்கிறார்; அண்ணா முதல்வராக இருந்தபோது கீழவெண்மணியில் அரிஜனங்கள் கொளுத்தப்பட்டனர்; அதற்கு அண்ணா செல்லவில்லை; கருணாநிதியைத்தான் அனுப்பினார் என்பதாக!

இப்போதும்; உடன்பிறப்பே! என்னை அண்ணாதான் அனுப்பி வைத்தார்! அந்த உணர்வுகள் மங்கிப் போய்விடுமா என்ன?

கீழவெண்மணிச் சம்பவத்தின் போது அண்ணா, கடுமையான வயிற்றுவலியோடு இருந்தார். நானும், திருமதி சத்தியவாணிமுத்தும் அண்ணாவை வரவேண்டாமென்று கூறிவிட்டு தஞ்சை சென்று மன்னனையை அழைத்துக்கொண்டு கீழவெண்மணிக்குச் சென்று வந்தோம்.

தஞ்சையில் புயலும் - வெள்ளமும் என்று கேள்விப்பட்டவுடன், மதுரை மாநாட்டிலேயிருந்த அண்ணா, உடனடியாக மாநாட்டுப் பந்தலிலேயிருந்து அன்பிலையும், மன்னனையையும் அழைத்துக் கொண்டு தஞ்சை நோக்கி விரைந்தோடினாரே; அத்தகைய முன்மாதிரிகளை அண்ணாவிடமிருந்து கற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அண்ணாகூட கீழவெண்மணிக்குச் செல்லவில்லை யென்பதையா விழுப்புரத்திற்கு எம்.ஜி.ஆர். செல்லாததற்கு முன்மாதிரியாக எடுத்துக் கொள்வது!

முதல்வர் விழுப்புரம் வழியாகத்தான் மதுரையிலிருந்து வந்திருக்கிறார். 30-7-1978 அன்று விழுப்புரம் வழியாகக் கூட

திருச்சி சென்று திருச்சியில் சுரங்கப்பாதை திறப்பு விழாவிலே கலந்து கொண்டிருந்திருக்கலாம்.

முதல்வர் தான் போகவில்லை; இரண்டாமவர் நிதியமைச்சராவது போகக்கூடாதா? அவரோ, மதுரையிலே தி.மு.க. பிணம் விழுந்துவிட்டது - அதைத் தூக்க நாலைந்து பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று வக்கணை பேசிக்கொண்டிருந்தாரே தவிர, விழுப்புரத்தில் உண்மையாகவே விழுந்த பிணங்களைக் கண்டு பதறியதாகவே தெரியவில்லை.

மாவட்ட ஆட்சித் தலைவர் பாண்டியனாரோ; நான் அவரைக் காண அவர் தங்கியிருக்கும் விடுதிக்கே வருகிறேன் என்று சொல்லியும் கூட, நான் அங்கு வருகிறேன் என்று சொன்னவுடனே விடுதியை விட்டே வெளியேறி விடுகிறார். நான் ரௌண்டு போகிறேன். முடிந்தால் எங்காவது ரோடில் கருணாநிதியை சந்திக்கிறேன் என்று நமது நண்பர் கிருஷ்ணமூர்த்தியிடம் திருவாய் மலர்ந்தருளிவிட்டுப் போய்விட்டாராம் அந்தப் பொறுப்புள்ள (?) அதிகாரி!

விழுப்புரம் நிலைமைகளையும் அரசு இனிமேலாவது விரைந்து செயல்பட்டு நிவாரணப் பணிகளை அளிக்க வேண்டுமென்பதையும், அமைதிகாக்க அனைவரும், குறிப்பாக நமது கழக உடன்பிறப்புக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்பதையும் நான் நேற்று விடுத்த அறிக்கையில் தெளிவாக்கியிருக்கிறேன்.

சாதிபேதக் காழ்ப்புணர்ச்சிகளை விரட்டியடிக்கும் முயற்சியிலும், மதபேத வெறுப்புக்களை அகற்றும் பணியிலும் பெரியாரும், அண்ணாவும் தமிழ்நாட்டில் பெரு வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்த வெற்றி நிலைக்கும் வண்ணமும், அவர்கள் இலட்சியம் நிறைவேறும் வண்ணமும் - தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் கட்சிச் சார்பற்ற முறையில் தொண்டாற்ற நாமனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது!

அன்புள்ள,

மு. க.

(04-08-1978)

583. "என்ன விநோதம் பார்!"

உடன்பிறப்பே,

இன்று நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அன்றாடம் ஏடுகளில் வெளிவரும் செய்திகள் - இவற்றைக் காணும்பொழுது என்ன விநோதம் பார்! என்று கூறத் தோன்றுகிறதல்லவா?

டெல்லியில் நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் தேசாய்-சரண்சிங் கடிதங்கள் அவையில் வைக்கப்பட வேண்டுமென்று பெருத்த அமளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கடிதங்களை சபாநாயகர் அறையில் வைத்து சில உறுப்பினர்கள் பார்த்து விட்டனர். அதில் ரகசியம் எதுவுமில்லை. பெரிய விவகாரமும் இல்லை. அதனால் அந்தக் கடிதங்களை சபையில் வைக்கத் தேவையே இல்லை என்று ஆளுங்கட்சியான ஜனதாவும், அ.தி.மு.க. போன்ற கட்சி உறுப்பினர்களும் விளக்கமளிக்கிறார்கள்.

பெரிய விவகாரமோ, ரகசியமோ இல்லாத கடிதங்களை சபாநாயகர் அறையில் சில உறுப்பினர்கள் மட்டும் படித்திருக்கும்போது, அவற்றை எல்லா உறுப்பினர்களும் தெரிந்து கொள்கிற அளவுக்கு அவையில் வைத்துவிட்டால் என்ன? - என்பது எதிர்க்கட்சிகளின் கேள்வி! இதே கேள்வியை ஜனதா உறுப்பினரான ராஜ்நாராயண் அவர்களும் அவையில் எழுப்பியிருக்கிறார்.

தேசாயின் மகன் மீது ஊழல் புகார்களை எழுப்பி சரண்சிங் கடிதம் எழுதியதாகவும் - பதிலுக்கு சரண்சிங் குடும்பத்தினர் மீது ஊழல் புகார் எழுப்பி தேசாய் கடிதம் எழுதினார் என்றும் செய்திகள்!

காலப்பெட்டகத்தில் என்ன விபரங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதை வெளியிட, ஒருகாலத்தில் மறுத்துவிட்ட இந்திரா காங்கிரசும், அந்த நேரத்தில் அந்தக் கட்சிக்குத் துணை நின்ற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும், இன்றைக்கு தேசாய்-சரண்சிங்

கடிதங்கள் அம்பலமாக வேண்டுமென்பதில் கச்சையை வரித்து கட்டிக் கொண்டு நிற்கின்றன.

நெருக்கடி நேரத்தில் அரசியல் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் மீது விசாரணைகளும் - வழக்குகளும் பாயவிடப்பட்டன என்று நாடாளுமன்றத் தேர்தலின் போது அறிவித்த ஜனதா தலைவர்கள், அமைச்சர்களானதும் - வடக்கேயுள்ள எதிர்க்கட்சிகளின் மீது நெருக்கடி காலத்தில் தொடரப்பட்ட வழக்குகளையும், விசாரணைகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டனர். ஆனால் தெற்கே - தமிழ்நாட்டில் தி.மு.கழகத்தின் மீது நெருக்கடி காலத்தில் தொடுக்கப்பட்ட விசாரணைகள், வழக்குகள், புகார்கள் ஆகியவற்றைப் பற்றி ஜனதா கட்சி, டெல்லிச் சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

தி.மு.கழகத்தை நெருக்கடிக் காலக் கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒரு கட்சியாகவே ஜனதா அரசு, கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை! நெருக்கடியின் அஸ்தமனத்தின் போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது - ஜனதாவில் உள்ள அத்தனை தலைவர்களும் ஊழல் பேர்வழிகள் - கொள்ளைக்காரர்கள், கொலை வெறியர்கள், லஞ்சம் வாங்கியவர்கள் என்று புனிதர் எம்.ஜி.ஆர் அவர்களால் விமர்சிக்கப்பட்டார்கள். இன்று நிலைமை வேறு!

புதுவை மாநிலத்தில் ஒரு பெண் அதிகாரியின் மீது அமைச்சரும், அதிகாரியொருவரும் தங்கள் இஷ்டத்துக்கு இணங்காத காரணத்தால் பழிவாங்க முற்பட்டனர் என்ற புகாரை வைத்து ஆறு ஏழு மாத காலமாக நடைபெற்று வருகிற பெரிய பிரச்சினையின் பேரில் கவர்னர், ஒரு விசாரணை உத்திரவைப் பிறப்பித்தார். நீதி தன் பாதையில் செல்லவேண்டும் - சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும் - என்று ஒரு நாளைக்கு ஓராயிரம் தடவை உதட்டளவில் கூறிக் கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். கவர்னர் விடுத்த விசாரணை உத்திரவுக்கு உடனடியாக மறுப்பு வெளியிடுகிறார்; அவசரப்பட்டு செய்த காரியம் என்கிறார்.

புதுவையின் முதலமைச்சர் இருக்கிறாரே; அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? பிரதமர் தேசாய் கருத்தொன்றை மேற்கோள் காட்டுகிறார் , உயர்ந்த பதவியில் இருப்போர் மீது இப்படிப் புகார்கள் கூறுவது நல்ல மரபாகாது! ஆகா! ஆகா! அட்சரம்,

லட்சம் பெறும்! இப்படிச் சொல்லத் தோன்றுகிறதல்லவா நமக்கு! இன்று புதுவையின் முதல்வருக்குத் தோன்றிய இந்த ஞானோதயம் அவரது தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 1972-ஆம் ஆண்டு தோன்றவில்லையே ஏன்? அந்தப் புகார்களில் இருபத்தி எட்டை மட்டும் பொறுக்கியெடுத்து அப்போது எம்.ஜி.ஆர். பக்கம் சென்றுவிட்ட சத்தியவாணிமுத்து, மதுரை முத்து போன்ற சிலரை விட்டுவிட்டு மற்றவர்கள் மீது 1976-இல் சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது! நெருக்கடி காலம் முடிந்த பிறகும் தி.மு.க. மீது கமிஷன்கள் வழக்குகள் நீடிக்கின்றன.

சரண்சிங் புகார் எழுப்பிய பிறகு மொரார்ஜிக்கு ஏற்பட்டுள்ள அந்த ஞானோதய கருத்துக்களை, தி.மு.க. மீது நடத்தப்பட்ட, அல்லது நடத்தப்படும் தாக்குதல்களின் போது மட்டும் உதயமாகாத காரணம் என்ன?

விசாரணை என்றால் அதற்கு வணங்க வேண்டும் - நீ தூய்மையானவன் என்பதை நிரூபிக்க வேண்டும் - என்று மற்றவர்களைப் பார்த்து உபதேசம் செய்துகொண்டிருந்த எம்.ஜி.ஆர். இன்று தனது கட்சி அமைச்சர் மீது விசாரணை என்றதும் டெல்லியை மிரட்டுவானேன்? இவரிடமுள்ள பத்தொன்பது ஓட்டுக்களை எண்ணிப் பார்த்து டெல்லியும் பெருமூச்சு விடுகிற நிலைமை ஏற்படுவானேன்?

மத்திய அரசு, மாநில அரசுகளை இப்படிப்பட்ட புகார்களின் அடிப்படையில் விளக்கம் கேட்பது, விசாரணை வைப்பது மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிப்பதாகும் என்று இங்கிருந்த தி.மு.க. அரசு, மத்திய அரசுக்கு எழுதியபோது அதனை வன்மையாக மறுத்து வாய்ப்பறை கொட்டியவர்கள் அ.தி.மு.க.வினர் அல்லவா?

அதே நிலை, தேவராஜ் அர்சுக்கு வந்தபோது - அவரும் மத்திய அரசு, மாநில அதிகாரங்களைப் பறிக்கக்கூடாது என்ற கருத்தில் தானே ஜனதா அரசுக்குக் கடிதம் எழுதினார்.

என்னே விநோதம் பார்த்தாயா? இங்கே நம் மீது சர்க்காரியா கமிஷன் அறிக்கை தரப்பட்டாகிவிட்டது. அந்த அறிக்கையை நம்மீது புகார் கூறியவர்களிடமே அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு கூறிவிட்டது!

அந்தப் புகார் பட்டியலில் இடம் பெற்று, அறிக்கையிலும் இடம் பெற்றிருப்பவர்கள் மிகப் பெரும்பாலானோர் இன்று நம் கழகத்தில் இல்லை! அவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். கட்சியில் இணைந்தது மட்டுமல்ல; அந்தக் கட்சியிலும் ஆட்சியிலும் பொறுப்பான பதவிகளிலும் வீற்றிருக்கிறார்கள்.

குண்டர்களின் அரசன், லஞ்ச லாவண்யப் பேர்வழி; என்று நாமல்ல நண்பர் எம்.ஜி.ஆர். ஜனாதிபதியிடம் கொடுத்த புகார்ப் பட்டியலில் வர்ணனை செய்திருக்கிறாரே; அவர் விரைவில் மீண்டும் மாநகரத் தந்தையாகப் போகிறார்! குண்டர்களின் அரசனே! என்று எந்த வாய் கூறியதோ - அதே வாய்; வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை அவர்களே! என அழைக்க இருக்கிறது! ஊழல் ஒழிக்கப்படும் அழகு இது!

டெல்லியில் இந்திராகாந்தி மீது தனிக்கோர்ட்டு விசாரணை என்கிறார்கள்! இன்னொரு பக்கத்தில் சரண்சிங்-தேசாய் கடித விவகாரம் வெளிவந்தால் ஊழல்கள் வெளிப்படும் என்கிறார்கள்!

இங்கே சர்க்காரியா கமிஷன் அறிக்கை மீது விசாரிக்கத் தனிக் கோர்ட்டு என்கிறார்கள்; அறிக்கைக்கு ஆட்பட்டவர்களில் பல பேரை அரவணைத்துக் கொண்டவாறே!

புதுவையில் விசாரணை என்றால் புலி என உறுமுகிறார்கள்!

இவற்றையெல்லாம் பார்க்கும்போது என்ன விநோதம் பார்! என்று சொல்லத்தானே தோன்றுகிறது!

அன்புள்ள,

மு. க.

(06-08-1978)

584. நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஒரு எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் எந்த வகையில் நுழைந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் அடிமைகளாகவே ஆக்கப்படுவார்கள் என்ற ஆபத்தை உணர்த்தி நாற்பது ஆண்டுக் காலமாக தமிழகம் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க்கொடி, உயர்த்தி நிற்கிறது. 1938-ஆம் ஆண்டு இந்தி, தமிழ்நாட்டில் ராஜாஜி அவர்களால் கட்டாயப் பாடமாகக் கொண்டு வரப்பட்டது. அப்போது பெரியார் தலைமையில் பெரும் எதிர்ப்பு உருவாயிற்று. இந்திப் பரவுக! தமிழ் வாழ்க! என்பது அன்றைய காங்கிரஸ் கட்சியின் முழக்கமாக இருந்தது. அவர்கள் நடத்துகிற கூட்டங்களின் விளம்பர அறிக்கைகளின் மேல்பகுதியில் இந்தி பரவுக! தமிழ் வாழ்க! என்றே அச்சடித்து வந்தனர்.

இந்திக்காரர்களைப் போலவே தமிழ்நாட்டாரும் இந்தியைப் படித்துக் கொண்டால் வேலை வாய்ப்புக்களில் இடம்பெறுவதற்குத் தடையிராது - எனவே தமிழர்களின் வாழ்க்கை பாதிக்கப்படமாட்டாது என்பது அவர்களின் அன்றைய வாதமாக இருந்தது.

இந்த வாதம் செய்து கொண்டிருந்தவர்கள், அல்லது இப்போதும் செய்து கொண்டிருப்பவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள், அல்லது மறைத்து விடுகிறார்கள். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், இந்தியிலேயே எல்லாத்துறை அறிவையும் பெற்றிடவும் - தேர்வுகளில் முன்னணியில் நின்றிடவும் இயல்பாகவே தகுதியினைப் பெற்றுவிட முடியும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், இந்தி கற்றுக் கொண்டாலும் கூட, தேர்வுகளில் வெற்றி பெற்றாலுங்கூட இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் இந்தியாவில் உழன்றிட வேண்டும். எனவேதான் இருநூறு ஆண்டுக்காலத்திற்கு மேலாக இந்தியாவில் எல்லாத்துறைகளிலும் புழக்கத்திற்கு வந்துவிட்ட ஆங்கிலம்

இந்தியாவின் தொடர்பு மொழியாக இருந்திட வேண்டும் என்ற கருத்து எடுத்து வைக்கப்பட்டது. வேலை வாய்ப்புக்கள் பெற்றிட ஆங்கிலம் கற்றிட வேண்டும் என்ற நிலையிருக்குமானால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவன், எப்படி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றாக வேண்டுமோ; அதேபோல இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவனும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றாக வேண்டும். இது இந்தியாவில் இந்தி பேசுகிற மாநில மக்களுக்கும் - இந்தி பேசாத மாநில மக்களுக்குமிடையே ஒரு சம நிலையை பாதுகாக்க உதவும்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தமிழன் தொடுத்த போர் இன்னும் முடியவில்லை. 1938-லும் அந்த ஆண்டினைத் தொடர்ந்து வேறு சில கால கட்டங்களிலும் இந்தி எதிர்ப்புக் களம் காண வேண்டிய சூழ்நிலை தமிழகத்தில் எழுந்தது! உச்சகட்டமாக 1965-ஆம் ஆண்டு மொழிப்புரட்சி, தமிழின வரலாற்றில் மறக்க முடியாத அத்தியாயமாயிற்று! 1967-இல் தி.மு.க. ஆட்சி அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்தது. 1968-இல் மீண்டும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் தமிழகம் குதித்தது - முதல்வர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலே தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கையை அறிவித்து இந்திக்குத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இடமில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

1938-இல் ஆயிரக்கணக்கானோர் சிறையில் வாடியும் - தொடர்ந்து பல களங்களில் இந்தியை எதிர்த்து இரத்தம் சிந்தியும் - 1965-இல் மொழி காக்க எட்டுத் தியாக மறவர்கள் தீக்குளித்துச் செத்தும் - நூற்றுக்கணக்கான பிணங்கள் வீழ்ந்தும் - இன்னமும், மொழிகாக்கத் தமிழினம் தன்மானப் போர் நடத்த தடந்தோள் தட்டி நிற்கின்ற காட்சியினைக் கண்ட பிறகும் இந்தியைத் தமிழ்நாட்டில் நுழைக்கின்ற முயற்சியில் மத்தியில் இருப்போர் முனைந்திருப்பது - நமது உணர்ச்சிகளை மதிக்காத செயல் என்றுதான் கூற வேண்டியதிருக்கிறது.

இந்தித் திணிப்பு இல்லை என்று அறிக்கைகளும், ஆனால் ஒருநாள் இந்தியை எல்லோரும் படித்தே ஆகவேண்டும் என்ற அறிவுரைகளும் மத்தியிலிருந்து மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன. அண்மையில் நாடாளுமன்றத்தில் கழகத்தின் சார்பில் நமது துணைப் பொதுச்செயலாளர் ஆசைத்தம்பி அவர்கள்

இந்தித் திணிப்புக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துப் பேசியதை ஏடுகளில் கண்டோம். ஒரு காலத்தில் இந்தியை வரவேற்கும் நிலையினராகத் தங்களைக் காட்டிக் கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த வேறு சில அரசியல் கட்சிக்காரர்களும் இந்தித் திணிப்பை எதிர்த்து முழக்கமிட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இந்தித் திணிப்புக்கு எதிராக எடுத்துவைத்த வாதங்களுக்குப் பதிலளித்த பிரதமர், வழக்கம்போல் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்ற உறுதியைத்தான் வழங்கியிருக்கிறார். இந்த உறுதிமொழி, நேரு காலத்திலிருந்து தரப்பட்டு வருகிறது! நேரு தந்த உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது தி.மு.கழகத்தின் நீண்ட காலக் கோரிக்கை! அதுபற்றி மத்திய அரசு, வாய் திறப்பதாக இல்லை.

1976-ஆம் ஆண்டு நெருக்கடி காலத்திலே ஆட்சி மொழிச் சட்டத்தின் பிரிவுகள் அனைத்திலுமிருந்து தமிழகத்திற்கு முழுமையான விதிவிலக்கு தந்திருந்தனர். எதிர்த்துப் பேச முடியாமல் தளை பூட்டப்பட்டிருந்த அந்த காலத்திலேகூட தமிழ்நாட்டு மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்வுக்காக மத்திய அரசு அச்சம் கொண்டிருந்தது. அதனால் தமிழகத்திற்கு அத்தகைய விதி விலக்குகள் தரப்பட்டிருந்தன.

ஆனால் அந்த விதி விலக்குகளைத் தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களும் - மத்திய அரசு மேற்கொண்டுள்ள மற்ற நிறுவனங்களும் - கடைப்பிடிப்பதாகவே தெரியவில்லை. அந்த விதிவிலக்குகள் முற்றிலும் மீறப்பட்டு வருகின்றன.

அஃதன்னியில் பொதுத்துறை நிறுவனத் தொழிலாளர்கள், இந்தி வகுப்புக்கு வருமாறும் இந்தி படிக்குமாறும் சுற்றறிக்கைகள் அனுப்பப்படுவதோடு, தவறினால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் ஆட்சி மொழித்துறை கட்டளை பிறப்பித்திருக்கிறது!

இந்தித் திணிப்பு இல்லை என்று ஒரு பக்கம் கூறிவிட்டு, இந்தி படிக்காவிட்டால் வாழ்வில்லை என்ற நிலைமையை இன்னொரு பக்கம் உருவாக்குகிற இந்த இரட்டை வேடத்தைத் தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்க முடியாது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் - தாய்மொழியும் ஆங்கிலமும் என்ற இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. இந்தியையும் இணைத்துக்கொண்டு மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவு வழங்குகிறவர்கள் இந்தித் திணிப்பை எதிர்க்கும் முழுமையான வலிவு பெற்றவர்கள் என்று ஏற்றுக்கொள்ள இயலாது! ஏனெனில் அவர்கள் தங்களையறியாமலேயே மும்மொழி என்ற பெயரால் இந்திக்குக் காலூன்ற நல் வாய்ப்பினைத் தங்கள் மாநிலங்களில் ஏற்படுத்தி வருகிறார்கள். அதன் விளைவு ஆங்கிலம் தேய்ந்து, இந்தி ஆதிக்கம் பரவி, தாய்மொழியாளர்கள் இரண்டாவது மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்கள் என்பதேயாகும்!

அத்தகைய விளைவு ஏற்படாமல் விழிப்புடன் இருக்க வேண்டியது தமிழர்களின் கடமை! தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகள் மதிக்கப்படாமல் இந்தி ஆதிக்கம் பரவிட வழிகள் காணப்படுமேயானால், அதனால் எழும் குமுறலும் கொந்தளிப்பும் சாதாரணமாக இருக்காது என்பதை மட்டும் இந்திய ஒற்றுமையின்பால் கொண்டுள்ள நல்லெண்ணத்தின் அடிப்படையில் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்புள்ள,

மு. க.

(08-08-1978)

585. விழுப்புரத்தில் விழாவாம்!

உடன்பிறப்பே,

எட்டு நாளைக்கு முன்பு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து நிருபர்கள் கேட்கிறார்கள்; விழுப்புரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட நீங்கள் செல்லுகிறீர்களா என்று! அதற்கு அவர் சொன்ன பதில் என்ன?

என் சார்பாக இரண்டு அமைச்சர்கள் சென்று வந்திருக்கிறார்கள். நான் சென்று எந்தப் பணியை செய்திருக்க வேண்டுமோ; அதைவிட அதிகப்பணி முடிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற கீழவெண்மணிச் சம்பவத்திற்கு அவர் போகாமல் அமைச்சர் கருணாநிதியைத்தான் அனுப்பி வைத்தார்.

இப்படியொரு பதிலைச் சொல்லி சமாளித்த முதலமைச்சர், இன்று புதன்கிழமை மாலை மதுரையிலிருந்து திரும்பும்போது விழுப்புரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்கிறாராம்! விழா என்ற சொல்லை நான் பயன்படுத்துவதாக எண்ணிக் கொள்ளாதே!

வீடிழந்து அல்லது உடமைகளை இழந்தவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா நானூறு ரூபாய் ரொக்க உதவியை முதல்வர் வழங்குவார். பிரதம மந்திரி அனுப்பிவைத்த உதவித் தொகையிலிருந்து இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. கலவரத்தில் உயிரிழந்த 12 பேர்களுடைய குடும்பத்திற்கு தலா ஆறாயிரம் ரூபாய் உதவித் தொகையை வழங்குவார். இதில் ஐயாயிர ரூபாய் மாநில அரசின் நிதியிலிருந்தும், மீதி ஆயிரம் ரூபாய் பிரதமர் அனுப்பி வைத்த உதவி நிதியிலிருந்தும் வழங்கப்படும். விழுப்புரம் நகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெறும் இந்த விழாவில் முதல்வர் இந்த ரொக்கத் தொகைகளை வழங்குவார் என தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளதாக தினமணி முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே விழா எடுத்து, நிதி உதவி அளிக்கப்படும் என்று முன்கூட்டி விளம்பரம் செய்திருப்பது கலெக்டர் அவர்களின் கடமையும் பொறுப்பும் என அறிந்து கொள்க!

விழுப்புரத்தில் விழா என்று நான் கூறியதாக யாரும் என் மீது சீறிப்பாயக் கூடாதல்லவா? அதனால் தினமணிச் செய்தியை அப்படியே தந்துள்ளேன்.

விழுப்புரத்தில் அமளி நடைபெற்று நகரம் பொலிவிழந்து, தாய்மார்கள் பூவும் பொட்டும் இழக்குமளவிற்குப் பிணங்களும் விழுந்து, தீயின் கோர நாக்குகளுக்கு குடிசைகளும், வீடுகளும், கடைகளும் இரையாகி - பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர், ஆறெனப் பெருகிய நேரத்தில் இரண்டு முறை விழுப்புரம் வழியாக மதுரையிலிருந்தும் - திருச்சியிலிருந்தும் சென்னைக்கு வந்த முதலமைச்சர், அந்த மக்களைச் சந்திக்க மறுத்து விட்டார். அவரால் அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் போகாமலே விடுதியில் தங்கிவிட்டுச் சென்னை திரும்பி விட்டனர். தான் போகாமலே; தான் போனால் நடக்கக்கூடிய பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்று திட்டவட்டமாக அறிவித்து, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், இப்போது சம்பவம் நடைபெற்ற பதினைந்து நாட்களுக்குப் பிறகு விழுப்புரம் சென்று விழா நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி அளித்திட வேண்டிய நிலைமை எப்படி உருவாயிற்று?

முதல்வர் போகாவிட்டாலும் இரண்டாமவராக இருக்கிற நிதி அமைச்சர் போகக்கூடாதா? எனக் கேட்டேன் நான்! கடிதத்தில் நீ படித்திருப்பாய்! மறுநாளே நிதி அமைச்சர் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்துவிட்டு வந்தார். முதலில் இரண்டு அமைச்சர்கள், பிறகு நிதி அமைச்சர் ஆகியோர் சென்றுங்கூட அங்கு நடக்க வேண்டிய பணிகள் நடைபெறாத காரணத்தால், அந்தப் பணிகளை நடத்தி வைக்க இப்போது முதல்வரே செல்வதென முடிவு செய்து விட்டார் போலும்!

தமிழக மக்கள் புயலாலும், வெள்ளத்தாலும் செத்துமடிந்து சீரழிந்து போனபோது இருபத்தேழு நாட்கள் கழித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பாதிக்கப்பட்டோரை நேரிலே கண்டு ஆறுதல் வழங்கச் சென்றார். அவர் சென்று வந்த காட்சிகள் செய்தித்துறைப்

படமாகக் காட்டப்பட்டது! விளம்பரம் விரும்பாதவர்கள் அல்லவா? அந்தச் செய்திப் படத்தில் கேமரா எம்.ஜி.ஆரின் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் விளையாடியது! இறுதியில் அவரது கால்கள் மட்டும் குளோசப்பில் காட்டப்பட்டன. அந்தக் கால்களில் சேறு ஒட்டிக் கொண்டிருப்பது பற்றி ஒரு உருக்கமான வாசகமும் அந்தப் படக் காட்சியிலேயே இணைக்கப்பட்டிருந்தது! விளம்பரம் என்றால் அவர்களுக்கு வேப்பங்காய் ஆயிற்றே! அதனால் சேற்றையும் விடவில்லை!

இப்போது, விழுப்புரத்தில் பதினைந்து நாட்களுக்குப் பிறகு முதல்வரின் பாதம்படும் பாக்கியம் அந்த நகர மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

நானும் நண்பர்களும் கடந்த இரண்டாம் தேதியன்று விழுப்புரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆறுதல் கூறச் சென்றபோது, கண்ணீரும் கம்பலையுமாக அடித்து மோதி அழுது புலம்பி எங்கள் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்ட அன்னையர் குலத்தைக் கண்டு நாங்கள் விம்மி அழுதோம். நகர் முழுவதும் நாங்கள் கண்ட குமுறலையும் கொந்தளிப்பையும் அடக்குகின்ற வண்ணம் அமைதி நிலவ ஒத்துழைக்குமாறு மக்கள் மத்தியிலும், ஏடுகளில் அறிக்கை வாயிலாகவும் வேண்டுகோள் விடுத்தோம். அமைதி காப்பதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று விழுப்புரம் வட்டாரத்தில் உள்ள கழகத் தோழர்களுக்கும் வலியுறுத்திக் கூறினோம்.

நம்மால் இயன்ற அளவு தி.மு.க. அறக்கட்டளையிலிருந்து இருபத்தையாயிர ரூபாய்க்கான காசோலையை துணைத் தாசில்தார் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்தோம். அதைப் பெற்றுக் கொண்டதற்கான கடிதம் கூட கலெக்டர் அவர்களிடமிருந்து வந்துள்ளது. எத்தகைய உடனடி உதவிகள் அரசினரால் வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஒரு எதிர்க்கட்சிக்குரிய பொறுப்புணர்வுடன் முறையீடாக அறிவித்திருக்கிறோம்.

சாதிக் கலவரமாக விழுப்புரம் நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டு, நாடு முழுவதும் அந்தக் கொடுந் தீ பரவிடக்கூடாது என்ற உணர்வுடன்; விழுப்புரம் நிகழ்ச்சிகள் சாதி வேறுபாட்டு அடிப்படையில் அமைந்ததல்ல என்ற விளக்கத்தையும் நிருபர்களிடம் அளித்தோம்.

நமது கடமையை நாம் செய்தோம். செய்வோம். அந்தக் கடமைகளில் ஒன்றாகத்தான் முதல்வர் அல்லது நிதியமைச்சராவது சென்றிருக்க வேண்டும் என்று குறை கூறினோம். இருவருமே செல்கிற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது கண்டு ஆறுதல் அடைகிறோம்.

ஆனால், அதற்கு ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் - அல்லது கலெக்டர் மொழியில் சொன்னால் ஒரு விழா - நடத்தித்தான் முதல்வர் விழுப்புரம் செல்ல வேண்டுமா? என் செய்வது; விளம்பரத்தையே வெறுப்பவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள்!

விழுந்த பிணங்கள் பனிரெண்டு; சொத்து சுகம் கடை கண்ணிகளை இழந்து விழுந்த மனிதர்கள் எழுந்து நிற்க முடியவில்லை! அவர்கள் தொகையும் ஏராளம்! வேதனைபுரமாக நிற்கும் விழுப்புரத்தில் விழா எடுத்து நிதி வழங்குகிறார்கள் - விளம்பரம் விரும்பாதவர்கள்!

அன்புள்ள,

மு. க.

(9-08-1978)

586. வீண் மிரட்டல் வேண்டாம்!

உடன்பிறப்பே,

மதுரைப் பொதுக் கூட்டமொன்றில் ஆகஸ்ட் எட்டாம் நாளன்று பேசிய எம்.ஜி.ஆர். அவர்கள், வழக்கம்போல் என்னையே மையமாக வைத்துத் தனது பேச்சை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

வழக்குகள் அதிகம் இருக்கிற காரணத்தால் கருணாநிதி அத்தோடு உழன்று கொண்டிருக்கட்டும் என்று விட்டு விட்டு அவரைப் பற்றி இனிமேல் பேசாமல் விட்டு விடுங்கள்! ஏனெனில் அவர் சந்திக்க வேண்டிய வழக்குகள் பல உள்ளன. ஆகவே அரசியலில் அவரை இழுக்காமல் அப்படியே விட்டு விடுங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

இப்படிச் பேச்சை ஆரம்பித்தவர், பேசிய நேரத்தில் முக்கால் பகுதி என்னைப் பற்றியே பேசி முடித்திருக்கிறார்.

அவருக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சிலர், சர்க்காரியா கமிஷன் அறிக்கையைப் பற்றிப் பேசி அதன் தொடர்பான சவால்களை என்னை நோக்கி விட்டிருக்கிறார்கள். என்னமோ நான்தான் சர்க்காரியா கமிஷன் விசாரித்த அந்தக் குற்றசாட்டுப் பட்டியலை 1972-இல் ஜனாதிபதியிடம் கொடுத்தது போலவும் ஆகவே கருணாநிதியே! நீ அந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கத் தயாரா? என்று கேட்பது போலவும் அந்த அருமை நண்பர்களின் பேச்சுக்கள் மதுரைப் பொதுக்கூட்டத்திலே அமைந்திருக்கின்றன.

தி.மு.க. அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள், மதுரை மேயர் போன்றோர் மீது லஞ்சலாவண்யக் குற்றச்சாட்டுக்களைப் பட்டியல் போட்டு டெல்லி வரை சென்று கொடுத்தவர், எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் தான்! இது உலகறிந்த விஷயம்! அவர் கொடுத்த புகார்களையும், அதற்கான பதிலையும் அச்சடித்துப் புத்தகமாக சட்டப் பேரவையிலே கழக ஆட்சின்போது வைத்திருக்கிறோம். அந்தப் பதில்களை வைத்தபோது எந்த நிலையைக் கழகம்

எடுத்ததோ அதே நிலையைத்தான் சர்க்காரியா விசாரணையின் போதும் எடுத்தது.

புகார்ப் பட்டியல் அரசியல் நோக்கத்தோடு தரப்பட்டது என்பதும், சர்க்காரியா கமிஷன் அமைத்த நேரத்தில் எம்.ஜி.ஆர். அவர்களுடன் இணைந்துவிட்ட திருமதி சத்தியவாணிமுத்து, மதுரை முத்து ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் இருந்தும் கூட அவற்றை வேண்டுமென்றே தவிர்த்து விட்டார்கள் என்பதும் சர்க்காரியா விசாரணை ஆரம்பமான போது நமது கழகச் சார்பில் நாம் எடுத்து வைத்த வாதமாகும்.

அதன் பிறகு எம்.ஜி.ஆர். கொடுத்த புகார்ப் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக எம்.ஜி.ஆர். அவர்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். சர்க்காரியா கமிஷன் முழு அறிக்கையும் வெளிவந்து, அதனை மத்திய அரசு, மாநில அரசுக்கும் அனுப்பி வைத்து விட்டது. அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வையுங்கள்; கிழி! கிழி!! என்று கிழிக்கிறேன் என்ற வீர முழக்கங்களுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாமல் எம்.ஜி.ஆர். சட்டமன்றத்தில் உட்கார்ந்திருந்தார் சில மாதங்களுக்கு முன்பு!

நான்கூட சட்டமன்றத்தில் முதல்வர் எம்.ஜி.ஆரைப் பார்த்து கேட்டேன்; தி.மு.க.வில் இருக்கிறவரையில் அவர்களைப் பாவிகள் என்கிறீர்களே; உங்களிடம் வந்து விட்டால் புனிதர்களாகி விடுகிறார்களே - அப்படிப் புனிதர்களாக்கும் கங்கா ஜலத்தை எங்கிருந்து பெற்றீர்கள்? என்பதாக!

அதற்கு எம்.ஜி.ஆர். அளித்த பதில் ஒரு இளம் புன்னகை! அ.தி.மு.க. உறுப்பினர்களோ பல பேர் தங்கள் அகமகிழ்ச்சியை முகத்தில் மலர விட்டுத் தலையாட்டி வரவேற்றார்கள் என் கருத்தை!

ஜனாதிபதியிடம் கொடுத்த பட்டியல் மட்டுமல்லாது; தனிப்பட்ட மந்திரிகள் மீது குற்றச்சாட்டுக்களைக் குவித்தார்கள் சட்டசபையில் எதிர்க்கட்சியில் இருந்த அ.தி.மு.க.வினர்! அவைகள் குறிப்பேட்டில் இருக்கத்தான் செய்கின்றன. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக்கொண்டு கழக அரசு அமைத்த கமிஷனையும் அ.தி.மு.க.வினர் அப்போது புறக்கணித்து விட்டனர். அதுமட்டுமல்லாமல் வேறு மாநில

நீதிபதி ஒருவரைக் கொண்டுதான் அந்த விசாரணை நடைபெற்றிருக்க வேண்டும் என்று அன்றைய தினம் அ.தி.மு.க வினார் சட்டமன்றத்தில் ஆவேசமாக பெசிய அந்தப் பேச்சுக்களும் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலேதான் இருக்கின்றன.

உடன்பிறப்பே, நம்மை விட்டு எம்.ஜி.ஆர். அவர்களிடம் சென்றுள்ள யார்மீதும் நாம் குற்றச்சாட்டுக்களை இப்போது புதிதாகச் சொல்லவில்லை, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்தவர்கள்தான் நாம்! குற்றஞ்சாட்டியவர் எம்.ஜி.ஆர்.! குற்றச்சாட்டுக்கள் அப்படியே இருக்கின்றன. குற்றம்சாட்டப்பட்டவர்களில் பெரும்பான்மையோரை எம்.ஜி.ஆர். தன்பக்கம் இணைத்துக்கொண்டது மட்டுமல்ல; அவர்களையும் விடமாட்டேன் - விசாரணை நடத்தி தண்டனை வழங்குவேன் என்று ஒவ்வொரு நிருபர்கள் கூட்டத்திலும் கூறி வருகிறார். அதனால் மதுரைக் கூட்டத்தில் நண்பர்கள் விட்ட சவால் என்னை நோக்கியல்ல; எம்.ஜி.ஆரை நோக்கித்தான் என்று எடுத்துக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். சர்க்காரியா அறிக்கை மீது தொடுக்கிற வழக்குகளில் தன்னை அபயமடைந்தவர்களை விடுவித்து விடவும் - தி.மு.க.வில் இருப்பவர்களைத் தண்டித்து விடவுமான சந்துப்பொந்துகளைத் தேடுகிற செயல்களில் ஈடுபடக்கூடும்.

அந்தத் தைரியத்தில்தான் எம்.ஜி.ஆர். என் மீது போடப்பட்டுள்ள வழக்குகளிலும், இனியும் போடப்படுகிற வழக்குகளிலும் நான் தப்பிக்க முடியாது என்று மிரட்டி வருகிறார்.

உடன்பிறப்பே, எதிர்ப்பிலேயே வளர்ந்து, எதிர்ப்பிலேயே பொது வாழ்வை அமைத்துக் கொண்டவன் நான் என்பதும், அத்தகைய உடன்பிறப்புக்களைப் பெற்றிருப்பவன் என்பதும் எம்.ஜி.ஆர். அறியாதவரல்ல!

அதிகார பலத்துடனோ - துரோக சக்திகளின் துணையுடனோ - என்னையும் கழகத்தையும் எம்.ஜி.ஆர். அழித்துவிட எண்ணுகிறார்.

அதைத்தான் சென்னை கூட்டமொன்றில் குறிப்பிட்டேன் - நான் இறந்து விட்டாலும் கழகம் இருக்கும்; நண்பர் எம்.ஜி.ஆர். நீண்ட நாள் வாழவேண்டும் என விரும்புகிறேன் - ஆனால் அவர் காலத்திற்குப் பிறகு அவரது கட்சியின் நிலை என்ன? என்பதாக!

இந்த என் பேச்சைக் கூட திரித்துப் பேசி, எம்.ஜி.ஆர். மதுரையில் உருக்கத்தைக் கொட்டியிருக்கிறார்.

உருக்கத்தோடு நிறுத்தாமல் உறுமியுமிருக்கிறார்!

இன்று போய் நாளை வா! என்று எனக்கு உபதேசமும் செய்திருக்கிறார்!

நாளை நாம் வரத்தான் போகிறோம் என்பதை அவரை அறியாமல் அவர் கூறி விட்டார் என்றுதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடிக்கடி சர்க்காரியா அறிக்கை மீது வழக்கு என்று முதலமைச்சர் மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

வீண் மிரட்டல் வேண்டாம் - விரைவில் தொடரட்டும் வழக்குகளை! சந்திக்கத் தயார்!

அன்புள்ள,

மு. க.

(10-08-1978)

587. நல்ல முடிவு ஏற்பட!

உடன்பிறப்பே,

சட்டமன்ற தி.மு.க.கட்சி அலுவலகத்திற்குச் செல்லும்போது மாநிலக் கல்லூரியைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். கண்ணகி சிலைக்கு எதிராக சாலையின் ஓரத்தில் சிறிய கொட்டகை அமைத்துக்கொண்டு, கல்லூரி மாணவர்கள் பத்துக்கு மேற்பட்டவர்கள் ஐந்தாறு நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தனர். தங்கள் கோரிக்கை நிறைவேறாவிடில் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பது என்பது அவர்களது முடிவான எண்ணம். அந்த வழியாகச் சென்ற என்னை மாணவர்களின் கூட்டமொன்று வலியுறுத்தி, உண்ணாவிரதமிருக்கும் மாணவக் கண்மணிகளை சந்திக்குமாறு கூறியதற்கிணங்க நானும் காரிலிருந்து இறங்கிச் சென்று பட்டினிப் போராட்டம் நடத்தும் அந்த மாணவர்களைச் சந்தித்தேன். உண்ணாவிரதம் காரணமாக அவர்கள் களைத்தும், சோர்ந்தும், மயக்கமுற்றும் காணப்பட்டனர். நான் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டேன்; அமைச்சர்கள் உங்கள் பிரதிநிதிகளை அழைத்துப்பேச விரும்பினால் - நீங்கள் உடனே சென்று பேசி, பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள், இப்படி உங்களை வாட்டிக் கொள்ளாதீர்கள் என்று!

என் வேண்டுகோளுக்கு அவர்கள் அளித்த பதில் - நாங்கள் அங்கே சென்றால் அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ எங்களைத் தொந்திரவு செய்து கட்டாயப்படுத்திக் கையெழுத்து வாங்கி விடுவார்கள், இதுபோல செய்வது அவர்கள் வழக்கம் என்பதுதான்!

அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது - உங்கள் பிரதிநிதிகளில் சிலரை அனுப்பி வையுங்கள் என்று கூறிவிட்டு, அவர்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டு, அவர்களின்

கவலைக்கிடமான நிலைகுறித்து முதல்வருக்கும், கவர்னருக்கும் தந்தி வாயிலாக வேண்டுகோள் விடுப்பதாகவும் சொல்லிவிட்டு வந்தேன்.

அவர்களிடம் நான் வாக்களித்தமைக்கேற்ப, முதலமைச்சருக்கும், கவர்னருக்கும் தந்திகளை அனுப்பி வைத்தேன்.

10-ஆம் தேதி காலை 11 மணி அளவில் தந்திகள் அனுப்பப் படுகின்றன. உடனடியாகப் பிற்பகல் மூன்று மணி அளவில் உண்ணாவிரதமிருந்த பதின்மூன்று மாணவர்களும் போலீசாரால் அகற்றப்பட்டோ, அல்லது கைது செய்யப்பட்டோ அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

அவர்களுடைய கோரிக்கை; மூடப்பட்டுள்ள கல்லூரிகளைத் திறக்க வேண்டுமென்பதுதான்! வேறு சில கோரிக்கைகளையும் வைத்துள்ளனர். எந்தக்கட்சியின் ஆட்சியிலும் மாணவர்களின் கோரிக்கைகளும் அதன் தொடர்பான கிளர்ச்சிகளும் தவிர்க்க முடியாதவைகளாகவே இருந்திருக்கின்றன.

கவலைக்கிடமான நிலையில் இருக்கும் மாணவர்களின் பிரச்சினையைக் கலந்து பேசி, அவர்களது உயிரைக் காப்பாற்ற ஆவன செய்திடுக என்று தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்தால், அதனைக் கவனித்து, மாணவர்களை அமைதிப்படுத்தும் முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக - மேலும் அவர்கள் கிளர்ந்தெழும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலை, வியப்புக்குரியதாகவும் வேதனைக்குரியதாகவும் இருக்கிறது.

நான் கொடுத்த தந்திக்கு முதல்வர் அவர்கள் எனக்கு அளித்துள்ள பதில் தந்தியில் குறிப்பிட்டிருப்பதுபோல ஒருவேளை மாணவர்களை அங்கிருந்து அகற்றி மருத்துவமனையில் சிகிச்சையளிப்பது என்ற நல்ல நோக்கத்தில் இத்தகைய நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் அது வேறு விஷயம்!

ஆனால் அத்துடன் பிரச்சினை முடிவடைந்து விடுகிறதா? அதுதான் இல்லை! உடனே அனைத்துக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் குதிப்போம் என்று அறிவித்திருக்கிறார்கள். மருத்துவமனையிலும், மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

மாணவர்களைப் பலாத்காரமாகப் போலீசார் அகற்றியதையும், தொடர்பான நடவடிக்கைகளையும் கண்டித்து திரு. கே.டி. தங்கமணி அவர்கள் கூட ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

அவற்றையெல்லாம் அரசு, அலட்சியப்படுத்திவிடக் கூடாது!

மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பதோ, கல்லூரிகளைத் திறக்க வேண்டுமென்பதோ - நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள் அல்ல!

வழக்குகள் வாபஸ் என்றாலே இந்த அரசுக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விடுகிறது. விவசாயிகளின் பிரச்சினை இத்தனை மாதங்களாக நீண்டு கொண்டே போவதற்குக்கூட அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் வாபஸ் வாங்கப்படாததுதான் காரணமாகும்!

எனவே இம்மாதிரி பொதுப் பிரச்சினைகளின் அடிப்படையில் நடைபெறுகிற கிளர்ச்சிகளில் ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும் அவர்களுடன் கலந்து பேசி, சிக்கல்களை இருதரப்பினரும் ஆராய்ந்து அமைதியான சூழல் ஏற்பட அரசுதான் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைப்பதற்கு முன்பு - அரசும் மாணவர் அமைப்புக்களும் - கலந்துபேசி ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு விடுமேயானால் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி என்பதையும் சுட்டிக்காட்டத் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்சி சார்பற்ற முறையில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாணவர்கள் விடுத்துள்ள கோரிக்கைகளைக் கூடுமான வரையில் நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(12-08-1978)

588. "அந்தோ! தேசியமயமே!!"

உடன்பிறப்பே,

சென்னை நகரில் பஸ் அதிபர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்று அமைச்சரையும் சந்தித்து சில முக்கியமான கோரிக்கைகளையும் கொடுத்திருக்கிறார்கள். இப்படி ஒரு நிகழ்ச்சியும் ஊர்வலமும் நடைபெறப் போகிறது என்றும், கோரிக்கைகளை அமைச்சரிடம் அளிக்கப் போகிறார்கள் என்றும் ஒரு மாதத்திற்கு முன்பே தகவல்கள் கிடைத்தன. பஸ் அதிபர்களிடம் கட்சி நிதியென்ற பெயரால் பல லட்சக் கணக்கில் பெற்றுக் கொண்டபோதே இப்படி ஒரு ஊர்வலம் நடத்தி உங்கள் கோரிக்கைகளைக் கொடுங்கள்; அழுவதுபோல் அழுதால் அணைப்பதைப் போல் அணைக்கிறோம் என்ற பேரப் பேச்சும் நடந்து முடிந்து விட்டது என்று பரவலாகப் பேசப்பட்டது. அது உண்மை தானோ என்று நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சியாக பஸ் அதிபர்களின் கோரிக்கை ஊர்வலம் நடைபெற்றிருக்கிறது.

கழக அரசு காலத்தில் பஸ்களுக்கு உச்ச வரம்பு கொண்டு வரப்பட்டு டி.வி.எஸ்., ஏ.பி.டி., ராமன் அண்ட் ராமன், எஸ்.ஆர்.வி.எஸ். போன்ற நிறுவனங்கள் முறையே பாண்டியன், சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்களாக ஆக்கப்பட்டன. எல்லா பஸ்களையும் தேசிய மயமாக்கும் திட்டத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பஸ்களைத் தேசியமயமாக்க முடிவு செய்து நீலகிரி மாவட்ட பஸ்களைத் தேசிய மயமாக்கியதும், பஸ் அதிபர்கள் அதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் வரையில் போய் மற்ற மாவட்டங்களில் அந்தக் கொள்கை நடைமுறைக்கு வர முடியாதவாறு தடுத்து நிறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டது. அதேபோல பஸ்களின் உச்சவரம்பு சட்டத்தையும் எதிர்த்து நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். தேசியமயக் கொள்கைக்கு எதிரான வழக்கும் முடிவு பெறாமல் சுப்ரீம் கோர்ட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறது. மற்ற அரசியல் நோக்குடைய வழக்குகளில்

காட்டுகின்ற அவசரத்தை அரசு இதில் காட்டவில்லை. உச்சவரம்பு சட்டத்தை எதிர்த்து பஸ் அதிபர்கள் நடத்திய வழக்கிலும் அரசு, அக்கறை காட்டாமல் நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வலுவான வாதங்களை எடுத்து வைக்க முன்வராத நிலையில் பஸ் அதிபர்களுக்குச் சாதகமாகவே தீர்ப்பு அமைந்து விட்டது.

சுப்ரீம் கோர்ட் வழக்கைத் துரிதப்படுத்தி நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த வழக்கு கழக அரசு காலத்தில் கொண்டு வரப்பட்ட தேசியமயக் கொள்கையின் மீதே தொடுக்கப்பட்ட பாணம்! கழக அரசு கொண்டு வந்த உச்சவரம்புச் சட்டத்தைக் காப்பாற்றவோ, அல்லது அப்பீல் செய்யவோ இந்த அரசு, நடவடிக்கைகளை முறையாகவோ விரைவாகவோ மேற்கொள்ளவில்லை.

ஒரு வழித்தடத்தில் (பஸ் ரூட்) தனி பஸ் அதிபரின் பஸ் ஓடும் காலம் முடிந்து விடுமேயானால் அந்த ரூட்டில் பஸ் விடுவதற்கு முன்னுரிமை; அரசு சார்புடைய போக்குவரத்துக் கழகங்களுக்கே இருக்கவேண்டுமென்று கழக அரசு காலத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதுவே நடைமுறையாகவும் இருந்து வந்தது. ஓரிரு இடங்களில் போக்குவரத்துக் கழகம் தயார் இல்லாத நிலையில் மட்டுந்தான் மீண்டும் தனியார்களுக்கு தற்காலிக பர்மிட்டோ, அல்லது பர்மிட்டோ வழங்கப்பட்டிருக்கக்கூடும்.

ஆனால் இப்போது, தனியார் பஸ் ரூட் காலியாகிற எல்லா இடங்களிலுமே; பொதுவாகவே போக்குவரத்துக் கழகங்கள் முன்னுரிமைக் கொண்டாடாமல் மீண்டும் அதே தனியார்களுக்கே தரப்படவேண்டுமென்றும் - போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமை தனி அதிபர்களுக்கு வேண்டுமென்றும், போக்குவரத்துக் கழகங்களுக்கு வேறு ரூட்கள் தரப்பட வேண்டுமென்றும் பஸ் அதிபர்கள்; பல லட்ச ரூபாய் கட்சி நிதி என்ற பெயரால் அளித்தபோது வலியுறுத்தியதாகவும், அவர்களுக்கு இந்த ஊர்வல யோசனை கூறப்பட்டு அதன்பிறகு ஆவன செய்வதாக வாக்களிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஒன்றிரண்டு பஸ்களை வைத்திருக்கிற தனியார்கள் பாதிக்கப்படவேண்டுமென்பது நமது நோக்கமல்ல!

ஆனால் பஸ்கள் தேசியமயக் கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்படும் பொழுது, அந்தச் சிறு அதிபர்களும் நல்லதொரு நோக்கத்திற்காக அந்த இழப்புகளுக்கு ஆளாகித்தான் தீரவேண்டும். அந்த அடிப்படையில்தான் அரசின் பொருளாதார நிலையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மாவட்ட வாரியாகப் பஸ்களைத் தேசியமயமாக்குகிற திட்டத்தைக் கழக அரசு தொடங்கியது.

அதற்கு நீதிமன்றத் தடை ஏற்பட்டாலுங்கூட - அந்தக் குறிக்கோளை நோக்கி நடைபோட வேண்டுமேயல்லாது பஸ் முதலாளிகளிடம் லட்சக் கணக்கில் கட்சி நிதி என்ற பெயரால் பணம் வாங்கிவிட்ட ஒரே காரணத்திற்காக அரசுச் சார்புடைய போக்குவரத்துக் கழகங்களுக்குள்ள உரிமைகளையெல்லாம் தனியார்களுக்குப் பெருமளவில் விட்டுக்கொடுப்பது என்ற முடிவுக்கு வருவார்களேயானால் - பினாமி பெயரில் பஸ்களை ஓட்டிக் கொண்டிருக்கிறவர்களுக்கும், தேசியமயக் கொள்கைக்கு எதிரானவர்களுக்கும், வசதிகளை வாரி வழங்குகிறார்கள் என்றுதான் பொருள்!

இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

(13-08-1978)

589. புதிய சிந்தனை தேவை!

உடன்பிறப்பே,

நாளை விடுதலை நாள் விழா! நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற விடுதலை விழாவை கணக்கு தீர்த்த நாள் என்றும் அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிற விடுதலை நாளை; கணக்கு பார்க்கும் நாள் என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நாடு விடுதலை பெற்று முப்பது ஆண்டுகள் மேல் ஓடிவிட்டன.

விடுதலைப் போராட்டம் வெள்ளையர்களுக்கும் நமக்கும் பயங்கர யுத்தமாக நடைபெற்று இங்கிலாந்து நாட்டு விமானங்கள் இந்திய நாட்டு நகரங்கள் மீதும் தொழிற்சாலைகள் மீதும் வெடிகுண்டுகளை வீசி நாசப்படுத்தி விடவில்லை.

இந்தியாவில் கட்டப்பட்டிருந்த அணைக்கட்டுகள் பீரங்கித் தாக்குதல்களுக்கு ஆளாகிச் சிதைந்து சின்னா பின்னமாகி விடவில்லை.

வெள்ளைப்படை வீரர்களும் இந்திய விடுதலைச் சேனையினரும் நாடு முழுவதும் பல களங்களில் மோதிக் கொண்டு நகர்ப்புற - கிராமப்புறச் சாலைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு விடவில்லை.

1942-ஆம் ஆண்டு இயக்கத்தின் போது தண்டவாளங்கள் சில இடங்களில் பெயர்க்கப்பட்டன; புகை வண்டி நிலையங்கள் கொளுத்தப்பட்டன. அஞ்சல் நிலையங்களுக்கு தீயிடப்பட்டன என்பன போன்ற சில சம்பவங்களைத் தவிர, இந்தியத் திருநாட்டு விடுதலைக்காகத் தலைவர்களும், தொண்டர்களும், மக்களும் தங்களைத் தாங்களே தியாகவேள்வியில் ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதுதான் நமது சுதந்திரப் போராட்ட வரலாறு!

ஆங்கிலேயரை எதிர்த்து தொடக்க காலத்தில் போர்க்கொடி உயர்த்திய பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மனின் கோட்டை கொத்தளங்களும் நகரமும் மண்மேடாக்கப்பட்டது போலவோ, சீரங்கப்பட்டணத்தில் திப்புசுல்தானின் மணிமாடங்கள் கூடங்கள் மாளிகைகள் பீரங்கிகளால் பிளக்கப்பட்டது போலவோ இந்திய மக்கள் நடத்திய சுதந்திரப் போரின் எந்தக் கட்டத்திலும் இங்கிலாந்து படையினர் அதை எதிர்த்து ஒரு பெரும் படையெடுப்பு நடத்தினர் என்று கூற முடியாது.

ஆங்கிலேயர் காலத்திலேயே அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள், கட்டப் பெற்ற அணைக்கட்டுகள், உருவாக்கப்பட்ட மின்சாரத் திட்டங்கள், உயர்ந்தோங்கிய மலை உச்சிகளுக்கும் போடப்பட்ட சாலைகள், ரயில் பாதைகள், மருத்துவமனைகள், கல்லூரிகள் - இன்னோரன்ன வசதிகள் எதுவும் அழிந்து விடாமலே தான் முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியா சுதந்திரம் பெற்றது.

யுத்தத்தால் ஜெர்மனிய நாடு முக்கால் பகுதி நாசமுற்றது! ஜப்பான் நாடு பல பகுதிகளை பாழ்நிலமாகத்தான் கண்டது! சோவியத் நாட்டின் தலைநகரம் மாஸ்கோ வரையிலே ஹிட்லரின் படைகள் நுழைந்தபோது ஏற்பட்ட இழப்பு கொஞ்சமல்ல!

ஆனால் அந்த நாடுகள் எல்லாம் மிகக் குறுகிய கால கட்டத்திற்குள்ளாகவே, தங்களை வளப்படுத்திக் கொண்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கிற காட்சியையும், அந்த நாட்டு மக்கள் நல்வாழ்வினைப் பெற்று மகிழ்கிற மாட்சியையும் நம்மால் காணமுடிகிறது.

அந்த நிலை அமைவதற்கேற்ப திட்டங்களை வகுப்பதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும், அந்த நாட்டு அரசுகள் முனைப்போடு செயல்பட்டதின் விளைவுதான் அது!

அடிமைப்பட்டிருந்த இந்தியா, விடுதலை பெற்று முப்பதாண்டு காலத்திற்குப் பிறகும் ஆங்கிலேயன் காலத்து வசதிகளிலேயிருந்து மேலும் வேக வேகமாக மக்களுக்குத் தேவையான வசதிகளைக் குவித்து வறுமையை விரட்டி வளத்தைப் பெருக்கத் தவறிவிட்டது என்று கவலையோடு சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

குண்டு வீச்சுக்களாலும், டாங்கிப் படைகளாலும் சிதறுண்டு போன நாடுகள் சீர்மேவும் பூமிகளாகத் திகழ்கின்றன என்கிறபோது - 1947 ஆம் ஆண்டு வெள்ளையரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றபோது இருந்த வசதிகள் எதுவும் சிதைவுறாத நிலையில் நாடு விளங்கியபோதிலும், அதனைத் தொடர்ந்து விரைவாக வளர்ச்சியைப் பெறாமல் போனதற்குக் காரணம் என்ன?

ஒவ்வொரு விடுதலை நாள் விழாவிலும் சூளுரை மேற்கொள்கிறோம் - ஆனால் அந்தச் சூளுரைகள் நமக்குள்ளே அரசியல் காழ்ப்புணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளும் பழிவாங்கும் நடவடிக்கைகளாக கடந்த முப்பதாண்டு காலமாக இருந்து வருகிறதேயல்லாமல் தினைத்துணையும் நாட்டுக்குப் பயன்பட்டதுண்டா?

திட்டங்கள் தீட்டப்பட்ன! கொள்கைகள் முழக்கப்பட்டன! பலகோடி மக்கள் வாழும் இந்திய நாட்டில் நூற்றுக்கும் குறைவானவர்கள் கோடீஸ்வரர்களாகவும், கோடிக்கணக்கான ஏழைகள் தெருக்கோடியில் நிற்போராகவும் உள்ள நிலைதான் வளர்ந்தது இந்த முப்பது ஆண்டுகளில்!

சோசலிஷம் என்ற இயல்பான சொல்லை உச்சரிக்காத அரசியல் கட்சிகளே இல்லை! ஆனால் அந்தச் சொல் பல அரசியல்வாதிகளின் இதழ்களின் அளவோடு - ஏடுகளின் அளவோடு நின்று விட்டதேயல்லாமல் இதயத்தில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை!

ஏராளமான அதிகாரங்களை இமயத்தை எட்டும் அளவுக்கு மத்தியிலே குவித்துக் கொண்டதால்தான் நாடு முழுதும் பரவலான நல்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலும் என்றனர்!

அதிகாரக் குவியலின் காரணமாக டெல்லி பீடம் - ஆமைவேகம் கொண்டதேயொழிய, நாடு தழுவிய நலிவற்ற வாழ்வு மக்களுக்குக் கிட்டவில்லை!

முதலில் அதிகாரங்களைப் பரவலாக்குவதிலே சோஷலிச மனப்பான்மை தேவை!

முன்பிருந்த மத்திய அரசும் இப்போதுள்ள மத்திய அரசும் எல்லா அதிகாரங்களையும் தாங்களே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற முதலாளித்துவ மனப்பான்மையுடன் நடந்துகொள்ளக் காண்கிறோம்.

காற்றில் பறக்க விடுவதற்கென்றே தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகள் வாரிக் கொட்டப்படுகின்றன.

மண்ணைக் காக்க மத்திய அரசும், மக்களைக் கவனிக்க மாநில அரசும் என்ற உண்மையை உணர்ந்து மத்தியில் கூட்டாட்சியும், மாநிலங்களில் சுயாட்சியும் வேண்டுமென்று கழகமும், கழக அரசும் தீர்மானம் மூலம் வலியுறுத்தியது அரசியல் ஆதாயம் கருதி அல்ல! இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலத்தைக் கருதித்தான்!

இந்தக் கருத்துக்கு அனுசரணையாக இருப்பது போலப் பேசிய ஜனதாக் கட்சித் தலைவர்கள், இன்று பிரிவினை என்றும் பிராந்தியம் என்றும் சாக்குப்போக்குச் சொல்லிப் பின் வாங்குகிற அவலத்தையும் நாடு காண்கிறது!

டெல்லியின் ஆதிக்கம் வேரூன்ற இந்தி மொழியை எப்படியெல்லாம் மற்ற மொழிக்காரர்கள் மீது திணிக்கலாம் என்பதற்கு எடுத்துக் கொள்கிற சிரமத்தை, மக்களின் பொருளாதாரச் சீர்குலைவுகளுக்குக் காரணம் கண்டு, அதனைச் செம்மைப்படுத்த எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் இன்றைக்கு கமிஷன்கள்! அதிலும் மற்றவர்கள்மீது கமிஷன் போடுவதிலே மட்டற்ற ஆர்வம்! அந்தக் கமிஷன் கடா தங்களை நோக்கிப் பாய்ந்தாலோ எரிச்சல் பேச்சுக்கள் - எதிர்ப்பு ஊர்வலங்கள்!

புதுவையும் சிரிக்கிறது! புதுடெல்லியும் சிரிக்கிறது! ஆனால் அவர்கள் பேசுவதோ புத்தர் பாஷை! புனித மொழி! இப்படிச் சில வேடதாரிகள்!

விளைவு செய்த விவசாயி, தன் முதுகு வளைவை நிமிர்த்த முடியாமல் வாடுகிறான். அவன்மீது வழக்குகள் பாய்கின்றன! அவன் வாழ்வு பாழாகி வருகிறது!

தொழிலாளிக்கு ஜனநாயக உரிமையாகக் கிடைத்திருந்த வேலை நிறுத்த உரிமைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ள தமிழகத்தில் வாழுகிறோம். வன்முறையை ஊக்கப்படுத்துவது நமது ஆசையல்ல! அவற்றை அடக்கத் தனி சட்டங்கள் இருக்கும்போது இப்படியொரு அவசரச் சட்டம் எதற்காக? இது தொழிலாளியின் பெருமூச்சோடு கலந்து எழுகிற கேள்வி!

அதோ, விழுப்புரம் தெரிகிறது - விழுந்து விட்ட அரிஜன மக்களின் பிணங்கள் - கலவரத்தில் கடை கண்ணி வீடு வாசல்களை இழந்துவிட்ட ஏனைய மக்களின் ஏக்கப் புலம்பல்கள்!

கல்லக்குடியில் அத்துமீறி நடந்து கொண்ட காவல் துறையினர் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீதே வழக்குகள் போடும் விந்தையினைக் காணுகிறோம்!

சட்டம் ஒழுங்கு முழுவதுமாகக் கெட்டுவிடவில்லை! ஆனால் கெடுவது காட்டும் குறிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன!

வேலையில்லாதோர் தொகை பெருகிக்கொண்டே இருக்கிறது; இந்திய நாடு முழுவதும்!

ஒற்றுமை என்ற சொல்லுக்கு எதிர்ப்பதம்தான் ஜனதா என்பது! இப்படி மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தரும் அளவுக்கு ஜனதா ஆட்சி வேற்றுமையின் விரி கடலாக விளங்கி தங்கள் பிரச்சினைக்கே தீர்வு காண முடியாத சங்கடத்தில் நாட்டுப் பிரச்சினையில் நாட்டம் செலுத்த முடியாதவர்களாக, ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்கள்!

இதற்கிடையே எப்படியும் வாழலாம் என்ற சந்தர்ப்பவாதிகள்; அகப்பட்ட வரையில் லாபம் அனுபவி ராஜா அனுபவி என்று பாடிக்கொண்டு பாதந்தாங்கிக் கிடக்கிறார்கள் - பாரதம் முழுதும் பரவலாக!

இந்தக் குறைகள் அனைத்தும் நீங்க - சுதந்திரத்தின் முழுப்பயனை மக்கள் பெற்றிட - புதிய சிந்தனை தேவை! எல்லா அரசியல் கட்சிகளுக்குமே புதிய சிந்தனை தேவை!

அப்படிச் சிந்தித்து செயல்பட்டு, நாடும் மொழியும் நமது மக்களும் மறுமலர்ச்சி பெற்றுத் திகழ - தலைகீழ் மாற்றங்கள் ஏற்படுத்த உண்மையான அரசியல்வாதிகள் முன்வர வேண்டுமென்ற முறையீட்டைக் கழகத்தின் சார்பில் இந்த விடுதலை நாளில் நான் விடுக்கிறேன்! வாழ்க ஜனநாயக கோட்பாடு! சூழ்க சமதர்மம்!

அன்புள்ள,

மு. க.

(14-08-1978)

590. ஒலிக்க வேண்டிய ஒரே குரல்!

உடன்பிறப்பே,

தமிழகத் தலைநகரில் திராவிடர் கழகச் சார்பில் நடத்தப்பெற்ற இந்தி எதிர்ப்பு மாநாடு எழுச்சி முரசமாக அமைந்தது! அநேகமாக எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களின் உணர்வை டெல்லிக்கு எடுத்துக் காட்டினார்கள்.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தி எதிர்ப்புக் களத்தில் பல்லாண்டுக் காலமாக வீரப்போர் புரிகிற சிப்பாய்களாகத் திகழ்கின்றன என்பதை வரலாறு முழங்கிக் கொண்டிருக்கிறது.

செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் சின்னஞ் சிறு மாநாடுகளாகத் தொடங்கி, இன்று செந்தமிழ்நாடே இந்தி எதிர்ப்புப் பாசறைதான் என்கின்ற அளவுக்குத் தமிழர்கள் தோளுயர்த்திப் போர்ப்பரணி பாடிக்கொண்டிருக்கிறார்கள். திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் அருமை நண்பர் வீரமணி அவர்களின் முயற்சியினால் நடத்தப்பெற்ற சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கூடியிருந்த தாய்மார்களும், பெரியோர்களும், இளைஞர்களும், அலுவலகங்களில் பணிபுரிவோரும் உணர்ச்சிப் பிழம்பாகவே மாறிவிட்டனர் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்தியை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான விளக்கங்கள்; இன்று நேற்றல்ல நாற்பது ஆண்டுக் காலமாகத் தரப்பட்டு வந்துள்ளன. அவற்றையெல்லாம் இன்றுள்ள வளரும் சமுதாயத்துக்குத் தொகுத்தளித்து எதிர்காலத்தில் தமிழகம் சந்திக்க இருக்கின்ற தொல்லைகளில் இருந்து மீளுவதற்கு வழி காட்டவே இந்த மாநாடு!

தமிழின் தொன்மை பற்றிப் பேசப்பட்டது! தமிழை வளப்படுத்தி, தமிழ் காக்கும் பேரரணாகத் தமிழியக்கம் உயர்ந்து நிற்கவேண்டுமென்று எடுத்துக் கூறப்பட்டது! பதினான்கு மொழிகளுமே மத்திய ஆட்சி மொழியாக வரவேண்டும் என்று

தெளிவுரை தரப்பட்டது! அப்படி வருங்காலம் வரையில் ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாவும் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அந்தந்த மாநில மொழிகள் வளர்க்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியை வளர்த்துக் கொள்ளட்டும் என்று விரிவாக விளக்கப்பட்டது!

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் உள்ள மக்கள் சமமாக உரிமைகளைப் பெறவேண்டுமெனில் ஒரு மாநில மொழி மற்ற மாநில மொழிகளுக்கு மகாராணியாக முடியாது என்றும், அந்நிலை கூடாது என்றும் - எல்லா மாநில மொழிகளுக்கும் மத்திய ஆட்சியில் சமமாகத் தகுதி இருந்திட வேண்டுமென்றும் - அந்த ஒரு நிலையை எய்திட நீண்ட நாட்கள் ஆகுமெனில் அதுவரையில் ஆங்கிலம் ஒன்றுதான் ஒரு மாநிலத்தை ஒரு மாநிலம் அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தாமல் காப்பாற்றக்கூடிய கருவி என்றும் - மாநாட்டில் ஒலித்த கருத்துக்களை மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று உண்மையிலேயே விரும்புவோர், அலட்சியப்படுத்திவிட முடியாது.

புயல் வேகத்தில் படையெடுத்துப் பரவிடும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தமிழர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் அடுத்தகட்டமாக செப்டம்பர் 10-ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்துமாறு சென்னை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த தீர்மானத்தை செயல்படுத்துவதில் ஆங்காங்குள்ள நமது கழக அமைப்புக்கள் உறுதுணையாக இருந்திட வேண்டுகிறேன்.

திராவிடர் கழக அமைப்புக்களே முன்னின்று நடத்துகிற கூட்டங்களில் நமது அமைப்புக்கள் முழுமையான ஒத்துழைப்பு நல்கி, நமது கழக முன்னணியினர் கலந்து கொண்டு சென்னை மாநாட்டில் கழகச் சார்பில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் மக்களுக்கு விளக்கங்களை வழங்கிட வேண்டுகிறேன்.

திராவிடர் கழக அமைப்புக்களின் சார்பில் எந்த ஊரிலாவது செப்டம்பர் 10-ஆம் நாள் கூட்டம் நடத்திட வாய்ப்பில்லாது

போனால், அங்கெல்லாம் தி.மு.கழக அமைப்புக்களே முன்னின்று திராவிடர் கழகத்தினரின் ஒத்துழைப்பையும் பெற்று கூட்டங்களை நடத்திட வேண்டும்.

செப்டம்பர் 10-க்கு இடையே ஏறத்தாழ இருபது நாட்கள் இருக்கின்றன. இப்பொழுதே அந்தக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி, அந்த நாளில் நாடு முழுவதும் இந்தி எதிர்ப்புப் போர்க் குரல் எழுந்திட ஆவன செய்திட வேண்டுகிறேன்.

அந்த நாளில் ஒலிக்கவேண்டிய ஒரே குரல் இந்தி எதிர்ப்புக் குரல்தான்! வேறு எந்தப் பிரச்சினைக்கும் அந்த மேடைகளில் இடமளித்தல் கூடாது; தேவையில்லை!

கட்சிச் சார்பற்ற முறையில் தமிழ்நாட்டார் எல்லோரும் இந்தியை வரிந்து கட்டிக்கொண்டு எதிர்க்கிறார்கள் என்பதைக் காட்டவே அந்த நாள் முழுக்க முழுக்க பயன்பட வேண்டும்.

மறவாதே! செப்டம்பர் பத்து

நமது மொழி காக்கும் நாள்!

நமது உரிமை காக்கும் நாள்!

அன்புள்ள,

மு. க.

(18-08-1978)

591. "மகாத்மியம்" மறைந்து விடுமா?

உடன்பிறப்பே,

கழக ஆட்சி நடைபெற்றபோது கடுகை மலையாக்கி, துரும்பைத் தூணாக்கி ஆட்சிக்கு விரோதமான பிரச்சாரத்தை திட்டம் போட்டுத் தூண்டிவிட்டு நடத்திய இன்றைய ஆளுங்கட்சியினரும்; அவர்களுக்கு ஆலவட்டம் சுற்றி தூபம் போட்டுக் கொண்டிருந்தவர்களும் இன்று நடைபெறும் ஆட்சியில் நாள்தோறும் நிகழும் இமாலயத் தவறுகளை எல்லாம் கவனிக்காதவர்களைப் போலவும் - அல்லது இருட்டடிப்புச் செய்வதில் அக்கறை கொண்டவர்களாகவும் விளங்குவதை நாடு, கூர்ந்து பார்த்துக் கொண்டுதானிருக்கிறது!

பஸ் அதிபர்களிடம் தி.மு.க. ஆட்சியின்போது பணம் வசூலிக்கப்பட்டது! ஆனால் எதற்காக? கட்சி நிதியா? அல்ல! கையூட்டா? அல்லவே அல்ல!

வறட்சிப் பணிகளை நிறைவேற்ற அரசின் சார்பில் எடுத்த நடவடிக்கைகளுக்காகவோ அல்லது யுத்த நிதி, புயல் வெள்ள நிவாரண நிதிகளுக்காகவோ தான் கழக அரசு காலத்தில் நிதி வசூலிக்கப்பட்டது.

ஆனால் இன்று மாவட்டந்தோறும் அமைச்சர்கள், அதிகாரிகள் கெடுபிடியோடு ஆளுங்கட்சிக்காக மதுரை மாநகராட்சி மன்ற தேர்தல் நிதி திரட்டப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக அரசின் பஸ் தேசியமயக் கொள்கையும், அரசுச் சார்புடைய போக்குவரத்துக் கழகங்கள்; பஸ் வழித் தடங்களில் பெற்றிருக்கும் முன் உரிமையும் பறிபோய் விடக்கூடாது என எச்சரிப்பதற்குக்கூட பொது உடமைவாதிகளின் உதடுகள் அசையக் காணோம்!

இந்திய நாட்டில் சில மாநிலங்களில் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் அந்தக் கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட பஸ் உச்ச வரம்பு சட்டத்தைக் கழக அரசு கொண்டு வந்து நிறைவேற்றியது. அதன் விளைவாகத்தான்

பெரியார், அண்ணா, பல்லவன், பாண்டியன், சேரன், சோழன், கட்டபொம்மன் போக்குவரத்து கழகங்கள் தொடங்கப்பட்டு பொது மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்கிற பெரும் பணியிலே லாப நட்டக் கணக்குகளைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயண வசதிகளைக் கழக அரசு விரிவுபடுத்தியது.

அதற்கு அடுத்து மாவட்ட வாரியாக பஸ்களைத் தேசிய மயமாக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்பாக உச்சநீதி மன்றத்திலே வழக்கு! அந்த வழக்கினை விரைவுபடுத்தி தேசியமய கொள்கையை மாவட்ட வாரியாக நடைமுறைப்படுத்த அரசுத் தரப்பில் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சுட்டிக் காட்டுவது ஒரு எதிர்க்கட்சிக்குரிய கடமை! பொறுப்பு!

அதேபோல பஸ் உச்ச வரம்பு சட்டத்தை எதிர்த்து பஸ் அதிபர்கள் வழக்கில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால்; அந்தச் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வந்திட ஆவண செய்திட அரசு ஆர்வம் காட்ட வேண்டாமா? என்று இடித்துரைத்தலும் எதிர்க்கட்சிக்குரிய கடமையேயாகும்!

எதிர்க்கட்சியான தி.மு.கழகம், சோஷலிசக் கொள்கைகளுக்கு எதிரிடையான கட்சியாக இருந்தாலோ, அல்லது சோஷலிசம் என்ற சொல்லை வெறும் உதட்டளவு முழக்கமாகக் கொண்டிருந்தாலோ- பஸ் தேசியமயம், பஸ் உச்ச வரம்பு போன்ற கொள்கைகளுக்கு விரோதமான கருத்துக்களைச் செயல்படுத்த அரசாங்கத்தை தூண்டும்!

தி.மு.கழகம், அத்தகைய கட்சி அல்ல! பதினான்கு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோதும், ராஜமானியம் ரத்து செய்யப்பட்டபோதும் அன்றிருந்த இந்திரா அரசைப் பாராட்டிய கட்சி!

முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா நில உச்சவரம்பு சட்டத்தினால் அரசாங்கம் எந்த உபரி நிலத்தையும் கையகப்படுத்தவில்லையென்பது கண்டு, பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்து ஏறத்தாழ அறுபதாயிரம் ஏக்கரா நிலத்தைக் கையகப்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கிய ஆட்சி, தி.மு.க. ஆட்சி!

விவசாயத் தொழிலாளர்கட்கு உரிமையற்றிருந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்க சட்டம் கொண்டு வந்தது தி.மு.க. ஆட்சி!

மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தை அறிவித்து, மத்திய அரசின் அனுமதி அதற்குக் கிடைக்காமற் போனதும் நாடறிந்த செய்தி!

அத்தகைய முற்போக்கு கொள்கைகளின் வரிசையிலேதான் பஸ்கள் உச்சவரம்பு, பஸ்கள் தேசியமயக் கொள்கைகளுக்கான சட்டங்களைக் கழக அரசு இயற்றியது!

உச்சநீதி மன்றத்திலே வழக்கிருக்கும்போது எந்தெந்த பஸ் அதிபர்கள் டெல்லிப் பட்டணத்திலே போய் யார் யாரிடம் தவம் கிடந்தார்கள் என்பதெல்லாம் தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் வெளியிட முடியாத ரகசியங்களாக இருந்தன.

தேசியமயக் கொள்கையானாலும், உச்சவரம்புக் கொள்கையானாலும் சிறிய பஸ் அதிபர்கள் - திடீர்ப் பாதிப்புக்கு ஆளாகக் கூடாது என்பதிலே அன்றைக்குக் கழக அரசு அக்கறை காட்டத் தவறவில்லை.

எனினும், தேசியமயக் கொள்கை முழுமையாக நிறைவேற்றிட முடியும் போது அந்தச் சிறிய பஸ் அதிபர்களும் வேறு தொழில்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அப்போதே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அதுபோலவே போக்குவரத்துக் கழகங்கள் பஸ் வழித் தடங்களில் பெற்றுள்ள முன்னுரிமையைப் பொதுவாகவே திரும்பப் பெற்றுக்கொள்வது என்றும், அந்தத் தடங்களை மீண்டும் தனியார்களுக்கே தருவது என்றும் ஒரு கொள்கை முடிவெடுப்பது அரசின்போக்காக இருக்குமானால் அதனை ஏற்றுக்கொள்ள தி.மு.கழகம் போன்ற சமதர்மக் கொள்கையில் நாட்டமுடைய ஒரு அரசியல் கட்சியினால் முடியாது!

இவற்றையெல்லாம் நான் முன்பு எழுதிய அந்தோ தேசிய மயமே! என்ற தலைப்பிட்ட கடிதத்தில் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதற்கு பஸ் முதலாளிகள் சார்பில் பதில் அறிக்கை யொன்றைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில், கழக அரசு காலத்தில் உச்சவரம்பின் மூலம் பேருந்துகளை அரசுடைமையாக்கியதையும், இழப்பீட்டுத் தொகை வழங்கியதையும், அந்தப் பேருந்துகளில் வேலை பார்த்த தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டதையும் பஸ் அதிபர் சங்கத் தலைவர் அவர்களே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதேபோலத்தான் இப்போதும் கழகம் கூறுகிறது; அரசுடைமையாக்குவதற்கு நியாயமான இழப்பீடு! முதலில் வேலை பார்த்த தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு! பட்டறைகள் என்று உண்மையிலேயே இருந்தால் அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிற முயற்சி!

இவைகளுக்குக் குறுக்கே, கழகம் நிற்க விரும்பவில்லை!

பஸ் அதிபர் சங்கத் தலைவர் வாயிலாக, மற்றொரு கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள்!

முன்பிருந்த கழக அரசில் பஸ் அதிபர்கள் கோர்ட்டுக்குச் சென்று வெற்றிபெற்றதில்லையா? பெற்றிருக்கலாம் - ஆனால்; கழக அரசு அந்த வெற்றிகளின் நிழலில் ஒண்டிக் கொண்டோ, ஒளிந்து கொண்டோ, பஸ் போக்குவரத்துத் துறையில் - தான் எடுத்த முற்கோக்குக் கொள்கைகள் எதனையும் வாபஸ் பெற்றுக் கொள்ளவில்லை!

அதற்கு அடையாளம்தான், மாவட்ட வாரியாக பஸ்கள் தேசியமயம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்ட நிகழ்ச்சியாகும்!

அதன் முதற்கட்டமாக நீலகிரி மாவட்டத்திலிருந்த தனியார் பஸ்கள் அரசுடைமை ஆக்கப்பட்டன! உடனே நீதிமன்றம் சென்றனர் அதிபர்கள்! உச்ச நீதிமன்றத்தில் அந்த பஸ் தேசியமயச் சட்ட சம்பந்தமான வழக்கு நீண்டகாலமாகவே நித்திரையில் இருக்கிறது! அதனை உசுப்பி எழுப்பிவிட வேண்டாமா?

அதைப்போலவே குதிரைப் பந்தய ஒழிப்பு வழக்கும் உச்சநீதி மன்றத்திலே வெகுகாலமாக முடங்கிக் கிடக்கிறது! அந்த வழக்குகள் விரைவில் முடிவுற, அரசின் சார்பில் வலுவான ஆதாரங்களுடன் முனைப்பான முயற்சிகளில் ஈடுபடவேண்டாமா?

கர்நாடக மாநிலத்தில் ஆம்னி பஸ்கள் தேசிய மயமாக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் பஸ் அதிபர்கள் வழக்குத் தொடர்ந்தனர். அதில் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைத்தது. உடனே கர்நாடக அரசு உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்து கொண்டது. முடிவு என்ன? பொதுநலன் என்ற அடிப்படையில் அந்தச் சட்டம் சரியானதுதான் எனக் கூறி, ஆம்னி பஸ்களை அரசுடைமையாக்கியது செல்லும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. ஏற்கனவே கர்நாடக அரசு, அங்கிருந்த தனியார் பஸ்களையெல்லாம் மொத்தமுள்ள 19 மாவட்டங்களுள் 13 மாவட்டங்களில் தேசியமயமாக்கிவிட்டது என்பதையும் மறந்துவிடக் கூடாது!

அதிபர்களின் சார்பில் அறிக்கைகள் வாங்கி வெளியிட்டு விட்டாலோ; இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்று வியப்போடு அரசின் சார்பில் நாடகம் நடித்து விட்டாலோ; மதுரை மாநகராட்சித் தேர்தலுக்காக வாங்கிய நிதி மகாத்மியம் மறைந்து விடுமா? மறைத்துவிடத்தான் முடியுமா?

அன்புள்ள,

மு. க.

(19-08-1978)

592. "என்ன நடக்கிறது டெல்லியிலே!"

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் தலைநகராம் புதுடெல்லிப் பட்டினத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த இந்தியக் குடிமக்களில் மிகப்பெரும்பாலோர், ஜனநாயகத்தை மீட்டுவிட்ட மகிழ்ச்சியைப் பெற்றதோடு மட்டுமன்றி - வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை வாழ்வு போன்ற பிரச்சினைகள் பலவற்றிற்கு விரைந்து தீர்வுகள் காணப்படும் என்று மிக்க ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த ஓராண்டுக் காலத்தில் ஜனதா ஆட்சியில் நடைபெற்றுள்ள காரியங்கள் என்ன?

ஓராண்டில் ஆறுமாத காலமாக அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துவதே முயற்கொம்பு எனக் கூறக்கூடிய அளவுக்கு நாள்தோறும் அவர்கள் கட்சிக்குள் அமளி- அவர்கள் அமைச்சரவைக்குள் பூசல் - இத்யாதி நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனதா வெற்றி பெற்று டெல்லியில் அமைச்சரவைப் பொறுப்பு ஏற்கும் போதே மனநிறைவான சூழ்நிலையில் ஆட்சி தொடங்கப்படவில்லை. ஏதோ, அன்று முளைத்த விவகாரங்களை மூடி மறைத்துவிட்டு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களும் கிருபளானி அவர்களும் மொரார்ஜி தேசாய் அவர்களை பிரதமர் என்று அறிவித்துவிட்டு, அதன் தொடர்பான பணிகள் சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்துக்களை வழங்கினர்.

இன்று அவர்களே, கண்ணீர் வடிக்கிற அளவுக்கு, டெல்லி அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு கட்டத்தில் மொரார்ஜிதேசாய்; கிருபளானியும், ஜெயப்பிரகாஷும் இந்த விவகாரங்களில் தலையிட்டுத் தீர்வுகாண முயலுவதே தவறு என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் கருத்தறிவித்து விட்டார்.

பாபு ஜகஜீவன்ராம், அன்றைக்கே ஒரு அதிருப்தியான மனோநிலையில் மத்திய அமைச்சரவைக்குள் அடியெடுத்து வைத்தார்.

ஜனதா அரசு அமைந்து சில மாதங்கள் கழிந்தவுடனேயே அவர்களுக்குள் ஒரு கூட்டு மனப்பான்மையில்லையென்பதை, வடக்கேயுள்ள சில பத்திரிகையாளர்கள் என்னைப் பேட்டி கண்டபோது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

இதுவரையில் அந்தக் கூட்டு மனப்பான்மை ஏற்படாதது மாத்திரமல்ல; நாளுக்கு நாள் பிளவு விரிவாகிக் கொண்டே போகிறது!

சிறுநீர் அருமருந்து என ஆரம்பித்தபோதே நாட்டு மக்கள், தங்களின் ஏமாற்றத்தை ஏக்கப் பெருமூச்சாக வெளியிட்டனர்.

இந்திராகாந்தி கைது போன்ற அலங்கோலங்களும், வழக்குகள், விசாரணைகள், கமிஷன்கள் போன்ற நடவடிக்கைகளும்தான் நாளேடுகளையும், வானொலிகளையும் ஆக்ரமித்துக் கொண்ட செய்திகளாயிற்றே தவிர, மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் அனைத்தும் வெறும் அறிவிப்புக்களோடு நின்றுபோய் விட்டன.

படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் இலட்சக் கணக்கானோர் துணைக்கண்டம் முழுதும் நிரம்பிக் கிடக்கின்றனர். வறுமை மிஞ்சித் தாழ்வுற்ற மக்கள் கோடிக்கணக்கில் குமுறி அழுதுகொண்டிருக்கின்றனர். அதற்கான சிந்தனைகள் உண்டோ? செயல்களாற்றும் நிலைமைகள் உண்டா? இல்லை! அதுபற்றி நினைக்கவே நேரமில்லை; டெல்லியிலே இருப்போர்க்கு!

சரண்சிங் - தேசாய் மோதல்! அதைத் தொடர்ந்து சரண்சிங், ராஜினாமா செய்ய வற்புறுத்தப்படல்!

ராஜ்நாராயண் போர்க்கோலம் - அவரும் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படல்!

தேசாய் மீது அல்லது அவர் மகன் மீது சரண்சிங் குற்றச்சாட்டுக்கள்! அந்தக் குற்றச்சாட்டுக்களை சந்திக்கத் தயார் என்று தேசாய் கூறுவார் என்று எதிர்பார்த்த நேரத்திலே; புகார்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டால்தான் மீண்டும் சரண்சிங்கை அமைச்சராக்க முடியும் என தேசாய் விதித்த நிபந்தனை!

கிசான்கள் ஊர்வலம் நடைபெறும் என்று சரண்சிங் குழுவினர் அச்சுறுத்தல்!

பிறகு ஒரு மாதிரியாகப் பிரச்சினைகள் தீர்ந்தது போன்ற தோற்றம்!

மறுநாளே வெடிப்பு! சரண்சிங் - தேசாய் கடிதங்களை மக்களவை, மாநிலங்களவையில் வைக்க வேண்டுமென்று தகராறு! அது உச்சகட்டம் வலையில் போய், திடீரென ஒருநாள், சரண்சிங்; ஜனதாக் கட்சித் தலைவராவார் என்ற செய்தி - சந்திரசேகர் விட்டுக் கொடுத்துவிட்டார் என்ற தகவல்!

தொடர்ந்து அடுத்து வருகிறது மற்றொரு செய்தி - அதாவது பிரதமரின் மகன் காந்தி தேசாய் மீது ஊழல் புகார் விசாரணை நடத்த வேண்டுமென்று சரண்சிங் ஏற்கனவே கூறியதையும் அந்தக் கோரிக்கையையும் சரண்சிங் வாபஸ் பெற்றுக்கொண்டால்தான் சரண்சிங் ஜனதா கட்சித் தலைவராகத் தனது சம்மதம் கிடைக்குமென மொரார்ஜி நிபந்தனை விதிக்கிறார்!

அதற்கு சரண்சிங் தரப்பு பதில் என்ன தெரியுமா? காந்தி தேசாய் பற்றி சரண்சிங் விடுத்த அறிக்கையை வாபஸ் பெறமாட்டாராம்; ஆனால் விசாரணை நடத்தியாக வேண்டுமென்று புதுக்கோரிக்கை வைக்க மாட்டாராம்!

இரண்டு ஜனதாத் தலைவர்களும் சேர்ந்து என்ன சொல்லுகிறார்கள்? ஊரில் யார் மீது ஊழல் புகார் வந்தாலும் அதற்கு விசாரணை உண்டு! ஆனால் அப்படியொரு புகார் தன் மீது வந்தால் அதற்கு ஆதாரம் கிடையாது! அதை விசாரிக்க முடியாது! இப்படிச் சொல்கிறார் மொரார்ஜி!

நான் கொடுத்த புகார் அப்படியே இருக்கிறது; ஆனால் அவற்றை விசாரிக்க வேண்டுமென்று இனிமேல் புதிதாக வற்புறுத்த மாட்டேன் - இப்படிச் சொல்கிறார் சரண்சிங்!

இவர்களுக்கிடையே ஊழல் புகார் கால்பந்து போல் உதைபட்டு உருண்டும், எழும்பியும் - வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறது!

நிபந்தனைகளை இரு சாராரும் ஏற்றுக் கொண்டு ஊழல் புகார்களைத் திரைபோட்டு மறைத்து விடுவதற்குத் தயாரானாலும் - இந்தச் சமரச ஏற்பாட்டை ஜகஜீவன்ராம் குழுவினர், ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லையென்று மற்றொரு செய்தி வருகிறது!

காலைச் செய்தியைப் படித்துவிட்டு, ஒரு முடிவுக்கு வருவதற்குள் மாலையில் வேறு செய்தி வெளியாகிறது!

ஒரு முடிவே ஏற்பட்டு சிக்கல்கள் எல்லாம் தீர்ந்தன என்று ஒரு செய்தி வந்தாலும்கூட, அந்தச் செய்திக்கும் அற்ப ஆயுள்தான் என்பது தெளிவாகி விட்ட விஷயம்!

இப்படியொரு குழப்ப மண்டபமாகக் காட்சி தரும் டெல்லிக் கொலுமண்டபத்திலிருந்து, நாட்டு மக்களின் நலிவு நீக்கும் எந்தத் திட்டமும் உருவாகப் போவதில்லை!

பொழுது போய் பொழுது விடிந்தால் உட்கட்சிக் குழப்பம் - அதற்கு ஒரு நாள் ஓய்வு என்றால் பழி தீர்க்கும் படலம் - மறுநாள் மீண்டும் உட்கட்சிக் குழப்பம் - இப்படி நடைபெறும் எந்த அரசாலும், மக்களுக்கு எதையும் சாதிக்க முடியாது!

வெற்றி பெற்ற உடனே வேகவேகமாகப் பல அறிவிப்புக்கள் பறக்கவிடப்பட்டன!

ஜனநாயகத்திற்குப் புறம்பாகச் செய்யப்பட்ட சட்டங்கள், கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் -ஒன்றிரண்டை மாற்றம் செய்தனர் ஜனதா ஆட்சியாளர்கள்!

முன்பு இருந்த அரசு - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகள் என உயர்த்தியதை மாற்றி மீண்டும் ஐந்து ஆண்டுகள் என ஆக்கப்போகிறோம் என்று இவர்கள் அழுத்தமாக அறிவித்தார்களே; அது என்ன ஆயிற்று?

அது கிடக்கட்டும் - மக்களின் பிரச்சினைகளை அணுகி ஆராய்ந்து அவர்களுக்கு வாழ்வளிக்க புதிய கொள்கைகள் வகுக்க இந்த ஓராண்டுக் காலத்தில் ஜனதா அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

என்ன நடக்கிறது டெல்லியிலே? என்றல்லவா ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் விரக்தியோடு கேட்டுக் கொண்டிருக்கின்றான்!

அன்புள்ள,

மு. க.

(20-08-1978)

593. சட்டம் யார் கையில்?

உடன்பிறப்பே,

பழனி, காவல் நிலையத்தில் இப்ராகீம் என்ற இஸ்லாமிய நண்பரும், ஜென்னத் உன்னிசா என்ற அவரது துணைவியும் எந்த அளவு அலங்கோலத்திற்கு ஆளாக்கப்பட்டனர் என்பதையும், இப்ராகீம் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டுவிட்டார் என்பதையும் பழனிக்குச் சென்று நேரில் விவரங்களைத் தெரிந்து கொண்டு வந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தமிழகத் தலைவர் அருமை நண்பர் அப்துல் சமது அவர்களும், சட்டப் பேரவை உறுப்பினர் அருமை நண்பர் லத்தீப் அவர்களும் அறிக்கைகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

கணவன் இப்ராகீம் முன்னிலையிலேயே மனைவி ஜென்னத் உன்னிசா கற்பழிக்கப்பட்டிருக்கிறார் என்றும், அதுகண்டு வெகுண்டெழுந்த இப்ராகீம் பிணமாக்கப்பட்டார் என்றும் செய்தி பரவியதும், பழனியில் உள்ள முஸ்லீம்கள், முஸ்லீம் அல்லாதார் ஆகிய பொதுமக்கள் ஒன்று திரண்டு நியாயங் கோரியிருக்கின்றனர்.

அப்படி அநீதியை எதிர்த்துக் கிளம்பியவர்களும் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

பழனிச் சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் கோவை நகரில் ஆளுங்கட்சியும் கம்யூனிஸ்டு கட்சிகளுமில்லாத மற்ற கட்சிகள் அனைத்தும் கண்டன ஊர்வலமொன்றை அமைதியான முறையில் நடத்தியிருக்கின்றன.

காலை முதல் பிற்பகல் இரண்டு மணி வரையில் அர்த்தால் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்!

அந்த முடிவுக்கேற்ப, பல்லாயிரவர் கொண்ட ஊர்வலம் நடந்திருக்கிறது முழுமையான அர்த்தாலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஊர்வலத்தினர் அமைதியாகச் சென்று கொண்டிருந்தபோது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்களால் தூண்டிவிடப்பட்டவர்களும் ஊர்வலத்தினர் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

அதன் தொடர்பாக வன்முறைச் சம்பவங்கள், போலீஸ் ஜீப் ஒன்று கொளுத்தப்படுகிற அளவுக்குப் பெருகியிருக்கின்றன.

ஊர்வலத்தை நடத்திச் சென்ற தலைவர்கள் நடந்து சென்ற பகுதியில் இருந்தவர்களுக்கு ஊர்வலத்தின் இறுதிப் பகுதியில் ஆளுங்கட்சியினர் நடத்திய இந்த வன்முறைச் செயல்கள் எதுவும் முதலில் தெரியாது. காரணம் - அவ்வளவு நீண்ட பேரணியாக அந்த ஊர்வலம் அமைந்திருந்தது.

கலவரம் செய்ததாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பெரும்பான்மையோர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களாம். அவர்களை விடுவிக்க வேண்டும். அவர்கள் மீது வழக்குத் தொடரக்கூடாது என்று ஆளுங்கட்சியின் மேலிடத்துப் புள்ளிகள் வற்புறுத்தி வருகிறார்களாம்!

கண்டன ஊர்வலத்துக்குக் காவல் துறையினர் அனுமதி கொடுத்ததே தவறு என்று தொடக்கத்திலேயே எதிர்ப்புக் காட்டிய ஆளுங்கட்சியினர், திட்டமிட்டே ஊர்வலத்தினர் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

கலவரக்காரர்களை உடனடியாகக் கைது செய்தபோது அதில் ஆளுங்கட்சியினரே பெரும்பான்மையாக இருந்துவிட்ட காரணத்தால், அதற்குக் கழுவாய் தேடிக்கொள்ள, காவல் துறையினர் முஸ்லீம்கள் வாழும் பகுதியில் புகுந்து அவர்கள் நோன்பு கடைப்பிடிக்கிற நிலையில் கடுமையான தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்.

மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களை வழக்கில் சிக்க வைக்குமாறு காவல் துறையினர் கட்டாயப்படுத்தப் படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

பழனி, நிகழ்ச்சியின் போது கைலி கட்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் காவல்துறையினர் அடித்து நொறுக்கியிருக்கின்றனர். அதில் முஸ்லீம் அல்லாதவர்களும் தாக்குண்டு காயமடைந்துள்ளனர்; கைலி கட்டிக் கொண்டிருந்த காரணத்தால்!

நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும், அப்துல் ஸமது அவர்களும், பொருளாளர் சாதிக், கண்ணப்பன், மதுரை ஷரீப், மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் ஆகியோரும் பழனி மருத்துவமனைக்குச் சென்று மறைந்த இப்ராகீம் அவர்களின் துணைவியாரைச் சந்தித்து ஆறுதல் கூறியிருக்கின்றனர்.

பின்னர் இப்ராகீம் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கும் - ஆயக்குடி, கீரனூர் போன்ற ஊர்களுக்கும் சென்று அங்கு கொதிப்படைந்துள்ள இஸ்லாமியப் பெருமக்களை அமைதிப்படுத்தித் திரும்பியுள்ளனர்.

இப்ராகீம் உடலைக் குளிப்பாட்டி, அவர்களது மார்க்க முறைப்படி அடக்கம் செய்ய முடியாத அளவுக்கு, உடல் அவ்வளவு நைந்து போயிருந்ததாகவும், அதனால் தண்ணீரை உடல் மீது தெளித்து அடக்கம் செய்ததாகவும் முஸ்லீம் ஜமாஅத்தில் உள்ள பெரியவர்கள் தெரிவித்ததாக, மிக உருக்கத்துடன் சமத் அவர்கள் என்னிடத்தில் குறிப்பிட்டார்கள்.

காவல் நிலையத்தில் ஒரு கால கட்டத்திற்கு மேல் விசாரணைக்காக யாரையும் வைத்திருக்கக்கூடாது என்ற விதியையும் மீறி - அதிலும் குறிப்பாகப் பெண்களை ஆறு மணிக்கு மேல் லாக்கப்பில் காவல் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது என்ற ஆணையையும் மீறி - பழனி காவல் நிலையம் செயல்பட்டதோடு நில்லாமல் ஒருவர் கொலைக்கும் காரணமாக இருந்திருக்கிறது!

அதுமட்டுமல்ல; ஒரு கொலை வழக்கில் உண்மையிலேயே சம்பந்தப்பட்ட ஒரு நபரைத் தப்புவிப்பதற்காக வேண்டி இப்ராகீம் மீது காவல் துறையினர் பழனியிலே குறிவைத்துப் பாய்ந்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களை யொட்டிப் பழனியில் தெருவில் போவோர் வருவோர் - சிறு கடை வியாபாரிகள் அனைவரும் தாக்கப்பட்டிருப்பதும் வேதனைக்குரியதாகும்.

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஆளுங்கட்சித் தொண்டர்கள் ஏவிவிடப்பட்டுக் கலகம் விளைவித்ததைப் போலவே கோவையில் அனைத்துக் கட்சியினர் நடத்திய ஊர்வலத்திலும் ஆளுங்கட்சியினர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்!

சட்டமும் ஒழுங்கும் இந்த ஆட்சியில் காப்பாற்றப்படுவதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுக்களா?

நாள்தோறும் சட்டம் தன் கடமையைச் செய்யும் என உச்சரித்துக் கொண்டிருக்கிற அரசினர் - இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் கூறப்போகும் பதில் என்ன?

கள்ளச் சாராய பேர்வழிகளைப் பிடிக்கப்போன காவல் துறையினர் மீது தேனாம்பேட்டை ஆளுங்கட்சியினர் தாக்குதல் நடத்தி நையப் புடைத்துக் கட்டிவைத்துக் கத்தியாலும் குத்தினார்கள் ஆண்டு ஒன்று முடிந்துவிட்டது! என்ன நடவடிக்கை அவர்கள் மீது?

ஒரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. காவல் நிலையத்தில் பலாத்காரமாக நுழைந்து, அங்கே லாக்அப்பில் இருந்த தனது உறவினர்களை விடுவித்துக்கொண்டு, அதிகாரிளையும் தரக்குறைவாகப் பேசிவிட்டு சென்றாரே; மாதங்கள் பல ஓடிவிட்டனவே!

புனிதர் (?) ஆட்சியில் அவர் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

எப்படியோ பழனியில் காவல் நிலைய சம்பவம் ஒன்று நடந்து விட்டது! அதுபற்றி அமைச்சர்களோ அதிகாரிகளோ முன் வந்து கொதிப்படைந்துள்ள மக்களுக்கு ஆறுதல் கூறி அமைதிக்கு வழி வகுக்க வேண்டுமேயல்லாமல் - அதிலும் ஆளுங்கட்சியினர், சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பழனி, கோவை ஆகிய இடங்களில் ஆட்டம் போடுவது என்றால்; அது என்ன நியாயம்?

நாளுக்கு நாள் இத்தகைய கலவரங்கள் பரவுவது நல்லதல்ல!

நடந்தவைகளை எச்சரிக்கைகளாக எடுத்துக் கொண்டு சட்டம், ஒழுங்கு, அமைதி காக்க - பாரபட்சமற்ற முறையில் அரசு முன்வரவேண்டும்! இல்லையேல் சட்டம் யார் கையில்? இருக்கிறது என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததாகிவிடும்!

அன்புள்ள,

மு. க.

(21-08-1978)

594. அதுதானே பரிதாபம்!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு 21-ஆம் நாள் வடஆற்காடு மாவட்டம் தண்டராம்பட்டில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் நான் பின்வருமாறு பேசினேன். முரசொலி (சென்னை பதிப்பு 23-ஆம் நாள்) அந்தப் பேச்சை வெளியிட்டிருந்தது.

எம்.ஜி.ஆர். ஒரு முதலமைச்சராக இருந்து இந்தியை எதிர்ப்பதால் நான் அதை வரவேற்கிறேன். ஆனால் உளமார எதிர்க்கிறார்களா? நாளைக்கு இந்தியை எதிர்த்து ஒரு போராட்டம் வருகிறதென்றால் எம்.ஜி.ஆர். தலைமை ஏற்பாரா? துணிவோடு அதைச் சந்திப்பாரா? 1976-இல் டெல்லி நாடாளுமன்றத்தில் அவர் கட்சியினர் என்ன பேசினார்கள்? தமிழ்நாட்டில் இந்திப் பிரச்சினையைக் கிளப்புகிறவன் கருணாநிதிதான்; நாங்கள் இந்தியை ஆதரிக்கிறோம் என்று சொல்லி - அப்படிச் சொன்னதை மத்திய உள்துறை அமைச்சர் பிரமானந்த ரெட்டியார் பாராட்டியதை நான் சட்டசபையிலேயே படித்துக் காட்டினேனே; அந்த 1976-க்கும் இந்த 1977-க்கும் இடையில் ஓராண்டுக் காலத்தில் (இந்தி ஆதரவு விஷயத்தில்) மனம், மாறக் காரணம் என்ன? அன்றைக்கு இந்திரா காந்திக்குப் பயந்து இந்தியை ஆதரிக்கிறோம் என்று பேசினார்கள். இன்று இந்தியை எதிர்க்காவிட்டால் தமிழ்நாட்டில் வேலையில்லை என்பதைப் புரிந்து கொண்டு எதிர்ப்பதாகப் பேசுகிறார்கள்! அவர்கள் கூறுகிற இந்தி எதிர்ப்பு வரவேற்கத் தக்கதாக இருந்தாலும் கூட அ.தி.மு.க. கடைசி வரையில் போராடக்கூடிய துணிவு பெற்ற இயக்கமாக இருக்குமா? என்பதில் நமக்கு சந்தேகமிருக்கிறது. அந்தச் சந்தேகத்தை எம்.ஜி.ஆர். அவர்களோ மற்றவர்களோ சான்றுகள் மூலம் போக்கிட வேண்டும். கருணாநிதிக்கு எதற்கெடுத்தாலும்

சந்தேகம்தான் என்று நையாண்டி செய்துவிட்டால் போதாது. ஏனென்றால் முன்பு தமிழகம் மொழிப் போரில் கொந்தளித்தபோது நீங்கள் கோவாவில் இருந்தவர். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது ஆதரிக்கிறோம் இந்தியை என்று நாடாளுமன்றத்தில் பேசியவர்கள். ஆகவேதான் உங்கள் மீது எங்களுக்குச் சந்தேகம். அந்தச் சந்தேகத்தைப் போக்கும் வகையில் நீங்கள் நடந்து கொள்வீர்களா? என்பதை விரைவில் பார்க்கத்தான் போகிறோம்.

இதற்கு இத்தனை நாட்கள் பொறுத்து துணைச் சபாநாயகர் திருநாவுக்கரசு திருமண விழாவில் (4-9-1978) எம்.ஜி.ஆர். பதில் கூறியிருக்கிறார்.

நான் இந்த விழாவில் அரசியல் பேசக்கூடாது என்று இருந்தேன். ஆனால் வரும் வழியில் என்னால் மதிக்கப்படுகிற நண்பரின் பேச்சைப் பத்திரிகையில் பார்த்த பிறகு சில கருத்துக்களை கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்

என்று அவர் பேச்சைத் தொடங்கியிருக்கிறார். அதாவது நான் ஆகஸ்டு மாதம் 29-ஆம் நாளன்று காலை அருப்புக் கோட்டையிலும், மாலை விருதுநகரிலும் பேசியபோது, எம்.ஜி.ஆர். - அ.தி.மு.க. நடத்தும் இந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு தலைமை வகிக்கட்டும். அதற்குப் பதிலாக அவர் தலைமை வகிப்பதாயிருந்தால் அவர் பின்னால் கருணாநிதி வரவேண்டும்! வருவாரா? என்று அவர் சவால் விடுவது பெரியார், அண்ணா போன்ற புலிகளுக்குப் பின்னால் கொடிபிடித்துச் சென்ற என்னை, எலிகளுக்குப் பின்னால் கொடிபிடித்து வருகிறாயா? என்று கேட்பது போலிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அப்படி நான் 29-ஆம் தேதி பேசியது செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி காலையில்தான் பத்திரிகைகளில் எம்.ஜி.ஆர். அவர்களால் படிக்க முடிந்திருக்கிறது! ஆனால் நான் மேற்கு ராமநாதபுரத்தில் பேசியது ஆகஸ்டு 30-ஆம் நாள் எல்லா ஏடுகளிலும் வெளிவந்து விட்டது. ஒருவேளை எம்.ஜி.ஆர். நாலைந்து நாட்கள் பத்திரிகைகளைச் சேர்த்து வாரம் ஒருமுறை படிக்கிற வழக்கத்தைக் கொண்டிருக்கலாம். அதுவும் சென்னையில் திருமணத்திற்கு வருகிற வழியில்தான் அந்தப் பத்திரிகையைப் பார்த்ததாக அவரே மணவிழாவில் கூறி, அது தினத்தந்தி போன்ற ஏடுகளில் வெளிவந்திருக்கிறது. அது போகட்டும்; எனக்கு அவர் என்ன பதில் அளித்திருக்கிறார்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ராமச்சந்திரன் தயாரா என்று கேட்டார்கள். நான் தயார் என்று சொன்னேன் நானாகப் போய். நான் தலைமை வகிக்கிறேன். நீ தொண்டனாக வா! தோழனாக வா! என்று கேட்கவில்லை. அவர்கள் கேட்டார்கள் நான் சொன்னேன். இப்போது நீயா எனக்குத் தலைமை வகிப்பது என்று கூறுகிறார்கள்!

இதுதான் அந்த மணவிழாவில் அவர் பேசிய அரசியல்! அல்லது அவர் வழங்கிய விளக்கம்! இந்தி எதிர்ப்புக் களம் கண்டு, இந்தத் தமிழகத்திலேயே இல்லாமல் கோவாவுக்குச் சென்று விட்டவர், அண்ணாவின் ஆணைப்படி கழகத்தினரின் இல்லங்களிலும், அலுவலகங்களிலும் இந்தியை எதிர்த்து கறுப்புக்கொடிகளை ஏற்றியபோதும், அதனால் அமளிகளைத் தாங்கிக் கொண்டபோதும், தன் வீட்டிலோ - அலுவலகத்திலோ கறுப்புக்கொடி ஏற்றாதவர் - இப்போது இந்தி எதிர்ப்புப் போருக்குத் தலைமை ஏற்பாரா? என்ற கருத்தில் ஒரு வினாவை எழுப்பினால்; எம்.ஜி.ஆர். என்ன சொல்லி இருக்க வேண்டும் - தலைமை ஏற்கத் தயார் என்பதோடு சொல்லி நிறுத்தியிருக்க வேண்டும். அது பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும். என்னவோ நான் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபடாதவனைப் போலக் கருதிக் கொண்டு, நான் தலைமை ஏற்கத் தயார்! என் தலைமையை ஏற்று கருணாநிதி என் பின்னால் வரத் தயாரா? என்று நிபந்தனையொன்றை இணைத்து எதற்காக புதுவிதமான அறைகூவலை விடுக்க வேண்டும்?

நாம் எடுத்து வைக்கிற எல்லாப் பிரச்சினைகளுக்கும் பதில் அளித்து விட்டவரைப்போல - இது ஒன்றுக்கு மட்டும்தான் இதுவரையில் பதில் அளிக்கத் தவறிவிட்டதைப் போல, மணவிழா மேடையில் மேலவைத் தலைவர், பேரவைத் தலைவர் (இருவரும் கட்சி அரசியலில் கலக்கப்படக் கூடாதவர்கள் என்பது மரபு) இருவரையும் வைத்துக்கொண்டு நான் அரசியல் பேச வேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டது ஒன்றும் விந்தையல்ல! அது நமது முதல்வருக்கேயுரிய தனி பாணி!

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், மாநில சுயாட்சி என்றெல்லாம் பேசப்படுகிற இந்த நாளில், மாநிலங்கள் அடிமைகளாக ஆக்கப்படக்கூடாது என்று இங்கே முழங்கி விட்டு அ.தி.மு.க.வினர் டெல்லி மாநிலங்களவையில் ஓரிரு நாட்களுக்கு முன்பு எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட வகை செய்யும் 356-ஆவது பிரிவை முற்றிலும் நீக்க வேண்டுமென்று தி.மு.கழகம், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சி, பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகள் திருத்தங்கள் கொடுத்து, அதன்மீது வாக்கெடுப்பு நடைபெற்றபோது அந்தத் திருத்தத்தை எதிர்த்து அ.தி.மு.க. வாக்களித்திருக்கிறது.

இதேபோன்ற முரண்பாடு அ.தி.மு.க.வின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலே இருப்பதால்தான் இந்தி எதிர்ப்பிலும் அவர்களது நிலை எவ்வாறு இருக்குமோ என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது.

அந்தச் சந்தேகத்தின் அடிப்படையில்தான் அ.தி.மு.க. இறுதி வரையில் இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டுமா? என்று நான் கேட்டேன். இந்தியைத் தீவிரமாக எதிர்க்கக்கூடிய - எதிர்த்து தியாகத் தழும்புகள் பெற்ற சிலர், அ.தி.மு.க.வில் இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் அவர்களின் தலைவருக்கு கடந்த காலத்தில் அப்படி ஒரு வரலாறு இல்லையே; அதுதானே பரிதாபம்!

அன்புள்ள,

மு. க.

(6-09-1978)

595. காத்திட்ட கரமும்; களைப்பாற்றிய கரமும்!

உடன்பிறப்பே,

அதோ அந்த மலையுச்சியிலிருந்து - ஆமாம் செங்குத்தான அந்த மலையுச்சியிலிருந்து - கீழே - கீழே -ஆயிரக்கணக்கான அடிகளுக்கு கீழே - விழுந்து சுக்கு நூறாகப் போக இருந்த தமிழர் சமுதாயத்தை திடீரென ஒரு கரம் தடுத்து நிறுத்துகிறது. அதிர்ச்சியால் பிரக்ஞையற்ற நிலையில் ஆழ்ந்த அந்த சமுதாயத்தைக் கண்விழிக்கச் செய்து எழுந்து நடமாட விடுகிறது மற்றொரு கரம்!

காத்திட்ட கரம் தந்தை பெரியாரின் கரம்!

களைப்பாற்றிய கரம் பேரறிஞர் அண்ணாவின் கரம்!

நாகரீக உலகம் என்று பெயர் - அங்கே உயர் வகுப்பார் வாழும் தெருக்களில் நடப்பதே கூட பாவம்! அதற்குத் தண்டனை உண்டு - இந்தத் தகாப் போக்கின் தலையை உடைத்து நொறுக்கியவர்தான் தந்தை பெரியார் - ஆண்டவனின் காலில் பிறந்தவனாம்; அவன் சூத்திரனாம் - அவன் படித்தால் நாக்கைத் துண்டிக்க வேண்டுமாம் அல்லது சூட்டுகோலால் பொசுக்க வேண்டுமாம் - இப்படியெல்லாம் நீதி வகுத்துக்கொண்டு சூழ்ந்து நின்ற ஏடுகளையெல்லாம் தூக்கி நெருப்பிலே போட்டு விட்டு மனிதரில் நீயுமோர் மனிதன் - மணஅனறு! என மானஉணர்ச்சியூட்டிய புரட்சிக் கனலுக்குப் பெயர்தான் பெரியார்!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால், இதிகாச புராணங்களின் பெயரால் - இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருந்த ஒரு பெரும் இனத்தை நெஞ்சுயர்த்தி உலவிடச் செய்ய பெரியார் பூண்ட போர்க்கோலம் - அவர் சந்தித்த களங்கள் - அப்பப்பா! அந்தப் பழைய வரலாற்றின்

கொடுமை நிறைந்த ஏடுகளை இப்போது பல பேர் படித்துத் தெரிந்து கொள்ளத்தான் கூடும். அனுபவரீதியாக உணர்ந்தவர்கள் - அந்த இன உரிமைப்போரில் தங்களையும் இணைத்துக்கொண்டு எதிர் நீச்சல் போட்டவர்கள் - இன்று சிலர்தான் மிச்சமிருக்கிறார்கள். அந்த வெண்தாடிச் சிங்கம் நடத்திய போருக்குத் தளபதியாக விளங்கி, தமிழ்நாட்டுச் சரித்திரத்தின் புதிய பொன்னேடாகத் திகழ்கின்றவர்தான் நமது இனிய அண்ணன்!

தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் - அந்த விழா எடுக்கும் வேந்தனாக எழுபதாண்டுத் தொடக்கத்திலேயிருக்கும் நமது அண்ணன் இருப்பார் - அவரைச் சுற்றி நாமிருப்போம் - என்றுதான் எண்ணக் கோட்டைதனை இதயத்தில் எழுப்பியிருந்தோம் - ஆனால் அந்த ஆசை; வைரக்கல்லில் சம்மட்டி அடி விழுந்ததுபோல் தூள்தூளாகச் சிதறி விடும் என்று கனவுகூடக் காணவில்லை நாம்!

பற்று மிகுந்த தந்தை!

பாசமுள்ள அண்ணன்!

தந்தை பகுத்தறிவுச் சிகரம்;

அண்ணனோ அந்தச் சிகரத்தில்

ஒளி உமிழும் அணையா விளக்கு!

தந்தைக்கு நூறாவது பிறந்த நாள் விழா -

தனயனுக்கு எழுபதாவது பிறந்தநாள் விழா -

விழாக் கோலங்களுடன் முடிந்துவிடக்கூடாது
இந்த நாட்கள்!

அந்தத் தலைவர்கள் விட்டுச் சென்ற இலட்சியங்களைப் பட்டுப்போகாமல் பாதுகாத்திட வேண்டிய பொறுப்பு நமது நிறையுழைப்புத் தோள்களின் மீது விழுந்திருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது!

இன உணர்வு

மொழி உணர்வு

பகுத்தறிவு

தன்மான உணர்வு

இந்த அரிய கருவூலங்கள் அவர்கள் நமக்கென வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் - அந்தச் சொத்துக்களை விரயமாக்கும் பிள்ளைகளாகச் செயல்படமாட்டோம் நாம்!

அய்யாவின் நூற்றாண்டு விழாவிலும், அண்ணாவின் எழுபதாண்டு பிறந்தநாள் விழாவிலும், கழகத்தின் முப்பதாம் ஆண்டு விழாவிலும் -

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக்கூட்டம்

என்ற புரட்சி கவிஞரின் இன எழுச்சிக் கவிதைக்கு எடுத்துக்காட்டாக ஆர்த்தெழுவோம்!

வாழ்க பெரியார்!

வாழ்க அண்ணா!

வளர்ப்போம் நமது கழகம்!

வலிவு சேர்ப்போம் நமது

தமிழ் இனத்துக்கு!

அன்புள்ள,

மு. க.

(15-09-1978)

596. உறுதி பூணுவோம்!

உடன்பிறப்பே,

கழகத்திற்கு முப்பது.

அண்ணனுக்கு எழுபது.

அய்யாவுக்கு நூறு.

எழுபதும் முப்பதும் இணைந்து நூறு என்று ஆகிறது.

என்ன அரிய பொருத்தம் பார்த்தனையா?

நூறுக்கும் எழுபதுக்கும் உரியவர்களின் உணர்வுகளைக் கொண்டு முப்பதையும் கடந்து எப்போதும் வாழ வேண்டிய கழகம், வாழ வைக்கப்பட வேண்டிய கழகம், வாழப் போகிற கழகம் - உன்னையன்றோ நம்பியிருக்கிறது. உன் உழைப்பையன்றோ நாடி நிற்கிறது.

பாராட்டி போற்றி வந்த பழமை லோகம்

ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்

என்றும்

துடுக்கு மிகக் கொண்டலையும் துணிவு மிக்க ஆரியந்தான்

அடுக்குச் சொல் அண்ணாவால் அலறித்தான் சாகுதடா

என்றும்

1945-ஆம் ஆண்டு ஈரோடு குடியரசு அலுவலகத்தில் இருந்தபோது எழுதினேன். அதாவது எனது இருபத்தி ஒன்றாம் வயதில் - துடிப்பான வாலிபத்தில் தீட்டிய அந்த எழுச்சி வரிகள், எங்கும் ஓடி ஒளிந்து விடவில்லை. என் இதயத்தில் இன்னமும் முரசாக முழங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

அந்த முழக்கம், ஓயாது! ஓய்ந்திடக் கூடாது!

பெரியார் நூற்றாண்டு விழாவில், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில், கழகம் தோன்றிய நாள் விழாவில்

நமது இயக்கத்தின் தொடக்க கால அடிப்படைக் கொள்கைகளை மறந்து விடாமல் அந்த அடித்தளத்திலே நின்று நமது உரிமைக் கொடியை உயர்த்திட உறுதி பூணுவோம்.

அன்புள்ள,

மு. க.

(17-09-1978)

நன்றி : நம்நாடு (17-09-1978)

597. பேரவை நிகழ்ச்சி - ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

கடிதமெழுதி நாட்கள் சில ஓடிவிட்டனவேயென்று நீயெழுதும் கடிதங்கள் குவிகின்றன! என் செய்ய?

தென்ஆற்காடு மாவட்டம் இரண்டு நாட்கள், வடஆற்காடு ஒரு நாள், மேற்கு முகவை இரண்டு நாட்கள், கோவை இரண்டு நாட்கள், சேலம் இரண்டு நாட்கள் - இப்படி இடைவிடாமல் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்! ஒவ்வொரு நாளும் நாற்பதுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள்!

இதோ, இன்று இந்தக் கடிதத்தை உனக்கு எழுதி விட்டு இரவு ரெயிலில் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப் பயணத்திற்குப் புறப்படுகிறேன்.

ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட நிகழ்ச்சி, வகுக்கப்பட்ட நிகழ்ச்சி என்றில்லாமல் நமது உடன்பிறப்புக்கள் திடீர் திடீரெனப் புதிய நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து விடுகின்றனர்.

கழக வளர்ச்சிக்கு நிதி கிடைக்கிறதே என்பதற்காக நானும் என்னை ஆலையிலியிட்ட கரும்பாக ஆக்கினாலும் பரவாயில்லையென்று உடன்பிறப்புக்கள் இழுத்த இடத்திற்கெல்லாம் சென்று இலட்சியங்களை எடுத்தியம்பி வருகிறேன்.

ஓய்வில்லாத அலைச்சலால் உடல் நலிவு கூட! அதுவும் இந்தத் திங்கள் முப்பெரு விழாவையொட்டி ஒரு சிறிது ஓய்வுமில்லை எனக்கு! இத்தனை நிகழ்ச்சிகளுக்கிடையே சட்டப்பேரவையின் பணிகள் வேறு!

எப்போதோ நடந்திருக்க வேண்டிய கவர்னர் உரை நிகழ்த்தலும், அதைத் தொடர்ந்து விவாதங்களும் ஆகஸ்டு, செப்டம்பர் திங்களிலேதான் நடந்தது.

முதலமைச்சருக்குப் பரவாயில்லை, பெரும்பாலும் சட்டமன்ற அவைகளுக்கு வராமலே இருந்து விடுகிறார்; நாம் கடமையாற்ற வேண்டியிருக்கிறதே - அந்தப் பணியையும் கவனிக்க வேண்டியுள்ளதே!

ஆனால் ஒன்று நானும் 1957-ஆம் ஆண்டு முதல் சட்டப் பேரவையில் இருக்கிறேன். எந்த முதலமைச்சரும் இவ்போல சட்டமன்ற நிகழ்ச்சிகளை அலட்சியப்படுத்தியது கிடையாது.

எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்கள் பேசும்போது பெருந்தலைவர் காமராசர் அவையில் அமர்ந்திருந்து மதிப்பளிப்பார்.

பெரியவர் பக்தவத்சலம், அவை நடக்கும்போது பெரும்பகுதி நேரம் அவையிலேயே இருந்திடுவார். எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது அவர்களுக்கு மரியாதை வழங்கும் வண்ணம் பேரவையில் அமர்ந்திருப்பார்.

அண்ணா, முதல்வராக இருந்தபோதும் நானிருந்தபோதும் பேரவை நிகழ்ச்சிகளுக்கு தக்க மதிப்பளித்து, குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் உரையாற்றும் போது எங்கிருந்தாலும் ஓடோடி வந்து உட்கார்ந்து கொள்வோம்.

எட்மண்ட் எப்போது பேசுகிறார் - மாரிமுத்து என்றைக்குப் பேசுகிறார் - கே.டி.கே. தங்கமணி இன்றைக்கே பேசி விடுகிறாரா - திருப்பூர் மொய்தீன் நாளைக்குப் பேசுகிறாரா என்றெல்லாம் நானே அவர்களிடம் நேரடியாகக் கேட்டு அவர்களின் வசதிக்கு ஏற்றவாறு நான் என் நிகழ்ச்சிகளைக் கூட மாற்றிக்கொண்டு அவர்களுடைய கருத்துரைகளைக் கேட்பதில் ஆர்வம்காட்டி, எதிர்க்கட்சித் தலைவர்களுக்குரிய மரியாதையையும் காட்டியிருக்கிறேன்.

ஆயிரம் கொள்கை மாறுபாடுகள் இருந்தாலும் ஒருவரையொருவர் மதிப்பதில் எந்த அந்தஸ்தும் குறைந்து விடாது.

இப்படியொரு பாரம்பரியம் இருந்த சட்டமன்றத்தில் இன்று முதலமைச்சர், வகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் எதுவும் செம்மையாகவும், முறைப்படியும் இயங்குவதற்குத் துணையாக நிற்பதே இல்லை.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் வரலாம் - அப்போது நிகழ்ச்சிகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். அது தவறல்ல!

இவர்தான் அலுவல் ஆய்வுக் குழுவுக்குக் கூட வருவது கிடையாதே! எந்த முதலமைச்சராவது இதுவரையில் அலுவல் ஆய்வுக் குழுவுக்கே வராமல் இருந்தது உண்டா?

இப்படி நடந்து கொள்கிற ஒருவரிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டும் மரியாதை கொடுத்து நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது எப்படிப் பொருத்த முடையதாகும்?

ஒண்ணேகால் ஆண்டுக் காலத்தில் சட்டமன்றக் கூட்டத்தொடர் நிகழ்ச்சிகளில் அவர் கேள்வி நேரத்தை மதித்து இரண்டொரு தடவைகள் தான் ஓரிரு கேள்விகளுக்கு விடையே வழங்கியிருக்கிறார். அண்மையில் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சியில் நான் பேசும்போது கூட குறிப்பிட்டேன்; ஏடுகளில் படித்திருப்பாய்!

கவர்னர் உரையின் மீது செப்டம்பர் எட்டாம் நாள் ஒரு சில எதிர்க்கட்சித் தலைவர்களும் நானும் பேசி அன்றைக்கே முதலமைச்சர் பதில் சொல்வதென்று முதலில் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவாகியிருந்தது.

பலர் பேசவேண்டி, நேரம் இல்லாத காரணத்தால் நானும், சபாநாயகரும், அவைமுன்னவர் நண்பர் மனோகரன் அவர்களும் கலந்து பேசி, ஒன்பதாம் தேதி காலையில் நான் பேசுவதென்றும் காலையிலோ மாலையிலோ முதலமைச்சர் பதில் அளிப்பதென்றும் முடிவாயிற்று!

இதற்கிடையே எட்டாம் தேதி முற்பகல் திரு. சின்னப்பத் தேவர் அவர்கள் காலமாகி விட்டார் என்ற சோகச் செய்தி வந்தது. அவையில் முதலமைச்சர் இல்லை. முன்னவரும் அப்போது இல்லை.

பிறகு நான் சபாநாயகர் அவர்களைத் தனியாகச் சந்தித்து, நாளை ஒன்பதாம் தேதி கோவையில் தேவரின் இறுதிச் சடங்குகள் இருக்குமே - அதற்குச் செல்ல வேண்டிய நிலையில் நாளை அவையில் முதல்வரும் நானும் கவர்னர் உரையின் மீது பேசிட வாய்ப்பு உள்ளதா? என்று கேட்டேன்.

அதுபற்றித் தெரிந்து கொண்டு மாலையில் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிப்பதாக சபாநாயகர் கூறினார்.

மாலையில் நானே சபாநாயகருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். சில நிமிடங்களில் தகவல் தருவதாக அவர் சொன்னார்.

பின்னர் சட்டப் பேரவைச் செயலாளர் அவர்கள் என்னிடம் தொலைபேசித் தொடர்பு கொண்டு நாளைக் காலை (ஒன்பதாம் தேதி) நீங்கள் பேசுகிறீர்கள்; முதலமைச்சர் உடனே பதில் அளிக்கிறார் என்றார்.

அந்தத் தகவல் கிடைத்த பிறகு நான் கோவை செல்ல இயலாது என்ற முடிவுக்கு வந்து மறுநாள் கவர்னர் உரையில் பேசுவதற்கான குறிப்புக்களைத் தயாரிக்கத் தொடங்கினேன்.

ஒன்பதாம் தேதி காலைப் பத்திரிகையைப் பார்த்தேன். ஒன்பதாம் தேதி காலையில்தான் முதலமைச்சர் விமானம் மூலம் கோவை செல்கிறார் என்று இருந்தது.

உடனே, சபாநாயகருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் அவை முன்னவருடன் கலந்து பேசிவிட்டுத் தகவல் கொடுத்தார். இன்றைக்கே (ஒன்பதாம் தேதி) நீங்கள் பேசுகிறீர்கள். முதல்வர் கோவை சென்று ஒரு மணிக்குள்ளாக வந்து விடுகிறார். காலையிலாவது மாலையிலாவது அவர் பதிலுரை இருக்கும். எனவே நிகழ்ச்சியில் எந்த மாற்றமும் இல்லை. இன்றே நீங்கள் பேசி விடுங்கள் என்று சபாநாயகர், தொலைபேசி மூலம் அறிவித்தார்.

நம்பிச் சென்றேன். காலை நிகழ்ச்சியில் நான் பேசி முடித்ததும், சபாநாயகர் எழுந்து முதலமைச்சர் பனிரெண்டாம் தேதி மாலையில் பதில் சொல்வார் என அறிவிப்புச் செய்தார். அதுவரையில் முதலமைச்சர் வரவில்லை.

ஏற்கனவே நான் செப்டம்பர் ஒன்பது, பத்து தேதிகளில் கோவை மாவட்ட நிகழ்ச்சிகளை ஒத்துக் கொண்டிருந்தேன். முதல்வர் பதிலுக்காகவே, அதை மாற்றி பத்து, பதினோரு தேதிகள் என்று கூட்டங்களை ஏற்பாடு செய்ய நண்பர் கண்ணப்பனுக்கு செய்தி அனுப்பினேன். பனிரெண்டாம் தேதி சென்னை வந்தேன்.

அன்று மாலை நாலு மணிக்கு முதல்வர் பதில் சொல்லத் தொடங்கினார். ஏழரை மணிக்கு முடித்தார். அவை முன்னவர் மனோகரன் அவர்களாவது ஒருமுறை வெளியே சென்று மீண்டும் வந்தார்.

ஆனால் நான் அந்த மூன்றரை மணி நேரமும் என் இடத்தைவிட்டு அசையவே இல்லை. அன்று மன்ற நிகழ்ச்சி முடிந்தது.

மறுநாள் முதல்வர் பதில் தொடங்கியது. அப்போதும் முழு நேரமும் நான் அவர் எதிரேதான் உட்கார்ந்திருந்தேன்.

மொத்தம் ஆறரை மணி நேரப் பதில்! அரை மணி நேரம் பேச்சு! மற்ற நேரம் முழுவதும் அதிகாரிகள் எழுதிக் கொடுத்த விபரங்களை அப்படியே படித்த பணி!

அது போகட்டும்; முதலமைச்சர் இரண்டாம் நாள் பேசி முடிப்பதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்பு நான், அவை முன்னவரிடம் ஒரு குறிப்பு எழுதிக் கொடுத்தேன். இன்று திருமண விழா வரவேற்பு நிகழ்ச்சிகளை விசாரிக்கவேண்டும் - இரவு ரெயிலில் திருச்சிக்குப் புறப்பட வேண்டும். அதனால் புறப்படுகிறேன் என்பதாக அதில் குறிப்பிட்டிருந்தேன்.

அவை முன்னவரிடம் அப்படி விடைபெற்றுக் கொண்டு போகவேண்டிய சட்டமன்ற விதி எதுவும் இல்லை.

முதல்வரின் ஆறரை மணி நேரப் பேச்சை ஆறேகால் மணி நேரம் உட்கார்ந்து கேட்ட நான் அவையின் ஒரு மரியாதைக்காகத்தான் முன்னவருக்குக் குறிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டேன்.

இந்தப் பெருந்தன்மையையும், மரபுகளையும் பெரியார், அண்ணா போன்றவர்கள் என்னைப் போன்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்களே என்ன செய்வது?

உடன்பிறப்பே! இவ்வளவும் நான் ஏன் விபரமாக எழுதியிருக்கிறேன் புரிகிறதா?

இதோ முதலமைச்சர் இராமச்சந்திரன் காஞ்சிபுரம் அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசியிருக்கிறார் பார்! அவரது கட்சி ஏட்டிலேயே வந்திருக்கிறது.

என்னைக் கேட்டீர்களே சட்டசபைக்கு வரவில்லையென்று - இவர் ஏன் போனார்? இவர் (கருணாநிதி) ஏன் வரவில்லை? கலியாணத்துக்குப் போகிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப்

போக முடிகிறதே - பதில் சொல்லுங்கள் என்று எழுதியிருக்க வேண்டாமா? இவர் இருந்தால் அல்லவா நான் பதில் சொல்வதற்கு?

இது கனம் பொருந்திய நமது முதலமைச்சர் அவர்கள் உதிர்த்த மணிவாசகம்! இவரது ஆறரை மணி நேரப் பேச்சில் ஆறேகால் மணி நேரம் இவர் எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னைப்பற்றிப் பொது மேடையில் ஒரு முதலமைச்சர் பேசிய பேச்சு இது!

புட்லூர் தண்டபாணி என்ற காண்ட்ராக்டர் (அ.தி.மு.க.) சாவு பற்றியும், அவர் ஒரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பற்றியும், அவருக்கு முப்பதாயிரம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது பற்றியும், அந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வினால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பது பற்றியும், இன்னும் யார் யாருக்கு எந்தெந்த அதிகாரிகளுக்கு பணம் கொடுக்க நேர்ந்தது என்பது பற்றியும் - அவர் கைப்பட எழுதி வைத்திருந்த மரண வாக்குமூலம் போன்ற கடிதம் பற்றி நான் சட்டசபையில் பேசியிருந்தேன்.

அதற்கு எம்.ஜி.ஆர். எந்தப் பதிலும் அளிக்கவில்லை. பதில் அளிக்காததற்கு ஒரு சொத்தைக் காரணத்தைச் சொல்லுகிறார்.

நான் கடைசியாக சில நிமிடங்கள் இல்லையாம்! அதனால் பதில் அளிக்கவில்லையாம்! நான் கூறிய குற்றச்சாட்டு சபைக் குறிப்பில் ஏறி, பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நான் பேசும்போது இவர் சபையிலேயே இல்லை!

நானில்லாத போது இவர் பதில் அளித்திருந்தாலும் அது சபைக் குறிப்பில் இடம்பெற்று பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கும்.

என் செய்வது; இன்னமும் பொதுமக்களை ஏமாற்றலாம் என்று நம்பிக்கொண்டு பேசுகிறார்.

மரியாதை என்பது எங்கே விற்கும் பொருள்? படிக் கணக்கா? அல்லது கிலோ கணக்கா? எனக் கேட்கும் மனிதர்கள் எல்லாம் இப்படிப்பட்ட பொறுப்புக்களுக்கு வந்து விட்டால்; இப்படித்தான் எல்லாம் இருக்கும்.

அன்புள்ள,

மு. க.

(19-09-1978)

598. சென்னையில் செப்டம்பர் 24!

உடன்பிறப்பே,

புதுக்கோட்டையில் காடுவெட்டியாருக்கு இன்று (21-9-1978) மணிவிழா!

கிழக்கு முகவை மாவட்டத்தில் 19, 20 ஆகிய நாட்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, காடுவெட்டி தியாகராசன் அவர்கள் மணிவிழாவிற்காக இன்று புதுக்கோட்டையில் தங்கியுள்ளேன்.

இங்கு இருந்தே உனக்கு இந்த அழைப்புக் கடிதம் அனுப்புகிறேன். 24-ஆம் நாள் நீயும் உன் குடும்பத்தாரும் சென்னைக்கு வரவேண்டும் என்று!

தமிழகத் தலைநகரில் சென்னை மாவட்டக் கழகம் நடத்துகிற முப்பெரும் விழா - ஒரு மாவட்டக் கழக விழா என்ற அளவில் அமையாமல் தமிழகமே தலைநகரில் நிறைந்தது என்ற பெருமிதத்துடன் நடைபெற இருக்கிறது நமது ஏடுகளிலே கூட சென்னை முப்பெரும் விழா பற்றிய பெரிய அளவு செய்திகள் வரவில்லையே என்று கோவை மாவட்ட சுற்றுப் பயணத்தில் உன்னைப் போன்ற உடன்பிறப்புக்கள் கேட்டவண்ணம் இருந்தனர். சென்னை விழா பற்றி நான் கடிதம் எழுதவில்லையே என்றுகூட சுட்டிக்காட்டி குறைபட்டுக் கொண்டனர். அப்படி ஒரு சாக்குச் சொல்லி நீ வராமல் இருந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் புதுக்கோட்டையிலிருந்தே இந்த அவசர மடலை உனக்கு எழுதுகிறேன்.

சென்னை மாநகரில் நமது திராவிடர் கழகத்தினர் பெரியார் நூற்றாண்டு விழாவை மகத்தான முறையில் கொள்கை விளக்க விழாவாக கொண்டாடிய பிறகு - எம்.ஜி.ராமச்சந்திரனின் அரசு, பெரியார் அண்ணா விழாக்கள் என்ற பெயரால் நமது கழகத்தை

நாராசநடையில் ஏசிப் பேசி அதற்கென விளம்பரங்களைத் தேடிக்கொண்ட பிறகு - நாம் நடத்துகிறோம் தலைநகரில் முப்பெரும் விழாவை!

அந்த விழாவில் பெரியார் பிறந்த நாள் - அண்ணா பிறந்த நாள் - கழகம் பிறந்த நாள் - மூன்றும் இணைகின்றன!

நமது தோழமைக் கட்சிகளாம் முஸ்லீம் லீக், திராவிடர் கழகம், பார்வர்டு பிளாக் கட்சிகளின் தலைவர்களான அப்துல் ஸமது, வீரமணி, ஆண்டித்தேவர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மாவட்ட கழகத்தினர் மாபெரும் ஊர்வலம் ஒன்றையும் இலட்சியத் திருவிழாவாம் முப்பெரும் விழாவில் நடத்திட ஆர்வத்துடன் உழைத்து வருகின்றனர்.

பெரியாரின் மக்கள் நாம்!

அண்ணாவின் உடன்பிறப்புக்கள் நாம்!

கழகத்தின் காவல் அரண் நாம்!

நாம் கூடுவோம் நமது தமிழகத் தலைநகரில்!

இந்தக் கடிதம் - சென்னை மாவட்ட கழக அழைப்பிதழை நானே உனக்கு அனுப்பி வைத்தது போல! அவ்வளவு எழுத முடியும் - உன்னைச் சந்திக்கிறேன் சென்னையில் செப்டம்பர் 24-ஆம் நாள்!

அன்புள்ள,

மு. க.

(22-09-1978)

599. அராஜகம் - தொடர்கதையா?

உடன்பிறப்பே,

எந்த ஒரு கட்சியின் ஆட்சி நடைபெறும் போதும் மின்னல் வெட்டுப்போல அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திடீரென அமளிகள் தோன்றுவதும், அரசும் அரசின் பொறுப்பில் உள்ள காவல்துறையும், அதிகாரிகளும் தலையிட்டு அந்த அமளிகளை நிறுத்தி அமைதி காப்பதும் தவிர்க்க முடியாதவைகள்தான்! ஆனால் இப்போது தமிழகத்தில் நடைபெறுகிற எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியிலே கலவரங்கள் என்பது நித்திய நிகழ்ச்சிகளாகி விட்டிருக்கின்றன.

அந்தக் கலவரங்களுக்கான அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றைக் களைந்திடுவதில் அக்கறையெடுத்துக் கொள்ளாமல், முதலமைச்சர் டெல்லிக்குச் சென்று அங்கே நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் அரசியல் கட்சிகளால்தான் இத்தகைய கலவரங்கள் ஏற்படுகின்றன என்று குற்றம் சாட்டிவிட்டு வந்திருக்கிறார். பரிகாரம் தேடுவதற்குப் பதில் பழியைத் தூக்கி அரசியல் கட்சிகளின் மீது போடுவதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார் எம்.ஜி.ஆர்.

விழுப்புரத்தில் நடைபெற்ற படுகொலைகள், தீவைப்பு - இந்த அமளிகளுக்கெல்லாம் காரணம் அந்தத் தொகுதியின் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்தான் என்று விசாரணை நடத்தும் நீதிபதியின் முன்பு சாட்சியங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஒருவேளை அதை மனதிற்கொண்டு அமளிகளுக்குக் காரணம் அரசியல் கட்சிகள் என்று எம்.ஜி.ஆர். கூறுகிறாரோ; என்னவோ தெரியவில்லை!

பழனியில் இப்ராகிம் என்பவர் காவல்துறையினரால் கொல்லப்பட்டார் என்ற செய்தி பரவி, கோவையில் அனைத்து

கட்சியினர் நடத்திய கண்டன ஊர்வலத்தில் நுழைந்து கலவரம் விளைவித்தவர்கள் யார்? ஆளும் கட்சியினர் அல்லவா? எம்.ஜி.ஆர். இதையும் மனதில் வைத்துத்தான் டெல்லியில் அப்படிக் கூறியிருக்கிறார் போலும்!

என்.ஜி.ஓக்கள், தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து அமைதியாகக் கிளர்ச்சி நடத்தியபோது அவர்களைப் பற்றியும், அவர்களது வீட்டுப் பெண்களைப் பற்றியும் மேடைகளில் மிகக் கேவலமாகப் பேசியது மட்டுமல்லாமல் அவர்கள் நடத்திய ஊர்வலத்தில் புகுந்து கலவரம் விளைவித்து அவர்களைத் தாக்கியதும் ஆளுங்கட்சியினர்தானே!

இதோ, சென்னை தியாகராயர் கல்லூரியின் மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர் சிலருக்குமிடையே ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் என்ற பெயரால் அந்தக் கல்லூரிக்குள் நுழைந்து நடத்தியுள்ள அராஜகம், மிகக் கொடுமையானது!

அந்தக் கல்லூரியின் முகப்பே இடித்து நொறுக்கப்பட்டுத் தூள் தூளாக்கப்பட்டு விட்டது. கல்லூரிக்குள்ளிருந்த மாணவர்கள், பேராசிரியர்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பலத்த காயங்களுடன் மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கற்கள், தடிகள், சைக்கிள் செயின்கள் போன்ற ஆயுதங்களால் அரைமணி நேரத்திற்கு மேலாக ஆளுங்கட்சித் தொண்டர்கள் கல்லூரி மாணவர்களை வேட்டையாடி நையப் புடைத்திருக்கிறார்கள்.

மாணவர் பேரவைகளில் ஆளுங்கட்சி மாணவர்கள் வெற்றி பெறாத இடங்களில் இந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களும் போலீசாரால் தாக்கப்பட்டுள்ளனர்.

உடன்பிறப்பே, இவ்வளவு கொடுமையான சம்பவங்களையும் மறைப்பதற்கும் மழுப்புவதற்கும் சில ஏடுகள் இருக்கின்றன என்ற ஒரே தைரியத்தில் எம்.ஜி.ஆர். அரசும், எம்.ஜி.ஆரின்

கட்சிக்காரர்களும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாம் உணர முடிகிறது.

பெங்களூரில் அர்சு ஆட்சியில் மாணவர்களைப் போலீசார் தாக்கினால் தினமணியில் அந்தச் செய்தி கொட்டை எழுத்தில் வெளிவருகிறது!

இங்கே தமிழ்நாட்டில் மாணவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டால், வன்முறைக் கும்பல் மீது போலீஸ் தடியடி என்று அதே தினமணி சிறிய அளவில் செய்தி வெளியிடுகிறது.

ஏடுகள் சில எம்.ஜி.ஆர். ஆட்சியைக் காப்பாற்ற உண்மைகளை இருட்டடிப்புச் செய்யலாம்!

ஆனால், புதுவையைப் போல தமிழகத்திலும் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இத்தகைய அராஜக வெறிக் கூத்துக்களை எதிர்த்து நிற்கும் வேளை விரைவில் வராமல் போய்விடாது!

அப்படியொரு நிலை ஏற்படுவதற்கு முன்பு, ஆளுங்கட்சியினர் தங்கள் அடாவடித்தனங்களை நிறுத்திக் கொள்வது நல்லது.

இந்த நிலை நீடிப்பது நல்லதல்ல! தொடர்ந்து நீடித்தால் அதுபற்றி யோசிக்க அனைத்துக் கட்சியினரும் கூடிடவேண்டும் – நாட்டில் அராஜகத்தை வீழ்த்த அணி திரளவேண்டும்.

ஆளுங் கட்சியினர் போகிற போக்கைப் பார்த்தால் அந்த நாளை விரைவில் உருவாக்கி விடுவார்கள் என்றே தோன்றுகிறது.

அன்புள்ள,

மு. க.

(29-09-1978)

600. அலைமோதும் ஆர்வம்!

உடன்பிறப்பே,

இன்று (29-9-78) இரவு ரெயிலில் மதுரை சுற்றுப் பயணத்திற்காகப் புறப்பட வேண்டும். ஆனால் புறப்படுகிறவரையில் நிச்சயமில்லாத நிலையில் இருக்கின்றேன்.

காரணம் நாலைந்து நாட்களாகவே உடல்நலமில்லை. வயிற்றுக் கோளாறினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அத்துடன் வடஆற்காடு மாவட்ட நிகழ்ச்சிகளுக்குச் சென்று வந்தேன். அதனால் உடல்நலம் மேலும் கெட்டு விட்டது.

மதுரை மாவட்டத்திலோ 30-9-78, 1-10-78 ஆகிய இரண்டு நாட்களிலும் ஏராளமான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டிலேயே இந்த நிகழ்ச்சிகள் தரப்பட்டு, சிறை செல்ல வேண்டியேற்பட்டுவிட்டதால் ஒத்திவைக்கப்பட்ட நிகழ்ச்சிகள்! மீண்டும் ஒருமுறை ஒத்திவைப்பதால் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்கள் எத்துணை ஏமாற்றத்திற்கும் வேதனைக்கும் ஆளாக நேரிடும் என்பதை நானறிவேன்.

நான் திருவாரூரில் கூட்டங்கள் நடத்திப் பழக்கப்பட்டவன். ஒப்புதல் கொடுத்தவர்கள் வராமல் போய் அதனால் பலமுறை வேதனைக்கு ஆளானவன்.

எனவே கூட்டமோ, அல்லது வேறு நிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்பவர்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்கக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவன்.

இப்போது கூட சில ஊர்களிலிருந்து கழக நண்பர்கள் எனக்கும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும் கடிதம் எழுதுகிறார்கள்; சில சொற்பொழிவாளர்கள் ஒப்புதல்

கொடுத்துவிட்டுக் கடைசி நேரத்தில் வரமுடியவில்லை என்று தெரிவிக்காமலே கூட பெரும் ஏமாற்றத்திற்குத் தங்களை ஆளாக்கிவிடுவதாக! அந்த நிலையை நமது கழகப் பேச்சாளர்கள் கழக அமைப்புக்களுக்கு உருவாக்கிடக் கூடாது!

கூட்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வோரின் மனோநிலை எப்படி இருக்கும் என்று கூட்டங்கள் நடத்தியவர்களுக்குத்தான் நன்கு தெரியும்.

அதனால்தான், எப்படியும் மதுரை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்குப் புறப்பட்டுவிடவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையுடன் இருக்கிறேன்.

ஆக்கப்பணிகள், அமைப்புச் செயலாளர் தென்னரசு அவர்களுடனும், மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டவாறு இருக்கிறேன்.

அத்துடன், எப்படியாவது இன்று என்னை ரயிலுக்குப் போகுமாறு செய்ய வேண்டுமென்று டாக்டர்களிடமும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். காய்ச்சல் போன்ற நோயாக இருந்தால்கூடப் பரவாயில்லை. வயிற்றுத் தொந்தரவு - அதுவும் நாலைந்து நாட்களாக! தொடர்ந்து தொல்லை!

இரண்டு நாட்களும் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளோ ஏறத்தாழ நாற்பது இருக்கும். இடையில் எதிர்பாராமல் எத்தனையோ! பயணம் செய்ய வேண்டிய தொலைவும் மிக அதிகம்!

எப்படியும் இன்று புறப்பட்டு விடுகிறேன். ஒருவேளை உடல்நிலை அறவே இடம்தர மறுத்துவிட்டால் வேறு வழியில்லை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ள உடன்பிறப்புக்கள் என்னை மன்னித்துக்கொண்டு வேறு தேதிக்கு ஒத்தி வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறவர்களுக்கும், அந்தந்த ஊர்களில் வரவேற்பு அல்லது கொடியேற்று விழா, அல்லது கூட்டம் என்று நடத்துகிறவர்களுக்கும் ஒரு முக்கியமான வேண்டுகோளை விடுப்பது எனது கடமையாகிறது.

சில நிகழ்ச்சிகளில் பொங்கியெழும் ஆர்வம், அணையுடைத்துக் கொண்ட வெள்ளம் போல் மாறி - சுற்றுப் பயணத்தின் நோக்கத்தையே குலைத்து விடுகிறது.

மேடைக்குப் போவதற்கு முன்பே, மேலே வந்து விழுந்து மாலைகளைப் போடுவதில் நான் முந்தி நீ முந்தியென்று போட்டி போட்டுக் கொண்டு ஒரு சிறு அமளியே தோன்றி விடுகிறது.

மேடையிலோ சொல்லத் தேவையில்லை. ஐம்பது பேருக்குக் குறையாமல் ஏறிக்கொள்கிறார்கள். மேலும் சிலர் மேடையில் ஏறிக்கொள்ள முனைகிறார்கள். மேடை, ஆடினாலும் விழுந்திடக் கூடிய நிலை பெற்றாலும் அதுபற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஆர்வத்தில் அதைப்பற்றி சிந்திப்பதே இல்லை.

ஒவ்வொருவராக வந்து மாலை போடுவோம். நிதியளிப்போம் என்றில்லாமல் அதிலும் அடித்து மோதிக் கொண்டுதான் அலைபாயும் கடலைப்போல அந்த மேடையை ஆக்கிவிடுகிறார்கள்.

கிளைச்செயலாளரோ, ஒன்றியச் செயலாளரோ, மாவட்டச் செயலாளரோ, அல்லது எனக்கு முன் பேசுகிறவர்களோ என்ன பேசுகிறார்கள் என்று கேட்க முடியாத அளவுக்கு மேடையிலும், மேடையைச் சுற்றிலும் நம்மவர்களே உரத்த குரல் எழுப்பி அமைதி! அமைதி! என்று கூறியவாறு - அமைதியின்மைக்கு வித்திட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டம் கேட்க வந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதியோடும் ஆவலோடும் கருத்துக்களைக் கேட்கக் குழுமியிருக்கும்போது, கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் அல்லது ஆர்வம் படைத்த கழகச் செயல் வீரர்கள் நடந்து கொள்கிற கட்டுப்பாடற்ற தன்மையால் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கமே வீணாகி விடுகிறது.

எடுத்துக்காட்டாக கடந்த 19-ஆம் நாளன்று கிழக்கு ராமனாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். காலையில் முதல் நிகழ்ச்சி சிவகங்கையில் தொடங்கியது. அதற்கு முதல் நாள் பேராசிரியரின் அருமைத் தந்தை மணவழகனார் மறைந்து விட்டதால், இறுதிக் கடனுக்கென இரவு 10 மணி வரையில் சென்னையில் இருந்துவிட்டு, பின்னர் திருச்சி சென்று

அங்கிருந்து சிவகங்கைக்குப் புறப்பட்டேன். காலை 10.30 மணி அளவில் பெருங்கூட்டம் கூடியிருந்தது கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் காத்திருந்தனர். ஆனால் என்ன ஆயிற்று?

கடந்த பத்தாண்டுக் காலத்தில் நான்கு தடவைகளாவது நான் சிவகங்கைக் கூட்டத்தில் பேசியிருக்கக்கூடும். ஒவ்வொரு முறையும் நீண்டநேரம் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

ஆனால் இந்த முறை எனக்கும் ஏமாற்றம்! பொதுமக்களுக்கும் ஏமாற்றம்! காரணம், நமது கழகக் கண்மணிகளின் கட்டுக்கடங்காத ஆர்வம்தான்!

ஒருவர்மேல் ஒருவர் விழுந்து மாலை போட முயன்று, என் கழுத்திலும் நெற்றியிலும் மாலையில் உள்ள ஜரிகைகளால் கீறல் ஏற்படுத்தினர்.

மேடையில் நானிருப்பதே மக்களுக்குத் தெரியாதவாறு என்னைச் சூழ்ந்துகொண்டு நின்றனர்.

போட்டோ ஸ்டுடியோவில் எடுப்பதுபோல் என் பின்னால் வரிசை வரிசையாக வந்து நின்றுகொண்டு புகைப்படம் எடுத்துக்கொள்ளத் தொடங்கினர். அதிலே எவ்வளவு தள்ளல்! எவ்வளவு துள்ளல்!

வளர்ச்சி நிதிக்கான தொகை வாக்களித்தவாறு அந்த அமைப்புக்களின் சார்பில் வழங்கப்பட்டது. ஆனால் எவ்வளவு வழங்கினார்கள் என்று ஒலிபெருக்கியில் கூறிட முடியாமல் மேடையில் அவ்வளவு கூச்சல்! ஆர்வத்தின் குரல்கள்தான்!

என் செய்வது; நீண்டநேர அமைதியின்மைக்குப் பிறகு நான் பேச எழுந்தேன்.

மேடையில் எனக்குப் பின்னாலிருந்தவர்கள், என்னுடனேயே வந்து நின்றுகொண்டார்கள். மீண்டும் புகைப்படங்கள்!

அதற்குமேல் எனக்குப் பொறுமையில்லை - அன்று மேலும் இருபது நிகழ்ச்சிகளுக்குச் செல்லவேண்டும். அதனால், இரண்டொரு வார்த்தைகளில் கழக வளர்ச்சி நிதி அளித்த அமைப்புக்களுக்கு நன்றி கூறிவிட்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் புறப்பட்டு விட்டேன்.

இந்த அன்புத் தொல்லைகளால் என் உடல் நலம் கெடுவது மட்டுமல்ல; நோக்கமும் நிறைவேறாமல் போய் விடுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஏமாற்றமடைந்தார்களே; என்ற மனச்சங்கடம் வேறு!

சிவகங்கை நண்பர்களிடத்திலே கூறியிருக்கிறேன்; அமைதியாகக் கூட்டம் நடத்துவதாக இருந்தால் அடுத்து ஒரு தேதி தருவதாக!

சில உடன்பிறப்புக்கள் கூட மனம் வருந்திக் கடிதம் எழுதியிருந்தார்கள். அதில் ஒருவர் கேட்டிருந்தார்; ஏன் பேசாமல் சென்று விட்டீர்கள்? வளர்ச்சி நிதி வாக்களித்தபடி கொடுக்கவில்லையென்றும் உங்களுக்கு வழிச் செலவுக்குக் கூட அனுப்பவில்லையென்றும் கேள்விப்பட்டோமே; உண்மையா? அதனால்தான் பேசவில்லையா? என்று!

நேரில் நிலைமையைப் பார்த்தவர்களுக்கு இந்தச் சந்தேகமெதுவும் ஏற்படத் தேவையில்லை.

கழக வளர்ச்சி நிதி வழங்குவதில் எந்தத் தவறும் நடைபெறவில்லை. வாக்களித்தவாறு வழங்கினர்.

என் வழிச் செலவு என்பது, என் சுற்றுப் பயணத்தின் போது நான் பயன்படுத்துகிற ஓரிரு கார்கள், பிரச்சார வேன், இவைகளுக்குப் பெட்ரோல் போடுவதும் - ரயில் டிக்கெட்டுக்கு ஆவதும் - தங்குகிற விடுதிக் கட்டணங்களும்தான்! இதைத் தவிர தனியாக எனது வழிச் செலவுக்குக்கென்று நான் எதுவும் தொகை கேட்பதில்லை.

ஒவ்வொரு ஊரிலும் ஆயிரம் முதல் ஐயாயிர ரூபாய் வரையில் சில ஊர்களில் அதற்கு மேலும் வசூலித்துக் கழக நிதி வழங்க நமது உடன்பிறப்புக்கள் எடுத்துக்கொள்கிற சிரமங்கள் எவ்வளவு என்று எனக்குத் தெரியும்.

அதற்கு மேலே எனது வழிச் செலவுக்கு என்று நான் கேட்டால்; அது கழகப் பிரச்சாரக் கூட்டமாக இருக்க முடியாது! கதாகாலட்சேபமாகத்தான் இருக்க முடியும்.

முடிந்த அளவுக்குப் பல பகுதிகளில் கொள்கைப் பிரச்சாரம் செய்வதும், கழக நிதிக்குக் கணிசமாக தொகையைச் சேர்ப்பதும் தான் இந்த சுற்றுப் பயணத் திட்டங்களின் நோக்கமாகும்.

எனக்காகின்ற வழிச் செலவு உட்படவும், மாவட்டத்தில் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை ஒழுங்குற அமைத்திட மாவட்டக் கழகத்திற்கு ஆகிற செலவு உட்படவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூவாயிரம் அல்லது நாலாயிரம் ரூபாய் அளவுக்குச் செலவுகள் ஏற்படுகின்றன.

அந்தச் செலவை சில மாவட்டங்களில் அமைப்புக் களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

சில மாவட்டங்களில் - மொத்த நிதியிலிருந்து கழித்துக்கொண்டு மீதத்தைத் தலைமைக் கழகத்திற்கு அளிக்கிறார்கள்.

இதற்கான விபரக் கணக்குகள் அவ்வப்போது தலைமைக் கழகச் சார்பில் முரசொலியில் வெளியிடப்பட்டு வருகின்றன.

எனவே சிவகங்கையிலிருந்து கடிதம் எழுதிய அந்த உடன்பிறப்பு, வீணாகச் சிவகங்கைக் கழக நிர்வாகிகள் மீது ஐயப்பாடு கொள்ளவேண்டாம். அவர்கள் ஆர்வத்தோடு செயல்பட்டார்கள்.

ஆனால் வந்து சூழ்ந்துகொண்ட கழகக் கண்மணிகளின் ஒரு சிலரின் கட்டுமீறிய உணர்ச்சியினால், எதிர்பார்த்தபடி கூட்டம் நடைபெற முடியாமற் போயிற்று! அவ்வளவுதான்!

இவ்வளவு விபரங்கள் எழுதுவதற்குக் காரணம்; எதிர்காலத்திலாவது நமது கூட்டங்களில் இத்தகைய குறைபாடுகள் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

மதுரை மாவட்டமல்லவா? எழுச்சி அதிகமிருக்கும்! நிகழ்ச்சிகள் செம்மையாக நடைபெற மாவட்டச் செயலாளருடன் ஒத்துழைக்க வேண்டும். ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகள் தவிர, புதிய நிகழ்ச்சிகளைத் திடீரென ஏற்பாடு செய்ய வேண்டாம்.

நிகழ்ச்சிகளில் கட்டுப்பாடு மிக முக்கியம்! அதற்காகவே இந்தக் கடிதம்!

எப்படியாவது இன்று ரயிலில் புறப்படும் முயற்சியில் வெற்றிபெறத் துடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(30-09-1978)

601. மதுரையின் எழுச்சி!

உடன்பிறப்பே,

உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்ட நேரத்தில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற சுற்றுப்பயண நிகழ்ச்சி எப்படி அமைந்தது என்பதை அறியும் ஆவல் உனக்கு அதிகமாக இருக்கும் என்பதை நான் அறிவேன். ரயிலுக்குப் புறப்படும் முயற்சியில் வெற்றி பெறத் துடிக்கிறேன் என அன்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறே எப்படியோ வெற்றிபெற்று ரயிலிலும் ஏறிவிட்டேன். காலை ஆறு மணி அளவில் கொடை ரோடு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய பாண்டியன் எக்ஸ்பிரஸ் ஒன்பது மணிக்கு மேல்தான் போய்ச் சேர்ந்தது. என்ஜின் கோளாறு காரணமாக இடையிடையே நிறுத்திப் பழுது பார்த்துத்தான் ஓட்ட நேர்ந்தது!

நானே வயிற்றுக் கோளாறுடன் புகை வண்டியில் பயணம் செய்கிறேன். நான் பயணம் செய்யும் வண்டிக்கும் கோளாறு என்றால் சிரிப்பு வராதா?

கொடை ரோடு நிலையத்தில் என்னைப் பார்த்த பிறகுதான் கழக உடன்பிறப்புக்களுக்கு, நான் கடிதத்தில் எழுதியவை எவ்வளவு உண்மை என்று தெரிந்திருக்கும். அந்த அளவு இளைத்தும், களைத்தும் போயிருந்தேன். அதற்காக யாரும் எந்த ஒரு நிகழ்ச்சியையும் குறைத்துக் கொள்ளவில்லை. மாறாக ஒப்புதல் பெறாமலேயே பல நிகழ்ச்சிகளை இணைத்துக் கொண்டிருந்தனர்.

கொடியேற்று விழா நிகழ்ச்சிகளில் கூட ஒரு மேடையைப் போட்டு, அதில் வந்து நின்று பேச வேண்டுமென்று அன்புக் கட்டளை பிறப்பித்தனர். அவர்கள் அமைத்துள்ள மேடையைவிட உயரமானதும், ஏறி நின்றால் கூடி நிற்கிற அனைவரும் என்னைக் காணக்கூடிய வசதியுள்ளதுமான பிரச்சார வண்டியில் நான் நின்று பேசுவதே நல்லது என்பதை சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத

அளவுக்கு அவர்களது ஆர்வம் சில இடங்களில் கரைபுரண்டு ஓடியது. அதைத்தான் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன்.

பொதுக்கூட்ட மேடைகளைப் பற்றி அன்று கடிதத்தில்கூட குறிப்பிட்டிருந்தேனல்லவா? அதேபோல ஒரு நிகழ்ச்சி அலங்காநல்லூரில் நடைபெற்று விட்டது. முதல்நாள் பகல் 12 மணியளவில் அலங்காநல்லூர் சிறப்புக் கூட்டத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். மிகச் சிரமப்பட்டு சுற்றடைப்புகள் எல்லாம் கட்டி சிறப்புக் கூட்டத்தை அழகுற ஏற்பாடு செய்திருந்தார்கள். மேடையும் பெரிய அளவில், வலுவானதாக அமைத்திருந்தார்கள். ஆனால் நான் போய் அந்த மேடையில் அமர்ந்ததும் மாலை அணிவிப்போர் ஒருபக்கம், புகைப்படம் எடுத்துக்கொள்வோர் ஒருபக்கம், மேடையில் குவியத் தொடங்கினார்கள். சில வினாடிகளுக்கெல்லாம் மேடை முறிந்தது.

நான் நாற்காலியை விட்டு எழாமல் அப்படியே உட்கார்ந்திருந்தேன். பதறிப்போய் எழுந்திருந்தால் கைகால் உடைந்து போயிருக்கும். பிறகு மெல்ல எழுந்து பிரச்சார வண்டிக்கு வந்து சேர்ந்தேன். சிறப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்த ஒன்றியச் செயலாளர்களும் மற்றவர்களும் கண் கலங்கினார்கள். பிறகு பிரச்சார வண்டியில் நின்று கொண்டே நீண்ட நேரம் பேசிவிட்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் புறப்பட்டேன்.

சிறப்புக் கூட்டத்தில் மேடை முறிந்ததும் ஒரு சிறப்புத்தானே! எவ்வளவோ தொல்லைகளுக்கிடையில், அமைப்புக்களின் நிர்வாகிகள் மேடை முதலிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். அதில் எல்லோரும் ஏறிக் கொள்ளவேண்டுமென்ற ஆசையின் காரணமாக, இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன.

சிவகங்கை கூட்டத்தைப் பற்றி நான் எழுதிய கடிதத்தைப் படித்த அதே நாளில் அலங்காநல்லூரும் நடைபெற்றதுதான் வேடிக்கை! இனிமேலாவது அலைமோதும் ஆர்வத்திற்கு நமது கழக உடன்பிறப்புக்கள் கரை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு ஊரில் இரவு நேரம் - பிரச்சார வண்டியிலிருந்தவாறு என்னைக் கொடியேற்றும் கம்பத்தருகே அழைத்துச் சென்று விட்டார்கள். வண்டியில் ஏறி நின்று கொடியை ஏற்றி விட்டேன்.

பிறகு வண்டியை மேடைக்கருகே கொண்டுவரச் சொன்னார்கள். குறுக்கும் நெடுக்குமாக மின்சார விளக்குத் தோரணங்கள் இருந்தக் காரணத்தால் மேடைக்கருகே வண்டி போக வழியில்லை. இறங்கி நடந்து செல்லவும் இயலாத அளவுக்குக் கூட்டத்தினர் நெருக்கிக் கொண்டிருந்தார்கள். எனவே நான் பிரச்சார வண்டியில் இருந்தவாறே உரை நிகழ்த்தினேன். அங்குக் கொடியேற்று விழா நிகழ்ச்சியென்று கூறித்தான் மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அழைத்துச் சென்றார். அவருக்கும் அறிவிக்காமல் மேடை போட்டுக் கூட்ட நிகழ்ச்சியே ஏற்பாடு செய்து விட்டார்கள்.

ஒரு நாளைக்கு ஏழெட்டுப் பெரிய கூட்டங்கள். அ்தன்னியில் முப்பது நாற்பது இடங்களில் வரவேற்புகள், கொடியேற்று விழாக்கள் என்றிருக்கும்போது - அதிலும் உடல்நிலைக் குறைவோடு சென்றுள்ள எனக்கு - எல்லா கொடியேற்று விழாக்களிலும் மேடைக்குச் சென்று பேசுவதென்றால் முடிகிற காரியமா?

அப்படியாவது மேடைக்குச் செல்வதென்பது எளிதான காரியமாக இருக்கிறதா? அப்படியே மேடைக்குச் சென்றாலும் அந்த மேடை ஐம்பதிலிருந்து நூறு பேரைத் தாங்கும் சக்தி படைத்ததாகவாவது இருக்கிறதா?

என்னை அழைக்காதீர்கள் - மக்கள் கூடியிருக்கிறார்கள் - அவர்களுக்கு நமது கழகக் கொள்கைகளையும் நாட்டு நிலையையும் விளக்க வேண்டியதுதான் முக்கியமே தவிர வேனில் நின்று பேசினால் என்ன? மேடையில் நின்று பேசினால் என்ன? இதை மட்டும் கழக உடன் பிறப்புக்கள் சிந்திப்பார்களேயானால் வகுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் முறையாகவும் குறிப்பிட்ட நேரத்திலும் ஒழுங்காக நடைபெற்று முடிந்து விடும்.

என் பயணத்தில் பட்டிதொட்டிகள் எல்லாம்கூட இடம் பெறுகின்றன. சிற்றூர்களிலும், பட்டிதொட்டிகளிலும் குறிப்பாகக் கொடியேற்றும் நிகழ்ச்சிகளிலும் வேனில் நின்றே பேசுவது எனக்கும் பொதுமக்களுக்கும் வசதியாக இருக்குமென்பதைப் பல தடவை எடுத்துச் சொல்லி விட்டேன். இப்போதும் ஒரு தடவை அதனை நினைவூட்டுகிறேன்; எதிர்காலத்திலாவது என் வேண்டுகோளை ஏற்பார்கள் என்ற நம்பிக்கையோடு!

இந்தச் சில குறைபாடுகளைத் தவிர மொத்தத்தில் மதுரை மாவட்டச் சுற்றுப்பயணம் எழுச்சிமயமாக இருந்தது. என் பிணி

தீர்க்கும் மாமருந்தாகக்கூட அமைந்தது முதல்நாள் நிகழ்ச்சிகளுக்கு சிகரம் வைத்தாற்போல தேனிக் கூட்டம் அமைந்தது. இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு; ஏன் - இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்குமே சிகரம் வைத்தாற்போல் கம்பம் கூட்டம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

கோம்பைக் கூட்டத்தில் எனக்கு எடைக்கு எடை ஏலக்காய் கொடுத்தார்கள். பெயரே ஏலக்காய் அல்லவா? அதனால் அதை ஏலம் விடப்பட்டது. 12,700 ரூபாய்க்கு போடி ஜெயப்பிரகாஷ் அவர்கள் ஏலக்காயை ஏலத்தில் எடுத்தார்.

பல நிகழ்ச்சிகள்; ஆடு, கோழி, வெற்றிலை இப்படிப் பல பொருட்களை கழக நிதிக்கென வழங்கினர். அவற்றையும் ஏலம்விட்டு வளர்ச்சி நிதியில் சேர்த்துக் கொண்டோம்.

கம்பம் கூட்டத்திற்கு முன்பு சுருளிப்பட்டி என்ற கிராமத்திற்குச் சென்றேன். கம்பத்திலிருந்து சென்று மீண்டும் கம்பத்திற்கு வரவேண்டும். சுருளிப்பட்டியில் ஒரு கம்பம் - ஆம்; கொடிக் கம்பம்! அது என் உயிரைப் பறித்துக் கொள்ளப் பார்த்தது!

அங்குள்ள உடன்பிறப்புக்கள், கொடியேற்றுவதற்குக் கயிற்றுக்குப் பதிலாக ஒரு மெல்லிய சங்கிலியைப் பிணைத்திருந்தார்கள். நான் பிரச்சார வண்டியில் ஏறி நின்று கொடியை ஏற்ற முனைந்தபோது, அந்தக் கொடிச் சங்கிலி, அங்குள்ள மின்சார கம்பிகளின் மீது உராய்ந்து பொறி பறந்தது மட்டுமல்ல; நானும் கடுமையான தாக்குதலுக்கு ஆளானேன். மின் தாக்குதலை உணர்ந்த உடனேயே அந்தக் கம்பியை விட்டு விட்ட காரணத்தால் இன்று நான் உனக்குக் கடிதம் எழுத முடிகிறது. நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறவர்கள் எல்லா வகையிலும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்கு இந்தச் சம்பவங்களையெல்லாம் குறிப்பிட வேண்டியதாயிற்று.

இந்தக் கடிதம், படிப்பதற்காக மட்டுமல்ல, இனிமேலாவது நமது நிகழ்ச்சிகளை கட்டுப்பாடு குலையாமல் நடத்துவதற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக!

அன்புள்ள,

மு. க.

(05-10-1978)

602. இரு கரம் பிடித்து!

உடன்பிறப்பே,

மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள் மோதல் என்பது ஒரு முடியாத தொடர்கதையாகவே இருந்து வருகிறது. அண்மையில் சென்னையில் தியாகராயர் கல்லூரிக்குள் நடைபெற்ற வேதனையூட்டும் நிகழ்ச்சிகளைப் பற்றியும், பஸ் தொழிலாளர்களுடன் இணைந்து ஆளுங்கட்சியினரும் பொதுமக்கள் என்ற போர்வையில் கல்லூரி முகப்பை இடித்து நொறுக்கியும், மாணவர்கள் - பேராசிரியர்களைத் தாக்கியும் நடத்திய கொடுமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

கல்லூரி முகப்பு இடிக்கப்பட்டதை ஒரு சர்வ சாதாரண சம்பவம் என்ற வகையில் முதலமைச்சர் ஒரு கூட்டத்தில் அலட்சியமாகப் பேசியிருந்ததை ஏடுகளில் கண்டு திகைத்துப் போனேன்.

இதோ மதுரையில் மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர் களுக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டு, மாணவர்களின் கை கால்கள் முறிந்தன என்ற நெஞ்சுருக்கும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டு இதேபோல மாணவர்கள் பஸ் தொழிலாளர்களின் மோதுதலைப் பயன்படுத்திக் கொண்டு மதுரைக் கல்லூரிகளுக்குள் பொதுமக்கள் என்ற பெயரால் ஆளுங்கட்சியினர் விளைவித்த அராஜகச் செயல்களை யாரும் மறந்திருக்க முடியாது.

தொடக்கம் மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர் களுக்கும் என்று அமைந்தாலும் அந்தக் கலவரங்களில் சமூக விரோத சக்திகளும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தோரும் கலந்துகொண்டு அமளியை மிகப் பெரியதாக்கி விடுகின்றனர்.

H2214
தி 894.8116
தலை.ர

நான் வேண்டுமென்று அரசியல் நோக்கத்தோடு ஆளுங்கட்சி என்று குற்றம் சாட்டுவதாக அரசுத் தரப்பில் விளக்கம் தரக்கூடும்.

அவர்களே நெஞ்சில் கைவைத்து சிந்தித்தால் -ஓராண்டுக் காலமாக ஆளுங்கட்சியின் பிரமுகர்கள், தொண்டர்கள், தாங்களே சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் குலைத்து வருவதை உணரமுடியும்.

அன்றாடம் வெளிவருகிற கலவரச் செய்திகளில் பெரும்பாலானவற்றில் அவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஆடுகிற ஆட்டமே முதலிடம் பெறுகிறது. மதுரையில் நடைபெற்றுள்ள சம்பவத்திலும் அந்தப் பொதுமக்கள் இடம் பெற்றிருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

ஒவ்வொரு நாளும் பத்திரிகையைப் புரட்டினால், கற்பழிப்புச் செய்திகள் - கள்ளச் சாராயக் கோஷ்டித் தகராறு - காவல் துறை அதிகாரிகளைக் கலவரக் கும்பல் விரட்டியது - அல்லது கொன்றது - இதுபோன்ற விவகாரங்களே பக்கத்திற்குப் பக்கம் தலையை நீட்டிக் கொண்டிருக்கின்றன. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, அமைதி பரவலாகக் கெட்டுக் கொண்டு வருகிறது என்பதற்கு இந்தச் செய்திகள் சான்று பகருகின்றன.

எந்தக் கட்சியின் ஆட்சியிலும் கலவரங்களோ - மோதுதல்களோ - இல்லாமலே இருந்துவிடமுடியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தவை இப்போது அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், எல்லா நாட்களும் நடைபெறத் தொடங்கிவிட்டன.

மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்கும் நான் பணிவன்பான வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு பஸ் தொழிலாளியின் தம்பிகூட ஒரு மாணவனாகக் கல்லூரியில் படிக்கலாம். ஒரு கல்லூரி மாணவனின் அண்ணன் பஸ் தொழிலாளியாக இருக்கலாம். அந்த இருவரிடையே மட்டும் அண்ணன் தம்பி உறவு என்று இல்லாமல் - எல்லா மாணவர்களும், பஸ் தொழிலாளர்களும் உடன் பிறப்புகள்தான் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். ஒரு சாதாரண டிக்கெட் வாங்குகிற தகராறு - அதில் ஏற்படுகிற தேவையற்ற வாக்குவாதம் - எவ்வளவு பெரிய ரத்தக் களரியில் கொண்டுபோய் விட்டு விடுகிறது என்பதையும், அதனைச் சமூக விரோத சக்திகள் எப்படிப்

பயன்படுத்திக் கொள்கின்றன என்பதையும் மாணவர் - பஸ் தொழிலாளர் ஆகிய இரு சாராரும் ஓய்வாக அமர்ந்து பரபரப்புக்கு இடமளிக்காதவண்ணம் எண்ணிப் பார்த்தால் இந்தத் துயர்மிகுந்த தொடர்கதைக்கு முடிவுரை தீட்டி விடலாம்.

மாணவரோ, பஸ் தொழிலாளரோ இருவரில் பாதிக்கப்படுகிற ஒரு சாரார் உடனே வன்முறையில் இறங்காமல் - தாங்களே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு நியாயம் வழங்கிக் கொள்ளாமல் முறையே, அந்த மாணவரைப் பற்றிக் கல்லூரி முதல்வருக்கோ அல்லது பஸ் தொழிலாளியைப் பற்றிப் போக்குவரத்துக்கழக அதிகாரிகளுக்கோ தெரியப்படுத்தி நீதியைப் பெறுவது என்பது பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கவும் இருசாராரிடம் சமரசத்தை உருவாக்கவும் பயன்படும்.

மாணவர் என்றால் பஸ் தொழிலாளிக்கு அலர்ஜி! பஸ் தொழிலாளி என்றால் மாணவருக்கு அலர்ஜி! இது தேவைதானா? எனதருமை மாணவக் கண்மணிகளும் - அன்புக்குரிய பஸ் தொழிலாளிகளும் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஒற்றுமை உணர்வை உருவாக்குவதில் இன்றைய ஆளுங்கட்சி மெத்தனமாகவே செயல்படுகிறது! இதைச் சொன்னால் உடனே கிளைவ் ஆஸ்டல் தெரியாதா? என்று தோளைக் குலுக்கிக்கொண்டு ஆர்ப்பரிப்பர் ஆளுங்கட்சியினர்!

கிளைவ் ஆஸ்டல் சம்பவம் நடைபெற்ற போது இன்றைய ஆளுங்கட்சியினர் எதிர்க்கட்சியினராக இருந்து எந்த அளவுக்கு அந்தச் சம்பவத்தை பெரிதுபடுத்தினர் என்பதைக் கடந்த கால சரித்திரம் மறைத்துவிடாது. கிளைவ் ஆஸ்டலுக்கு நீதி விசாரணை வைக்கப்பட்டதும் - அதிகாரிகள் மீது தவறு இருப்பதாக அந்த விசாரணையின் முடிவு அமைந்ததும் - அந்த அதிகாரிகள் மீது அன்றிருந்த கழக அரசு நடவடிக்கை எடுத்ததும் - அதேபோல பாளையங்கோட்டை கல்லூரிச் சம்பவத்தில் அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் - மறந்துவிடக் கூடியவைகள் அல்ல!

தி.மு.க. ஆட்சியில் சிறிய நிகழ்ச்சிகளைக் கூடப் பெரிதுபடுத்தி ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள், தொடர் போராட்டங்கள் நடத்த எல்லா கட்சிகளும் அணிவகுத்தன. இன்று தேர்தல் உடன்பாடுகள்,

இடம் பெறும் வாய்ப்புகள் - இவற்றை நழுவவிடக் கூடாது என்ற நப்பாசையில் அந்த ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுக் கட்சிகள் எல்லாம் ஆமைகளைப் போல் அடங்கிக் கிடக்கின்றன.

கடுகை மலையாக்கி இன்றுள்ள அரசை எதிர்க்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல! ஆனால் - கலவரங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகி - கற்பழிப்புகள் பொழுதுபோக்குக் கதையாகி - ஆளுங்கட்சியின் அமைப்பாளர்கள் சட்டத்தைக் காறி உமிழ்ந்துவிட்டு காவல் நிலையங்களை நோக்கிப் படையெடுப்பது சர்வ சாதாரணச் செய்தியாகி - சட்டமும் ஒழுங்கும் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்படுவதை எத்தனை நாட்களுக்குச் சகித்துக் கொண்டிருக்க முடியும்.

காவல் துறையினர் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்து விடுகின்றனர் - அல்லது கையை ஓங்கினால் மாணவர் தொழிலாளர் என்று பாராது நையப்புடைக்கின்றனர் - இந்த இருநிலைக்கும் இடைப்பட்ட சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் ஒருநிலை இருப்பதையே அவர்கள் ஓரிரு ஆண்டுகளாக மறந்து விட்டனர்.

இந்த நிலையில் நமக்கு நாமே அமளிகள் எதுவும் உருவாகாத வண்ணம், அணைபோட்டுத் தடுத்துக் கொள்ள வேண்டியது நாட்டு நலனுக்கு முக்கியமல்லவா?

அதைத்தான் நான் குறிப்பாக மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்கட்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் -இனி நடப்பவை நல்லவைகளாக இருக்க, சகோதர உணர்வுடன் சங்கமமாகி அமைதி உதயமாக, மனத்தைப் பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று மாணவர் - பஸ் தொழிலாளர் இரு சாராரின் கரம்பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(07-10-1978)

603. துக்ளக் தர்பார்!

உடன்பிறப்பே,

துக்ளக் மன்னன் கோமாளித்தனமாகச் செயல்பட்டான் என்ற வரலாற்றுக் குறிப்புக்களை மறுக்கின்ற வரலாற்று ஆசிரியர்களும் உண்டு. ஆனாலும் எப்படியோ நேற்றைக்கு ஒன்று இன்றைக்கு ஒன்று எனச் செயல்படுகிறவர்களையும் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாமல் நடந்து கொள்பவர்களையும் பார்த்து துக்ளக் என்று அழைப்பது எப்படியோ மாற்ற முடியாத பட்டமாக ஆகிவிட்டது. அந்த அடிப்படையில் இப்போது நடைபெறுகிற தமிழ்நாடு ஆட்சியைக் காணும் எவரும் இதனைத் துக்ளக் தர்பார் என்று கூறிடவே செய்வர்!

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை அமைச்சராக நியமித்தார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.! தமிழ்நாடு சட்டப்பேரவையிலோ மேலவையிலோ உறுப்பினராக இல்லாதவர்கள் அமைச்சர்களாக நியமனம் பெற்றால் நியமனம் பெற்ற ஆறு மாத காலத்திற்குள் இரு அவைகளில் ஒன்றில் உறுப்பினராக ஆக வேண்டும். அதன்படி அந்த நியமிக்கப்பட்ட அமைச்சர் மேலவை உறுப்பினர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றார். ஒருவர் பேரவை அல்லது மேலவை உறுப்பினராக இருந்து அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தால் அப்படிப்பட்டவர் மாநிலத்தில் அமைச்சராகவும் இருந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென்பது முறை! அந்த முறைப்படி நடந்துகொண்டு மரபுக்கும் விதிகளுக்கும் மதிப்பு கொடுக்கும் வகையில் ஏற்கனவே பெருந்தலைவர் காமராஜரும், பேரறிஞர் அண்ணாவும் மாநிலத்தில் பதவிப் பொறுப்புக்கு வந்தவுடன் தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்து வழி காட்டியிருக்கிறார்கள். அண்ணா வழியில் அணுவும்

பிசகாமல் நடப்பதாக ஒரு நாளைக்கு ஆயிரம் முறை உதட்டால் உச்சரிப்பவர்களின் ஆட்சியிலே என்ன நடந்தது?

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நாள் நெருங்கியவுடன், இந்த அமைச்சர் எம்.பி. பதவியை ராஜினாமா செய்ய வேண்டியதற்குப் பதிலாக, எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்து விட்டார். அத்துடன் நிற்கவில்லை. இங்கு அமைச்சராக இருந்துகொண்டே நாடாளுமன்றத்திற்கும் சென்று நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும் வந்தார்.

இப்போது, தான் ராஜினாமா செய்த அதே மேலவை உறுப்பினர் பதவிக்கு மீண்டும் போட்டியிடப் போகிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்தல் நடைபெற்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து போகவும், மற்ற செலவுகளும் ஐம்பதாயிர ரூபாய்க்கு மேலாகும் என்று ஏடுகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. சட்டமன்றத்திற்கு ஒருமணி நேரத்துக்கு ஆகிற செலவு என்னவென்றும், அந்தப் பணம் ஒரு ரூபாய்கூட வீணாகச் செலவாகக்கூடாது என்றும், அது மக்கள் தரும் பணமென்றும் சட்டசபையிலேயே புள்ளிவிபரங்கள் தயாரித்துக் கூறிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இந்தத் தேர்தல் செலவு யாருடைய துக்ளக் தனத்தால் ஏற்படுகிறது என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறாரா இல்லையா?

இந்தத் தேர்தல் முடிந்த பிறகாவது குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் எம்.பி. பதவியை உதறித் தள்ளுவாரா? அல்லது இன்னும் சட்டத்தில் ஏதாவது சந்து பொந்துகள் இருக்கிறதா என்று தேடிப் பார்த்து மீண்டும் ஒருமுறை எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்வாரா? இந்த ராஜ்யத்தில் எதுவும் எப்போதும் நடைபெறலாம். எம்.பி.யாக இருந்துகொண்டே காலமெல்லாம் அமைச்சராகவும் இருக்கலாம் என்ற புதிய நடைமுறைக்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தாலும் கொடுக்கலாம். ஏன் என்றால் மத்திய அரசு நியாய அநியாயங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதைவிட நாடாளுமன்றத்து ஓட்டுகளில் தானே அதிக கவனம் செலுத்துகிறது. 19 ஓட்டுகளை இன்றுள்ள நிலையில் பகைத்துக் கொள்ள முடியுமா என்ன?

மதுவிலக்குத் தீவிரச் சட்டத்தில் அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தண்டனை உண்டு என்று சென்ற வாரம் முதலமைச்சர் முழங்கினார்! பலத்த கைதட்டல்! பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகச் செய்தி!

புலி வருகுது கதையைப்போல சட்டம் வந்தது! சட்டத்தில் அமைச்சர்களையும் காணவில்லை - அதிகாரிகளையும் காணவில்லை! அரசாங்க ஊழியர் என்று ஒரு வரியைச் சேர்த்து அதற்கு விளக்கமளிக்கும் வகையில் அரசாங்க ஊழியர் என்றால் மதுவிலக்கு போலீசார் என்ற அளவோடு சட்டம் நின்றுவிட்டது!

அமைச்சர்களையும், அதிகாரிகளையும் இணைத்துச் சட்டம் வருவதாகச் சொன்ன எம்.ஜி.ஆர். நிருபர்களுக்கு பயந்து மறைந்துகொண்டார். இதைத் துக்ளக்தனம் என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

அந்த அரசு ஊழியரும் முதல் தடவை குற்றம் செய்து தண்டிக்கப்பட்டால் ஒரு வருடமாம்! அடுத்த முறை குற்றம் செய்து தண்டிக்கப்பட்டால் மூன்று வருடமாம்!

முதல் தண்டனைக்குப் பிறகு அந்த அரசு ஊழியர் (அதாவது மதுவிலக்கு போலீஸ் அதிகாரிகள்) மீண்டும் எப்படி வேலையில் தொடருவார்கள்? அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட மாட்டார்களா?

இந்தக் கேள்வியை எனது அறிக்கையில் எழுப்பியிருந்தேன்!

துக்ளக் தர்பாரிலிருந்து இன்னும் எந்த விளக்கமும் கிடைக்கவில்லை!

இதோ நீலகிரிக் கூடலூரில் காட்டிலாகா அதிகாரிகள் நடந்து கொண்ட காட்டுமிராண்டித்தனத்தைச் சகிக்காமல்- தன் பெண்டு பிள்ளைகள் கேவலப்படுத்தப்பட்ட கொடுமை தாங்காமல் - லூயிஸ் என்பவர் கூடலூர் அரசு அலுவலகத்திற்கு முன்னால் தீக்குளித்துச் செத்திருக்கிறார்!

துக்ளக் தர்பாரில் இன்னும் என்னென்ன கோமாளிச் செயல்களும், கொடுமைகளும் நடைபெறுமோ யார் கண்டது?

அன்புள்ள,

மு. க.

(09-10-1978)

604. வாழ்க இளஞ்செழியன்!

உடன்பிறப்பே,

கடிதம் எழுத இயலாமல் என் கை நடுங்குகிறது. எழுதிய எழுத்துகள் தெரியாமல் கண்ணீர்த் துளிகள் திரைபோட்டு நிற்கின்றன. கண்களைத் துடைத்தவாறும் நெஞ்சை அழுத்தியவாறும் உனக்கு எழுதுகிறேன்.

இளஞ்செழியன்! அந்தோ இளஞ்செழியன்! அந்த இளங்கொழுந்தினைச் சென்ற வாரம்தான் கடைசியாக மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்தில் பார்த்தேன். பனிரெண்டு வயதுதான் இருக்கும். அந்தக்காலத்து வீரமணி போலக் கூட்டங்களில் பேசுகிறான் என்று மதுரை தாவூது பாராட்டிக் கூறி என்னிடம் அறிமுகப்படுத்தினார். பேசுவதோடு இருக்கக்கூடாது நன்றாகப் படிக்கவேண்டும் என்று அந்தச் சிறுவனுக்கு அறிவுரை கூறினேன்.

அவன் திடீரென நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டான் என்ற செய்தி இடிபோல என் தலையில் விழுந்தது! நோயுற்றுப் படுக்கையில் விழுந்தான், அதனால் இறந்துவிட்டான் என்ற செய்தியாக இருந்தால் கூட அந்த இளந்தளிரின் மரணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதே! அய்யோ, கொல்லப்பட்டு விட்டானாமே!

பழக்கடை பாண்டியும், இளஞ்செழியனும் திருவில்லிபுத்தூருக்கு அருகே ஒரு ஊரில் கூட்டம் பேசிவிட்டு, அதன்பிறகு திருவில்லிபுத்தூர் கூட்டத்தையும் முடித்துவிட்டு மதுரைக்குத் திரும்பியிருக்கிறார்கள். திருவில்லிபுத்தூரிலேயே ஜீப் ஒன்று அவர்களை வட்டமிட்டுக் கொண்டிருந்ததாம். அந்த ஜீப்பில் இருந்தவர்கள் ஆளுங்கட்சிக்காரர்களாம். கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுற்று உணவருந்திய பிறகு திருவில்லிபுத்தூரிலிருந்து மதுரை நோக்கிப் புறப்பட்டது கழகப் பேச்சாளர்களை ஏற்றிச் சென்ற கார்!

அந்தக் காரில் பழக்கடை பாண்டி, சங்கர பாண்டியன், வாழவந்தான், துரைபாண்டியன், இளஞ்செழியன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். மூன்று நான்கு மைல்களைக் கூட கடக்கவில்லை. அதற்குள் அவர்களை வட்டமிட்ட ஜீப், இப்போது சுற்றிவளைத்துக் கொண்டதாம். சரமாரியாக கற்கள் வீசப்பட்டதாம். அதில் ஒரு பெரிய கல், இளஞ்செழியனின் மண்டையை பிளந்து - அய்யகோ - அந்தச் சிங்கக் குட்டி அதே இடத்தில் உயிரைவிட்டதாம்.

கல்லடியால் தாக்குண்ட டிரைவர், காரை ஓட்ட முடியாமல் மயக்கமுற்று விட்டதால் கார் தட்டுத் தடுமாறி திசைகெட்டு சாலையை விட்டுக் கீழிறங்கி ஒரு புதரின் பக்கம் போய் நின்றதாம். அனைவரும் கல்லடியால் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் திருவில்லிபுத்தூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள்!

தங்களைத் திட்டமிட்டுத் தாக்கியவர்கள் யார் என்பது குறித்துக் காவல்துறையினரிடம் பழக்கடை பாண்டி புகார் கொடுத்துள்ளார். இறந்துவிட்ட இளஞ்செழியனின் உடல் திருவில்லிபுத்தூர் மருத்துவமனையில் இருக்கிறது. மற்றவர்கள் மதுரை மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டிருக் கிறார்கள்.

ஒரு ஏழைத் தொழிலாளி வீட்டுப் பிள்ளை இளஞ்செழியன்! ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். மேடையிலேறினால் கடல்மடை திறந்தாற்போல் சொற்பொழிவாற்றும் திறனை இந்தச் சிறுபிராயத்திலேயே பெற்றிருந்தான். எதிர்காலத்தில் கழகத்திற்கு மிகவும் பயன்படுவான் என்று மனக்கோட்டை கட்டியிருந்தேன். அவனும்கூட அன்றைக்குக் கூட்டங்களில் பேசிவிட்டு இரவு வீடு திரும்பி, தான் பேசியவற்றைத் தாய் தந்தையரிடம் கூறி மகிழலாம் என்று எண்ணிக் கொண்டுதான் காரில் வந்திருப்பான். அதற்குள் இரத்தவெறி கொண்டவர்களின் வன்முறைப் பசிக்கு இரையாகிவிட்டான்.

சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு இடுகாட்டுக் கூத்து நடத்துகிறவர்களால் இன்னும் எத்தனை பேருடைய உயிர்கள் குறிவைக்கப்பட்டிருக்கின்றனவோ?

எதற்கும் தயாராகத்தான் நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இந்தப் பயணத்தில் பலியானவர்களின் பட்டியல் மிக நீளமானது! அந்தப் பட்டியல் கண்டு நமது பயணம் நின்றுவிடவில்லை!

இதோ அந்த வீரர்களின் பட்டியலில் இளஞ்செழியனின் பெயரும் இணைகிறது! அவனது இரத்தத்தால் திலகமிட்டுக் கொண்டு அவன் புதைக்கப்படும் இடம் நோக்கித் தொழுதவாறு நமது பணிகளைத் தொடருவோம்!

அந்த இளம் வீரனைச் சுமந்துப் பெற்ற அந்தத் தாயின் கண்ணீரையும், அவனது எதிர்காலம் பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்த தந்தையின் கண்ணீரையும் துடைப்பதற்கான வலிமை நமக்குக் கிடையாது. எனினும் அந்தக் குடும்பத்திற்கு உற்ற துணையாக நாமிருப்போம்! வாழ்க இளஞ்செழியன்!

அன்புள்ள,

மு. க.

(10-10-1978)

605. புதுவை ஜனநாயகம்!

உடன்பிறப்பே,

புதுவை மாநிலம் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு எத்தனையோ அமைச்சரவைகள் அமைந்து அற்ப வயதிலேயே கவிழ்ந்து போயிருக்கின்றன.

காலையில் ஒருவர் முதலமைச்சர் என்று ஏடுகளில் செய்தி வரும். அதை நம்பி மாலைப் பொதுக்கூட்டத்தில் யாராவது பேசிக்கொண்டிருந்தால் அதற்குள் சொற்பொழிவாளர் கையில் ஒரு துண்டுச் சீட்டு தரப்படும். வானொலி மாலைச் செய்தியின்படி, காலையில் பதவியேற்றவர் கவிழ்க்கப்பட்டு மாலையில் வேறொருவர் முதல்வராகிவிட்டார் என்று அந்த துண்டுச் சீட்டில் எழுதப்பட்டிருக்கும்.

இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகள் நீடிக்க முடியாமல் ஆறு மாதத்தில் அல்லது ஓராண்டுக் காலத்தில் வீழ்ந்துவிட்ட வரலாற்றைக் கொண்டதுதான் பாண்டிச்சேரி!

அந்த மாற்ற முடியாத சரித்திரத்தை மாற்றிக் காட்டிய பெருமை தி.மு.கழகத்திற்கு உண்டு.

1969-ஆம் ஆண்டு தொடக்கத்தில் தி.மு.கழகமும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் உடன்பாடு கொண்டு தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றன.

திரு. பரூக் அவர்கள் முதலமைச்சராகவும் மற்றும் திருவாளர்கள் இராமசாமி, இராமச்சந்திரன், ஆறுமுகம், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பையா ஆகிய நால்வர் அமைச்சர்களாகவும் பொறுப்பேற்ற ஐவரைக் கொண்ட அமைச்சரவை உருவாயிற்று.

புதுவை மாநில வரலாற்றில் இந்த அமைச்சரவை ஒன்றுதான் நிலையானதாக இயங்கிய பெருமைக்குரியதாகும்.

அமைச்சரவைக்குள்ளே நிலையற்ற தன்மைக்கு இடம் தராமலும், கசப்பு உணர்ச்சிகள் எழுந்தால் அதனை உடனுக்குடன்

தீர்த்து வைத்தும் புதுவையில் உள்ள கழக அமைப்பும் - தலைமைக் கழகமும் அடிக்கடித் தொடர்பு கொண்டு பணியாற்றி ஆவன செய்தன.

முதல்வரும், மற்ற அமைச்சர்களும் அடிக்கடிச் சென்னைக்கு வந்து என்னையோ, பொதுச் செயலாளர் அவர்களையோ கலந்து பேசி கொள்கை ரீதியான முடிவுகளை விவாதித்து எடுத்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அமைச்சர் பொறுப்பினை ஏற்றிருந்த திரு. சுப்பையா அவர்களும் அடிக்கடி என்னிடம் தொடர்புகொண்டு விவாதிப்பார்.

ஒரு கூட்டு முயற்சியோடும், புதுவை மக்களுக்கு ஆக்கபூர்வமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற முனைப்போடும் புதுவை தி.மு.கழகமும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து செயல்பட்டதைப் புதுவை மக்கள் மறந்திருக்க இயலாது.

1972-ஆம் ஆண்டு வாக்கில் மத்திய அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம் போன்றவர்கள் தமிழக தி.மு.க. அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத் தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்குமிடையே பிளவு விரிவாயிற்று! இருப்பினும் இந்தப் பாதிப்பு, புதுவையைத் தொடவில்லை. புதுவையில் தி.மு.க. - கம்யூனிஸ்டு உறவு நீடித்தது!

அந்த உறவு கூடாது என்ற தாக்கீதுகள், கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையிலிருந்து சென்றதன் விளைவாகவோ என்னவோ திரு. சுப்பையா அமைச்சர் பொறுப்பிலிருந்து 1973-ஆம் ஆண்டு தொடக்கத்தில் விலகிக்கொண்டார். கம்யூனிஸ்டு கட்சி, புதுவைக் கழக ஆட்சிக்கு தந்திருந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டது. அதன் பிறகும் புதுவையில் கழக அரசு, நிலையான அரசாகவே நீடித்தது.

சற்றொப்ப 1973-ஆம் ஆண்டு முடிய நிலையான கழக ஆட்சி நடைபெற்று மக்களுக்குத் தேவையான பல திட்டங்கள் தீட்டப்பெற்று அவை நிறைவேற்றப்பட்டன. 1973-ஆம் ஆண்டு இறுதியில் இராமசாமியும், டி. இராமச்சந்திரனும் கழகத்திலிருந்தும், அமைச்சரவையிலிருந்தும் விலகிக் கொண்டனர்.

ஐந்தாண்டுக் காலம் நிறைவுபெற, ஒரு சில மாதங்களே இருந்த சமயத்தில் அவர்களது பதவி விலகல் பற்றியும், அடுத்து எப்படி நடந்து கொள்வது என்பது பற்றியும் விவாதிக்கப் புதுவையின் முதல்வராக இருந்த பரூக் அவர்கள் சென்னைக்கு விரைந்து வந்து என்னையும், பொதுச்செயலாளர் நாவலரையும் பொருளாளர் பேராசிரியரையும் சந்தித்துப் பேசினார்.

நாங்கள் கலந்துரையாடி எடுத்த முடிவு பெரும்பான்மை குறைந்துவிட்ட பிறகு ஆட்சியில் கழகம் நீடிப்பது சரியில்லை என்பதுதான்! உடனடியாக முதல்வர் ராஜினாமா செய்தார்.

நிலையான அரசை சுமார் ஐந்தாண்டுக் காலம் தொய்வின்றி வழங்கிய கழக ஆட்சி முடிவுற்று கவர்னர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது. அடுத்து நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற அ.தி.மு.க. கட்சி சட்டமன்றத்தைக் கூட்டாமலே இருபது நாட்கள் அமைச்சரவையை நடாத்திவிட்டு, சட்டமன்றத்தைக் கூட்டியபோது பெரும்பான்மையின்றிக் கவிழ்ந்து போனது.

அந்த இருபது நாள் ஆட்சிக்குப் பிறகு மீண்டும் கவர்னர் ஆட்சி! மீண்டும் ஒரு இடைவெளிக்குப் பிறகு தேர்தல்! மீண்டும் அ.தி.மு.க. பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது.

ஆனால் ஒரு வேடிக்கை! இராமசாமி, இராமச்சந்திரன் இருவரைத் தவிர அமைச்சர்களாக யாரையும் நியமிக்க முடியாத நிலைமை!

தி.மு.கழக ஆட்சியின்போது ஐவர் அமைச்சர்களாயிருந்தனர். அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் பதவி இரண்டு பேருக்கு மேல் அளிக்கப்பட்டால் எந்த நேரத்திலும் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்ற அச்சம்!

அந்த அச்சத்தைப் போக்கி, புதுவையில் அ.தி.மு.க. ஆட்சியை நிலையான ஆட்சியாக உருவாக்க அந்தக் கட்சியின் தலைமைக்கு நேரமுமில்லை, நினைப்புமில்லை!

புதுவை முதல்வரையே சந்திக்கத் தமிழக முதல்வருக்கு நேரம் இருப்பதில்லை. தனக்கு முன்னால் ஒரு நடிகன் வளர்ந்து வந்து விடக்கூடாது என்பதிலே எவ்வளவு கவலையோ, அதே போல தன்னைப்போல தன் கட்சியில் இன்னொரு முதலமைச்சர் இருப்பதா என்ற தீராத கவலை!

இந்த எண்ணம் படைத்தவர்களுக்கு, புதுவைச் சிக்கலைத் தீர்ப்பதில் எப்படி அக்கறை இருக்க முடியும்?

முப்பது பேர் உள்ள புதுவைச் சட்டமன்றத்தில் அ.தி.மு.க.வினர் எண்ணிக்கை, அவைத் தலைவரையும் சேர்த்து நான் இந்தக் கடிதம் எழுதும்போது உள்ள நிலவரம் பதின்மூன்றுதான்!

ஐந்தாண்டுகள் புதுவையில் நிலையான அரசைத் தந்த கழகத்தின் எண்ணிக்கை இராமசாமி, இராமச்சந்திரன் ஆகிய இருவரின் விலகலால் குறைந்தபோது இனியும் பதவியில் இருக்க வேண்டாம் என்று புதுவைக் கழகத்திற்கும், புதுவை முதல்வருக்கும் அறிவுரை வழங்கி - அவ்வாறே ஆட்சியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்த தலைமை தி.மு.கழகத்தின் தலைமை!

ஆனால் இன்று ஐந்தாறு மாத காலமாகப் புதுவையில் நடப்பது என்ன?

19 ஓட்டுகள் இருக்கின்றன என்று புதுவை நாடாளுமன்ற உறுப்பினர் மத்திய அரசை மிரட்டுகிறார்!

புது மந்திரிகளின் பதவிப் பிரமாணம் காலையிலே ரத்து என அறிவிக்கிறார்கள்!

எச்சரிக்கை எங்கள் 19! என்று மிரட்டியதும் மாலையிலே பதவிப் பிரமாணத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டு விடுகிறது!

ஏதோ பாவம்! புதுவை நாடாளுமன்ற உறுப்பினரின் தயவால் அந்த மந்திரி சபை தப்பிப் பிழைத்து தடுமாறிக் கொண்டிருக்கிறது.

முப்பது பதின்மூன்றாகிவிட்ட பிறகும், எப்படியாவது பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஜனநாயகம் என்ன ஜனநாயகமோ தெரியவில்லை.

இதற்குப் புதுவை ஜனநாயகம் என்று பெயரிட்டால் பொருத்தமாக இருக்கும் அல்லவா?

அன்புள்ள,

மு. க.

(12-10-1978)

பின்குறிப்பு :- உடன்பிறப்பே! இந்தக் கடிதம் உன் கைக்கு வந்து சேருவதற்குள் புதுவையின் அரசியலில் மேகக் கூட்டம் வேறுவிதமாகக் கலைந்திருக்கவும் கூடும்.

606. நீ சிந்திய இரத்தம்!

உடன்பிறப்பே,

பார்த்தாயா இந்த இளஞ்சிட்டை! பாடிப் பறந்திட்ட சிங்காரச் சின்னப்பறவை சிறகொடிக்கப்பெற்று மலர்க் காட்டில் புகழாய்ப் பூத்துக் கிடக்கும் காட்சியைக் கண்டாயா! பனிரெண்டு வயதுப் பனிமலர், கயவர்களின் முரட்டுக் கரங்களால் கசக்கி எறியப்பட்டுள்ள கொடுமையைப் பார் என் உடன்பிறப்பே! கொடுமையைப் பார்! ஏனடா தம்பி, இளஞ்செழியா! செத்த பிறகும் உன் சின்ன விழிகளை மூடாமல் யாரையடா பார்க்கிறாய்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அண்ணே! உன்னைப் போன வாரம் தானே சந்தித்தேன். நன்றாகப் படியென்று தட்டிக் கொடுத்தாயே; இந்த வாரம் நான் என்ன ஆகிவிட்டேன் பார்த்தாயா? கழகத் தியாகிகளின் பட்டியலில் கொள்கை முத்தாகக் கோர்க்கப்பட்டு விட்டேன் அல்லவா?

என்றல்லவா என்னைப் பார்த்துப் பேசுவது போல் இருக்கிறது அந்த இளம்கன்றின் இனிய முகம்!

அம்மா! அப்பா! அருமைச் சகோதரர்களே! உங்களையெல்லாம் விட்டுவிட்டு சொல்லாமற் சென்று விட்டேனேயென்று கதறியழுகிறீர்களா? அழாதீர்கள்! ஏன் அழுகிறீர்கள்? உங்கள் பிள்ளை இந்த குடும்பத்துக்கு என்றும் மறையாத கீர்த்தியை அல்லவா தேடிக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறேன்! அதை நினைத்து ஆறுதல் அடையுங்கள்!

என்று அவனது பெற்றோரையும், உற்றாரையும் நோக்கித் தேறுதல் கூறுவது போல் அல்லவா தோற்றமளிக்கிறது அந்தத் தூய இளைஞனின் வதனம்!

கண்மூடிவிட்டான் என்று தானே இறந்தவனைப் பற்றிச் சொல்வார்கள்! நான் இறந்தும் கண் மூடாமல் இருப்பதற்குக் காரணம் புரிகிறதா? என் இதழ்க் கடையில் தலைகாட்டுகிற கேலிப் புன்னகைக்குப் பொருள் புரிகிறதா? புரியாவிட்டால் சொல்லுகிறேன் கேளுங்கள்!

சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று அடிக்கடி சொல்கிறார்களே இந்த ஆட்சியில்! அது வெறும் வாய் அலங்காரம் தான்!

உண்மை என்ன தெரிகிறதா? கருத்துக்குக் கருத்து எடுத்துவைக்கக் கையாலாகாதவர்கள் சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு என் தலையைப் பிளந்து மூளையை வழியவிட்டார்கள். என் மூச்சை நிறுத்தினார்கள், என் பேச்சை நிறுத்த முடியாத காரணத்தால்!

இவ்வளவும் நடந்த பிறகு நாடறிந்த உண்மையைத் திரைபோட்டு மறைக்க மாவட்டக் கலெக்டராம்! சுப்பிரமணியம் என்று பெயராம்! என்னைப்போல் அவருக்குப் பிள்ளைகள் பிறந்தது உண்டோ இல்லையோ எனக்குத் தெரியாது - நான் கொல்லப்பட்டதற்குப் புதிய காரணம் தேடி - அவசர அவசரமாக அறிக்கை விட்டிருக்கிறார்!

கார் விபத்தால் நான் செத்து விட்டேனாம்! கார் விபத்து கல்வீச்சால் ஏற்பட்டதாம்!

எப்படியோ கல் வீசப்பட்ட ஒரு உண்மையையாவது ஒப்புக்கொண்டாரே - அதற்காக அந்த மாஜி மனிதன் நீடுழி வாழ்க!

சட்டம், தன் கடமையைச் செய்வதற்குள் கலெக்டருக்கு எவ்வளவு அவசரம் வந்துவிட்டது!

நெருக்கடி காலத்திலேயே மனிதனாக நடந்து கொள்ள மறுத்துவிட்டவர்! இப்போதும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நெருக்கடி நிலை நீடிக்கிறது என்பதற்கு உதாரணமாகத் திகழும் அதிகாரிகளில் அவரும் ஒருவர் அன்றோ!

அவரது பரபரப்பையும், அவசரத்தையும், ரசிகத் தன்மையையும் நினைத்தேன். அதனால் ஏற்பட்ட கேலிப் புன்னகையைத்தான் என் இதழ்ப் பேழை திறந்து காட்டுகிறது!

அந்த இதயமற்ற அதிகாரி யாரய்யா? அவர் முகம் எப்படி இருக்கும் அய்யா? என்னை அடக்கம் செய்வதற்குள் அந்த மாஜி மனிதனை ஒருமுறை பார்த்து விடலாமே என்று தான் செத்த பிறகும் கூட என் விழிகள் அலைகின்றன அந்த ஆளைத் தேடி!

இப்படியும் அந்த சிங்க இளைஞன் செப்பும் மொழி நம் செவிகளில் விழுவது போல இருக்கிறது அல்லவா?

உடன்பிறப்பே! நீயும் நானும் சேர்ந்து அந்தச் சின்னத் தம்பியின் செழுந்தமிழ்ப் பேச்சைக் கேட்கிறோம் - இதோ! அவன் தலையில் கீர்த்திக் கிரீடம் சூட்டிக்கொண்டு நம் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து தியாகி எனும் பட்டாபிஷேக விழா நடத்திக் கொண்டிருக்கிறான்!

புகழ் மலையின் உச்சியிலே கொடி போட்ட புலிக்குட்டி இதோ பூ மலையின் மீது உறங்குகின்றான்! எங்கள் நெஞ்சத் தொட்டிலில் படுத்திருப்பவனே! இளஞ்செழியா! என்னடா கண்ணே பார்க்கிறாய்! இத்தனைபேர் பட்டாளத்து சிப்பாய்போல இருந்தும் என்னைக் கொடிய மிருகங்களின் கோரப் பிடியிலிருந்து மீட்காமல் விட்டுவிட்டீர்களே; என்று கேட்கிறாயா?

இல்லை! இல்லை! நீ அப்படிக் கேட்கமாட்டாய்! மார்பில் விழுப்புண் தாங்கி வீர மரணம் அடைவதே பெருமையெனக் கருதும் புறநானூற்று மான மறவர்களின் வழியிலே வந்தவன் நீ! எனவே நீ அப்படிக் கேட்கமாட்டாய்!

நீ எங்களைப் பார்த்து என்ன கேட்பாய் எனப் புரிகிறது!

வெறியர்களின் கொலைக் கூத்துக்கு நான் இரையாகி விட்டேன்! அந்த வெறியர்களைச் சட்டம் தொடுவதற்குத் தயங்குமேயானால் - அதைப் பார்த்தும் நீங்கள் சோற்றாலடித்த பிண்டங்களாக இருப்பீர்களேயானால், எதிர்காலத்தில் இன்னும் பல இளஞ்செழியன்களின் பிணங்களைத்தான் காண நேரிடும். எனவே, சட்டத்தைச் செயல்பட வைக்கப் போகிறீர்களா? இல்லையா? சட்டம் செயல்படாவிட்டால் - அதைச் செயல்படவைக்க நம் அண்ணன் காட்டிய வழியில் என்ன செய்யப் போகிறீர்கள்!

இதுதான் உன் கேள்வி! கவலைப்படாதே! நீ சிந்திய இரத்தத்தின் மீது ஆணை! என் அருமைத் தம்பீ! ஆருயிர்த் தம்பீ!

சின்னத் தம்பீ! சிங்காரத் தம்பீ! சட்டம் செயல்படுகிறதா என்று பார்ப்போம்! இல்லையேல், அதனைச் செயல்பட வைக்க அண்ணா வழியில் எங்களையே நாங்கள் அர்ப்பணித்துக் கொள்வோம்!

உடன்பிறப்பே! இது என் ஒருவனின் தனிக்குரல் அல்ல! உன் குரலும் சேர்ந்து எழுப்புகிறச் சூளுரைதான் இது!

அன்புள்ள,

மு. க.

(13-10-1978)

607. பாவம்; பலவீன இதயம்!

உடன்பிறப்பே,

வீராணம் திட்டம் பற்றி எம்.ஜி.ஆர். கொடுத்தக் குற்றச்சாட்டை விசாரித்த சர்க்காரியா இதில் கருணாநிதி கையூட்டுப் பெற்றார் என்ற குற்றச்சாட்டு ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு கூறியிருக்கிறார்.

வீராணம் திட்டம் சாத்தியக் கூறான திட்டம் தானா? அல்லவா? என்பது குறித்து 1976-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியில் அமைக்கப்பட்ட குழு ஆராய்ந்து, அது சாத்தியக் கூறான திட்டம்தான் என்று அறிக்கை தந்து அந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது.

வீராணம் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவை அண்ணா முதலமைச்சராக இருந்தபோது சைதாப்பேட்டை பகுதியில் நடத்தி வைத்தார். அப்போது அந்த விழாவில் அமைக்கப்பட்டதுதான் காவேரித் தாயின் சிலை!

அதன் பிறகு வீராணம் திட்டத்திற்கானப் பணிகள் தொடங்கின. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைக்கவே இரண்டு ஆண்டுகள் மேலாயிற்று.

குறைந்த டெண்டர் கோரிய சத்யநாராயணா கம்பெனியாருக்கு அந்தத் திட்டப்பணிகள் தரப்பட்டன. சில மாதங்களுக்கெல்லாம் சத்யநாராயணா காலமாகி விட்டார்.

அவருக்குப் பிறகு அந்தக் கம்பெனியின் சார்பில் வீராணம் திட்டத்தை நிறைவேற்ற முனைந்தவர்கள் அவர் அளவுக்கு ஆற்றல் படைத்தவர்களாக இல்லை!

குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டம் முடிவடையாததால், அந்த வேலைகளை அரசாங்கப் பொறுப்பில் நிறைவேற்றுவதென்று முடிவு செய்து, அதற்கான பணிகளை எவ்வாறு மேற்கொள்வதென

ஆராய ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரைப்படி வீராணம் வேலையை அரசுப் பொறுப்பில் நடத்துவதென முடிவெடுத்து அதற்கான ஒப்புதலைப் பெற மத்திய அரசுக்குக் கோப்பு அனுப்பப்பட்டது!

மத்திய அரசு, அந்த ஒப்புதலை உடனடியாக அளிக்கவில்லை. சில மாதங்களுக்கெல்லாம் கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது.

வீராணம் திட்டம் சாத்தியமுள்ள திட்டம்தானா என்று அறிய குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழு, வீராணம் திட்டத்தைச் சாத்தியமுள்ள திட்டம்தான் என்று அறிவித்தது.

இதற்கிடையே 1976 பிப்ரவரியில் சென்னையில் பேசிய இந்திரா காந்தி அவர்கள், கிருஷ்ணா தண்ணீர் கூடிய சீக்கிரம் சென்னைக்குக் கிடைக்கும் என்று பிரகடனம் செய்தார்.

வீராணம் திட்டம், குடியரசுத் தலைவர் ஆட்சியில் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்டது. அதன் பிறகு ஏற்பட்ட எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் அந்தத் திட்டம் கிடப்பிலேதான் போடப்பட்டிருக்கிறது.

அதை நிறைவேற்றினால் கழக ஆட்சிக்கு நற்பெயர் வந்துவிடுமாம்! நிறைவேற்றாமல் விட்டால் வீராணம் பெயரைச் சொல்லிக் கழக ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்கலாமாம்!

அரசுப் பொறுப்பில் ஏற்று நடத்துவது என்ற கழக ஆட்சியின் கருத்துக்கு 1975-லேயே மத்திய அரசு ஒப்புதல் வழங்கியிருந்தால் இந்நேரம் அந்தத் திட்டம் முடிவு பெற்றிருக்கும்.

சுமார் மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேலாக அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருப்பதால் நாள் ஒன்றுக்கு வீணாக ஆகிற செலவு எவ்வளவு தெரியுமா? ஒவ்வொரு நாளும் ஐம்பதாயிரம் ரூபாய் அளவுக்குச் செலவாகிறது! அதாவது திட்டப் பணிகள் எதுவும் நடக்காமலேயே!

இந்த உண்மைகளை எல்லாம் மறைத்துவிட்டு வீராணம்! வீராணம்! என்று ஆளுங்கட்சியினர் ஊழல் புராணம் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்பதற்காக ஆட்சிக் கலைப்பும் - சர்க்காரியா விசாரணையும் - அதிகாரிகளையும் பிறரையும் மிரட்டி சாட்சியங்கள் பெற்ற கொடுமைகளும் நடைபெற்று இஷ்டப்படி நம்மீது புழுதிவாரித் தூற்றப்பட்டதைத் தவிர வேறென்ன ஊழலை அவர்கள் நிரூபித்தார்கள்?

சர்க்காரியா கமிஷன் நடைபெற்ற முறைகளே பெரும் ஊழல்! அந்தச் சூழலிலும் சர்க்காரியா, வீராணம் பற்றி அறிவித்துள்ள முடிவில் கையூட்டல் பணம் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை யென்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனைக்கும் பிறகு ஒரு அமைச்சர் பேசியிருக்கிறார்.

நான் தினசரி காலையில் புரட்சித் தலைவர் சொல்வதுபோல் - முட்டை சாப்பிட்டுவிட்டு உடற்பயிற்சி எல்லாம் செய்துவிட்டுத்தான் பைல்களைப் பார்க்கிறேன். இல்லையென்றால் வீராணம் போன்ற பைல்களைப் பார்க்கும்போது இதயம் பலவீனமாக இருந்தால் மாரடைப்பு வந்துவிடும்.

இது ஒரு அமைச்சர் பேசி, ஏடுகளில் வந்துள்ள செய்தி!

அவர், முட்டை முதலிய வலுவூட்டும் உணவுகளை அருந்துவதும், உடற்பயிற்சி செய்வதும் எதற்காக என்பது அவரைச் சுற்றி இருப்பவர்களுக்குத் தெரியும். ஆனாலும் தமாஷ் செய்கிறாராம் இப்படி! பாவம், நகைச்சுவை!

வீராணம் திட்டத்திற்காகச் சைதாப்பேட்டையில் ஒரு அம்மையார் இடுப்பில் குடத்தைக் கொடுத்து வைத்திருக்கிறார்கள். இரண்டு மூன்று வருடங்களாக இடுப்பில் குடத்தோடு நிற்பதால் இடுப்பு வலிக்கிறது என்று அந்த அம்மையார் என்னிடம் கூறினார்கள். அடிக்கடி அந்த அம்மையார் எனக்கு டெலிபோன் செய்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சரின் மணிவாசகங்கள்தான் இவைகள். உடன்பிறப்பே! பார்த்தாயா வேடிக்கையை! இடுப்பு வலி எடுக்கிற அம்மையார்கள் எல்லாம் இந்த அமைச்சரிடம்தான் முறையிடுகிறார்களாம் - அதனால்தான் போலும் அண்ணா அவர்களால் நிறுவப்பட்ட காவேரித் தாய்ச் சிலையும் இந்த அமைச்சரிடம் தன் இடுப்பு வலி பற்றி முறையிட்டிருக்கிறது! டெலிபோனில் வேறு பேசியிருக்கிறது!

நல்லவேளை, இந்த அமைச்சர் - அஜந்தா, எல்லோரா போன்ற இடங்களுக்குப் போய் வருவாரேயானால் - அங்கு கண்ட அழகு மங்கையின் உருவங்கள் ஒவ்வொன்றும் இவருக்கு டெலிபோன் செய்வது போலல்லவா கற்பனை செய்து கொண்டு இரவு நேரத்தில் கனவில் பேச ஆரம்பித்து விடுவார்!

சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் நமது உறுப்பினராக இருந்த நண்பர் ஒருவர் - (அமைச்சருக்கும் நண்பர்தான்) இந்த மனிதர் இருக்க வேண்டிய இடம் தமிழ்நாடு சட்டமன்றமல்ல! எனக் குறிப்பிட்டு அவரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கச் சொன்னார்.

இப்போது அந்த அமைச்சர் பேசுகிற பேச்சுக்களைப் பார்த்தால் எந்த நாட்டுக்குப் போனாலும் இந்த வியாதி தீராது என்றே தோன்றுகிறது!

தி.க. பிறகு தி.மு.க.! அதன் பிறகு காங்கிரஸ் கட்சி! கதராடை சகிதம் காட்சி பிறகு அ.தி.மு.க.! இந்த அமைச்சரின் விதூஷனத்தனம் கட்சிகள் தாண்டுவதோடு நிற்கலாம் - விஷயம் புரியாமல் வீராணத்தைப் பற்றியும் விதூஷரைப்போல பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல!

இப்போது பைல் பார்க்க முட்டைகள் சாப்பிட வேண்டியிருக்கிறது என்கிறார்; பிறகு நமது பதில்களைக் கேட்க ஒவ்வொரு நாளும் அதிக முட்டைகள் சாப்பிட வேண்டியிருக்கும். அய்யோ பாவம்! அவரே ஒத்துக் கொண்டிருக்கிறார் பலவீனமான இதயம் அவருக்கென்று!

அன்புள்ள,

மு. க.

(14-10-1978)

608. ஒருமித்த உணர்வைக் காட்டிட...!

உடன்பிறப்பே,

நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் வைக்கப்படுகிற முறையீடுகளைப் புறக்கணித்தல் - அமைதி வழியில் தொடங்கப்படுகிற கிளர்ச்சிகளை ஒடுக்குதல் - தொழிற்சங்கங்களின் சக்தியை நிலைகுலைக்கச் சூழ்ச்சிவலைப் பின்னுதல் - கடும் அடக்குமுறைகளைக் கொண்டு தொழிலாளர்களின் உரிமைக் குரலை அடக்குதல் - எதற்கெடுத்தாலும் வீண் கௌரவப் பிரச்சினைக்கு மட்டுமே முதல் இடம் கொடுத்து! பேசிப் பிரச்சினைகளை தீர்க்கும் போக்கினை அறவே ஒதுக்கிவைத்தல் - பழைய காலத்துப் பயங்கரச் சட்டங்களை மீண்டும் புதுப்பித்துச் சர்வாதிகார அணுகுமுறையில் ஜனநாயக இயக்கங்களை நசுக்கி விடலாம் என்ற மனப்பால் குடித்தல் - எதிர்க்கட்சிகளின் அறவழிப் போராயினும் - தொழிலாளர், மாணவர், விவசாயிகள், என்.ஜி.ஓக்கள், ஆசிரியர்கள் - ஆகியோர் நடத்துகிற முறையான கிளர்ச்சியாயினும் காவல்துறையினரின் துணையுடன் தங்கள் கட்சிக்காரர்களைக் கொண்டு தாக்கித் தகர்க்கத் திட்டமிடுதல் -

இவையனைத்தும் இன்றுள்ள எம்.ஜி.இராமச்சந்திரன் அரசின் இலக்கணங்களாகி விட்டன. மாணவர் கிளர்ச்சி - தொழிலாளர் கிளர்ச்சி - விவசாயிகள் கிளர்ச்சி - எந்த ஒரு ஆட்சியிலும் புதிய சம்பவங்கள அலல!

கடந்த காலத்தில் கழக ஆட்சியிலும் சரி- ஏன் - காங்கிரஸ் ஆட்சியிலும் சரி - எதிர்பாராத சில அசம்பாவிதங்கள் ஏற்பட்ட போதிலும்கூட ஒரு சமரச முடிவு காணச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசப்பட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த ஆட்சியில் அனைவரும் தங்களுக்கு அடங்கிக் கிடக்கும் ஆமைகளாகவே இருக்க வேண்டும் என்ற ஆணவம்

ஆட்சியாளர் நெஞ்சில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. கழக ஆட்சியில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் விவசாயிகள் சுடப்பட்டதைக் கேள்விப்பட்டதும், கருணாநிதி மனத் தைரியமற்று கலங்கிப் போனார். நான்தான் வன்முறையாளர்களைச் சுட்டது நியாயம் என்று அப்போது கூட்டங்களில் விளக்கினேன். அந்தப் போராட்டம் பற்றி விளக்கிட நாடு முழுவதும் கூட்டங்கள் போடுமாறு நான் வலியுறுத்தினேன். ஆனால் அந்தக் கூட்டங்களில் என் பெயரை விளம்பரப்படுத்தக் கருணாநிதி மறுத்து விட்டார் என்ற கருத்தினை எம்.ஜி.ஆர். இரண்டொரு வாரங்களுக்கு முன்பு வெளியிட்டு அந்தப் பேச்சு முழுமையாக மதுரை தினமணி இதழில்கூட வெளியிடப்பட்டிருந்தது.

உடன்பிறப்பே, விவசாயிகள் சுடப்பட்டது நியாயம்தான் என்று பேசுகிற ஒருவரின் பெயரை எப்படிக் கூட்டங்களில் விளம்பரப்படுத்த முடியும் என்பதை நீயே எண்ணிப் பார்ப்பாய் என்று நம்புகிறேன். விவசாயிகள் சுடப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் முதல்வராக இருந்த நான் கலங்கினேன் - மனத் தைரியமற்றுப் போனேன் - என்று எம்.ஜி.ஆர். இப்போது என்னைப் பற்றித் தந்துள்ள வாக்குமூலம் உண்மையிலேயே நான் வரவேற்கத்தக்க ஒன்றுதான்! விவசாயிகள் சுடப்பட்டபோது நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு பேச அப்போதும் அவரால் முடிந்தது! இப்போதும் அவரால் முடிகிறது! என்னால் அப்போதும் அந்த நிலை பெறமுடியவில்லை - இப்போதும் அந்த நிலை பெறமுடியவில்லை! கீழவெண்மணி நடைபெற்றபோது முதல்வராக இருந்த அண்ணா எப்படிக் கண்ணீர் வடித்தாரோ, அப்படித்தான் விவசாயிகள் சுடப்பட்டபோதும் நான் கண்ணீர் வடித்தேன். அருகில் இருந்து எனக்கு ஆறுதல் கூறிய எனது அருமை நண்பர் ஒருவர் இன்று எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் அங்கம் பெற்றிருக்கிறார். அவரது மனசாட்சி அந்த உண்மையை மறுக்காது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

போர்க்களத்தில் எதிரியின் படையை நிர்மூலமாக்குவது போலவே, எதிர்க்கட்சிகளையும் அல்லது எதிர்க்கருத்து கொண்டவர்களையும் நிர்மூலமாக்கி விட ஆளுங்கட்சி நினைத்தால் அதற்குப் பெயர் வீரமென்று கூறிவிட முடியாது! விவேகமற்ற செயல்!

அதே சமயத்தில் வன்முறைகளுக்காக நான் வாதாடவும் விரும்பவில்லை. வன்முறைகள் தடுக்கப்பட வேண்டியவைதான். இதில் இருவிதக் கருத்துக்கே இடமில்லை. அதற்காக எல்லா நிகழ்ச்சிகளுக்குமே வன்முறை வண்ணம் பூசி, வீண்பழி சுமத்தி, தனக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களையெல்லாம் அடக்குவேன், ஒடுக்குவேன் என்று ஆர்ப்பரிப்பது அனுமதிக்கக்கூடிய காரியமல்ல என்பதையும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கிளர்ச்சியில் முடிவு ஏற்பட்ட பிறகுகூட, வழக்குகளை வாபஸ் வாங்கமாட்டேன் - கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யமாட்டேன் - கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவேன் - என்றெல்லாம் ஒரு அரசு அடம்பிடிப்பது ஜனநாயக நெறிக்கு ஏற்றதல்ல! கடைந்தெடுத்த சர்வாதிகார முறைக்குத்தான் அடையாளம்.

பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர் மீது பழிவாங்கும் படலம் - டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலைத் தோழர்கள் பத்து மாதங்களாகக் குடும்பத்தோடு பட்டினி கிடந்து, பலமுறை அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்கியும்கூட அவை நடைமுறைக்கு வராத காரணத்தால் குமுறி எழுகிறார்கள் என்றால், அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு தடியடி!

தொழிற்சங்க அலுவலகத்தில் அமர்ந்து நிலைமைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் சுப்பு, குசேலர், கோபு, இரவைக்கண்ணன், இராமலிங்கம் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீன் எடுக்க முடியாத சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குத் தொடுத்துச் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் என்னையும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து இந்த அரசின் தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டிக்கும் வகையில் அனைவரும் ஒன்று சேரவேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். நாங்கள் கழகத்தின் ஒத்துழைப்பு என்றைக்கும் உண்டு என்று கூறினோம்.

நேற்று காலையில் கூட (16-10-78) திரு. கலியாணசுந்தரம் அவர்களுடன் நான் தொலைபேசியில் பேசியபோது, அம்பத்தூரில்

தொழிலாளர்கள் அமைதியான முறையிலே தங்களுடைய சங்கத் திடலிலேயே தங்கள் குரலை ஒலிக்கிறார்கள் என்றும், வன்முறைக்குத் துளியும் இடமில்லையென்றும் எடுத்துக் கூறினார். சுப்பு, கோபு, குசேலர் போன்றவர்கள் அங்கிருந்து அமைதியை நிலைநாட்டப் பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் என்னிடம் சொன்னார். எனவே, சைக்கிள் தொழிற்சாலை நிர்வாகம், போலீஸ் உதவியுடனும் அடியாட்கள் உதவியுடனும், வன்முறை வெறிக்குக் கொடியேற்றம் செய்து - அதையே காரணமாகக் காட்டி தொழிற்சங்கத் தலைவர்களையும், தோழர்களையும் வேட்டையாட முனைந்திருக்கிறது. இரண்டொரு நாட்களுக்கு முன்பு கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்த திரு. டி.கே. தங்கமணி போன்றவர்கள் போலீசாரால் தாக்கப்பட்ட நிகழ்ச்சியையும், ஊர்வலம் வந்த தொழிலாளர் மீதும் பெண்கள், குழந்தைகள் மீதும் குண்டர்களின் படை ஏவி விடப்பட்டதையும் யாரும் மறந்திருக்க முடியாது. அரிபட் உண்ணாவிரதமிருந்த பந்தலையும் ஆளுங்கட்சியினர் தீக்கிரையாக்கினர்.

முற்றிலும் தொழிலாளர் நலனுக்கு விரோதமான ஒரு அரசாக - இந்த அரசு, தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு கடந்த ஓராண்டுக் காலத்தில் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. இவற்றையெல்லாம் மக்களுக்குச் சுட்டிக்காட்டிடவும் - தொழிலாளர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களின் மொத்த சக்தி மூளியாக்கப்பட்டு விடாமல் பாதுகாக்கவும் - இன்று (17-10-78) மாலை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று கூட்டப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும்போது அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும் வெளிவந்து விடக்கூடும்.

அதற்கேற்ப அறவழியில் அமைதி வழியில் நமது எதிர்ப்பு உணர்வை இந்தத் தொழிலாளர் விரோத அரசுக்குத் தெரிவித்திடத் தயாராகிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(18-10-1978)

609. தெளிவான சிந்தனை!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் இப்போதெல்லாம் மிகத் தெளிவாக சிந்திக்கிறார். அதனால்தான் கருணாநிதி, தெளிவாகச் சிந்திக்கும் திறனை இழந்து விட்டார் என்று உதகையில் அரசின் சார்பில் நடைபெற்ற கால்நடை கண்காட்சித் துவக்க விழாவில் பேசியிருக்கிறார்.

கால்நடைப் பராமரிப்பு இலாகா ஏற்பாடு செய்த அந்த நிகழ்ச்சியில் தெளிவு நிறைந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்; சர்க்காரியா கமிஷன் விசாரணைப் பற்றி ஒரு விளக்கம்.

கருணாநிதியைத் தண்டனையிலிருந்து காப்பாற்ற உலகில் எந்த சக்தியாலும் முடியாது என்று ஒரு மிரட்டல்.

கருணாநிதி மீது சட்டப்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு வீர முழக்கம்.

சிக்மகளூரில் தி.மு.கழகம் ஜனதா கட்சியை ஆதரிக்கலாமா என்று ஒரு ஆவேசக் கேள்வி.

பஸ்களின் மீது கல் எறிந்தால் அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு போடப்படும் என்பதைக் கல்யாணசுந்தரமும் கருணாநிதியும் எதிர்ப்பதா? என்று ஒரு ஏகடியம்.

தொழிலாளர் விரோதமான அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் அறிக்கை கண்டு அஞ்சமாட்டேன் என்று ஒரு அறைகூவல்!

இவ்வளவுக்கும் பிறகு கால்நடை இலாகாவைப் பற்றிப் போனால் போகிறது என்று ஒரு சில வார்த்தைகள்.

ஒரு மாநிலத்தில் மிகத் தெளிவாக சிந்திக்கும் முதலமைச்சர் ஒருவர் மாநிலக் கால்நடைப் பராமரிப்பு இலாகாவின் நிகழ்ச்சியில் ஆற்றிய மிகத் தெளிவான கட்சிப் பிரச்சாரம் இது!

தெளிவான சிந்தனைக்கு நமது முதலமைச்சர் என்ன விளக்கத்தைக் கைவசம் வைத்திருக்கிறார் என்பது,

விவசாயத் தொழிலாளர்களுக்கு எங்கள் ஆட்சியில் தினக்கூலி இருக்காது! போனசுடன் கூடிய மாதச் சம்பளம் இருக்கும் என்று எம்.ஜி.ஆர். சென்ற ஆண்டு அறிவித்தாரல்லவா அது தெளிவான சிந்தனையின் அடையாளம்!

கிராமத்து விவசாயிகளுக்கு எங்கள் ஆட்சியில் தபாலாபீசுகளில் கடன் கொடுக்கப்படும் என்று அவர் அறிவித்தாரல்லவா?

தி.மு.க.வில் இருந்து என் கட்சிக்கு வருகிற யாராக இருந்தாலும் முதலில் அவர்களை நீதிபதி விசாரணைக்கு உட்படுத்தி, அவர்கள்மீது குற்றமில்லையென்று நிரூபிக்கப்பட்ட பிறகே சேர்த்துக் கொள்வேன் என்று 1973-ஆம் ஆண்டு அறிவித்தாரல்லவா?

தான் அப்படிச் சொன்னதாக நினைவில்லையென்று இப்போது கூறுகிறார் அல்லவா! அது தெளிவான சிந்தனையின் படப்பிடிப்பு!

முன்பு நடந்த புதுவைத் தேர்தலின்போது அ.தி.மு.க. கட்சி இந்திரா காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டபோது இந்திரா காந்தி தேர்தல் பிரச்சாரத்துக்கு ஹெலிகாப்டரில் வருவது யார் வீட்டுப் பணம்? இது என்ன நியாயம்? என்று கேட்டுவிட்டு - நாடாளுமன்றத் தேர்தலின்போது அதுபற்றி வாயே திறக்காமல் இருந்து விட்டாரே, அது தெளிவான சிந்தனைக்கு அறிகுறி!

கருப்பையாவா? மூப்பனாரா? என்று கேட்டு ஜாதிப் பெயர்களைச் சாடிவிட்டு மாயத் தேவர்களை, பாலகுருவா ரெட்டியார்களைத் தன் கட்சியில் ஜாதிப் பெயர்களோடு விளம்பரப்படுத்துகிறாரே, அது தெளிவான சிந்தனையின் ஊற்றுக்கண்!

மாநிலங்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஜனதா வேட்பாளர் செழியன் அவர்களுக்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்களின்

வாக்குகளை அளித்துவிட்டு - இப்போது சிக்மகளூரில் ஜனதாவை எதிர்க்கிறாரே, அது தெளிவான சிந்தனையின் விளைவு!

தேர்தல் உடன்பாடுகளைப் பொறுத்து அரசியலில் எந்த மாறுதலும் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம் என்ற கருத்தை அவர் மட்டுமே சொல்ல உரிமையுண்டு. மற்றவர்களுக்கு அத்தகைய கருத்துக்களைச் சொல்ல உரிமை கிடையாது என்கிறாரே, அது தெளிவான சிந்தனையின் ஒளிப்பிழம்பு!

1972-இல் அவரது கட்சி ரசிகர்கள் பஸ்களை, லாரிகளை உடைத்து நொறுக்கியபோது அந்த வன்முறைச் செயல்களை ஊக்கப்படுத்தித் தூண்டிவிட்டவர் - பஸ் தொழிலாளர் போராட்டங்களை நடத்தச் சொல்லி பண உதவி செய்தவர், இப்போது பஸ்மீது கல் எறிந்தால் பயணிகளுக்குக் காயம் படாதா? என்று கேட்கிறாரே, இது அவரது தெளிவான சிந்தனை பெற்றெடுத்த கேள்வி அல்லவா!

அலாவுதீனின் அற்புத விளக்கைப்போல் கள்ளச் சாராய வியாபாரத்தால் கணக்கில்லாப் பணம் பெருக்கிவிட்ட அமைப்பாளர்களைத் தன் அருகிலேயே வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற மதுவிலக்குச் சட்டம் என்ற நாடகத்தை நடத்துகிறாரே, அதுகூட அவரது தெளிவான சிந்தனையில் உதித்த அரிய கற்பனைதானே!

அமைச்சர்கள் குடித்தாலும் கைது செய்து ஒரு வருடம் தண்டிக்கச் சட்டம் வரும் என்று முதல் நாள் கூட்டத்தில் முழங்கிவிட்டு மறுநாள் பிறப்பித்த அவசர சட்டத்தில் அமைச்சர்கள் என்ற பெயரையே காணமுடியாமல் செய்து விட்டாரே, அதுகூட அவரது தெளிவான சிந்தனைதானே!

அரசாங்க ஊழியர்களையும் விடமாட்டோம் - அவர்களுக்கு ஒரு வருடத்தண்டனை என உரைத்து விட்டு, அரசாங்க ஊழியர் என்றால் அது மதுவிலக்குப் போலீசாரை மட்டுமே குறிக்குமென்று சட்டத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறாரே, அது அவரது தெளிந்த சிந்தனையால் விளைந்த வினோதமன்றோ?

அம்பத்தூர் சைக்கிள் தொழிற்சாலைப் பிரச்சினையைத் தொழிலாளருக்குச் சாதகமாகத் தீர்த்து வைக்கிறேன். மதுரை

மாநகராட்சித் தேர்தல் முடியும் வரை காத்திருங்கள், அதற்குப் பிறகு உடனடியாக அரசு, அதில் தலையிட்டு ஆவன செய்யும் என்று தொழிற்சங்கத் தலைவர்களிடம் கூறிவிட்டு, இன்று அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களையே தடி கொண்டு தாக்கியது மட்டுமல்லாமல் - தொழிலாளர்களையும், தலைவர்களையும் சிறையில் பூட்டி - நிர்வாகத்தின் பக்கமே நியாயம் இருப்பதாக இன்று ஊட்டியில் அடித்துக் கூறியிருக்கிறாரே, அது அவரது தெளிவான சிந்தனையின் எதிரொலியல்லாமல் வேறென்ன?

அவரது தெளிவான சிந்தனையாற்றலால் அரிசி மில்கள் அனைத்தும் அரசுடமையாகப் போகின்றன! எப்போது என்று மட்டும், என் உடன்பிறப்பே! கேட்டு விடாதே!

அவரது தெளிவான சிந்தனைக்கு மற்றொரு செயல் வடிவமாக அரசாங்கமே குதிரைப் பந்தயத்தை நடத்தப் போகிறது! அண்ணாவின் கொள்கை, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது அல்லவா! என்று கேட்டு விடாதே!

அண்ணாயிசத்தைப் பற்றி அன்பர் எம்.ஜி.ஆருக்குத்தான் அதிகம் தெரியும்! ஏற்கனவே தெளிவாகக் கூறியிருக்கிறார், கம்யூனிசம் -கேப்டலிசம் - சோஷலிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் என்ற தெளிவுரையை திருவாய் மலர்ந்தருளியவர் அவர்!

இனிமேல் டாக்டர்கள், வக்கீல்கள், நீதிபதிகள் போன்றோர் கார் ஓட்டக்கூடாது என்றும் சாதாரண சைக்கிளில் செல்பவர்கள்கூட ஹெல்மட் அணிய வேண்டும் என்றும் சட்டம் வரப்போகிறது என்று அறிவித்துள்ள அவரது சிந்தனைத் தெளிவுக்கு இணையாக வேறொரு தெளிவு இருக்க முடியுமா?

உடன்பிறப்பே, கருணாநிதி தெளிவாகச் சிந்திக்கும் திறனை இழந்து விட்டார் என்று பேசிய இடம் - உதகை!

நல்ல குளிர்ச்சியான பகுதி - அங்கே போய்க்கூடவா இப்படி? என்று கேட்கத் தோன்றும்!

ஆணவமும் - அதிகார மமதையும் இருக்கிறதே! அது சிலரைப் பிடித்துக் கொண்டால் இப்படித்தான் பேச வைக்கும்.

வருகிற 22-ஆம் நாள் அனைத்துக் கட்சிகளின் சார்பில் கண்டனக் கூட்டங்களும் -23-ஆம் நாள் கடையடைப்பு - வேலை நிறுத்தமும் - இந்த அரசின் அடக்குமுறைப் போக்கை எதிர்த்து நடத்தப்படுகிறது என்ற செய்தி கேட்டதுமே, நீலகிரி மலையில் இருந்த முதலமைச்சருக்குத் திடீரெனக் கொதிப்பு ஏற்பட்டு விட்டது! எதிர்க்கட்சிகளின் மீதும் என்மீதும் பாய்ந்திருக்கிறார்!

அரசாங்க நிகழ்ச்சியாக இருந்தால் என்ன! கால்நடைக் கண்காட்சி தொடக்க விழா அல்லவா! அதனால் பாய்ச்சல்! அது எதிர்பார்க்கக் கூடியது தானே!

இவரது தெளிந்த சிந்தனை பற்றி நாட்டு மக்கள் பேசுவது பிறகு இருக்கட்டும் - இவரது கட்சிக்குள்ளேயே கிளம்பியுள்ள முணுமுணுப்பை இவர் அறிந்து கொள்வது நல்லது!

அன்புள்ள,

மு. க.

(20-10-1978)

610. அக்டோபர் 23!

உடன்பிறப்பே,

வரும் 23-ஆம் நாள் திங்கட்கிழமை தமிழகம் முழுவதும் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் அமைதியான முறையில் நடைபெற வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை விளக்கிடும் வகையில் 22-ஆம் நாள் ஞாயிறன்று நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களில் அனைத்துக் கட்சியினர் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இதற்கிடையே பிரச்சினையை மேலும் வளர்த்திடும் வண்ணம் - எதிர்க்கட்சிகளை மிரட்டியும் தூற்றியும் அறைகூவல் விடுத்தும் உதகையில் நடைபெற்ற அரசாங்க நிகழ்ச்சியில் முதலமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் பேசிவிட்டு, உடனடியாகச் சென்னைக்குத் திரும்பினார்.

திரும்பி வந்தவர், நீண்டகாலமாகத் தீராமல் இருந்து வருகிற பிரச்சினைகளை அணுகி, நல்ல முடிவினை ஏற்படுத்தலாம் என்று கருதினாரா? இல்லை!

அதற்கு மாறாக - எதிர்க்கட்சிகளின் அணிவகுப்பை எப்படி உடைக்கலாம் என்பதிலே அக்கறை காட்டினார். அனைத்துக் கட்சிக் கூட்டிலேயிருந்து சில கட்சிகளைப் பிரித்து அரசின் தொழிலாளர் விரோதப் போக்கை வலுப்படுத்த திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறாரே தவிர, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அடக்குமுறையால் ஒடுக்கப்படுவதும் - அறவழிக் கிளர்ச்சிகள் ஆளுங்கட்சித் தொண்டர்களால் அமளி வடிவமெடுக்கச் செய்யப்படுவதும் - ஜனநாயகத்திற்கு முரணானவை என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தன் கட்சிக்காரர்களை அவசர அவசரமாகக் கூட்டி, சட்டம் ஒழுங்கு அமைதியைக் காக்க ஆலோசனை என்ற பெயரால்

ஆங்காங்கு ரகளைகளை உருவாக்கவும், வன்முறையைக் கட்டவிழ்த்து விடவும் அவர்களை ஊக்கப்படுத்தி அனுப்பி வைக்கிறார்.

சட்டம் ஒழுங்கைப்பற்றி இன்று உபதேசம் செய்கிற இந்த அரசு, தன் கட்சியின் சார்பில் உள்ளவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கடந்த ஓராண்டு காலமாக ஆடுகிற ஆட்டங்களைத் தடுத்து நிறுத்தியதுண்டா? ஆதாரத்துடன் சட்டமன்றப் பேரவை, மேலவையில் சுட்டிக்காட்டப்பட்ட தகவல்களின் மீது இதுவரை நடவடிக்கைகளாவது எடுத்ததுண்டா?

இந்த நிலையில் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பற்றிப் பேச இந்த அரசு எப்படி உரிமை கொண்டாடுகிறது என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

பஸ்கள் மீது கல் வீசினால் கொலை செய்ய முயன்றதாக வழக்குப் போடப்படும் என்கிறார் முதலமைச்சர்!

காரின் மீது கல் வீசியே கழகத்தின் இளங்கண்மணி இளஞ்செழியனைக் கொலை செய்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே, ஏன்?

வேலை நிறுத்தங்களிலோ, போராட்டங்களிலோ ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு வழக்குகளைத் திரும்பப் பெறுவதும், பழிவாங்காமல் இணக்கமான நிலை ஏற்பட வழி வகுப்பதும் ஒரு அரசுக்குரிய ஜனநாயக நெறியாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக, இந்த அரசின் நடவடிக்கைகளில் சர்வாதிகார வெறியன்றோ கொடிகட்டிப் பறக்கிறது!

இந்த அரசு தொழிலாளர் விரோதக் கொள்கையுடையது என்பதற்கு ஆதாரங்களைத் தேடி வேறெங்கும் அலைய வேண்டாம்! தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையை ரத்து செய்கிற அவசரச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருகிற அளவுக்குத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டியதை அதற்குள் தொழிலாளர் வர்க்கம் மறந்துவிட இயலுமா?

விவசாயிகளின் வண்டிகள் நொறுக்கப்படும் - மாடுகள் ஏலம் விடப்படும் - இப்படிப்பட்ட ஆணவ மொழிகள்தான் விவசாயிகளுக்கு அரசு காட்டிய பரிவு!

விவசாயிகளானாலும் - மாணவர்களானாலும் - அரசு அலுவலர்களானாலும் - அவர்களைக் காவல்துறையினர் மட்டுமின்றி ஆளுங்கட்சித் தொண்டர்களும் அடித்து நொறுக்குவதற்கு அதிகாரபூர்வமான அனுமதியைப் பெற்றுக் கொண்டிருப்பது இந்த ஆட்சியில் நாம் அனுபவ ரீதியாக கண்ட உண்மையாகும்.

கடந்த 17-ஆம் நாள் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட எல்லாக் கட்சியினரும் இந்த அரசின் மக்கள் விரோதப் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்.

அந்தக் கட்சியினரில் ஓரிருவர் இன்று வேறு விதமாகப் பேசினாலும் - கடந்த 17-ஆம் நாள் மாலை சென்னையில் நடந்த அனைத்துக் கட்சியினர் ஆலோசனைக் கூட்டத்தில் அவர்கள் எவ்வளவு கடுமையான மொழிகளை எல்லாம் இந்த அரசை எதிர்த்து உதிர்த்தனர் என்பதை அந்தக் கூட்டத்திலிருந்தோர் அறிவர்.

எனவே, இந்த அரசின் மக்கள் விரோதப் போக்கை எல்லாக் கட்சிகளும் உணருகின்றன. ஒருசில தவிர்க்க முடியாத காரணங்களால் ஓரிரு கட்சிகள் ஒதுங்கி நிற்கலாமே தவிர, உணர்வுகளில் வேறுபாடு சிறிதும் இல்லை.

அந்த உணர்வின் அடிப்படையில்தான் 23-ஆம் நாள் பொது வேலை நிறுத்தமும் - கடையடைப்பும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி நாள் நெருக்கத்தில் தேதி குறித்தால் வியாபாரிகளுக்குச் சங்கடம் ஏற்படக்கூடும் என்றுதான் ஏழு நாட்கள் முன்னதாக நாள் குறிக்கப்பட்டுள்ளது. இதிலும் கூட வியாபாரிகள், தங்களுக்குள்ள கஷ்டத்தை எடுத்துக்கூறத் தவறவில்லை. இருந்தாலும் கூட, நாட்டின் பொது நன்மைக்காக ஒருநாள் தியாகத்திற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், மருத்துவமனைகள் ஆகியவற்றுக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

அரசு, சர்வாதிகாரப் போக்கிலிருந்துத் தன்னைத் திருத்திக் கொள்ளவே இந்த வேலை நிறுத்தமும் - கடையடைப்பும்!

அமைதி என்ற பெயரால் ஆளுங்கட்சியினர் அமளி ஏற்படுத்த முனையக் கூடும். அதனைச் சமாளிக்க அறப்போரில் ஈடுபடும் அனைத்துக் கட்சியினரும் கட்டுப்பாடு குலையாமல் நின்று கண்ணியம் காத்திட வேண்டும்.

அமைதிக் குலைவு ஏற்படுத்த வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் நோக்கமல்ல! தமிழ்நாட்டில் நாள்தோறும் குலைக்கப்பட்டு வரும் அமைதியைப் பாதுகாக்க வேண்டுமென்பதே இந்த இயக்கத்தின் குறிக்கோள்!

அந்த வகையில் அனைத்துக் கட்சியினர் நடத்தும் இந்த பெரும் இயக்கம் வெற்றிபெற, உடன்பிறப்பே! நீ உறுதியுடன் பணியாற்று!

அன்புள்ள,

மு. க.

(22-10-1978)

611. இரண்டில் ஒன்று!

உடன்பிறப்பே,

மிசா காலத்தில் எதிர்க்கட்சிகளைப் பற்றி அவதூறு பேசுவதற்கு எப்படி வானொலியும், டெலிவிஷனும் பயன்படுத்தப்பட்டனவோ, அதேபோல மினி மிசா ஆட்சி நடைபெறும் தமிழ்நாட்டில் வானொலியும், டெலிவிஷனும் எம்.ஜி.ஆரின் உத்திரவுப்படி எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றியும், எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள், அமைதியான கிளர்ச்சிகள் பற்றியும் அவதூறான செய்திகளை வெளியிடத் தாராளமாகப் பயன்பட்டு வருகின்றன.

மாநில அரசு என்ற முறையில் மட்டுமல்லாமல் வானொலி, டெலிவிஷன் நிலையத்தில் உள்ள பெரும்புள்ளிகள், எம்.ஜி.ஆருடன் தனியாகக் கொண்டிருக்கிற தொடர்புகளும் இந்த நிலைமைக்குக் காரணமென்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அனைத்துக் கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டில் பொது வேலை நிறுத்தமும், கடையடைப்பும் அறிவிக்கப்பட்ட பிறகு - அதற்கு எதிர்ப்பான செய்திகளுக்கே முதலிடமும், முக்கிய இடமும் அளித்து வானொலியும், டெலிவிஷனும் இயங்கி வருவதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவர்!

எதிர்க்கட்சிகளின் சார்பில் கூறப்படும் கருத்துக்களை ஓரிரு வரிகள் செய்தியாகத் தருவதும் - கூடுமானவரை இருட்டடிப்புச் செய்வதும் - இந்தக் கிளர்ச்சியின் போது வானொலியார் காட்டியுள்ள கைவரிசையாகும்.

செய்திக்கு ஒதுக்கப்படுகிற நேரம் பத்து நிமிடங்கள் என்றால் அதில் ஒன்பது நிமிடம் அரசின் சார்பான கருத்துகளுக்கும், அரை நிமிடம் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கும் வழங்கி தமது நன்றிக் கடனை வானொலி நிலையத்தில் உள்ளவர்கள், தங்களின் எஜமானர் எம்.ஜி.இராமச்சந்திரனுக்குக் காட்டிக் கொண்டுள்ளனர்.

மினிமிசா ஆட்சி, தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதற்குத் தலையாய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதுதான், 22-ஆம் தேதி மாலை 6-15 மணிக்கு வானொலியில் எம்.ஜி.ராமச்சந்திரன் ஆற்றிய உரையாகும்.

தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், இந்திய தேசிய காங்கிரஸ், ஜனதா தொழிற்சங்க அமைப்பு, பார்வார்டு பிளாக், காந்தி காமராஜ் காங்கிரஸ், குடியரசுக்கட்சி, உழைக்கும் மக்கள் மாமன்றம் முதலிய இயக்கங்கள் இணைந்து நடத்தும் இந்த அறப்போராட்டத்தை, வானொலியும், டெலிவிஷனும் சில எதிர்க்கட்சிகள் என்றே குறிப்பிடுகின்றன! நாலு பேர் கொண்ட ஒரு அமைப்பு, அறப்போருக்கு எதிராக ஒரு அறிக்கை விடுத்தாலும் உடனே அந்த அறிக்கைக்கும், அந்த அமைப்புக்கும் வானொலியில் பிரமாதமான விளம்பரம்! ஒருமுறையல்ல - பலமுறை - திரும்பத் திரும்ப!

என்னதான் முதலமைச்சராக இருந்தாலும், எதிர்க்கட்சிகள் நடத்தும் அறப்போரைப் பற்றி வானொலியில் அறைகூவல் விடுவதையும், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேலி பேசுவதையும், சர்க்காரியா கமிஷன், லஞ்ச லாவண்யம் என்றெல்லாம் ஏகடியம் செய்வதையும், ஒருவர் தலைவராக ஆவதற்காக போராட்டம் நடத்துகிறார், இன்னொருவர் தன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறைத்துக் கொள்வதற்காக போராட்டம் நடத்துகிறார் என்று குதர்க்க உரை ஆற்றுவதையும் வானொலி நிலையத்தினர் எவ்வாறு அனுமதித்தனர்? அனுமதித்ததில் அடங்கியுள்ள மர்மம் என்ன?

பஸ் முதலாளிகளிடம் கட்சி நிதி என்ற பெயரால் பல லட்ச ரூபாய் லஞ்சத்தைக் கட்டாய வசூலாகப் பெற்றிருக்கிறார்களே! அதைப் பற்றி வானொலியில் பேசிட எதிர்க்கட்சிகளுக்கு உரிமை அளிக்கப்படுமா?

வட்டிக் கடைக்காரர்களுக்கு பாதகம் நேராமல் பார்த்துக் கொள்வதற்காக வாக்களித்துச் சுமார் பத்து லட்ச ரூபாயை முதல் தவணையாக லஞ்சம் பெற்றிருக்கிறார்களே; அது குறித்து வானொலியில் விளக்க எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

வேலை நிறுத்தம் பற்றி கண்டித்துப் பேச முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட உரிமை - வேலை நிறுத்த அவசியம் பற்றிப் பேச எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படாத காரணம் என்ன? வானொலி, டெலிவிஷனில் இருதரப்புக் கருத்துக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படும் என்று ஜனதா அரசு அறிவித்த கொள்கை என்ன ஆயிற்று?

அவதூறுகளையும், பொய்களையும், அறைகூவல்களையும் - தனது வானொலி உரையாக முதலமைச்சர் இராமச்சந்திரன் தயாரித்திருப்பதை வானொலி நிலையத்தினர் அறிந்து கொள்ளவில்லையா? அல்லது அவற்றை அறிந்துகொள்ள முடியாத அப்பாவிகளா?

சென்னையில் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தினால் தான் டிராம் வண்டி கம்பெனியே மூட நேரிட்டு முப்பத்தாறாயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர் என்று எம்.ஜி.ஆர். வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் உண்மை என்ன? இதோ இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் அதை விளக்குகிறார்.

டிராம் வண்டி கம்பெனி ஒரு வெள்ளைக்காரனுடையது. பழசாகி விட்ட வண்டிகளைப் புதுப்பிக்கவும், புதிய தண்டவாளங்களைப் போடவும் பணம் இல்லை என்றும் - டிராம் வண்டித் தொழில் லாபகரமாக இல்லை என்றும் - 1952-இல் அவன் அதை மூடி விட்டான். அதனால் வேலையிழந்த சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் மோகன் குமாரமங்கலம் தலைமையில் தங்களுக்கு நஷ்டஈடு கேட்டுப் போராடினார்கள். இந்த வரலாற்றையும் தொழிலாளர்கள் எண்ணிக்கையையும் அப்படியே மாற்றி நமது முதலமைச்சர் வானொலியில் பேசியிருக்கிறார்.

முதல்வருக்கு, திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பொதுக்கூட்டத்தில் அளித்த இந்தப் பதிலை, வானொலி வெளியிட்டிருக்க வேண்டாமா? நேர்மையும், நியாயத்தின் பாற்பட்ட சமநிலைக் கொள்கையும் வானொலிக்கு இருந்தால் ஒருதலைப்பட்சமாகச் செய்திகளைத் தந்து கொண்டிருக்குமா?

கிளர்ச்சி செய்யும் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று பேசிய ஒரு

தலைவருடன் மற்ற கட்சிகள் சேரலாமா? என்று வானொலியில் எம்.ஜி.ஆர். முழங்கியிருக்கிறார். அது என்னைக் குறிப்பிட்டுத்தான் என்று சில ஏடுகள் விளக்கம் தந்துள்ளன.

'கோரிக்கைகள் நீட்டப்பட்டால் கரும்புக் கரம் நீட்டுவேன் - கோரக் கைகள் நீட்டப்பட்டால் இரும்புக் கரம்தான் நீளும்'

என்று நான் முன்பொருமுறை கூறியதை தனக்கு வசதியாக, தலைகீழாகத் திருப்பிக் கொண்டுள்ளார் எம்.ஜி.ஆர். வானொலியில்! உடன்பிறப்பே! எந்த எம்.ஜி.ஆர். தெரியுமா?

'கழக ஆட்சியில் விவசாயிகள் சுடப்பட்டபோது கருணாநிதி மன தைரியமின்றிக் கலங்கினார். நான்தான் சுட்டது சரி என்று பேசினேன்'

என்பதாக அண்மையில் ஈரோட்டில் பேசினாரே, அந்த எம்.ஜி.ஆர். தான்!

கழக ஆட்சியின்போது கோவையில் விவசாயிகள் வண்டிப் போராட்டம் நடத்தினார்கள் - முதல்வர் பொறுப்பில் இருந்த நான் அதைப் பொறுமையாகச் சகித்துக் கொள்ளுமாறு காவல் துறையினரைக் கேட்டுக்கொண்டேன்.

கடந்த மாதம் விவசாயிகளைப் பார்த்து எம்.ஜி.ஆர். என்ன சொன்னார்? வண்டி ஊர்வலம் நடத்தினால் மாடுகள் ஏலம் போடப்படும்! வண்டிகள் நொறுக்கப்படும்! இந்த வீர வாசகங்களைச் சட்டப் பேரவையிலே கூட உறுதிப்படுத்தியவரல்லவா எம்.ஜி.ஆர்.!

வானொலியார் நடுநிலை பிறழாது நமக்கும் வாய்ப்பளித்திருந்தால் இந்தச் செய்திகளை யெல்லாம் கூறி அந்த இரட்டை மனிதரின் உருவத்தை நாட்டுக்குப் படம் பிடித்துக் காட்டியிருக்க முடியுமல்லவா?

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நண்பர் சுப்பு தலைமையில் உள்ள சங்கத்திற்கும், நண்பர் ரங்கராஜன் குமாரமங்கலம் தலைமையில் உள்ள சங்கத்திற்கும், நண்பர் கோவிந்தசாமி தலைமையில் உள்ள சங்கத்திற்கும் இருந்த அங்கீகாரத்தை நேற்று (22-10-78) அவசர அவசரமாக ரத்துச் செய்துவிட்டு, அந்தச் சங்க அலுவலகங்களின் கதவுகளை

உடைத்து ரிக்கார்டுகளையும் கைப்பற்றிச் சென்றுள்ள இந்தச் சர்வாதிகார அரசுக்குத் தொழிலாளர்களைப் பற்றிப் பேச தகுதி என்ன இருக்கிறது?

தொழிலாளர்களுக்குப் பாடுபடும் உத்தமரைப் போல வானொலியில் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்! எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குவதற்கே வானொலி உரையைத் தயாரித்துக் கொண்டு அறைகூவல் விடுக்கிறார்!

அவருக்கு அடிமையாக - எதிர்க்கட்சிகளுக்கு விரோதமாக - செயல்படும் வானொலி, டெலிவிஷன்கள் திருந்திக் கொள்ளப் போகின்றனவா? அல்லது அவற்றைத் திருத்த அமைதியான முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலையை எதிர்க்கட்சிகளுக்கு உருவாக்கப் போகின்றனவா? இந்த இரண்டில் ஒன்று நமக்குத் தெரிந்தாக வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(24-10-1978)

612. காலம் பதில் சொல்லும்!

உடன்பிறப்பே,

அனைத்துக் கட்சிகள் அறிவித்த பொது வேலை நிறுத்தம் - கடையடைப்பு, அரசாங்கத்தின் எல்லை கடந்த காட்டு தர்பாருக்கிடையிலேயும் - மிசா காலத்து அதிகார மிரட்டல்களுக்கிடையிலேயும் - சட்டத்தை ஆளுங்கட்சி குண்டர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் காட்டுகிற வழியில் காவல்துறையினர் செயல்பட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி பணிந்து நடந்த பரிதாபத்திற்குரிய போலீஸ் இலாகாவின் ஒருதலைப்பட்ச நடவடிக்கைகளுக்கு இடையிலேயும் - பெரும் வெற்றியினைப் பெற்றிருக்கிறது என்பதை நாடறியும்.

ஏடுகள் சில இந்த உண்மையை மறைக்க முயன்றாலும் - தமிழகத்தில் பெரும்பான்மையான இடங்களில் இந்தக் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் அரசாங்கத்தின் கெடுபிடிச் செயல்களால் ஒரு குறைந்த விகிதாச்சாரம்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தை ஆதரித்தே செய்திகளை வெளியிட வேண்டும் என்பது மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாகவே செய்திகளை வழங்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்துள்ள வானொலி, டெலிவிஷன்களால் கூட உண்மைகளை மறைக்க முடியவில்லை. இதோ பஸ்கள் ஓடுகின்றன பார்! என்று டெலிவிஷனில் காட்டினர். பஸ்களை வெள்ளையுடை அணிந்த போலீசார் ஓட்டிச் சென்றதும், அவற்றில் பயணிகளே இல்லாமல் காலியாக இருந்ததும் டெலிவிஷனில் காட்சியாக இருந்ததைப் பார்த்து சென்னை டெலிவிஷன் பார்வையாளர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

இதோ சென்னையில் வழக்கமான வாழ்க்கை என்று சில கடைத் தெருக்களைக் காட்டினர். அந்தக் காட்சியில் மூடப்பட்ட

கடைகள்தான் பெரும்பாலும் தெரிந்தன. மக்கள் நடமாட்டமில்லாத சாலைகள்தான் தென்பட்டன. பாவம், டெலிவிஷன் நிலையத்தார்!

சென்னை நகரில் ஒரே குழுவின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுகிற இரண்டு நாளேடுகள் தரும் செய்தியைப் படித்தாலே, உனக்கு உண்மை விளங்கும்.

பொது வேலைநிறுத்தம் - கடையடைப்பு நடைபெற்ற அன்று மாலையில் சென்னையில் வெளியான மாலைமுரசு பின்வரும் செய்திகளைத் தருகிறது.

தி.நகர், பாண்டிபசார் கடைத் தெருக்களில் பெரிய நகைக்கடைகள், துணிக்கடைகள் மூடியிருந்தன. பட்டாசுக் கடைகள் திறந்திருந்தன. இங்கும் அ.தி.மு.க.வினர் கொடிகளுடன் சென்று கடைகளைத் திறக்கும்படி வற்புறுத்தினர். தி.நகர் உஸ்மான்ரோடில் கடைகள் பெரும்பாலும் மூடிக்கிடந்தன. கோடம்பாக்கத்தில் கடைகள் மூடிக்கிடக்கின்றன. நுங்கம்பாக்கத்தில் சில கடைகள் திறந்துள்ளன.

பெரும்பாலும் இந்தப் பகுதியில் கடைகள் மூடிக்கிடக்கின்றன. ஜாம்பஜார் மார்க்கெட்டுக்குள் பல கடைகள் மூடிக்கிடக்கின்றன. திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலை கடைகள் பெரும்பகுதி மூடியே கிடக்கின்றன. ராயப்பேட்டை, பீட்டர்ஸ் சாலையில் ஒருசில கடைகளே திறக்கப்பட்டிருந்தன. ராயப்பேட்டை நெடுஞ்சாலையிலும், மைலாப்பூரிலும் பெரும்பாலும் கடைகள் மூடியிருந்தன. தங்கசாலை, திருவொற்றியூர், தண்டையார்பேட்டை பகுதிகளில் கிட்டத்தட்ட எல்லாக் கடைகளும் மூடியிருந்தன. மொத்தத்தில் சென்னை நகரில் சில பகுதிகளில் கடைகள் திறந்திருந்தாலும் அவற்றில் வியாபாரம் இல்லை. பாய்கடை, சைனா பஜார், போஸ் ரோடு ஆகிய இடங்களில் பெரும்பாலான கடைகள் மூடியே இருந்தன.

இது 23-10-78 சென்னையில் மாலையில் வெளியான மாலை முரசு இதழில் காணப்படும் செய்தி.

ஆனால் சென்னையில் 24-ஆம் தேதி காலை வெளியான தினத் தந்தி இதழில் இதற்கு நேர்மாறான தகவல்கள்! ஒரே குழுவின் ஆதிக்கத்தில் - மேற்பார்வையில் இருக்கிற இரண்டு ஏடுகள்! ஒன்று முதல் நாள் மாலையில் சென்னை நிலவரத்தை

வெளியிடுகிறது. மற்றொன்று மறுநாள் காலையில் அனைத்தையும் மாற்றி அரசாங்கத்திற்குச் சாதகமாக செய்திகளை வெளியிடுகிறது.

கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, அரசின் அதிகாரப் பூர்வமாக எப்படித் தரப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் பார்!

தமிழ்நாடு பூராவும் ஒருநாள் அர்த்தாலையொட்டி, 9400-க்கு அதிகமான பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தினமணி - சென்னை 24-10-78.

இதோ இன்னொரு ஏடு -

கட்சித் தொண்டர்களும், தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும், சமூக விரோதிகளுமாக சுமார் ஆறாயிரம் பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

இந்து - சென்னை 24-10-78.

மாநில முழுவதும் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதாகியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையான தகவல்! அதை தினமணியும், இந்துவும் ஒன்பதாயிரம் - ஆறாயிரம் என்று பகுத்துப் பிரசுரித்திருக்கின்றன - என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பந்தில் யாருக்கு வெற்றி? யாருக்கு தோல்வி? என்று கணிப்பது உகந்தது அல்ல, என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆரே அறிவித்திருப்பதிலிருந்து என்னதான் முயன்றாலும் அரசாங்கத்தாலும் - அரசாங்க ஆதரவு ஏடுகளாலும் உண்மையை மறைக்க முடியவில்லை என்பது தெளிவாகிறதல்லவா?

தோல்வியின் காரணமாக ஆளுங்கட்சிக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் விளைவுதானே வீடு புகுந்து நடத்திய தாக்குதல்!

பஸ்கள் ஓடியதாம்! எப்படியாவது ஓட்ட வேண்டுமென்று முயன்ற அரசாங்கம் - பஸ்கள் வழக்கமான நிலையில் ஓடியது என்றால், சென்னையில் வழக்கமான கட்டணம் ஏன்

வசூலிக்கவில்லை? ஒட்டு மொத்தக் கட்டணமாக எந்த இடத்தில் இறங்கினாலும் முப்பது காசு என்று கட்டணம் நிர்ணயித்த காரணம் என்ன?

வானொலி

டெலிவிஷன்

சில ஏடுகள்

இவற்றை வைத்துக்கொண்டு மிசா ஆட்சி நடத்திய திறமை படைத்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களே தன் குறிக்கோளில் வெற்றிபெற முடியவில்லை என்றால் மினி மிசா ஆட்சி நடத்திப் பார்க்க விரும்புகிற எம்.ஜி.ஆரா வெற்றி பெற்றுவிடப் போகிறார்? உடன்பிறப்பே! காத்திரு! காலம் பதில் சொல்லத்தான் போகிறது!

அன்புள்ள,

மு. க.

(25-10-1978)

613. இரட்டை மனிதர்!

உடன்பிறப்பே,

யார் தவறு செய்தாலும் தண்டனை உறுதி! வன்முறையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் நீதிமன்றத்தில் நிறுத்துவோம்! சட்டம் தன் கடமையைச் செய்யும்!

முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் இந்தப் பாட்டைப் பாடாத நாளே கிடையாது!

போலீஸ் லாக்அப்பில் இருந்த கைதிகளை பலாத்காரமாக விடுவித்துக் கொண்டு, அதிகாரிகளையும் ஆபாசமாகப் பேசி விட்டுச் சென்ற கிணத்துக்கடவு எம்.எல்.ஏ. என்ன தண்டனைக்கு ஆளானார்? அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? ஒன்பது மாத காலமாக இந்தக் கேள்வியை நாம் கேட்டு வருகிறோம்.

சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று ஓயாமல் பாடுகிறவர், தன் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களின் முன்னால் சட்டம் எதையும் செய்யாது என்ற பதிலையாவது அளித்து விவகாரத்தை முடித்து விடலாமே!

செங்கற்பட்டு மாவட்டம் புட்லூர் பகுதியில் தண்டபாணி என்ற காண்ட்ராக்டர் கொல்லப்பட்டது சம்பந்தமாகச் சட்டசபையிலேயே பல ஆதாரங்களை எடுத்துக் காட்டியும் கூட, இதுவரையில் குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தொட முடியாமல் - சட்டம் அந்தக் குற்றவாளிகளின் பாதங்களில் சரணாகதி அடைந்து கிடக்கிறதே! இந்த நிலைமை ஏன் என்று விளக்கம் அளிக்க முன்வராத எம்.ஜி.ஆர். நீதியைப் பற்றியும் நேர்மையைப் பற்றியும் சட்டத்தைப் பற்றியும் பேச என்ன தகுதியைப் பெற்றிருக்கிறார்!

கறுப்புக் கொடி காட்டியவர்கள் மீது சதி வழக்கு, கொலை வழக்கு - கொலை முயற்சி வழக்கு!

பொது வேலை நிறுத்தத்தையொட்டி கைது செய்யப் பட்டவர்கள் மீது கொலை வழக்கு, சதி வழக்கு, தண்டவாளத்தை பெயர்த்ததாக வழக்கு -

இப்படி எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள், இயக்கத்தின் பொறுப்பு வாய்ந்த நிர்வாகிகள், மீதெல்லாம் ஒவ்வொரு நாளும் 120பி, 302, 307 ஆகிய சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி வழக்குகளைத் தொடுத்து வெறியாட்டம் போடுகிற இந்த அரசும், அரசோச்சும் அமைச்சர்களும் - சட்டத்தைப் பற்றியும் நேர்மை நியாயங்களைப் பற்றியும் பேசுவதற்காக வெட்கப்பட வேண்டாமா?

கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம் நடைபெற்ற போது கடையைத் திறந்திடுக என்று கொடி பிடித்து வந்த குண்டர்களுக்கு ஆதரவாகப் போலீஸ் படை! கடையை மூடுங்கள் என்று கேட்டுக் கொண்ட எதிர்க்கட்சிகளின் தொண்டர்களுக்குக் கைவிலங்கு! அடி - உதை - சிறைச்சாலை - இத்தனையும்!

உடன்பிறப்பே, மதுரை இளஞ்செழியன் - பனிரெண்டு வயது கழகக் கண்மணி - கல்லால் அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்! அந்த இளந்தளிரின் படுகொலையைக் கண்டித்து திருவில்லிபுத்தூரில் அனைத்துக் கட்சியினரும் அறிக்கை விடுத்தனர். கண்டன ஊர்வலம் நடத்தினர். கொலைகாரர்கள் பிடிக்கப்பட்டார்களா? குற்றம் செய்த கொடியவர்கள் என்று யார் மீது புகார் செய்யப்பட்டதோ அவர்கள் மீது சட்டம் புலி போலப் பாய்ந்ததா? இல்லை கழுதை போலத் தேய்ந்தது!

மதுரையில் நடந்த பெரியார் நூற்றாண்டு விழாவில் இளஞ்செழியன் இறந்தது எப்படி? என்ற தலைப்பில் முதலமைச்சர் இராமச்சந்திரன் ஒரு மணி நேரம் பேசி முடித்து விட்டார். பெரியார் விழா, அண்ணா விழா - இவைகள் எல்லாம் அரசாங்க விழாக்களாக நடைபெற்றாலும் அங்கெல்லாம் எம்.ஜி.ஆருக்கு தி.மு.கழகத்தைத் திட்டிப் பேசுவதென்றால் தித்திப்பு சாப்பிடுவதைப் போல!

மக்கள் வரிப்பணத்தில் நடத்தப்படுகிற அரசு விழாக்களில் எதிர்க்கட்சிகளை விமர்சிக்கிற வேலையைத் தொடர்ந்து செய்து வருகிற ஒரு அபூர்வமான மனிதரை இந்த மாநிலம் முதலமைச்சராகப் பெற்றிருக்கிறது!

இளஞ்செழியன் ஏறி வந்த கார் கல்லடியால் நொறுங்கியிருந்த காட்சி புகைப்படமெடுக்கப்பட்டு ஏடுகளில் வெளிவந்தது. காரின் பின்புறக் கண்ணாடி நொறுங்கியிருந்த நிலையை அந்தப் படத்தில் காண முடிகிறது. ஆனால் மதுரையில் பேசிய முதலமைச்சர் சொல்கிறார், காரின் பின்புறக் கண்ணாடி உடையவில்லையென்று! இதோ - அந்தக் காரின் படத்தை இந்தக் கடிதத்துடன்

இணைத்துள்ளேன் பார்! கண்ணாடி உடைந்திருக்கிறதா இல்லையா?

கொலையை மறைப்பதற்காகச் செய்யவேண்டிய முன்னேற்பாடுகளை யெல்லாம் முதலமைச்சரின் யோசனைப்படி செய்துவிட்டு - இப்போது அவரே மதுரை பெரியார் விழாவில் நின்று கொண்டு - தன்னையே நீதிபதி போல பாவித்துக் கொண்டு, தான் சொல்வதே தீர்ப்பு என்பது போலப் பேசி இளஞ்செழியன் கொல்லப்படவில்லையென்று கூறிவிட்டார்!

இனி எதற்காக போலீஸ் புலன் விசாரணை!

முகவை மாவட்ட ஆட்சித் தலைவரே பரவாயில்லை போலிருக்கிறது!

மாநில முதலமைச்சர், அவரையும் மிஞ்சி, இளஞ்செழியன் இறந்தது விபத்தினால்தான் - அது கொலையல்ல - என்று ஜட்ஜ்மெண்ட் எழுதி விட்டார்!

இவர்தான் - யார் தவறு செய்தாலும் தண்டனை உறுதி என்று காலைமுதல் மாலை வரையில் பேசிக் கொண்டிருக்கிறார்!

காரில் உடைந்த கண்ணாடியையே உடையவில்லை என்று பொய்யின் உருவமாக நின்று பேசுகிற இந்த முதலமைச்சரிடம் - நீதியையோ - நேர்மையையோ எதிர்பார்ப்பது அறியாமையே ஆகும்!

இவருக்குத் தெரிந்ததெல்லாம் தனக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்குகிற பணிதான்! எதிர்க் கட்சிகள் மீது பயங்கர வழக்குகளைத் தொடுத்து மிரட்டுகிற தந்திரம்தான்!

இந்த இரட்டை மனிதர் நாட்டு மக்களை நெடுநாளைக்கு ஏமாற்ற முடியாது! விரைவில் இவரது வேடம் கலையத்தான் போகிறது.

அன்புள்ள,

மு. க.

(26-10-1978)

614. அரசு அமைக்கும் பாதை!

உடன்பிறப்பே,

கடந்த 23-ஆம் நாள் தமிழகத்தில் பொது வேலை நிறுத்தமும், கடையடைப்பும் நடைபெற்ற பிறகு 24-ஆம் நாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் பின்வரும் குறிப்பு ஒன்று காணப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் அரசு பஸ்களைத் தமிழக முழுவதும் இயக்கிய தி.மு.க. சங்கத்தைச் சேர்ந்த மூவாயிரத்து நானூற்று ஐம்பத்தேழு தொழிலாள உடன்பிறப்புகளுக்கும் - சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்து எண்ணூற்று எண்பது தொழிலாளத் தோழர்களுக்கும், தேசியத் தொழிலாளர் போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த நானூற்று தொண்ணூற்று இரண்டு தொழிலாளர்களுக்கும், ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்தைச் சேர்ந்த நூற்றி இரண்டு தொழிலாளர்களுக்கும் என்னுடைய மனமாந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது 24-ஆம் நாள் முதல்வர் விடுத்த அறிக்கை. சென்னை தினத் தந்தி முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது.

அதே முதலமைச்சர் 27-ஆம் நாள் ஒரு அறிக்கை வெளியிடுகிறார். அந்த அறிக்கை தினத் தந்தியில் நான்காம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் பஸ் தொழிலாளர்களைப் பற்றி அவர் குறிப்பிடும்போது;

தி.மு.க. சங்கத்தைச் சேர்ந்த நாலாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு தொழிலாளர்களும், சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்த ஐயாயிரத்து நானூற்று இரண்டு தொழிலாளர்களும், ஏ.ஐ.டி.யு.வைச் சேர்ந்த முன்னூற்று எண்பது தொழிலாளர்களும், என்.டி.டபிள்யூவைச் சேர்ந்த ஐநூற்றி அறுபத்தி நாலு

தொழிலாளர்களும் தமிழ்நாடு முழுவதும் அரசுப் பேருந்துகளை ஓட்டியிருக்கிறார்கள்

என்று புள்ளி விபரம் கொடுத்திருக்கிறார். முதலமைச்சரின் அக்டோபர் 24-ஆம் தேதி அறிக்கையில் தமிழக முழுதும் அரசுப் பேருந்துகளை ஓட்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும், அதே முதலமைச்சர் அக்டோபர் 27-ஆம் தேதி கொடுத்துள்ள எண்ணிக்கைக்கும் உள்ள முரண்பாடு தெரிகிறதா?

24-ஆம் தேதி அறிக்கைப்படி -

தி.மு.க. சங்கம் 3457 தொழிலாளிகள்.

27-ஆம் தேதி அறிக்கைப்படி -

தி.மு.க. சங்கம் 4836 தொழிலாளிகள்.

24-ஆம் தேதி அறிக்கைப்படி -

சி.ஐ.டி.யு. 2880 தொழிலாளிகள்.

27-ஆம் தேதி அறிக்கைப்படி -

சி.ஐ.டி.யு. 5402 தொழிலாளிகள்.

24-ஆம் தேதி அறிக்கைப்படி -

என்.டி.டபிள்யூ 492 தொழிலாளிகள்.

27-ஆம் தேதி அறிக்கைப்படி -

என்.டி.டபிள்யூ 564 தொழிலாளிகள் தமிழக முழுதும் அரசுப் பேருந்துகளை பொது வேலை நிறுத்த நாளான 23-ஆம் தேதி ஓட்டுவதற்கு ஒத்துழைத்தார்கள் என்று முதலமைச்சர் முரண்பட்ட புள்ளி விபரங்களைத் தந்திருக்கிறார்.

பொது வேலை நிறுத்தத்தின்போது தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். அரசு கையாண்ட அடக்குமுறைகளையும், வன்முறையையும் கண்டித்து மார்க்சிஸ்ட் தலைவரான ரணதிவே அவர்கள் கூறியதை மறுக்கும் வகையில் எம்.ஜி.ஆர். வெளியிட்டுள்ள அறிக்கையில் அவரது 24-ஆம் தேதி அறிக்கையில் காணப்படும் பேருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருமளவுக்கு மாறுபட்டிருக்கிறது.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பார்கள்! அவரது புளுகு அவ்வளவு நாட்கள் கூட தாங்கவில்லை! புளுகுவதில் மிகவும் கெட்டிக்காரர் அல்லவா? அதனால் நான்கு நாட்களுக்குள்ளாகவே அம்பலமாகிவிட்டது!

பேச்சுவார்த்தைகளுக்கு இவர் தயாராக இருந்தாராம் - எதிர்க்கட்சிகள்தான் இணக்கம் தெரிவிக்காமல் பந்த் நடத்துவதில் குறியாக இருந்ததைப் போல் கருத்து வெளிப்படும் வகையில் மக்களை ஏமாற்ற முனைகிறார்.

எதிர்க்கட்சிகள் முதலமைச்சருடன் பிரச்சினையைப் பேசி சுமுகமாக முடிக்கத் தயாராக இருக்கின்றன என்ற கருத்து அக்டோபர் 22-ஆம் தேதி மாலை வரையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களால் அறிவிக்கப்பட்டே வந்தது.

ஆனால் எம்.ஜி.ஆர்.தான் வானொலி மூலம், அறைகூவல் விடுத்து - எதிர்க்கட்சித் தலைவர்களின் மீது அவதூறுகளைப் பொழிந்து அதற்கேற்ப அடக்குமுறைத் தர்பாருக்கும் - ஆளுங்கட்சிக் குண்டர்களின் வன்முறை வெறியாட்டத்துக்கும் - வழி வகுத்துக் கொடுத்தார்.

பந்த்க்கு முதல்நாள் மாலையிலேயே - போலீஸ் வேன்களிலும், போலீஸ் ஜீப்புக்களிலும் ஆளுங்கட்சியினர் ஏறிக்கொண்டு தங்கள் கொடிகள் சகிதம் ஒலிபெருக்கிகளின் உதவியோடு கடைத் தெருக்களில் அனுமதி பெறாத ஊர்வலங்களை நடத்தி வணிகப் பெருமக்களை மிரட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே செய்து கொடுத்தது.

ஆளுங்கட்சியின் அமைப்பாளர்கள், யாரைக் காட்டுகிறார்களோ, அவர்களைக் கைது செய்ய வேண்டும் - என்ன வழக்குப் போடச் சொல்கிறார்களோ - அந்த வழக்கைப் போடவேண்டும் என்று அதிகாரிகளுக்குக் கடுமையான ஆணைபிறப்பித்து அதன்படி செயல்பட்டது இந்த அரசாங்கம் தான்!

சில ஊர்களில் - சில பகுதிகளில் - அ.தி.மு.க.வினரின் அநியாய உத்தரவுகளுக்குக் கட்டுப்படாமல் நீதியுடன் நடந்துகொண்ட காவல்துறையினர் பந்த் முடிந்த அடுத்த நாளே ஆளுங்கட்சி

அமைப்பாளர்களின் முறையீட்டின்மீது வேறு இடங்களுக்கு அவசர அவசரமாக மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேறுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கொலை முயற்சி வழக்கு, தண்டவாளத்தைப் பெயர்க்க சதி செய்த வழக்கு என்றெல்லாம் பயங்கரமான பிரிவுகளில் எதிர்க்கட்சிகளின் முன்னணியினர் மீதும் தொண்டர்களின் மீதும் வழக்குகளைச் சராசரியாகத் தொடுத்துவிட்டு - மன்னார்குடியில் அ.தி.மு.க. கட்சிக்காரர் ஒருவரைக் கண்துடைப்புக்காக கைது செய்துவிட்ட தந்திரத்தைத் தனது ஆட்சியின் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக எம்.ஜி.ஆர். அறிவிப்பது விந்தையிலும் விந்தையேயாகும்!

தர்மபுரியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கலவரம் செய்தார்கள் - போலீசில் புகார் செய்யச் சென்ற சென்னகேசவன் - தர்மபுரி மாவட்டச் செயலாளர் - அவரை அ.தி.மு.க.வினர் பலாத்காரமாகக் கடத்திச் சென்று ஒருநாள் முழுவதும் அடைத்து வைத்து அதன் பிறகே அவர் விடுவிக்கப் பட்டிருக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினர் புருடோத்தமனைக் கைது செய்த காவல்துறை அதிகாரி, அவரை அ.தி.மு.க. வன்முறையாளர்களிடம் சிக்கவைத்து போலீசார் எதிரிலேயே அந்த வன்முறையாளர்களால் புருடோத்தமன் தாக்கப்பட்டிருக்கிறார்.

மூடப்பட்டிருந்த கடைகளில் அ.தி.மு.க.வினர் வன்முறை நடத்தி பெரும் சேதங்களை விளைவித்துள்ளனர். இத்தனை அடக்குமுறை வன்முறை வெறியாட்டங்களுக்கிடையிலேயும் வேலை நிறுத்தமும், கடையடைப்பும் வெற்றிகரமாகவே நடைபெற்று முடிந்திருக்கின்றன.

வெளியாட்களையும், போலீசாரையும் வைத்து பஸ்கள் ஓட்டப்பட்டன. பயணிகள் வந்தார்களா? பிறகு எதற்காக சென்னையில் எங்கே இறங்கினாலும் முப்பது காசு டிக்கெட் என்ற நிலைமை ஏற்படவேண்டும்?

பயணிகள் பாதுகாப்பு சங்கம் என்ற பெயரால் பயணம் செய்த ஆளுங்கட்சி அடியாட்களைத் தவிர - பஸ்களில் பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

அக்டோபர் 22-ஆம் தேதி கணக்கு என்ன? 23-ஆம் தேதி கணக்கு என்ன?

சென்னையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திறந்திருந்த சில கடைத் தெருக்கள் - மாநிலத்தில் சிற்சில ஊர்களில் மட்டும் மூடப்படாமல் இருந்த கடைகள் - இவை தவிர, பெரும்பகுதியினர் கடைகளைத் திறக்கவில்லை - துறைமுகத்தில் - தொழிற்சாலைகளில் - வங்கிகளில் - வேலைக்குச் செல்லவில்லை என்பதுதானே உண்மை நிலவரம்!

இத்தனையும் மறைத்து விட்டு - தான் கொடுத்த புள்ளி விவரங்களை தன்னால் மாற்றிக் கொடுக்கப்படுகிற அளவுக்கு முரண்பாடு மலிந்த அறிக்கைகளை விடுப்பதால் - மக்களுக்கு மறதி அதிகம், அவர்களை ஏமாற்றி விடலாம் என்று எம்.ஜி.ஆர். கருதுகிறார் போலும்!

மன்னார்குடியில் அ.தி.மு.க.வினர் விளைத்த அமளி குறித்து முறையிடச் சென்ற எதிர்க்கட்சிகளின் தொண்டர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து முன்னாள் அமைச்சர் மன்னை மீதும் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள் மீதும் பொய் வழக்குகளை ஜோடித்துவிட்டு - இப்போது நயவஞ்சக நாடகம் ஆடி அதில் வெற்றி பெற்று விடலாம் என்று இந்த அரசு நம்புகிறது.

வன்முறை, இருபுறம் கூர்வாய்ந்த ஒரு ஆயுதம்! அதைப் புரிந்துகொள்ளாமல் அதையே நம்பி எதிர்க்கட்சிகளை அடக்கிவிடலாம் என்று இன்றைய ஆட்சியாளர்கள் கருதினால் விரைவில் ஏமாந்து போவார்கள்!

அராஜகங்கள் உருவாக ஒரு அரசாங்கமே பாதை அமைப்பது கூடாது! சட்டம் ஒழுங்கு, அமைதியைக் காத்திடக் கடமைப்பட்டுள்ள அரசு, அவற்றைத் தன் கட்சி ஆட்களைக் கொண்டே சல்லடைக் கண்களாகத் துளைப்பதை யாரும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

அன்புள்ள,

மு. க.

(29-10-1978)

615. எச்சரிக்கை கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

கழகச் செயற்குழுவில் எடுத்த முடிவுக்கேற்ப, வரும் 11, 12 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் எச்சரிக்கைக் கூட்டங்கள் தமிழக முழுவதும் நடைபெற இருக்கின்றன. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், கடந்த 4-ஆம் நாள் நடைபெற்றபோது 11, 12 ஆகிய நாட்களில் அறிவிக்கப்பட்டுள்ள கூட்டங்களை கூட்டுக் குழுவில் இருக்கின்ற எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிற கூட்டங்களாக நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அது குறித்து நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையினைப் படித்திருப்பாய்.

இன்று தமிழகத்தில் நடைபெறுகிற அரசின் எதேச் சாதிகாரப் பாசிசப் போக்கையும், தொழிலாளர் நலத்திற்கு எதிரான கொள்கையையும், விவசாயிகள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், பாட்டாளிகள் - யாராயினும் அவர்களது கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி அடக்கி ஒடுக்கிட முனையும் வன்முறை வெறியாட்டத்தையும், நாளுக்கு நாள் சட்டம், ஒழுங்கு, அமைதி மிகச் சீர்கேடான நிலைமைக்குப் போகிற அளவுக்கு ஆளுங்கட்சியின் குண்டர்களையும், அவர்களுக்குத் துணையாகக் காவல் துறையினரையும் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அழித்தொழிக்கச் சட்டத்தைத் தங்கள் இஷ்டம்போல் பிரயோகித்து ஆயிரக்கணக்கானவர்கள் மீது பொய் வழக்குகளை ஜோடிப்பதையே வாடிக்கையாகக் கொண்டுவிட்ட நெறியற்ற செயலையும், முதலாளிகளின் கைப்பாவைகளாக அமைச்சர்கள் தங்களை ஆக்கிக்கொண்டு தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதற்கு எல்லா வகையான தீயவழிகளிலும் முயற்சிகள்

மேற்கொள்வதையும் கண்டித்து எச்சரிக்கை செய்வதற்கே இந்தக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

கடந்த கால ஆட்சிகளின் போது எந்தவொரு பெருங்கிளர்ச்சி உருவாகி அதன் பிறகு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றாலும், அதனையொட்டி வழக்குகளைத் திரும்பப் பெறுவதும், கைது செய்யப்பட்டவர்களை அரசாங்கமே விடுதலை செய்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது.

பந்த் போன்ற போராட்டங்களின் போது முன்கூட்டியே கைது செய்யப்படுகிறவர்கள், அந்தப் போராட்ட நாள் முடிந்த மறுநாளே விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்தான் கடந்த காலங்களில் நடைபெற்றிருக்கின்றன.

இன்றுள்ள அரசு எதற்கெடுத்தாலும் வன்முறையை அனுமதிக்கலாமா? என்று உத்தமர் காந்தியடிகளின் பாணியில் மிக உருக்கமாகக் கேட்கிறது. அதைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும் போது படிப்பவர்களுக்குக்கூட ஆமாம். நியாயந்தானே அரசாங்கம் சொல்வது என்று நினைக்கத்தான் தோன்றும்.

ஆனால் உண்மை என்ன? திருவிழாக் கூட்டத்தில் கழுத்து மணி அறுத்தவன், தான் தப்பித்துக் கொள்வதற்காக அதோ ஓடுகிறான் திருடன்! விடாதே! பிடி! என்று மற்றவர்களுடன் சேர்ந்து ஓடி ஏமாற்றுவதைப் போலத்தான், அரசாங்கமே தன் கட்சி ஆட்களைத் தூண்டிவிட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்து வெண்படை என்ற பெயராலும் - பயணிகள் பாதுகாப்பு சங்கம் என்ற பெயராலும் அங்கீகார அடையாள அட்டைகளை வழங்கி தொழிலாளர்களையும், எதிர்க்கட்சிக்காரர்களையும் பயங்கர கொடுமைகளுக்கு ஆளாக்கி வருகிற நிகழ்ச்சிகளை, நடத்தி வருகின்றது.

பந்த் நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த எதிர்க்கட்சிகளைப் பற்றி முதலமைச்சர் வானொலியில் எவ்வளவு அவதூறான வகையில் விமர்சித்தார் என்பதை அனைவரும் அறிவர்.

பந்த் தேவையில்லை என்று விளக்கமளிக்க முன்வந்த ஒரு முதலமைச்சரின் அணுகுமுறை இப்படியா அமைவது என்றுதான்

எல்லோரும் வியப்படைந்தார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டுக் குழுவில் இருந்த கட்சியினர் மட்டுமல்ல, அந்தக் குழுவில் அங்கம் வகிக்காத கட்சிகளில் இருப்பவர்களும், ஏன் ஆளுங்கட்சியிலே இருக்கும் சிந்திக்கத் தெரிந்த அரசியல்வாதிகளும் கூட முதலமைச்சரின் வானொலிப் பேச்சை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

அவதூறு!

அறைகூவல்!

வன்முறைக்கு தன்கட்சியினரைத் தூண்டுதல்!

இத்தனையும் அடங்கியிருந்தது அந்த வானொலிப் பேச்சில்!

கறுப்புக் கொடி நிகழ்ச்சியா? கொலை முயற்சி வழக்குகள் நூற்றுக்கணக்கானவர்கள் மீது!

கடையடைப்பா! கொலை, சதி, தூண்டுதல், தண்டவாளத்தைப் பெயர்க்கத் திட்டம் - இப்படியெல்லாம் பயங்கர சட்டப் பிரிவுகளைக் கொண்டு வழக்குகள்!

போதாக்குறைக்கு, மினி மிசாச் சட்டம்போல மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக்கி அவசரக்கோல சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் அல்லவா? அதை வைத்துக்கொண்டு யாரை வேண்டுமானாலும் - குடிப்பழக்கமில்லாதவர்களைக் கூட அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தால் பழி தீர்க்கவும் மிரட்டவும் வழி வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

விருதுநகரில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் செயலாளர் வீட்டில் இந்தச் சட்டத்தை எந்த அளவுக்குத் துஷ்பிரயோகம் செய்து காவல் துறையினர் கொடுமை புரிந்தார்கள் என்பதை அந்தக் கட்சியின் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களே ஆவடிப் பொதுக்கூட்டத்தில் மிக உருக்கமாக வெளியிட்டார். அந்தச் சட்டம் எப்படி இருக்கும் என்று முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது!

பிறகு எந்த வடிவத்தில் வெளிவந்தது? மாமூல் பல மடங்கு உயர்ந்திருக்கிறதே தவிர, மதுவிலக்கு வெற்றி பெறுகிறதா? ஏதோ எதிர்க்கட்சிக்காரர்களைத் திட்டமிட்டுத் தீர்த்துக் கட்ட கொண்டு

வரப்பட்ட சட்டமாகத்தான் இருக்கிறதே யொழிய செயலில் எந்தப் பயனும் விளைந்ததாகத் தெரியவில்லை.

எந்தக் குற்றமும் செய்யாதவர்களை மிசா என்ற பெயரில் இல்லாமல், வேறு பெயர்களில் சட்டங்களாக வெளிவந்து எதிர்க்கட்சிகளையும், தொழிலாளர்களையும் அடக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றையெல்லாம் எடுத்து விளக்கிடத்தான் எச்சரிக்கைக் கூட்டங்கள்!

அந்தக் கூட்டங்கள் கட்டுப்பாடாகவும், கண்ணியமாகவும், எழுச்சியோடும் நடைபெற உடன்பிறப்பே, அனைத்துக் கட்சியினருடனும் இணைந்து நின்று உழைத்திட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(10-11-1978)

616. இவராவது விளக்குவாரா?

உடன்பிறப்பே,

பட்டினக்கரை முதல் பட்டிக்காடுகள் வரையில் மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் அனைத்துக்கட்சியினர் கலந்து கொண்ட எச்சரிக்கைப் பொதுக்கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றிருக்கின்றன. அந்தக் கூட்டங்கள் வெற்றிகரமாக அமைந்தன என்பதற்குச் சான்று தேடி வேறெங்கும் நாம் அலைந்திடத் தேவையில்லை. ஆளுங்கட்சியின் ஏடுகள், ஆளுங்கட்சியை ஆதரிக்கும் ஏடுகள், அமைச்சர்கள், அனைத்துக்கும் மேலாக அந்தக் கட்சியின் ஆக்டிங் பொதுச்செயலாளர் நாவலர் ஆகியோர் நம்மீதும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும் சீறி விழுந்து சவால்களை விடுத்திருப்பதிலிருந்தே அவர்களது ஆத்திரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நாம் நடத்திய எச்சரிக்கைக் கூட்டங்களின் விளைவுதான் அது என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது! நாவலர், என்னை மிகக் கடுமையாகவும் தரக்குறைவாகச் சில இடங்களிலும் விமர்சிக்கிறார் என்பதற்காக நான் வருத்தப்படுவது கிடையாது. நண்பர் எம்.ஜி.ஆருக்கும் தி.மு.கழகத்திற்கும் இருந்த உறவு அறுந்துவிட்ட பிறகு - எம்.ஜி.ஆர். புதிய கட்சி ஆரம்பித்த பிறகு - அவரைக் குறித்து நாவலர் அவர்கள் மேடைகளில் செய்த விமர்சனங்களை விட, தரக்குறைவாக எம்.ஜி.ஆரைத் தாக்கியதைவிட, கூட்டத்திற்குக் கூட்டம் எம்.ஜி.ஆர். அவர்களையும் அவருடன் நடித்த கதாநாயகிகளின் படங்களையும் விரித்துக்காட்டி கேலியும் கிண்டலும் செய்தாரே; அதைவிட இப்போது நாவலர் ஒன்றும் என்னை அதிகமாகத் தாக்கி விட்டதாக நான் கருதவில்லை. நாவலருடைய மேடைப் பேச்சின் இலக்கணமே நீண்ட காலமாக அப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. அண்ணா காலத்திலேயே நாவலர் பொதுச்செயலாளராக இருந்தபோது கூட, காங்கிரஸ்

அமைச்சர்களை - காமன், கக்கன், பக்தன், வெங்கன், சுப்பன், ராமன், என்றுதான் மேடைகளில் வர்ணிப்பார்! எனவே அவர் என்னையோ, கழகத்தினரையோ இப்போது தாக்கியும், தரக்குறைவாகவும் பேசுகிறார் என்பதிலே யாருக்கும் ஆச்சரியம் இருக்கத் தேவையில்லை!

சினிமா மோகத்தினால் எம்.ஜி.ஆர். கட்சிக்கு வெற்றி கிடைத்தது என்று கூறுவது தவறு என்பதற்குப் பல ஆதாரங்களை அள்ளி வீசுகிறார் இப்போது! எந்த ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசுவதானாலும் அதற்கான புள்ளி விவரங்களை, ஆதாரங்களை சேகரித்து அவற்றைத் தொகுத்து விரிவாகவும், விளக்கமாகவும் பேசுவதில் அவர் வல்லவர். அந்த நாவன்மைதானே அவருக்கு நாவலர் என்ற பட்டத்திற்கே காரணமாக அமைந்துள்ளது. இன்று ராஜ்கபூர் மராட்டிய மாநில முதலமைச்சராக ஆனாரா? நடிகை ஹேமமாலினி இந்தியப் பிரதமராக முடியுமா? எங்கள் புரட்சித்தலைவர் அல்லவா தமிழகத்தின் முதல்வராக ஆகியிருக்கிறார்? என்றெல்லாம் ஆவேசக்குரல் எழுப்பி நாவலர் கேட்கிறார் அல்லவா? இது, இன்றைய தினம் அவர் இருக்கிற இடத்திற்கு அவர் தயாரித்துக் கொண்டுள்ள வாதம்! நடிகர்கள் எல்லாம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதென்றால் - எம்.ஜி.ஆர். முதலமைச்சராவதென்றால் ராஜ்கபூர் ஜனாதிபதியாவதா? ஹேமமாலினி பிரதமராகி விடுவதா? இந்த வாதம் இதே நாவலர் 1972 முதல் 1976 வரையில் மேடைகளில் எடுத்துவைத்த வாதம்! நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து மக்கள் தி.மு.க. (ம.தி.மு.க.) என்று புதிய கட்சி தொடங்கினாரே, அந்தத் தொடக்க நாளன்று கூட நிருபர்கள் பேட்டியில் எம்.ஜி.ஆர். கட்சியின் வெற்றிக்கு சினிமாக் கவர்ச்சிதான் காரணம் என்று நாவலர் அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டதை எல்லா ஏடுகளும் பிரசுரித்திருந்தன.

கொடியிலே தலைவர் ஒருவருடைய படத்தைப் போட்டுப் பறக்க விடுகிற கிறுக்கனை, வேறு எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

என்று குதிகாலை உயர்த்தி நின்று, இரண்டு புஜங்களையும் ஏற்றி - ஏற்றிய புஜங்களை இரு விலாப்புறங்கள் வரையிலே லாவகமாக அசைத்து - தொனியிலே இராகத்தைக் குழைத்து - உயர்ந்த ஸ்தானியில் சென்று கீழ் ஸ்தாயி வரையிலே -

வார்த்தைகளை நீட்டி முழக்கிய நாவலருடைய நவரசப் பேச்சை - அதிலும் குறிப்பாக எம்.ஜி.ஆர். அவர்களை - அவரது வீட்டில் உள்ளவர்களையும் இழுத்து - மிக விளக்கமாகச் சொற்பெருக்கு நிகழ்த்திய நாவலருடைய தன்மையை நன்கு உணர்ந்திருக்கிற நமக்கு, இன்று அவர் நம்மைப் பற்றி இழிவாகப் பேசுவது வியப்பினைத் தருகிற செய்தியல்ல!

மதுவிலக்கு அவசரச் சட்டத்தைக் கண்டு குடிகாரர்களும், சாராயங் காய்ச்சுபவர்களும் அல்லவா பயப்பட வேண்டும்? கருணாநிதி ஏன் பயப்படுகிறார் என்று நாவலர் கேட்டிருக்கிறார். மதுவிலக்கு அவசரச் சட்டத்தின் விளைவுகள் எதிர்க்கட்சிக்காரர்களை பழிவாங்குவதாகவே இருக்குமென்று நான் மட்டுமல்ல, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் பேசுகிறார்கள்! மார்க்சிஸ்டு தலைவர்கள் பேசுகிறார்கள்! அப்படி எதிர்க்கட்சி பழிவாங்கப்பட்டதற்கான ஆதாரம் இதோ இருக்கிறது என்று நண்பர் குமரி அனந்தன் எம்.பி. ஆவடிக் கூட்டத்தில் குறிப்பிட்டார். விருதுநகரில் நீண்டகால சுதந்திரப் போராட்டக் குடும்பத்தைச் சேர்ந்தவரும் - காந்தி காமராஜ் காங்கிரஸ் செயலாளருமான கரிக்கோல்ராஜ் அவர்கள் அக்டோபர் 23 கடையடைப்பில் கலந்து கொண்டார் என்பதற்காக அவர் குடும்பத்தையே சாராய வழக்கில் சம்பந்தப்படுத்தி கைது செய்திருக்கிறார்களாம்!

இந்த மதுவிலக்கு அவசரச் சட்டம் வந்தவுடனே அ.தி.மு.க. பொதுச்செயலாளர் முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் சில விளக்கங்கள் கேட்டு அறிக்கை விடுத்தேன். அந்தப் பொதுச்செயலாளர் அதற்கு விடையளிக்கா விட்டாலும் இந்தப் பொதுச்செயலாளராவது விடையளிப்பார் என்று நம்புகிறேன்.

நான் எழுப்பிய வினாக்கள் வருமாறு :

(1) மத்திய அமைச்சரையும் வைத்துக் கொண்டு வியாசர்பாடியில் நடைபெற்ற விழா ஒன்றில் முதலமைச்சர் பேசியபோது, அமைச்சர்கள் குடித்தால் ஒரு வருடத் தண்டனை! இரண்டாவது முறையும் அதே குற்றத்தைச் செய்தால் மூன்று வருட தண்டனை என்று வெளிப்படையாக அறிவித்தாரே! அந்தச்

சிறப்பு அம்சம் அவசரச் சட்டத்தில் இடம் பெறாத காரணமென்ன?

(2) அரசாங்க அதிகாரிகள் குடித்தால் முதல் குற்றத்துக்கு ஒரு வருடத் தண்டனை அல்லது ஆறு மாத தண்டனை. இரண்டாவது முறை அதே குற்றம் செய்தால் அவர்களுக்கு மூன்றாண்டுத் தண்டனை என்று முதல்வர் வியாசர்பாடி கூட்டத்தில் அறிவித்தாரே! ஆனால் சட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் என்பதற்கான வியாக்கியானம் மதுவிலக்குச் சட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டுமே என்றிருக்கிறதே என்ன காரணம்?

(3) முதல் தடவை குற்றத்துக்கு ஒருவித தண்டனை - மீண்டும் அதே குற்றத்தைச் செய்தால் மேலும் கடுமையான தண்டனை என்றால், முதல் குற்றத்துக்குத் தண்டனையடைந்து அதை அனுபவித்துவிட்டு வெளியே வருகிற அதே அதிகாரியை டிஸ்மிஸ் செய்யாமல் வேலையிலேயே நீடிக்கச் செய்துவிட்டு, இரண்டாவது முறை குடித்தால் மறுபடியும் தண்டனை வழங்கப்படுமா?

(4) இவ்வளவு முக்கியமானதும் பிரச்சினைக்குரியதுமான சட்டத்தைச் சட்டசபை நடந்த போதே விவாதித்துக் கொண்டு வராமல், சட்டசபை முடியும் வரையில் காத்திருந்து அவசரச் சட்டமாக அறிவிக்கக் காரணமென்ன? அடுத்துக் கூடுகிற சட்டசபையிலாவது விவாதித்துத் தேவையானால் பொறுக்குக் குழுவுக்கு விட்டு, அனைவரின் ஆலோசனைகளையும் பெற்று அதன்பிறகாவது மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகிறச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாமல்லவா?

(5) ஒரு வீட்டில் சோதனையிட்டு அங்குள்ள பொருட்களை கைப்பற்ற மதுவிலக்குப் போலீசார், சாட்சிகளை அழைத்துப் போகத் தேவையில்லை என்பது நியாயமான காரியமா? வேண்டாதவர்களைப் பழிவாங்கவும், களங்கப்படுத்தவும் இந்த முறை பயன்படாதா?

மதுவிலக்கு அவசரச் சட்டம் பற்றி இப்படிப்பட்ட விளக்கங்களைக் கோருகிறோமேயன்றி - மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்பதில் நமக்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது! இதைக்கூடப் புரிந்து கொள்ளாமல் மதுவிலக்கையே எதிர்க்கிறோம் என்கிற

தோரணையில் நாவலர் கேலி பேசியிருக்கிறார். கேலி கிடக்கட்டும்! நிரந்தரப் பொதுச்செயலாளரை நோக்கி எழுப்பிய கேள்விகளுக்கு, தற்காலிகப் பொதுச்செயலாளராவது விளக்கம் அளிப்பாரா? அல்லது திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டு - எச்சரிக்கைக் கூட்டங்களால் ஏற்பட்ட கோபத்தைத் தணித்துக் கொள்ள மேலும் கொஞ்சம் அதிகமாகக் கொதித்தெழுந்து பேசுவாரா?

பழைய அன்புடனும், நட்புறவுடனும் கேட்கிறேன். கோபத்தை விடுத்து விளக்கம் தருவார் என எதிர்பார்த்து!

அன்புள்ள,

மு. க.

(14-11-1978)

617. பாடமா? படுகொலையா?

உடன்பிறப்பே,

புதுவை மாநிலத்தில் இரண்டு தடவை எம்.ஜி.ஆர். கட்சியின் அமைச்சரவை அமைந்தது! முதல் தடவை நாள்கணக்கில் அதன் ஆட்சி நடைபெற்று ஓரிரு வாரங்களில் கவிழ்ந்து போயிற்று! அடுத்த தடவை அமைக்கப்பட்ட ஆட்சி மாதக் கணக்கில் நடைபெற்று இப்போது முடிவடைந்து விட்டது! ஆட்சி அமைந்த நாள் முதல் அவர்களுக்குள்ளாகவே ஏற்பட்ட குத்துவெட்டு குழப்பம் - அணி அமைத்தல் - இரண்டு பேருக்கு மேல் அமைச்சர்களை நியமிக்க முடியாத அளவுக்குப் பதவிப் போட்டி - கட்சித் தாவல்கள் - இருந்த இரண்டு அமைச்சர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் - சில மாதங்களிலேயே ஆட்சியினர் நடத்தியுள்ள ஊழல் - எல்லாக் காரணங்களும் சேர்ந்து, அமைச்சரவை தனது பெரும்பான்மையையும் இழந்து இறுதியாக வேறு வழியின்றிக் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

புதுவை சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு (சில நாட்கள் குறைவாக) அங்கு ஒரு நிலையான ஆட்சியைத் தந்த பெருமை தி.மு.கழகத்திற்கு மட்டுமே உண்டு என்பதை அனைவரும் அறிவர். ஐந்தாண்டுக் காலம் முடிவுறும் சமயத்தில் ராமசாமி, ராமச்சந்திரன் ஆகிய இருவரும் அமைச்சரவையில் இருந்து விலகி எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்தனர். உடனே புதுவை முதல்வர் பரூக் அவர்களை அழைத்து, பதவி விலகுமாறு தி.மு.கழகத் தலைமை அறிவித்தது. பெரும்பான்மை குறைந்த பிறகும் விடாப்பிடியாக அட்டைபோல ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. பரூக், கழகத் தலைமையின் அறிவுரையை ஏற்று உடனடியாகப் பதவி விலகினார்.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சியாளர்களோ, புதுவையில் அரசு நடத்திய சில மாத காலத்தையும் தங்களுக்குள் போராட்டம் நடத்துகிற அநாகரிக அரசியலுக்கே பயன்படுத்திக் கொண்டனர்.

முதலமைச்சர் ராமசாமி தன்னுடைய கட்சி எம்.எல்.ஏ. ஒருவருக்காக நீதித் துறையிலே தலையிட்டார் என்று ஏன் உங்கள் மீது வழக்குத் தொடரக்கூடாது? என்பதாகப் புதுவை கலெக்டர் ரங்கதுரை என்பவர் முதலமைச்சருக்கு நோட்டீஸ் அனுப்பிய கதை கூட சில மாதங்களுக்கு முன் நாடு சிரித்த ஒன்றாக இருந்தது!

அதைத் தொடர்ந்து ராதாபாய் விவகாரம்! அதன் தொடர்பாக புதுவையில் ஆக்டிவ் கவர்னர் பிறப்பித்த விசாரணை உத்தரவு! அதை எதிர்த்து புதுவை முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் விடுத்த அறிக்கைகள்! செய்திகள்!

தி.மு.கழக எம்.எல்.ஏ. ஒருவரைப் பலாத்காரமாக அடைத்து வைத்து அதன் காரணமாகப் புதுவை முதல்வர் மீது புதுவைப் போலீஸ் அதிகாரி வழக்குப் பதிவு செய்த நிகழ்ச்சி!

இத்தனைக்கும் அந்தக் கட்சியின் தலைமை வாய்பேசாமல், புதுவை ஆட்சியினர் நடத்திய ஜனநாயக விரோதமான திருவிளையாடல்கள் அனைத்துக்கும் மறைமுகமாக ஆதரவு கொடுத்து வந்தது.

இப்போது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது!

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் - வாஷிங்டனில் - தமிழர்கள் அளித்த வரவேற்பில்கூட, இந்திரா காந்தியின் நெருக்கடி காலப் பிரகடனத்தைப் பாராட்டிவிட்டு - அங்கேயும் மறந்து போகாமல் -

தமிழ்நாட்டில் மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்ததன் மூலம் தமிழகத்திற்குப் பெரிய சேவை செய்தவர் இந்திரா காந்தி.

என்று மிகுந்த அரசியல் பண்பாட்டுடன் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

அவருடைய வாஷிங்டன் பேச்சு இங்குள்ள ஏடுகளில் வருவதற்குள்ளாகவே அவரது மக்கள் விரோதமற்ற (?) அ.தி.மு.க. ஆட்சி, புதுவையிலே டிஸ்மிஸ் செய்யப்பட்ட செய்தி வந்து விட்டது!

தி.மு.கழக ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று அன்றைய தினம் மத்திய அரசுக்கு மனுக் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.! எனவே கழக ஆட்சி கலைக்கப்பட்டு, இரண்டு மூன்று ஆண்டுகளாகியும் கூட இப்போதும், அமெரிக்காவுக்குப் போய் அதற்காக இந்திராவைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார். எமர்ஜென்சி (நெருக்கடி கால சட்டம்)க்கும், ஒரு மாநில அரசை மத்திய அரசு கலைப்பதற்கும் தொடர்பு இல்லை என்பதையும், மத்திய அரசு நினைத்தால் எந்த மாநில அரசையும் ஏதாவது ஒரு காரணம் கூறி கலைக்கக்கூடிய அதிகாரம் அரசியல் சட்டத்தில் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிற ஒருவர் புரிந்து கொள்ளாமல் வாஷிங்டனிலே போய் பேசியிருப்பது கேலிக்குரியதாகும். எமர்ஜென்சியின் நன்மைகளில் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ததும் ஒன்றாம்! அய்யோ பாவம் அரசியல்!

புதுவை ஆட்சி கலைக்கப்பட்டதற்காக வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களிடையே பிளவு இல்லையென்றால் இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுடன் கூடிய அ.தி.மு.க. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து புதுவையில் உறுதியான நிலையான ஆட்சியை அமைக்கிற அளவுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நிலை பாடமாக அமையும் என்பது என் கருத்து என்பதாக அ.தி.மு.க. அவைத் தலைவர் பொறுப்பையும் பொதுச்செயலாளர் (தற்காலிகம்) பொறுப்பையும் ஏற்றுள்ளவர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

ஆனால் ஒரு அமைச்சர், சிதம்பரத்தில் பேசிய கூட்டத்தில் ஜனதா கட்சி, பாண்டிச்சேரியில் ஜனநாயகப் படுகொலை செய்துவிட்டது. சிக்மகளூர் தேர்தல்தான் இதற்குக் காரணம் என்று நாடு முழுவதுமுள்ள மக்கள் கூறுகிறார்கள்

என்று மத்திய ஜனதா அரசை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

அ.தி.மு.க.வுக்கு ஒரு பாடம் என்று அறிக்கை விடுக்கிறார் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர். ஜனநாயகப் படுகொலை என்கிறார் அந்தக் கட்சியின் அமைச்சர்.

மாநிலங்களில் உள்ள அரசுகளைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்படும் அரசியல் சட்டப் பிரிவையே நீக்க வேண்டுமென்பது நமது கழகக் கொள்கை. ஏனெனில், அந்தப் பிரிவு ஜனநாயகத்துக்கு விரோதமானது. அது கூட்டாட்சிக் கொள்கையைக் குழிதோண்டிப் புதைப்பது. நமது துணைப் பொதுச்செயலாளர் ஆசைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல!

ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவர்னர், ஜனாதிபதி துணைகொண்டு டிஸ்மிஸ் செய்ய அதிகாரம் தரும் 356-வது பிரிவை அடியோடு நீக்கவேண்டுமென்று கடந்த ராஜ்ய சபைக் கூட்டத்தில் தி.மு.க. சார்பில் முரசொலி மாறன் எம்.பி. கொண்டு வந்த திருத்தத்தை எதிர்த்து எம்.ஜி.ஆர். கட்சியினர் ஓட்டுப் போட்டனர். அதற்கு சரியான பரிசு, புதுவையில் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

மாநிலங்களவையில் இந்தத் திருத்தம் தி.மு.கழகம், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, மார்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, பார்வார்டு பிளாக் கட்சி ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. உறுப்பினர்கள் இதனை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து வாக்களித்தனர். இப்போது அ.தி.மு.க. அமைச்சர் கூறுகிறார் ஜனநாயகப் படுகொலையென்று! அந்தப் படுகொலைக்கான கத்தி தீட்டிக்கொடுப்பது போல ராஜ்ய சபாவில் அவர்களது கட்சியினர் நடந்துகொண்டார்களே! அதற்கென்ன விளக்கமளிக்கப் போகிறார்கள்?

பாடமென்கிறார் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர்! படுகொலையென்கிறார் அதே கட்சியின் அமைச்சர்!

மாநில அரசுகளைக் கலைக்கலாம் என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு, புதுவை விஷயத்தில் அந்த அதிகாரத்தை உடனடியாகச் செயல்படுத்திவிட்டதாகக் குற்றம் சாட்ட முடியாது!

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளதைப் போல, ஆட்சி கலைக்கப்பட்டது வருந்தத்தக்கது என்றாலும், ஆட்சி கலைக்கப்பட்டதற்குக் காரணம் அ.தி.மு.க. உறுப்பினர்களிடையே ஒற்றுமையில்லாமல் அந்த ஆட்சி பெரும்பான்மையை இழந்து,

தானே தன்னைக் கலைத்துக் கொண்டது என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

வாஷிங்டனில் உள்ள தமிழர்களிடம் உரை நிகழ்த்திய எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது நியாயம் என்று வாதிடுகிறார். அதுவே ஜனநாயகம் என்று கூறுகிறார். தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களை விடக் குறைவான அதிகாரம் பெற்ற மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கிற - யூனியன் பிரதேசமான புதுவையில் ஆட்சி கலைக்கப்பட்டது - அதுவும் அவர்களுக்குள் அமளி நடத்தி கலைத்துக் கொண்டது - ஜனநாயகப் படுகொலை யென்கிறார் சிதம்பரத்தில் ஒரு அமைச்சர்!

இந்திராவின் நெருக்கடி நிலை பிரகடனத்தை எதிர்த்த காரணத்திற்காகத் தமிழ்நாட்டில் கழக ஆட்சியைக் கலைத்தார்கள் என்ற உண்மை வாஷிங்டனில் இருக்கிற தமிழர்களுக்குத் தெரியாத உண்மையல்ல!

முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலனார் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பதைப் போல, பாண்டிச்சேரி புகைச்சலைப் பற்றி எம்.ஜி.ஆர். அக்கறை காட்டாமலே இருந்தார். பெரும்பான்மை இழந்த அமைச்சரவை உடனே பதவி விலக வேண்டுமென்ற அரசியல் நாகரிகத்தை புதுவை அ.தி.மு.க.வுக்குப் போதிக்க எம்.ஜி.ஆர். தயாராக இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தைப் பொருட்களைப் போல வாரந்தோறும் ஏலம் போயினர். ஒவ்வொரு முறையும் சட்டசபை கூடுவதென்றால் மார்க்கெட் நிலவரம் மிக வேகமாக ஏறிக் கொண்டேயிருந்தது.

இரண்டு தடவை எம்.ஜி.ஆர். கட்சிக்கு புதுவை மக்கள் அளித்த வாக்கு விழலுக்கிறைத்த நீராயிற்று!

இனியும் ஒருமுறை புதுவை மக்கள் ஏமாறத் தயாராயிருக்கிறார்களா?

அன்புள்ள,

மு. க.

(15-11-1978)

618. வண்டிக்காரன் மகன்!

உடன்பிறப்பே,

சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு பராசக்தி திரைப்படம் வெளிவந்தபோது திரைக்கதை வசனம் எழுதிய என்னையும், அந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்த நடிகர் திலகம் சிவாஜியையும், இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சுவையும், தயாரிப்பாளர் நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்களையும் எதிர்க்கட்சியினர் மேடை போட்டுத் தாக்கிப் பேசினார்கள். இப்போது நமது கழகத்தில் உள்ள உடன்பிறப்புகள் பல பேர் இளங்குருத்துக்களாக இருந்திருப்பர்! சிலர் தாயின் மணி வயிற்றில் இருந்திருப்பர்! சிலர்தான் அப்போது வாலிபர்களாக நடுத்தர வயதினராக இருந்து பராசக்தி படத்திற்கு எதிராகக் கிளம்பிய ஆவேசக் குரல்களைக் கேட்டிருக்க முடியும். ஏடுகளில் படித்திருக்க முடியும். அன்று பராசக்தி படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போர்க்கொடி உயர்த்திய அணிக்குத் தலைவராக இருந்து, வீதி வீதியாக கண்டனக் கூட்டங்களை நடத்திய என் அருமை நண்பர் ஒருவர், அதன் பிறகு சிவாஜி ரசிகர் மன்றத் தலைவராகவே நீண்ட காலம் பொறுப்பு வகித்தார் என்பதும் மறந்துவிடக் கூடியதல்ல!

பராசக்தி பட விமர்சனம் என்ற பெயரால் அன்றைய தினமணி கதிர் ஏழெட்டுப் பக்கங்கள் தாக்குதல் கணையைத் தொடுத்திருந்தது. தகர டப்பாவில் கூழாங் கற்களைப் போட்டுக் குலுக்குவதைப் போல கருணாநிதியின் வசனங்கள் ஒலிக்கின்றன என்று தினமணி கதிர் எழுதியது. அதுமட்டுமல்ல! கதிரின் அட்டைப் படத்திலேயே ஒரு பெரிய கேலிச் சித்திரம். அதில் ஒரு பெண் அரை நிர்வாணக் கோலமாக நிற்பாள். படத்தின் பெயர் பரப்பிரம்மம், கதை வசவு தயாநிதி என்று அந்தச் சித்திரத்தின் மூலமும் என்னைத் தாக்கியிருந்தார்கள்.

அரசியல் உலகத்தில் மட்டுமல்ல! கலை உலகத்திலும் இப்படியொரு எதிர்ப்பு - அல்லது இருட்டடிப்பு - என்ற நிலை

அறிஞர் அண்ணா அவர்களுக்கும் - அவரது தம்பிகளான நமக்கும் தொடர்ந்து இருந்தே வந்திருக்கிறது.

நம்மவரில் வீடணர்கள் யாராவது இருந்தால் அவர்களைத் தூக்கி விடுவதும் - தன்மானத் தமிழர்களைத் தரை மட்டமாக்க நினைப்பதும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் குறிப்பிட்ட சிலரது நீண்டகாலத்துச் செயலாக இருந்து வருகிறது. யார் தங்களுக்குப் பயன்படுவார்களோ - யாரை வைத்துத் தங்களுடைய ஏமாற்று வேலைகளைத் தொடர்ந்து நடத்தி ஆதிக்கம் செலுத்த முடியுமோ - அவர்களைக் கோபுரத்தில் உட்கார வைத்துக் கொண்டாடித் தங்கள் இலட்சியத்தை ஈடேற்றிக் கொள்கிற ஒரு கூட்டம் தமிழ்நாட்டில் அவ்வப்போது - இடைவெளி கிடைக்கிற நேரத்தில் எல்லாம் தலைதூக்கிக் கொண்டுதானிருக்கிறது.

இந்த நிலைமைகளையும், கடந்த கால நிகழ்ச்சிகளையும் நான் விளக்குவதற்குக் காரணம், நமது கொள்கைகளையும் - கோட்பாடுகளையும் - ஏன்! நமது கழகத்தின் வளர்ச்சியையும் எல்லா முனைகளிலும் எதிர்க்க வேண்டுமென்கிறவர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை வண்டிக்காரன் மகன் படத்தை அவர்கள் விமர்சனம் செய்திருப்பதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட சாரார் மீது பகை கூடாது என்றும், குறிப்பிட்ட கொள்கைகளின் மீதுதான் கருத்து வேறுபாடுகள் காட்டப்பட வேண்டும் - விவாதிக்கப்பட வேண்டும் - ஒளி கிடைக்க வேண்டும் - என்றும் அண்ணா உருவாக்கிய தி.மு.கழகம், தன் நிலையைப் பலமுறை விளக்கிய பிறகும் - எரிச்சல் கொண்டோர் ஏனோ நம்மீது கசப்பைக் கக்கி வருகின்றனர்!

உடன்பிறப்பே! அதற்குச் சான்றுதான் சில ஏடுகளில் வெளிவந்துள்ள வண்டிக்காரன் மகன் விமர்சனம். தின மலர் என்று ஒரு பத்திரிகை! அது தன்னுடைய மேதாவிலாசத்தை விமர்சனத்தின் மூலம் காட்டிக் கொண்டிருக்கிறது!

வண்டிக்காரன் மகன் கதை அண்ணாத்துரை நாற்பது வருடங்களுக்கு முன்பு எழுதியது. என்று அந்த ஏடு கூறிவிட்டு - படத்தைப் பற்றி முடிவாக, சடக்! சடக்! லொடக்! லொடக்! என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த ஒலிக்குறிப்புக்கு என்ன அர்த்தமோ, அதை அனுபவித்து எழுதிய விமர்சகருக்கே வெளிச்சம்! அண்ணா, வண்டிக்காரன் மகன் கதையை நாற்பது ஆண்டுகளுக்குமுன் எழுதினாராம்! 1966-ஆம் ஆண்டு காஞ்சி இதழின் ஆண்டு

மலரில் பனிரெண்டு பக்கங்களில் எழுதப்பட்ட சிறுகதைதான் வண்டிக்காரன் மகன்! அதாவது பனிரெண்டு ஆண்டுக்கு முன் எழுதியது!

கேட்டுக் கேட்டுப் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன கதை என்கிறது தினமணி ஏடு!

ஜமீன்தாரின் வம்சமே அழிந்து போயிருக்கும் இப்போது போய் இந்த சப்ஜக்டைப் படமாக்கியிருக்கிறார்களே? ஏனாம் என்று கேட்கிற தினமணி கதிர், ஜமீன் வம்சம் இருந்த காலத்தில் அறிஞர் அண்ணா எழுதிய கதை இது - என்று திட்டவட்டமாகக் கூறுகிறது!

ஜமீன்தாரர் முறை 1966-ஆம் ஆண்டு இருந்ததாக தினமணி கதிர் விமர்சகருக்கு யார் சொன்னார்களோ தெரியவில்லை! இவர்களையெல்லாம் சரித்திர ஆசிரியர்களாக நியமித்தால் சரித்திரமே அழிந்து விடும்.

ஜமீன்தார் வம்சம் இல்லாத காலத்தில் ஜமீன்தார் கதை யொன்றைப் படமாக ஆக்கக் கூடாதா? மேல் நாடுகளில் இப்போதும் கவ் பாய் (COW BOY) படங்கள் எடுக்கிறார்களே! நமது நாட்டிலும் அக்பர் காலத்துக் கதைகளை, சோழர் காலத்துக் கதைகளை, பாண்டியர் காலத்துக் கதைகளை, வெள்ளையர் ஆண்ட காலத்துக் கட்டபொம்மன் போன்ற வீரர்களின் கதைகளைப் படமாக எடுக்கவில்லையா? இராமாயணத்தை, வள்ளித் திருமணத்தை, கந்தலீலாக்களைப் படமாக எடுத்தால் அவை பழைய கதைகள் இல்லை! வண்டிக்காரன் மகன் படத்தில் ஜமீன்தார் வருவதால் அது பழைய கதை! அது பற்றிக் கிண்டல்! கேலி! ஏகடியம்! இவர்களுடைய விமர்சனங்களை ஆத்திரத்தோடல்ல, அவர்களை யார் என்று அடையாளம் காட்டுவதற்காகத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். பராசக்தியை, பரப்பிரம்மம் என்று கதிர் ஏடு கேலி செய்தபொழுது பரப்பிரம்மம் என்ற தலைப்பிலேயே ஒரு நாடகம் எழுதி அதில் நானும் சிவாஜியும் நடித்திருக்கிறோம் நாடு முழுவதும்! எனவே விமர்சனங்களை வரவேற்பவன் - தாங்கிக் கொள்பவன்தான் நான்! அதே நேரத்தில் உள்நோக்கத்துடனும் - குரோத மனப்பான்மையுடனும் விமர்சிக்கிறவர்களின் உருவத்தை நாட்டுக்கு அம்பலப்படுத்த வேண்டியதும் கடமையாக இருக்கிறதல்லவா?

நம்முடன் நண்பர் எம்.ஜி.ஆர். இருந்தபோது - அவர் நடித்த ஒரு படம் மகத்தான வெற்றியைத் தந்தது! அப்போது அந்த

படத்தின் பெயரை ஒரு பக்கத்தில் அச்சிட்டு, வெறும் வெள்ளைத் தாளாக அந்தப் பக்கத்தை விட்டு - வெட்கக் கேடு என்று ஒரே ஒரு வார்த்தையை மட்டும் தனது விமர்சனமாக குமுதம் பத்திரிகை பிரசுரித்திருந்தது!

அதனால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். நடித்த அந்தப் படத்தின் வெற்றியைத் தடுத்து விட முடியவில்லை.

நமது வண்டிக்காரன் மகனைப் பற்றி ஏடுகள் மட்டுமன்றி, தமிழக அமைச்சர் ஒருவரே இயல், இசை, நாடகமன்ற விழாவில் மிகக் கடுமையாகப் பேசியிருக்கிறார். அந்த விழா அரசாங்க விழா! அதுவும் சங்கரதாஸ் சுவாமிகளுக்காக நடத்தப்பட்ட விழா! அங்கேயும் அர்ச்சனை அடியேனுக்குத்தான்! நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு இயங்குவது இயல் இசை நாடகமன்றம்! அரசாங்கத் தொடர்புடைய மன்றம்! அங்கே அரசு நடத்தும் விழாவில் அமைச்சர் வண்டிக்காரன் மகன் விமர்சனத்தில் இறங்குகிறார்.

துர் அதிர்ஷ்டமாக அந்தப் படத்தை பார்க்க நேரிட்டது.

என்று அமைச்சர் பேசியிருக்கிறார்! அவரை யாரும் படம் பார்க்க அழைக்கவில்லை. அவராகப் போய்ப் படத்தைப் பார்த்திருக்கிறார். யாரோ அவரை துர்அதிர்ஷ்டத்தில் சிக்கவைத்து விட்டதாக வருந்தியிருக்கிறார்!

விரல்களை வெட்டிப் பந்தாடுவேன் என்று ஜமீன்தார் கூறுகிறாரே! எப்படி விரல்களைப் பந்தாட முடியும்?

என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார் அமைச்சர்!

பாவம்; பந்து என்றாலே காலால் உதைக்கிற பந்தைத்தான் அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார். வெட்டப்பட்ட விரல்களைத் தூக்கி மேலே எறிந்து அவற்றைப் பந்து போல் தட்டி விடுவது என்றுதான் அதற்குப் பொருள்! பரவாயில்லை! அமைச்சர், எல்லா வசனங்களையும் கூர்ந்து கவனித்திருக்கிறார்.

அண்ணாவின் நாடகத்திலா கதம்ப வேலை செய்வது? வேதனையாக இருக்கிறது!

என்று அமைச்சர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்!

முதலில் அவர் புரிந்துகொள்ள வேண்டும். அண்ணா எழுதிய வண்டிக்காரன் மகன் நாடகமே அல்ல! காஞ்சியில் எழுதப்பட்ட

சிறுகதை! அதைப் பிறகு நண்பர் அசோகன் நாடகமாக மாற்றி நடத்தி வந்தார். அண்ணா எழுதிய சிறு கதையில் இழையோடும் தந்தை மகன் பாசத்தை வைத்து, திரைக்கு ஏற்ப பல மாற்றங்களை நான் செய்திருப்பது உண்மைதான்!

அந்த மாற்றங்கள் வண்டிக்காரன் மகன் படத்தை வெற்றிப்படமாக ஆக்கியிருக்கிறதேயல்லாமல் அண்ணா எழுதிய நல்லவன் வாழ்வான் என்ற கதையில் நண்பர் எம்.ஜி.ஆர். நடித்து, அவர் செய்த மாற்றங்களின் காரணமாக அந்தப் படம் தோல்வியுற்றதைப் போலவோ - அண்ணா எழுதி அரங்கண்ணல் வசனம் எழுதிய தாய் மகளுக்கு கட்டிய தாலி என்ற படத்தில் நடித்த எம்.ஜி.ஆர். செய்த மாற்றங்களால் அந்தப் படம் தோல்வியடைந்ததைப் போலவோ வண்டிக்காரன் மகன் தோல்வி அடைந்து விடவில்லை. மக்களின் பேராதரவுடன் வெற்றி நடை போட்டுக்கொண்டு தானிருக்கிறது.

இந்த வெற்றிக்கு நான் மட்டுமே முழு முதல் காரணமென்று கூறிட மாட்டேன். நண்பர் ஜெய்சங்கர் மற்றும் நடிகவேள் எம்.ஆர். ராதா, நண்பர்கள் அசோகன், சுப்பையா, ஏனைய நடிகர் நடிகைகள், இயக்குநர், ஒளிப்பதிவாளர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர், பின்னணி பாடியோர் இப்படி அனைவரின் திறனும், ஒத்துழைப்பும்தான் வண்டிக்காரன் மகன் வெற்றிக்குக் காரணமாகும். அத்துடன் தமிழ் மக்கள் தரும் ஆதரவும், நல்லேடுகள் சிலவற்றின் பாராட்டும் பெருமளவு இணைகிறது! கலையுலகில் அண்ணா உருவாக்கிய புதுமைக்குப்பின் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்போது மீண்டும் ஒரு திருப்புமுனை!

இந்த உண்மையைத் தெரிந்து கொண்டோர் சீறுகின்றனர்!

அவர்களின் சீற்றத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டு நாமும் தொடர்ந்து செயலாற்றுவோம்.

அன்புள்ள,

மு. க.

(18-11-1978)

619. வாழ்க அந்த அஞ்சா நெஞ்சம்!

உடன்பிறப்பே,

கப்பலோட்டிய தமிழன் தீரர் சிதம்பரனார் மறைந்து நாற்பதாண்டுகளுக்கு மேலே ஓடிவிட்டதை நினைவு கூர்ந்திடும் நாள் நவம்பர் பதினெட்டாம் நாளாகும். அந்நிய ஆதிபத்தியத்தின் அச்சாணியை முறித்து - அடிமை விலங்கை ஒடித்து உரிமைக் குரல் எழுப்ப அரிமா எனக் கிளம்பிய அந்த வீர மனிதர், சிறைச்சாலையில் சித்ரவதைகளை ஏற்றுக்கொண்டு செக்கிழுத்தார் என்பதைச் செங்குருதி சூடேறப் படித்திருக்கிறோம். அந்த உத்தமத் தியாகி இழுத்த செக்கு எங்கிருக்கிறது எனத்தேடி, அதனைக் கொண்டு வந்து சென்னை அரசினர் தோட்டத்தில் கழக அரசின் காலத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. இன்றைக்கும் அவர் இழுத்த அந்தச் செக்கினைக் காணும்போது வரலாற்றின் தியாக முழக்கம் நம் செவிகளில் ஆங்காரமாக ஒலித்திடவே செய்கிறது. இந்திய நாட்டு விடுதலைப் போரின் மற்றொரு பாசறையாக சுதேசி இயக்கம் உருவெடுத்தது. அந்நியப் பொருள்களைப் பயன்படுத்துவதை அறவே புறக்கணிக்க வேண்டுமென்று போர் முரசு கொட்டியது.

அந்தப் போர்ப் பரணிக்குச் செயல் வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுத்தான் சுதேசிக் கப்பல்களை ஓட்டுகிற நிறுவனத்தைத் தொடங்கிக் கப்பலோட்டிய தமிழன் என்ற சிறப்பினையும் பெற்றார் சிதம்பரனார். இதன் விளைவாக ஆங்கில ஆதிக்கக்காரர்களின் ஆத்திரத்துக்கு ஆனானார்.

நேரம் பார்த்திருந்த அந்த ஏகாதிபத்தியம், கலெக்டர் விஞ்ச்துரையின் வாயிலாக தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது. தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும், தடையை மீறி ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினார்கள் என்று குற்றம் சுமத்தி, அதன் தொடர்பாக ராஜதுவேஷ வழக்கொன்றும் ஜோடனை செய்யப்பட்டது. அந்த வழக்கில் சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சுப்பிரமணிய சிவாவுக்குப் பத்து ஆண்டு

தண்டனை அளிக்கப்பட்டது. சிதம்பரனார் சார்பில் மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனைக் காலம் அவருக்குப் பத்து ஆண்டுத் தண்டனைக் காலமாக மாற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை வைத்துத்தான் பாரதியார் இரு பாடல்களை உணர்ச்சி பொங்கிட எழுதினார்.

விஞ்ச் துரையும், வீரர் சிதம்பரனாரும் வாக்குவாதம் செய்வது போன்ற பாடல் அது. அதில் சில வரிகளை மட்டும் நினைவூட்டுகிறேன்.

நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை

நாட்டினாய்; கனல் மூட்டினாய்

வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே

மாட்டுவேன், வலி காட்டுவேன்.

- இப்படி நெஞ்சுயர்த்திப் பேசுகிறான், நஞ்சனைய விஞ்ச் துரை.

அதற்குச் சிதம்பரனார் சீறியெழுந்து சொன்ன பதில் என்ன தெரியுமா?

பாரதியின் வாயாலேயே கேட்போம்;

சதையை துண்டு துண்டாக்கினும் என் எண்ணம்

சாயுமோ? ஜீவன் ஓயுமோ?

இதயத்துக்குள்ளே இலங்கு மகாசக்தி

ஏழுமோ? நெஞ்சம் வேகுமோ?

- இவ்வாறு வேங்கைப் புலியென உறுமி, இந்திய நாட்டின் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்திய அந்தச் செம்மல், நாடு விடுதலை பெற்ற காட்சியைக் காண முடியாவிட்டாலும் - அவரைப் போன்ற தியாக வேந்தர்கள் சிந்திய ரத்தமும், ஏற்றுக்கொண்ட அடக்குமுறையும்தான் சுதந்திரப் பயிர் முளைக்க உரமாக விளங்கின என்பதைச் சரித்திரம் கம்பீரமாக இசைத்துக் கொண்டுதானிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது அண்ணா அவர்களின் முயற்சியால், சிதம்பரனாரின் சிலை சென்னைத் துறைமுகத்தருகே மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியப் பிரதமர் அவர்கள் சிதம்பரனாரின் சிலையைத் திறந்து வைத்தார்கள். சென்னை ஜார்ஜ் டவுன் சிதம்பரனார் நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று கழக அரசின் காலத்திலேயே அறிவிக்கப்பட்டது. சென்னை இராஜாஜி மண்டபத்தில் உள்ள வெள்ளையர் படங்களை அகற்றிவிட்டு நம் நாட்டுச் சான்றோர் படங்களை வைத்தபோது சிதம்பரனார் படமும் அதில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

சிதம்பரனார் நினைவாக இன்னும் எத்தனை சின்னங்கள் எழுந்தாலும், அவை அவர் காட்டிய தீரத்துக்கும் - ஏற்றுக் கொண்ட சோதனைகளுக்கும் ஈடு ஆக மாட்டா என்பது மட்டும் உண்மை! அவ்வளவு பெரிய விடுதலைச் சிங்கமாக அவர் உலவியிருக்கிறார்.

நாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்கும் பாசத்திற்கும் அவர் எழுதிய பாடல் ஒன்றே சான்று பகரும்!

திருவும் புகழும் சிறந்தன பிறவும்

மருவற நிற்கும் என் மாசிலா மனைவியே

என்னரும் உயிரினும் என்னுயிர் உள்ளத்தினும்

மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்

பின்னுறப் பாதியைபெரிய நம் தேயத்தின்

தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே

- ஆருயிர்த் துணைவிக்கு அவர் எழுதிய கவிதை மடல் இது.

அந்த உறுதி வாய்ந்த நெஞ்சத்துக்கு இன்று நாம் மலர் தூவுவோம்!

அந்த வீர மறவருக்குப் புகழாஞ்சலிப் பாடிப் போற்றுவோம்!

அந்தத் தியாகச் செம்மலுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்!

வாழ்க, வ.உ.சி.யின் பெயர்!

வாழ்க, அந்த அஞ்சா நெஞ்சம்!

அன்புள்ள,

மு. க.

(26-11-1978)

நன்றி : நம்நாடு (26-11-78)

620. ஏற்றிடுக, என் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

பத்து நாட்களுக்கு மேலாகிறது உன்னுடன் கடிதத் தொடர்பு கொண்டு! சிறிய அளவு அறுவை சிகிச்சைதான்! எனினும் தொல்லை அதிகம்! எத்தகைய வேதனைகளையும் உன் அன்பு முகத்தை எண்ணுவதாலேயே தாங்கிக் கொள்ளக்கூடிய பக்குவத்தை, இன்று நேற்றல்ல - பல ஆண்டுகளாகவே பெற்றிருக்கிறேன் அல்லவா?

சுமார் பத்து நாள் செய்திகளை நாளேடுகள் என் படுக்கை தேடி வந்து கூறிக் கொண்டுதானிருக்கின்றன. மிரட்டிக் கொண்டிருந்த புயல் கொந்தளிப்பு, இறுதியாக இலங்கைச் சீமையில் நுழைந்து பெரும்பாலான தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை மக்களை விழுங்கிவிட்டிருக்கிறது. தமிழகத்திலும் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற முகவை மண்டிலப் பகுதிகளிலும், தஞ்சை மற்றும் சில மாவட்டங்களிலும் - மீண்டும் உதகையிலும் பெருங்காற்று, வெள்ளம் புகுந்து மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பெருஞ்சேதம் இழைத்துள்ள செய்திகள் நெஞ்சைக் குலுக்குகின்றன.

இலங்கையில் துயர்துடைப்புப் பணிகளுக்காக இந்தியாவின் சார்பில் நூறு டன் அரிசியும், பத்தாயிரம் பேர்களுக்கு துணியும், மற்றும் கூடாரத்துணிகள், போர்வைகளும் மத்திய அரசால் அனுப்பி வைக்கப்படுகிறது என்ற செய்தி பாராட்டத்தகுந்ததாகும். ஏற்கனவே இலங்கையின் வேண்டுகோளுக்கேற்ப மத்திய அரசு இலங்கைக்கு ஆவ்ரோ விமானமும், ஹெலிகாப்டரும் அனுப்பி வைத்துள்ளது. தமிழக அரசின் சார்பில் மத்திய அரசு மூலமாக பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள துயர்துடைப்புப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தமிழக நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்திய அரசோ, தமிழக அரசோ, மற்ற நாடுகளோ இலங்கைக்குச் செய்யும் உதவிகள் தார்மீக உணர்வுகளைப் புலப்படுத்தப் பயன்படுமேயல்லாது, இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுஞ்சேதத்திற்கு முழுமையான பரிகாரம் வழங்கிட இயலாது. ஆகவே இலங்கை அரசாங்கம், துயர் தணிப்புப் பணிகளுக்காக பெருந்தொகையைச் செலவிட முன்வரவேண்டும்.

இலங்கையில் பெரும்பாலும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகள் கடல் அலைகளின் பெருந்தாக்குதலுக்கும், புயலின் சீற்றத்துக்கும் உள்ளாகியுள்ளன. தொடர்ந்து பல வேதனைகளுக்கு ஆளாகிவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இப்படியொரு இயற்கையின் சோதனையும் ஏற்பட வேண்டுமா? ஏக்கப் பெருமூச்சுதான் விடையாகக் கிடைக்கிறது!

மூத்தோர், முதியோர், இளையோர், மழலைகள் என எத்தனை எத்தனை உயிர்களைக் கடலும் காற்றும் தங்கள் கொடுமைக் கரங்களால் பிணங்களாகக் குவித்திருக்கின்றன! தம் குடும்பச் செல்வங்களை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் இலங்கை மக்களுக்கு அதிலும் பெரும்பாதிப்புக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உலக நாடுகள் பலவற்றிலும் பரவிக்கிடக்கும் தமிழ் இன மக்கள் தங்கள் ஆறுதலைத் தெரிவிக்கவும் - தாங்கள் வாழுகின்ற நாடுகளில் உள்ள அரசுகளின் மூலம் முறைப்படி நிவாரண உதவிகளை வழங்கிடவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். தார்மீக அடிப்படையில் - மனிதாபிமான உணர்வுடன் அளிக்கப்படும் ஆறுதலும், சிறிய உதவிகளும்கூட பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நம்பிக்கையூட்டத்தக்க வகையில் அமையும்!

தி.மு.கழகத்தின் சார்பில் அடையாள பூர்வமாகவும் ஆழ்ந்த உணர்வோடும் நிவாரண நிதித் தொகையை இலங்கைக்கு வழங்க, முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிதாக அல்ல, கழகம் உருவான இரண்டு ஆண்டுகளில் தஞ்சையில் வீசிய புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருபத்தியேழு ஆண்டுகட்கு முன்பே நாற்பதாயிர ரூபாய் நிதி திரட்டி அரசிடம் வழங்கிய வரலாறு நமக்கு உண்டு! தொடர்ந்து கடந்த முப்பதாண்டுகளில் எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும், ஆளுங்கட்சியாக இருந்த நிலையிலும், மீண்டும் எதிர்க்கட்சியாக இருக்கும் நிலையிலும் இதுபோன்ற இயற்கையின் சீற்றத்தால்

இன்னலுற்றோருக்கு இயன்ற உதவிகளைச் செய்திட கழக அமைப்போ, கழக அரசோ, கழக உடன்பிறப்புகளோ தயக்கம் காட்டியதில்லை.

சென்ற ஆண்டு புயலால் தமிழகம் சீரழிந்து நின்றபோது, சிறையிலிருந்து விடுத்த என் வேண்டுகோளையேற்று நான்கு லட்ச ரூபாய்க்கு மேற்பட்டத் தொகையை நிவாரண நிதிக்கு வாரி வழங்கி அதனை கழகத்தின் சார்பில் ஆளுநரிடம் தந்த நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க இயலாது.

துயருற்றோரைக் கண்டு துடித்து, ஓடிச் சென்று உதவிகளைச் செய்து பழக்கப்பட்ட செயல்வீரர்களின் பாசறை நமது கழகம்! அந்தக் கழகத்தின் சார்பில் இப்போது சிறிய அளவு நிவாரணத் தொகை இலங்கைக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

இதைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி, உலகு முழுவதும் பரவிக் கிடக்கிற தமிழ் மக்கள் தங்களால் இயன்ற உதவிகளை பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உடனடியாக அளித்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகில் உள்ள தமிழர்களையெல்லாம் கேட்டுக்கொள்ள உனக்கென்ன உரிமை? என்று யாரும் வினவமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஏனெனில், இலண்டனில் இருக்கிற தமிழர்களாயினும் - நியூயார்க்கில் இருக்கிற தமிழர்களாயினும் - அவர்கள் எல்லாம் கருணாநிதிக்கு வேண்டியவர்கள் என்று நமது முதலமைச்சர் அவர்கள் அந்த நாடுகளுக்கே சென்று அறிவித்திருக்கிறார்.

படுக்கையிலிருந்தவாறு பத்து நாட்களாகப் படித்த செய்திகளில் அதையும் கண்டு களித்தேன்! கவலைக்கிடையிலேயும் ஒரு தேன்துளி போல அந்த அறிவிப்பு இருந்தது! அதனால் மட்டுமல்ல, வேண்டுகோள் விடுக்க நான் உரிமையெடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது உறவென்னும் உணர்வின்பாற்பட்டது! எனவே எங்கு வாழும் தமிழராயினும் அவர்கள் வழங்கும் சிறிய நிவாரணம், அவர்கள் வாழும் நாட்டின் முறைகளுக்கேற்ப - இலங்கை நோக்கிச் செல்லட்டும்!

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள புயல் வெள்ளச் சேதப் பாதிப்புகளுக்கு நிவாரணம் தேடி முதல்வர் தனது சுற்றுப்பயணத்தை இடையிலே முறித்துவிட்டு உடனடியாகத் தமிழகம் திரும்ப வேண்டுமென இங்குள்ள கட்சித் தலைவர்கள் சிலர் வெளியிட்டுள்ள அறிக்கைகளையும் ஏடுகளில் கண்டேன்!

இந்தத் தலைவர்கள் ஏன் இப்படி அவசரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை! முதலமைச்சர் முழுமையாகத் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டே வெற்றிகரமாகத் திரும்பட்டும்!

எமர்ஜென்சி(நெருக்கடிநிலை)யின் தேவையையும், அதனால் விளைந்த நன்மைகளையும், எமர்ஜென்சி காலத்திலேதான் ஒரு மாநில அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும் என்ற அரசியல் சட்டவிளக்கத்தையும், சர்க்காரியா கமிஷன் விசாரணை, தண்டனை போன்றவற்றையும் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இருநாடுகளில் மட்டுமே எடுத்துரைத்திருக்கிறார். இன்னும் என்னைப் பற்றியும், கழகத்தைப் பற்றியும் நடத்த வேண்டிய தாக்குதல்களை ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் தொடர்ந்து நடத்த வேண்டாமா? அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு சுற்றுப்பயணத் திட்டத்தில் ஒருநாள் கூட குறையாமல் முதல்வர் எம்.ஜி.ஆர். தமிழகம் வருவாராக!

உடன்பிறப்பே,

கடிதத்தை மீண்டுமொருமுறைப் படித்து வெளிநாடுகளில் வாழுகின்ற உன் உற்றார் உறவினர்க்கு என் வேண்டுகோளைத் தெரிவித்து, இலங்கையில் திக்கற்று நிற்போருக்கு - தேம்பி அழுவோருக்கு - அவர்களால் இயன்ற உதவிகளை அனுப்பிட வழிகண்டிடு! நமது கழகமும் வெளிநாடு வாழ் தமிழர்களுடன் தொடர்புகொண்டு இந்த ஆக்கப்பணி நிறைவேற ஆவன செய்யும்.

அன்புள்ள,

மு. க.

(28-11-1978)

621. கடந்த காலம்; மறந்திட வேண்டாம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டு அது விரிவடைந்த நிலையில் ஒவ்வொரு அணியினரும் அறிக்கைக் கணைகளை மாறி மாறித் தொடுத்து வருகின்றனர்.

மற்றொரு கட்சியின் உட்போராட்டத்தில் நுழைந்து கருத்துகளைத் தெரிவிக்கும் துடிப்பு எனக்கொன்றும் இல்லை.

1969-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்தபோதே அதற்காக நிருபர்கள் பேட்டியின்போது வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, இந்தியாவின் ஜனநாயகத்திற்கு அந்தப் பிளவு நல்லதல்ல என்றும் நான் குறிப்பிட்டதை நீ மறந்திருக்க மாட்டாய்!

கொள்கை ரீதியாகவோ - அல்லது தனிப்பட்ட முறையில் தங்களுக்கு ஏற்படும் கோப தாபங்கள் - அல்லது சங்கடங்களில் இருந்து மீண்டுகொள்ள வேண்டிய சுயநல நினைப்பு - ஆகியவற்றின் காரணமாகவோ பெரிய கட்சிகளில் பிளவுகள் தவிர்க்க முடியாதனவாகின்றன.

1960-ஆம் ஆண்டில் அண்ணா காலத்திலும், 1972-ஆம் ஆண்டிலும் தி.மு.கழகத்தில் ஏற்பட்ட பிளவுகள் கூட, முன்னது தனிப்பட்ட கோப தாபங்களாலும், பின்னது தனக்குற்ற சங்கடங்களில் இருந்து தப்புவதற்காகவும் விளைந்தவை என்பதை அரசியலைத் தொடர்ந்து கவனித்து வருபவர்கள் உணரவே செய்வர்!

அதை மீண்டும் விளக்கமாக இந்தக் கடிதத்தில் விரித்துரைக்க நான் விரும்பவில்லை. தேவைப்படின் பிறிதொரு முறை எழுதுகிறேன். அந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் - அதற்காக முனைந்து கிளர்ந்தெழுந்தவர்கள் யார் என்பது பற்றியும் - அவர்கள் எல்லாம் இப்போது என்ன ஆனார்கள் என்பது பற்றியும்!

இப்போது இந்திரா காங்கிரசில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள உட்பூசல் குறித்து நான் எழுதுவதற்கு வேறெந்தக் காரணமும் இல்லை!

அந்தக் கட்சியில் ஒரு அணிக்குத் தலைமையேற்றிருக்கிற ஒரு நண்பர், தேவையில்லாமல் தி.மு.க. பற்றி அடிக்கடி தாக்குதல் தொடுத்து வருகிறார்.

அவர் அ.தி.மு.க.விடம் கொண்டுள்ள இரகசிய உறவு - அந்த உறவு காரணமாக அவருக்குக் கிடைத்து வரும் தொடர்ந்த ஆதாயம் - இதுபற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை.

காலம் வரும்போது இப்படிப்பட்டவர்கள் நாட்டு மக்களின் கண் எதிரே அடையாளம் காட்டப்படத்தான் போகிறார்கள்.

உண்மை, தூங்கிக்கொண்டே இருந்துவிடப் போவதுமில்லை! பொய், பல்லக்கில் பவனி வந்துகொண்டே வாழ்ந்து விடப்போவதுமில்லை.

தி.மு.கழகம் நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தியைக் கடுமையாக விமர்சித்த கட்சி! இந்திராவுக்குக் கறுப்புக்கொடி காட்டிய கட்சி! அந்தக் கட்சிக்கு மாறாக இந்திராவை அந்தநாள் முதல் இந்த நாள் வரையில் தொடர்ந்து ஆதரித்து வருவது அ.இ.அ.தி.மு.க.தான்! - இது அந்த நண்பர் அடுக்கி வைக்கிற வாதம்.

அவர் வாதத்தை ஏற்று தமிழ்நாட்டு இந்திரா கட்சியினர் அ.தி.மு.க.வுடன் உறவு கொள்வதென்ற முடிவு எடுப்பார் களேயானால் - அதற்காக நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

ஆனால் நெருக்கடி காலத்தில் 1975 ஜூன் திங்கள் முதல் அக்டோபர் திங்களில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மறைந்திடும் வரையில் அதே நண்பர், மதுரையிலிருந்து, தான் வெளியிட்ட நாளிதழ் ஒன்றில் இந்திரா காந்தியைப் பற்றிச் செய்த விமர்சனங்கள் என்ன என்பதை அந்தப் பழைய ஏடுகள் சாட்சியங் கூறத் தயாராயிருக்கின்றன.

இன்று இந்திராவைப் பாதுகாக்கக் கூடிய தமிழ்நாட்டுக் கேடயம் தான் ஒருவர்தான் எனக் கூறிக்கொண்டு, தி.மு.கழகத்தை வாயில் வந்தவாறு வசை பாடிக்கொண்டிருக்கும் அந்த நண்பர், அவரது நாளேட்டில் நெருக்கடி காலத்து முற்பகுதியில் சுமார் ஐந்து மாதங்கள் வரையில் என்ன எழுதினார்.

இந்திரா ஒரு சர்வாதிகாரப் பேய்!

சண்டாளி! ராட்சசி!

தேசத்தைக் காட்டிக் கொடுக்கும்

துரோகி!

இப்படியல்லவா காரசாரமாக அவரது கை எழுதிற்று, அவரது சொந்தப் பத்திரிகையில்.

அவர், சில கூட்டங்களில் நெருக்கடி காலச் சட்டத்திற்கு விரோதமாகவும், இந்திரா காந்தியைக் குறித்து வன்முறைப் போக்கிலும் மிக மிகக் கடுமையாகப் பேசியது குறித்து, அவர் மீது நடவடிக்கையெடுத்து அவரைக் கைது செய்ய வேண்டுமென்று காவல் துறையினர் செய்த பரிந்துரைக் குறிப்பை அன்றிருந்த நமது கழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்று இன்றைக்கும் அவரது கட்சியில் உள்ள பெரும்பாலோர் பேசிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

இப்படி நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தியைப் பற்றி இழிவாக - தரக்குறைவாக - பேய் என்றும் - பிசாசு என்றும் - சண்டாளி என்றும் - அரக்கி என்றும் - வார்த்தைகளைப் பொறுக்கியெடுத்துப் பயன்படுத்திய அந்த நண்பர் இன்று இந்திரா காந்தியின் இணையற்ற விசுவாசி என்று வேடம் கட்டிக்கொண்டு ஆடுவது கண்டு நாமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அவர் திடீர் திடீர் என்று தி.மு.கழகத்தின் மீது பாய்ச்சல் நடத்துவானேன்?

நாம், இந்திரா காந்தியின் அவசர காலச்சட்டத்தை எதிர்த்தோம்! சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினோம்!

மதுரை மேயர் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் ஒருவர் நின்றார்! அவரை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் மட்டுமே நின்றார்! ஜனநாயக ரீதியில் நமது மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி என்ற முறையில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு வாக்களித்தனர். அதுவும் மாநகர அளவில் இந்திரா காங்கிரசார், தி.மு.கழகத்தினரை அணுகிய காரணத்தால்!

அ்ஂதன்னியில் மதுரை மாநகராட்சி தேர்தலில் தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. ஏற்படுவதற்கான வழியும் இருக்கவில்லை.

அ.தி.மு.க.வும் - இந்திரா காங்கிரசும் மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டது போல வெளியே தெரிந்தாலும் கூட, இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராகவே, மதுரையில் உள்ள இந்திரா காங்கிரஸ் கோஷ்டியினர் சிலர் மறைமுகமாக வேலை செய்து அ.தி.மு.க.வை வெற்றி பெறச் செய்ய மர்ம உடன்பாடுகளைச் செய்து கொண்டதும், மதுரையில் உள்ள அரசியல்வாதிகளுக்குத் தெரியாத விஷயமல்ல!

இப்படி கட்சிக்குள்ளேயே துரோக வேலை செய்து கொண்டிருக்கிற ஒருவர், தன் கட்சிக்காரர்களால் அடையாளம் காட்டப்படுகிறபோது அதற்குரிய பதிலை வழங்க வேண்டுமேயல்லாமல், தி.மு.கழகத்தின் மீது சேறுவாரி இறைப்பது முறையான காரியமாகாது!

இந்திராவைப் பொறுத்த வரையில், அவரது அவசர காலக் கொடுமைகளை இன்னமும் எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் நாம்! அதன் காரணமாகத்தான் சிக்மகளூர்த் தேர்தலில் ஜனதா வேட்பாளர் வீரேந்திர பட்டீல் அவர்களை ஆதரித்தோம்.

பூசாரி மீது கோபப்பட்டுக் கொண்டு எந்த பக்தனும் கோயிலில் உள்ள ஆண்டவனைக் கும்பிடாமல் போய்விடமாட்டான்! அதுபோலவே ஜனதா ஆட்சியின் குறைபாடுகள் காரணமாக ஜனநாயகத்தைப் புறக்கணித்து விடமுடியாது என்று சிக்மகளூர் கூட்டத்திலேயே நான் பேசினேன். அந்த கூட்டத்தில் ஜார்ஜ் பொன்னாண்டஸ், ஆச்சாரிய கிருபளானி, வீரேந்திர பட்டீல், நிஜலிங்கப்பா, மார்க்சிஸ்ட் தலைவர் ரணதிவே ஆகியோரும் இருந்தனர்.

எனவே தி.மு.கழகம் எந்தச் சூழ்நிலையிலும் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அரணாகவே விளங்கும்.

அதை மறந்துவிட்டு, தங்கள் கட்சியில் ஏற்பட்டுள்ள உட்பூசலைத் தி.மு.கழகத்தின் பக்கம் திருப்பிவிட்டு - தங்களுடைய துரோகச் செயல்களை மறைத்து விடலாம் என்று இந்திரா காங்கிரசில் உள்ள சிலர் மனப்பால் குடிக்க வேண்டாம் என்று சுட்டிக்காட்டவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(30-11-1978)

622. எச்சரிக்கையும் - பதிலும்!

உடன்பிறப்பே,

மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு, சென்ற வாரம் மதுரை மாநகரில் கூடியபோது, பின்வரும் எச்சரிக்கையை ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வுக்கு விடுத்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

நம் நாட்டில் சர்வாதிகார ஆட்சியை மீண்டும் கொண்டு வர முயற்சி செய்திடும், இந்திரா காந்தி பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சர்வாதிகார சக்திகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அ.தி.மு.க. தலைமையில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள தவறான போக்கினைக் கண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு, ஆழ்ந்த கவலை கொள்கிறது.

என்று தொடங்கிய அந்தத் தீர்மானம்,

அ.தி.மு.க. தலைமையின் இத்தகைய திடீர் மாற்றம் அப்பட்டமான சந்தர்ப்பவாதமாகும், மக்களது ஜனநாயக உரிமைகள், சமுதாயப் பொருளாதார மாற்றத்திற்காக மக்கள் நடத்தும் இயக்கம் மேலும் வளர அவசியமானவை. இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது பற்றிக் கவலைப்படாமல் இந்திரா காந்தியை ஆதரிக்க முன் வந்துள்ளது தேர்தல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் அப்பட்டமான சந்தர்ப்ப வாதமாகும். சர்வாதிகாரச் சக்திகளுக்கு ஊக்கமளிப்பது மக்களுக்குப் புரியும் துரோகச்செயல் என்று அ.தி.மு.க. தலைமையை மார்க்சிஸ்ட் கட்சி எச்சரிக்க விரும்புகிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு வார காலத்திற்குள்ளாகவே அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளரும் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர். அவர்கள், டோக்கியோவில் கூறியுள்ள கருத்தை ஜாப் செய்தி நிறுவனம் வெளியிட்டு, இந்தியாவில் எல்லா ஏடுகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மொரார்ஜி தேசாயின் ஜனதா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்று சேர்க்கக் கூடியவர் இந்திரா காந்தி ஒருவர்தான்! இந்திரா காந்தி வெற்றிபெற்று அரசியலுக்கு வந்திருப்பது எனக்கு ஊக்கமளிக்கிறது. இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் இனிமேல் தங்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

இது எம்.ஜி.ஆர். அவர்கள் டோக்கியோவில் தெரிவித்துள்ள கருத்து!

இந்தக் கருத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில குழுவின் எச்சரிக்கைத் தீர்மானத்திற்கு விடுக்கப்பட்ட பதில் என்று கூட எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி சிந்திக்க வேண்டியவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிதான்!

பொதுவாகவே எம்.ஜி.ஆர். தன் கட்சியுடன் உறவு கொள்கிற எந்தக் கட்சியுடனும் உள்ளார்ந்த அன்பும், மதிப்பும் வைத்திருப்பவர் அல்ல என்பதை அவரது கட்சியுடன் உடன்பாடு கொண்ட கட்சியினர் அனுபவரீதியாக உணர்ந்தே இருக்கின்றனர்.

தி.மு.க.வுடன் ஒரு பொது நோக்கத்திற்காக தேர்தல் உறவு கொண்ட கட்சிகள் அவைகளாகத் தங்களை உறவிலிருந்து விலக்கிக் கொண்டு போயின என்ற வரலாறு உண்டே தவிர, தி.மு.கழகம் - யாருடைய உறவையும் அறுத்துக்கொள்ள முனைந்தது கிடையாது. ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்த வரையில் மார்க்சிஸ்ட் கட்சி குறிப்பிடுகிற சந்தர்ப்பவாதமே எப்போதும் தலைதூக்கி நின்றிருக்கிறது. அந்த நிலைக்காக உடன்பாட்டுக் கட்சிகளை உதாசீனப்படுத்துவது என்பது அ.தி.மு.க.வின் வாடிக்கை!

நெருக்கடி கால முடிவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. இந்திரா காங்கிரஸ் இரண்டும் இணைந்து போட்டியிட்டன. பிறகு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் இந்திரா காங்கிரஸ் உடன்பாடு இறுதிக் கட்டத்தில் முறிந்து போயிற்று. நாடாளுமன்றத் தேர்தலில் நம்முடன் உறவு கொண்டிருந்த ஜனதாவும், மார்க்சிஸ்டும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடன் உறவில்லையென்று அவர்களாகவே அறிவித்து விட்டனர். ஆச்சரியம் என்னவென்றால், மிசாக் கொடுமைக்கு

ஆளான மார்க்சிஸ்ட் கட்சியும் - மிசாவை ஆதரித்த அ.தி.மு.க.வும், சட்டமன்றத் தேர்தலில் கைகோத்துக் கொண்டன. அதுமட்டுமல்ல, அ.தி.மு.க. ஏடுகள், இந்திரா காந்தி காலத்து இருண்ட காலம் என்ற தலைப்பில் கட்டுரைகள் தீட்டின! அந்தக் கட்டுரைகளைக் கண்டு, அ.தி.மு.க. திருந்திவிட்டது என மார்க்சிஸ்ட் நினைத்ததில் நியாயம் உண்டு!

ஆனால் சட்டமன்றம் கூடியவுடன் முதலமைச்சர் ஆற்றிய முதல் உரையிலேயே நெருக்கடி நிலையை ஆதரித்தும், ஜே.பி. அவர்களை வன்மையாகக் கண்டித்தும் பேசியதை சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

கொள்கை ரீதியான அணுகுமுறை எப்போதுமே அ.தி.மு.க.வுக்கு இருந்ததுகிடையாது. உதாரணம் :- அண்மையில் டெல்லி மாநிலங்களவையில் ஒரு திருத்தம் எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்டது. என்ன திருத்தம்? மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பதற்குரிய அதிகாரம் வழங்கும் பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும். இந்தத் திருத்தத்தை, தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, முஸ்லீம் லீக், பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகள் ஆதரித்தன. ஆனால் அ.தி.மு.க. உறுப்பினர்கள் திருத்தத்தை எதிர்த்து ஜனதா அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

சட்டமன்றத்தில் சட்ட அமைச்சர் நாராயணசாமி முதலியார், பத்தொன்பது மாதக்கால சர்வாதிகார இருள் விலகியது என்று குறிப்பிட்டார். அந்தக் கருத்தை ஆதரித்த உறுப்பினர்களின் கையொலியையும் பெற்றார். இப்போது இலண்டனிலும், நியூயார்க்கிலும் பேசிய எம்.ஜி.ஆர். நெருக்கடி காலப் பிரகடனம் தேவையானதேயென்று நியாயப்படுத்திப் பேசியுள்ளார். அதைத் தொடர்ந்து டோக்கியோ பேச்சும் வெளிவந்திருக்கிறது.

டோக்கியோ பேச்சு, தஞ்சை இடைத் தேர்தலுக்காக வீசப்படும் வலை என்பதை இந்திரா காங்கிரசிலே உள்ள சிந்திக்கத் தெரிந்தவர்கள் அறிந்து கொள்ளாமல் இல்லை!

❖ நாடாளுமன்றத் தேர்தலில் உடன்பாடு!

❖ சட்டமன்றத் தேர்தலில் போட்டி!

❖ மதுரையில் வேறுபாடு!

❖ சிக்மகளூரில் ஆதரவு!

இந்த உறவுகளும், போட்டிகளும் -அ.தி.மு.க.வின் இஷ்டத்திற்கு நடக்கிற காரியங்களே தவிர - ஒவ்வொரு கட்சியையும் மதித்து நடத்தப்படுகிற பேச்சு வார்த்தைகளின் விளைவுகள் அல்ல! ஒரு பொதுக் கொள்கைக்காக - எடுக்கப்படுகிற முடிவுகளுமல்ல!

தருவதை வாங்கிக்கொள்! அதுவும் என் வீட்டு வாசலில் தவம் கிடக்க வேண்டும்

என்ற தோரணையில் வழங்கப்படும் இடங்களுக்காக - காத்துக்கிடந்த காரணத்தால் தேர்தலுக்குத் தேர்தல் - இடத்திற்கு இடம் - நிலைமைகள் மாறிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலை விளக்கம் அளிக்கவே இக்கடிதம் தேவைப்பட்டது.

அன்புள்ள,

மு. க.

(04-12-1978)

623. அம்பேத்கார் நினைவு நாளில்....

உடன்பிறப்பே,

1891-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் பிறந்து, 1956-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஆறாம் நாள் அதிகாலையில் மறைந்துவிட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கையொளியான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நினைவு நாள் இன்று!

இந்திய அரசியல் சட்டம் என்ற வார்த்தை உச்சரிக்கப்படும் பொழுதே நெஞ்சில் அம்பேத்காரின் நினைவு தான் இன்றைக்கு நிழலாடும்.

அவர் முன்னின்று பொறுப்பேற்றுத் தயாரித்த அந்தச் சட்டம், அவர் எதிர்பார்த்தவாறு செயல்படுத்தப்படவில்லை யென்பதை வெளிப்படையாகக் கூறிய வீர உள்ளம் படைத்தவராகவும் அவர் திகழ்ந்தார்.

அவர் பிறந்தபோது, அவர் பிறந்த சமுதாயமான தாழ்த்தப்பட்ட சமுதாயம் விலங்கினும் இழிவானதாக மதிக்கப்பட்டது. அவருக்கே அவர் படித்த பள்ளியில் தண்ணீர் அருந்த உரிமையில்லை. பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை வெறுத்தனர்.

அவர் தாழ்ந்த சாதிக்காரர் என வெறுத்துக் கூறி, அவருக்குத் தலைமுடி வெட்டவும் மறுத்துவிட்டார் முடி திருத்தும் தொழிலாளி!

பள்ளி ஆசிரியர் ஒருமுறை அம்பேத்காரை அழைத்து, கரும்பலகையில் ஒரு கணக்கைப் போட்டுக் காட்டும்படி உத்தரவிட்டார். உடனே உயர் சாதிக்கார மாணவர்கள் அனைவரும் விரைந்தோடிச் சென்று, கரும்பலகைக்கு அருகிலிருந்த தங்களுடைய சிற்றுண்டிப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு தங்கள் இருக்கைக்கு ஓடிவிட்டனர். இல்லையேல் அந்தத்

தாழ்த்தப்பட்ட இளைஞரின் நிழல்பட்டு சிற்றுண்டிப் பாத்திரங்கள் தீட்டாகி விடுமாம்.

ஒருமுறை அம்பேத்காரும், அவரது சகோதரரும் மாணவப் பருவத்தில் வண்டியிலேறிச் சென்றபோது, வண்டிக்காரர், அவர்கள் இருவரும் தாழ்த்தப்பட்டவர்கள் என அறிந்தவுடன் வண்டியைக் குடை சாய்த்து இருவரையும் பூமியில் புழுதியில் தள்ளிவிட்டார். இத்தனைக் கொடுமைகளுக்குமிடையே அம்பேத்கார் என்ற ஒரு பார்ப்பன குலத்து ஆசிரியர், மாணவன் அம்பேத்காரிடம் மிகுந்த அன்பும் பாசமும் காட்டி அவரை ஊக்கப்படுத்தினார்.

பீமராவ் இராம்ஜி அம்பாவதேகார் என்பதுதான் அவரது பெற்றோர் இட்ட பெயர். தன்னிடம் அன்பு காட்டிய பார்ப்பன ஆசிரியரின் நினைவாக அந்த ஆசிரியரின் பெயரான அம்பேத்கார் என்பதை இணைத்து பீமராவ் இராம்ஜி அம்பேத்கார் என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார்.

உடன்பிறப்பே, குங்குமம் வார இதழில் நான் எழுதும் ஒரே ரத்தம் என்ற தொடர் கதையில் மேலே குறிப்பிட்ட அம்பேத்காரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன் என்பதை இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது நீ புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்.

புத்தரென்ன! மகாவீரர் என்ன! வள்ளுவரென்ன! எத்தனையோ சான்றோர்களின்! சமத்துவ முழக்கம் ஒலித்த போதிலும் வர்ணாஸ்ரம தர்மம் என்னும் கோரப்பிடியில் சமுதாயம் சிக்கிச் சீரழிந்தது மட்டுமல்ல, மனிதனையே மனிதன் வெறுக்கும் கேவலமான கொடுமை அம்பேத்கார் பிறந்தபோதும் மாறவில்லை. அவர் ஏந்திய புரட்சிக் கொடிக்குப் பிறகும் - காந்தியடிகள் ஆற்றிய தொண்டுக்குப் பிறகும் - பெரியார், அண்ணா ஆகியோர் எழுப்பிய பகுத்தறிவுப் போர் முரசுகளுக்குப் பிறகும் அறவே மாறிவிட்டதாக மகிழ்ச்சியடையும் நிலையிலும் நாம் இல்லை.

மேலெழுந்தவாரியாக புனுகுப் பூச்சின் மணம் வீசுகிறதே தவிர, அந்தப் புனுகு மறைத்துக் கொண்டிருக்கும் ஆழமான புண், இன்னமும் கிராமப் பகுதிகளில் ஏன்! ஒரு சில நகர்ப் பகுதிகளில் விழுப்புண்களாக அல்ல விழுப்புரப் புண்களாகக் காட்சி தரும் அவலநிலை இருந்திடத்தான் செய்கிறது.

எனவே இந்தியாவைப் பொறுத்தவரையில் அம்பேத்காரும் - தென்னகத்தைப் பொறுத்தவரையில் பெரியாரும், அண்ணாவும் - தூக்கிப் பிடித்த சமதர்ம - சமத்துவக் கொடி, தொடர்ந்து வீறுகொண்டு பறந்திட பகுத்தறிவுப் பட்டாளத்தின் பயணம் தொய்வு படாது நடந்திட வேண்டும்.

மனம் நொந்து போன நிலையில் அம்பேத்கார் ஒருமுறை - 1935-ஆம் ஆண்டு ஈலா என்னுமிடத்தில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டிலும், அடுத்து புனாவில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மாநாட்டிலும்,

"இந்து மதத்தில் இருக்கும் வரை நமக்குச் சமத்துவம் கிடைக்காது. ஆதலால் எந்த மதம் உங்களுக்குச் சமத்துவம் அளிக்க முன் வருகிறதோ அந்த மதத்தில் நீங்கள் சேர்ந்து கொள்ளலாம்"

என்று உரை நிகழ்த்தினார்!

இந்துமதக் கொடுமையினால் அவர் நெஞ்சம் எப்படித் தணலாக மாறிவிட்டது என்பதற்கு அவரது அந்த மாநாட்டுப் பேச்சுக்கள் எடுத்துக் காட்டுக்களாகும்.

அவரது நினைவு நாளான இன்று - சாதிமதக் கொடுமைகள் தகர்க்கப்படவும்; சாதிப் பூசல்களும், கலவரங்களும் தவிர்க்கப்படவும் - ஒவ்வொருவரும் உளத் தூய்மையோடு உழைத்து, சமத்துவத்தை எங்கணும் நிலைநிறுத்தப் பாடுபடுவோம் என்ற உறுதியினை மேற்கொள்வோமாக! வாழ்க டாக்டர் அம்பேத்காரின் புகழ்!

அன்புள்ள,

மு. க.

(06-12-1978)

624. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்!

உடன்பிறப்பே,

தந்தை பெரியார் அவர்கள் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் சீர்திருத்தம் காணவேண்டுமென்று கூறியதோடு நில்லாமல், விடுதலை நாளிதழிலும், குடியரசு, பகுத்தறிவுப் பதிப்பக வெளியீடுகளிலும் அவர் கண்ட எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்திக் காட்டினார். அவர் நடைமுறைப்படுத்திய எழுத்துச் சீர்திருத்தம் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் தேவை - எழுத்துகளின் எண்ணிக்கையில் சிக்கனம் தேவை - என்பதற்காக வழிகாட்டப்பட்ட ஒரு முயற்சியே தவிர, அந்தச் சீர்திருத்தம் அத்துடன் முற்றுப் பெற்றுவிட்டதாக அவரேகூடக் கூறவில்லை.

கல்வெட்டுக் காலத்து தமிழ் எழுத்துக்களைப் பார்க்கும்போது, இன்று நாம் கையாளுகிற தமிழ் எழுத்துக்கள் எத்துணை மாறுதல்களுக்கு உள்ளாகியிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பெரியார் நூற்றாண்டு விழாவைக் காரணம் காட்டி, அவரது எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு, நடைமுறைப்படுத்தியுள்ளது. அதை எதிர்த்தும், மறுத்தும் ஐயப்பாடுகளை எழுப்பியும் சில ஏடுகளும், எழுத்தாளப் பெருமக்களும் தங்கள் கருத்துகளை அறிவித்திருக்கிறார்கள்.

அண்ணாவும், கருணாநிதியும்கூட ஏற்றுக் கடைப்பிடிக்காத எழுத்துச் சீர்திருத்தத்தை இந்த அரசு, அவசரமாகக் கொண்டுவருவது ஏன்? என்றும் அவர்கள் கேள்விகளைப் பொழிந்திருக்கிறார்கள்.

அண்ணாவும் சரி, கருணாநிதியும் சரி, மற்றுமுள்ள அண்ணாவின் உண்மைத் தம்பிமார்களும் சரி -பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை மட்டுமல்ல, அவர் கூறியுள்ள எல்லாச்

சீர்திருத்தங்களின் அடித்தள உணர்வுகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றைப் பக்குவமாக நாட்டு மக்களின் உள்ளத்தில் பதியவைத்து அறிவியக்கம் வளரவும், மூடநம்பிக்கைகள் தகர்ந்திடவும் பாடுபட்டுப் பணியாற்றிவரக் கூடியவர்கள்தான்!

எழுத்துச் சீர்திருத்தத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு பெரியார் சொன்ன மற்ற சீர்திருத்தங்களைக் காற்றிலே பறக்கவிடுகிற பண்போ- அல்லது ஏமாற்று வித்தையோ அண்ணாவின் வழிவந்த உண்மைக் கொள்கையாளர்களுக்கு இருந்ததில்லை!

போலிக் கொள்கைவாதிகள் பெரியார் - அண்ணா என்ற பெயர்களைப் போர்வையாகக் கொண்டு மக்களை ஏமாற்றலாம். அந்த மாயம் நீண்ட நாள் நிலைக்காது.

பெரியார் வழி, நோய் தீரக் கண்டுபிடிக்கப்பட்ட கசப்பு மருந்து! அந்தக் கசப்பு மருந்தினைத் தேனில் குழைத்துத் தந்து நோய் போக்க முனைவது அண்ணாவின் வழி!

இந்த இரண்டு வழிகளிலும் பற்றுக் கொள்ளாமல் அய்யா, அண்ணா பெயர்களை மட்டும் பயன்படுத்திக் கொண்டு - அவர்கள் உருவாக்கிய உணர்வுகளின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கும் சில அரசியல்வாதிகளும் தமிழ்நாட்டில் உண்டு!

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அண்ணா முதல்வராக இருந்த காலத்திலும், நான் முதல்வராக இருந்த காலத்திலும் நடைமுறைக்குக் கொண்டு வராததற்குக் காரணம் அந்தச் சீர்திருத்த நோக்கத்தை ஏற்றுக்கொள்ளாததால் அல்ல!

அந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டு கழக அரசு காலத்தில் தமிழறிஞர்களை அழைத்து நானும், கல்வியமைச்சராக இருந்த நாவலர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களும் கலந்துரையாடியிருக்கிறோம்.

மறைந்த டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அதில் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள்.

அவரது மறைவுக்குப் பிறகும்கூட தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நீண்ட நெடிய விவாதங்களைத் தமிழறிஞர்களின் குழுவுடன் இணைந்து நாங்கள் நடத்தியிருக்கிறோம்.

பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தையொட்டி இன்னும் பல வசதியான மாற்றங்களைச் செய்ய முடியுமென்று தமிழறிஞர் பெருமக்கள் அப்போது கருத்தறிவித்தனர்.

ஓரளவு முழுமையான முடிவினைக் கண்டு, அதன் பிறகும் விரிவான அளவில் அந்த முடிவினை விவாதித்து அதற்குப் பிறகு, அதனை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளலாம் என்பதே அன்றைக்கு இருந்த கழக அரசின் எண்ணமாக இருந்ததே தவிர, எழுத்துச் சீர்திருத்தத்தைப் புறக்கணித்து விடும் போக்கு எள்ளளவும் கிடையாது.

இன்றுள்ள அ.தி.மு.க. அரசு, எழுத்துச் சீர்திருத்தத்தில் பெரியார் நடைமுறைப்படுத்திய வழியை - ஒரு தொடக்கமாக அறிவித்து, அதை அரசாங்க அறிவிப்புகள், வெளியீடுகள், விளம்பரங்களில் பயன்படுத்தி வருவதைக் கொள்கை அளவில் நாம் பாராட்டி வரவேற்கிறோம்.

கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட எதனையும் நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்படும் மாறுதல்களை நாம் மறந்து விடவும் கூடாது! மற்றவர் கருத்துகளை மதிக்கவும் தவறக்கூடாது!

எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி ஐயப்பாடுகளை எழுப்பியுள்ளவர்களின் கருத்துகளை அலட்சியப்படுத்தி விடுவதும் நல்லதல்ல!

உயிர் எழுத்துக்களில் "ஐ", "ஔ" என்ற இரண்டு எழுத்து களையும் அகற்றிவிட்டு அவற்றின் ஒலியை மட்டும் வைத்துக் கொள்வது எவ்வாறு இயலும் என்று கேட்கின்ற கேள்வியில் பொருள் இல்லாமல் இல்லை! பனிரெண்டு உயிர் எழுத்துக்களில் "ஐ", "ஔ" என்ற இரண்டு எழுத்துகளைக் குறைத்து பத்து உயிர் எழுத்துகளாக ஆக்குவதால் பெரிய அளவுக்கு எழுத்துச் சிக்கனம் ஏற்பட்டு விடப் போவதில்லை.

அதே நேரத்தில் என்பதை "லை" என்றும் "லை"என்றும்- "ணை" என்பதை "ணை" என்றும்- "னை" என்பதை "னை" என்றும் - "ளை"என்பதை "ளை" என்றும் - "ணை" என்பதை "ணா" என்றும் - "ணை" என்பதை "னா" என்றும் - "ணை" என்பதை "ணோ" என்றும் - "ணை" என்பதை "னோ" என்றும் மாற்றுவதால் அச்சுக்கோக்கும்

எழுத்துக்கள் அதிக அளவுக்குக் குறைகின்றன. தட்டச்சுப் பொறியிலும் அவ்வாறே குறையக் கூடும்.

கா, ஙா, சா, ஞா, டா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ழா, ளா ஆகிய பதினைந்து உயிர்மெய் எழுத்துக்களும் ஒரு "ா" என்ற (கால்) எழுத்தைப் பெற்று திகழும் போது; "ண" - "ற" - "ன" என்ற மூன்று உயிர்மெய் எழுத்துகளும் தனித்து நிற்பது தேவையில்லை அல்லவா?

"ா" என்ற எழுத்து மட்டும் இருந்தால்; அது 'க' வுடன் இணைந்து எப்படிக் "கா" ஆகிறதோ - அதேபோல "ண" வுடன் இணைந்து "ணா" ஆகலாம் அல்லவா? "ற" வுடன் இணைந்து "றா" ஆகலாம் அல்லவா? "ன" வுடன் இணைந்து "னா" ஆகலாம் அல்லவா?

அதேபோல - "கை" - "சை" - போன்ற எழுத்துக்கள் எப்படி அமைகின்றனவோ - அவ்வாறே "வை" - "ளை" - "னை" - "ணை" என்ற எழுத்துகள் அமையுமானால் "ை" என்ற ஒரு எழுத்தைக் கொண்டே அந்த எழுத்துகள் "ஐ" கார ஒலியைப் பெற்றியங்க முடியும்.

அண்ணாவின் "திராவிட நாடு" இதழிலோ - "காஞ்சி" இதழிலோ - "முரசொலி" போன்ற மற்றக் கழக ஏடுகளிலோ இந்த எழுத்துச் சீர்திருத்தம் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மைதான்! பயன்படுத்தாத காரணத்தால் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யென்று யாரும் தவறாகக் கருதக் கூடாது!

பெரியார் மாற்றிக் காட்டியுள்ள எழுத்துகள் மட்டுமன்றி, இன்னும் பல எழுத்துகளில் மாற்றம் செய்யலாம் என்று தமிழ் மூதறிஞர்கள் கருத்தறிவித்துள்ளார்கள்.

எனவே, அனைவரும் கூடி விவாதித்து முற்றாக முடிந்தது என்றில்லா விடினும் - ஓரளவுக்கேனும் நிறைவான வகையில் மாற்றத்தை முடிவு செய்து, பொதுவில் அனைவரும் ஏற்கத் தக்கதும் கடைப்பிடிக்கக் கூடியதுமான நிலை உருவாக வேண்டும் என்பதே நமது கருத்து.

அந்த நிலை ஏற்படும்போது எல்லா ஏடுகளுமே - எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்திடத் தயக்கம் காட்டாமல் ஏற்றுக்கொள்ள முன்வரக்கூடும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைக்கும் என் வீட்டு வாயிற்புரத்தில் உள்ள பெயர்க் கல்லில் "மு. கருணாநிதி". என்றுதான் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் கையெழுத்திடும் பொழுது "மு. கருணாநிதி" என்றுதான் எழுதுகிறேன். அறிஞர் அண்ணா அவர்களும் "அண்ணாதுரை" என்றுதான் கையெழுத்திடுவார். அ.தி.மு.க. கட்சியின் நாளேடான "அண்ணா" இதழ் "அண்ணா" என்ற எழுத்துக்களைத் தலைப்பாகக் கொள்ளவில்லை! "அண்ணா" என்றே இருக்கிறது!

எனவே, தந்தை பெரியார், தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கான வழி காண்பதற்கு "ஒளிவிளக்கை" நமது கையில் வழங்கியுள்ளார்.

அந்த விளக்கினை ஏந்தி - கல்லையும் முள்ளையும் அகற்றி - மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி - நமது தமிழ்மொழியை எளிமையாகக் கையாளவும் - பரவலாகக் கையாளவும் - பொதுவான ஒரு பாதையை அமைக்க வேண்டும்! அந்த நல்ல முயற்சிக்குப் பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தக் கருத்து நிச்சயமாக வெளிச்சம் தரக்கூடியதாகும்.

அன்புள்ள,

மு. க.

(09-12-1978)

625. அணி திரண்டே ஆக வேண்டும்!

உடன்பிறப்பே,

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்! என்று பாரதி பாடிய வரிகள் எவ்வளவு பொருள் பொதிந்தவை என்பதை இன்று தமிழகத்தை ஆளுகின்ற கட்சியினர் நிரூபித்துக் காட்டி விட்டனர்.

ஆளுங் கட்சியினர் தொடர்ந்து நடத்தி வருகின்ற அராஜக வெறியாட்டங்களுக்கு மற்றொரு எடுத்துக்காட்டாக, கடந்த ஒன்பதாம் தேதி காலை சென்னை அண்ணாசாலையில் தங்கள் அநாகரிகத் திருவிளையாடலை நடத்தி மகிழ்ந்திருக் கிறார்கள்.

வெளிநாடு சென்ற முதலமைச்சர் திரும்பி வருகிறார். ஆடம்பரமாக வரவேற்பு வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு அறிக்கை விடுகிறார். தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பலர் உயிர் இழந்திருக்கும் போது ஆடம்பர வரவேற்புகளை ஏற்றுக் கொள்ள மாட்டேன் - இது மிகவும் கண்டிப்பான வேண்டுகோள் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

விமான நிலையத்தில் ஆள் உயர மாலைகள்! ஒரு மணி நேரம் விமான நிலையத்திலேயே வரவேற்பு! பிறகு காரில் பவனி! மீனம்பாக்கம் முதல் கிண்டி வரையில் இருபுறமும் சாலையோரத்தில் பேரிகேடர்கள் கட்டப்பட்டிருக்கின்றன!

கதவு அகலத்தில் வரவேற்பு சுவரொட்டிகள்! பஸ்களில் - லாரிகளில் தொண்டர்களே வாரீர், என்று பத்து நாட்களாக அழைப்பு! சாலையெங்கும் கொடிகள்! தோரணங்கள்!

அண்ணா சிலையில் மேடை! அங்கே ஒரு பொதுக்கூட்டம்! இந்த ஏற்பாடுகளுக்காகக் காலை முதல் பிற்பகல் சுமார் மூன்று மணி வரையில் அண்ணா சாலையில் போக்குவரத்துகள் திருப்பி விடப்பட்டன. அதாவது முதலமைச்சரின் அறிக்கைப்படி மிக எளிமையான (?) முறையில் நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி இது!

புயலும் வெள்ளமும் தமிழ் நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பை விளைவித்து, பல உயிர்களையும் கொள்ளை கொண்டிருக்கும்போது, திட்டமிட்டபடி வெளிநாட்டுப் பவனியை முடித்துக் கொண்டு திரும்புகிற முதலமைச்சருக்கு ஆடம்பர வரவேற்பு பிடிக்குமா என்ன? அது எப்படியோ போகட்டும்!

வெளிநாடு சென்று நலமுடன் திரும்பிய முதலமைச்சரை, எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் நானும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில், வரவேற்பு என்ற பெயரால் சென்னை நகரில் அண்ணாசாலையில் நடைபெற்றுள்ள அநியாயத்தை எண்ணும் பொழுது என் நெஞ்சம் குமுறுகிறது! கண்கள் குளமாகின்றன!

விமானம் தாமதமான காரணத்தால் முதல்வர் எம்.ஜி.ஆர். அண்ணா சிலையருகே நடக்கும் பொதுக்கூட்டத்துக்கு பிற்பகல் இரண்டரை மணிக்குத்தான் வருகிறார். விமானம் உரிய நேரத்தில் வந்திருந்தாலும் கூட, அவர் பனிரெண்டு மணி அளவில்தான் அண்ணா சிலைக்கு வந்திருக்க முடியும். அவரது வருகையை எதிர்பார்த்து அவரது கட்சியினர் காலை பத்து மணியிலிருந்தே அண்ணா சிலையருகே கூடிடத் தொடங்குகின்றனர். இந்த நேரத்தில் நடைபெற்றுவிட்ட சம்பவம்தான் வேதனைக்குரியது!

எட்டாந் தேதி மாலை 81-வது வட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர் பாங்கோ ஆறுமுகம் என்பவர் இயற்கையெய்தி விடுகிறார். மறுநாள் ஒன்பதாம் தேதி காலை பத்து மணி அளவில் அவரது சவத்தை எடுத்துக்கொண்டு கழகத்தினரும், உற்றார் உறவினரும் வழக்கமாகச் சவ ஊர்வலங்கள் செல்லும் வழியில் சிறியதோர் ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர்.

அந்தச் சவ ஊர்வலத்தை அ.தி.மு.க.வினர் தடுத்து நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

அந்த ஊர்வலத்தில் வந்த 81-வது வட்டத்தின் கழக செயலாளர் கிளாரன்ஸ் அவர்கள், நாங்கள் அமைதியாக இந்த வழியே போய் விடுகிறோம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

உடனே அ.தி.மு.க.வினர், கிளாரன்சையும், ஊர்வலத்தில் வந்த உற்றார் உறவினர், பிள்ளை குட்டிகள், கழக நண்பர்கள் அனைவரையும் கொடிக் கம்புகளால் தாக்கியிருக்கின்றனர்.

மறைந்த ஆறுமுகத்தின் சவத்தைக் கீழே தள்ளி உருட்டித் தரதரவென்று இழுத்துச் சென்றிருக்கின்றனர்.

பிண வண்டியில் அரைக் கம்பத்தில் பறந்த கழகக் கொடியைக் கிழித்துத் தீவைத்துக் கொளுத்தியிருக்கின்றனர்.

ஆடவரும், பெண்டிரும் காயப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

கொள்ளிச் சட்டி, உடைக்கப்பட்டிருக்கிறது.

காவல்துறையினர் இவ்வளவு அட்டகாசங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர்.

சவ ஊர்வலம் வழக்கமாகச் செல்லுகிற வழியை விடுத்து திரும்பிச் சென்று கூவம் சாலை வழியாக ஆறுமுகத்தின் சவத்தை எடுத்துக் கொண்டு போக மட்டுமே போலீசார் அனுமதித்திருக்கிறார்கள்.

இல்லாவிட்டால் பாவம், அந்தப் போலீஸ்காரர்களையும் அ.தி.மு.க.வினர், பதம் பார்த்திருப்பார்கள்!

எத்தனை ஊர்களில் போலீஸ் நிலையங்கள் முற்றுகை! எத்தனை போலீஸ்காரர்களை ஆளுங்கட்சியினர் அடித்து உதைத்து இருக்கிறார்கள்! அதையெல்லாம் எண்ணி, அண்ணாசாலையில் நடந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்தத் துணிவில்லாமல் போலீசார், அந்த இலாகாவுக்கே ஒரு பெரும் தலைக்குனிவை ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள்!

எத்தனையோ ஊர்களில், ஏன் சென்னையிலே கூட நமது கழகக் கூட்டங்கள் நடைபெறுகிற நேரத்தில் அந்த வழியாக சவ ஊர்வலங்கள் சென்றிருக்கின்றன! உற்சவ விக்கிரகங்களைக் கூட வாத்திய இசைகளுடன் நமது கழகக் கூட்டங்கள் நடைபெறுகிற இடத்தின் வழியாகத் தூக்கிச் சென்றிருக்கிறார்கள். அந்த சமயத்தில் கூட்டத்தில் ஒலிபெருக்கியைக் கூட நிறுத்திவிட்டு, சவ ஊர்வலமாயினும் - சாமி ஊர்வலமாயினும் - வழி ஒதுக்கிக் கொடுத்து அமைதி காத்திருக்கிறோம்.

ஆனால் ஒன்பதாம் தேதி அண்ணா சிலையருகே முதலமைச்சர் வந்து கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது என்று கூடச் சொல்ல முடியாது!

அவர் வருவதற்கு மூன்று நான்கு மணி நேரத்திற்கு முன்பே இப்படியொரு கொடுமை நடைபெற்றிருக்கிறது என்றால், இந்த

மிருகச் செயலைத் தமிழ்நாடு இன்னும் எத்தனை நாளைக்கு அனுமதித்துக் கொண்டிருக்கப் போகிறது?

கட்சி வேறுபாடின்றி அநேகமாக எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆளுங்கட்சித் தொண்டர்களின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

அவர்களது இரக்கம் வாய்ந்த இதயங்களுக்குக் கழகத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அநீதிகளைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்க, அவர்களாவது இருக்கிறார்களே என்று ஆறுதல் பெறுகிறேன்.

தமிழ்நாட்டில் நியாயம், நேர்மை பற்றி மேடை அதிரப் பேசுகிற அரசியல்வாதிகள் பலர் உண்டு! அவர்கள் இப்போதெல்லாம் வாய் திறக்க மாட்டார்கள்! இந்த அராஜகங்கள் கண்டு; அடடா! என்ன கொடுமை! என அதிர்ச்சியுற மாட்டார்கள்! அவர்களின் முதுகெலும்புகள் பதவி, பவிசு என்னும் சம்மட்டிகளால் அடித்து நொறுக்கப்பட்டுக் கிடக்கின்றன.

நாவில் சொட்டும் தேன்துளிகளைச் சுவைத்துக் கொண்டிருப்போருக்கு அரசியல் நாகரிகம் பற்றிப் பேசிட நினைவுதான் ஏற்படுமா? துணிவுதான் எழுமா?

எனவே, இதுபோன்ற வன்முறைச் சேட்டைகளை - நம் இதயத்தைக் கோடரி கொண்டு பிளக்கும் நிகழ்ச்சிகளை - மக்களுக்கு எந்தப் பாதுகாப்புமில்லை என்கிற அளவுக்குச் சட்டமும் ஒழுங்கும் கெட்டுக் கொண்டு வருவதை - இனியும் அனுமதிக்க முடியாது என்ற உறுதி கொண்டோர் அனைவரும் அணிதிரண்டே ஆக வேண்டும்!

அந்த அணி, அடக்குமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் - எல்லாவிதத் தியாகத்திற்கும் - தன்னை அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

அராஜகம் வீழ்ந்திட - ஜனநாயகம் நிலைநாட்டப்பட - அமைதி காத்திட - மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட - உறுதி கொண்ட நெஞ்சினர், தங்கள் உயிரைப்பற்றிக் கவலைக் கொள்ளாமல் அணி வகுப்பதைத் தவிர வேறு வழியில்லை!

அன்புள்ள,

மு. க.

(11-12-1978)

626. நானே களப்பலியாகிறேன்!

உடன்பிறப்பே,

இந்த அரசின் கவனத்திற்கு நாட்டில் நடைபெறுகிற அராஜகங்களையோ - வேறு தவறுகளையோ சுட்டிக் காட்டினால் அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கிற நாகரிகம் சிறிதுமின்றி உடனே, சுட்டிக்காட்டியவர்கள் மீதே வீண்பழி போடுகிற பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள்.

சென்ற ஆண்டு சட்டப்பேரவையில் இரகுமான்கான் ஒரு குற்றச்சாட்டை ஆதாரத்துடன் எடுத்துச் சொன்னார். ஒரு அமைச்சர் அடிக்கடி மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்து கொண்டேயிருப்பதால் அதையொட்டிய செலவினங்களுக்கு அந்த இலாகாவைச் சேர்ந்தோர் நன்கொடைகளுக்கு வகை செய்ய வேண்டுமென்று அந்தத் துறையின் மாவட்ட அதிகாரியொருவர் சுற்றறிக்கையே அனுப்பியிருந்தார்.

அந்த அறிக்கையை இரகுமான்கான் சட்டப் பேரவையில் ஆதாரமாகக் காட்டினார். அடுத்த நாள் அதற்கு அளிக்கப்பட்ட பதில் என்ன தெரியுமா? அதிகாரி அப்படி நன்கொடை கேட்டு அறிக்கை அனுப்பியது உண்மைதான்! ஆனால் இப்படியொரு யோசனையை அந்த அதிகாரிக்கு வழங்கியவர் இரகுமான்கான்தான்! இப்படி ஒரு பதிலை அரசின் சார்பில் வழங்கினார்கள்.

ஒரு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரின் யோசனையை அந்த அதிகாரி எப்படி ஏற்றுக் கொண்டார்?

யார் இப்படி ஒரு யோசனை சொல்லியிருந்தாலும், அதை அந்த அதிகாரி ஏற்றுக் கொள்ளலாமா? இரகுமான்கான் யோசனை சொல்லியிருந்தால் - பிறகு அவரே அந்த அதிகாரியைப் பற்றிக் குறைகூறி இருப்பாரா? இதைப்பற்றியெல்லாம் அரசு கவலைப்படவில்லை. சிந்திக்கவில்லை, தவறைச்

சுட்டிக்காட்டியவர் மீதே அந்தத் தவறுக்கான பழியைப் போட வேண்டும் என்பதே அரசின் ஆசை!

புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஏராளமான ஆதாரங்களைக் காட்டி, ஆளுங்கட்சியினர் தண்டபாணியிடம் எப்படியெல்லாம் வற்புறுத்திப் பணம் பெற்றனர் என்பதற்கான கடிதங்களையும் படித்துக் காட்டி - உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று சட்டப்பேரவையில் அரசாங்கத்தை நான் கேட்டுக் கொண்டேன். விளைவு என்ன? கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தாரையே மிரட்டினார்கள். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் இராஜரத்தினம் அவர்களின் இல்லத்தில் சோதனை நடத்தினர்.

இப்படிப் பிரச்சினையைத் திசை திருப்பும் தந்திரத்துக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு இதோ!

முதலமைச்சர் வெளிநாட்டிலிருந்து திரும்பிய போது அவரை வரவேற்க அண்ணா சிலையருகே கூடியிருந்த ஆளுங்கட்சித் தொண்டர்கள், அவ்வழியே சென்ற பாங்கோ ஆறுமுகத்தின் சவ ஊர்வலத்தை மடக்கி, சவத்தைச் சாலையிலே உருட்டி, அடித்து மிதித்து, ஊர்வலத்தில் வந்த ஆடவர் பெண்டிர் அனைவரையும் அடித்து, கொள்ளிச் சட்டியை உடைத்து, கொள்ளிச்சட்டி தூக்கி வந்த ஆறுமுகத்தின் தம்பி மகனையும் தாக்கி, சவ வண்டியில் தாழப்பறந்த கழகக் கொடியையும் கிழித்துக் கொளுத்தி, இத்தனைக் காட்டுமிராண்டிச் செயலுக்கும் காவல்துறையினரின் ஒத்துழைப்பையும் பெற்று வெறியாட்டம் ஆடினார்கள் அல்லவா? - அதனைக் கண்டித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் அறிக்கைகள் விட்டனர் என்றதும் இப்போது ஆளுங்கட்சியினர், பாங்கோ ஆறுமுகத்தின் மரணத்திலேயே மர்மம் இருக்கிறது என்று புதுக் கரடியொன்றை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

நாடா? காடா? என்று தெரியாத அளவுக்கு வன்முறைகளை ஆளுங்கட்சியினர் நாள்தோறும் நடத்தி வருகின்றனர். இனிமேல் எதிர்க்கட்சிக்காரர்கள் வீட்டில் யாராவது இறந்து விட்டால் அவர்களைத் தூக்கிச் சென்று இடுகாட்டிலோ சுடுகாட்டிலோ இறுதிக் கடன்களை நிறைவேற்ற முடியுமோ? என்கிற அளவுக்கு அச்சமும் பீதியும் நாட்டிலே தோன்றி விட்டது!

அதிலும் தமிழகத்தின் தலைநகரம் சென்னை மாநகரம்! இங்கே இப்படிப்பட்ட நிலை உருவாகி விட்டது!

நேற்று ஒரு அமைச்சர் ஆஸ்திக சமாஜத்தில் நடைபெற்ற இலக்கியக் கலைவிழா ஒன்றில் பேசினாராம். அப்போது சொன்னாராம். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுகிற இடத்துக்குக் கூட, பிணங்களைத் தூக்கி வருகிற அரசியல் வாதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதாக!

உடன்பிறப்பே, இப்போது புரிகிறதா? நான் கூட எண்ணிக் கொண்டிருந்தேன், மேலிடத்துக்குத் தெரியாமலே அந்தக் கட்சித் தொண்டர்கள் செய்த காரியம் என்று! அமைச்சர் உண்மையை மறைக்காமல் கூறி விட்டார்!

மங்கல நிகழ்ச்சியாம்! நான் மறுக்கவில்லை. புயல் வெள்ளத்தால் தமிழ்நாட்டில் பல பிணங்கள் விழுந்திருக்கும் போது முதலமைச்சருக்கு நடைபெற்றது மங்கல நிகழ்ச்சி யென்று மந்திரியாரே கூறும்போது நான் மறுக்க முடியுமா?

ஆனால் அந்த மங்கல நிகழ்ச்சி பிற்பகல் இரண்டரை மணிக்கல்லவா நடைபெற்றது? சவ ஊர்வலம் - அதிலும் குறைந்த எண்ணிக்கை கொண்டோர் நடந்து சென்ற சவ ஊர்வலம், காலை பத்து மணி அளவில் அல்லவா அந்தப் பக்கம் வந்திருக்கிறது!

சில நிமிட நேரம் ஆளுங்கட்சியினர் அமைதியாக இருந்திருந்தால் அந்தச் சவ ஊர்வலம் அந்த இடத்தை கடந்து சென்றிருக்குமே!

பாடைப் பிணம் பாதையிலே உருட்டப்பட்டிருக்காதே!

கொள்ளிச் சட்டி உடைபட்டிருக்காதே!

கொடி கொளுத்தப்பட்டிருக்காதே!

ஆளுங்கட்சியினர் அத்தகைய பொறுமையைக் காட்டாமல் இந்த அநாகரிகச் செயலில் ஈடுபட்டதை முதல்வரோ, மற்றவர்களோ கண்டித்து, வருத்தம் தெரிவிப்பதற்குப் பதில் - திசை திருப்பும் பேச்சுகளில் ஈடுபடுகிறார்களே! இது நியாயந்தானா?

நெஞ்சு கொதிக்கும் நிகழ்ச்சியை நடத்திவிட்டு, கொஞ்சமும் மனிதாபிமானம் இன்றி ஆளுங்கட்சியினரும் - அமைச்சர்களும் நடந்து கொள்வது முறைதானா?

இதையெல்லாம் தட்டிக் கேட்கத் தமிழ்நாட்டில் ஆள் இல்லாமற் போய்விட்டது என்ற நினைப்பா தர்பார் நடத்துகிறவர்களுக்கு!

உடன்பிறப்பே,

இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க - நமது இதய வேதனையை வெளிப்படுத்த - இனியும் இத்தகைய இழிசெயல்கள் நடைபெறாமல் தடுக்க - ஒரு அணி திரண்டே ஆக வேண்டும்!

உறுதியாகச் சொல்லுகிறேன்! உதிரம் சொட்டும் உள்ளத்துடன் சொல்லுகிறேன்! அந்த அணியில் தலைவனாக நின்று அல்ல - தொண்டனாக முன் நின்று நானே முதல் களப் பலியாகவும் தயாராக இருக்கிறேன்.

அந்த நிலைமைக்கு என் நெஞ்சில் நெருப்பைக் கொட்டியிருக்கிறது இந்த நிகழ்ச்சி!

இருப்பது ஒரு உயிர்தான் - அது போகப் போவதும் ஒரு முறைதான் - அது நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே - என்று அண்ணா சொன்னார்.

நாட்டைக் காடாக்கி மகிழும் நாச சக்திகளைத் தடுக்க, இந்த உயிர் போவது பெருமை தரக்கூடிய ஒன்றுதான்.

அன்புள்ள,

மு. க.

(12-12-1978)

627. அன்பில் அழைக்கிறார்!

உடன்பிறப்பே,

திருச்சி மாநாடு - தீரர்கள் கூடிடும் பாடிவீடாக அமையப் போகிறது!

திக்கெட்டுமிருந்து நமது கழகச் செயல்வீரர்கள் குடும்பம் குடும்பமாக வரப்போகிறோம் என்ற செய்திகளை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஒளிச்சுடர்களை ஏந்தித் தொலைவில் உள்ள பல ஊர்களிலுமிருந்து தொடர் ஓட்டமாக வருகிறோம் என்று உடன்பிறப்புகள் தெரிவித்த வண்ணமுள்ளனர்.

பேருந்துகள் கிடைக்கவில்லை. எனினும் கிடைத்திடும் அளவுக்கு அவற்றில் பயணம் செய்து திருச்சியை அடைகிறோம். இல்லையேல் புகைவண்டிகள்!

அந்த வசதியும் இல்லாத இடங்களில் இருந்து சைக்கிள்கள் ஆயிரக்கணக்கில் வர இருக்கின்றன.

மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், அனைத்தும் வருகிற 23, 24 நாட்களில் திருச்சி அண்ணா அரங்கத்தை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கும்.

நகர்ந்திடும் எனக்கூறிடக் காரணம் என்ன? புரிகிறதா உனக்கு? சாலைகள் அனைத்திலும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டு சென்றிடும்போது எத்துணை விரைவு வண்டிகளாயினும் நகர்ந்துதானே செல்ல வேண்டும்.

திருச்சி, நமது கழக வரலாற்றில் சிறப்புக்குரிய இடத்தைப் பெற்ற நகரம்! ஏன், நமது கழக வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனையை உருவாக்கிய இடமுங்கூட!

தேர்தலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்துக்குத் தீர்மான வடிவம் கொடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள்

பேருரையாற்றிய சரித்திரப் புகழ் பெற்ற மாநாடு திருச்சியிலேதான் நடைபெற்றது!

கல்லக்குடி போராட்டக் காவியம் எழுதிடக் காஞ்சியில் பேனாவைத் தோய்த்துக் கொடுத்ததும் திருச்சிப் பாசறைதான்!

சீறிவரும் இந்திப் பகையை எதிர்த்து சினவேங்கைத் தமிழர் கூட்டம் தோள் தட்டியெழுந்தபோது, செந்தமிழுக்குத் தீங்கு வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ? எனக் கேட்டுத் தீயிட்டுத் தன்னைப் பொசுக்கிக் கொண்டு எலும்புத் துகள்களாக மாறினானே சிங்கத் தமிழன் சின்னச்சாமி! அந்த மாவீரன் மடிந்து கிடந்த மண்ணல்லவா, திருச்சி மண்!

அந்த மண்ணின் மைந்தனின் புகழ் பாடிட, அவனைப்போல மேலும் ஏழு பேர், தங்கள் மேனிகளைத் தீயின் கொழுந்து கொண்டு குளிப்பாட்டிக் கொண்டனரே! அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திட! நாற்பதாண்டு கால மொழிப் போராட்டத்தில் உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லையென்று ஓயாதுழைத்த உத்தமர்களின் நினைவை நெஞ்சில் நிறுத்தி, பயணம் தொடர்ந்திட ஊக்கமளிக்கும் வீரர் கோட்டமாக விளங்க இருக்கிறது திருச்சி மாநாடு!

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா? எனக்கேட்டு வெண்தாடி அசைய வீரக்குரல் விண்ணில் மோதி எதிரொலிக்க முரசு கொட்டிய தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தைத் தமிழகத்து மேதை - முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் திறந்து வைத்து நமது போர் முழக்கத்திற்கு விரிவான விளக்கம் தர இருக்கிறார்.

தந்தைக்கு உற்ற மகனாக - தமிழ் மக்களின் இதய நாடியாக - இந்தி எதிர்ப்புப் போரின் தளபதியாக - நமது உயிர் அணு ஒவ்வொன்றிலும் கலந்துள்ள உணர்வாகத் திகழும் அண்ணனின் திருவுருவப் படத்தை, இனமானங்காக்கும் பகுத்தறிவுப் பரிதியாம் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் இளவல் வீரமணி திறந்து வைத்து வீரஉரை நிகழ்த்துகிறார்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று மார்தட்டிய போர்ப்பாட்டுப் புரட்சிக்கவிஞரின்

படத்தைக் கொள்கையில் பிறழா இலட்சியக்குன்றம் கவிஞர் முடியரசன் திறந்து வைத்து உரை நிகழ்த்தவும் -

அஞ்சாநெஞ்சன் - அடலேறு - அண்ணன் அழகிரியின் படத்தை அவருடன் நெருங்கிப் பழகிய நமதியக்கத்தின் தூண் போன்றார் - அருமை மன்னை திறந்து வைக்கவும் -

அழகிரி நடத்திய அணிவகுப்பில் திருச்சியிலிருந்து சென்னை வரையில் நடந்து வந்த வீராங்கனை - சுயமரியாதைச்சுடர் மூவலூர் மூதாட்டியாரின் படத்தை அயராது கழகப் பணியாற்றும் அலமேலு அப்பாத்துரையார் அவர்கள் திறந்து வைக்கவும் -

தமிழுக்கு உயிர் கொடுத்த தாளமுத்து, நடராசன் முதல் தீக்குளித்தோர், குண்டடிபட்டு உயிர் தந்தோர் - என்ற நீண்ட பட்டியலில் இடம் பெற்ற தியாகிகளின் படங்களை நமது கழகத்தின் சண்டமாருதப் பேச்சாளர் இளம்பரிதி திறந்து வைக்கவும் -

முதல்நாள் மாநாடு உணர்ச்சிப் பிழம்பாகவே மாறிவிடும்!

அத்துடன் முடிவதில்லை ஆரம்பநாள்! வலிவுமிக்க அரணாகத் திகழும் கழகத்தின் வாய்மை மிக்கப் போர்வாள் என்று வாலிபர் கூட்டம் வாழ்த்துரைக்கும் இளைஞர்ஏறு கோபாலசாமி எம்.பி. மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

புயல்கள் அடித்தபோதும் - சூறாவளிகள் சுழன்று சுழன்று வீசியபோதும் - இடம்மாறும் இயல்பினர்க்கு இங்கில்லை இடமென உரைத்து எஃகு இதயம் படைத்தவராக இந்த இயக்கம் நடத்தும் தளபதிகளில் ஒருவராம் புலவர் பெருந்தகை கோவிந்தன் அவர்கள் தலைமையேற்று இருநாள் மாநாட்டை நடத்துகிறார்.

நானும், பொதுச்செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும், தலைமைக் கழகச் செயலாளர்களும் கலந்து கொள்கிறோம்.

இந்தியாவுக்குத் தமிழே ஆட்சிமொழியாக வேண்டுமென்று அன்றைக்கே குரல் கொடுத்த கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் பேரன்புக்குரியவராம் - அடுக்கடுக்காகக் கருத்துக்களையெடுத்து வைத்து அழகான வாதத்தை அமைப்பவராம் - அருமை நண்பர் அப்துல் சமது அவர்களும்,

பசும்பொன் தேவரின் பட்டாளத்துத் தளகர்த்தராக விளங்கும் அன்பு நண்பர் ஆண்டித்தேவர் அவர்களும் சிறப்புரை யாற்றுகிறார்கள்.

அன்பில் அழைக்கிறார் என்று அண்ணன் எழுதினாரே! அந்த வாசகம் - கல்லில் செதுக்கியதன்றோ!

இன்றும் அவரேதான் அழைக்கின்றார்! நம்மை திருச்சிக்கு!

அவரது அழைப்பில் உள்ள கனிவைக் கண்டாயா? பணிவை உணர்ந்தாயா? எதற்கும் அஞ்சாத அவரது துணிவைப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறாயே! அந்தத் துணிவை அனைவரும் பெற்றிடத்தான், உடன்பிறப்பே! உன்னை அழைக்கிறார் அன்பில்!

அவர் அழைப்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் இந்தக் கடிதத்தில்!

என் அழைப்பு அடுத்த கடிதத்தில்!

அன்புள்ள,

மு. க.

(16-12-1978)

628. கூடுவோம்! கொடி உயர்த்துவோம்!

உடன்பிறப்பே,

இடையே ஒருநாள்தான் இருக்கிறது. டிசம்பர் 23 சனிக்கிழமையும், 24 ஞாயிற்றுக்கிழமையும் திருச்சியில் அகமும் முகமும் மலர்ந்து நீ உலவிடும் காட்சியை - ஊர்வலத்தில் கொடியேந்தி நடந்திடும் மாட்சியை - அசைவது தலைகளோ, அல்லது கடலின் அலைகளோ என வியந்திடும் எழுச்சியை - அண்ணா அரங்கில் அமர்ந்து அரிமா எனக் காட்டிடும் உணர்ச்சியை - நான் கண்டு களிக்கப் போகிறேன். மாநாடு முடிந்த பிறகும் என் மனக் கண்ணில் மறையாத ஓவியமாக மாவீரர்கள் தீட்டிய காவியமாகத்தான் திருச்சியில் நீ நடத்திக் காட்டப்போகும் அணிவகுப்பு இருந்திடப் போகிறது.

மொழிப் போராட்டத்தின் நாற்பதாண்டுக் கால வீர வரலாற்றுக்கு - தியாகச் சரித்திரத்திற்கு சொந்தக்காரர்களல்லவா நாம்!

இனியும் அந்தப் போராட்டம் ஒரு முடிவுக்கு வர எவ்வளவு காலமாகுமோ, அதுவரையில் நமது போர்க் கொடி தாழ்ந்திடப்போவதில்லை! நாம் கொட்டுகிற போர் முரசின் ஒலி நின்றுவிடப் போவதில்லை!

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்தில் அவரால் முடுக்கிவிடப்பட்ட இந்தி மொழி ஆதிக்கம், பின்னர் அவராலேயே எதிர்க்கப்படுகிற அளவுக்கு தொடர்ந்து மொழிப் போர்க்களத்திலே நின்று வருகிறோம் நாம்.

பெரியார் அவர்களின் தலைமையில் 1938-ஆம் ஆண்டு புலி, வில், கயல் பொறித்த தமிழ்க் கொடியேந்தி ஆயிரக்கணக்கில் நமது இயக்கத்தின் வீரர்களும் வீராங்கனைகளும் அடக்குமுறைகளை இன்முகத்துடன்

ஏற்றுக் கொண்டனர். உடலில் விழுப்புண்களைப் பெற்றனர். சிறையில் வாடினர். தாளமுத்து, நடராசன் என்ற தமிழ்க்குல காவலர் இருவர் காராக்கிரகத்திலிருந்து பிணங்களாக வெளியே வீசப்பட்டனர்.

இந்தியை எதிர்க்கும் படைவீரர்களின் எண்ணிக்கை - ஆயிரம் பதினாயிரமாகப் பெருகி இலட்சக்கணக்கானவர் என்ற அளவுக்கு இன்று உயர்ந்து நிற்கிறது.

கழகம் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொண்டு எந்த நேரத்திலும் அறப்போர்க் களம் சென்றிடத் துணிந்து நிற்கும் தன்னலமற்ற படையொன்று, வலிவு மிகுந்ததாகவும், உறுதி குலையாததாகவும் பதவிகள், பவிசுகள், அதிகாரங்கள், ஆலவட்டங்கள் பற்றிக் கவலைப்படாமல் அவற்றைக் கால்தூசுக்குச் சமமாகக் கருதக் கூடியதாகவும் நம்மிடம் இருக்கின்ற காரணத்தால்தான் சோதனைப் புயல்கள் அடித்த நேரத்தில் எல்லாம் கழகம் கட்டுக்கோப்புக் குலையாமல் இயங்க முடிகிறது! இயங்கியும் வருகிறது!

நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் சம்மட்டி அடிகளால் கழகத்தின் மண்டை பிளக்கப்பட்டு விடும் என்று கருதினார்கள். உரோமங்கள் உதிர்ந்து சம்மட்டிதான் நொறுங்கிப் போனதே தவிர, கழகமென்னும் தலை அதிர்ச்சிக்கு ஆளாகவில்லை.

மிசாக் கொடுமை கண்டு மின்மினிகள் பறந்தோடி விட்டன. விண்மீன்களென விழுந்தனர் வீரமறவர்கள் சிட்டிபாபுவும், பாலகிருஷ்ணனும்! உதிரம் சொட்டச் சொட்ட உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் அடிபட்டு ஓராண்டுக்கு மேலாக மிசாக் கைதிகளாக அடைபட்டிருந்த போதும், ஆழ்கடலில் சிப்பிக்குள் இருந்திடும் முத்தினைப் போலத்தான் சிறைக்குள்ளும் இருந்தார்கள்!

கொள்கை காத்திட, நெருப்பில் குளித்து உயிர் விடுத்த தமிழ் மானமறவர்கள் மறைந்தும் மறையாமல் வாழுகின்ற பாசறையல்லவா தி.மு.கழகம்!

வெற்றிகள் நம்மை வெறி கொள்ளச் செய்ததில்லை! தோல்விகளால் நாம் துவண்டு போனதும் கிடையாது! துரோகச் செயல்களால் யாரும் நமது வளர்ச்சியைத் தடுத்துவிட

முடியவில்லை! நமது இலட்சிய முகட்டில் ஏறி நின்று விண்ணைத் தொடுமளவுக்கு வெற்றிக் கொடியைப் பறக்கவிடும் வரையில் காலைக் கீறி இரத்தம் கசியவைக்கும் முட்புதர்களைப் பற்றியோ - கழுத்தை நோக்கிப் பாயவரும் பட்டாக் கத்திகளைப் பற்றியோ - கவலைப்படாமல் தொடர்ந்து நடந்து கொண்டேயிருப்போம்.

களத்தில் விழுந்தவர்களை எடுத்துப் புதைத்து விட்டு, அந்தக் கல்லறையில் கண்ணீர்ப் பூக்களைச் சூட்டிவிட்டு வெற்றியைத்தேடி விரைந்தோடும் வீரனின் நெஞ்சம்தான் நமது கழக உடன்பிறப்பின் நெஞ்சம் என்பதை நான் அறியாதவனல்ல!

எண்ணிப் பார்க்கிறேன்! இப்போதும் என் இதயம் பெருமிதத்தால் விம்மிப்புடைக்கிறது! இந்தியாவின் இருண்ட காலம் என வர்ணிக்கப்படும் நெருக்கடி நிலைக் காலத்தில் நாடு முழுதும் இரண்டு இலட்சம் அரசியல்வாதிகள் சிறைக் கோட்டத்தில் விசாரணையின்றி அடைக்கப்பட்டனர். நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக இங்கே நமது கழக ஆட்சி கலைக்கப்பட்டது. நமது கழகத்தினர் நானூறுக்கு மேற்பட்டோர் தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் - எந்தவித விசாரணையுமின்றி வழக்கு மன்றம் செல்வதற்கும் வழியின்றித் தடுக்கப்பட்டு மிசா கைதிகளாக வதைக்கப்பட்டனர். ஏடுகளில் சுதந்திரமாக எழுதிடத் தடை! கழகக் கொடிகள் பறக்க முடியாது! கழகத்தவர் வெளியே நடமாட முடியாது! தலைமைப் பீடத்திலோ எனக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் மற்றும் சில முக்கிய தலைவர்களுக்கும் தெரியாமல் இரகசியத் திட்டங்களை வகுத்து கழகத்தையே உருக்குலைக்கச் சில பேர் திரைமறைவில் சதி நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆட்சியிருந்தவரையில் குதூகலக் கூத்தாடிக் கொண்டிருந்தவர்கள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது என்றதும் கைபிசைந்து குமுறிக் கொண்டிருந்தார்கள்.

இப்படியொரு நிலை! ஒரு பக்கம் சர்க்காரியா விசாரணை! வீடுகள் சோதனை! அதிகாரிகளை மிரட்டி அவதூறுகளைப் பரப்புகிற செயல்! கழகத்தின் மீது களங்கச் சேற்றை வாரி இறைப்பதே அரசாங்கப் பிரச்சார இயந்திரங்களின் வேலை!

இத்தனை கொடுமைகளுக்கிடையிலே கொதித்துக் கொண்டிருந்த உள்ளத்துக்குக் குளிர்ச்சி ஏற்படுத்தியது, உடன்பிறப்பே நீயல்லவா!

தமிழகத்தின் எல்லாத் திசைகளிலுமிருந்து பேருந்துகளில் வந்து குவிந்தார்களே, அந்த உடன்பிறப்புகளை - இதோ வழக்கு நிதியாக எங்கள் காணிக்கை என்று அள்ளி வழங்கினார்களே அந்த உடன்பிறப்புகளை - என்னால் மறந்திட முடியுமா?

ஓராயிரம் ஈட்டிகள் பாய்ந்த என் இதயத்துக்கு உடன்பிறப்பே, நீ மருந்து தடவிக் கொடுத்த ஒத்தடமல்லவா அந்தப் பாசமும் அன்பும்!

நான் உனக்கு என்ன செய்து விட்டேன்! உன்னை அமைச்சராக ஆக்கினேனா? அல்லது சட்டமன்றத்துக்கோ பாராளுமன்றத்துக்கோ உறுப்பினராக அனுப்பினேனா? ஒரு மேயர் பதவி - ஒரு நகராட்சி அல்லது ஊராட்சித் தலைவர் பதவி - ஏதாவது ஒன்றுதான் அளித்தேனா?

என் அன்பே, நீ அவற்றையெல்லாம் என்னிடம் எதிர்பார்க்காதது மட்டுமல்ல! அந்தப் பதவிகளையெல்லாம் நீதான் எங்களுக்கு வழங்கிட ஓயாது உழைத்தாய்! உதிரம் சிந்தினாய்!

அந்தப் பதவிகள் பெற்றவர்கள் சிலர் என்னை மட்டுமல்ல, உன்னையும் உதைத்துவிட்டு உல்லாச வாழ்க்கையைத் தேடிச் சென்றுவிட்ட பிறகும், நீ மனச் சோர்வடையாமல் என்னையும் பேராசிரியர் போன்றவர்களையும் சோர்வடையச் செய்யாமல் கழகம் கட்டிக் காக்கும் உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியாமல் திகைக்கிறேன், கண்மணியே - திகைக்கிறேன்!

அந்தத் திகைப்பிலே என் இமைகளின் ஓரத்தில் - அருகம்புல்லின் நுனியில் ஒளிவிடும் பனித்துளி போல் கண்ணீர்த் துளிகள் ஒளிவிடுவதை நீ பலமுறை பார்த்திருப்பாய்! நீ பார்த்து உணர்ச்சி வசப்பட்டு விடக் கூடாதேயென்று நானும் சிரமப்பட்டு அதை மறைத்துக் கொண்டிருக்கிறேன்! இயன்ற வரையில்தான்!

ஒரு மாதம் ஓடிவிட்டதல்லவா உன்னை ஓடோடி வந்து ஊர் ஊராகச் சந்தித்து!

அந்தத் தாங்க முடியாத பிரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் திருச்சியில் கூடுகிறோம்!

ஒவ்வொரு உடன்பிறப்பிடமும் தனித் தனியாகப் பேச இயலாதுதான்! ஆனால் ஒன்றிவிட்ட நமது உணர்வுகள் கூடிக்குலாவிப் பேசி மகிழ்வதை எந்த இடையூறுகளும் தடை செய்ய முடியாதல்லவா?

திருச்சி உன்னை வரவேற்கத் தயாராகி விட்டது! நாள் தவறினாலும் நமது அன்பில், தொலைபேசியில் பேசத் தவறுவதில்லை!

மிகப் பெரிய பந்தல் என்கிறார் - மாநாட்டுப் பணிகளையாற்றிட அமைந்துள்ள குழுக்கள் விரைந்து செயலாற்றுகிற செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன! என்னதான் பெரிய பந்தல் போட்டாலும் நீ வந்து அமர்ந்தால் கூட்டம் பெரிது - பந்தல் சிறிது என்றுதான் ஆகிவிடும். அனுபவத்தில் சொல்லுகிறேன்.

வேண்டுகோளும் உண்டு! ஊர்வலம், ஏற்கனவே வகுக்கப்பட்ட பாதையிலேயே செல்ல வேண்டும். ஊர்வலத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்போம் என்ற குரல் மட்டுமே ஓங்கி ஒலிக்க வேண்டும். பெரியார் வாழ்க! பேரறிஞர் அண்ணா வாழ்க! இந்தி எதிர்ப்புத் தியாகிகள் வாழ்க! என்கின்ற வாழ்த்தொலிகளே கிளம்பிட வேண்டும். அமைதிக்கு எள்முனையளவு ஊறும் நேராமல் ஒவ்வொரு உடன்பிறப்பும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இரு நாள் மாநாட்டிலும் இந்த என் வேண்டுகோளை ஏற்றுச் செயல்படக் கோருகிறேன்.

அதிகச் செலவில் அழகான ஏற்பாடுகள்! எழுச்சி மயமான மாநாடு! நுழைவுச் சீட்டு வாங்காமல் யார் உள்ளே நுழைந்தாலும் அது அநாகரிகம் என்று அவர்களுக்கு நீயே அறிவுரை கூறுவாய் என்று எனக்குத் தெரியும்.

எல்லா வகையிலும் மாநாடு சிறப்புடன் அமைந்திட - நாம் எழுப்பிடும் இந்தி எதிர்ப்புக் குரல் திக்கெட்டும் எதிரொலிக்க - கூடுவோம் திருச்சியில்! கொடி உயர்த்துவோம் திருச்சியில்!

அன்புள்ள,

மு. க.

(21-12-1978)

629. நனைந்தாய் வாழி உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப

மணிப்பூ ஆடை அது போர்த்துக்

கருங்கயற்கண் விழித்தொல்கி

நடந்தாய் வாழி காவேரி!

சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் கானல் வரியில் காவேரி நதிக்குச் சிறப்புரைத்து எழுதியுள்ள பாடலின் ஒரு பகுதி இது! இதனை நான் பலமுறை படித்துப் படித்துச் சுவைப்பது வழக்கம்.

திருச்சி மாநாட்டில் இரண்டு நாட்கள் ஊர்வலத்திலும், அண்ணா அரங்கிலும் கொட்டிய மழையில் கொஞ்சமும் சோர்வடையாமல் - உள்ள உறுதியுடன் ஆர்வம் கொப்பளிக்க - நீ கலந்துகொண்ட காட்சியை நினைக்கும்போது நனைந்தாய் வாழி உடன்பிறப்பே! என்று ஒலித்திடத் தோன்றுகிறது எனக்கு!

நண்பர் அன்பிலின் அழைப்பையும், நான் அன்பு கலந்து விடுத்த அழைப்பையும் ஏற்று, இலட்சக்கணக்கில் திருச்சி நகரில் கூடிய உனது உணர்ச்சிப்பெருக்கைக் கட்டுரை தீட்டி மகிழ்வதா? கடிதம் எழுதிப் பூரிப்பதா? கவிதை எழுதிப் புகழ்வதா? எதுவாயினும் நின் உணர்வைப் பாராட்ட வார்த்தை கிடைத்திடவில்லை எனக்கு!

மழை கொட்டியபோதிலும் கூட பிரம்மாண்டமான ஊர்வலம் என மாலை முரசு ஏடு - சென்னை - திருச்சி இதழ்களிலும் மற்ற மாவட்ட இதழ்களிலும் செய்தி வெளியிட்டது.

சென்னையிலிருந்து வெளிவரும் தினமணியில் செய்தி மிகமிகச் சுருங்கிவிட்டதென்றாலும், மதுரையிலிருந்து வெளிவரும் தினமணி திருச்சி ஊர்வலம் பற்றிக் குறிப்பிடும்போது இலட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தின்

முன்பகுதி மாநாட்டுப் பந்தலை அடைந்தபோது, இறுதிப் பகுதி ஊர்வலம் புறப்பட்ட அண்ணா சிலைக்கு அருகிலேயே இருந்தது - அவ்வளவு நீண்ட ஊர்வலம் என்று உண்மையை மறைக்காமல் வெளியிட்டிருந்தது.

திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலையில் இருந்து ஊர்வலம் தொடங்குவதாகத் திட்டமிட்டிருந்த போதிலும், அங்கு வந்து குழுமிய கூட்டத்தைத் தாங்குவதற்கு இடம் போதாத காரணத்தால் அண்ணா சிலைக்குப் பின்னால் வெகு தொலைவிலிருந்துதான் ஊர்வலத்தைத் தொடங்க வேண்டியதாயிற்று என கட்சிச் சார்பற்ற சில ஏடுகள் கூட சுட்டிக் காட்டியிருந்தன.

ஐந்து இலட்சம்பேர் அணிவகுத்து வந்தனர் என்றால், வீதிகளில் நாலுபேர் ஐந்துபேர் என்று வரிசைப்படுத்தி நடந்து வந்தனர் என்றில்லாமல் வீதி நிரம்பி வழிய அலைகடல்போல் அகன்ற பரப்பில் நகர்ந்துவந்த ஊர்வலம் அது! அதேபோல் வீதிகளின் இருமருங்கிலும் மழையில் நனைந்தவாறு ஊர்வலத்தைப் பார்த்தோர் தொகை ஐந்து இலட்சத்தையும் தாண்டும்!

அதுவுமென்ன மாலை நேரமா! அல்ல! காலை 11 மணிக்கு புறப்பட்ட ஊர்வலம்! எந்த நிலையில்? பெய்திடும் மழைநீர் தலையில் வழிந்து உடைகளை நனைத்துக் கொண்டேயிருக்கும்போது! எதுவரையில்? காலை 11 மணிக்குப் புறப்பட்டு, பிற்பகல் இரண்டரை மணி அளவுக்கு ஊர்வலத்தின் முன்பகுதி மாநாட்டுப் பந்தலை அடைந்துவிட்டது என்றாலும் இறுதிப் பகுதி மாலை நாலு மணிக்கு பந்தல் முகப்புக்கு வந்து சேர்ந்ததே, அதுவரையில்!

முதல்நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற மழை சிறிதுநேரம் நின்றிருந்தது. ஆனால் அன்றிரவும், மறுநாள் முழுவதும் மழை விடவே இல்லை! கீழே உட்கார முடியாத அளவுக்குப் பந்தலில் தண்ணீர்! பந்தல் கீற்றுகளில் இருந்து தொடர்ந்து கொட்டிக்கொண்டேயிருக்கும் மழை நீர்!

காற்றோடு கலந்து சாட்டையடி போல் விழும் மழைத்துளிகள்! இடைவிடாது பெய்த அந்த மழையைக் கண்டு நான் வேதனை

அடைந்தேன். அதே நேரம் அந்த மழையைப் பாராட்டவும் தோன்றியது எனக்கு!

இரண்டு நாள் மழையிலும் அந்த மாநாட்டுப் பந்தலிலே அமர்ந்து கழக முன்னணியினர், தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரின் பேச்சையும் உணர்ச்சியுடன் கேட்டு - இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தையும் நிறைவேற்றிக் கொடுத்துவிட்டுத்தானே பந்தலைவிட்டு அகன்றாய்!

பிஞ்சுக் குழந்தைகளை மடியிலே அமர்த்திக்கொண்டு, நனைந்த துணிகளையே அந்தச் செல்வங்களுக்குக் குடையாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அன்புச் சகோதரிகளின் ஆர்வத்தை - அந்த மாநாட்டில் கண்டு எத்துணை வியப்புக்கு நான் ஆளானேன் தெரியுமா?

இந்த மழையைக் கண்டா ஓடி ஒளிந்துகொள்வோம்? இதைவிடக் கடுஞ்சோதனைகள் கழகத்திற்கு ஏற்பட்ட போதெல்லாம் ஓடி ஒளிந்தவர்கள் அல்லவே நாங்கள்? வேதனையில் கைவிட்டு வேறிடம் சென்றவர்களின் பட்டியலில் என்றைக்கும் இடம்பெற எண்ணாத வீரப்பட்டாளம் இது!

என்று நீ எனக்கு விளக்கமளிப்பாய்! அதுவும் எனக்குத் தெரியும்!

மாநாட்டில் பேராசிரியர் முன்மொழிந்து நான் வழிமொழிந்த தீர்மானம், நமது மொழிப்போர் வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறது. மொழிப்பிரச்சினைக்கு அண்ணா வழியில் நாம் காணுகிற தீர்வு என்ன என்பதை விளக்குகிறது. மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் நமது தமிழ்மொழியும் ஒன்றாக இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழியாகிறவரையில் ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

திணிக்கவில்லை என்று கூறிக்கொண்டு இந்தியை மறைமுகமாக நுழைப்பதை ஏற்க முடியாது. எதிர்த்தே தீருவோம் என்று முழங்குகிறது. யாருக்காவது ஐயம் இருப்பின் திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தை ஒருமுறைக்கு இருமுறை படித்துப்

பார்க்கச் சொல்! நமது மொழிக் கொள்கை பற்றிய தெளிவு பிறக்கும் அவர்களுக்கு!

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்து - வருகிற ஜனவரி 25, ஜனவரி 26 ஆகிய நாட்களில் நாம் தொடங்க இருக்கிற அறப்போர் முயற்சிக்கும் உறுதுணையாக இருந்து ஒத்துழைத்த என்னுயிரினும் மேலான உடன்பிறப்பே! பொழியும் மழைபற்றிக் கவலைப்படாமல் மொழியும் நாடும் காக்க நீ பூண்டுள்ள உறுதியின் முன்னால் - அந்த உறுதி கொழிக்கும் உன் நெஞ்சின் முன்னால் - நான் தலைதாழ்த்தி வணங்குகிறேன்.

அழைப்பினையேற்று வந்து மழையில் - சேற்றில் - சகதியில் - அல்லும் பகலும் அவதிப்பட்டாயே! உன் உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறதோ என்ற மனச்சங்கடம் என்னை வாட்டுகிறது.

நடந்தாய் வாழி காவேரி என வாழ்த்தினார் அடிகள்!

அடியேன் உன்னை நனைந்தாய் வாழி உடன்பிறப்பே! என வாழ்த்துகிறேன்.

மழையில் நடந்தும் கலங்காமல்
மணிக்கரம் தன்னில் கொடியேந்தி
மொழியும் நாடும் காத்திடவே
நனைந்தாய் வாழி உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(27-12-1978)

630. அந்தக் கனல் அணையாது!

உடன்பிறப்பே,

மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் திருவனந்தபுரத்தில் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார். பொதுவாகவே மத்திய அமைச்சர்கள் தென் மாநிலங்களுக்கு வருகிற நேரங்களில் எல்லாம் இந்தியைக் கட்டாயமாக ஆட்சிமொழியாக்க மாட்டோம் என்றும் இந்தியை யார் மீதும் திணிக்கமாட்டோம் என்றும் உறுதி மொழிகளை வாரி இறைப்பது வாடிக்கையாகிவிட்ட கதையாகும்.

இப்போது மொரார்ஜி தேசாய் அவர்கள் அந்த வாசகத்தை வேறுவிதமாக மாற்றி அமைத்திருக்கிறார். படிப்பதற்கும் கேட்பதற்கும் கவர்ச்சிகரமானதாக அந்த வாசகம் அமைந்துள்ளது.

மக்களுடைய கட்டாயத்தின் பேரில் இந்தி, பொது ஆட்சிமொழியாக வேண்டுமே தவிர - அரசாங்கத்தின் கட்டாயத்தின் மூலமல்ல!

வாசக அமைப்பில் மாறுதல் தென்படுகிறதே தவிர - இந்தியை மட்டுமே எப்படியும் இந்தியாவின் பொது ஆட்சிமொழியாக்கிவிட வேண்டுமென்ற மத்திய அரசின் குறிக்கோளில் இருந்து அவர்கள் எள்முனையளவு கூடப் பின்வாங்குவதாகத் தெரியவில்லை. அதற்கு இன்றையப் பிரதமரின் திருவனந்தபுரம் பேச்சே சான்றாக விளங்குகிறது.

சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. நம்முடைய நாட்டிலும்தான் ஆட்சிமொழிகளாக மூன்று மொழிகள் இருக்கின்றன. ஆனால் யாரும் இந்தியாவில் உள்ள பதினேழு தேசிய மொழிகளையும் கற்க முடியாது. அதனால்தான் ஒரு இணைப்பு மொழி வேண்டும் என்கிறோம்.

இது மொரார்ஜியின் வாதமாகும்! நம்முடைய நாட்டில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன என்று அவர் குறிப்பிடுவது மாநிலங்களில் உள்ள மும்மொழித் திட்டத்தையென்றுதான் கருதுகிறேன். ஏனெனில் மத்திய ஆட்சிமொழியாக இந்தியும் அதற்கு இணைமொழியாக ஆங்கிலமும் இரண்டுந்தான் இப்போது இருக்கின்றன. அதிலும் ஆங்கிலத்தை மெல்ல மெல்ல அகற்றி, மறைமுகமாகவும் - தவிர்க்க முடியாது என்ற சூழலை உருவாக்கியும் - இந்திக்கே அதிக ஆதிக்கத்தைப் பெருக்கி வருகிறார்கள். எனவே மத்திய ஆட்சி மொழிகள் என்ற பெயரால் இந்தி - ஆங்கிலம் என்று கூறப்பட்டாலும் இந்தியொன்றே ராஜ மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு அந்தந்த மாநிலத் தாய்மொழி - அதற்கடுத்து இந்தி - ஆங்கிலம் என்ற இரு மொழிகள் - ஆக மும்மொழிகள் என்ற திட்டம் இருந்து வருகிறது. அதுவும் தமிழ்நாட்டில் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ் - ஆங்கிலம் இரண்டும் போதும் - பள்ளிகளில் இந்தி தேவையில்லை என அறிவித்து இரு மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

உதாரணத்திற்குச் சில மாநிலங்களைக் கவனித்தால்;

ஃ கர்நாடகத்தில் - கன்னடம், இந்தி, ஆங்கிலம்!

ஃ ஆந்திரத்தில் - தெலுங்கு, இந்தி, ஆங்கிலம்!

ஃ கேரளத்தில் - மலையாளம், இந்தி, ஆங்கிலம்!

அதே சமயம்!

உத்திரப் பிரதேசத்தில் - இந்தி, ஆங்கிலம் இரண்டு மட்டுந்தான்!

பீகாரில் - இந்தி, ஆங்கிலம் இரண்டு மட்டுந்தான்!

மத்தியப் பிரதேசத்தில் - இந்தி, ஆங்கிலம் இரண்டு மட்டுந்தான்!

அதாவது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தை மட்டும் இரண்டாவது மொழியாகப் படிக்கிறார்கள். அங்கெல்லாம் மும்மொழித் திட்டமென்பது அறிவிப்பே தவிர, நடைமுறையில் உள்ள ஒன்று அல்ல!

இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாநிலங்களில் - தாய் மொழியுடன் இந்தியையும், ஆங்கிலத்தையும் படிக்க

வேண்டும். நாளடைவில் ஆங்கிலம் மறைந்து இந்தியின் தேவை அதிகமாக்கப்பட்டு, தாய் மொழியும் இந்தியும் மட்டுமே படிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

அப்போது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள் அவர்களது தாய்மொழியான இந்தியை மட்டும் கற்றுத் திறமை பெற வாய்ப்புக்கள் உருவாகும்.

இந்தியல்லாத வேறு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தங்கள் மொழியையும் இந்தி மொழியையும் படிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகி, இந்திக்காரர்களின் திறமைக்கும் - செல்வாக்கிற்கும் - ஆதிக்கத்திற்கும் ஈடுகொடுக்க முடியாத அளவுக்குத் திகைப்புற்று நிற்க நேரிடும்.

இப்படியொரு இருண்ட எதிர்காலம், இந்தி பேசாத மாநில மக்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் மாநில ஆட்சிமொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகள் ஆக வேண்டுமென்றும் அந்தக் காலம் உருவாகும் வரையில், இந்தியாவில் பல மொழி பேசுவோரிடையே சமத்துவ நிலை கெடாமல் இருக்கவும், இந்தி ஆதிக்கப் பெருவெள்ளத்துக்கு மற்ற மொழிக்காரர்கள் பலியாகிவிடாமல் இருக்கவும் - ஆங்கில மொழி நீடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக நமது தமிழ் மொழி இடம் பெறும் காலம் வரையில் நான் மனநிறைவு கொள்ளமாட்டேன் என்று அறிஞர் அண்ணா அறிவித்ததைச் செயல்படுத்திட எழுச்சி கொண்டு நிற்கிறோம்.

மொராஜியின் கூற்றுப்படி பார்த்தால் கூட, சில லட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து நாட்டுக்கு மூன்று மத்திய ஆட்சி மொழிகள் இருக்கும்போது ஏறத்தாழ அறுபது கோடி மக்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு இங்குள்ள மாநில ஆட்சி மொழிகள் எல்லாம் மத்திய ஆட்சிமொழிகளாவதில் சங்கடம் என்ன இருக்க முடியும்?

முதற்கட்டமாக மத்திய ஆட்சிமொழிகளாக, இந்தோ-ஆரிய குடும்பத்தைச் சேர்ந்த இந்தியும், திராவிட மொழிக் குடும்பத்தில் மூத்த மொழியான தமிழும், அவற்றுடன் ஆங்கிலமும் ஆகிய மூன்று மொழிகள் இடம் பெறட்டும் என்றும், இந்த முதற் கட்டம் தேவையில்லை யென்றால் - எல்லா மாநில ஆட்சி

மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக வேண்டுமென்றும் - அது வரையில் ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்றும் திருச்சி தீர்மானம் கூறுகிறது. இந்தியை வளப்படுத்தவும் - பரப்பவும் எடுக்கப்படும் முயற்சிகள், செலவிடும் பொருள் அனைத்தும் அதே அளவுக்கு மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு வழங்கப்படல் வேண்டும்!

சுமார் பதினாறு அல்லது பதினேழு கோடி மக்கள் பேசுகிற இந்தி மொழியை சுமார் நாற்பது கோடிக்கு மேற்பட்ட மக்களை ஆட்டிப் படைக்கிற அளவுக்கு ஆதிக்க மொழியாக ஆக்கிடும் செயலை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

இந்தி பேசாத மாநில மக்கள் இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கப்படும் அபாயத்தைத் தடுத்தே தீரவேண்டும்.

மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளை வளர்க்க வேண்டும் என்ற பாகுமொழி பேசிக்கொண்டே, மத்தியில் இந்தி மொழிக்கு மட்டும் ஆட்சி மொழித் தகுதி அளிப்பதால், அதற்கான திட்டங்களைத் தீட்டுவதால் - இந்தி பேசும் மாநிலங்கள் மட்டுமே இந்தியாவின் ஆட்சி சக்கரத்தைச் சுழற்றும் தகுதியைப் பெறமுடியும். மற்ற மொழிக்காரர்கள் கைகட்டி சேவை புரியும் நிலைமைதான் ஏற்படும்.

அப்படியொரு வருங்காலம் அமைந்து விடக் கூடாதென்றுதான் எங்கள் தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக்குக! என்ற குரலைத் தமிழகத்தின் சார்பாக திருச்சி மாநாடு எழுப்பியிருக்கிறது.

இந்த உணர்வு, இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மற்ற மாநிலங்களிலும் ஏற்படும் நாள் தொலைவில் இல்லை!

நாற்பதாண்டுக் காலமாகத் தமிழகம் நடத்திவரும் மொழிப் போரின் திருப்புமுனை திருச்சி மாநாட்டுத் தீர்மானம்!

மத்தியில் ஆட்சி நடத்துவோர் தங்களின் வழக்கமான பல்லவியின் மூலம், தமிழக மக்களின் இந்தி எதிர்ப்புக் கனலை அணைத்துவிட முடியாது! அந்தக் கனல் அணையாது!

அன்புள்ள,

மு. க.

(04-01-1979)

631. நமது துக்கத்தை அறிவிக்கும் நாள்!

உடன்பிறப்பே,

திருச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவினை ஜனவரி 25, ஜனவரி 26 ஆகிய நாட்களில் எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான முறைகளை விவாதிக்க ஜனவரி 4-ஆம் நாள் சென்னையில் தலைமைக் கழக நிர்வாகக் குழு கூடியது. தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மற்றும் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

ஜனவரி 26 குடியரசு நாளன்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்துகிற கண்டன நாள், குடியரசு நாளைத் துக்க நாள் என்று அறிவிப்பதற்காக அல்ல! குடியரசு நாளன்று நமது துக்கத்தை வெளிப்படுத்துகிறோம், அவ்வளவுதான்!

இந்தி பேசாத மாநில மக்களின் உணர்வுகளை, அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் நாற்பதாண்டுக் காலமாக மொழிப் போர்க்களத்தில் நிற்கும் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, உரியவர்களுக்கு உணர்த்தவும் - அவர் தம் கவனத்தை ஈர்த்து இந்தி ஆதிக்கக் கண்டனத்தைத் தெரிவிக்கவும் - வாய்ப்புள்ள ஒரு நாளாகத்தான் ஜனவரி 26-ஆம் நாளை நாம் கருதுகிறோம்.

1965-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் அந்த நாளில் தான் கறுப்புக் கொடிகளை ஏற்றி நமது கண்டனத்தைத் தெரிவிக்கச் சொன்னார். அப்போது மூதறிஞர் ராஜாஜி அவர்களும் இந்தி எதிர்ப்புப் போர் முனையில் தீவிரமாக நின்றார். நமது திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தை வரவேற்றுக் கல்கி இதழும் தலையங்கம் தீட்டியுள்ளது.

ஜனவரி 25, 26 நாட்களில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கழகம் நடத்தும் அறவழிக் கிளர்ச்சியில் திராவிடர் கழகமும்

கலந்து கொள்ளுமென பொதுச் செயலாளர் நண்பர் வீரமணி அறிவித்துள்ளார்.

இன்னும் சில கட்சிகள் அந்த நாட்களில் நமது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முன்வரக்கூடும். சில கட்சிகள், திருச்சி தீர்மானத்தின் உணர்வைப் பாராட்டி வரவேற்றிருக்கின்றன. எல்லாக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் வலியுறுத்தப் போவதில்லை. ஆனால் அதே நேரம் தமிழகத்தின் எதிர்கால நன்மை கருதி, அந்தக் கட்சிகள் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற உணர்வைப் படைத்திருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஜனவரி 25 - இந்தி எதிர்ப்புத் தியாகிகள் நாள்! சிறையில் செத்து மடிந்தார்களே; தாளமுத்துவும் நடராசனும் 1938-இல்! அந்த இரு வீரர்களைத் தொடர்ந்து எத்தனை தமிழர்கள் தங்கள் இன்னுயிரை மொழிப் போரில் உவந்தளித் திருக்கிறார்கள் என்பதை எண்ணிடும் போதே மெய் சிலிர்க்கிறது நமக்கு!

துப்பாக்கி ரவைகளால் துளைக்கப்பட்டுப் பிணமாக வீழ்ந்த மான மறவர்கள்! அடக்குமுறையின் வெறித்தன்மை காரணமாக அங்கங்களைப் பறிகொடுத்த மொழிப் போர்ச்சிங்கங்கள்! நெருப்பின் நெடிய நாக்குகள் தங்களைத் தழுவட்டும் என்று சூளுரைத்து அன்னை மொழி காக்கச் சாம்பல் துகள்களாகிவிட்ட அரிமா நெஞ்சினர்கள்! செங்குருதி சிந்தியவர்கள் - சிறையில் வாடியவர்கள் - அவர்கள் அத்தனை பேரையும் நினைவுகூர்ந்து இன்னும் நமது போராட்டம் முடியவில்லை! என நெஞ்சுயர்த்தி எழுச்சி முரசு கொட்டும் நாள்தான் ஜனவரி 25!

அந்த நாளில் தான் விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றிட வேண்டும். நகரங்கள், பேரூர்கள், என்று மட்டுமில்லாமல் பட்டிதொட்டிகள் கூட பாக்கியில்லை என்கிற அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான கூட்டங்கள் நடைபெற்றாக வேண்டும்.

குக்கிராமமாயிற்றே! கூட்டம் கூடுமா? ஐம்பது பேர் கூட வரமாட்டார்களே - என்றெல்லாம் யோசிக்கக்கூடாது! பத்து பேர் கூடுகிற மிகச் சிறிய ஊரானாலும் அங்கும் நமது கிளையின் செயலாளரோ அல்லது ஒரு பேச்சாளரோ -

இந்தி ஆதிக்கத்தால் தமிழுக்கு ஏற்படும் ஆபத்தையும் தமிழர்களுக்கு ஏற்படும் அபாயத்தையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

மறுநாள் ஜனவரி 26 - ஒவ்வொரு கழக உடன்பிறப்பின் இல்லத்து முகப்பிலும் கழகப் பணிமனைகளிலும் கறுப்புக் கொடிகள் கட்டப் படவேண்டும். நமது கழகக் கொடிகளை அகற்றி விட்டுக் கறுப்புக் கொடிகளைக் கட்டத் தேவையில்லை. கழகக் கொடி ஒருபுறம் கறுப்புக் கொடி ஒருபுறம் பறக்கலாம்.

மாவட்டக் கழகம் முடிவு செய்து அறிவிக்கிற நகரங்களில் ஜனவரி 26 - மாலை கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடத்தப்பட வேண்டும். அந்த நகரங்கள் அல்லாத மற்ற எல்லா ஊர்களிலும் ஜனவரி 26 - காலையில் கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடத்தப்பட வேண்டும்.

ஊர்வலங்கள் புறப்படும் இடம் - முடிவடையும் இடம் - முன்னரே அறிவிக்கப்பட்டு - முறைகெடாமல் ஒழுங்கு குலையாமல் - நடத்தப்பட வேண்டும்.

ஊர்வலத்தினர் கறுப்புச் சட்டை அல்லது கறுப்புத் துண்டு அணிந்திருக்க வேண்டும். ஊர்வலத்தில் இந்தி ஆதிக்கம் ஒழிக! தமிழையும் மத்திய ஆட்சிமொழியாக்குக! என்று எழுதப்பட்ட பதாகைகள், அட்டைகள் ஏந்திச் செல்லலாம்!

ஊர்வல முழக்கம், இந்தி ஆதிக்கம் ஒழிக! தமிழையும் மத்திய ஆட்சிமொழி ஆக்குக! என்பவைகளாக மட்டுமே இருக்க வேண்டும்.

முதல் நாள் விளக்கப் பொதுக்கூட்டத்திலானாலும் - மறுநாள் கறுப்புக் கொடி ஊர்வலத்திலானாலும் - இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சினைதான் அந்த இருநாள் நிகழ்ச்சிகளின் நோக்கம் என்பதைக் கழக உடன்பிறப்புக்கள் மறந்துவிடக் கூடாது!

குறிப்பிட்ட இடத்தில் ஊர்வலம் முடிவுற்றவுடன் திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தை ஊர்வலத்திற்குத் தலைமை தாங்குகிறவர் படித்து, அந்தத் தீர்மானத்தை உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துவிட்டு, அவ்வாறு அனுப்பிய

செய்தியையும் தலைமைக் கழகத்திற்கு உடனே எழுதி அனுப்ப வேண்டும்.

எல்லா வகையிலும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் நமது போராட்டம் வெற்றிபெற - எள்ளளவும் அமைதிக்குக் கேடு சூழாத நிலையில் - இருநாள் நிகழ்ச்சிகளையும் தக்க முறையில் நடத்திட, மாவட்ட, ஒன்றிய, கிளை அமைப்புக்கள், மற்றும் கழக உடன்பிறப்புக்கள் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மற்றவை அடுத்த மடலில்!

அன்புள்ள,

மு. க.

(06-01-1979)

632. உண்மை, ஒருநாள் வெளிவரத்தான் போகிறது!

உடன்பிறப்பே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களிலே ஒருவர் - தொண்டுள்ளம் கொண்டவர் - நாடாளுமன்ற உறுப்பினர் - நண்பர் முருகையன் அவர்கள் பிணமாக்கப்பட்டு விட்டார். அவர் உடலெங்கும் கத்தியால் குத்தி அதே இடத்தில் உயிரைப் போக்கி விட்டார்கள். பாட்டாளி மக்களுக்கு உழைப்பதற்கென்றே பம்பரமெனச் சுழன்று கொண்டிருந்த அந்த ஓய்வறியா உத்தமனின் வாழ்க்கையை ஓர் நொடியில் முடித்து விட்டார்கள்.

தனக்கு இப்படி ஒரு ஆபத்து காத்திருக்கிறது என நண்பர் முருகையன் முன்கூட்டியே காவல்துறையினரிடம் புகார் கொடுத்திருக்கிறார். கடந்த வாரங்கூட காவல்துறை அதிகாரி ஒருவரிடம் நேரில் சென்று தனக்கு வர இருக்கும் அபாயம் குறித்துக் கூறியிருக்கிறார்.

கோட்டூர் வட்டத்து இந்தியக் கம்யூனிஸ்ட் உறுப்பினரும், முருகையன் அவர்களின் உதவியாளருமான துரை வைத்திலிங்கம் அவர்கள் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் இந்தக் கொலைக்கு அரசியல் பின்னணி உண்டு என்று விளக்கியிருப்பதோடு, மூன்று மாத காலமாகவே அந்தப் பகுதிகளில் நடைபெறும் அ.இ.அ.தி.மு.க. பொதுக் கூட்டங்களில் சந்திரபோஸ் என்பவர், விரைவில் நாகைத் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் என்று பகிரங்கமாகவே கூறிவந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஜனவரி ஒன்பதாம் நாள் சென்னை தினகரன் இதழில் நண்பர் துரை வைத்திலிங்கத்தின் பேட்டி வெளியாகியிருக்கிறது.

நான் கொடுத்த புகார் பற்றி, ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் இறந்த பிறகுதான் நடவடிக்கை எடுப்பீர்களா?

என்றும் காவல்துறை அதிகாரிகளிடம் முருகையன் கேட்டிருக்கிறார். அவர் கேட்டவாறே, அவர் கொல்லப்பட்ட பிறகுதான் நடவடிக்கை எடுக்கிற காரியத்தைக் காவல் துறையினர் மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இந்த ஆட்சியில் நடைபெறுகிற இதுபோன்ற வன்முறை சம்பவங்கள் அனைத்திலுமே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது காவல்துறை அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரே தீர்ப்புக்களை வழங்கி விடுகின்றனர்.

அதையொட்டி முருகையன் கொலையிலும் காவல்துறை அதிகாரிகள் எல்லாம் விசாரணையில் இருக்கிறது என்று கூறிக்கொண்டே - அதே நேரத்தில் கொலைக்கான பின்னணி எதுவாக இருக்கக்கூடும் என்பதையும் நிருபர்களிடத்திலே விளக்கத் தொடங்கி விட்டார்கள்.

திருவில்லிபுத்தூர் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய இளஞ்செழியனின் கார் மீது கல்வீசிக் கொன்றார்கள் கொடியவர்கள்! கார் மரத்தில் மோதியதால் இளஞ்செழியன் மாண்டான். கார் மீது கல் வீசப்பட்டதால் கார் மரத்தில் மோதியது! என்ற ஒரு அபூர்வ விளக்கத்தை முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டார். புலன் விசாரணை நடைபெறுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மதுரையில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் இளஞ்செழியன் கொலை செய்யப்பட்டதை மறைத்து அது ஒரு விபத்துதான் என்பதற்கான வாதங்களை எடுத்துவைத்து நீண்டதோர் உரையாற்றினார். புலன் விசாரணை செய்து கொண்டிருந்த போலீசார், தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்.

நண்பர் முருகையன் கொல்லப்பட்டதையொட்டி நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் தனுஷ்கோடியும், காந்தி-காமராஜ் காங்கிரசைச் சேர்ந்த நண்பர் மன்னர் மன்னனும் முருகையன், ஏற்கனவே தனக்கு ஆபத்து எனப் புகார் கொடுத்திருந்தும் காவல்துறையினர் தக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்பதைச் சுட்டிக் காட்டினராம்! உடனே அந்த இரங்கற் கூட்டத்திலிருந்த எம்.ஜி.ஆருக்குக் கோபம் கொப்பளித்துக் கிளம்பி விட்டது.

இந்த இடத்தில் அரசியல் விவகாரம் பேச வேண்டியதில்லை. அரசியல் பேச வேண்டுமானால் அதற்குத் தனி மேடை போட்டுக்

கொள்ளலாம். முருகையன் இரங்கற் கூட்டத்தில் முருகையனைப் பற்றிப் பேச வேண்டும். அவருடைய சேவைகளை, கொள்கைகளைப் பாராட்ட வேண்டும்.

இப்படியொரு கருத்தை முதலமைச்சர் கூறியிருக்கிறார். முருகையன் கொலை செய்யப்பட்டார். அவருக்காக இடுகாட்டில் இரங்கற் கூட்டம். அதில் அவர் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை, முன்னரே அவர் புகார் கூறியிருந்தும் நடவடிக்கை எடுக்கவில்லையென்று பேசியது தவறாம்! முதலமைச்சர் கூறுகின்றார்! எந்த முதலமைச்சர் தெரியுமா? இலட்சக்கணக்கான ரூபாய்கள் - மக்களின் வரிப் பணத்தில் செலவழித்து நடத்தப்படுகிற அரசாங்க விழாக்களில், அதுவும் பெரியார், அண்ணா போன்ற தலைவர்களுக்கு எடுக்கும் விழாக்களில் அவர்தம் சேவை கொள்கைகளைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக எதிர்க்கட்சிகளை, குறிப்பாகத் தி.மு.கழகத்தை, வசை பாடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிற முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.தான் இப்படியொரு அறிவுரையை உதிர்த்திருக்கிறார்.

அதுமட்டுமா? ஏசுநாதர், காந்தியடிகள், பூலாவரி சுகுமாரன், சிதம்பரம் பாலசுந்தரம், உதயகுமார் எல்லாம் எப்படி மாண்டார்கள் என்றும் அந்த இரங்கற் கூட்டத்தில் முதலமைச்சர் கேட்டிருக்கிறார்.

ஏசுவும், காந்தியடிகளும் எத்தகைய முடிவுக்கு ஆளானார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

பூலாவரி சுகுமாரன் கொலை வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அதனால் அதுபற்றி இப்போது நான் எதுவும் குறிப்பிடுவது முறையல்ல.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அமளியின்போது போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர். அப்போது உதயகுமார் குளத்தில் விழுந்து இறந்திட நேரிட்டது. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று நீதி விசாரணை அமைக்கப்பட்டது. அந்த விசாரணை அறிக்கை அங்கு ஏற்பட்ட நிலைமைகளைத் தெளிவாக விளக்குகிறது. அந்த அறிக்கை முழுவதையும் எம்.ஜி.ஆர். ஒருமுறை படித்துப் பார்ப்பது நல்லது! அதுமட்டுமல்ல கழக ஆட்சியில் நடந்த கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றிய நீதிவிசாரணை அறிக்கை - பாளையங்கோட்டையில்

நடைபெற்ற சம்பவம் பற்றிய நீதிவிசாரணை அறிக்கை - இவற்றையெல்லாம் குறித்து - நான் முதலமைச்சருக்கு நேராகவே, சட்டப் பேரவையில் சில மாதங்களுக்கு முன்பு விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த பாலசுந்தரம் கொலை செய்யப்பட்டதையொட்டி, தி.மு.க. மாணவர் தலைவர் மாசிலாமணி எம்.ஏ.க்கும் மேலும் மூன்று தி.மு.க. மாணவர்கட்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது கழக ஆட்சி நடைபெற்ற காலத்தில்தான் என்பதையும் இன்னமும் அவர்கள் சிறையில்தானிருக்கிறார்கள் என்பதையும் எம்.ஜி.ஆர். மறைத்துப் பேசலாம்! ஆனால் மறந்துவிட முடியாது!

பூலாவரி! பூலாவரி! என்று எதற்கெடுத்தாலும் பேசுகிறார்களே! சென்னை இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கு என்ன ஆயிற்று?

அத்துணை ஆதாரங்களைத் தந்து பேரவையில் பேசினேனே! புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டது பற்றி! இதுவரை அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

தஞ்சை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் நண்பர் வெங்கடாசலம் கொலையுண்டது பற்றி சட்டப் பேரவையில் எல்லாக் கட்சிகளும் எடுத்துரைத்தும்கூட இந்த அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

பூவிருந்தவல்லி ராசரத்தினம் எம்.எல்.ஏ. அவர்களைக் காலிகள் வீடு புகுந்து தாக்கினர். அவர்கள் பெயர்களைக் குறித்து அவர் புகார் கொடுத்தார். தலைமைக் கழகத்தின் சார்பில் பெரிய அதிகாரிகளுக்கும் தகவல் தரப்பட்டது. விளைவு என்ன? காலிகள் கைது செய்யப்பட்டு உடனடியாக ஜாமீனில் விடப்பட்டனர். தாக்குண்டு மருத்துவமனையில் இருக்கும் ராசரத்தினம் மீதும், அவரது புதல்வர்கள் மீதும் ஜாமீனில் வெளிவரமுடியாத சட்டப் பிரிவுகளை இணைத்துப் பொய் வழக்கு புனைந்து அவர்களைக் கைது செய்கிறார்கள்!

முதலமைச்சர், தன்னைப்போல் நேர்மையாளர் உண்டோ? நீதிமான் உண்டோ? என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்.

அனைத்துக் கட்சிகள் நடத்திய கடையடைப்பு, பொது வேலை நிறுத்தத்தின் போது ஆளுங்கட்சிக் குண்டர்களும், காவல்

துறையினரும் இணைந்து நின்று நாடு முழுவதும் வன்முறைக் கலவரங்களைத் தூண்டிவிடவில்லையா?

அது நாட்டு மக்களுக்குத் தெரியாத ரகசியமா?

இப்படி வன்முறைகள் தொடர் கதையாகி விட்டதின் ஒரு பகுதியாகத்தான் முருகையனின் படுகொலையும் நடந்திருக்கிறது!

அந்தக் கொலைக்கு என்ன பின்னணி என்பதை அதிகாரிகள் திசை திருப்பலாம்! அமைச்சர்கள் மழுப்பலாம்! ஆனால் உண்மை ஒருநாள் வெளி வரத்தான் போகிறது.

அன்புள்ள,

மு. க.

(10-01-1979)

633. அதிசயத்திலும் அதிசயம்!

உடன்பிறப்பே,

அதிசயம் ஒன்று கண்டேன் ஆளுங்கட்சி நாளேட்டில்!
கறுப்புக் கொடியின் பெயரால்
கருணாநிதியின் தேசத் துரோகம்!
பக்தவத்சலம் கடும் தாக்கு.

இப்படிக் கொட்டை எழுத்தில் செய்தித் தலைப்பு! என்னய்யா இதில் அதிசயம்! பக்தவத்சலனார் அப்படித்தானே பேசுவார்! 1965-இல் இந்தியை எதிர்த்து ஜனவரி 26-ஆம் நாள் கறுப்புக்கொடி ஏற்றிடுக என்று நமது அண்ணா அறிவித்தபோதும் - இதே பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் கடும் தாக்குதல்தான் நடத்தினார். தேசத்துரோகம் என்றுதான் நிந்தனை செய்தார். இப்போதும் அதைத்தானே சொல்லுகிறார், இதில் என்ன அதிசயம் கண்டாய் என நீ என்னை கேட்கக்கூடும்!

பக்தவத்சலம் என்னைத் தாக்கிப் பேசித் தேசத் துரோகியென்று கடும் கண்டனம் தெரிவித்த இடம் ராஜாஜி மண்டபம்!

ராஜாஜி மண்டபத்தில் இப்படியொரு கருத்துக் கூறக் கூடாதா? யாரும் கூறியதில்லையா? இப்படியும் கேட்டு இதிலென்ன அதிசயம் வந்து விட்டது எனக் கூறுவாய்!

ராஜாஜி மண்டபத்தில் நடந்தது அரசாங்கம் நடத்திய விழா! அமைச்சர் ஒருவர் தலைமை ஏற்றார்!

அதனால் என்ன? அரசாங்க விழாக்களில் உன்னையும், கழகத்தையும் அமைச்சர்களே தாக்கிப் பேசும்போது ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு அந்த உரிமை கூடக் கிடையாதா? உன்னிடமிருந்து இந்தக் கேள்வியும் எழும் கேலிச் சிரிப்புடன்!

பக்தவத்சலம் அவர்கள், ஜனவரி 26 அன்று இந்தியை எதிர்ப்பதற்காக கறுப்புக் கொடி ஏற்றுவது தேசத் துரோகம் என்று

பேசிய பிறகு, தலைமை வகித்த அமைச்சர் என்ன விளக்கம் தந்திருக்க வேண்டும்? அப்படியொரு விளக்கம் அவர் தந்ததாக ஆளுங் கட்சியேட்டில் செய்தி இல்லை!

பக்தவத்சலம் கண்டித்தாரே; அதற்குத்தான் பெருந் தலைப்பு! கொட்டை எழுத்தில்!

எனக்கு முன் பேசிய முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள், இந்தியை எதிர்த்து ஜனவரி 26-இல் கறுப்புக்கொடி ஏற்றுவது தேசத் துரோகம் என்றார். கருணாநிதி என்ற நபர் செய்வது தேசத் துரோகம் என்றால் அன்று 1965-இல் அண்ணா செய்ததும் தேசத் துரோகம் தான்! நேரு பிரதமராக இருந்த போது குடியரசு நாளை துக்க நாள் என்று மேற்கு வங்க முதல்வர் பி.சி. ராய் அறிவித்தாரே அரசாங்க ரீதியாக அதுவும் தேசத் துரோகம் தான்! ஜனவரி 26-இல் கறுப்புக்கொடி ஏற்றுவதோ, ஊர்வலம் நடத்துவதோ தேசத் துரோகமல்ல! எல்லா வகையிலும் மறைமுகமாக இந்தியை நுழைத்து தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்க முனைவது தான் தேசத் துரோகம்!

என்று அமைச்சர் பதில் சொல்லியிருப்பார் என்றுதான் எதிர்பார்த்தேன். ஏமாற்றமடைந்தேன்! இந்தித் திணிப்பை எதிர்க்கிற அரசு என்று பிரகடனப்படுத்தியுள்ள அரசு இன்றுள்ள அரசு! அந்த அரசின் அமைச்சர் ஒருவர் பக்தவத்சலம் பேச்சுக் கேட்டுப் பரவசம் கொண்டிருக்கிறார். அதைவிட அதிகப் பரவசம் ஆளுங் கட்சிப் பத்திரிகைக்கு! அதனால்தான் அது அவரது பேச்சினைப் பெரிய அளவில் வெளியிட்டுப் பேரானந்தம் அடைகிறது.

திருச்சியில் நாம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டை முதல்வரே வரவேற்றுப் பேசியிருக்கிறார். அதே நாளில் ஒரு அமைச்சர் இந்தியை எதிர்க்க கருணாநிதிக்கு என்ன யோக்கியதை? என்று வினா எழுப்பியிருக்கிறார்! ஆளுங்கட்சியின் சில விசுவாசிகள், அல்லது சில உபதேசிகள், திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கேலி செய்திடவும் தவறவில்லை. தி.மு.க. ஏன் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்த வேண்டும் என்று கேட்டுவிட்டு; அவர்கள் மட்டும் கோவையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துகிறார்களாம். அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டையும் நாம் வரவேற்கிறோம்.

மத்தியில் அமைச்சராகிவிட்ட நமது தமிழ் நாட்டுக்காரர் இந்தியில் அல்லவா கையெழுத்திட்டு புத்தாண்டு வாழ்த்து அனுப்புகிற நிலை ஏற்பட்டிருக்கிறது!

எனவே - இந்தி மறைமுகமாகத் திணிக்கப்படுவதற்கு எந்தப் பக்கமிருந்து எதிர்ப்பு வந்தாலும் அதனை ஊக்கப்படுத்துவது நமது கடமை!

நாற்பதாண்டுக் காலமாகத் தமிழகம் மொழிப் போர் முனையில் நின்று கொண்டிருக்கிறது!

அண்ணா வழி நடக்கும் தி.மு.கழகம்; அவர் 1965 ஜனவரி 26-இல் கடைப்பிடித்த முறையையே இப்போதும் கடைப்பிடிக்கிறது.

அதை எதிர்த்துப் பேசுகிறார் பக்தவத்சலம் அமைச்சரின் முன்னிலையில்! தலைமை வகித்த அமைச்சர் தாக்கப்படுவது கருணாநிதிதானே! என்ற தாங்கொணா மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்! பிரமாதமான பேச்சு என்று அவரை அமைச்சர் புகழ்ந்திருக்கவும் கூடும். அரசு நடத்திய முகமது அலி நூற்றாண்டு விழாவில் இப்படியொரு தாக்குதல்! தாக்கிடும் உரிமை முதியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு உண்டு! ஆனால் அதுபற்றி அமைச்சர் முடிவுரையில் வாய் திறக்காததுகூட அதிசயமல்ல!

இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் அரசு என்று கூறிக் கொள்கிற கட்சியின் நாளேட்டில் பக்தவத்சலம் அவர்களின் பேச்சுக்கு ஒரு பக்கமே ஒதுக்கியிருப்பதுதான் அதிசயத்திலும் அதிசயம்!

அன்புள்ள,

மு. க.

(11-01-1979)

634. இணைந்து பொங்கட்டும் இந்த நாளில்!

உடன்பிறப்பே,

பொங்கல் ஆண்டுதோறும் வருகிறது. தமிழர் திருநாள் என ஏற்றிப் போற்றிக் கொண்டாடுகிறோம். மஞ்சளும் இஞ்சியும் கழுத்தில் பூண்ட புதிய பானைகள், அவற்றை அடுப்பிலேற்றிப் பொங்கல் பொங்குக! என இசையொலி எழுப்பும் புத்தாடையணிந்த மங்கல மங்கையர் - அவரைச் சுற்றி நின்று கரும்புத் துண்டுகளைச் சுவைத்துக் குதித்தாடும் மழலையமுதங்கள், இல்லத்தின் இன்பங்கண்டு வெல்லமெனத் தித்திக்கும் உள்ளங்கொண்டு கோதையழகை, குழந்தையழகை அள்ளிப்பருகும் குடும்பத் தலைவர்கள்! இவை, பொங்கலன்று காணுகின்ற பூரிப்புக் காட்சிகள்!

பச்சைப் பட்டெனக் கழனியில் விரிந்து கிடந்த நாற்றுக்கள், பயிராகி - சந்தன வண்ணச் சால்வை போர்த்திக் கொண்டதுபோல் முற்றிய பயிர்கள் தலை சாய்ந்து வயலை மூடி - முத்தரிசிகளை உள்வைத்து மாணிக்க நெல்மணிகள் களத்தில் குவிந்து -வளம் பெருக்கும் இந்த மாட்சி, தமிழகத்தில் தொன்று தொட்டுக் காண்பதுதான்!

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடித்த அழகான தென்மதுரையென்று பழம்பாடல்கள் விளக்கிடத் தவறியதில்லை.

உழவர்க்கு விழா! உழைக்கும் வர்க்கத்துக்கு விழா! தமிழுக்கு விழா! தமிழ் இனத்துக்கு விழா! இப்படியடுக்கிக்கொண்டே போகும்போது சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடத்தான் செய்கிறது. புன்னகை பூக்கிறது! புத்துணர்ச்சி, தென்றலெனக் குளுமையாக வீசுகிறது!

ஆனால்! ஆனால்! இந்த மகிழ்ச்சி நீடிப்பதில்லையே! நிலைத்து நிற்பதில்லையே!

புதுப்பானை - புத்தாடை - புதுப் பொங்கல் - புன்னகை தவழ் குடும்பங்கள் - தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலுமா? இல்லையே! ஒரு பகுதி மக்கள் இன்று நேற்றல்ல; நீண்ட நெடுங்காலமாக நீள விழிகள் நனைந்திட பொங்கலன்று சுருண்டு கிடக்கிற காட்சிகளும் தொடர்கின்றனவே!

கசந்துபோன அவர்தம் வாழ்வில் கரும்பு எங்கே? கற்கண்டுத் தேன்பாகுதான் எங்கே? பூனை படுத்துறங்கும் அடுப்பில் புதுப்பானை வைத்துப் பொங்கலிடும் திருவிழாதான் எங்கே?

அவர்தம் இன்னலைப் போக்கிய பிறகன்றோ - கன்னல் சுவைத்திடும்! கற்கண்டு இனித்திடும்!

பெரும்பகுதி மக்கள் உழைக்கின்றனர் - ஆனால் வாழவில்லை! வயிறு பிழைக்கின்றனர்; அவ்வளவுதான்!

அவர்களும் கலகலவெனச் சிரித்து - கணீர் கணீர் எனப் பொங்கல் வாழ்த்திசைத்து - அவர்தம் குடும்பங்களும் குதூகலத்தில் ஆழ்ந்திடும் அந்த நாள் தானே - தமிழக முழுவதும் மகிழ்ச்சி தழைத்திடும் திருநாளாக இருந்திட இயலும்!

கதிருடன் எழுந்து கழனியை நாடி காலை முதல் மாலை வரை பாடுபடும் உழவர்க்கு விழா என்கிறோம்! ஏதோ, கடமைக்கு எடுக்கும் விழா என்று தான் உழவர் பலர் கருதுகின்றனரேயன்றி களிப்பிலாடும் உணர்வு அவர்தம் மனைகளில் பட்டுப் போய்தானே கிடக்கிறது. தமிழர்க்கு விழா என்றும் தைத்திருநாள் என்றும் புகழ்கிறோம்! பிறமொழி ஆதிக்கப் பெருவெள்ளத்தில் தமிழ்மொழி வீழ்ந்திடாது காப்பாற்றப்பட்டால்தானே தமிழுக்கு விழா எடுக்க முடியும் தொடர்ந்து! தமிழ் விழா எடுக்கத் தமிழ் வழி என்று இருக்கவேண்டுமல்லவா?

இன்றென்ன நிலை? கட்டாயமில்லை என்ற கணக்கற்ற உறுதிமொழிகளையும் கடந்து மூன்றாண்டுக்காலமாக, இந்தி நுழைவு தமிழகத்தில் எல்லாப் பக்கங்களிலும் நடைபெறுங் கொடுமையைக் காணுகிறோமே!

சமதர்மம் மக்களுக்குக் கிடைத்தால்தான் எங்கும் பொங்கல் இனிது பொங்குக என்ற வார்த்தைக்குப் பொருள் இருக்க முடியும்!

சமத்துவம் மொழிகளிடையே ஏற்பட்டால்தான் தமிழுக்குத் திருநாள் - எனவே இது தமிழர் திருநாள் எனக் கூறுவதற்கு அர்த்தமிருக்கும்!

பொங்கல் நாளில் இந்த உணர்வினைப் பெறுவோம்!

இல்லாதார் என்று என்னைப் படைத்தது யார்? இறைவனல்ல! இங்குள்ள பொல்லாதார் செய்திட்ட அரும்பணிதான் அது! இந்த உண்மையை உணர்ந்தோர் பொங்கியெழுந்து பெரும் புரட்சிகள் விளைத்த நாடுகள் உண்டு நானிலத்தில்!

பிரளயம் அதுபோல் ஏற்படுவதற்கு முன்பு, பேராசை நடாத்துவோர் பிற்போக்குச் சக்திகளிடமிருந்து விடுபட்டு முற்போக்குச் சிந்தனையில் நாட்டம் கொண்டிட வேண்டும். முப்பதுக்குமேல் ஆண்டுகள் ஒன்றிரண்டு உருண்டும் சுதந்திரச் சுவையை முழுமையாக அனுபவிக்கவில்லை இந்தப் பெருநாடு!

அதில் கவனம் காட்டுவதற்குப் பதிலாகப் பிற மொழிகளைக் காலில் போட்டு மிதிக்கத் திட்டம் தீட்டுகின்றார்!

பொதுவுடைமை பூத்துக் குலுங்கிட, இத்தனை ஆண்டுகள் மத்தியப் பேரரசு ஆர்வம் காட்டியிருக்க வேண்டும்! மாறாக, பொது மொழி எது? எனக் கேட்டு, அது இந்திதான் என்பதிலன்றோ தனி அக்கறை செலுத்துகின்றது?

தேவைதானா? - நாற்பதாண்டுகளாகக் கேட்கிறோம் - இப்போதும் கேட்கிறோம். 1965-இல் அண்ணா வகுத்த போர்முறையைப் பின்பற்றி அணிவகுக்கிறோம்.

பரந்து கிடக்கும் இந்த நாட்டில் நாம் ஒரு பழம்பெரும் தேசிய இனம்! பல தேசிய இனங்கள் - பல மொழிகள் - உள்ள நாடு இது! அவர்தம் உணர்ச்சிகளையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, இந்திக்கு முடிசூட்ட இத்துணைத் துடிப்பு ஏன்?

உலையில் அரிசி பொங்குகிறதோ இல்லையோ; பொங்கலன்று உள்ளத்தில் பொங்க வேண்டியது - மக்களுக்குத் தேவையான சமதர்மச் சிந்தனை! மொழிகளுக்கிடையே சமத்துவம் தேவையென்ற உரிமை உணர்வு!

என் தமிழ்மொழியும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகும் வரையில் நான் திருப்திகொள்ள மாட்டேன்.

என்று அறிவித்தாரே அண்ணா! அந்தக் குறிக்கோளை அடையும் எழுச்சியும் இணைந்து பொங்கட்டும் இந்த நாளில்!

அன்புள்ள,

மு. க.

(14-01-1979)

635. வேம்பினும் தாழ்ந்தவனா தமிழன்?

உடன்பிறப்பே,

தி.மு. கழகம் இந்தியை எதிர்க்கிறது என்றதும் சிலபேர் தமிழ்நாட்டில் உள்ளவர்கள், தங்களை இந்திப் பண்டிதர்களாகக் கருதிக் கொண்டு ஆகா! என்ன அநியாயம்! இந்தியும் சில மாநிலங்களில் பேசப்படுகிற தாய்மொழி அல்லவா? அந்த மொழியையே எதிர்ப்பதா? கூடாது! கூடாது! என விளக்கங்கள், விரிவுரைகள், வியாசங்கள் தீட்ட முற்படுகிறார்கள் மிகுந்த அக்கறையோடு! அதுவும் இந்திக்காரர்களுக்கே எழாத அளவுக்குப் பெரும் அக்கறையோடு!

நான் திருச்சி மாநாட்டில் பேசியபோதும், வேலூர் பொதுக் கூட்டத்தில் பேசியபோதும், வேறு பல நிகழ்ச்சிகளிலும் இந்தியை எதிர்ப்பதென்றால், தமிழர்கள் படை திரண்டு புறப்பட்டு உத்திரப் பிரதேச, மத்திய பிரதேச மாநிலங்களில் முற்றுகையிடுவது என்று பொருள் அல்ல! இந்தி தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்த தமிழகத்தில் முற்றுகையிட்டு நுழைகிறதே அந்தப் போக்கைத்தான் எதிர்க்கிறோம் என்று பொருள்! என்று விளக்கமளித்திருக்கிறேன்.

இந்தித் திணிப்பை மட்டுமே எதிர்க்கிறோம் என்று கூறும்போது - அந்த வாசகத்தை மத்தியில் உள்ளவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாங்கள் இந்தியைத் திணிக்கவே இல்லையே! பிறகேன் எதிர்க்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டே திணிப்பு என்ற பெயரில்லாமல் இந்தி மறைமுகமாகத் தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிற நிலையை உருவாக்கி வருகிறார்கள்.

நமது மொழிப் போரின் உத்வேகம் கண்டு ஒரு சமரச ஏற்பாடாக பண்டித நேரு கொடுத்த உறுதிமொழி கூட காற்றிலே பறக்கவிடப்பட்ட ஒன்றாகத்தான் ஆகிவிட்டது. அந்த உறுதிமொழி, இந்தி வளர்க்கப்படும் வரையில் ஆங்கிலத்தை இந்திக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ளப் பயன்பட்டதே

தவிர, இந்தியை ஆட்சிமொழியாகப் புகுத்தி மற்ற மாநில ஆட்சி மொழிகளை அதற்கு அடிமை மொழிகளாக ஆக்கும் குறிக்கோளுக்குத் தடையாக நிற்கவில்லை. இந்த நிலையை திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நமது தீர்மானம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

தமிழகத் தலைநகரில் நடைபெறும் கிரிக்கெட் பந்தயத்தின் நேர்முக வர்ணனையில் கூட (டெலிவிஷன்) தொலைக்காட்சியில் இந்திக்கு ஆதிக்கம்! ஆங்கிலத்துக்கு இடமளிக்கப்பட்டது கூட இன்னும் இந்தி வளர்ச்சியடைந்து பரவாத காரணமே தவிர வேறல்ல! நியாயமா? என்று கேட்டால் இதுவே டெல்லி அரசின் மொழிக் கொள்கை என்கிறார்கள். இந்தியில் மட்டும் ஏன் சொல்லுகிறீர்கள் என்று கேட்டால் - டெல்லியிலும், கான்பூரிலும் இருக்கிற இந்தி மொழிக்காரர்களுக்குப் புரிய வேண்டுமல்லவா, அதனால்தான் என்று பதில் வருகிறது!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடியெனப் புகழப்படும் தமிழனுக்குத் தமிழில் சொல்ல வேண்டும் என்ற உணர்வு, தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு இல்லை! இந்திக்காரர்களுக்குப் புரிய வேண்டுமே என்பதற்காக இந்தியில் சொல்லுகிற உணர்வு மட்டும் ஏற்பட்டு விட்டது பார்த்தாயா?

இதைத் திணிப்பு என்று சொல்லமாட்டார்கள்! நாம் தெளிவாக உணருகிறோம். திணிப்பு என்ற பெயரில் இல்லாமல் பல்வேறு திசைகளிலும் இந்தியின் ஆதிக்கக் கொடி பறக்கவிடப்படுகிற நிலையை!

நெருக்கடி நிலைப் பிரகடனத்தையொட்டி இந்தி ஆதிக்கம் வேகமாகப் பரவிட முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வேகத்தைக் கூடப் பின்னுக்குத் தள்ளுகிற அளவுக்கு இரண்டாண்டுகளாக இந்தியைத் தமிழகத்தில் நுழைப்பதில் புயல்வேகம் காட்டப்படுகிறது.

அதைத் தடுத்து நிறுத்தும் கருத்துடன் சென்னை பெரியார் திடலில் திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்பு மாநாட்டை எழுச்சியுடன் நடத்தியது. அடுத்து, கடந்த திங்கள் - திருச்சியில் கழகம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாடு நமது மொழிப் போராட்ட வரலாற்றில் மற்றொரு புதிய அத்தியாயத்தைப் படைத்திருக்கிறது.

அந்த மாநாட்டில் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து நான் வழி மொழிந்த தீர்மானத்தை நீ படிப்பது மட்டுமல்ல. மற்றவர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டி விளக்கமளிப்பதை உனது பணியாகக் கொள்ள வேண்டும்.

திருச்சி மாநாட்டுத் தீர்மானம் முரசொலியில் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் துண்டு அறிக்கைகளாகப் பல்லாயிரக்கணக்கில் அச்சியற்றி வழங்கிடும் பொறுப்பையும் ஆங்காங்குள்ள நமது கழக அமைப்புக்கள், சார்பு மன்றங்கள், இலக்கிய அணியினர் ஏற்றிட வேண்டும்.

வரும் ஜனவரி 25 தியாகிகள் தினத்தன்று நடைபெறும் இந்தி எதிர்ப்பு விளக்கப் பொதுக் கூட்டங்களிலும், ஜனவரி 26 கறுப்புக் கொடி ஊர்வலங்கள் முடிவடையும் இடத்திலும் மேற்கொள்ள வேண்டிய சூளுரையும் முரசொலியில் வெளியிடப்பட்டுள்ளது. திருச்சி தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் அந்தச் சூளுரை!

தீர்மானம் - சூளுரை - இவற்றைப் பட்டி தொட்டிகளிலும் பரப்பிடும் பணியை நமது அமைப்புக்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் மீண்டும் கவனப்படுத்துகிறேன். ஜனவரி 25 ஜனவரி 26 நிகழ்ச்சிகள் மிகுந்த பொறுப்புடனும், அமைதியுடனும் நடைபெற வேண்டும். நமது இந்தி எதிர்ப்பு உணர்வினை மதித்து ஆதரவு தெரிவித்துள்ள கட்சிகளுக்கும் - நாம் 25, 26 ஆகிய தேதிகளில் நடத்தும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாக அறிவித்துள்ள கட்சிகளுக்கும் கழகம், தனது இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளது.

கறுப்புக் கொடி ஊர்வலங்களில் இந்தி ஆதிக்கம் ஒழிக! - தமிழையும் மத்திய ஆட்சி மொழி யாக்குக! என்ற ஒலிகள் மட்டுமே முழங்கப்பட வேண்டும், வேறு எந்த ஒலியும் கண்டிப்பாக எழுப்பப்படக்கூடாது.

கழகத்தினர் இல்லங்களிலும் - இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்போர் அவர்களே விரும்பினால் அவர்களது இல்லங்களிலும் ஜனவரி 26 அன்று கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும்.

கழக அலுவலகங்கள், சார்பு மன்ற அலுவலகங்கள் அனைத்திலும் கழகக் கொடி ஒருபுறத்திலும், கறுப்புக்கொடி ஒரு புறத்திலும் பறந்திடல் வேண்டும்.

தமிழ் மகன், இரண்டாந்தர மூன்றாந்தரக் குடிமகனாக எதிர்காலத்தில் ஆகிவிடாமல் தடுக்கத்தான் நாற்பதாண்டுக் காலமாக நாம் மொழிப் போர் முனையில் நிற்கிறோம். பல உயிர்களைப் பலி கொடுத்தோம். அடக்குமுறைத் தடுப்புகளை ஏற்றோம். வெஞ்சிறையில் வாடினோம்.

இச்சகம் பேசி இன்னமும் நம்மை ஏமாற்றத்தான் பார்க்கிறார்களே தவிர; நமது உணர்ச்சியை மதிப்பதற்கு இந்தி ஆதிக்கக்காரர்கள் தயாராக இல்லை.

பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் நான் எழுதியதுதான் நினைவுக்கு வருகிறது.

தளதள வென்றிருக்கிற வேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல் துலக்கினால் அந்தக் குச்சி, தன் மனக் கசப்பைக் காட்டிக் கொள்கிறது.

தமிழ் மொழியின் எதிர்காலம் திட்டமிட்டு ஒடிக்கப்படுகிறது. தமிழர்கள் கசப்பைக் காட்டிக் கொள்ளக்கூட உரிமையில்லையாம்!

வேம்பினும் தாழ்ந்தவனா தமிழன்!

உடன்பிறப்பே! இந்தக் கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்! கறுப்புக் கொடி, நமது கசப்பு உணர்ச்சியை வெளியிடத்தான்! காழ்ப்பு உணர்ச்சி கிடையாது இந்தியின் மீது! ஆனால் இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக நாம் காட்டுகிற கசப்பு உணர்ச்சியைத் தடுக்கவோ, தந்திரத்தால் சமாளிக்கவோ - யாராலும் இயலாது!

தமிழும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகிவிட்டது என்ற செய்தி மட்டுமே, தமிழ்நாட்டு மக்களை மன அமைதிப் படுத்தக் கூடியதாக அமையும்.

அன்புள்ள,

மு. க.

(19-01-1979)

636. உணர்ச்சிப்பூவின் ஒரு இதழ்!

உடன்பிறப்பே,

இந்தப் பூமியில் பிறந்துவிட்ட நான், ஒருநாள் நிச்சயம் சாகத்தான் போகிறேன்!

அந்த நாள் எனக்கு நிம்மதியான நாள் என்பது மட்டுமல்ல! அதற்குப் பிறகு எல்லா நாட்களும் எனக்கு நிம்மதியான நாட்களே!

விடுதலைச் சிங்கம் மௌலானா முகமது அலி அவர்கள் ஐம்பத்தி மூன்று ஆண்டுகளே வாழ்ந்தார்.

அவரை விட மூன்று ஆண்டுகள் அதிகமாகவே வாழ்ந்து விட்டேன்.

அண்மையில் அண்ணன் ஜீவானந்தம் அவர்களின் நினைவுநாள் நடைபெற்றது. ஐம்பத்தாறு வயது வரையில் தான் அவரது உடற்பூவில் உயிர்மணம் தங்கியிருந்தது. அதன் பிறகு அந்தத் தமிழ்மலர்-ஆம்; புரட்சிமலர் வாடி உதிர்ந்து விட்டது!

அந்த வயது தான்; ஏறத்தாழ இப்போது எனக்கு!

கலைவேந்தர் கலைவாணரை ஐம்பது வயது வரையிலேகூட இயற்கை விட்டு வைக்கவில்லை. கொத்திக் கொண்டு போய்விட்டது!

அண்ணனுக்குத் தான் என்ன மணி விழாவா கொண்டாடினோம்?

ஐம்பத்தி ஒன்பது வயதிலேயே நீடுதுயில் கொள்ள நீண்ட கடற்கரைப் பெருவெளியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாரே!

வருகிற ஜூன் முதல் ஐம்பத்தாறு எனக்கு ஆரம்பமாகிறது.

அண்ணன் வாழ்ந்த அந்த வயதினை எட்டிப் பிடிக்கவே இன்னும் மூன்று நான்கு ஆண்டுகள் இருக்கின்றன.

அதற்குள்ளாக இயற்கையே எனக்கு ஒரு முடிவை வழங்கி விடலாம், அல்லது எனது அமைதியின்மை கண்டு அனுதாபங்கொள்கிற அன்பு நிறைந்த பகைவர்கள் யாராவது எனக்குத் தேவையான ஓய்வினை அளித்து விடலாம்.

யாக்கை நிலையாமை குறித்து நான் பாடும் முகாரியல்ல இது!

பிறப்பவர், இறப்பது நிச்சயம்! இந்தத் தத்துவத்தைச் சொல்ல யாரும் புதிதாக அவதாரம் எடுக்க வேண்டியதில்லை.

அந்த இடைக்காலத்தில் எப்படி வாழ வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லச் சான்றோர்கள் தோன்றி மறைந்துள்ளனர். தியாகச் செம்மல்கள், தங்கள் வாழ்க்கையை உதாரணங்களாக விட்டுச் சென்றிருக்கின்றனர். வீரர்களின் கீர்த்திமிக்கக் கல்லறைகள் அவர்தம் நாட்டுப் பற்றையும் - மொழிப்பற்றையும் - புறப்பாடல்களாக்கிக் கீதமழை பொழிந்து கொண்டிருக்கின்றன.

கருவறையில் தோற்றம்! கல்லறையில் முடிவு! காலத்தின் கட்டளை இது!

வாழ்வு நீர்க் குமிழி - என்பதை எடுத்துச் சொல்ல இந்தக் கடிதத்தில் என் பேனா முனை வீண் வேலை பார்க்கவில்லை.

இருப்பது ஒரு உயிர்! அது போகப் போவதும் ஒருமுறை! அது ஒரு நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே! என்று அண்ணன் சொன்னதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்க என எத்தனைக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன் உனக்கு!

காலையில் பேசிக் கொண்டிருந்தார் மாலையில் இப்படியாகிவிட்டது - கண்ணீர் பெருகிட எத்தனை செய்திகள் நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அவர்களில் இறுதி மூச்சுவிடும்போது அவர்களின் இருவிழிகளிலும் கண்ணீர் கொட்டியதைக் கண்டிருக்கிறோம். அதற்குள்ளாகவா? என்ற கவலையின் ஊற்று அது!

என் விழிகளில் கூட நீர் சுரக்கலாம் - ஆனால் அது எனக்காக அல்ல! நீ தாங்கிக் கொள்ள மாட்டாயே! என்பதற்காகத்தான் இருக்கும்.

உடன்பிறப்பே, உனக்கு சோகத்தை எழுப்புகிறேனா?

அல்லது உனக்குக் கோபத்தை உண்டாக்குகிறேனா?

மன்னித்துக்கொள் தயவுசெய்து! என்றைக்கோ ஒருநாள் - அது இன்றைக்கோ அல்லது மறுநாளோ போய்விடப் போகிற உயிருக்காகக் கவலை கொண்டு உழல்வதை விட அதற்குள் நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி அக்கறை காட்ட வேண்டியதல்லவா அவசியம்!

அந்தப் பணி, நமது வாழ்நாளில் முற்றுப் பெறாமல்கூடப் போய்விடலாம். நமது வாழ்நாளில் கிடைத்திடும் பயனுக்காக மட்டுமே பணியாற்றுவேன் என நினைப்பது கடைந்தெடுத்த சுயநலமல்லவா?

தமிழ்மொழி, மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகும் காலம் வரையில் நான் திருப்தி அடையமாட்டேன். அதை வற்புறுத்திப் போராடிக் கொண்டேயிருப்பேன் என்று பிரகடனம் செய்த அண்ணா அவர்கள் நம்மிடம் உயிரோடு இல்லை.

ஆனால் அந்தப் பிரகடனம் உயிரோடு உலவிக் கொண்டிருக்கிறதல்லவா?

அந்தக் குறிக்கோள் வெற்றியடைய உயிரைத்தான் தரவேண்டுமென்றால் அதற்கும் தயார் என்றும் - உயிருள்ள வரையில் அந்தக் குறிக்கோளுக்காக நடைபெறும் போராட்டம் நிற்காது என்றும் அறிவிப்பதிலே எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா?

வீரன் ஒருமுறைதான் சாகிறான், அதனால் அவன் எடுக்கும் முடிவில் உறுதியோடு இருக்கிறான்.

கோழையோ பலமுறை சாகிறான், அதனால் அவன் எடுக்கும் முடிவுகளில் அவனால் நிலையாக இருக்க முடிவதில்லை.

கொள்கை, குறிக்கோளுக்காக ஆட்சியே போனாலும், பதவியே பறிக்கப்பட்டாலும், அடக்குமுறைகள் அவதூறுகள் வெஞ்சிறைகள் மிரட்டினாலும் அஞ்சிடும் பரம்பரையில் வந்தவர்களல்ல நாம்!

இது நம் கடந்தகால வரலாறு!

என் கல்லறை மீது அண்ணன் சிந்துகின்ற கண்ணீரை யாசித்தேன். நான் நேசித்த அந்தத் தலைவன் - நெஞ்சில்

வைத்துப் பூசித்த அந்தத் தலைவன் - பாளைச் சிறையில் எனைக் கண்டு கண்ணீர் சிந்தியது கண்டு நெகிழ்ந்து போனேன்.

இப்போது நாம்தான் அந்தத் தமிழ்க்குல நாயகனின் கல்லறைக்கு முன்னால் அழுது கொண்டு நிற்கிறோம். கண்ணீர் கொட்டுகிறோம்.

தமிழ்க்குலம் தழைக்க அந்தத் தலைவன் இட்ட கட்டளைச் சொற்கள் நாம் சிந்தும் கண்ணீரைக்கொண்டு ஓராயிரம் - கோடியென உணர்ச்சிமலர்களாகப் பூத்துக் குலுங்குகின்றன.

அந்த உணர்ச்சிப் பூவின் ஒரே ஒரு இதழ்தான் இந்தக் கடிதம்!

ஜனவரி 25, ஜனவரி 26, இரு நாட்களில் நாம் முழங்குவது போர் முரசம்தான்! அண்ணன் வழி அறப்போர் முரசம்தான்!

அதற்குப் பிறகு நடுவண் அரசின் அரியணையில் நமது தமிழன்னையையும் ஏற்றிவைக்க நாம் களம்புக இருக்கிறோம்.

அந்தக் களச் சாவு, என் நீண்ட நாளைய விருப்பம்!

அந்த விருப்பம் நிறைவேறும் நாளே நான் பிறவியெடுத்த பயனைப் பெறும் நாள்!

ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் இப்படியொரு சூளுரை மேற்கொண்டால் தான்,

தமிழ்மொழி வாழ முடியும்!
தமிழ் இனம் தலை நிமிர்ந்து
உலவ முடியும்! இந்தி ஆதிக்கத்தை
வீழ்த்த முடியும்!

அன்புள்ள,

மு. க.

(23-01-1979)

637. யாரை எதிர்க்கிறோம்; இப்போது!

உடன்பிறப்பே,

ஜனவரி 25, ஜனவரி 26 ஆகிய இரு நாட்களிலும் தி.மு.கழகம் நடத்துகிற இந்தி எதிர்ப்பு விளக்கக் கூட்டம் பற்றியும், விரிவாகவும் தெளிவாகவும் நிருபர்கள் கூட்டத்திலும், அறிக்கைகள் - கடிதங்கள் வாயிலாகவும் கழகத்தின் நிலை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

ஜனவரி 26 கறுப்புக் கொடி ஊர்வலங்களில் இந்தி ஆதிக்கம் ஒழிக! தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக்குக! என்ற முழக்கங்கள் தவிர வேறு எந்த முழக்கமும் ஒலித்திடக்கூடாது எனப் பல தடவை கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனவரி 26 குடியரசு நாளை துக்கநாள் என அறிவிக்கவில்லை! குடியரசு நாளன்று தமிழ் மக்களின் துக்கத்தை இந்தி ஆதிக்கத்தை கண்டிக்கும் வகையில் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் ஒருமுறைக்குப் பலமுறை கூறியாகிவிட்டது.

இவ்வளவுக்குப்பிறகு, திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடர் கழகமும் ஏதோ வீண் குழப்பம் விளைவிப்பதற்காக இந்தி எதிர்ப்பு நடத்துகிறார்கள் என்ற கருத்துப்பட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசி இருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது.

சென்னை ராஜாஜி சிலை திறப்பு விழாவிலும், சிங்கப்பூர் நிருபர்கள் கூட்டத்திலும், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு விடுத்த அழைப்பிலும் இந்தி நேரடியாகவும் மறைமுகமாகவும் புகுத்தப்படுகிறது என்ற உண்மையை முதலமைச்சரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அத்தகைய இந்தித் திணிப்பை எதிர்த்துக் கோவையில் மாநாடு நடைபெறுமென்று நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

திருச்சியில் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டை அவர் வரவேற்றுப் பேசினார்.

கோவையில் அ.தி.மு.க. நடத்துவதாக அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டை நானும் வரவேற்று வேலூர் பொதுக்கூட்டத்தில் பேசினேன்.

இப்போது திடீரென்று இந்தித் திணிப்பு இல்லை என்று மொரார்ஜி கூறுவதை ஏற்றுக் கொள்கிறேன். அதனால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு அவசியமே இல்லை என்று நெல்லையில் அறிவித்திருக்கிறார்.

தேச பக்தியுள்ளவர்கள் இந்தியைப் படித்தே தீரவேண்டும் என்று அண்மையில் சென்னையில் பிரதமர் கூறியதை மறுத்து அநேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களும் அறிக்கை விடுத்தார்கள். கர்நாடக மாநில முதல்வர் தேவராஜ் அர்ஸ் கூட மொரார்ஜியின் கூற்றை உடனடியாக மறுத்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

இந்தியைத் திணித்து ஒற்றுமையைக் கெடுப்பது தேசபக்தியா? திணிப்பைத் தடுத்து ஒற்றுமையைக் காப்பது தேசபக்தியா?

இந்தக் கேள்வியை அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ ஏடான அண்ணா இதழில் முதல் பக்கத்தில் பெரிய எழுத்தில் விளிம்பு கட்டி வெளியிட்டுக் கொண்டேயிருந்தார்கள்!

இத்தனைக்குமிடையே திடீரென முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்பு அறவழி நிகழ்ச்சிகளின்மீது தாக்குதல் தொடுத்திருப்பது ஏன் என்று புரியவில்லை.

கறுப்புக்கொடி ஏற்றுதல் - கறுப்புக்கொடி ஊர்வலங்கள் - எதுவுமே மாநில அரசுக்கு எதிராக அல்ல!

குடியரசு நாளுக்கு எதிராகவும் அல்ல!

அண்ணா முன்பொருமுறை குறித்துத்தந்த அந்த நாளில், இந்தி ஆதிக்கத்தால் நமக்கேற்பட்டுள்ள மனக் குறையை வெளிக்காட்டிக் கொள்கிறோம் - அவ்வளவுதான்!

குடியரசு நாளையே துக்க நாள் என்று கடந்த காலத்தில் அறிவித்த கட்சிகளும் உண்டு. அந்தக் கட்சிகளின் தலைவர்களும் இன்னமும் இருக்கிறார்கள்! குடியரசு நாளை அரசாங்கமே

துக்கநாளாக அறிவிக்கிறது எனக்கூறியவர் மேற்கு வங்கத்தின் முதல்வர் பி.சி. ராய் என்ற பழுத்த தேசியவாதி என்பதை இந்திய வரலாறு நமக்கு நினைவுபடுத்திக் கொண்டு தானிருக்கிறது!

அதனால்தான் ஆளுங்கட்சியே இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு கூட்டுகிறது; கோவையில்!

இந்தி ஆதிக்கத்திற்கு அணைபோடத்தான் தி.மு.கழகம், திருச்சியில் தீர்மானம் நிறைவேற்றி அதனை விளக்கிட ஜனவரி 25-ஆம் நாளையும், நமது மனக்குறையை வெளிப்படுத்த ஜனவரி 26-ஆம் நாளையும் அறிவித்தது.

இந்தச் செயல் தனிப்பட்ட பிரச்சினைகளை, மொழிப் பிரச்சினையுடன் இணைப்பதாக இருக்கிறது என தி.மு.கழகத்தைப்பற்றி முதல்வர் குற்றம் சாட்டியிருப்பது வேதனைக்குரியதாகும்.

தனிப்பட்ட பிரச்சினைகளை தி.மு.கழகம் முக்கியத்துவப் படுத்துவதாக இருந்தால் இந்திரா அரசாங்கத்தின் நெருக்கடிப் பிரகடனத்தை எதிர்க்காமல் ஆதரித்துத் தீர்மானம் போட்டிருக்கும். ஆட்சி கவிழ்க்கப்படவும், விசாரணை மன்றங்கள் வரவுமான நிலையே ஏற்பட்டிருக்காது!

நேற்று வரையில் இந்தித் திணிப்பு இருப்பதாகக் கூறிவிட்டு, இன்று திணிப்பே இல்லை என்று கூறுவது தனிப்பட்ட பிரச்சினையா? அல்லது, எடுத்த நியாயமான முடிவில் எந்த தியாகத்துக்கும் தயார் என அறிவித்து இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது தனிப்பட்ட பிரச்சினையா? இதனை நடுநிலையாளர்கள்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் காட்டுகிற எதிர்ப்பு இந்தி ஆதிக்கத்தைத் தடுக்கத்தான்! அந்த அறவழி எதிர்ப்பை மாநில அரசு அனுமதித்தது என்ற காரணத்திற்காக, மத்திய அரசு, மாநில அரசின்மீது சினந்து கைவைத்தால், அப்போது சீறிப் பாய்ந்து தடுத்து மாநில அரசின் பக்கம் துணை நிற்கத் தி.மு.கழகம் தயங்காது என்பதையும் நான் ஒரு கூட்டத்தில் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறேன். இதில் ஐயப்பாட்டுக்கே இடமில்லை.

இவ்வளவுக்கும் பிறகு ஜனவரி 25 ஜனவரி 26 நிகழ்ச்சிகளுக்கு புதிய விளக்கம் எதையும் நான் தந்திடத் தேவையில்லை.

தமிழ் மொழியும் நடுவண் அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும். அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் - இந்திக்கு மட்டும் வளர்ச்சிக்கான தனிச் சலுகைகள் அளிப்பதை நிறுத்தி எல்லா மொழிகளுக்கும் சமத்துவம் வழங்கிட முன்வர வேண்டும். இந்தி ஆதிக்கத்திற்கு உடன்பட்டுத் தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாக வாழவேண்டுமென்கிற நிலையை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள இயலாது!

இந்த உறுதியை உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்டு,

ஏற்றுவோம் கறுப்புக் கொடிகளை!
நடத்துவோம் ஊர்வலங்களை!

இருப்பது ஒரு உயிர்! அது போகப் போவதும் ஒருமுறைதான்! அது நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே!

அண்ணா சொன்ன இந்த வீரமொழி செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கட்டும்!

அமைதி வழி!
அற வழி!
நம்மையே நாம்
அர்ப்பணித்துக்
கொள்ளும் வழி!

அதுவே நமது இந்தி எதிர்ப்பு அறப்போரின் நிலையான வழிகளாக இருக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

(24-01-1979)

638. அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறோம்!

உடன்பிறப்பே,

பத்தாண்டுகள் பறந்து விட்டன நமது பத்தரைமாற்றுத் தங்கத்தைப் பறிகொடுத்து! பிப்ரவரி மூன்றாம் நாள் மட்டும்தானா அவரது நினைவு நாள். அவரை மறந்தால் அல்லவா நினைக்கிறோம் என்பதற்குப் பொருள் இருக்க முடியும்? நம் உயிர் மூச்சோடும் இதயத் துடிப்போடும் கலந்து விட்டவரல்லவா அவர்! அவரை நம்மிடமிருந்து யாராவது பறிக்கத்தான் முடியுமா?

வகுத்துக்கொண்ட வழிமுறைகளின்படி அவர் இயற்கை யெய்திய நாளில் ஆண்டுதோறும் அவர் உறங்கிடும் சதுக்கத்திற்குச் செல்கிறோம். இது 1969 முதல் நாம் கடைப்பிடித்து வரும் முறை! இந்த முறையிலிருந்து நாம் தவறியது கிடையாது.

நினைவிருக்கிறதா உனக்கு? அண்ணனைப் பற்றிய கட்டுரை யொன்று பாடப்புத்தகத்திலே இடம் பெற்றதற்காகக் கண்டனக் கூட்டம் நடத்தி அண்ணனைக் கடுமையாக விமர்சித்தவர்கள் எல்லாம் இன்று அண்ணன் பெயரால் நடத்தப்படும் கட்சியில் தலைமைப் பொறுப்பாளர்களாக ஆக்கப்பட்டு, அவர்களும் நமது அண்ணனுக்கு அஞ்சலி செலுத்துகிறார்களாம்! அதை நான் கேலி செய்யவில்லை. அண்ணன் பெருமை அப்படி உயர்ந்திருக்கிறது என எடுத்துக் கொள்கிறேன்.

1972-இல் நண்பர் எம்.ஜி.ஆர்., தி.மு.கழகப் பிணைப்பை அறுத்துக்கொண்ட பிறகு 1973-ல் அண்ணன் கல்லறையில் அஞ்சலி செலுத்த ஜீப்பில் ஏறிக்கொண்டு ஊர்வலம் வந்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில், காஞ்சியென்றும் - விருத்தாச்சலம் என்றும் - தஞ்சை யென்றும் ஜீப்புகளில் எம்.ஜி.ஆர். ஏறியவாறு ஊர்வலங்கள் நடத்தி ஆங்காங்குள்ள அண்ணன் சிலைகளுக்கு மாலை அணிவித்தார். சென்ற ஆண்டு அண்ணா நினைவு நாளில் வள்ளுவர் கோட்டத்துக்கு எதிரே நாம் அண்ணனுக்குச் சிலை எடுத்தோம். அப்போது, அதே நாளில் நண்பர்

எம்.ஜி.ஆர். (மன்னிக்கவும்) முதல்வர் எம்.ஜி.ஆர். சென்னைத் திருவல்லிக்கேணியில் போட்டிக் கூட்டம் போட்டு மௌன விரதம் கலைத்துவிட்டுப் பேசினார், நம்மைத் தாக்கி!

இந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதுமுள்ள அவரது கட்சியினரை அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தும் அமைதி ஊர்வலத்துக்கு வருமாறு பரபரப்பான அழைப்புக்கள்! பளபளப்பான விளம்பரங்கள்! சென்னைச் சுவர்களில் எல்லாம் விதவிதமான சுவரொட்டிகள்!

பஸ்கள் ஏற்பாடு! சட்டத்தை அவர்களே மீறிய நிலையில் லாரிகள் ஏற்பாடு!

நாம், ஆரவாரமின்றி ஆண்டுதோறும் எப்படி அண்ணா நினைவு நாளில் அமைதியாக ஊர்வலம் எடுத்து சதுக்கத்துக்குச் சென்று மலர் வளையம் வைப்போமோ, அதே மாதிரிதான் இந்த ஆண்டும் நடந்து கொண்டோம்.

கடல் போலப் பெருகி வந்தது கழக உடன்பிறப்புக்களின் அமைதிப் பேரணி!

பேருந்துகள் இல்லை! லாரிகள் இல்லை! எதுவுமின்றிப் பல்லாயிரக்கணக்கானோர் காலை ஏழு மணிக்கே வந்து குழுமிவிட்டனர்.

எம்.ஜி.ஆர். அண்ணா சதுக்கத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்டாராம்!

அவற்றில் ஒன்றிரண்டைப் படிக்கும்போது, கல்லறைக்குள்ளிருக்கும் அண்ணனுக்கே விலா நோகச் சிரிப்பு ஏற்பட்டிருக்கும்.

அண்ணா வற்புறுத்திய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - காப்பாற்றுவேன்.

இது உறுதிமொழிகளில் ஒன்று! இதற்குப் பொருள் என்ன புரிகிறதா உனக்கு?

1972-இல் தி.மு.கழகத்தின் கிளைக் கழக செயலாளர் உட்பட அனைவருடைய கணக்குகளையும் பொருளாளராகிய நான் பொதுக்கூட்டத்தில் கேட்டேன். அதற்குப் பெயர்தான் கட்டுப்பாடு! என்னுடைய அ.தி.மு.க. தொடங்கி ஏழு வருடங்களானாலும்கூட

என் கணக்கையே சட்டசபையில் காட்டமாட்டேன். கட்சிக் கணக்கையும் காட்டமாட்டேன். அதே நேரம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகச் சொல்லி பெட்டிச் செய்தி போட்டுப் பல பேரை என் கட்சியிலிருந்து நீக்கியிருக்கிறேன். கட்டுப்பாட்டை நான் மீறலாம். மற்றவர்கள்தான் மீறக்கூடாது. நான் கட்டுப்பாட்டை எப்படி மீறினேன் என்று 1972-இல் நாவலர் கைப்பட எழுதி விடுத்துள்ள அறிக்கையைக் காண்க!

எம்.ஜி.ஆர். எடுத்துக்கொண்ட கட்டுப்பாட்டு உறுதிமொழிக்கு இதுதான் விளக்கம்.

அரசியலில் ஜனநாயகம் நிலைக்கச் செயலாற்றுவேன்.

மற்றொரு உறுதிமொழி இது!

அதாவது, அ.தி.மு.க. கட்சியில் ஏழு வருடமாக எல்லா பொறுப்புகளுமே நியமனந்தான்! தேர்தல் முறை என்ற சர்வாதிகார (?) முறைக்கே இங்கு இடம் கிடையாது! ஜனநாயகத்தின் மீதுள்ள அசைக்க முடியாத பற்றின் காரணமாகத்தான் (எமர்ஜன்சி) நெருக்கடி நிலையை ஆதரித்து உடனே தந்தி கொடுத்தேன்.

எம்.ஜி.ஆர். எடுத்துக் கொண்ட ஜனநாயக உறுதிமொழிக்கு இதுவே சரியான விளக்கம்.

இந்தி மொழியோ அல்லது வேறு எந்த மொழியோ ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க அரும்பாடுபடுவேன்.

இதுவும் அந்த உறுதிமொழிகளில் ஒன்றுதான்!

அதாவது கோவையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு என்ற பெயரையே மாற்றி, ஒட்டப்பட்ட சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்து அந்த மாநாட்டையே வீர வணக்க மாநாடு என ஆக்குவேன். கட்சிக்காரர்கள் கொடுத்த நெருக்கடி தாங்க முடியாமல் இப்போது இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதாகச் சொல்லுகிறேன்.

இப்படித்தான் அந்த உறுதிமொழிக்கு விளக்கம் கூறும் எம்.ஜி.ஆரின் மனச்சாட்சி!

மதுவிலக்குக் கொள்கை வெற்றிபெறப் பாடுபடுவேன்.

அதாவது,

கள்ளச்சாராயம் காய்ச்சும் அ.தி.மு.க.வினரைக் கைது செய்ய வரும் காவல்துறை அதிகாரிகளை என் கட்சிக்காரர்கள் கட்டி வைத்து அடித்தாலும் அதுபற்றிக் கவலைப்பட மாட்டேன் என்பதே இந்த உறுதி மொழியின் சாராம்சம்!

நீதி, நேர்மை, நாணயம், ஒழுக்கம் ஆகியவற்றைப் போற்றுவேன்.

அதாவது,

நீதி, நேர்மை, ஒழுக்கத்துக்கு என்னிடம் கப்பல் கப்பலாக - பஸ் பஸ்ஸாக - வட்டிக் கடைகள் கொள்ளாத அளவுக்கு உதாரணங்கள் இருக்கின்றன! என்பதுதான் அந்த உறுதிமொழிக்குப் பதவுரை!

அண்ணாவின் புகழை என்றும் காப்பேன்!

அதாவது, கம்யூனிசம் - சோஷலிசம் - கேப்டலிசம் மூன்றும் இணைந்ததே அண்ணாயிசம் எனக்கூறி அண்ணாவின் புகழைக் காப்பேன். அவர் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தையே மறுபரிசீலனை செய்ய மக்களின் பொது வாக்கெடுப்புக்கு விட்டு அவருக்கு மரியாதை காட்டுவேன் என்பதுதான் அந்த உறுதிமொழிக்குப் பொழிப்புரை!

உடன்பிறப்பே, அண்ணா சதுக்கத்தில் இப்படியும் சில வேடிக்கைகள்! வேதனைகள்! அதனால்தான் அந்தக் கல்லறையின் மீது அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறோம்,

எதையும் தாங்கும் இதயம்
இங்கே உறங்குகிறது! என்று!

அன்புள்ள,

மு. க.

(05-02-1979)

639. குழப்பத்திற்கு மேல் குழப்பம்!

உடன்பிறப்பே,

கோவை மாநாட்டின் இருநாள் நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் வீர வணக்க நாள் மாநாடு என மாற்றப்பட்டதே தவிர, இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு இரண்டாம் நாள் நடந்தேறியது என்பதைக் கருணாநிதி உணரவேண்டும்.

இவ்வாறு ஆணித்தரமான (?) ஒரு விளக்கத்தை அ.தி.மு.க. ஏடு ஒன்று தந்திருக்கிறது. இந்தி மட்டும் மத்திய ஆட்சி மொழியாக அமைவதை எதிர்க்கவும், தமிழையும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவும், அ.இ.அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழுக்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதில் நமக்கு மகிழ்ச்சிதான்! ஆனால் எத்தனை குழப்பமான அறிக்கைகளும், பேட்டிகளும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் தரப்பட்ட பிறகு, இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டது என்பதை நாட்டு மக்கள் மறந்து விடவில்லை.

திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு எனக் கழகம் அறிவித்தவுடன், கோவையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெறுமென அ.இ.அ.தி.மு.க. அறிவித்தது.

திருச்சி மாநாடு முடிவுற்றுத் தீர்மானம் எல்லா ஏடுகளிலும் வெளிவந்த பிறகு - குறிப்பாக தமிழும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டுமென்பதை அந்தத் தீர்மானம் வலியுறுத்திய பிறகு - திருவனந்தபுரத்தில் பேசிய பிரதமர் அவர்கள் மக்களுடைய கட்டாயத்தின் பேரில் இந்தி ஆட்சிமொழியாகும். அரசின் கட்டாயத்தின் பேரில் அல்ல! என்றும், இந்தியாவில் உள்ள பதினேழு தேசிய மொழிகளையும் யாரும் கற்க முடியாது. அதனால்தான் ஒரு இணைப்பு மொழி வேண்டும் என்றும் மறைமுகமாக இந்தி மட்டுமே ஆட்சிமொழியாவதற்கு இயலும் என்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

பிரதமரின் திருவனந்தபுரத்துப் பேச்சுக்கு நன்றி தெரிவித்து தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தந்தி அனுப்பியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

பிரதமரின் திருவனந்தபுரம் பேச்சு குறித்து 4-1-79-ஆம் நாள் முரசொலியில் அந்தக் கனல் அணையாது என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்தில்,

நாற்பதாண்டுக்காலமாகத் தமிழகம் நடத்தி வரும் மொழிப் போரின் திருப்பு முனை திருச்சி மாநாட்டுத் தீர்மானம்!

மத்தியில் ஆட்சி நடத்துவோர் தங்களின் வழக்கமான பல்லவியின் மூலம் தமிழக மக்களின் இந்தி எதிர்ப்புக் கனலை அணைத்துவிட முடியாது! என்று குறிப்பிட்டிருந்தேன்.

அடுத்து ஜனவரி 19-ஆம் நாள் சென்னையில் நிருபர்கள் பேட்டியில் பிரதமர், நாட்டுப்பற்று உள்ளவர்கள் இந்தியைப் படித்தே தீரவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

அதேநாள் மாலையில் திருச்சி முத்தமிழ் மன்ற விழாவில் கலந்து கொண்ட நான்,

இந்தியை திணிக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டு நாட்டுப் பற்றுள்ளவர்கள் இந்தியைப் படித்தே தீரவேண்டும் என்று சொன்னால் என்ன பொருள்? இந்தியைப் படிக்கமாட்டேன் என்று சொல்லுகிறவர்களெல்லாம் தேசத் துரோகிகள், நாட்டுத் துரோகிகள் என்றுதானே பொருள். இந்தியைப் படிக்காதவர்களுக்கு ஒரு தேசத்துரோகிக்கு உரிய தண்டனை உண்டு என்று கூட பொருள். இன்று மொரார்ஜி தேசாய் அதை வாயளவில் சொல்லி விட்டுப் போகலாம். நாளைக்கு வரப்போகிற இன்னொரு முரட்டு தேசாய் இந்தி படிக்காதவர்களெல்லாம் தேசத் துரோகிகள் என்று தேசத் துரோகிக்குரிய தண்டனையை அவர்களுக்கு அளிக்கத் தயாராக இருக்கலாம். நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கின்ற முறையிலே சொல்ல விரும்புகிறேன்; தமிழர்களுடைய உணர்ச்சியைப் பிரதிபலிக்கக்கூடியவர்களிலே ஒருவன் என்கின்ற முறையிலே சொல்ல விரும்புகிறேன் - எல்லோருக்கும் நான்தான் ஒருவன் என்கின்ற இறுமாப்போடு அல்ல - இருக்கிறவர்களிலே ஒருவன் என்கின்ற முறையிலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாற்பதாண்டு இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் ஒரு சிப்பாயாக

இந்தி எதிர்ப்புப் போர்க்கொடியை பிடித்துக் கொண்டிருந்தவன் என்கின்ற உரிமையோடு சொல்கின்றேன். என்னைப் பார்த்து உனக்கு மொழிப்பற்று முதலில் தேவையா? நாட்டுப் பற்று முதலில் தேவையா? என்று கேட்டால் நான் சொல்கிற பதில் எனக்கு இரண்டும் தேவைதான்.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று இரண்டும் இரண்டு கண்களைப் போன்றது. ஆனால், மொழிப்பற்றா, நாட்டுப்பற்றா என்பதைச் சர்ச்சைக்கு ஆளாக்கி, நீ நாட்டுப்பற்று உள்ளவனாக இருந்தால் உன்னுடைய மொழியைக் கீழே தள்ளி விட்டு பிறமொழி ஆதிக்கத்திற்கு அடிபணி என்று சொல்லுகின்ற அளவிற்கு நாட்டுப்பற்று திணிக்கப்படுமானால், தமிழ்நாட்டுப்பற்று என்கின்ற அளவில் எங்களைச் சுருக்கிக்கொள்ள நீங்கள் தள்ளுகிறீர்கள் என்று பொருளாகும். அதை அவர்கள் செய்யமாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

நாட்டுப்பற்றைக் காட்டி மொழிப்பற்றை அழித்திட யார் முயன்றாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தமிழகம் தயாராக இல்லை. கண்ணை விற்று சித்திரம் வாங்க நாங்கள் தயாராக இல்லை. நம்முடைய மொழியை விற்று, அடகு வைத்து விட்டு, தமிழை ஆதிக்கக்காரர்களுடைய காலடியில் போட்டு மிதிக்க வைத்து விட்டு, நாட்டுப்பற்று இருப்பதால்தான் எங்களுடைய தமிழை இழக்கச் சம்மதிக்கிறோம் என்று சொல்கிற ஈனபுத்தி தமிழர்களுக்கு ஏற்படக்கூடாது. ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை.அதை இந்த முத்தமிழ் விழாவில் நாம் ஒரு சூளுரையாக ஏற்க வேண்டும்.

பிரதமர் தேசாய் இன்னொன்றும் சொல்லி இருக்கின்றார். தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு என்பது செத்த குதிரையாக ஆகிவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குதிரைகள் சில நேரங்களில் அதிக வேகமாக ஓடி களைப்புற்றிருந்தால் நல்ல மணலில் நான்கு கால்களையும் பரப்பிக்கொண்டு படுத்துத் தூங்கும். அதைப் பார்க்கின்ற சிலருக்கு குதிரை செத்துப் போய் விட்டது என்று எண்ணத் தோன்றும். ஆனால் களைப்பு நீங்கிய பிறகு குதிரை எழுந்தால் முன்பைவிட வேகமாகப் பாய்கிற ஆற்றல் அந்தக் குதிரைக்கு நிச்சயமாக ஏற்படும்.

இவ்வாறு பேசினேன். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் எழுச்சியின் உருவங்களாகக் காட்சி தந்தனர்.

ஜனவரி 20-ஆம் நாள் சென்னையில் நிருபர்களைச் சந்தித்த முதலமைச்சர் அவர்கள், தேசபக்தியுள்ள இந்தியர் இந்தி கற்க வேண்டும் என்று பிரதமர் சொன்னதை ஆட்சேபித்தார் என்று ஏடுகளில் செய்தி வந்திருக்கிறது. (மன்னிக்க வேண்டும்) நமது தமிழக முதலமைச்சரல்ல! ஜனவரி 20-ஆம் நாள் சென்னையில் நிருபர்களைப் பேட்டி கண்டு தேசாயின் பேச்சை ஆட்சேபித்தவர் கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ்!

நமது முதலமைச்சர் அதுபற்றிக் கருத்துக் கூறவே இல்லை. நெல்லை நிருபர்கள் கூட்டத்தில் நமது முதல்வர் சொன்னார், செத்த குதிரையென்று தேசாய் கூறியது எப்படிப் பொருந்துகிறது என்பதற்கான விளக்கம்! அதுமட்டுமல்ல, கோவையில் நடப்பது இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு என யார் சொன்னது? என நிருபர்களைக் கேட்டு அவர்களைத் திக்குமுக்காட வைத்து, அது வீர வணக்க நாள் மாநாடுதான்! என்று அவரே விடையும் அளித்து நிருபர்களை ஸ்தம்பிக்க வைத்தார்.

அந்தப் பேட்டிக்குப் பிறகு, அ.தி.மு.க. ஏடுகளில் இந்தித் திணிப்பையும் - இந்தி ஆதிக்கத்தையும் எதிர்த்து விளிம்பு கட்டி வெளியிடப்பட்ட வீர வரிகள் அனைத்தும் திடீரென நிறுத்தப்பட்டு விட்டன. நான்கு பக்கங்களிலும் எழுச்சியுடன் வெளியிடப்பட்ட பாரதிதாசனின் இந்தி எதிர்ப்புக் கவிதை வரிகளை அந்த ஏடுகளில் திடீரெனக் காண முடியவில்லை.

கோவை நகரில் ஒட்டப்பட்டிருந்த இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டுச் சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டு, அவற்றின் மேல் வீர வணக்க நாள் மாநாடு என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இத்தனை குழப்பங்களுக்குப் பிறகு, அந்தக் கட்சியில் உண்மையான இந்தி எதிர்ப்பாளர்கள் சிலர் விடுத்த எச்சரிக்கைக்கு அஞ்சி, வேறு வழியில்லாமல் அ.தி.மு.க. செயற்குழுவும், பொதுக்குழுவும் இந்தித் திணிப்பு எதிர்ப்புத் தீர்மானங்களை நிறைவேற்ற முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒத்துக் கொண்டார்.

எப்படியோ இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க ஆளுங்கட்சியும் முன்வந்தது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதேயாகும்.

ஆனால், நான் கடிதத் துவக்கத்தில் குறிப்பிட்டிருப்பது போல அ.தி.மு.க. ஏடு, முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

அந்த ஏட்டின் கூற்றின்படி வீர வணக்க நாள் முதல்நாள் நடந்ததாம்! மறுநாள் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடந்ததாம்! அந்த ஏடு குறிப்பிடுகிற இரண்டாம் நாள்தான் ஜனவரி 25-ஆம் நாள்! ஆண்டுதோறும் ஜனவரி 25-இல் தான் இந்தி எதிர்ப்புத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவது! ஜனவரி 24, 25-இல் இந்தி திணிப்பு எதிர்ப்பு மாநாடு என அறிவித்தோம்! பிறகு வீர வணக்க நாள் மாநாடு என மாற்றினோம்! முதல் நாள் ஜனவரி 24-லிலேயே ஒருநாள் முன்னதாக தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தி விட்டோம். வீர வணக்க நாள் என்று நடத்தும் ஜனவரி 25-இல் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசினோம் என்று அந்த ஏடு எழுதினால் ஓரளவாவது பொருத்தமாக இருக்கும்! அதை விடுத்து, நாங்கள் வீர வணக்க நாள் மாநாட்டை முதல் நாளுக்கு மாற்றிவிட்டு - ஜனவரி 25-இல் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடத்தினோம் என்று ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்கள் கூறுவானேன்?

பாவம்! அவர்கள் தலைவருக்கு ஏற்படும் குழப்பத்தால் அந்தக் கட்சியின் ஏடு நடத்துவோர் - எழுதுவோர் - பேசுவோர் - அனைவருமே குழம்பிப் போய்த் திண்டாட வேண்டியிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(07-02-1979)

640. பொய்யிலே பிறந்த புலவர் பெருமான் யார்?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியிலே அமர்ந்திருக்கிற நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவிழ்த்துவிட்ட பொய் மூட்டைகளை அவரது கட்சி ஏடுகளும், மற்றும் சில ஏடுகளும் விரிவாக வெளியிட்டிருக்கின்றன.

1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது சென்னைத் தேர்தலுக்கு முதல் நாள் 14-2-67 அன்று இரவு 11-30 மணி அளவில் நானும் மறைந்த பெரியவர் காஞ்சி மணிமொழியார் அவர்களும், என் நண்பர்கள் வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை இராசகோபால் ஆகியோரும் அறிஞர் அண்ணா அவர்கள் வீட்டில் தேர்தல் நிலவரங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, பின்னர் தியாகராய நகர்த் தொகுதித் தேர்தல் அலுவலகத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் மகனையும் மற்றவர்களையும் சந்தித்துவிட்டு, அங்கிருந்து மயிலைத் தொகுதி சென்று அரங்கண்ணல், டி.கே. கபாலி ஆகியோரைச் சந்தித்து தேர்தல் பணிகள் குறித்துப் பேசிவிட்டு ஒரு மணி சுமாருக்கு நான் போட்டியிட்ட சைதைத் தொகுதியைச் சேர்ந்த கோட்டூர் கிராமத்துக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

செல்லும் வழியில் மூன்று கார்கள் எங்கள் காரைத் தொடர்ந்தன. நாங்கள் கோட்டூரில் மாநகராட்சி பிரசவ விடுதிக்கு முன்னால் காரை நிறுத்தி அங்கு கழகத் தொண்டர்களை சந்தித்து, விடிந்தால் நடைபெற இருக்கிற வாக்குப் பதிவு குறித்து காரில் இருந்தவாறு தகவல்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். அதற்குள் எங்களைத் தொடர்ந்து வந்த எதிரிகளின் கார்கள் எங்கள் காரைச் சுற்றி நிறுத்தப்பட்டன. ஏதோ பயங்கரம் விளையப் போகிறது

என்று புரிந்து கொண்ட நானும், காஞ்சி மணிமொழியாரும், சந்தானம், இராசகோபால் ஆகியோரும் என் காரை விட்டு வேகமாக இறங்கி, மருத்துவ விடுதிக்குள்ளிருந்த தொலைபேசி மூலம் அடையாறு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம் என்று அறிவித்தோம்.

அதற்குள் வெளியிலிருந்த எதிரிகள், விடாதே! வெட்டு! குத்து! கொல்லு! என்று கூறிக்கொண்டே விடுதிக்குள் நுழைந்தனர். அவர்கள் என்னை வந்து தாக்குவதற்குள் கழகத் தோழர்கள் இருவர் என்னை இழுத்துக் கொண்டு போய் ஒரு குடிசைக்குள் ஒளிய வைத்தனர். என்னைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட அந்த குடிசையில் இருந்த சாரங்கன் என்ற தோழரும், அவரது துணைவியாரும் பயத்தால் அழத் தொடங்கிய அவர்களது குழந்தைகளையும் சமாதானப்படுத்திக் கொண்டு என்னையும் தங்கள் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவது என்ற முடிவுடன் துணிச்சலாக இருந்தார்கள்.

அதற்கிடையே எதிரிகள் பயங்கர ஆயுதங்களுடன் அங்குள்ள எல்லா குடிசைகளிலும் நுழைந்து எனைத் தேடத் தொடங்கினார்கள். என்னுடன் வந்த மணிமொழியார், மற்ற நண்பர்களின் கதி என்னவென்று தெரியாமல் நான் தவித்துக் கொண்டிருந்தேன். வெளியிலே பெரிய அமளி நடைபெறுகிற ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது.

என்னுடன் இருந்த கழகத் தோழர் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு முதல் வெட்டு, என் கழுத்தில் விழுந்து, நான் செத்த பிறகே நீங்கள் சாகமுடியும் என்று மனமுருகச் சொன்னார்.

விடியற்காலை நாலரை மணிக்கு மேல் இரண்டொரு போலீசார், ஹோம்கார்டுகளுடன் முன்னாள் மேயர் மைனர் மோசஸ், காஞ்சி சி.வி. ராசகோபால், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, நடிகமணி டி.வி. நாராயணசாமி, அரங்கண்ணல், டி.கே. கபாலி, பரிமளம், இளங்கோ, முரசொலி மாறன் மற்றும் தோழர்களும் வந்து என்னை அங்கிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தனர். நடந்த சம்பவம் பற்றிப் புகார் கொடுத்து விட்டு, கைது செய்யப்பட்டிருந்த சந்தானம், ராசகோபால் இருவரையும் பொறுப்பில் உடனடியாக விடுவித்தால்தான் நான் காவல் நிலையத்தை விட்டுச் செல்வேன்

என்றும் இல்லையேல் என்னையும் மணிமொழியாரையும் கைது செய்து வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினேன்.

பின்னர் சந்தானமும் ராசகோபாலும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி பற்றி சென்னைக் காவல்துறை அதிகாரி விடுத்த அறிக்கையொன்றுக்கு பெரியவர் காஞ்சி மணிமொழியார் விடுத்த மறுப்பு அறிக்கை, நடந்த நிகழ்ச்சியை விளக்குகிற அறிக்கையாகவும் அமைந்து 18-2-67 முரசொலி இதழில் வெளிவந்துள்ளது. மணிமொழியார் அவர்களின் அறிக்கை பின் வருமாறு :-

என் வாழ்நாளில் நான் இதுவரை சந்தித்திராத ஒரு பயங்கரமான செயலை - காங்கிரஸ் குண்டர்களின் படுகொலை முயற்சியை 14-2-67 இரவு 1 மணி அளவில் கோட்டூரில் சந்தித்துவிட்டு, கழகத் தோழர்களின் சமயோசிதமான தீவிர நடவடிக்கையினால் கலைஞர் கருணாநிதி அவர்களும், நானும் எப்படியோ மயிரிழையில் உயிர் தப்பி, அடையாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வெளிவந்ததும் நகர போலீஸ் கமிஷனரின் பத்திரிகை செய்தியைக் கண்டு வியப்பும் வேதனையும் அடைந்தேன்.

கொலை முயற்சியில் ஈடுபட்ட காங்கிரஸ்காரர்கள் தமது கொடிய செயலை மறைப்பதற்காக வெளியிட்ட அறிக்கையோ என்ற ஐயத்தோடு இருமுறை படித்துப் பார்த்தேன்.

தி.மு.கழகத்தார் பணம் கொடுத்து ஓட்டு வாங்கப் போவதாகக் கருதிக் கொண்டு சில காங்கிரஸ்காரர்கள் மற்றொரு காரில் பின்தொடர்ந்ததாகவும், அந்தக் காருக்குப் பின் தி.மு.கழகத்தினரின் இன்னொரு கார் வந்ததாகவும் குறிப்பிட்டிருப்பதோடு, அடையாறு காவல் நிலையத்தில் என்னால் கொடுக்கப்பட்ட புகார் உண்மையற்றது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததைக் கண்டபோது ஒரு பயங்கரமான சூழ்நிலையைச் சந்தித்த எனக்கு இந்தச் சந்தேகம் தோன்றாமலிருப்பதற்கில்லை.

காங்கிரஸ்காரர்களுடைய மூன்று கார்கள், நாங்கள் வந்த காரைப் பின்தொடர்ந்து வந்தது பற்றியும், கோட்டூர் மகப்பேறு விடுதிக்கு முன்னால் எந்தப் பக்கத்திலும் நகர்த்த முடியாதபடி சுற்றி வளைத்து நிறுத்தப்பட்டிருந்தது பற்றியும், உடனடியாகத் தொலைபேசி மூலம் அடையாறு காவல் நிலையத்துக்கு இருமுறை

தெரிவித்திருந்தும் அதற்கு மாறாக தி.மு.கழகத்தினரின் கார்கள் இரண்டு வந்தது போலவும், காங்கிரஸ்காரர்களுடைய கார் ஒன்று மட்டுமே வந்தது போலவும் மக்களுக்கு உணர்த்தும் வகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

எந்த ஆதாரத்தின் மீது அல்லது எந்த ஆராய்ச்சிக்குப் பின்பு இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. மகப்பேறு விடுதிக்கு முன் கார்கள் வந்து நிறுத்தப்பட்டிருந்த டயர்களின் சுவடுகளை உடனடியாக ஆராய்ந்திருந்தால் எத்தனை கார்கள் வந்தன, எப்படி எப்படி நிறுத்தப்பட்டிருந்தன, எங்கள் கார் எப்படி மற்ற கார்களால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது, இவற்றுக்குப்பின் வேறொரு கார் நிறுத்தப்பட்டிருந்ததா என்ற விவரங்கள் நிச்சயமாகப் புலப்பட்டிருக்கும்.

நாங்கள் மகப்பேறு விடுதிக்குள் ஓடி ஒளிந்து கதவைத் தாளிட்ட பின், உள்ளே எந்த வாக்காளருக்கு நாங்கள் பணம் கொடுப்பதாகக் கருதிக் கொண்டு புழக்கடை பக்கமும் மற்றப் பக்கங்களிலும் வீட்டை வளைத்துக் கொண்டார்கள் என்பதும் விளங்கவில்லை.

மயிலை டி.கே. கபாலிக்கும், அடையாறு போலீஸ் நிலையத்துக்கும் பயங்கர நிகழ்ச்சி நடப்பதை மீண்டும் தொலைபேசி மூலம் தெரிவித்து விட்டு, பின்புறம் சென்ற கலைஞரின் கதி என்னவாயிற்று என்பதைப் பார்ப்பதற்காக புழக்கடைப் பக்கம் நான் சென்ற போது காங்கிரஸ் பாட்ஜ் அணிந்திருந்த 4 குண்டர்கள் கத்தியும் கம்புகளும் வைத்துக் கொண்டு நின்றிருந்ததை அவர்களில் ஒருவன் வைத்திருந்த டார்ச் லைட் ஒளியில் கண்டு நடுங்கி வியர்த்து கொலை! கொலை! ஓடி வாங்க என்று நான் கூச்சலிட்டபோதும், அந்த குண்டர்கள் அஞ்சாமல் அடே ஜாக்கிரதை! இவனுக்குப் பின்னால் அவன் வருவான், தொலைத்து விடுங்கள் என்று சொல்லிக் கொண்டு கையிலிருந்த ஆயுதங்களை ஓங்கிக்கொண்டு நின்றதும், வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்கத்தானா? என்பதும் விளங்கவில்லை.

குண்டர்கள் புழக்கடைப் பக்கம் வருவதற்குமுன்பே கழகத் தோழர்களால் கலைஞர் கருணாநிதி அவர்கள் அழைத்துச் செல்லப்படாமல் சற்று தாமதித்துச் சென்றிருப்பார்களானால்

விளைவு எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கிற போதே நெஞ்சு நடுங்குகிறது.

என் கூச்சலைக் கேட்டு குடிசை வாழ் மக்கள் ஓடி வந்ததைப் பார்த்ததும் தப்பி ஓடிய குண்டர்களைக் கைது செய்ய என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதென்பதோ, காங்கிரஸ்காரர்களுடைய இரண்டு கார்களுக்குரிய எண்கள் தரப்பட்டிருந்ததும், அந்தக் கார்கள் கைப்பற்றப்பட்டனவா, அவற்றின் டிரைவர்கள் கைது செய்யப்பட்டனரா என்பதோ தெரியவில்லை. ஆனால் எங்களுக்குப் புகலிடம் தந்தவர்களும், இந்தப் பயங்கர நிகழ்ச்சியைக் கேட்டறிந்ததும் எங்கள் நிலைமையை அறிந்து கொள்ளும் ஆவலோடு வெகுநேரம் கழித்து வெளியிடங்களிலிருந்து காரில் வந்து கொண்டிருந்த தோழர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நாங்கள் முதலில் யோசித்திருந்தபடி அடையாறிலிருந்து சைதைக்கு நேராக மெயின் ரோடு வழியாக நாங்கள் சென்றிருந்தால் கலைஞர் கருணாநிதியின் கதை அப்போதே முடிந்து போயிருக்கும். எங்களைக் கார்கள் பின்தொடர்வதைக் கண்டு, ஆபத்து எங்களை பின்தொடர்வதாக உணர்ந்து, கோட்டூருக்குக் காரைத் திருப்பிச் சென்றதாலேதான் மயிரிழையில் உயிர் தப்பினோம் என்ற செய்தியையாவது இப்போது என்னால் கூற முடிகிறது.

எங்களுடைய ஆபத்தான நிலை பற்றி தொலைபேசி மூலம் கலைஞர் கருணாநிதி ஒருமுறையும் நான் ஒருமுறையும் தெரிவித்திருந்தும் புகாரில் நான் கொடுத்திருந்த செய்திகள் உண்மையற்றது என கமிஷனர் தெரிவித்திருப்பது வியப்பாக இருக்கிறது.

கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு இனிமேலும் ஆபத்து ஒன்றும் ஏற்படாது என்ற உறுதி மக்களுக்கு ஏற்படவும், தமிழகக் காவல்துறையினரின் கீர்த்தி நிலை பெற்று மேலும் ஓங்கவும், தீவிர புலன் விசாரணையை மேற்கொள்ளும் என்றும், பகிரங்க நீதிவிசாரணை கோட்டூரில் நடைபெற இந்த அரசு ஏற்பாடு செய்யுமென்றும் நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

உடன்பிறப்பே, இதுதான் காஞ்சி மணிமொழியார் அன்று வெளியிட்ட அறிக்கை!

இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கொலை வெறியர்களிடமிருந்து என் உயிரைக் காப்பாற்றிய அந்தக் குடிசை வாழ் சகோதரன் சாரங்கனையும், அவர் மனைவியையும் அறிஞர் அண்ணா அவர்கள், தன் வீட்டுக்கு அழைத்து வரச்சொல்லி அவர்கள் என்னை காப்பாற்றியதற்காகப் பாராட்டு தெரிவித்து இருவருக்கும் புத்தாடைகளும், புடவையும் பரிசாக வழங்கி இருவருக்கும் தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார் என்ற செய்தி 2-3-67 முரசொலியில் வெளிவந்திருக்கிறது.

கோட்டூர் கொலை வெறிச் சம்பவம் பற்றிய உண்மைகள் இவ்வாறிருக்க, சேலத்தில் அந்தக் கோட்டூர் சம்பவம் பற்றி எம்.ஜி.ஆர். என்ன பேசியிருக்கிறார் தெரியுமா?

கருணாநிதிக்கு ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 1967 தேர்தலில் கோட்டூர்புரம் சம்பவம் பற்றிச் சொல்கிறார்கள். அங்கு கருணாநிதி அந்த நேரத்தில் ஏன் போனார்? என்பதன் உண்மையான காரணத்தை அவர் தாய்மீது ஆணையிட்டுக் கூறமுடியுமா?

(எம்.ஜி,ஆர். சேலம் பேச்சு - சென்னை 7-2-79 அ.தி.மு.க. ஏடு)

தேர்தல் பிரச்சாரத்தின் போது எதிரிகள் என்னைத் துரத்தினார்கள், நான் குடிசைக்குள் ஒளிந்து அடுத்த நாள் வந்தேன் என்கிறீர்கள்? எதிரிகளா துரத்தினார்கள்? எதற்கோ போனீர்கள்? வீட்டார்கள் துரத்தினார்கள், நீங்கள் ஓடி ஒளிந்தது எதற்காக என்று தெரியாதா?

(எம்.ஜி.ஆர். சேலம் பேச்சு - நெல்லை பதிப்பு 9-2-79)

உடன்பிறப்பே, இது ஒரு முதலமைச்சரின் பேச்சு! இவர்தான் என்னைப் பார்த்துச் சொல்கிறார்; பொய்யிலே பிறந்த பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமான்! என்று!

இப்படித் தரங்கெட்டுப் பேசக்கூடிய ஒருவர், தமிழகத்தின் முதலமைச்சராக விளங்குகிறார்.

எதற்கோ போனீர்கள்! அதனால் வீட்டார் துரத்தினார்கள்! என்றும், கருணாநிதி அந்த நேரத்தில் ஏன் போனார் என்ற

உண்மையான காரணத்தை தாய்மீது ஆணையிட்டுக் கூறுவாரா என்றும் எம்.ஜி. இராமச்சந்திரன் சேலம் கூட்டத்தில் என்னைப் பார்த்துக் கேட்கிறார்.

எவ்வளவு விஷமத்தனமான பேச்சு! விஷம் கக்குகிற பேச்சு! விரசமான பேச்சு!

உடன்பிறப்பே, எதற்கெடுத்தாலும் தாயின்மீது ஆணையிட்டுத் தாராளமாகப் பொய்களைச் சொல்லித் தமிழக மக்களை ஏமாற்றி வருகிற எம்.ஜி.ஆருக்கு - நான் அவரது பாணியிலேயே பதில் அளிக்க அதிக நேரம் ஆகாது!

கோட்டூர்புரம் கோரச் சம்பவத்தை விளக்க, பெரியவர் காஞ்சிமணிமொழியார் அப்போது வெளியிட்ட அறிக்கையொன்றே போதுமானது! அந்தக் குடிசையில் என் உயிரைக் காப்பாற்றிய அந்தக் குடும்பத்தினருக்கு அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துப் பரிசு வழங்கினாரே, அந்தச் செய்தியே போதுமானது!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமான் எம்.ஜி.ஆர்.தான் என்பதை நாட்டு மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள நான் தந்துள்ள ஆதாரப்பூர்வமான விபரங்களே போதுமானவை என்று கருதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(13-02-1979)

641. தீர்ப்பு எழுதுகிறாரா?

உடன்பிறப்பே,

இந்திரா காந்தி மதுரை வந்தபோது நடந்த சம்பவத்தை மக்கள் அறிவார்கள். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. தீர்ப்பு வந்தால் கருணாநிதி எவ்வளவு பயங்கரவாதி என்பது தெரியும்.

(முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சேலம் பேச்சு - தினமலர், நெல்லை பதிப்பு 9-2-79)

வேளை தவறினாலும் - வேதம் ஓதுவதைப் போல, சட்டம் - நீதி - நியாயம் - இவைகளைப் பற்றி உச்சரிக்கத் தவறாத உத்தமராம் (?) நமது தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவரது ஆட்சியில் எதிர்க்கட்சியினர் மீது தொடரப்படும் வழக்குகளில் தீர்ப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே வெளிப்படையாக உத்திரவு போல வழங்கி வருகிறார் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டே தேவையில்லை அல்லவா?

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பு பெருமளவுக்கு மறைந்து சமஸ்தானங்கள் - ஆஸ்தானங்கள் என்ற அளவுக்கு, இன்றைய தமிழக ஆட்சி மாறிவருகிறது.

எனவே, இனி நீதி மன்றங்களையெல்லாம் கூடக் கலைத்துவிட்டு, ஒரு கொலு மண்டபம் அமைத்து - அந்த மண்டபத்தில் வாரம் ஒரு முறையோ அல்லது இருமுறையோ நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தர்பார் கூட்டி, தனது மந்திரி பிரதானியர், ஆஸ்தானப் புலவர்கள், வித்துவான்கள், கலைஞர்கள் புடைசூழ அமர்ந்து வழக்குகளுக்கான தீர்ப்புக்களை அவரே அளித்துவிட முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இளைஞன் இளஞ்செழியன் கொலை செய்யப்பட்டது பற்றிப் போலீசார், தங்களது புலன் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கும் போதே மதுரையில் பெரியார் விழாவில் பேசிய முதலமைச்சர், இளைஞன் இளஞ்செழியன் கொலை

செய்யப்படவில்லை - விபத்திலே இறந்துவிட்டான் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து தீர்ப்பையும் வழங்கி விட்டார்.

இராதாபுரத்தில் உளி வீசிய நிகழ்ச்சியில் ஒருவன் கைது செய்யப்பட்டு அவன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கும்போதே கருணாநிதி சொல்லும் உளிக் கதை என்று அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேலி செய்து தனது உள்ளத்தைத் திறந்து காட்டியிருக்கிறார் முதலமைச்சர்!

எனவே நீதிமன்றத்தில் நடைபெறுகிற வழக்குகள், பதிவாகியுள்ள வழக்குகள் - அனைத்துக்கும் தீர்ப்பு எப்படி இருந்திட வேண்டும் என்று ஒரு முதலமைச்சர் இவ்வாறு அறிவிப்பதைக் காணும்போது, நீதியில் தலையிட இன்னும் எத்தனை குறுக்கு வழிகளை அவர் கையாளுகிறாரோ என்பதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை.

தீர்ப்பு வந்தால் கருணாநிதி எவ்வளவு பயங்கரவாதி என்று தெரியும்.

முதலமைச்சரின் முடிந்த முடிவான கருத்து! நீதியில் தலையிட மாட்டோம் என்று நித்தநித்தம் முழங்குகிற நேர்மையாளர் (?) எவ்வளவு அழுத்தம் திருத்தமாகப் பேசியிருக்கிறார் பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

(15-02-1979)

642. திருவண்ணாமலைப் பாசறை!

உடன்பிறப்பே,

தலைமைக் கழகத்தின் செயலாளர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென உரிய கழகப் பணிகளைச் சிறப்புற ஆற்றி வருகிறார்கள். அதற்கோர் எழுச்சிமிகு எடுத்துக் காட்டாக நமது கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் கந்தப்பன் அவர்களின் முயற்சியால் அண்மையில் திருவண்ணாமலையில் நடைபெற்ற கொள்கைப் பிரச்சாரப் பயிற்சிப் பாசறை விளங்கியது.

தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு நாள் ஓய்வற்ற சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு மிகுதியும் உடல் களைப்புற்ற நிலையில் திருவண்ணாமலைக்குச் சென்றேன். ஆனால் என் களைப்பினை அறவே போக்கிடும் மாமருந்தாகத் திருவண்ணாமலை கழகப் பாசறை இருந்தது.

பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களால் பிப்ரவரி நாலாம் நாள் தொடங்கி வைக்கப்பட்ட கொள்கைப் பிரச்சாரப் பயிற்சிப் பாசறை ஏழு நாட்கள் நடைபெற்று - நிறைவு விழா - நற்சான்று இதழ் வழங்கும் விழா நிகழ்ச்சிகட்கு நான் சென்றிருந்தேன்.

நூற்றி ஐம்பத்தி ஆறு கழக உடன்பிறப்புக்கள் பிரச்சாரப் பயிற்சி பெற்றனர். அவர்களுள் பத்துப் பதினைந்து பேரே சிறிது வயதேறப் பெற்றவர்கள். ஏனையோர் இளைஞர்கள்! வாலிபர்கள்! எம்.ஏ., பி.ஏ., பி.எஸ்.சி என்ற பட்டதாரிகள்!

ஏழு நாட்களும் இரவு பகல் விழித்திருந்து கந்தப்பன் அவர்களும் அவருக்குத் துணையாக கவிஞர் குடியரசு, கோவை இராமநாதன், சி.டி. தண்டபாணி ஆகியோரும் பிரச்சாரப் பயிற்சிக்கான முறைகளை வகுத்துப் பணியாற்றிய பாங்கினை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கழக முன்னணியினர் இடையிடையே திருவண்ணாமலை சென்று பயிற்சி நடத்தித் திரும்பியுள்ளனர்.

விடுதியொன்றில் தங்கி, கட்டுப்பாடு சிறிதும் குலையாது பயிலுகின்ற மாணவர்களைப் போலவே அந்த நூற்றி ஐம்பத்தாறு பேரும் கடமை உணர்ந்து, கண்ணியம் காத்து, தாங்கள் சொற்பொழிவாளர்களாக மட்டும் ஆகாமல், கழகம் காக்கும் செயல் மறவர்களாகவும், தியாக விளக்குகளாகவும் ஆகிட வேண்டுமென்ற உள்ளத்தோடு பயிற்சிப் பாசறையில் கற்க வேண்டியதைக் கசடறக் கற்றனர்.

ஒவ்வொருவர் தலையிலும் ஒரு நூல் நிலையத்தை அமைத்திருக்கிறோம் என்று பயிற்சி அளித்த நண்பர்கள் மகிழ்ச்சியோடு கூறியபோதும் - அத்துணை விளக்கங்களையும் செய்திகளையும் பெற்ற நன்றி உணர்வை அந்தப் பாசறை மாணவர்கள், தங்கள் முகமலர்ச்சி வாயிலாக வெளியிட்ட போதும் எனக்குப் புல்லரித்தது.

ஏற்கனவே நமது கழகத்தில் நூற்றுக்கணக்கான பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழக முழுவதும் சுற்றிச் சுழன்று கழகக் கொள்கை விளக்கங்களை மக்களுக்கு அளித்து வருகிறார்கள்.

அவர்களுடன் இப்போது புதிதாக மேலும் நூற்றுக்கு மேற்பட்டோர் இணைகிறார்கள்.

இந்தப் பிரச்சாரப் பயிற்சிப் பாசறை வடஆற்காடு, தென்ஆற்காடு, செங்கற்பட்டு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மட்டும்தான் நடைபெற்றது.

பாசறை நடைபெற எட்டு நாட்களுக்கான செலவுப் பொறுப்புக்களையும் - உணவு, உறையுள் போன்ற வசதிப் பொறுப்புக்களையும் - திருவண்ணாமலை நகரக் கழகமும், கழகத்தை அந்தப் பகுதியில் கட்டிக் காத்திடும் நமதியக்கத்தின் தலையாய முன்னோடிகளும், ஏற்றுக்கொண்டு அயராது உழைத்துள்ளனர்.

அவர்கள் பெயர்கள் எல்லாம் என் நெஞ்சில் இன்றல்ல; என்றென்றும் நீங்காத இடம் பெற்றிருப்பவைகளாகும்!

அவர்களுக்குத் தனித்தனியாக நன்றி கூறுவது இயலாது! நீண்ட பட்டியல் அது!

செயல்வீரர்களின் முகாம் - தொண்டர்களின் பாடி வீடு - எதையும் தாங்கும் இதயங் கொண்டு - இயக்கத்திற்குக் கிடைத்த

எஃகுக் கம்பிகளாம் என் அன்பு உடன்பிறப்புக்களின் அசைக்க முடியாத கோட்டை - இப்படிச் சிறப்பித்துக் கொண்டேயிருக்கலாம்; திருவண்ணாமலையில் நடைபெற்ற பயிற்சிப் பாசறை குறித்து!

பாசறைப் பயிற்சி பெற்று வெளிவந்துள்ள அந்த அரிமாக்களின் முழக்கம் தமிழகத்தில் கேட்கட்டும்! கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களும், கழக அமைப்புக்களும் அந்தப் புதிய போர்க் கருவிகளைக் கூர் மழுங்காமல் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி, வெற்றிமுனை நோக்கிப் பயணம் நடத்தட்டும்!

எல்லாப் பேச்சாளர்களையும் ஒன்று கேட்டுக் கொள்வேன் - மேடையில் காரம் கூட இருக்கலாம்! கடுமையான விமர்சனங்கள்கூட இருக்கலாம்! கடுகளவு கண்ணியம் கூடக் குறையாமல் பார்த்துக் கொள்க என்று தலைமைக் கழகச் சார்பில் வேண்டுகிறேன்!

இன்னொரு முக்கிய வேண்டுகோள் - ஒத்துக் கொண்ட கூட்டங்களை ஒத்தி வைப்பது - கூட்டம் நடத்துவோர் ஏமாறும்படி செய்வது - பேச்சாளர் வந்தபிறகு, கூட்டம் ஏற்பாடு செய்யவில்லை என்று அமைப்புக்களிலே கூறுவது - இவையனைத்தும் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் ஏற்பட்டால் பரவாயில்லை; பொறுத்துக் கொள்ளலாம் - இதுவே வழக்கமாகி விட்டால், தலைமைக் கழகம் அந்த செயலினை நிச்சயம் சகித்துக் கொள்ளாது! இதனை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டுமென்பதே அந்த வேண்டுகோள்!

கொள்கைப் பிரச்சாரம் விரிவடைய திருவண்ணாமலை வழிகாட்டியிருக்கிறது. மற்ற மாவட்டங்களையும் இதுபோல் இணைத்து பயிற்சிப் பாசறைகளை நடத்திட நமது கொள்கை பரப்புச் செயலாளர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

மாவட்ட அமைப்புக்களும், ஒன்றிய, மற்றும் கிளை அமைப்புக்களும் திருவண்ணாமலையில் ஒத்துழைத்தது போல் மற்ற இடங்களிலும் ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(16-02-1979)

643. உன் கடமையும் தொடருமென நம்புகிறேன்!

உடன்பிறப்பே,

நம்நாடு வார இதழை மீண்டும் தொடங்கி நமது கழகப் பாசறைகளின் கேடயமாகத் திகழச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தலைமைக் கழக அலுவலகச் செயலாளர்களில் ஒருவரான முன்னாள் மேயர் கணேசன் அயராது பாடுபட்டு வருகிறார். நாளேடுகள் மலிந்து நாட்டுச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்கிற வாய்ப்பைப் பெற்றிடும் இந்நாளில் வார ஏடுகள் எண்ணிக்கையில் உயர்வது என்பது எளிதான காரியமல்ல. அதுவும் ஒரு இயக்கத்தின் கொள்கைகளைக் கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் தாங்கி வருகிற வார இதழ்கள், இலட்சக்கணக்கான பிரதிகள் என்ற எண்ணிக்கையை எட்டுவது கடினம். இதையெல்லாம் மனதிற்கொண்டே நம்நாடு கிழமை இதழை மீண்டும் தொடங்கிவிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அக்கறையுடன் இந்த இதழுக்குக் கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எழுதியனுப்பும் கழக எழுத்தாளர்களுடன் இணைந்து நானும் வாரந்தோறும் எழுதி வருகிறேன்.

என் நிலையோ நீ அறியாதது அல்ல! மாவட்டங்களில் கழக வளர்ச்சி நிதி திரட்டுவதற்காக சுற்றுப் பயணங்கள், சென்னையில் இருக்கும் நேரத்திலும் ஓயாத கழகப்பணிகள் - முரசொலியில் கடிதங்கள் மூலம் நாள்தோறும் தொடர்புகொள்ள வேண்டிய எழுத்துத் தொண்டு, குங்குமத்தில் குறளோவியம் தொடர்கதை - அஃதன்னியில் நீ விரும்புகிறவாறு மூன்று நான்கு திரைப்படங்களுக்கு எழுதுகிற வேலை வேறு - இத்தனைக்குமிடையில் நம்நாட்டுக்கும் எழுதி வருகிறேன்.

ஓரிரு வாரம் குறளோவியம் குங்குமம் இதழில் தடைப்படுவது போல - நம்நாடு இதழிலும் புனித ராஜ்யம் நாடகம் தடைப்பட்டு

விடுகிறது. ஓய்வின்றி அமைந்து விடுகிற கட்சிப் பணிகளே அதற்குக் காரணம்.

நட்டத்தில் நடைபெறவில்லையென்றாலும், நம்நாடு இலாபத்தில் இயங்கவில்லை என்பது என் மனதுக்குப் பெருங்குறைதான்!

மாதந்தோறும் கிடைக்கும் சிறு இலாபம் கழகத்தை நடத்துவதற்கு ஓரளவு பயன்படுமல்லவா; அதனால்தான்!

இலாப நோக்கு - கழகத்தைப் பொறுத்து ஓரளவு இருந்தாலும்; நமது கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள் ஒவ்வொன்றிலும் நம்நாடு இதழ் ஒன்று வாரந்தோறும் நிச்சயம் வாங்கப்படவேண்டும் என்பதிலே எனக்கு அழுத்தமான கருத்து உண்டு.

அந்த ஆசை முழுமையாக நிறைவேறவில்லை!

நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உன்னுடையது!

எல்லாப் பக்கங்களிலும் என் எழுத்துக்களே இருந்திட வேண்டும் என நீ எதிர்பார்ப்பது சரியல்ல!

கழகத்துக்குப் புதிய எழுத்தாளர்களும் - சிந்தனையாற்றல் படைத்தவர்களும் தேவை! அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அந்தப் பணியை நம்நாடு செய்து வருகிறது.

காலத்துக்கேற்ப நம்நாடு தனது பழமைக் கோலம் கலைத்து புதிய நடை போட வேண்டும், விறுவிறுப்புடன்! என்ற உனது கருத்தை நான் முழுக்கமுழுக்க ஆதரிக்கிறேன்.

இன்னும் இரண்டொரு வாரங்களில் எழிற்கோலம் கொண்டு - எண்ணக் கருவூலமாய் நம்நாடு உன் கரங்களை - அலங்கரித்துக் கருத்தைக் கிளறும் வண்ணம் வரப்போகிறது பார்!

இடையே இரண்டு வாரங்கள் நின்றுவிட்ட புனித ராஜ்யம் தொடர் நாடகத்தை அடுத்த இதழிலிருந்து எழுதப் போகிறேன்.

தொய்வின்றி எழுதப் போகிறேன். இன்றுள்ள நாட்டு நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அந்த நாடகத்தை நீ சுவைத்துப் படித்து - பாராட்டி எழுதியுள்ள கடிதங்கள் எனக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன!

ஏன் இரண்டு வாரமாக அந்த நாடகத்தைக் காணவில்லை? என்று நீ கடிந்து கொண்டு எழுதிய கடிதங்களையும் கண்ணிலே ஒத்திக் கொண்டேன். உன் ஆர்வத்தை எண்ணி ஆனந்தமுடன்!

அடுத்த வாரம் 25-2-79 அன்று நம்நாடு இதழில் புனித ராஜ்யம் நாடகம் தொடரும்!

வாரந்தோறும் நம்நாடு ஒன்றையும் வாங்கித் தீரவேண்டுமென்ற உன் கடமையும் தொடருமென நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(19-02-1979)

நன்றி : நம்நாடு (18-2-79)

644. முதுகெலும்பை முறித்த படலம்! (1)

உடன்பிறப்பே,

அமைச்சரவையின் மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீது பேசிய எதிர்க்கட்சிகள் அடுக்கடுக்காகச் சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்பை முறித்துப் போட்டுவிட்டாராம் முதலமைச்சர்! இப்படி ஆளுங்கட்சி ஏடுகள் ஆனந்தக் கூத்தாடுவதுபோல் நடிக்கின்றன. ஐந்து மணி நேரம் பேசுவது - ஆறு மணி நேரம் பேசுவது என்பதைப் பெரும் சாதனையாக வேறு காட்டிக் கொள்கிறார்கள். எத்தனை மணி நேரப் பேச்சானாலும் அதில் எந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எப்படிப் பதில் கூறப்பட்டன, எவ்வாறு விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன என்பதைத்தான் கவனிக்க வேண்டும். அதைக் கவனிக்காமல் ஏமாந்து விடுவார்கள் பொதுமக்கள் என்று இன்னமும் எம்.ஜி.ஆர். கட்சியினர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் பாவம்!

நியாயவிலைக் கடைகள் வைத்துவிட்டதாக அறிவிக்கிறீர்கள் சரி! அந்தக் கடைகளில் தனியார் கடைகளைவிட விலை அதிகமாக அல்லவா இருக்கிறது? தி.மு.க.வுக்கு முன்னால் 'அ' என்ற எழுத்தைச் சேர்த்து அ.தி.மு.க. ஆனது போல் நியாய விலைக் கடைக்கு முன்னால் 'அ' என்ற எழுத்தை இணைத்து அநியாய விலைக் கடை என்று கூறுங்களேன்! என உரைத்து தனியார் கடைக்கும் அரசின் நியாயவிலைக் கடைகளுக்குமுள்ள விலை வேறுபாடுகளின் பட்டியல் பலவற்றைப் படித்துக் காட்டிக் குற்றம் சுமத்தினேன். பதில் உண்டா அதற்கு? ஒருவேளை பதில் அளிக்காமல் இருப்பதுதான் முதுகெலும்பை முறிக்கும் திறனோ?

விவசாயிகளின் கூலியை அதிகப்படுத்துவதால் மட்டும் அவர்களின் வாழ்வு வளமாகிவிடாது! தினக் கூலியை அறவே அகற்றி அவர்களுக்கு மாதச் சம்பளம், போனஸ் போன்றவை மில் தொழிலாளிகளைப் போலத் தரப்பட வேண்டும். விவசாய

சமுதாயம் இனிமேலும் பொறுத்திருக்கும் என்று யாரும் வீண் கற்பனையில் மூழ்கி இருக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சியாக இருந்தபோது 1974-இல் ஆனந்தவிகடனில் எம்.ஜி.ஆர். எழுதினார். அதைச் சுட்டிக்காட்டி, அந்த நிலையை இன்னும் ஏன் இந்த அரசு உருவாக்கவில்லை? தேர்தலில் வாக்காளர்களை ஏமாற்றத்தானே அந்த எழுத்தும் பேச்சும் பயன்பட்டது என்று நான் கேட்டேன். அதற்கும் முதல்வர் பதில் எதுவும் அளிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் முதுகெலும்பை முறிக்கிற முறை இதுதான் போலும்!

தேர்தல் நேரத்தில் முக்குலத்து மக்களைப் பார்த்து, குற்ற பரம்பரைச் சட்டத்தை அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அகற்றும் என்றீர்களே! அந்தச் சட்டம் ராஜாஜி காலத்திலேயே அகற்றப்பட்டு விட்டதே - எனக் குறிப்பிட்டேன். யாரோ என்னிடத்தில் அப்படிச் சொன்னார்கள் - அதனால் அப்படிச் சொன்னேன் - முக்குலத்து மக்களுக்கு இன்னமும் இருக்கிற இடையூறுகளைக் குறித்துத்தான் நான் அவ்வாறு சொல்ல நேர்ந்தது என்று மழுப்பிடும் கருத்தொன்றைக் கூறினாரே தவிர, எதிர்க்கட்சிக் கேள்வியின் முதுகெலும்பை அவர் ஒன்றும் முறித்து விடவில்லை.

சென்ற ஆண்டு பொங்கல் திரு நாளன்று சென்னை நகரில் வீடு வீடாகச் சென்று காய்கறிகளையும், மசாலாப்பொடி, மிளகாய்ப் பொடி முதலியவைகளையும் மலிவு விலையில் விற்பனை செய்யும் திட்டமொன்றைத் திருவிழாக் கொண்டாடித் தொடங்கினீர்களே! மூன்று சக்கர வண்டிகளில் அந்த பொருள்கள் வீதிக்கு வீதி வரும் என்றீர்கள். தாய்மார்கள் இனிமேல் மார்க்கெட்டுக்குப் போகத் தேவையில்லை என்று அந்த விழாவில் பேசினீர்கள். அந்தத் திட்டம் சென்னை மட்டுமன்றி நாடு முழுதும் பரவும் - அதற்காக மூன்று சக்கர வண்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமையும். அதில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று திட்டத்தை விவரித்தீர்களே! அப்போது சென்னையில் ஆரம்பித்த திட்டமும் - உங்கள் பேச்சும் - கண்ணாடி வியாபாரி கண்ட கனவு போல் ஆகிவிட்டதே என்று சுட்டிக்காட்டி குற்றம் கூறினேன். முதலமைச்சர் இதற்கு மௌனம் சாதித்ததின் மூலம் என் குற்றச்சாட்டின் முதுகெலும்பை நொறுக்கோ நொறுக்கென்று நொறுக்கித் தள்ளிவிட்டார். இல்லையா உடன்பிறப்பே! என்ன சிரிக்கிறாய்?

ஒரு லட்சத்து முப்பது ஆயிரம் பேருக்கு ஓராண்டு காலத்தில் வேலை கொடுத்ததாகச் சொல்கிறீர்களே! அது நிரந்தர வேலை வாய்ப்பா? ஊர் வாரியாக அந்தப் பட்டியலை வெளியிட முடியுமா? இந்தக் கேள்வியின் பக்கமே முதலமைச்சர் தனது ஐந்து மணி நேரப் பேச்சில் தலை காட்டவே இல்லை! ஆனால் எதிர்க்கட்சிகளின் முதுகெலும்புகளை அவர் முறித்துவிட்டார் என்று பெட்டிச் செய்தி போட்டு பேரானந்தங் கொள்வது போலப் பாவனை காட்டுகின்றன ஆளுங்கட்சி ஏடுகள்!

1977-ஆம் ஆண்டு சர்வீஸ் கமிஷன் நடத்திய சிறப்புத் தேர்வில் வெற்றி பெற்ற சுமார் மூவாயிரம் பேருக்கு 1978-இல் வேலை வழங்க அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டதே! இதுவரையில் எதுவும் நடக்கவில்லையே - இதற்கு என்ன காரணம் என்று கேள்விக்கணை தொடுத்தேன்! பதில் இல்லை! பதிலே இல்லை! முதுகெலும்பை முறிக்கிற கலை இதுதான் போலும்!

சேலத்தில் மாக்னசைட் தொழிலை அரசு மேற்கொண்டு கடந்த சில வாரங்களுக்கு முன்பு விழா நடத்தியது, பரவாயில்லை! ஆனால் மூவாயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை தரப்படும் என்று கூறிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. பாதிப்பேர் தான் வேலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் பத்து வருடம், பதினைந்து வருடம் என்று இருந்த சர்வீஸ் வெட்டப்பட்டு விட்டதே! இது முறைதானா? இந்தக் குற்றச்சாட்டுக்கும் முதலமைச்சர் விடையேதும் தரவில்லை. ஆனால் ஆளுங்கட்சி ஏடு சொல்கிறது முதுகெலும்பை முறித்துவிட்டார் என்று! அவர் எதிர்க்கட்சிக் குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்பை முறித்த கதையை - நாளைக்கும் தொடர்ந்து எழுதுகிறேன். நிறைய இருக்கிறது எழுதிட!

அன்புள்ள,

மு. க.

(02-03-1979)

645. முதுகெலும்பை முறித்த படலம்! (2)

உடன்பிறப்பே,

நேற்று எழுதியதின் தொடர்ச்சி இந்தக் கடிதம். எதிர்க்கட்சிக் குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்பை எப்படியெல்லாம் முதலமைச்சர் முறித்துப்போட்டார் என்பதை விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதனால் கடிதம் நீண்டுவிட்டது.

முதலமைச்சர், தனக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் புறக்கணித்து விட்டு சினிமாவில் நடிக்கப்போகிறேன் என்று கூறிக் கொண்டிருக்கிறாரே சரிதானா? என்று சாதிக்பாட்சா அவரது உரையில் கேட்டார்.

அது பற்றிய ஒரு விளக்கத்தை முதல்வர் அளித்தார்.

வருமான வரி கட்டுவதற்காகவோ, கடன்களை அடைப்பதற்காகவோ நான் சினிமாவில் நடிக்கப் போவதில்லை என்று முதல்வர் கூறியதும், நான் 1978-ஆம் ஆண்டு இந்து ஏட்டிலும், தினத்தந்தி ஏட்டிலும் வெளி வந்திருந்த செய்திகளைப் படித்துக் காட்டி, கடனைத் தீர்ப்பதற்கென்றும், வருமான வரி பாக்கியைக் கட்டுவதற்கென்றும் தாங்கள் சினிமாவில் நடிக்கப்போவதாக பிரதமரிடம் கூறியதாக அந்த ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதே எனக் கேட்டேன்.

பட்டென்று முதல்வர் பதில் சொன்னார். அந்தப் பத்திரிகைகளை நம்புவதைவிட என்னை நம்புங்கள்! எனக்கு ஒரு டெலிபோன் செய்து கேளுங்கள் என்று!

இந்துவிலும், தந்தியிலும் செய்திகள் வந்து பல மாதங்கள் ஆகின்றன. அதை உடனடியாக முதல்வரோ, அல்லது முதல்வரின் அரசாங்கச் செயலாளர்களில் ஒருவரோ அலுவலக ரீதியில் அந்தச் செய்தி தவறானது என்று மறுத்திருக்கலாமல்லவா?

மறுக்கவில்லை. அவரது அலுவலகத்திலிருந்து டெலிபோன் செய்து இந்துவிலும், தினத்தந்தியிலும் அப்போதே திருத்தம் வெளியிட்டிருக்கலாம் அல்லவா? அதையும் செய்யவில்லை. இப்போது உலகம் சுற்றிவிட்டுச் சிங்கப்பூர் வழியாக வரும்போது அங்கே நிருபர்களிடம் என்ன சொன்னார்? முதலமைச்சருக்கான அரசாங்க சம்பளம் எதையும் வாங்காமல் நான் சினிமாவிலும் தொடர்ந்து நடிப்பேன்!

இப்படிச் சொன்னாரா இல்லையா? இந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளதே!

அந்தச் செய்தியையும் நம்பாதே! எனக்கு டெலிபோன் செய்து கேட்டுக்கொள்! என்கிறாரா, புரியவில்லை!

முதலமைச்சருக்குரிய ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்காமல் சினிமாவில் நடிப்பேன் என்றால் படத்தில் நடித்து வெள்ளையும் கறுப்புமாகப் பல லட்ச ரூபாய் வாங்குவேன் என்று தானே அர்த்தம்! அது போகட்டும் - அவர் நடிக்கட்டும் அல்லது நடிக்காமல் இருக்கட்டும்.

இப்போது சினிமாவில் நடிப்பதைவிட மிகத் திறமையாக முதலமைச்சர் வேடத்தில் நடித்துக் கொண்டிருக்கிறாரே!

முருகையன் எம்.பி. கொலை செய்யப்பட்டதிலிருந்து இதுவரையில் புலன் விசாரணை செய்து வருகிற போலீசார், முருகையன் மனைவியைச் சந்தித்துக்கூட எந்தவிதமான விசாரணையும் நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டை எல்லாக் கட்சியினரும் பல நாட்களாகக் கூறிவருகிறார்கள். அது பல பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முதல்வர் பதில் அளிக்கும்போது நான் குறுக்கிட்டுச் சொன்னேன், முருகையன் அவர்கள் கொலையுண்டு பல நாட்களாகியும் இன்னமும் அவரது மனைவியிடம் கூடப் போலீசார் விசாரணை நடத்தவில்லை என்று!

அதற்கு முதல்வர் என்ன சொன்னார் தெரியுமா?

இந்த விளக்கத்தை நான் மனதில் பதியவைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் போதுமானது எனக் கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு அது பரியம்

இதுதான் முதலமைச்சரின் பதில்!

ஒரு அரசியல் கட்சித் தலைவர் - நாடாளுமன்ற உறுப்பினர் - அவரது கொலை சம்பந்தமாக அவரது வீட்டாரைக் கூட விசாரிக்கவில்லை என்கிற அளவுக்குப் புலன் விசாரணை அவ்வளவு மோசமாக நடைபெறுகிறது என்று சட்டமன்றத்தில் மட்டுமல்ல; நீண்ட நாட்களாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது - ஆனால் முதலமைச்சர் மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று விடையளிக்கிறார்.

உடன்பிறப்பே, இதுதான் எதிர்தரப்புக் குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்பை முறிக்கிற இலட்சணம் போலும்!

இந்த அரசு தொழிலாளர் நல விரோத அரசாக மாறிவிட்டது என்பதற்கு இந்தியக் கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, தி.மு.க. ஆகிய கட்சிகளின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களைச் சந்திக்க முடியாமல், ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லப்பட்டதே - அதுவும் முதுகெலும்பை நொறுக்கும் ஒருமுறை தானோ என்னவோ!

கிளர்ச்சிகளை பெரிதுபடுத்தி, செய்திகளைப் பரபரப்பாக வெளியிட்டு வன்முறைகள் தலைதூக்கத் தூண்டுகோல்களாகப் பத்திரிகைகள் இருக்கக் கூடாதென்று இதோபதேசம் புரிகிறார் முதலமைச்சர்!

இந்திராகாந்தி அம்மையார் நாடாளுமன்றத்தில் தண்டிக்கப்பட்டபோது இந்திரா காங்கிரசார் நடத்திய கிளர்ச்சிகளை தமிழ்நாட்டில் உள்ள ஆளுங்கட்சி ஏடுகள் எவ்வாறு வெளியிட்டு வன்முறைக்குத் தூபமிட்டன என்பதைப் பல ஆதாரங்களுடன் தேதி வாரியாக அந்தப் பத்திரிகைச் செய்திகளைப் படித்துக் காட்டினேன்.

முதல்வர் அது பற்றி வாய் திறந்தாரா? முந்நூறு நிமிடப் பதில் உரையில் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதில் அளிக்க நேரமில்லை! அவருக்குத்தான் எங்கள் முதுகெலும்பை ஒடிக்க நேரம் தேவைப்பட்டதே! அதனால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அவர் விளக்கம் தரவில்லையோ என்னவோ!

மதுவிலக்கு அவசரச் சட்டப்படி குற்றம் சாட்டப்பெற்றுக் கைதானவர்களைப் போலீசார் ஜாமீனில் விடமுடியாது என்று

இருக்கிறபோது 15-2-79 அன்று கைதான மிஸ்ஸி என்ற ஒரு பெண்ணை உடனடியாக ஜாமீனில் விடுமாறு ஒரு முக்கியமானவர் வீட்டிலிருந்து டெலிபோன் செய்யப்பட்டு உடனே அந்தப் பெண் ஜாமீனில் விடப்பட்டது எந்த அடிப்படையில்? போலீஸ் ஸ்டேஷனிலிருந்தே ஜாமீனில் வர இப்போதுள்ள மதுவிலக்கு அவசரச் சட்டம் அனுமதிக்கிறதா? என்று குற்றம் சாட்டினேன்.

மதுவிலக்கு வீரரான நமது முதலமைச்சர், அதற்கு மறுமொழியே கூறாமல் - குற்றச்சாட்டின் முதுகெலும்பை உடைத்து விட்டார் பார்த்தாயா?

அமைச்சர் கிருஷ்ணசாமி, இந்த ஆட்சியில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி பல லட்ச ரூபாய்க்கான பாடநூல் அச்சிடும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்கிறார். அமைச்சராகப் போகிறோம் என்று தெரிந்ததும் தனது ஒப்பந்தக் குத்தகையை தன் சகோதரர் மகன் குணாளன் என்பவருக்கு மாற்றிக் கொடுக்கும்படி தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்துக்கு எழுதுகிறார். அவர் விரும்பியவாறு அவரது சகோதரர் மகனுக்கு அந்த ஒப்பந்தம் மாற்றிக் கொடுக்கப்படுகிறது. இது முறைகேடல்லவா? என்று கேட்டேன்.

அமைச்சர், ஏதோ ஒருவழக்கில் நுழைந்து தப்பித்துக் கொள்ள முயன்றார். நான் சொன்னேன், அந்த வழக்கு அமைச்சரின் மேலவை உறுப்பினர் தேர்தல் செல்லுமா? செல்லாதா? என்பது பற்றியது! ஆனால் இங்கே நான் குறிப்பிடும் முறைகேடு ஒப்பந்தக் குத்தகையை இன்னொருவருக்கு மாற்றியது பற்றியது என்று!

இந்தக் குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் என்ன பதிலைச் சொல்லி எங்கள் முதுகெலும்பை முறித்தார்?

ஒரு லட்ச ரூபாய் கையூட்டுப்பெற்று ஒரு கைதியை விடுதலை செய்ய உதவினார் என்று யார் மீது குற்றம்சாட்டி, அவர் உங்களை மன்னிப்புக் கேட்கச் சவால் விட்டாரோ! அதே நண்பரை எப்படி டெல்லிக்குத் தூதுவராக நியமித்தீர்கள்? என்ற கேள்விக்கு முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லாமல் எப்படித் தெரியுமா எங்கள் முதுகெலும்பை நொறுக்கியிருக்கிறார்? அடடா! அடடாவோ!

14-11-78 அன்று திண்டுக்கல்லுக்கருகே சின்னாளபட்டியில் இரண்டாயிர ரூபாய் மருந்தைத் திருடிய உத்தமபுத்திரன் என்ற டாக்டரை சுகாதார அமைச்சர் சௌந்தரராசன் கையும் களவுமாகப் பிடிக்கிறார். சாட்சி மாயத் தேவர் எம்.பி. அவர்கள்!

பிடிபட்ட டாக்டரை உடனே சஸ்பென்ட் செய்ய அமைச்சர் உத்தரவிடுகிறார். பிறகு எந்த விசாரணையும் இல்லை.

பத்தே நாட்களில் உத்தமபுத்திரனுக்கு அதே மருத்துவமனையில் வேலை கிடைக்கிறது. இடையில் என்ன நடந்தது? எவ்வளவு புரண்டது? எனக் கேட்டேன். குற்றம் சாட்டினேன், பதிலே இல்லை.

இந்த அழகில் எதிர்க்கட்சிக் குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்புகளை முறித்து விட்டதாக ஏகடியம் பேசுகிறார்கள்! பாவம்!

உடன்பிறப்பே! முதுகெலும்பை முறித்த படலம் இன்னும் முடியவில்லை. நாளையும் தொடரும்.

அன்புள்ள,

மு. க.

(03-03-1979)

646. முதுகெலும்பை முறித்த படலம்! (3)

உடன்பிறப்பே,

கருணாநிதி செல்லுகிற இடமெல்லாம் நான் பின்னாலேயே சென்று அவருக்குப் பதில் சொல்லக் கூட்டம் பேசுவேன் என்று முதல்வர் எம்.ஜி.ஆர். அறிவித்திருக்கிறார்.

நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் சட்டப்பேரவையில் நேருக்கு நேராக நாங்கள் எடுத்து வைத்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்ல அவருக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறதே! அதை ஏன் நழுவ விடுகிறார்? எந்த முதலமைச்சரும் இதுவரையில் எடுத்துக் கொள்ளாத நேரத்தையல்லவா மணிக்கணக்கில் எடுத்துக் கொள்கிறார்! அந்த நேரத்தில் குற்றச்சாட்டுக்களை எங்கே நேரடியாக சந்தித்தார்?

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான் பேரவையில் பேசியது முரசொலியில் ஆறு பக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்து விட்டு - அல்லது நீயே அதனை மற்றவர்களுக்குப் படித்துக் காட்டி, அடுக்கடுக்காகச் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு - முதலமைச்சர் என்ன பதில் சொன்னார் என்பது மற்ற ஏடுகளில் வெளி வந்திருந்தால் அதனையும் ஒப்பிட்டுக் காட்டினால் முதலமைச்சர் எதை எதையோ பேசி - (இல்லை! படித்துக் காட்டி) நேரத்தை வளர்த்திருக்கிறாரே அல்லாமல் எந்தக் குற்றச்சாட்டையும் அவர் மறுத்திட முடியவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

இதைத்தான் ஆளுங்கட்சி ஏடுகள் பூசி மெழுகி, இதோ பார்! எங்கள் முதல்வர் எதிர்க்கட்சிகளின் முதுகெலும்பை முறித்து விட்டார்! என்று பெட்டிச் செய்தி போட்டுப் பெருமை சேர்க்கப் பார்க்கின்றன.

ஆதாரம் இருக்கிறதா? என்று கேட்கிறார்கள்! ஆதாரங்களுடன் தான் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. மிக வலுவான ஆதாரங்களை பேரவையில் படித்துக்காட்டி புட்லூர்

தண்டபாணியின் கொலைபற்றிய விவரங்களைக் குறிப்பிட்டேனே! இதுவரையில் அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுத்தீர்களா? என்று இப்போதும் கேட்டேன். பதில் சொன்னாரா முதலமைச்சர்? இதற்குப் பெயர் தான் முதுகெலும்பை முறிப்பதா?

அனைத்துக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கடையடைப்பு வேலை நிறுத்தத்தின் போது காவல் துறையினருடன் கூடிக்கொண்டு, அவர்களின் துணையையும் பெற்று ஆளுங்கட்சிக் குண்டர்கள் நடத்திய அராஜகச் செயல்களை எதிர்க்கட்சிகள் எடுத்துரைத்தனவே! முதுகெலும்பை முறிப்பவரின் முன்னூறு நிமிடப் பேச்சில் அதற்கான பதில் என்ன?

ஆளுங்கட்சியினர் கைது செய்யப்பட்டால் உடனே போலீஸ் நிலையங்கள் ஆளுங்கட்சியினரால் முற்றுகையிடப்பட்டு அமளிகள் நடைபெற்றது குறித்து ஊர்வாரியாகப் புள்ளி விவரங்கள் தரப்பட்டன. அதற்குப் பேரவையில் முதலமைச்சர் வழங்கிய விடை யாது?

திருப்பூரில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அ.தி.மு.க. பஸ் அதிபர் ஒருவரின் மகன், பேருந்து வண்டியை அந்தக் கூட்டத்திற்குள் வேகமாக ஓட்டிச்சென்று அதனால் ஒருவர் கொல்லப்பட்டாரே! அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்று நான் கேட்டதற்கு முன்னூறு நிமிடப் பேச்சாளர் - முதுகெலும்பை முறிக்கும் வலிமையாளர் - என்ன பதில் கூற முடிந்தது?

கல்லூரிகள் பலவற்றில் போலீசாரும், பொதுமக்கள் என்ற பெயரால் ஆளுங்கட்சிக் குண்டர்களும் நுழைந்து மாணவர்களைப் படுகாயப்படுத்தி - லட்சக்கணக்கான ரூபாய் சொத்து சேதங்களையும் விளைவித்திருப்பதைத் தொகுத்துச் சொன்னேனே! தி.மு.க. ஆட்சியின் போது கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்துக்கு நீதி விசாரணை நடத்திய பிறகும் கூட இன்னமும் கிளைவ் ஹாஸ்டல்! கிளைவ் ஹாஸ்டல்! என்று கிளிப்பிள்ளைப் போல் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், தியாகராயர் கல்லூரி சம்பவத்துக்கோ - பச்சையப்பன் கல்லூரி சம்பவத்துக்கோ - மாநிலக் கல்லூரி சம்பவத்துக்கோ - நீதி விசாரணை வைக்க ஒப்புக் கொண்டதுண்டா? இதுபற்றி வாய் திறக்காமல் இருந்து விட்டால் எதிர்க்கட்சிகளின் முதுகெலும்பை முறித்து விட்டதாக அர்த்தமா?

முதலமைச்சர் அமெரிக்கா சென்று திரும்பியபோது பாங்கோ ஆறுமுகத்தின் சவ ஊர்வலம் பட்டபாட்டைக் குறித்து விவரித்துவிட்டு, அந்த நிகழ்ச்சிக்காக முதலமைச்சர் ஒரு கண்டனம் தெரிவித்திருக்கக் கூடாதா? என்று கேட்டேனே - முன்னூறு நிமிடப் பேச்சில் முதலமைச்சர் அதற்குப் பதில் அளிக்க ஒரு முக்கால் நிமிடம் எடுத்துக் கொள்ளக் கூடாதா? பொதுக்கூட்டமென்றால் ஏதாவது பேசிவிட்டுப் போய் விடுவார்? சட்டசபையாயிற்றே - சரியான பதில் சொல்லியாக வேண்டுமே! அதனால் அதற்கும் மௌனம்!

அரசு அலுவலகங்களில் ஆளுங்கட்சியினர் புகுந்து நடத்திய சேட்டைகளை எல்லா எதிர்க்கட்சிகளும் பட்டியல் போட்டுக் காட்டிக் கண்டித்தன! இல்லை என்று மறுத்தாரா? அல்லது முறையான விளக்கம் எதுவும் தந்தாரா? அவர்தான் எதிர்க்கட்சிகளின் முதுகெலும்பை உடைக்கும் பணியில் இருந்தாரே - குற்றச்சாட்டுக்களைப் பற்றிப் பதில் கூற எப்படி முடியும்?

அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியூடர் கிரேடு-2 பதவிக்கு, அதற்கான நேர்முகத் தேர்வுக்கே செல்லாத ராதாகிருஷ்ணன் என்பவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாரே! இது முறைதானா? இடையில் என்ன நடைபெற்றது? என்று குறிப்பிட்டுக் கேட்டேன்! பதிலுண்டா? இல்லை!

மோட்டார் வெகிகிள் இன்ஸ்பெக்டர்களுக்கும் - சூப்பிரன்டென்டெண்டுகளுக்கும் இது வரையில் 1 : 1 என்ற அளவில்தான் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஒரு சூப்பிரன்டெண்டிற்கு பதவி உயர்வு கிடைத்தால் நாலு மோட்டார் வெகிகிள் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது 1 : 4 என்ற அளவில் மோட்டார் வெகிகிள் இன்ஸ்பெக்டர்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பெரும் பணம் வசூலித்துக் கொடுத்து இந்தச் சலுகையைப் பெற்றிருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு! என்று விளக்கிச் சொன்னேன். பதில் உண்டா? ஊஹூம்! கிடையாது! நான் போகிற ஊர்களுக்குப்

பின்னால் வந்துதான் ஏதாவது சொல்வார் போலிருக்கிறது! சட்டசபையில் அவர் அது பற்றி உதடுகளை அசைக்கவே இல்லை.

கப்பல் பேரம் பற்றி விரிவாகச் சொன்னேன். அந்த ஊழல் நிறைந்த பேரம் நடைபெறாமல் தடுக்கப்பட்டு விட்டது என்றும் சொன்னேன். அந்தப் பேரம் முடிந்திருந்தால் இரண்டரையிலிருந்து மூன்று கோடி ரூபாய் வரையில் இடையில் யாருக்கோ சென்றிருக்கும். அது எங்கே செல்லும்? லண்டனுக்கா? சுவிட்சர்லாந்துக்கா? அராபியாவுக்கா? பிறகு எந்த வழியாக அந்தப் பணம் இந்தியாவுக்கு வர இருந்தது? என்று கேட்டேன்,

முதலமைச்சர் கப்பல்கள் இரண்டு வாங்குவதற்காக பேரம் நடந்த விஷயத்தை மறுக்கவில்லை. ஒத்துக் கொண்டார். சிங்க்ளேர் என்ற கம்பெனியார் முதலில் ஒரு கோடியே எண்பத்து ஐந்து லட்சம் டாலர் விலையில் வாங்கித் தருவதாகக் கூறினார்கள். பிறகு இரண்டு கோடியே நாலு லட்சம் டாலர் விலையில் வாங்கித் தருவதாகச் சொன்னார்கள். கப்பலில் கிரேன் போன்ற விஷயங்களில் பிரச்சினை இருந்தது - இதற்காகச் செய்து கொண்ட ஒப்பந்தம் பிறகு ரத்து செய்யப்பட்டது என்று முதலமைச்சர் கூறினார். இத்தனை குற்றச்சாட்டுக்களில் இது ஒன்றுக்குத்தான் பதில் அளித்தார்.

அதிலும் நான் குறிப்பிட்டதைப் போல பேரம் இடையிலே நிறுத்தப்பட்டு விட்டது என்பதை ஒத்துக்கொண்டார். இடைத்தரகராக இருந்து வாங்கித் தருகிற கம்பெனிக்காரர்கள் இரண்டுக் கப்பல்களுக்கும் முதலில் குறிப்பிட்ட விலையை விட அடுத்துக் குறிப்பிட்ட விலை அதிகமாக ஆனது ஏன்?

மேற்கு ஜெர்மனியில் ஹாம்பர்க்கில் உள்ள அக்போல்டன் கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்து கையெழுத்துப் போட்ட அதிகாரிகளுடன் சிம்கோ மீட்டர்ஸ் அதிபர் விசுவநாதனும் சென்ற காரணம் என்ன? மேற்கு ஜெர்மனி வங்கியொன்றில் 11-12-78க்குள் ஒரு (எல்.சி) தொடங்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டதா? இல்லையா? சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கிக் கொள்ளும் திட்டமுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறவில்லையா?

அந்தத் திட்டத்தை முறியடிக்க வேண்டுமென்று உடனடியாக மத்திய அரசுக்கு சில முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தகவல் கொடுத்தார்களா இல்லையா? சுவிஸ் பாங்கில் பணம் போடுவதற்கான அதிர்ஷ்ட எண்களைக் கூட்டிக் கழித்த செய்திகளும் இன்று அம்பலத்திற்கு வந்து விட்டனவே!

முதலமைச்சர் அந்தக் கப்பல் பேரம் பற்றிய விவரங்களை எனக்கு விளக்க அதிகாரிகளை என்னிடம் அனுப்புவதாகப் பேரவையில் உறுதி கூறியிருக்கிறார். அதுபற்றிய எல்லாக் கோப்புகளுடனும் அந்த அதிகாரிகளை என்னிடம் அனுப்பி எனக்கு விளக்கம் தரச் செய்வார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பஸ் முதலாளிகளிடம் பெருத்த வசூல்! சினிமா தியேட்டர்காரர்களிடம் கொழுத்த வசூல்! வட்டிக் கடைக்காரர்களிடம் நிறைந்த வசூல்!

இது நாடறிந்த விவகாரம்! கொடுத்தவர்கள் பல பேர்! மத்திய அரசு விசாரணை வைக்கட்டும்! சந்திக்கிறேன் என்கிறார்! கழகம், ஆட்சியிலிருந்த போது அமைச்சரவை மீது குற்றம் சாட்டி, அதை விசாரிக்க மாநில அரசு அடுத்த மாநிலத்து நீதிபதியை நியமிக்க வேண்டுமென்று கேட்டவர்கள் எம்.ஜி.ஆர். கட்சியினர்! இப்போது மட்டும் மத்திய அரசு விசாரணை வைக்கட்டும் என்று நழுவிக்கொள்ள பார்ப்பது ஏன்?

இதுதான் முதுகெலும்பை முறித்த வீரமோ?

அமைச்சர் ராஜா மகமது, மாநகராட்சி செயலாளராக இருந்தபோது ஒரு சிபாரிசு குறித்து செய்த முயற்சி பற்றி அவரே கைப்பட எழுதிய கடிதங்களின் பிரதிகளையும் - அதில் பண விவகாரம் சம்பந்தப்பட்டிருப்பதையும் - பேரவையில் படித்துக் காட்டினேன்.

பெரியகுளத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் சீனிவாசன் சென்னைக்கு வந்து, அமைச்சர் ராஜா மகமதுவின் தந்தை காதர் மைதீன் ராவுத்தரும் சென்னைக்கு வந்து, அமைச்சரின் தந்தையிடம் தன்னுடைய தோப்புக்குக் கிரயம் பேசி, அதற்கான அட்வான்சும் சென்னையிலேயே வாங்கிக் கொண்டு விட்டதாக வழக்கறிஞர் சீனிவாசன் பெரியகுளத்திலுள்ள அழகர்சாமி என்பவருக்கு (15-2-78-இல்) கடிதம் எழுதி, தோப்பின் (POSSESSION) உரிமையை காதர் மைதீன் ராவுத்தரிடம் (அமைச்சரின் தந்தையிடம்) கொடுத்து விடுமாறு குறிப்பிட்டிருந்ததையும் - பேரவையில் நான் விவரமாகப் படித்துக் காட்டினேன்.

அமைச்சர் எழுந்து ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்றார்! ஏதோ ஒரு வழக்கில் நுழைந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்தார்! நான் திட்டவட்டமாகச் சொன்னேன்! என் கையிலிருந்த கடிதங்களே ஆதாரங்கள் என்று குறிப்பிட்டேன். நிரூபிக்கத் தயார் என்றேன். அமைச்சருக்கு ஆத்திரம்தான் வந்தது. உண்மையை அவரால் மறுக்க முடியவில்லை. கோபத்தில் என் மீது சில தகாத வார்த்தைகளைக் கொட்டினார்.

அப்படிப் பேசிய வார்த்தைகளுக்காக அமைச்சர் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று நான் கூறினேன். உடனே முதலமைச்சர் எழுந்து அமைச்சரின் பேச்சுக்காக அவரே வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்புகள் முறிக்கப்பட்ட கதை எப்படியிருக்கிறது பார்த்தாயா?

இந்தப் படலம் இத்துடன் முற்றும்.

அன்புள்ள,

மு. க.

(04-03-1979)

647. செஞ்சிக்கோட்டை வாலிபன்!

உடன்பிறப்பே,

ஒரு நூலிழையில் அவன் உயிர் தப்பி, இப்போது நம்முடன் இருக்கிறான். இல்லையேல் பேராசிரியர் குறிப்பிட்டதுபோல பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்குப் பதிலாக இரங்கல் தீர்மானம் கொண்டுவர நேரிட்டிருக்கும்.

அவன் பெரும் பேச்சாற்றல் படைத்தவனல்ல! திறமை மிக்க எழுத்தாளனுமல்ல! இந்த இரண்டையும் துணையாகக் கொள்ளாமலே தனது தொண்டுள்ளத்தால், செயலாற்றலால் மக்களின் உள்ளத்தில் மங்காத இடத்தைப் பெற்றவன். எத்தனையோ புயல்களுக்கிடையிலேயும் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக நெஞ்சுரத்தோடு பணியாற்றி வருகிறவன்.

என் தம்பி என்பதால் அவன் என்று நான் குறிப்பிடுவதில் அன்பு பொழிகிறது என்பதை உணராத உடன்பிறப்பல்ல அவன்!

செஞ்சி இராமச்சந்திரன் மீது கொலை வெறிகொண்ட கொடியவர்கள் காரை மோதிக் கொலை செய்ய முயற்சி செய்தார்கள். கார் மோதியது. அந்த வீரவாலிபன் பிரக்ஞையற்ற நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான் என்ற செய்தி கடந்த பத்தாம் தேதி பிற்பகல் இரண்டு மணி அளவில் தொலைபேசி வாயிலாக எனக்குக் கிடைத்தது. பதறிப்போனேன். கடலூர், திண்டிவனம், செஞ்சி என்ற எத்தனையோ இடங்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமைகளை அறியத் துடித்தேன். அன்றிரவே புறப்பட்டுக் கடலூர் சென்று நேரிலே பார்த்த பிறகுதான் நிம்மதியே ஏற்பட்டது எனக்கும், என்னுடன் வந்த கழக முன்னணியினர்க்கும்!

செஞ்சி இராமச்சந்திரன் மீது காரைக் கொண்டு மோதியது உண்மைதான் என்று அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சட்டப்பேரவையில் அறிவித்திருக்கிறார்.

அந்தக் காரில் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினரும், அமைப்பாளரும் இருந்திருக்கிறார்கள் என்பதும், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அரசும், காவல் துறையும் மௌனம் சாதிக்கிறது என்பதும் நமது குற்றச்சாட்டு!

செஞ்சி இராமச்சந்திரன் மீது காரை மோதி - கொலை செய்ய முனைந்து - அவர் தாக்குண்டு மயக்கமுற்ற நிலைக்கு ஆளானது கண்டு குமுறிக் கிளர்ந்த மக்கள் அந்தக் காரின் மீது கற்களை வீசியிருக்கிறார்கள்! அன்று பேராசிரியர் பேச இருந்த கூட்டத்திற்கான மேடையும், விளக்குகளும் உடைத்து நொறுக்கப்பட்டன! அந்த வன்முறைச் செயலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மக்கள் சக்தி திரண்டது! மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற அறிவிப்பு எம்.ஜி.ஆர். கட்சிக்கு மட்டும்தானா சொந்தம்? மற்ற கட்சிகளில் உள்ள மக்களின் கைகள் பூவா பறித்துக் கொண்டிருக்கும்? இந்தக் கேள்விகள் தவிர்க்க முடியாதவைகளாகி விட்டன இன்று!

செஞ்சி இராமச்சந்திரன் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அருகே கழகக் கண்மணிகள் சிலர் இருந்த காரணத்தால் உடனே அந்தப் பயங்கரப் படுகொலையிலிருந்து இராமச்சந்திரனைக் காப்பாற்ற முடிந்தது.

இல்லையேல் சில மாதங்களுக்கு முன்பு நாகைத் தொகுதியில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்! இப்போது செஞ்சித் தொகுதியில் ஒரு சட்டமன்ற உறுப்பினர்! என்று பட்டியல் நீண்டிருக்கும்.

கொலை முயற்சியிலிருந்து இராமச்சந்திரன் தப்பிவிட்டது பெரிய குற்றமல்லவா? அதற்காக ஒரு வழக்குப் பதிவு செய்யப் போகிறார்கள்! அதில் 307-வது சட்டப் பிரிவும் மற்றும் சில பிரிவுகளும் இராமச்சந்திரன் மீது தொடுக்கப்பட்டுள்ளன! அதற்குக் காரணம் சொல்கிறார்கள், ஆளுங்கட்சியினர் கார் மீது கல்லெறிந்த கூட்டத்தில் இராமச்சந்திரனும் இருந்ததாக! சட்டப்பேரவையிலேயே பேராசிரியர் கேட்டார். திருவில்லிபுத்தூரில் கார் மீது கல்லெறிந்து இளஞ்செழியனைக் கொன்று, காரையும் விபத்துக்கு உள்ளாக்கினார்களே! அவர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டதே, அப்போது இந்த 307-வது பிரிவு

எங்கே போயிற்று என்று! திருவில்லிபுத்தூர் சம்பவத்தில் எந்தச் சட்டப்பிரிவுமே தலை காட்டவில்லை.

ஆங்காங்கு ஆளுங்கட்சியினரால் அரசுத் துறை அலுவலர்கள் தாக்கப்படுகிறார்கள்! காவல் நிலையங்கள் முற்றுகையிடப்படுகின்றன! நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசியபோது பட்டியல் போட்டுக் காட்டினேன் - எத்தனை வன்முறை நிகழ்ச்சிகளில், எத்தனை கொலை நிகழ்ச்சிகளில் - சட்டம் தன் கடமையைச் செய்ய விடாமல் தடுக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை! பதில் தந்தாரா முதலமைச்சர்? இல்லை! இல்லவே இல்லை!

செஞ்சிக்கருகே ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடத் திறப்பு விழா! அந்தக் கிராமத்து ஊராட்சிமன்றம் தீர்மானம் நிறைவேற்றி பேராசிரியரை அழைக்கிறது! ஊராட்சி மன்றத் தலைவரின் பெயரால் முறைப்படி அழைப்பிதழ்கள் அச்சடித்து அனுப்பப்படுகின்றன. பேராசிரியர் வந்து திறக்கக் கூடாது என்பதற்காக அதற்கு முதல் நாளே அந்தக் கட்டிடத்தை அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினரும், அமைப்பாளரும் திறப்பதாக அறிவித்து - துண்டு அறிக்கையில் இங்ஙனம் ஊர் மக்கள் என்று அச்சடித்து விநியோகம் செய்து, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும், அமைப்பாளரும் அந்தக் கட்டிடத்தை முதல் நாளே திறந்து வைக்கச் செல்வது எந்த முறைக்கு உட்பட்ட காரியம்? அந்த முறை கேடானதும், அத்துமீறலுமான நடவடிக்கைக்குச் சட்டப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் ஒரு கட்டிடத்தைத் திறந்து வைப்பது எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஜனநாயகமாகாது என்றால் அந்தக் கட்டிடத் திறப்பு விழாவே கூடாது என்று இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கலாமே!

அதற்குப் பதிலாக இவ்வளவு பெரிய அமளியும், கொலை முயற்சித் திட்டங்களும் தேவைதானா?

சட்டம், ஒழுங்கு, அமைதி - இந்த ஆட்சியில் பெருமளவுக்குச் சீரழிந்து வருகிறது என்பதை மக்கள் தெளிவாக உணருகிற அளவுக்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகளின் தொகுப்பில் செஞ்சி நிகழ்ச்சி ஒரு கட்டம்!

எப்படியோ என் தம்பி - செஞ்சியைக் கழகக் கோட்டையாகக் கட்டிக் காத்துவரும் அந்த வீரமிக்க வாலிபன் - உயிர் தப்பிப் பிழைத்து விட்டான்! அவன் உயிர் பிழைக்கக் காரணமாக இருந்த உடன்பிறப்புகள் அனைவருக்கும் என் வாழ்த்துகள்! பாராட்டுகள்!

ஒன்றை மட்டும் நினைவுபடுத்துவேன்! ஆணவங் கொண்டலையும் ஆளுங்கட்சிக்கு செஞ்சி நிகழ்ச்சி ஒரு எச்சரிக்கை! இனிமேலாவது வன்முறை வெறியாட்டங்களைக் கைவிடுங்கள் என்று நான் மட்டுமல்ல; நாடே எச்சரிக்கிறது இன்றைய ஆளுங்கட்சியினரை!

அன்புள்ள,

மு. க.

(14-03-1979)

648. ஏழை எளியோரை வதைக்கும் சட்டம்!

உடன்பிறப்பே,

கடந்த செப்டம்பர் திங்கள் 28-ஆம் நாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வியாசர்பாடியில் ஒரு விழாவில் பேசினார்.

பர்மா அகதிகளுக்காகக் குடியிருப்பு கட்டும் திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழா அது! அந்த நிகழ்ச்சியில் மதுவிலக்குச் சட்டத்தை மேலும் தீவிரமாக்கப் போவதாக ஒரு வீர உரை நிகழ்த்தினார்.

அந்த உரை பின்வருமாறு ஏடுகளில் வெளியிடப்பட்டிருந்தது.

முதல்வர் தகவல்

அதிகாரிகள், மந்திரிகள் மதுவிலக்கை மீறினால்

குறைந்தது ஓராண்டுச் சிறை!

அக்டோபர் 3-ஆம் தேதியிலிருந்து சட்டத் திருத்தம் அமலுக்கு வருகிறது.

மதுவிலக்கைத் தீவிரமாக்கும் சட்டத்திருத்தம் அக்டோபர் 3-ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்று முதன்மந்திரி எம்.ஜி. இராமச்சந்திரன் இன்று அறிவித்தார். மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் மாநில அரசுக்கு மேலும் அதிகாரங்களை அளிப்பதாகும்.

இந்தச் சட்டத் திருத்தத்தின்படி மதுவிலக்கு மீறல்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும். குற்றமிழைப்பவர்கள் அதிகாரிகளாகவோ, அல்லது மந்திரிகளாகவோ இருந்தால் குறைந்தபட்சம் ஒரு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்றார் முதன்மந்திரி.

மது என்ற வார்த்தை அகராதியிலிருந்தே நீக்கப்பட வேண்டுமென்று தாம் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

(இது தினமணி முதல் பக்கத்தில் 29-9-78-ல் வெளிவந்துள்ளது)

DRY LAW WITH TEETH FROM OCT. 3

The amended dry law in Tamil Nadu will come into force from October 3, Chief Minister M.G. Ramachandran announced on Thursday.

Under the Act, dry law offenders could be sentenced to a minimum six months rigorous imprisonment. Officials and Ministers involved in such offences or found to aid of abet offenders faced a minimum of one year R.I.

The announcement was greeted with thunderous ovation from a huge gathering of repatriates.

- (இந்தியன் எக்ஸ்பிரஸ் - 29-9-78)

அக்டோபர் மூன்றாம் தேதி வெளிவரப்போகிற திருத்தப்பட்ட புதிய மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி முன் எச்சரிக்கையாகச் சொல்லலாமா வெளியிடலாமா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. மக்களைப் பற்றியே எனக்குக் கவலை. அந்தச் சட்டம் யாரையும் விட்டு வைக்காது. சாதாரண மக்கள் மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபட்டால் ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும். ஜாமீனில் வெளியே வரலாம் - அபராதம் கட்டி விடலாம் என்று நினைத்தால் அது நடக்காது. அதேபோல பொறுப்பிலே இருப்பவர்கள் நானாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி சட்டம் இருப்பது தெரிந்தும் மீறினால் குறைந்தது ஒரு ஆண்டுக்கால தண்டனை கிடைக்கும்.

- (அண்ணா பத்திரிகை - 29-9-78)

DRY LAW WILL NOT SPARE MINISTERS M.G.R.

Dry law offenders will get a minimum of six months R.I. under the amended Tamil Nadu Prohibition Act which will come into force on October 3.

Even Officials and Ministers found guilty of these offences will not be spared. In fact the punishment in their case will be double.

Mr. M.G. Ramachandran, Chief Minister disclosed this here today while presiding over a function to mark the inauguration and laying the foundation stone for the Vyasarpadi Improvement Project and housing scheme for Burma repatriates at Vyasarpadi..

- (இந்து - 29-9-78)

இப்படிப்பட்ட கருத்தை - ஆம்! ஒரு பெரிய அறிவிப்பை அவசரச் சட்டம் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே ஒரு முதலமைச்சர் அறிவித்து விட்டு - அதன் தொடர்பாகச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தினார்கள்.

அந்த அவசரச் சட்டம், இப்போது சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மசோதா விவாதிக்கப்படும்போது, ஆளுங்கட்சியைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளின் தரப்பிலும் சட்டத்தின் கடுமை சுட்டிக் காட்டப்பட்டு, விரிவாக அந்தச் சட்டம் பற்றிக் கலந்துரையாடித் திருத்தங்களைச் செய்திட (செலக்ட் கமிட்டி) பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டும் என்று கோரப்பட்டது. அரசாங்கம் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை.

மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக் கொள்கிற தி.மு.கழகம், ஏற்கனவே இருக்கிற சட்டத்தை இந்த அரசு, ஒழுங்காக நடைமுறைப்படுத்தினாலே போதும் என அறிவிப்பதோடு, புதிய சட்டத்தால் ஏழை எளியோர் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், இதுபற்றி ஆராய செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்ற எங்கள் கோரிக்கையைக்கூட ஏற்றுக் கொள்ளாததால் இந்தச் சட்டம் நிறைவேறும் நேரத்தில் அவையில் இருக்க விரும்பவில்லை என்று நான் எடுத்துக் கூறியதையும், நீ ஏடுகளில் படித்திருப்பாய்!

இருக்கிற சட்டமே போதும்! புதிய சட்டமே தேவையில்லை! அதிலும் இவ்வளவு கடுமையான சட்டம் தேவையில்லை! இந்த அரசில் எல்லாச் சட்டங்களுமே ஆளுங்கட்சிக்காரர்கள் ஆட்டிவைக்கிறபடிதான் ஆடுகின்றன! என்பதற்கான பல

சான்றுகளையும் ஆதாரங்களையும் பேரவையில் தொடர்ந்து எடுத்து வைத்திருக்கிறோம்!

சரி! சட்டத்தை நிறைவேற்றுவதாக முடிவு செய்து விட்டார்கள்! நிறைவேற்றப்படும் அந்தச் சட்டத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கடந்த செப்டம்பர் திங்கள் வியாசர்பாடியில் வெளியிட்ட அறிவிப்பு ஏன் இடம் பெறவில்லை?

அமைச்சர்களோ, அதிகாரிகளோ மதுவிலக்குச் சட்டத்தை மீறினால் இருமடங்கு தண்டனை - அதாவது ஓராண்டுக் காலம் கடுங்காவல் என்றல்லவா முதல்வர் அறிவித்திருந்தார்! அது என்ன ஆயிற்று? இந்தக் கேள்வியை நான் சட்டசபையில் எழுப்பியதும் - முதலமைச்சர் எழுந்து, நான் அறிவித்ததிலிருந்து பின் வாங்கவில்லை! இந்தச் சட்டத்தில் அப்படித் தேவையானால் மாற்றப்படும் என்று கூறினார். மாற்றப்படும் என்று முதல்வர் கூறுவது உண்மையானால் அதற்கான திருத்தத்தை (அமெண்ட்மென்ட்) இப்போதே உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுகிறேன் என்று நான் திட்டவட்டமாகச் சொன்னேன்.

அதுபோல திருத்தங்கள் சட்டசபையில் வழங்கப்படுகிற முன் உதாரணங்கள் பல உண்டு.

அதற்கு முதல்வர் அளித்த பதில் என்ன தெரியுமா?

அதைச் செய்யக்கூடிய வகையில் சட்ட அமைச்சர் இருக்கிறார்.

இப்படி முதல்வர் சொன்னதும் சட்ட அமைச்சர் எழுந்து இப்போது இருக்கிற சட்டத்திலே பொதுமக்கள் என்பதிலே அமைச்சர்களும் அடங்குகிறார்கள் என்று பிரச்சினையைத் தட்டிக் கழித்து விட்டார்.

பொதுமக்கள் என்றால் ஆறுமாத தண்டனை! அமைச்சர்கள், அதிகாரிகள் என்றால் ஒரு வருட தண்டனை! என்று வியாசர்பாடியில் முதல்வர் முழங்கினாரே; அது என்ன ஆயிற்று?

சட்டத்தில் அமைச்சர்களைச் சேர்ப்பதினால் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியில் எந்த அமைச்சரும் மதுவிலக்குக் குற்றங்களைச் செய்வதுமில்லை. செய்யப் போவதுமில்லை. அப்படியே செய்தாலும் அமைச்சர்களைப் போய் எந்த அதிகாரியும் கைது செய்யப் போவதுமில்லை!

ஜாமீனில் விடமுடியாது என்று அவசரச் சட்டம் கடுமையாக இருக்கும் போதே சைதாப்பேட்டை போலீஸ் லாக்கப்பில் கைது செய்து வைக்கப்பட்ட மிஸ்ஸி என்ற ஒரு மதுவிலக்குக் குற்றவாளியை மிக முக்கியப் பொறுப்பிலே உள்ள ஒருவர் தலையிட்டு போலீசாரே உடனடியாக ஜாமீனில் விடுவித்த நிகழ்ச்சி சென்ற மாதம் 13-ஆம் தேதி நடைபெறவில்லையா? அதுகுறித்து நான் சட்டசபையில் சாட்டிய குற்றச்சாட்டுக்கு முதல்வர் மௌனமாகத்தானே இருந்தார்!

எனவே, இந்தச் சட்டம் ஆளுங்கட்சியினரின் வருமானத்திற்கு வழிவகுக்கவும், எதிர்க்கட்சியினரை மிரட்டவும், ஏழை எளியவர்களைக் கொடுமைக்கு ஆளாக்கவும் பயன்படுமே அல்லாது, உண்மையில் மது விலக்குக் கொள்கை வெற்றி பெறுவதற்கு நிச்சயம் துணை நிற்காது.

அன்புள்ள,

மு. க.

(15-03-1979)

649. ஈரோடு விழா! எழுச்சி விழா!

உடன்பிறப்பே,

ஆண்டொன்று உருண்டுவிட்டது அன்னை மணியம்மையார் மறைந்து! இன்று அவர்களின் நினைவிடம் சென்று மலர் வளையம் வைத்து வணங்குவதற்குப் புறப்படும் முன்னே உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாடி முடியும் வரையில் உயிர்வாழ வேண்டுமென ஆசைப்பட்டார்கள் அந்த உத்தமத் தாய்! அவரது எண்ணம் ஈடேறவில்லை. ஆனால் தமிழகம் மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளிலும் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா எழுச்சிமயமாகக் கொண்டாடப்படுகிறது.

அதிலே ஒரு கட்டம்தான் வருகிற பதினெட்டாம் நாள் ஞாயிறன்று தந்தை பெரியாரை நமக்குத் தந்த ஈரோடு நகரத்தில் எடுக்கப்படும் விழா!

திராவிடர் கழகத்தின் சார்பில் விழா ஏற்பாடுகள் நடைபெறுகின்றன எனினும், தி.மு.கழக மாவட்ட, ஒன்றிய, நகர அமைப்புக்கள் அனைத்தும் அந்த விழா சிறப்பெய்திட உடனிருந்து ஒத்துழைத்து வருகின்றன.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களின் அழைப்பை ஏற்று - ஈழத்து தமிழர் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும் அவர்தம் அருமைத் துணைவியார் மங்கையர்கரசி அவர்களும் ஈரோடு விழாவில் பங்கு கொள்கிறார்கள். நானும் ஞாயிறன்று மாலை நடைபெறும் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்கிறேன்.

பெரியாரின் நூற்றாண்டு விழா என்பதால் நான் கறுப்புச் சட்டையுடன் காட்சி தர வேண்டுமென்பது எனதருமை திராவிடர் கழக உடன்பிறப்புக்களின் அன்புக் கட்டளை! நான் மட்டுமல்ல! நமது கழகத்து உடன்பிறப்புக்கள் அனைவருமே

ஈரோடு நகர் குலுங்க நடைபெற இருக்கும் பெரியார் நூற்றாண்டு விழாவில் கறுப்புடை அணிந்தே வருவார்கள்.

ஈரோடு - முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பெரியாரின் குடியரசு அலுவலகத்தில் அல்லவா எனக்குக் குருகுல வாசம்! அப்போது என்னுடன் அங்கிருந்தவர்களில் ஒருவரான என்னரும் நண்பர் தவமணிராசனை நாலைந்து நாட்களுக்கு முன்புகூட தலைமைச் செயலக வாசலில் சந்தித்தேன்.

சந்திப்பு சில நிமிடங்கள்தான். ஆனால் அந்தச் சில நிமிடங்களில் என் நினைவு ஈரோடு குருகுல வாசத்தைச் சுற்றிச் சுழலத் தவறவில்லை. அவரிடம் விடைபெற்றுக் காரிலே சென்று கொண்டிருந்தபோது ஈரோடு நிகழ்ச்சிகள் - 1945-ஆம் ஆண்டில் நடைபெற்றவை ஒன்றன்பின் ஒன்றாகத் திரைப்படம் போல் மனத்தில் ஓடிக் கொண்டிருந்தன!

அங்குதான் உடன்பிறப்பே, நான் கவிதையல்ல என்ற பெயரில் உணர்ச்சி வரிப் பாக்கள் பலவற்றை எழுதி, அதை நண்பர் லூர்துசாமி நூல் வடிவில் வெளியிட்டார்.

பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுதுபார்!
ஈ.வெ.ரா. என்ற வார்த்தை இந்நாட்டு வைதீகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் - அவர்
வெண் தாடி அசைந்தால் போதும்,
கண் சாடை தெரிந்தால் போதும்,
கறுப்புடை தரித்தோர் உண்டு - கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்

முப்பத்தி நான்கு ஆண்டுகட்குப் பிறகும் - இப்போது என் வயது ஐம்பத்தி ஐந்தைக் கடக்கிற கட்டத்திலும் அன்று நான் எழுதிய அந்தப் பாடலின் உத்வேகம் என் உள்ளத்தை விட்டு மங்கி மறைந்து போய்விடவில்லை. என்றுமே அந்த உணர்வு பட்டுப்போகாது.

பெரியாரும் அண்ணாவும் நம் உள்ளத்தில் பதிய வைத்த கொள்கைகள் விலை போகும் சரக்குகள் அல்ல! அடமானப் பொருள்களுமல்ல! அவற்றை வெற்றிபெறச் செய்ய எந்தவித தியாகத்திற்கும் தயாராக இருப்பவர்கள்தான் நாம்!

எத்தனையோ எதிர்ப்புகள் - ஏளனங்கள் - எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சுக்கள் - எரிச்சல் கணைகள் - நரகல் நடை அர்ச்சனைகள் - நாலா திசையிலும் அடக்குமுறைகள் - இருட்டடிப்புகள் - அனைத்துக்கும் ஈடுகொடுத்து ஒரு இலட்சியவாதியின் பயணம் எப்படி உறுதிமிக்கதாக இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் அல்லவா தந்தை பெரியார்!

அவரின் மாணவர்களாகிய நாம் அவர் பிறந்த ஊரில்- அவர் பிறந்ததால் பெருமை பெற்ற நகரில் அவருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறோம். பதினெட்டாம் நாள் ஞாயிறன்று ஈரோடுத் திருநகரம் மக்கட் கூட்டமெனும் பெருங் கடலால் சூழப்பெறும்! அக்கடலும் கருங் கடலாய்த் தோற்றமளிக்கும். அந்தக் கடல் காணக் கடல் கடந்து வந்துள்ளார் ஈழத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமான நாவலர் அமிர்தலிங்கம்; அவர்தம் துணைவியார் வீராங்கனை மங்கையர்க்கரசியுடன்!

மக்களைத் தட்டியெழுப்பித் தன்மான உணர்வினை ஊட்டிய மாபெரும் தலைவரின் விழாவில் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளருக்கு நாம் நடத்துகின்ற விழாவில் - கலந்து கொள்வது நமக்குக் கிடைத்த அரும்பேறு என்ற அகமகிழ்வுடன், என் ஆருயிர் உடன்பிறப்பே! ஈரோடு நகர் நோக்கிப் புறப்படு!

சாதி சமயக் கொடுமைகளை அகற்றிட, தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் தலை நிமிர்ந்து வாழ்ந்திட, தமிழ் சாதியின் கீர்த்தி விண்முட்ட எழுந்திட - நாளெல்லாம் உழைத்திட்ட நமது தந்தைக்கு நாம் எடுக்கிறோம் விழா!

எனவே அங்கு நோக்குமிடமெல்லாம் நாமாகவே இருப்போம்! இரு கழகங்கள் இணைந்து நடத்தும் விழா எனினும் - ஒரு கொள்கைக்காக உயிர் தரவும் தயாராக இருக்கிற பட்டாளத்து வீரர்களன்றோ இந்த இரு கழகத்திலும் இருக்கின்றனர். இவர்கள் எடுக்கும் விழாதானே கொள்கை விழா! குறிக்கோளை அறிவிக்கும் விழா! இரு கழகத்தையும் சார்ந்த என் இனிய உடன்பிறப்பே! உன்னை ஈரோடு நகரத்தில்- ஞாயிறன்று - சுயமரியாதை ஞாயிற்றின் விழாவில் சந்திக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(17-03-1979)

650. மாவீரன் மடிந்தான்!

உடன்பிறப்பே,

நடந்துவிடக்கூடாது என்று நாடுகள் பல கோரிக்கை விடுத்துத் தடுக்க நினைத்த அந்தக் காரியம் நடந்தே விட்டது. பாகிஸ்தான் நிலப்பரப்பைக் கட்டியாண்ட புகழ்மிக்க மனிதன் பூட்டோ தூக்கில் தொங்கவிடப்பட்டு அவன் உடலைப் புதைக் குழிக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். சர்வாதிகாரம் பேசியது பின்னணியிலிருந்து! அதற்கேற்ப நீதியின் உதடுகள் அசைந்தன! விளைவு, இஸ்லாமிய சமுதாயத்தின் ஏற்றமிகு விளக்கு ஒன்று அணைக்கப்பட்டு விட்டது. அவன் கடைசிவரையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கருணை மனு போட முடியாது என மறுத்துவிட்டான். ஆனால் அவனுக்காகப் போடப்பட்ட கருணை மனுக்கள் அத்தனையும் எதேச்சாதிகாரத்தின் காலடியில் விழுந்து கசங்கி கிழிந்து உருத் தெரியாமல் போய் விட்டன.

ஒரு வகையில் அந்த மனிதனுக்கு நிம்மதிதான்! இதோ! அதோ! என்று நாள்தோறும் அவனைச் சித்ரவதை செய்து கொண்டிருந்தார்கள். இனி அவனுக்கு எந்தப் பிரச்சினை பற்றியும் கவலையில்லை. மிரட்டல்கள் அவன் அடக்கம் செய்யப்படும் இடத்திற்குச் சென்று அவன் உள்ளத்தை உலுக்க முடியாது.

ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத்தையும், ரதகஜ பதாதிகளையும் வைத்துக் கொண்டு யாரையும் பழி தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு பாகிஸ்தானில் பூட்டோவுக்குக் கிடைத்த பரிசே சான்று!

பூட்டோ தலைசிறந்த இராஜதந்திரி! அற்புதமான நிர்வாகி! அவன் இதயத்தில் ஊறிய இரக்க உணர்வு, முஜிபுர் ரகுமானை மரணப் படுகுழியிலிருந்து காப்பாற்றிப் பங்களா தேஷின் அதிபராகவே ஆக்கியது!

அந்தக் கருணை மிகுந்த செயலுக்குக் கைமாறாகக்கூட பூட்டோவுக்குக் கருணை காட்டப்படாதது - நெஞ்சு வெடிக்கும் வேதனைச் செய்தியாகும்.

மனிதச் சோலையில் எத்தனையோ பூக்கள் மலர்கின்றன! அவற்றில் பல மணம் வீசாத அழகு மலர்களாகத் திகழ்கின்றன! அத்தர் தரும் ரோஜாவும், அரிய மணம் பரப்பும் மல்லிகை முல்லையும் - மயக்கும் மனோரஞ்சிதமும் - புவியெனும் பூஞ்சோலையில் குலுங்குகின்றன! அந்த மலர்களில் வாசமிகு மலராக விளங்கிய மனிதன்தான் பூட்டோ!

இன்று அந்த மலரைக் கசக்கி எறிந்து விட்டார்கள். அந்த மலர் தானாக வாடி உதிர்ந்திருந்தால் இத்துணை அதிர்ச்சி ஏற்பட்டிருக்காது.

படிப்படியாக வளர்ந்து உயர்ந்து பாகிஸ்தான் மக்களால் மட்டுமின்றி - பல்வேறு நாட்டு மக்களாலும் பாராட்டப்பெற்ற அந்தக் கீர்த்தி மிக்க மனிதன்; கடந்த இரண்டொரு ஆண்டுகளாகப்பட்ட வேதனை கொஞ்சமல்ல!

அயூப்கானும், யாகியாகானும் இந்தியா பாகிஸ்தானுக்கிடையே நல்லுறவை வளர்க்க நாட்டம் கொள்ளவில்லை. அந்த நிலையில் மாற்றம் வேண்டுமென பூட்டோ விரும்பியதுண்டு. பூட்டோவுக்குத் தூக்கு மேடையைத் தந்தவர்களுக்குக்கூட இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவில் விருப்பம் இருக்கலாம். ஏற்படலாம்.

நமது நெஞ்சில் இன்று பாய்ந்துள்ள ஈட்டிக்கும் அந்த நட்புறவுப் பிரச்சினைகளுக்கும் தொடர்பில்லை. அனைத்தையும் கடந்த மனிதாபிமான உணர்வுதான் தலைதூக்கி நிற்கிறது.

கடைசித் தடவையாக மனைவி, மக்கள் தங்கள் குடும்பத்துத் தலைவனைச் சந்தித்து மூன்று மணி நேரம் உரையாடினார்களாம்!

சாவூருக்குச் செல்ல விடை தாருங்கள் என அவன் கேட்டிருப்பான். விழிகளை நீர் வீழ்ச்சிகளாக்கிக் கொண்டு அவன் வீட்டு விளக்குகள் திரும்பியிருக்கின்றன. அந்தச் சந்திப்பில் எந்த வகையான உணர்ச்சிகள் கொந்தளித்தன என்று யாரால் வர்ணிக்க முடியும்?

எத்தனையோ பேர் மரண தண்டனைக்கு ஆட்படுகிறார்கள்! தூக்குக் கயிற்றில் தொங்குகிறார்கள்! அந்த உயிர்களில் ஒன்றாகப்

பூட்டோவின் உயிரையும் கருதுகிற சமத்துவ முழக்கம் இப்போது எடுபடாது.

அண்டத்தில் கோடானு கோடி கோள்கள் இருக்கின்றன. எண்ணிமாளாத அளவுக்கு நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் சில கோள்களைத் தானே - சில நட்சத்திரங்களைத் தானே - உலகம் அறிந்திருக்கிறது!

அப்படி உலகறிந்த ஒரு மனிதனுக்கு இப்படி ஒரு முடிவா?

கேள்விக்குறி இதயத்தைப் பிழிந்தெடுக்கிறது!

பூட்டோ - என்றைக்கும் வாழுகின்ற புகழ்மிக்க மனிதர்களிலே ஒருவராக ஆகிவிட்டார்.

தூக்கு மேடை - அவர் உறுதியைக் குலைக்கவில்லை!

சிறைக் கொடுமைகள் அவர் உடலைத்தான் இளைக்க வைத்ததே தவிர உள்ளத்தைக் களைக்க வைக்கவில்லை!

குறை இல்லாத மனிதர் என்று கூற முடியாவிடினும், கம்பீரமாக நின்று கருணை கேட்காமல் மடிந்து விட்ட அந்த மாவீரனின் செயலைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது!

அன்புள்ள,

மு. க.

(05-04-1979)

651. அந்தோ! தாய்க்குலமே!

உடன்பிறப்பே,

தாய்க்குலத்தின் காவலர் என்று தன்னைப் பற்றிப் பறை சாற்றிக்கொள்ளும் நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் அவரது தொகுதியிலேயே இரண்டு தாய்மார்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி விட்டார்கள்.

அரசாங்கம் தந்துள்ள அதிகார பூர்வமான கணக்கின்படி போலீசார் நடத்திய அடக்குமுறை வெறியாட்டத்தின் காரணமாக ஐந்து பிணங்கள் அருப்புக்கோட்டைத் தொகுதியில் விழுந்திருக்கின்றன.

விவசாயப் பெருங்குடி மக்களின் மத்தியில் பெருங்குமுறலும் கொந்தளிப்பும் ஓராண்டுக் காலமாகவே எரிமலையெனப் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. கடன் தொல்லை, ஜப்தி நடவடிக்கைகள் - விளை பொருள்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காத வேதனை - மின்வெட்டு இல்லையென்று கூறிக்கொண்டே திடீர் திடீர் என முன்னறிப்பு இல்லாமல் மின்வெட்டினை மறைமுகமாக நடத்தியதாலும், நடத்தி வருவதாலும் பயிர் பச்சைகள் காய்ந்து கருகிவிட்ட கொடுமை - இப்படிப் பல்வேறு பிரச்சினைகளால் தமிழ்நாடு முழுதும் விவசாயிகள் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையேதான் எம்.ஜி.ஆரின் அருப்புக்கோட்டைத் தொகுதியில் வாகைக்குளம், கீழக்குடி போன்ற பகுதிகளில் ஆழ்கிணறுகளைத் தோண்டி அங்கிருந்து கடலாடிக்குக் குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தைச் சென்ற ஆண்டு அரசின் சார்பில் தொடங்கினார்கள்.

வாகைக்குளம், கீழக்குடி பகுதிகள் கரும்பு, துவரை, மிளகாய் போன்ற விவசாயத்திற்கு ஏற்ற நிலத்தடி நீரைப் பெற்றுள்ள பகுதிகள் என்றும், அந்தப் பகுதியில் ஆழ்கிணறுகளைத்

தோண்டினால் தங்களின் விவசாயத்திற்குத் தேவையான நிலத்தடி நீர் வரண்டு விடுமென்றும் அந்தப் பகுதி விவசாயிகள் ஓராண்டுக்காலமாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

விவசாயிகள் சங்கத்தின் சார்பாக அரசுக்கும், தொகுதி சட்டமன்ற உறுப்பினரான முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் முறையீடுகளை அனுப்பி வைத்தனர். சென்னைக்கு நேரிலே வந்து முதலமைச்சரைக் காணப் பலமுறை முயற்சி செய்தும் முடியாமல் திரும்பிச் சென்றனர்.

முகவை மாவட்டத்தில் ஓரளவு நீர்வளம் கொண்ட அந்தப் பகுதியில் பயிரிடப்படும் துவரை, மிளகாய் - பம்பாய் - கல்கத்தாவுக்கு அனுப்பப்படுகிற அளவுக்கு பிரசித்தி பெற்ற விளை பொருள்கள்.

அவற்றை விளைவித்து வாழும் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிற அளவுக்கு - எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல் அங்கிருந்து முப்பத்தி ஐந்து கல் தொலைவில் உள்ள கடலாடிக்குக் குடிதண்ணீர் கொண்டு போக, வாகைக்குளம் போன்ற கிராமங்களில் ஆழ்கிணறுகளைத் தோண்டியே தீருவோம் என்று எம்.ஜி.ஆர். அரசு முடிவாகக் கூறிச் செயல்படத் தொடங்கிவிட்டது.

கடலாடி மக்களுக்குத் தண்ணீர் தேவைதான். அதை மறுக்க முடியாது. கடலாடிக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ள மலட்டாற்றிலிருந்து அதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கலாம். அல்லது வைகையிலிருந்து இருபது மைல் தொலைவுக்குள்ளாக கடலாடிக்குத் தண்ணீர் வழங்குகிற திட்டத்தை வகுத்திருக்கலாம்.

காரணம் என்ன? ஒரு பொறுப்பான பதவியில் இருக்கும் ஆளுங்கட்சிக்காரர், பினாமி பெயரில் அந்த ஆழ்கிணறுத் திட்ட காண்ட்ராக்ட்டை எடுத்துள்ளார். அவர், ஆதாயமடைவதற்காக அரசாங்கம், பிணங்கள் விழுவதைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் விவசாயிகளின் கோரிக்கையைக் காலிலே போட்டு மிதித்து விட்டுக் காரியமாற்றியிருக்கிறது.

வாகைக்குளம் - கீழக்குடி நிகழ்ச்சி திடீரென மின்னல் வேகத்தில் வெடித்துவிட்ட ஒன்றல்ல! ஓராண்டுக் காலமாக விவசாயிகளின் முறையீடு! கடந்த இரண்டு வாரங்களாகவே

ஆழ்கிணறு தோண்டுவதற்காக வெளியூரிலிருந்து ஆட்களைக் காண்ட்ராக்ட் முறையில் கொண்டு வந்தபோது அவர்களை விவசாயிகள் தடுத்துத் திரும்பும்படி செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஒரு வாரமாகவே அங்கு பதற்றநிலை இருந்து வருகிறது.

இவ்வளவு செய்திகளும் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்குக் கிடைக்காமல் இருந்திருக்க முடியாது.

ஆழ்கிணறு தோண்டுகிற வேலையை ஒத்திவைத்துவிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுத்திருக்கலாம்.

இப்போது நீதி விசாரணை முடிவுறும் வரையில் அந்தக் கிணறுகள் தோண்டும் வேலை நிறுத்தி வைக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறாரே; இந்த அறிவிப்பை முன்னமே செய்திருக்கலாமே!

ஏற்கனவே விவசாயிகள் எதிர்ப்புக் காட்டியபோது ஆறு ஏழு மாதங்களுக்கு முன்பு அவர்களது பம்ப் செட்டுக்களையெல்லாம் போலீசார் அடித்து நொறுக்கிப் பாழ் செய்தார்கள். அதற்கு விவசாயிகள் நஷ்ட ஈடு கோரினார்கள். சுமார் அறுபதாயிரம் ரூபாய்க்குமேல் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சேத விவரங்களைத் தாசில்தார் தயாரித்து அனுப்பினார்.

அந்தத் தாசில்தார் மாற்றப்பட்டாரே தவிர, பம்ப் செட்டுக்களை இழந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு தரப்படவில்லை.

ஆழ்கிணறுகள் தோண்டப்படுகிற கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் கடந்த சட்டமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கே நின்றபோது இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு அதிக ஆதரவு காட்டினார்கள் - வாக்களித்தார்கள் என்பதற்காகப் பழி வாங்கப்படுகிறார்கள். அதன் தொடர்பாக ஐந்து உயிர்கள் பலிகொள்ளப்பட்டிருக்கின்றன.

தாய்க்குலம் - தாய்க்குலம் - என்று மூச்சுக்கு முந்நூறு தடவை உச்சரித்துக் கொண்டே தாய்க்குலத்தை, நாய்க்குலத்தினும் கீழாக மதித்து சுட்டுத்தள்ளிய எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு, இனியும் தாய்க்குலத்தைப் பற்றிப் பேச என்ன தகுதியிருக்கிறது?

அரசு என்பவர் அந்த ஊர் விவசாயி! அவர், ஆழ்கிணறுத் திட்டத்தை எதிர்த்தார் என்று அவரை போலீசார் சித்ரவதை

செய்தார்கள் சில மாதங்களுக்கு முன்பு! அரசுவின் ஆடு மாடுகளைக் கூடக் கிணற்றிலே தூக்கிப் போட்டார்கள்.

இப்போது அதே அரசை இந்த அரசின் போலீசார் குறி வைத்துத் துரத்திச் சென்று சுட்டுத் தள்ளி சவக்குழிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த அரசை வீழ்த்த மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதைக் காட்டும் அறிகுறிதான், அந்த அரசு சுட்டு வீழ்த்தப்பட்ட நிகழ்ச்சியாகும்!

எம்.ஜி.ஆர். ஆட்சியில் தாய்க்குலம் சுட்டுப் பொசுக்கப்படுகிறது! சுமங்கலிகள் அமங்கலிகளாக்கப் படுகிறார்கள்! தாய்க்குலத்தின் இரட்சகன் என்று இதுவரையில் எம்.ஜி.ஆர். பேசியதெல்லாம் வெறும் போலி வார்த்தைகள் என்பதை வாகைக்குளம் - கீழக்குடி துப்பாக்கிச் சூடு நிரூபித்து விட்டது.

அன்புள்ள,

மு. க.

(08-04-1979)

652. நடக்கட்டும் கண்டனக் கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

தலைமைக் கழக விவசாய அணிச் செயலாளர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விடுத்துள்ள அறிக்கைக்கு ஏற்ப வரும் 22-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அருப்புக்கோட்டைத் தொகுதி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வாய் என்று நம்புகிறேன்.

முதலமைச்சரைச் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த தொகுதியல்லவா அருப்புக்கோட்டை! அந்தத் தொகுதி மக்களுக்குத் தரப்பட்ட பரிசல்லவா துப்பாக்கிக் குண்டுகள்! ஐந்து பிணங்கள்! அதிலும் இரண்டு தாய்க்குலத்துப் பிணங்கள்!

அய்யா! எங்கள் வயிற்றில் அடிக்காதீர்கள்! கடலாடி மக்களுக்குத் தண்ணீர் வழங்க வேறு எத்தனையோ வழிகள் இருக்கும்போது எங்கள் விழிகளில் நீர்வடியும் செயலைப் புரியாதீர்கள்! என்று ஓராண்டு காலத்திற்கு மேலாக முறையீடுகளைக் குவித்துக் கொண்டிருந்த அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் மீது எவ்வளவு மூர்க்கத்தனமான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டினால் முதலமைச்சருக்குக் கோபமல்லவா வருகிறது!

வாகைக்குளம் பகுதி விவசாயிகளையும் யாரோ தூண்டிவிட்டு விட்டார்களாம்! எங்கே எது நடந்தாலும் யாரோ தூண்டிவிட்டு விட்டார்கள் என்ற பல்லவியைப் பாடியே, பிரச்சினையை மறைக்கின்ற முயற்சியிலே ஈடுபடுவது முதல்வருக்கு வாடிக்கையாகப் போய் விட்டது.

முன்பு நம்மோடு இருந்த நண்பர் ஒருவர் கூட சட்டமன்றத்திலே கேட்டார், ஆமாம்! அப்படியே தூண்டிவிட்டால்தான் என்ன தவறு? நாங்கள் அரசியல் கட்சிதான் நடத்துகிறோம்! ஆஸ்ரமமா நடத்திக் கொண்டிருக்கிறோம்? என்று - காரசாரமாக!

நான் அந்த பாணியிலே கேட்க விரும்பவில்லை! இன்று தொழிலாளர் பிரச்சினைகளானாலும், விவசாயிகள் பிரச்சினைகளானாலும், வழக்கறிஞர் பிரச்சினைகளானாலும் அவைகள் முற்றி வெடிக்கக் காரணமாக இருந்து அவற்றை மறைமுகமாகத் தூண்டி விடுவதற்கு இந்த அரசின் மெத்தனப் போக்கும் அலட்சியப் போக்கும்தான் அடிப்படை என்பதை நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பின்னணியில் இருந்து கொண்டு ஆட்சிக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார் அல்லவா! அந்தப் பழைய நினைவில்தான் - தன்னைப் போல் பிறரையும் கருதிக் கொண்டு, இயல்பாக எழும் பிரச்சினைகளுக்கெல்லாம் எதிர்க்கட்சிகளின் தூண்டுதல் என்று திசை திருப்பப் பார்க்கிறார் போலும்!

வாகைக்குளம் பிரச்சினைக்கு யார் காரணம்? அங்குள்ள விவசாயிகளின் உணர்வைத் தூண்டிவிட்ட நிகழ்ச்சி எது?

தங்கள் பகுதியின் நிலத்தடி நீர் காய்ந்து விடும், பயிர் பச்சைகள் கருகிவிடும் - எனவே ஆழ்கிணறு தோண்டி குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தைக் கைவிடுங்கள் என்று ஓராண்டுக்கு மேலாகக் கேட்கிறார்களே, அந்தப் பகுதியின் பரிதாபத்துக்குரிய விவசாயிகள்! அந்தக் கோரிக்கையை இந்த அரசு எப்படி அணுகியது?

கோட்டையைச் சுற்றிச் சுற்றி வந்தனர்! இராமாவரம் தோட்டத்து வாசலில் தவங்கிடந்து காத்திருந்தனர்! அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவில்லை முதலமைச்சர்!

ஆனது ஆகட்டும்! ஆழ்கிணறுகளைத் தோண்டுக! என்றுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டது! காரணம் என்ன? காண்ட்ராக்ட் எடுத்திருப்பவர் ஆளுங்கட்சித் தூண் ஒன்றின் பினாமியல்லவா? அவருக்கு இழப்பு ஏற்படலாமா?

ஐந்து உயிர்களின் இழப்பு மிகச் சாதாரணம்! காண்ட்ராக்டருக்கு இழப்பு ஏற்படின் அதைத் தாங்குமோ தமிழக முதல்வரின் நெஞ்சம்?

எனவேதான் தங்கு தடையின்றி தாக்கீது பறந்தது. தடுப்பவர் யாராயினும் அடக்கிடுக என்ற தோரணையில்!

வெடித்தன துப்பாக்கிகள்! வீழ்ந்தன ஐந்து சவங்கள்!

குண்டடிபட்டுச் சுருண்டு வீழ்ந்து செத்த சகோதரியைத் தூக்கப் போன மற்றொரு சகோதரிக்கும் துப்பாக்கிக் குண்டு - அய்யகோ - படாத இடத்திலே பட்டு அந்தச் சகோதரியும் புதை குழிக்குப் போய் விட்டாள் என்ற பயங்கர சோகக் கதையின் இதயமற்ற வில்லனாக எம்.ஜி.ஆர். அரசு முண்டா தட்டிக் கொண்டு நிற்கிறது!

மாநில முழுதும் உள்ள விவசாயிகள் மத்தியில் எரிமலையின் குமுறல் கேட்டுக் கொண்டிருக்கிறது. கடன்தொல்லை, விளைவித்த பொருளுக்குக் கட்டுப்படியாகாத விலை! ஜப்தி! ஏலம்! முன்னறிவிப்பில்லாத மின்வெட்டு காரணமாக விளைவித்த பயிரும் காய்ந்து கருகும் நிலை!

இந்தத் துன்ப துயரங்களில் இருந்து மீளுவதற்கு விவசாயி - வழி கேட்கிறான்!

அவன்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு! அந்த முதுகெலும்பை முறிப்பேனே தவிர, முறையீட்டின் நியாயத்தை ஆராய்ந்து பார்க்க மாட்டேன் என்று எம்.ஜி.ஆர். அரசு - விவசாயிக்கு எதிராகப் போர் முரசு கொட்டுகிறது!

இந்தக் கொடிய போக்கினை எதிர்த்துக் குரல் எழுப்பவும் - அருப்புக்கோட்டைத் தொகுதியில் ஐந்து பிணங்களைக் குவித்த அக்கிரமச் செயலை நாடறியச் செய்யவும் - தாய்க் குலத்தார் இருவரைச் சவமாகச் சாய்த்த சண்டாளத்தனத்தைக் கண்டிக்கவும் - கழகச் சார்பில் கண்டனக் கூட்டங்கள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடக்கட்டும்!

கழகம் நடத்தும் கண்டனக் கூட்டங்களில் ஆங்காங்குள்ள தோழமைக் கட்சியினரையும் விவசாயிகள் பிரதிநிதிகளையும் வாய்ப்பு வசதிக்கேற்ப கலந்துகொள்ளச் செய்யலாம்.

பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர், நகரங்கள் அனைத்திலும் அருப்புக்கோட்டை துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் - விவசாயிகளை அலட்சியப்படுத்தும் அரசின் போக்கைச் சுட்டிக் காட்டியும் - நாடு தழுவிய அளவில் நடக்கட்டும் கூட்டங்கள்!

அன்புள்ள,

மு. க.

(17-04-1979)

653. அரிப்பு அடங்கும்! எரிச்சல் கிளம்பும்!

உடன்பிறப்பே,

பாங்கோ ஆறுமுகத்தின் பிணத்தை அண்ணாசாலையில் பந்தாடி மகிழ்ந்த ஆளுங்கட்சிக்காரர்கள் பண்பாடு பற்றிப் பேசுகிறார்கள் பார்த்தாயா? ஆறுமுகம் குஷ்டரோகி தானே? - தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் தானே - அவன் தி.மு.கழகத்துக்காரன் - அதனால் அவன் பிணம் முதலமைச்சர் வருகிற வழியிலே வரக்கூடாது! எனவே அவன் பிணத்தைத் தூக்கிக் கீழே போட்டதும் தவறில்லை. வீதியிலே அந்தப் பிணத்தை இழுத்துக் கொண்டு போனதிலும் தவறில்லை. பிண வண்டியைக் குப்புறக் கவிழ்த்ததிலும் தவறில்லை. கொள்ளிச் சட்டியைத் தூக்கிச் சென்ற பையனை நையப்புடைத்துச் சட்டியை நொறுக்கியதிலும் தவறில்லை. மங்கலமான விழா நடக்கிற இடத்தின் பக்கம் பிணத்தைத் தூக்கிக்கொண்டு வந்தால் இப்படித்தான் நடக்கும் - இப்படியெல்லாம் பேசித் தங்கள் கட்சியினர் புரிந்த காட்டுமிராண்டிச் செயலுக்கு நியாயம் கற்பித்த நேர்மையாளர்கள் (?) இன்று பண்பாடு குறித்துப் பேசுகிறார்கள் என்றால் நாட்டு மக்கள் வேதனையையும் பொறுத்துக் கொண்டு விலா நோகச் சிரிக்கத்தான் செய்வார்கள்.

இடுகாட்டில் ஆசைத்தம்பியின் சடலத்திற்கு எரியூட்டப் படுகிற நேரம்! இரங்கல் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் விழிகளில் நீர் வடிய அமர்ந்திருக்கிறார்கள். இடுகாட்டுக்குள் நுழையும் வாயிற்புறத்திலும் மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போது ஒரு நாற்பது அல்லது ஐம்பது பேர் வேறொரு சவத்தை எடுத்துக் கொண்டு இடுகாட்டுக்குள் நுழைவதற்கு இயலாமல் தயங்குகிறார்கள். அதைக் கண்டவுடன் தலைமைக் கழக செயலாளர் நண்பர் வீராசாமி, ஒலிபெருக்கி

முன்சென்று, அந்தச் சவ ஊர்வலம் கடந்து செல்வதற்கு வழிவிடுமாறு வேண்டுகிறேன் என்று கூறுகிறார். அடுத்தகணமே பல்லாயிரவர் திரண்டிருந்த அந்தக் கூட்டம் பத்து கட்டளைகள் என்ற படத்தில் கடல் இரண்டாகப் பிளந்து வழிவிடுமே! அதைப் போல அந்தச் சவ ஊர்வலம் செல்ல அமைதியான முறையில் வழி வகுத்துக் கொடுத்தது. இரங்கற் கூட்ட மேடையில் இருந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் அத்தனைபேரும் அந்தக் காட்சியைக் கண்டார்கள்.

அந்தமானில் ஆசைத்தம்பியின் சவம்! இங்கே கழகத்தினர் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர். அவர் உடலாவது தமிழ்நாட்டிற்கு வந்து சேருமா என்று தவித்துக் கொண்டிருக்கிற நான்! அந்த நாள் பார்த்துச் சட்டப் பேரவையில் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் மூவரை எந்தவிதமான விளக்கமும் கேட்காமல், கூட்டத் தொடர் முடியும் வரையில் சட்டசபைக்குள் மட்டுமல்ல, கோட்டைப் பக்கமே வரக்கூடாது என்ற நிலையில் ஆளுங்கட்சி தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுகிறது முதலமைச்சர் முன்னிலையில்!

அடடா! என்ன பண்பாடு! என்ன பண்பாடு! ஆளுங்கட்சி உறுப்பினர், வேட்டியைத் தூக்கிக் காட்டலாமாம்! அது அவர்கள் ஏற்றுக் கொள்கிற - ரசித்து மகிழ்கிற பண்பாடாம்! மிக அசிங்கமாகவும் அருவருக்கத்தக்க முறையிலும் கைகளால் ஜாடை காட்டி ஆளுங்கட்சியினர் அவர்களது பண்பாட்டைக் காட்டிக் கொள்ளலாமாம்!

வேட்டி விவகார உறுப்பினர் நல்லவேளை ஆணாகப் பிறந்தாரே - என்று நாடு, நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்கிறது!

ஆளுங்கட்சிப் பத்திரிகையொன்று - அதிகாரபூர்வமான பத்திரிகைதான், நண்பர் சுப்புவை சுப்புக்குட்டி என்று விமர்சித்திருக்கிறது. சுவரின் மீது வீசிடும் பந்து போன்றது சுப்புக்குட்டி என்ற அந்தச் சொல்! வீசிய பந்து ஆளுங்கட்சியின் பக்கம் திரும்பினால் விரசமாக இருக்கும். ஏற்கனவே விரசமான விவகாரம்! அவ்வளவுதான் சொல்ல முடியும் என்னால் ஆளுங்கட்சியினர்க்கு!

ஒரு அமைச்சர் பேசி, அது ஆளுங்கட்சியின் அதிகாரப் பூர்வமான ஏட்டில் வந்திருக்கிறது! இதோ அந்த மணிவாசகம்!

ரகுமான்கான் செருப்பைக் காட்டுகிறார், பேட்டா கம்பெனியில் வேலை பார்த்தாரா - நமக்குத் தெரியாது!

இந்த அமைச்சர் இப்போது எம்.ஜி.ஆரின் கீழ்பார்க்கும் வேலையை விடப் பேட்டா கம்பெனியில் வேலை பார்ப்பது எத்தனையோ மடங்கு பெருமை வாய்ந்தது என்ற உண்மையை ஊரறியும்! நாடறியும்!

துரைமுருகனுக்கு என்ன கோளாறோ? அடிக்கடி காறித் துப்புகிறார்!

இதுவும் அந்த அமைச்சரின் பண்பார்ந்த விமர்சனம்தான்!

துரைமுருகன் காறித் துப்பினார் என்று எப்போது எங்கே செய்தி வந்தது? அப்படி ஏதாவது அவையின் நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறதா? அவையில் இல்லை, வெளியே காறித் துப்பினார் என்று அமைச்சர் கூறுவாரேயானால் - நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த கட்டபொம்மன் படத்தில் - கட்டபொம்மன் எட்டப்பனைப் பார்த்துத் தூ என்று துப்பியதைப் போலத் துப்பியிருக்கக் கூடும்.

அதே அமைச்சர் மேலும் பேசியிருக்கிறார்:-

சுப்புவுக்கு விசித்திரமான வியாதி.

சட்டசபையில் சுப்பு நடந்து கொள்வதும் பேசுவதும் அவருக்கு விசித்திரமான வியாதி என்று அமைச்சருக்குத் தோன்றுகிறதாம்!

விசித்திர வியாதிகளைக் கண்டுபிடிப்பதில் அந்த அமைச்சர் எவ்வளவு வித்தகராக விளங்குகிறார் பார்த்தாயா?

சுப்பு ஒலிபெருக்கியில்லாமல் மன்றத்தில் - பேசுகிறாராம்; அதனால் அவருக்கு விசித்திர வியாதியாம்! அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரின் தலைவர் எம்.ஜி.ஆர். சட்டசபையில் ஒலிபெருக்கியில்லாமல் ஒரு மணி நேரம் பேசினார் என்று 1973 முதல் இதுவரையில் பெருமையாகப் புகழ்ந்து கொண்டு இருந்தார்களே! அது என்ன வியாதி என்று சுப்புவின் வியாதியைக் கண்டுபிடித்த அமைச்சர் விளக்குவாரா?

அதாவது ஆளுங்கட்சி ஏட்டின் பாணியில் சொன்னால் சுப்புக்குட்டியின் வியாதியைக் கண்டுபிடித்து விசித்திர வியாதி என்று வியாக்கியானம் புரியும் அமைச்சர், அவரது தலைவர்

ஒலிபெருக்கியின்றி ஒரு மணி நேரம் பேரவையில் எதிர் வரிசையில் நின்று பேசியதற்கு எப்படி நாடி பிடித்துப் பார்த்து, அது என்ன வியாதி என்று எப்போது நாட்டுக்கு அறிவிக்கப் போகிறார்?

அந்த அமைச்சர் பேசிய அதே கூட்டத்தில் பேசிய பெண் அமைச்சர் ஒருவர் என்னைப் போன்ற பெண் உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கு பெறலாமா என்று எண்ணும் சூழ்நிலை இருந்தது என்று மிக உருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மை தானே! உருக்கத்தில் நியாயமிருக்கத்தானே செய்கிறது! பாவம்! அந்தப் பெண் உள்ளம் அந்த நேரம் என்ன பாடுபட்டிருக்கும்? அய்யோ! நம்மை ஏன் அமைச்சராக்கி இங்கே உட்கார வைத்தார்கள் என்று ஒருக்கணம் துடியாய்த் துடித்திருக்கும்!

சட்டமன்றத்தில் மட்டுமல்ல, பார்வையாளர் பகுதிகளிலும் தாய்க்குலம் அமர்ந்திருக்கிறதே என்ற நினைப்பு எள்ளளவும் இல்லாமல் ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர் வேட்டியைத் தூக்கி ருத்ரதாண்டவம் ஆடுகிறார் என்றால், எந்தப் பெண்ணால்தான் அதை சகித்துக் கொள்ள முடியும்?

உடன்பிறப்பே, ஆளுங்கட்சியினர் நடத்துகிற அலங்கோலங்களுக்கு எதிர்க்கட்சியினரும் அதே விதத்தில் எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்ற எண்ணமுள்ளவனல்ல நான்! அந்தப் போக்கை ஆதரிப்பதும் கழகத்தின் முறையல்ல! அதனால்தான் அப்போது அவையிலிருந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நமது பேராசிரியர் அவர்கள் உடனே எழுந்து கழக உறுப்பினர்களின் செயலுக்கு வருத்தமும் மன்னிப்பும் தெரிவித்துக் கொண்டு அமைதியை உருவாக்கினார்.

அதற்குப் பிறகு இரண்டு நாள் கழித்து, அதுவும் அந்தமானில் நமதருமை ஆசைத்தம்பியின் உயிரற்ற உடல் வீழ்ந்து கிடக்கிற நேரத்தில் அவசர அவசரமாகத் தண்டனைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்களே, ஆகா! என்னே மனிதாபிமானம்! என்னே பண்பாடு! என்னே அரசியல் நாகரிகம்!

இவர்கள்தான் ஆசைத்தம்பியின் இல்லத்து வாயிலில் நடந்த நிகழ்ச்சி குறித்து வானளாவ முழக்கி, பண்பாடு எங்கே? என்று பூமியதிர கேட்கிறார்கள்!

ஆசைத்தம்பி அவர்களின் படத்திறப்பு விழாவின்பொழுது ராயபுரம் அறிவகத்தின் முன்பு (ஏப்ரல் 15-ஆம் நாள்) நான் ஆற்றிய உரையை முழுமையாகப் படித்துப் பார்ப்பவர்களுக்கு பண்பாடு என்பதற்கான உண்மையான பொருள் நிச்சயம் விளங்கும்!

இல்லையேல் சிரங்கின் அரிப்பு அடங்குவதற்காக வேகமாகச் சொறிந்து கொண்டு பின்னர் எரிச்சல் தாங்காமல் துடிப்பவனுடைய நிலைதான் வசவாளர்களுக்கு ஏற்படும் - என்று அண்ணா சொல்வாரே, அந்த நிலைதான் இன்றைய ஆளுங்கட்சியினர்க்கு ஏற்படும்!

அன்புள்ள,

மு. க.

(23-04-1979)

654. வினோபாவின் உயிரைக் காக்க!

உடன்பிறப்பே,

வினோபா பாவே பசுவதையைத் தடுக்க வேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

நீண்ட நாட்களாக அவர் வலியுறுத்தி வருகிற ஒரு கோரிக்கை அது!

இந்தியாவில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பசுவைக் கொன்று அதன் இறைச்சியை விற்பதோ, உண்பதோ இல்லையென்றே கூறலாம்.

குறிப்பாக இரண்டொரு மாநிலங்களில் மேற்கு வங்கம் - கேரளா போன்ற இடங்களில் பசுவின் இறைச்சியை உண்ணும் வழக்கம் இருந்து வருகிறது.

இந்தியா தவிர்த்து உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் மாமிச உணவு அருந்துவோர் தொகைதான் மிகப் பெரும்பான்மையானது என்பதும் அந்த உணவில் பசுவின் மாமிசம் விதிவிலக்கு அல்ல என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

காமதேனு எனக் கூறப்படும் பசுவைக் கொன்று தின்பது மட்டுமல்ல, நாகேஸ்வரன் எனச் சொல்லப்படும் பாம்பையும் கூட துண்டங்களாக்கி வறுத்துக் சுவைப்பவர்கள் இந்தியாவிலேகூட இருக்கிறார்கள். தான் கொண்ட கொள்கையில் வினோபா பாவே வைத்துள்ள அழுத்தமான நம்பிக்கைக்காகப் பாடுபடுவதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் அந்தக் கொள்கையை அவரது விரிந்து பரந்த பிரச்சாரத்தின் வாயிலாக நிறைவேற்றிக் கொள்ள முனையாமல் - மக்களின் கருத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளைக் கேரள அரசும், மே.வங்க அரசும் மேற்கொள்வதற்கு ஓராண்டுக்கால அவகாசம் தரவேண்டுமென்று ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகர் கேட்டுக் கொண்டுள்ளதையும் புறக்கணித்து விட்டு - சாகும்

வரையில் உண்ணாவிரதம் என்று அறிவித்திருப்பது மிகமிக வேதனைப்படத்தக்க ஒரு செய்தியாகும்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன

உயிர்செகுந் துண்ணாமை நன்று.

என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் எழுதிய குறள் புலால் மறுத்தலை வலியுறுத்தியிருக்கிறது.

அதாவது நெய் போன்ற பொருள்களை தீயிலே கொட்டி ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட ஒன்றன் உயிரைக் கொன்று அதன் உடலை உணவாகக் கொள்ளாதிருப்பது நல்லது என்பதே அந்தக் குறளுக்குப் பொருள்!

புலால் மறுத்தல் என்ற தலைப்பில் உள்ள குறட்பாக்கள் துறவறவியல் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுவிட்ட காரணத்தாலோ என்னவோ இல்லறம் மேற்கொண்டோர் பெரும்பாலோர் புலால் மறுத்தலை அறிவுறுத்தும் குறட்பாக்களை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை போலும்!

வேத காலத்தில் நடைபெற்ற வேள்விகள் அதாவது யாகங்கள் உயிர்கள் பலவற்றைப் பலி கொடுத்தே முனிபுங்கவர்களால் நடத்தப்பட்டிருக்கின்றன.

அத்தகைய யாகங்களை நடத்தியோர் சுரர்கள் என்றும் அவற்றை எதிர்த்தோர் அசுரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

எனவே ஆண்டவன் பெயரால் நடத்தப்பட்ட யாகங்களிலேயே உயிர்ப்பலிகள் தாராளமாக இடம் பெற்றிருந்தன. இதற்கு வரலாற்றுச் சான்றுகளும், புராண இதிகாச சான்றுகளும் உண்டு. இன்னமும் கூட கிராமத் தேவதைகளின் கோயிலின் முன்னே பலிபீடங்கள் என்று சொல்லப்படுகிற இடங்களைக் காணலாம்.

காளி, பிடாரி போன்ற கோயில்களில் கடாக்களை வெட்டிப் பலி கொடுத்து அவற்றின் குருதியை சாமிக்குப் படைக்கும் அநாகரிகச் செயலைத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் - சமண மதப் பற்றுக் கொண்ட பெரியவர் ஸ்ரீபால் அவர்களின் ஓயாத பிரச்சாரமும் தடுத்து நிறுத்தின என்று சொன்னால் அது மிகையாகாது!

இப்போது கோயில்களில் கடா வெட்டுதல் போன்ற அநாகரிகப் பழக்கங்கள் அறவே நின்றுவிட்டன.

கடவுள், கோயில் சாத்திரம் - இவைகளின் பெயரால் உயிர்ப் பலிகள் தடுக்கப்பட்டாலுங்கூட, மனிதனின் புலால் உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு விடுமாறு செய்ய இயலவில்லை.

காரணம், உணவுப் பொருள்களில் மாமிசமும் ஒன்றாகிவிட்ட நிலையை மாற்றுவது என்பது எளிதல்ல!

உயிர்க் கொலை செய்து உண்ணக் கூடாது என்றால் பசு முதல் கோழி வரையில் ஏன்? கோழி முட்டை வரையில் - மீன் வகையறாக்கள் உட்பட எதையுமே உண்ணக்கூடாது என்றுதான் திருக்குறள் கண்டிப்பாகப் பேசுகிறது!

அந்தத் திருக்குறளுக்கு விளக்கம் சொல்கிறவர்களாலேயே மாமிச உணவு உட்கொள்ளாமல் இருக்க முடிகிறதா?

வடலூர் வள்ளலார் இராமலிங்கர் விழாவில் புலால் உண்ணாமை பற்றிப் பேச வருகிற பேச்சாளருக்கு - ஒரு இளம் கோழிக் குஞ்சை அப்படியே நசுக்கிப்போட்டு சூப்பு வைத்துக் கொடுத்தால்தான் குரலே கணீர் என்று இருக்குமென்கிறார்கள்.

யாரையும் குறை சொல்ல - குற்றம்கூற - இதனைக் குறிப்பிடவில்லை. மனிதனுடைய உணவுப் பண்டங்களில் - அதுவும் சத்துணவு வகைகளில் மாமிசமும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதற்காகவே கூறுகிறேன்.

இத்தாலி போன்ற நாடுகள் இறைச்சி ஏற்றுமதியினாலேயே தங்கள் அந்நிய செலாவணியைப் பெருக்கிக் கொள்கின்றன என்று கூறப்படுகிறது.

இறைச்சி உண்பதில்லை - என முடிவெடுத்தால், எத்தனை நாடுகளில் உணவுப் பற்றாக்குறையும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மீன் உண்பதுகூட புலால் உண்பதுதான்! இதை உணர்ந்து மீன் உணவை மறுத்துவிட்டால் வாழ்வு இழக்கக்கூடிய மீனவப் பெருங்குடி மக்கள் எண்ணிக்கையில் அடங்கமாட்டார்கள் அல்லவா?

எனவேதான் சில பிடிவாதமான கொள்கைகளை - நாட்டின் நிலைமைக்கு ஏற்ப சிந்தித்து செயல்படுத்த வேண்டியிருக்கிறது!

ஆடுகள், கோழிகள், புறாக்கள், குருவிகள், கொக்குகள், காடைகள், கவுதாரிகள் போன்ற உயிர்கள் உணவுக்காகக்

கொல்லப்படுவதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் - பசுவதையை மட்டும் வினோபா அவர்கள், பெரிதாக எடுத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், இந்து மதத்திலே பெரும் பிரிவினர் பசுக்களைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர் என்பதும் - பால், சாணம், முதலிய எல்லாவற்றாலும் மக்களுக்குப் பசுக்கள் உதவுகின்றன என்பதும் - எனவே அவற்றைக் கொல்லக்கூடாது என்பதுமாகும்!

மீன் கூட குளத்தில் உள்ள அழுக்கைச் சாப்பிட்டு அந்த நீரைச் சுத்தப்படுத்துகிறதே என்று வாதிடலாம்!

அந்த வகையான வாதங்களுக்குச் செல்ல நான் விரும்பாமல் - வினோபா பாவே அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படியோ இந்து மதத்தில் பெரும் பகுதியினர் பசுவை வணங்குகிற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக் கின்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கலன்று பசுவை மட்டுமின்றி காளை மாடுகளையும் அலங்கரித்து வண்ணம் பூசி வணங்குகிற விவசாயிகளையும் நாமறிவோம்!

இந்துக்கள் அல்லாத மதத்தினர் - பசுக்களையோ - காளைகளையோ - அவ்வாறு கருதுகிறவர்கள் அல்லர்!

மதச்சார்பற்ற அரசு என்பதற்கு இதுவரை தரப்பட்டு வருகிற விளக்கம் அந்தந்த மதங்களின் உரிமைகளில் தலையிடுவதில்லை என்பதாகத்தான் இருந்து வருகிறது. எனவே, அனைத்தையும் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பசுவதை கூடாது! வினோபா அந்தக் கொள்கையில் தீவிரமாக இருக்கிறார்! மக்கள் மனத்தை மாற்ற அவகாசம் தரவேண்டுமென ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகர் கேட்டுக் கொண்டிருக்கிறார்! மே.வங்க, கேரள முதல்வர்களும் வினோபாவை சந்தித்துப் பேசி நிலையை விளக்கியிருக்கின்றனர்.

அனைவரது வேண்டுகோளுக்கும் மாறாக - வினோபா உண்ணாவிரதம் தொடங்கியிருக்கிறார்.

அவரது உணர்வு குறைத்து மதிப்பிடக் கூடிய ஒன்றல்ல!
ஆனால் நமக்குள்ள வருத்தமெல்லாம் இன்று வினோபாவின் உண்ணாவிரதச் செய்தி கேட்டு நாடே அதிர்ச்சி அடைகிறதே!

இவ்வளவு அதிர்ச்சிக்குரிய செயலை திரு. வினோபா பாவே அவர்கள், 1975-ஆம் ஆண்டு நெருக்கடி சட்டத்தின் மூலம் மனிதவதை நடைபெற்றதே - அப்போது உடனடியாகச் செய்திருப்பாரேயானால் எத்தனை மனித உயிர்களை இந்தியாவில் காப்பாற்றியிருக்க முடியும்?

பசுவதையைத் தடுக்க உண்ணாவிரதம் - பாராட்டுகிறேன்! ஆனால் நெருக்கடி காலத்தில் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர் சிறையில் வதைபட்டார்களே - பலர் பிணங்களாக வெளிவந்தார்களே - இன்று வினோபாவின் உயிரைக் காப்பாற்றுங்கள் என்று துடித்தவாறு தந்தி கொடுக்கிறாரே ஜெயப்பிரகாஷ் நாராயண் - அவருக்கு இந்த உடல் நலிவு ஏற்பட்டதற்கே காரணம் ஓராண்டுக் கால மிசா சிறைவாசம் தானே!

அப்போது வினோபா இப்படியொரு உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தால் இந்தியாவே அவரைத் தங்கள் ரட்சகன் என ஏற்றுக் கொண்டிருக்குமே!

வினோபா ஒருவேளை அப்படி உண்ணாவிரதம் இருந்திருந்தால் அந்தச் செய்தி இன்று போல் ஏடுகளில் வெளிவர முடியுமா? பத்திரிகைச் சுதந்திரம்தான் அப்போது கிடையாதே என்று சர்வோதயத் தலைவர்கள் கேட்கக்கூடும்! அது உண்மைதான்!

இந்தியாவில் வினோபா உண்ணா நோன்பை அப்போது இருட்டடிப்பு செய்தாலும் அனைத்து நாட்டு ஏடுகளிலும் பரபரப்புடன் வெளியிட்டிருப்பார்கள் அல்லவா? என்ன காரணத்தாலோ, பசுவதையைத் தடுக்கப் போராடுகிற வினோபா அவர்கள் அன்றைக்கு மனித வதையைத் தடுக்க இயலாமல் மௌனமாகவே இருந்துவிட்டார்! வினோபாவினுடைய சீடர் ஒருவர்கூட நெருக்கடி நிலையைக் கண்டித்து தீக்குளித்து மடிந்தார். அப்பொழுதும் வினோபா மௌனமாகவேதான் இருந்தார்.

எது எப்படியிருப்பினும் அந்தப் பெரியவரின் உயிரைக் காப்பாற்ற உரியவர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர் நீண்ட நாட்கள் வாழ்ந்திட வழி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(24-04-1979)

655. இதோ ஒரு எம்டன் குண்டு!

உடன்பிறப்பே,

நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இருக்கிறாரே, அவர் உண்மையைத் தவிர வேறு எதையுமே பேசமாட்டார்! சட்டமன்ற மேலவையில் சில நாட்களுக்கு முன்பு ஒரு வரலாற்று உண்மையைச் சொன்னார்.

சென்னையில் எம்டன் குண்டு விழுந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அப்போது வெள்ளக்காடு. ஏ.ஆர்.பி.கூட வேலை செய்யவில்லை. அப்போது நான் சிறுவனாக இருந்தாலும் அந்த நிகழ்ச்சிகள் என் நினைவை விட்டு அகலவில்லை. அப்போது நான் சென்னையில் இருந்தேன் என்ற விபரங்களைச் சட்டமன்ற மேலவையில் அடுக்கிக் கொண்டே போனார்.

மேலவைத் தலைவர் கூட குறுக்கிட்டு எம்டன் குண்டு விழுந்தது முதல் உலக யுத்தம் நடந்தபோது என்று நினைக்கிறேன் எனக் குறிப்பிட்டார். மேலவைத் தலைவர் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தன்னுடைய நினைவையே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வலியுறுத்திவிட்டு அமர்ந்தார்.

எம்டன் என்பது ஒரு யுத்தக் கப்பல். அந்தக் கப்பல் சென்னையைக் குண்டு வீசித் தாக்கியபோது சென்னை உயர்நீதி மன்றத்தின் சுவர் சேதமுற்றது. அந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் இப்போதும் இருக்கிறது. அதில் பொருத்தப்பட்டுள்ள கல்லில் 1914-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் நாள் எம்டன் என்ற ஜெர்மனியக் கப்பல் குண்டு வீசியதாக செதுக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆருக்கு எம்டன் குண்டு வீசியது நினைவில் இருக்கிறது! அப்போது அவர் சின்னப் பையன்! சென்னையில் இருந்திருக்கிறார்! ஏரிகள் உடைந்து சென்னை நகரமே வெள்ளக்

காடாக ஆனதை நேரில் கண்டிருக்கிறார்! இத்தனையும் அவர் மேலவையில் கூறிய உண்மைகள்!

அதாவது 1914-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். சின்னப் பையன்! வெள்ளம் வந்தது - ஏ.ஆர்.பி. வேலை செய்யவில்லை - எம்டன் குண்டு வீசியது - எல்லாமே நினைவில் தங்கக் கூடிய வயது - அதாவது குறைத்துக் கணக்கிட்டால் கூட ஏழு வயதாக இருக்கும்!

1914-ஆம் ஆண்டு அவருக்கு அவர் கூற்றின்படி ஏழு வயது என்று மதிப்பிட்டால் அவர் பிறந்த ஆண்டு 1907 ஆகத்தான் இருக்க முடியும்.

அதாவது 1907-ல் பிறந்தவர் என்றால் இப்போது அவரது வயது 72 (எழுபத்தி இரண்டு)

உடன்பிறப்பே! அவர் வயது எதுவானால் நமக்கென்ன? இந்த வயதிலும் படங்களில் வாலிபனைப்போல அவரால் நடிக்க முடிகிறதே என எண்ணிப் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால் பிரச்சினை அதுவல்ல! எந்தச் சட்டமன்ற மேலவையில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக நின்று 1914-ஆம் ஆண்டு எம்டன் குண்டு விழுந்தபோது சென்னையில் அவர் சிறுவனாக இருந்தார் என்று குறிப்பிட்டாரோ, அதே மேலவையில் அவர் மேலவை உறுப்பினராக இருந்த போது யார்-எவர்? என்று அரசாங்கம் வெளியிட்ட எம்.எல்.சி.க்களின் விபரக் குறிப்புக்களில் அவர் பிறந்தது 1917-ஆம் ஆண்டு என்று கூறியிருக்கிறார். அது அச்சாகிப் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது அரசாங்கத்தினரால்!

1917-ல் பிறந்த ஒருவர், 1914-ஆம் ஆண்டு சென்னையில் எம்டன் குண்டு போட்டபோது எப்படி நினைவு தெரிந்த சிறுவனாக இருந்திருக்க முடியும்?

இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டால் உண்மையைத் தவிர வேறு எதுவுமே பேசியறியாத எம்.ஜி.ஆருக்குக் கோபம் வரும்! என் செய்வது? முதலமைச்சராயிற்றே! அவர் வாயிலிருந்து சிந்துவதெல்லாம் மணிவாசகத் திருவாசகமாயிற்றே!

அவர் உண்மை பேசுவதற்கு இன்னொரு உதாரணம் வேண்டுமா?

வழக்கறிஞர் ஒருவரைத் திருப்பரங்குன்றத்தில் போலீஸ் அதிகாரி அடித்து விட்டார். அவரை சஸ்பெண்ட் (தற்காலிக வேலை நீக்கம்) செய்துவிட்டு விசாரணை நடத்த எம்.ஜி.ஆர். மறுத்துவிட்டார்.

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படத்தில் நடித்த ஒரு துணை நடிகையைக் கைது செய்தார்கள் என்பதற்காகச் சென்னையில் சில போலீஸ்காரர்களை சஸ்பெண்ட் செய்தீர்களே? அந்த நியாயத்தை வழக்கறிஞர்கள் விவகாரத்தில் நிலைநாட்டக் கூடாதா! என்று சட்டப் பேரவையில் கேட்கப்பட்டது. அதற்கு முதல்வர் எம்.ஜி.ஆர். என்ன பதில் சொன்னார் தெரியுமா?

மாலை ஆறு மணிக்குமேல் பெண்களைப் போலீஸ் லாக்கப்பில் வைக்கக்கூடாது என்பது அரசாங்க உத்தரவு. அதை மீறி அந்தத் துணை நடிகையை லாக்கப்பில் வைத்த காரணத்தால் போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள்

இதுதான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அளித்த பதில்!

ஆனால் நேற்று (26-4-79) சட்டப் பேரவையில் திருவள்ளூருக்கு அருகில் வள்ளியூர் என்ற கிராமத்தில் விவசாயிகளின் வீட்டுப் பெண்கள் எப்படிப்பட்ட கொடுமைகளுக்குப் போலீசாரால் ஆளாக்கப்பட்டார்கள் என்பதை எதிர்க்கட்சிக்காரர்களும் அரசின் தோழமைக் கட்சிக்காரர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

தாக்கப்பட்ட விவசாயப் பெண்கள் திருமணமான பெண்கள், திருமணமாகாத பெண்கள் உட்பட பல பெண்களைப் போலீஸ் லாக்கப்பில் வைத்து அவர்களது பாவாடையைத் தவிர மற்ற ஆடைகளையெல்லாம் அவிழ்த்து அரை நிர்வாணமாக்கி விடியவிடிய உதைத்திருக்கிறார்கள்.

என்று மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்.

எங்களுடன் ரமணிபாயும் வந்திருந்தார். அங்குள்ள பெண்கள் எங்களிடம் சொல்ல முடியாத கொடுமைகளை, அந்த அம்மாளைத் தனியே அழைத்துப் போய்ச் சொல்லிக் கதறி அழுதிருக்கிறார்கள்.

என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் உருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

விவசாயிகள் நடத்திய போராட்டத்தையொட்டி எம்.ஜி.ஆர். வானொலியில் ஆற்றிய உரையினால் ஏற்பட்ட விளைவுகளையும் - ஏதுமறியாத அப்பாவி மக்களையும் - அரசியல் கட்சி உறுப்பினர்களையும் - செங்கற்பட்டிலே மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களிலும் மிருகத்தனமாகப் போலீசார் தாக்குகிறார்கள் என்பதையும் - இந்திரா காங்கிரஸ், ஜனதா, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், உழைப்பாளர் கட்சி ஆகிய கட்சியினர் சட்டப் பேரவையிலும், தி.மு.க. சார்பில் மேலவையிலும் சுட்டிக்காட்டிக் கடுமையான கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன!

தமிழக முழுதும் தாய்க்குலத்தின் மீதும் - விவசாயிகள் மீதும் எம்.ஜி.ஆர். அரசு வெறித்தனமான போரைத் தொடங்கியிருக்கிறது!

ஒரு துணை நடிகையை மாலை ஆறு மணிக்குமேல் லாக்கப்பில் வைத்ததை எம்.ஜி.ஆரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையாம்! அதனால்தான் அந்த அதிகாரிகளைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தேன் என்று பதில் அளித்தாரே! அதுதான் உண்மை என்றால் இதோ பல போலீஸ் லாக்கப்களில் தாய்க்குலத்தினர் - விவசாயி வீட்டுப் பெண்கள் - அரை நிர்வாணமாக்கப்பட்டு விடிய விடிய சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்களே, இப்போது எத்தனை போலீஸ் அதிகாரிகளை எம்.ஜி.ஆர். சஸ்பெண்ட் செய்திருக்கிறார்?

துணை நடிகை விவகாரத்தில் எம்.ஜி.ஆர். சொன்னது உண்மையாக இருந்தால் விவசாயி வீட்டுப் பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பயங்கரமான வெறியாட்டங்களுக்கு இந்நேரம் எம்.ஜி.ஆர். போலீசார் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமே!

இந்து ஏடும், எக்ஸ்பிரஸ் ஏடும் இந்த விவசாயிகள் போராட்டம் குறித்து விளக்கமான குறிப்புக்களைத் தந்திருக்கின்றனவே!

தமிழக முழுதும் தாய்க்குலமும் - விவசாயிகளும் - கொடுமைப்படுத்தப்பட பெரிய இராமச்சந்திரன் அவர்கள் காவல்துறைக்குக் கட்டளைப் பிறப்பித்திருக்கிறார்!

பெண்களை முன்நிறுத்திப் போராட்டம் நடத்துவது பேடிகளின் செயல் என்கிறார் சின்ன இராமச்சந்திரன்!

உண்மையே பேசுவதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டு மக்களை ஏமாற்றுகிற இந்த ஆட்சியின் தலைவர் எம்.ஜி.ஆர். - சில நாட்களுக்கு முன்பு அண்ணா நகர் கூட்டத்தில் பேசியபோது கருணாநிதி ஒரு பொய்யர் என்று ஒரு குண்டை வீசியிருக்கிறார்! சரியான எம்டன் குண்டு! இதற்கென ஒரு நினைவுச் சின்னம் அமைத்து கல்லில் செதுக்கி வைக்கவேண்டிய எம்டன் குண்டு!

அன்புள்ள,

மு. க.

(28-04-1979)

656. தஞ்சை, திருச்சி மாநாடுகள்!

உடன்பிறப்பே,

மே திங்கள் 5-ஆம் நாள் திருச்சியில் நடைபெறுகிற - கிராமப்புற, நகர்ப்புறக் குடியிருப்பு மறுமலர்ச்சி மாநாட்டிலும், மறுநாள் மே 6 அன்று தஞ்சையில் நடைபெறும் தி.மு.க. வழக்கறிஞர்கள் மாநில மாநாட்டிலும் கலந்து கொள்வதாக இருக்கிறேன்.

இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கிடையே நான் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி நிலவரங்களை அறியும் வாய்ப்பினைப் பெற்று தஞ்சாவூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் வேட்பாளர் பெயரை அறிவிப்பேன் என்றும் ஏடுகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

அதுமட்டுமல்ல, தஞ்சையில் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைப்பேன் என்றும் அந்த ஏடுகள் ஊகங்களை வெளியிட்டிருக்கின்றன. உண்மையில் தஞ்சையில் நடைபெறுவது வழக்கறிஞர்கள் மாநாடுதானே தவிர, தேர்தல் பிரச்சார மாநாடு அல்ல! அதற்காக அந்த மாநாட்டுப் பேச்சில் தஞ்சை - நாகைத் தொகுதி இடைத் தேர்தல்கள் குறித்த கருத்துக்கள் இடம் பெறாமல் போய்விடும் என்று நான் கூறமாட்டேன்.

தேர்தலுக்கான வேட்பு மனு அளிப்பதற்கு இடையிலே சில நாட்களேதான் இருப்பதால் தஞ்சை மாநாட்டிலும் சரி, திருச்சி மாநாட்டிலும் சரி இடைத்தேர்தல் பற்றிய கருத்துக்கள் கோடிட்டு காட்டப்படுவது இயற்கையேயாகும்!

திருச்சி மாநாட்டில் நான் மட்டுமல்ல, அனைத்துக் கட்சித் தலைவர்களான திரு. கல்யாணசுந்தரனார் எம்.பி. அவர்களும், திரு. பி. இராமமூர்த்தி எம்.பி. அவர்களும், திரு. அப்துல் ஸமது அவர்களும், திரு. வீரமணி அவர்களும், திரு. குமரி அனந்தன்

எம்.பி. அவர்களும், திரு. ஆறுமுகசாமி அவர்களும், திரு. எம். சுந்தரராசன் அவர்களும் - கலந்து கொள்கிற அளவுக்கு எழுச்சியுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருமளவுக்கு ஒத்த கருத்துடையோர் - இன்று நாட்டிலுள்ள கேட்டினை மாய்த்திட முனையும் இயக்கங்களை நடத்துவோர் திருச்சியில் கூடுவதையும் - மறுநாள் தஞ்சைத் தலைநகரில் வழக்கறிஞர்கள் மாநாட்டில் நான் கலந்து கொண்டு பேசுவதையும் இணைத்துப் பார்க்கும் எவருக்கும் தஞ்சை மாநாடு ஒரு தேர்தல் பிரச்சார தொடக்க விழாவாகத்தான் இருக்கும் என்ற நினைப்பு ஏற்படத்தான் செய்யும்.

தஞ்சை மாநாடு தொடக்க விழாவாக இல்லாவிடினும் தொடக்கத்திற்கான ஒரு தொடக்கமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதைச் சொல்வதால் தஞ்சையில் கூடுகிற வழக்கறிஞர்கள், அண்மையில் வர இருக்கிற இடைத்தேர்தலைக் குறித்து மட்டும் கலந்துரையாடுவார்கள் என முடிவுகட்டி விடக்கூடாது!

தமிழகத்தின் எதிர்காலப் பிரச்சினைகள் பலவற்றைச் சந்திக்க கழக வழக்கறிஞர் எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டுமென்ற கருத்துக்கள் அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட இருக்கின்றன.

தஞ்சையில் நடைபெறும் மாநாட்டுக்கு திரு. பி.டி.ஆர். பழனிவேல் இராசன் அவர்கள் தலைமையேற்கிறார். தலைசிறந்த வழக்கறிஞரும் திறன்மிக்க நிர்வாகியும் பெரியாரின் பேரன்புக்குரியவருமாகத் திகழ்ந்த பன்னீர்செல்வம் அவர்களின் படத்தை திரு. தினகரன் கந்தசாமி அவர்கள் திறந்து வைக்கிறார்.

வழக்கறிஞராக மட்டுமன்றித் தமிழ் வளர்த்த மூதறிஞராகவும் விளங்கிய பண்பாளர் உமாமகேசுவரனார் படத்தை திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைக்கிறார்.

மாநாட்டுத் திறப்பாளர் கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் திரு. கணபதி அவர்கள்!

தஞ்சை மாநாட்டில் நுழைவுக் கட்டணமாகத் திரட்டப்படும் நிதி, தஞ்சைத் தொகுதி இடைத்தேர்தல் நிதிக்காக

வழங்கப்படுமென மாநாட்டு வரவேற்புக் குழுவினர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

எனவே உடன்பிறப்பே! இடைத்தேர்தலுக்கான உன் கடமையைச் செய்யும் ஆரம்ப நாளாக மே திங்கள் ஆறாம் நாளை நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

மற்றவை நேரில், திருச்சியிலும் தஞ்சையிலும் உன்னைச் சந்திக்கும்போது!

அன்புள்ள,

மு. க.

(05-05-1979)

657. கல்லில் செதுக்க வேண்டிய கருத்து!

உடன்பிறப்பே,

முன்னாள் பிரதமர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு பெங்களூர் சென்றார்கள்.

அவருக்கும் கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் அவர்களுக்கும் சில கருத்து வேறுபாடுகள் என்று செய்திகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

அப்படியிருந்தும் கூட தேவராஜ் அர்ஸ் மீது ஜனதா அரசு போட்ட குரோவர் கமிஷன் அரசியலில் பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட காரியம் என்று இந்திரா காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இந்திரா காந்தி திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இந்திரா காந்தியை நிருபர்கள் சந்தித்துப் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.

அப்போது அம்மையார் சொன்ன கருத்துகள் வருமாறு:-

என்மீது ஜனதா கட்சி கொண்டுள்ள அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக என்னைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விசாரணைக் கமிஷன்களை அரசு நியமித்துள்ளது. விசாரணைக் கமிஷன் எல்லாம் அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவை ஆகும்.

இந்திரா அம்மையார் இப்படிச் சொன்னதும், பெங்களூர் நிருபர் ஒருவர் உடனடியாகக் குறுக்கிட்டு,

அப்படியானால் தமிழ் நாட்டில் கருணாநிதி தலைமையில் பதவியில் இருந்த தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு சர்க்காரியா கமிஷன் அமைத்தீர்களே, அதுவும் அரசியல் நோக்கத்துக்காகத்தானா? என்று கேட்டிருக்கிறார்.

இந்தக் கேள்வி எழுந்தவுடன் இந்திரா காந்தி அவர்களுக்கு மிகவும் கோபம் ஏற்பட்டு விட்டதாம்.

கோபம் வராதா? இப்படியொரு சிக்கலான கேள்வியைக் கேட்டால் சீற்றம் ஏற்படாதா?

அதுவும் உண்மையைச் சுட்டிக் காட்டும் போது சினம் எழத்தானே செய்யும்!

இந்திரா காந்தி கோபமுற்றதாகவும் அதுவும் மிகக் கோபமுற்றதாகவும் நான் சொல்லவில்லை! பத்திரிகைகளில் வந்துள்ள செய்தியைத்தான் குறிப்பிடுகிறேன்.

கோபத்துடன் இந்திரா காந்தி என்ன விடையளித்திருக்கிறார்?

தி.மு.கழகத்தின் பதவிக் காலம் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. அந்த நிலையில்தான் சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டது.

இது அம்மையாரின் பதில்!

அவரது கோபத்தைக் கண்ட நிருபர் அதற்கு மேல் கேள்வி கேட்கவில்லையென்று தெரிகிறது.

நிருபர் கேட்டிருந்தால் பின்வரும் கேள்விகளைக் கேட்டிருப்பார்! என் செய்வது, முடியவில்லை!

முன்னால் பிரதமர் கோபத்தோடு இருக்கும் போது தொடர்ந்து கேள்வி எழுப்ப முடியுமா?

இல்லையேல் இதுபோன்ற கேள்விக் கணைகள் கிளம்பும்.

1) இந்திரா அம்மையார் அவர்களே! தி.மு.க. பதவிக் காலம் முடிவடைய சில நாட்களே இருக்கும்போது அந்த ஆட்சியை ஏன் கலைத்தீர்கள்?

2) ஆட்சியைக் கலைத்துவிட்டு அதற்குப் பிறகல்லவா சர்க்காரியா கமிஷன் நியமித்தீர்கள்? நினைவில்லையா உங்களுக்கு?

3) 1976 ஜனவரி 30-ஆம் தேதி காந்தி விழாவில் பேசிய கவர்னர் ஷா மகாத்மாவின் வழியில் தி.மு.க. ஆட்சி நடைபெறுவதாகச் சொன்னாரே! மறுநாள் அந்த ஆட்சியை ஊழல் ஆட்சி என்று கூறுமாறு ஆணையிடப்பட்டாரே அதற்கென்ன காரணம்?

4) 1972-இல் தி.மு.க. ஆட்சி மீது கொடுக்கப்பட்ட புகாரைத் தூக்கி கூடையில் போட்டுவிட்டு - அதில் எதுவுமில்லையென்று தள்ளிவிட்ட நீங்கள், நெருக்கடிச் சட்டத்தை தி.மு.க. எதிர்த்த ஒரே காரணத்திற்காகத் தானே - 1976-இல் (நாலு வருடம் கழித்து) அந்தப் புகாரைத் தட்டியெடுத்து சர்க்காரியா கமிஷன் போட்டீர்கள்?

5) அரசியல் நோக்கத்துடன்தான் அந்தக் கமிஷன் போடப்பட்டது என்று இன்றைக்கு மத்திய அமைச்சர்களாக இருப்பவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலின் போது சென்னை, கோவை நகரங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பேசினார்களே - அப்போதாவது உங்கள் அரசியல் நோக்கம் குறித்து சிந்தித்துப் பார்த்தீர்களா?

உடன்பிறப்பே! இப்படியெல்லாம் நிருபர்கள் தொடர்ந்து கேட்டிருக்க முடியும்! என் செய்வது! அம்மையார்தான் முதல் கேள்வி புறப்பட்டவுடனே முகம் சிவக்கத் தனது கோபத்தைக் காட்டி விட்டார்களே!

எப்படியோ ஒன்று! விசாரணைக் கமிஷன்கள் எல்லாம் அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவையாகும் என்று இந்திரா அம்மையார் கூறியுள்ள கருத்து, கல்லில் செதுக்கப்பட்டு - அம்மையாரது கண்பார்வையிலே அடிக்கடி படுமாறு வைக்கப்பட வேண்டிய சிறந்த கருத்தாகும்!

அன்புள்ள,

மு. க.

(14-05-1979)

658. என் விழி உன்னைத் தேடும்!

உடன்பிறப்பே,

பெரும்பான்மையை முரட்டுத்தனமாகப் பயன்படுத்தி கழக உறுப்பினர் மூவரைச் சட்டப் பேரவையிலிருந்து வெளியேற்றினர்! எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரினர். ஆளுங்கட்சி அசைந்து கொடுக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அளிக்கும் விளக்கமென்ன என்றும் கேட்கப்படவில்லை.

இத்தனைக்குமிடையே நமது பேராசிரியர் அவர்கள் வருத்தம் மட்டுமல்ல, மன்னிப்பே கூடக் கேட்டுக் கொண்டு பெருந்தன்மையை நிலை நாட்டினார். வேட்டி விளையாட்டுக்கள் நடத்திய ஆளுங்கட்சியினர், கழகத்தினர் மூவரையும் வெளியேற்றுவதில் மூர்க்கத்தனமாகச் செயல்பட்டனர்.

அந்தமானில் அருமை உடன்பிறப்பு ஆசைத்தம்பியின் உடல் கிடந்தபோதுதான் இரக்கமற்ற தன்மையில் இங்குள்ள ஆளுங்கட்சி நடந்து கொண்டது.

சட்ட மன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை இதோ மக்கள் மன்றம் இருகையேந்தி வரவேற்கிற காட்சியைக் காண்கிறேன். அதுமட்டுமா? ஆயிரம், பதினாயிரம் என்று கழகத் தேர்தல் நிதியை அந்தக் கண்மணிகளிடம் அள்ளி அள்ளி வழங்குகிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்டம் முதல் கட்டமாக ஏழாயிர ரூபாய்க்கு அதிகமாக!

திருச்சி மாவட்டம் நாற்பத்தி ஐயாயிரம் ரூபாய்!

தர்மபுரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டங்கள் பத்தாயிர ரூபாய்க்கு மேல்!

மற்ற மாவட்டங்களில் மூவருலா தொடர்கிறது!

ஆளுங்கட்சி ஏடுகளும் - அமைச்சர்களும் - இந்தக் காட்சி கண்டு காந்தாரிகளாக மாறிக் கதறுகிறார்கள்! நான், அவர் தம் அவல நிலையையும், அழுக்காறு உணர்ச்சியையும் பார்த்துப் பூரித்துப் போகிறேன்.

கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாத அரசு - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆணவ மொழி பேசுகிற அரசு - மூவருலாவின் முழு வெற்றி கண்டு முக்காடிட்டுக் கொண்டு அழும்போது - தமிழ் மக்கள் என் தம்பிகளுக்குத் தரும் அன்பு வரவேற்பையும், எழுச்சியையும் கண்டு ஒரு அண்ணன் மகிழ்ச்சி கொள்வதில் வியப்பில்லை அல்லவா?

பேரவையின் மரபுகள் மீறப்படக்கூடாது என்பதில் அழுத்தமான கருத்து உண்டு கழகத்திற்கு! நடந்துவிட்ட தவறுகள் இனி நடைபெறாமல் தடுக்க இரு சாரரும் கலந்து பேசி முடிவு மேற்கொள்ளலாம் என்ற எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளைத் துச்சமென மதித்தனரே! துரைத்தனம் நடத்துவோர்!

தண்டிக்கப்பட்டோரைத் தள்ளியாவிட்டது தமிழகம்? தாய், பிள்ளைகளை வாரியணைப்பதுபோல் அரவணைத்து மகிழ்ந்து தேர்தல் நிதியும் வழங்கிக் கொண்டிருக்கிறது! உடன்பிறப்பே, என் பணியில் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டதாகவே கருதுகிறேன். அந்த வகையில் ஆளுங் கட்சிக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

அதற்காக என் பணியை அறவே நிறுத்தி விட முடியுமா? இதோ இன்று இருபதாம் தேதி கோவை மாவட்டம் திருப்பூர் அழைக்கிறது தேர்தல் நிதி தருவதற்கு! பெருநிதி வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன்.

திருப்பூரிலிருந்து தஞ்சை செல்லும் வழியில் திருச்சியிலும் 21-ஆம் நாள் காலையில் சிறப்புக் கூட்டம் நடத்தி கணிசமான நிதியளிக்கக் காத்திருக்கிறார்கள்! நான் எதிர்பார்ப்பதைவிட அதிகமே தருவார்கள்!

ஒவ்வொரு மாவட்டமும் தேர்தல் நிதி திரட்டுவதில் போட்டி போட்டுச் செயலாற்றுகின்ற செய்தி செந்தேனாக இனிக்கிறது.

சென்னையிலே தேர்தல் நிதிக்கென உண்டியல் ஏந்துகிறார்கள் வீதி வீதியாக! மே திங்கள் 26 - 27 - சனி ஞாயிறு நாட்களில்!

அந்த உண்டியல்களை நிரப்பிட வேண்டிய பொறுப்பை சென்னை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாவட்ட கழகத்தின் முயற்சி, மற்ற மாவட்டங்களை வெற்றி கொள்ளும் என எதிர்பார்ப்பது தவறில்லையல்லவா?

நாகைத் தொகுதியில் நமது வேட்பாளர் முருகையன் என்று அறிவிக்கப்பட்டாகி விட்டது. ஆம், நமது வேட்பாளர்தான்! தோழமைக் கட்சியின் வேட்பாளர் எந்தக் கட்சிக்குரியவராக இருந்தாலும் அவரை நமது வேட்பாளர் என்ற உள்ளார்ந்த உணர்வுடன் - நல்லுறவு - நல்லெண்ண அடிப்படையில் வெற்றி தேடித் தருவதற்கு ஓய்வு, உறக்கம் பாராமல் பணியாற்றக் கூடிய பண்பு பெற்றவர்கள் நாம்! அதனால்தான் நாகைத் தொகுதி நண்பர் முருகையன் அவர்களையும் நமது வேட்பாளர் என்றேன்! உரிமையுடன்! எனக்குள்ள உறவுமுறையுடன்!

இன்னமும் தஞ்சைத் தொகுதியில் கழகச் சார்பில் போட்டியிடும் தோழமைக்கட்சியின் வேட்பாளர் யார் என்று முடிவு எடுக்கப்படவில்லை!

அந்த முடிவை அறிவிக்கத்தான் வரும் 21, 22 ஆகிய நாட்களில் தஞ்சையில் கழக ஆட்சி மன்ற குழு கூடுகிறது. கலந்துரையாடிட மாவட்டச் செயலாளர்களுக்கும் நமது பேராசிரியர் அவர்கள் அழைப்பு அனுப்பியுள்ளார்.

தி.மு.க. ஆனாலும் இந்திரா காங்கிரஸ் அல்லது அ.தி.மு.க. ஆனாலும் 23-ஆம் தேதியன்று தங்கள் கட்சிகளின் வேட்பாளர் யார் என்று அறிவித்துத்தானே தீர வேண்டும்.

இதற்கிடையே இந்திரா காந்தியே போட்டியிடுவார் என்ற செய்திகள்! அது குறித்து கடந்த ஆறாம் தேதி தஞ்சை வழக்கறிஞர்கள் மாநாட்டில் நான் விரிவாகப் பேசியிருக்கிறேன். அந்தப் பேச்சும் கருத்தும் அரசியல் அரங்கில் விவாதப் பொருளாகி விட்டிருப்பதை நாள்தோறும் ஏடுகள் வழங்கும் பல்வேறு வகையான செய்திகளைப் படித்து நீ அறிந்து கொண்டிருப்பாய்!

23-ஆம் நாள் - நாம் முதன் முதலாக அறிவித்தவாறும் அதிகாரிகளுடன் கலந்து பேசியதின் அடிப்படையிலும் வேட்பு மனு தாக்கல் செய்யும் மாபெரும் ஊர்வலம் நடைபெற இருக்கிறது! மாலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ஒரு மாநாடுபோல ஏற்பாடாகிறது!

ஜனநாயகம் தழைக்கவும், மக்கள் உரிமைகள் பாதுகாக்கப் படவும், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு பகுதி மக்களின் சீர்குலைக்கப்பட்ட வாழ்வு சிறப்புறவும், அரசின் அடக்குமுறைக் கொள்கைக்கு ஏற்ப அராஜக நடவடிக்கைகளில் ஈடுபடும் காவல்துறையின் போக்கு மாற்றப்படவும், சட்டம் ஒழுங்கு அமைதி நிலைநாட்டப்படவும், நீதி - நிர்வாகத்தில் நேர்மையற்ற முறையில் தலையிடும் ஆளுங்கட்சிக்குப் பாடம் கற்பிக்கவும் - சர்வாதிகாரத்திற்குச் சாமரம் வீசும் ஆட்சியாளர்களை மாற்றி அமைக்கவும் - தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மை மக்களின் அல்லல் அவதிகளைத் துடைக்கவும் - இன்று அணி திரண்டுள்ள தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புகள் அனைவரும் வரும் 23-ஆம் நாள் தஞ்சையில் கூடிடுவர்! எழுச்சிப் பண் பாடிடுவர்!

தஞ்சையில் வேட்பு மனு தாக்கல் செய்யும் ஊர்வலம் - அலைகடலென விளங்கும்!

ஆம், அனைத்துக் கட்சிகளின் கொடிகள் அப்படி அசைந்தாடும்! கண்ணியம் கடுகளவு கூட சிதறாமல் ஒலிகள் முழங்கும்! ஆம், அப்படித்தான் முழங்கப்பட வேண்டும்! ஆர்ப்பாட்டம் - அமளி - துமளி - இவற்றிற்கு அணுவளவும் இடம் தராமல் அமைதி காத்து அணிவகுப்போம் தஞ்சைத் தரணியில்!

கழகக் கண்மணியே! அன்பு உடன்பிறப்பே! தோழமைக் கட்சிகளுடன் தோளோடு தோள் நின்று வெற்றிமுரசு கொட்ட வீர நடைபோட்டு விரைந்து வா தஞ்சைக்கு! வழக்கம்போல் என் விழி உன்னைத் தேடும் - மறந்து விடாதே!

அன்புள்ள,

மு. க.

(20-05-1979)

659. அவர் சொன்ன அந்த உதாரணம்!

உடன்பிறப்பே,

தும்பைப் பூ போன்ற வெண்மையான சோறு! சுவைமிக்க உருளைக் கிழங்கு சாம்பார்! தக்காளி ரசம்! பச்சடி, வறுவல், அவியல், மாம்பழம், பலாச்சுளை, ஜிலேபி, தயிர்வடை, பாயசம், பருப்பு, பாதாம் கரைத்த பானம் - இப்படியொரு அருமையான விருந்தை ஏற்பாடு செய்துவிட்டு - விருந்து சாப்பிட வருகிறவனைப் பார்த்து வீட்டுக்காரன் சீ! நாயே! சாப்பிடு! என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னால், நாய்கூட அந்த இலையின் பக்கம் திரும்பிப் பார்க்காது! மனிதன் ரோஷக்காரனாக இருந்தால் உட்கார்ந்து சாப்பிடுவானா? சாப்பிட மாட்டான்!

என்று பல கூட்டங்களில் நமது நாவலர் அவர்கள் அவருக்கேயுரிய நகைச்சுவைப் பாணியில் மானம், ரோஷம், சூடு, சொரணை இவற்றைப் பற்றி விவரித்துப் பேசும்போது தருகின்ற இந்த அறுசுவை உணவு விளக்கத்தையும் உதாரணத்தையும் கேட்டு மக்கள் வயிறு வலிக்குமளவுக்கு விழுந்து விழுந்து சிரிப்பார்கள். நீ கூட பல கூட்டங்களில் கேட்டிருக்கிறாய் அல்லவா?

இப்போது நாவலரின் அந்தப் பேச்சு எனக்கேன் நினைவுக்கு வந்தது என்று நீ கேட்பாய் - காரணமில்லாமல் நினைவுக்கு வரவில்லை.

நாலைந்து நாட்களாக அனைத்திந்திய அரசியல் அரங்கில் வெளிவருகிற செய்திகளைக் காணுகிற நேரத்தில் நாவலரின் அந்தப் பேச்சு என்னைப் போலவே பலருக்கும் நினைவுக்கு வரத்தான் செய்யும். ஏன்! அவருக்கே கூட அது நினைவுக்கு வந்து - எப்படியாவது அதை மறந்து விடுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார். செய்திகளை மட்டும் தொகுத்துத் தருகிறேன். அதற்குப் பிறகு உனக்கே புரியும், நான் நினைவூட்டியது சரியா அல்லவா என்பது!

கடந்த இருபதாம் தேதி காலை திருப்பூர் சென்றேன் தேர்தல் நிதி கூட்டத்தில் கலந்து கொள்ள! அதிகாலையில் வானொலியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்ட செய்தி ஒலிபரப்பப்பட்டது.

டெல்லியில் இருக்கும் முதலமைச்சருடன் கலந்து பேசித்தான் நாவலர் அந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார்.

தஞ்சைத் தொகுதி இடைத் தேர்தலில் இந்திரா காந்தி போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களை அ.தி.மு.க. ஆதரிக்கும் என்பதுதான் அந்தச் செய்தியின் சுருக்கமாகும்.

அன்று காலையில் வெளிவந்த எல்லா ஏடுகளிலும் தஞ்சைத் தேர்தலில் இந்திரா காந்தி நிற்பது உறுதியாகிவிட்டதுஎன்றும், 19-ஆம் தேதி இரவு அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது என்றும், முடிவு எடுக்கப்படுவதற்கு முன்புஎம்.ஜி.ஆர்., மூப்பனார், ஆர்.வி. சாமிநாதன் ஆகியோர் கூடிப் பேசி தேர்தல் பணிகளை எவ்வாறு நடத்துவதென திட்டம் வகுத்தனர் என்றும் செய்திகள் நர்த்தனமாடின.

அதுமட்டுமா? இருபதாம் தேதி காலையில் இந்திரா காந்தி, எம்.ஜி.ஆர்., ஆர்.வி. சாமிநாதன், மூப்பனார் ஆகியோர் ஒரே விமானத்தில் சென்னைக்கு வருகிறார்கள். பிறகு திருச்சிக்கு விமானத்தில் செல்கிறார்கள். திருச்சியிலிருந்து தஞ்சைக்கு ஊர்வலமாகச் சென்று 21-ஆம் தேதியன்று வேட்பு மனு தாக்கல் செய்கிறார்கள். அன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் இந்திரா காந்தி, எம்.ஜி.ஆர், கலந்து கொள்கிறார்கள். வரவேற்பு வளைவுகள் தயார்! பதாகைகள் பாதை நெடுகிலும்! தோரணங்கள் வானத்தை மறைக்கும் அளவுக்கு! அன்னை இந்திராவுக்கு வாக்களிப்பீர் என்ற வண்ண விளம்பரங்கள் சுவர்களில்!

இத்தனை செய்திகளையும் தாங்கிக் கொண்டுதான் இருபதாம் தேதி காலை ஏடு, மக்களின் கரங்களுக்குக் கிடைத்தது! இந்திரா காங்கிரசார் கண்களுக்கு அந்த ஏடுகள் குளிர்ச்சியூட்டின!

சென்னை விமான நிலையத்தில் இந்திராவை வரவேற்க நாவலர் உட்பட அனைவரும் மாலைகளுடன் சென்றனர். எம்.ஜி.ஆர். வந்தார், மூப்பனார் வந்தார், சாமிநாதன் வந்தார், இந்திரா அம்மையார் வரவில்லை. ஏன்? ஏன்? எதிர்பார்த்தோர் விழிகள் வியப்பால் விரிந்தன!

இந்திரா, விமான டிக்கெட்டைக் கேன்சல் செய்துவிட்டார். அவர், தஞ்சையில் போட்டிபோடப் போவதில்லை. விமான நிலையத்துக்கு மட்டுமல்ல; திருச்சி தஞ்சையில் வரவேற்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் செய்தி பரவியது!

இந்திரா ஏன் போட்டியிடவில்லை? நிருபர்கள் எம்.ஜி.ஆர். அவர்களிடம் கேட்டார்கள். அவர் சொன்ன பதில் எனக்குத் தெரியாது என்பதுதான்!

இந்திரா காங்கிரசின் அதிகாரப்பூர்வமான தலைவர் ஆர்.வி. சாமிநாதன் அவர்களை நிருபர்கள் அணுகி, எடுத்த முடிவு ஏன் திடீரென மாற்றப்பட்டது? என்று கேட்டார்கள்.

எம்.ஜி.ஆரின் மனமாற்றம்தான் காரணம் - அதற்கு மேல் எதுவும் கேட்காதீர்கள் என்று சோகமயமான பதிலைச் சொல்லி விட்டு அவர் புறப்பட்டு விட்டார்.

சாமிநாதன் சொன்ன தகவல் பொறுப்பற்றது என்று எம்.ஜி.ஆர். கருத்துக் கூறினார். யார் பொறுப்பற்றவர்? எம்.ஜி.ஆர். தான் பொறுப்பற்றவர்! அதனால்தான் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டார் என்று சீற்றத்தோடு நிருபர்களிடம் விடையளித்தார் இந்திரா காங்கிரஸ் தலைவர் சாமிநாதன்!

பிரதமர் மொரார்ஜி தேசாயை எம்.ஜி.ஆர். சந்தித்துப் பேசினார். அதற்குப் பிறகுதான் அவர் மாறிவிட்டார் என்று இந்திரா காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து செய்திகள் மிகச் சூடாகப் பறந்தன.

எம்.ஜி.ஆர். மிரட்டப்பட்டாரா? மிரண்டாரா? இந்தக் கேள்விகள் அடுக்கடுக்காக எழுந்து மக்கள் குழம்பிக் கொண்டிருந்தபோது, 22-ஆம் தேதி ஆந்திராவுக்குச் செல்வதற்காக இந்திரா காந்தி சென்னைக்கு வந்தார். அவரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு என்ன நடந்தது எனக் கேள்விகளைப் பொழிந்தனர்.

19-ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு மேல் ஒன்பது மணிக்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை எனக் கூறி எம்.ஜி.ஆர். நடத்திய மர்ம நாடகத்தின் திரையைக் கிழித்துவிட்டு டில்லிக்குத் திரும்பி விட்டார் இந்திரா!

எம்.ஜி.ஆரின் போக்கு பற்றி இந்திரா காங்கிரஸ் வட்டாரம் கொதித்தெழுந்து எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டது.

தஞ்சையில் நாங்கள் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரையே ஆதரிப்போம். நாங்கள் நிற்கமாட்டோம் என்று எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

நாங்கள் இப்போது அ.தி.மு.க.வின் ஆதரவைக் கோரவில்லை. அவர்களாக வலிய வந்து ஆதரவு கொடுப்பதாகச் சொல்கிறார்கள்! என்று இந்திராவும் கேலி செய்தார். இங்குள்ள இந்திரா காங்கிரஸ் தலைவரும் சொன்னார். இன்னமும் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இதற்கிடையே, இந்திரா தஞ்சைத் தொகுதியில் போட்டியிட வேண்டாமென்பதற்கு எம்.ஜி.ஆர். ஒரு திடீர்க் காரணத்தைக் கண்டுபிடித்தார். சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது முடியாத காரியம் என்பது தான் அந்தக் காரணம்!

எம்.ஜி.ஆர். சொன்ன அந்தக் காரணத்தை சொத்தை வாதமென்ற கருத்தில் டெல்லியில் இந்திரா காந்தி பளிச்செனப் பதில் அளித்து விட்டார். முதலமைச்சர் சொல்லும் அந்தக் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஏகடியம் செய்து இந்திரா காந்தி செய்தியாளர்களிடம் கூறிவிட்டார்.

அதற்குப் பிறகும் இங்கேயுள்ள எம்.ஜி.ஆர். கட்சி, நாங்கள் தஞ்சையில் இந்திரா காங்கிரசைத்தான் ஆதரிப்போம் - நாகையில் அவர்கள் எங்களை ஆதரிக்கா விட்டாலும் தஞ்சையில் ஆதரித்தே தீருவோம் என்று ஒற்றைக்காலில் நிற்கிறது!

இன்றுகூட தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசின் அதிகார பூர்வமான தலைவர் ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எம்.ஜி.ஆர். டெல்லியில் செய்த பெரிய மோசடியை விரைவில் தக்க சமயத்தில் வெளியிடுவேன். அப்போது மக்கள் புரிந்து கொள்வார்கள். எம்.ஜி.ஆருடன் பேச்சுவார்த்தைக்கே இனி இடமில்லை. அவரைத் தேர்தல் பிரச்சாரத்துக்கே அழைக்க மாட்டோம். 19-ஆம் தேதி எம்.ஜி.ஆர். டெல்லியில் நடத்திய நாடகத்திற்குப் பிறகு அ.தி.மு.க.வுடன் எந்த உறவும் கிடையாது. அவர்களாகவே வந்து ஆதரித்தால் அது அவர்கள் விருப்பம்.

இது இன்றைய ஏடுகளில் வெளி வந்துள்ள செய்தி.

அதுமட்டுமல்ல, நாகைத் தொகுதி வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் மூப்பனார் கலந்து கொள்வார், எம்.ஜி.ஆரும் கலந்து கொள்வார் என்று விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அ.தி.மு.க. வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு மூப்பனார் வரவில்லை. எம்.ஜி.ஆர். மட்டுமே கலந்து கொண்டார் என்று இன்று தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வளவுக்கும் பிறகு, நாங்கள் தஞ்சையில் இந்திரா காங்கிரசை ஆதரித்தே தீருவோம் என்று எம்.ஜி.ஆர். கட்சியின் தலைமை உரத்த குரலில் கூறும்போது - எனக்கு நாவலர் சொன்ன அந்த அறுசுவை விருந்து உதாரணம் நினைவுக்கு வந்தது தவறா? நீயே சொல் என் உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(26-05-1979)

660. இதோ ஒரு முரண்பாட்டு முழுக்கம்!

உடன்பிறப்பே,

மன்னார்குடியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார். முதல்வர் எம்.ஜி.ஆர். பேசுகிறார் என்றால் அந்தப் பேச்சுக்கு முரண்பாட்டு முழுக்கம் என்றுதான் தலைப்பு போட வேண்டும் என்பதை அரசியல் தெளிவு படைத்த அனைவரும் உணருவார்கள்.

இவர்தான் என்னை முதலமைச்சராகவே ஆக்கினாராம்! மிகப் பழைய பொய்யை மீண்டும் தேர்தல் நேரத்தில் அள்ளி வீசுகிறார். அண்ணா அவர்கள் மறைந்த பிறகு மிகப் பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வர் பொறுப்புக்கு நான்தான் வர வேண்டுமென்று என்னை வலியுறுத்தி என் வீட்டையே முற்றுகையிட்டுக் கொண்டார்கள். அந்தப் பெரும்பான்மையோரின் கருத்தோடு தன் கருத்தையும் இணைத்துக் கொண்டவர்தான் எம்.ஜி.ஆரே தவிர, இவர் தயவுக்கு யாரும் தவம் கிடக்கவில்லையென்பதை அந்தப் பெரும்பான்மைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

இவர் என்னமோ தன்னைப் பெருந்தலைவர் காமராசர் என கற்பனை செய்து கொண்டு அவர் லால் பகதூரைப் பிரதமராக்கியது போலவும் என்னை முதலமைச்சராக்கியதாகப் பெருமை பேசிக் கொள்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே - அல்லது பெரும்பான்மையினர் - இவரது பக்கம் இருந்திருந்தால் 1972-இல் கழகத்திலிருந்து இவர் வெளியேற்றப்பட்ட பிறகு பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் இவர் பின்னால் போகவில்லையே ஏன்? அந்த விவகாரங்கள் பற்றி அவர் மீண்டும் ஏதாவது பதில் அளிப்பாரேயானால் 1969லும் 1971லும் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பை ஒளிவுமறைவு இன்றி - இன்று அவருடன் இருக்கும் முக்கியமான சிலருடைய சொற்பொழிவுகளில் இருந்தும் - மற்றும் பல ஆதாரங்களை

முன்வைத்தும் நான் உரிய நேரத்தில் விளக்கமளித்திடத் தயாராகவே இருக்கிறேன்.

நிற்க, மன்னார்குடிப் பேச்சில் வன்முறைகளைப் பற்றிப் பெரும் உபதேசமே செய்திருக்கிறார்.

நான் முதலையாம்! இந்திரா காந்தியை விழுங்கி விடத் தயாராக இருந்தேனாம்! இந்தப் பாசி பிடித்த படிதான் இந்திரா காந்தியைப் பாதுகாத்ததாம்! திருப்பூரிலும் - திருச்சியிலும் நான் சொன்ன உவமைகளைத் திரித்துக் கூறி ஏதோ திக்குமுக்காடியிருக்கிறார்.

தேர்தல் குளத்தில் வெற்றியென்னும் சேல்கெண்டையைப் பிடிக்க இறங்குகிறவன், தோல்வியென்னும் முதலைக்கு அஞ்சமாட்டான். ஆனால் குளத்தில் இறங்கும்போதே படிக்கட்டுக்கள் பாசி பிடித்து வழுக்கி விடத் தக்க நிலையில் இருந்தால், குளத்தில் இறங்குகிறவன் எச்சரிக்கையாகத்தான் இருப்பான். அப்படித்தான் இந்திரா அம்மையார் அவர்கள் எம்.ஜி.ஆர். எனும் பாசி பிடித்த படியில் கால் வைக்கப் பயந்து விட்டார்களே தவிர - எனக்குப் பயந்துவிட்டார்கள் என்று நான் கூறமாட்டேன் என்ற கருத்துப்பட திருப்பூரிலும் திருச்சியிலும் பேசினேன். அதைப் போய் மாண்புமிகு எம்.ஜி.ஆர். மன்னார்குடியில் திரிக்கிறார்! கருணாநிதி தன்னையொரு முதலை என்பதை ஒப்புக்கொண்டு விட்டார். அந்த முதலை இந்திராவை விழுங்கியிருக்கும். நான்தான் காப்பாற்றினேன் என்கிறார். உடன்பிறப்பே, இதிலிருந்து எம்.ஜி.ஆர். ஒரு உண்மையை ஒப்புக்கொண்டு விட்டார் என்று தெரிகிறது!

எதையோ ஒன்றைச் சொல்லி தேர்தலில் போட்டியிடாத நிலையை இந்திராவுக்கு ஏற்படுத்தி விட்டார்! அதை இப்போது ஒப்புக்கொண்டு விட்டார்.

அதைத்தான் 19-ஆம் தேதி இரவு டெல்லியில் எம்.ஜி.ஆர். நடத்திய நாடகம் என்று ஆர்.வி. சாமிநாதன் விமர்சனம் செய்துள்ளார்.

இரவு 7.30 மணிக்கு மேல் 9 மணிக்குள் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட மனமாற்றத்துக்கு காரணம் புரியவில்லை என்று இந்திரா காந்தி வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

நாடாளுமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்டீபன் அவர்களும் டெல்லியில் எம்.ஜி.ஆர். எப்படித் திடீர் என்று மாறினார் என்ற மர்மத்தை நேற்று சென்னைக்கு வந்தபோது நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

மிரட்டப்படாமலே மிரண்டு போய்விட்ட கதையை மார்க்சிஸ்ட் தலைவர் இராமமூர்த்தி எம்.பி. அவர்கள் விளக்கமாகக் கூறியிருக்கிறார்.

19-ஆம் தேதி இரவு, இந்திரா காங்கிரசாரை ஏமாற்றத்துக்கு ஆளாக்கி விட்டு 20-ஆம் தேதி காலையில், அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஜனதா கட்சியின் ஆதரவைக் கேட்ட வேடிக்கையை மத்திய அமைச்சர் பா.ரா. அவர்களும் சென்னை நிருபர்களிடம் வெளியிட்டிருக்கிறார்.

இவ்வளவு திருக்கூத்துகளும் நடத்தி விட்டு, இப்போது எம்.ஜி.ஆர். மன்னைக்குச் சென்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார் இந்திராவுக்காக! சபாஷ்! பிரமாதமான நடிப்பு!

மதமதப்பு வேண்டாம்! உயிர்த் தியாகம் செய்யத் தயாராகுங்கள் என்கிறார் கருணாநிதி! நடப்பதோ தேர்தல்! இதில் என்ன உயிர்ப் பலிக்குத் தேவை? இது என்ன போர்க்களமா?

இப்படியொரு கேள்வியை மன்னைக் கூட்டத்தில் எழுப்பி, பெருமுழக்கமிட்டிருக்கிறார் எம்.ஜி.ஆர்.!

இந்த முழக்கம் அவரது கட்சி ஏடுகளில் மட்டுமல்ல, இன்று ஆளுங்கட்சியை ஆதரிப்பதற்காகவே எதிர்க்கட்சியினரின் செய்திகளைத் திரித்துப் போடும் கட்டாயத்திற்கு உட்பட்டுள்ள தினத்தந்தி ஏட்டிலேயும் வெளிவந்திருக்கிறது.

அதே ஏடுகளில் எம்.ஜி.ஆர். மன்னார்குடியில் பேசிய தொடர்ச்சியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாகையில் சத்தியமும் உண்மையும் வெல்லும், உயிரைக் கொடுத்தாகிலும் தஞ்சைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வோம்.

இதுவும் அதே கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசியதுதான்!

நடப்பது தேர்தல்! இதில் என்ன உயிர்ப்பலிக்குத் தேவை? தேர்தல் களம் என்ன போர்க்களமா? என்று அழுத்தம்

திருத்தமாகக் கேட்ட எம்.ஜி.ஆர்., அடுத்த சில நிமிடங்களிலேயே, உயிரைக் கொடுத்தாகிலும் தஞ்சையில் இந்திரா காங்கிரசை வெற்றியடையச் செய்வோம் என்று பேசியபோது மன்னார்குடியில் அரசியல் விழிப்புள்ள வாக்காளப் பெருமக்கள் விலாநோகச் சிரித்திருப்பார்கள்.

பேச்சின் இறுதியில் ஒரு முக்கியமான உண்மையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்!

நான் யார்? நான் எப்படிப்பட்டவன் என்பதை நாடு புரிந்து கொண்டுள்ளது.

இந்த முத்தாய்ப்புடன் அவர் மன்னார்குடி முழக்கத்தை முடித்திருக்கிறார்.

ஆமாம்! உண்மைதான்! இவர் யார்? இவர் எப்படிப்பட்டவர்? என்பதை ஒரு வார காலமாக நாடு, மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது!

அதிலும் இந்திரா காங்கிரசார் கருத்துப்படி இந்திராவே இந்தியா! இந்தியாவே இந்திரா!

இந்திரா அம்மையார் இவரைப் புரிந்து கொண்டாலே இந்தியாவே புரிந்து கொண்டதைப் போலத்தானே!

அன்புள்ள,

மு. க.

(27-05-1979)

661. உதவாதினி ஒரு தாமதம்!

உடன்பிறப்பே,

தஞ்சைத் தேர்தல் களத்திலிருந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

நான்கு நாட்களாக பல்வேறு பகுதிகளிலும் வாக்காளப் பெருமக்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். தொடர்ந்து அவர்தம் மத்தியிலேயிருந்து என் தொண்டினை ஆற்றிக் கொண்டிருக்கிறேன்.

நாகையும், தஞ்சையும் நமக்கேதான் என்ற செய்தி செவியில் செந்தேனாகப் பாய்கிறது.

தஞ்சையில் நமது கழக வேட்பாளர் அன்பிலும், நாகையில் நமது தோழமைக் கட்சியின் வேட்பாளர் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தோழர் முருகையன் அவர்களும் ஊர் ஊராகச் சென்று வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளனர்.

நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டும் செய்திகள் நாள்தோறும் குவிந்தவாறு இருக்கின்றன. வெற்றி நிச்சயம்! வெற்றிக்குத் தடையாக எந்த சக்தியும் இருக்க முடியாது! இப்படிப்பட்ட பெருமிதமான முழக்கங்களை என்னால் எல்லாத் திக்குகளிலும் கேட்க முடிகிறது.

உண்மைதான்! இரண்டு ஆண்டு கால எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்களையும், அலங்கோலங்களையும் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டுள்ள வாக்காளப் பெருமக்கள் - இருபது மாதம் இந்தியாவின் இருண்ட காலத்தைப் பற்றிப் புரிந்து கொண்டுள்ள வாக்காளப் பெருமக்கள் - இந்தியாவின் மிசா ஆட்சி நடத்திய கட்சிக்கும் - இன்று தமிழகத்தில் மினி மிசா ஆட்சி நடத்தும் கட்சிக்கும் பாடம் கற்பித்தே தீரவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு ஜனநாயக அணியின் பக்கம் நிற்கிறார்கள்.

இதை எவ்வாறு சமாளிப்பது என்று அ.தி.மு.க. கூடாரம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டு அதற்கான திட்டங்களைத் தீட்ட முற்பட்டுள்ளது.

தஞ்சை, நாகையில் உள்ள பன்னிரெண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் பன்னிரெண்டு அமைச்சர்கள் தலைமை வகித்து தேர்தல் களத்தில் இறங்குவார்களாம்! பணம், தண்ணீர் போல செலவழிக்கப்படுமாம்! பயமுறுத்தும் படைகளும் ஆங்காங்கு அணிவகுக்குமாம்! இரண்டாண்டு காலமாகக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டவர்கள் இப்போது புதுப் புது வாக்குறுதிகளை வாரி வழங்கு வார்களாம்!

உடன்பிறப்பே! இரு தொகுதிகளிலும் நமது அணிக்கு வெற்றி நிச்சயம்தான் எனினும் - ஆளுங்கட்சியினரின் மிருகபலங்கொண்ட மோதுதலைத் தாக்குப்பிடித்துத்தானே அந்த வெற்றி முகட்டை எட்ட வேண்டும்.

நிலவை ஒரு நிலைக்கண்ணாடியிலே காட்டி, அதை அடைந்து விட்ட மகிழ்ச்சியிலே குழந்தையைக் குதிக்க வைக்கலாம். ஆனால் அந்த நிலவை அடைய, அதன்மீது கால் வைக்க அமெரிக்க, ரஷிய விஞ்ஞானிகளும், அவர்கட்குத் துணைநின்ற தொழிலாளர் வர்க்கத்தினரும் எவ்வளவு விழிப்போடு வேலை பார்க்க வேண்டியிருந்தது! அயராது உழைத்ததால் அன்றோ மக்கள் ஆச்சரியப்படும் விதத்தில் அம்புலியில் மனிதன் சென்று நடமாடி, திரும்பி வர முடிந்தது! அதற்கென அவர்கள் உறங்காத இரவுகள் எத்தனையோ? உணவு குறித்துக் கவலைப்படாத நாட்கள் எத்தனையோ?

என் அன்பு உடன்பிறப்பே! அதை ஒருகணம் நினைத்துக் கொள்! அதோ தெரிகிறது நிலவு! இதோ பார் கண்ணாடியில்! என்று காட்டுவதைப்போல தேர்தல் வெற்றியைக் கருதி விடாதே!

கொடிய முள்கூட்டம் கைகளிலும் கால்களிலும் குத்துவதையும் பொருட்படுத்தாமல் அழகிய மலரைப் பறிக்கக் குமரியின் கரங்கள் தாவுகின்றன!

குத்துமே முள்! என்று குமரிப்பெண் தயங்கினால் - மலர் கிடைக்காது! கூந்தலும் மணம் பெறாது!

மலரைக்கூட விலைக்கு வாங்கிவிடலாம்! மாற்றாரை எதிர்த்துத் தேர்தல் வெற்றியை அவ்வளவு எளிதில் பெற்றுவிட முடியுமா? அதுவும் அந்த வெற்றியை எந்த விலை கொடுத்துப் பெறவும் வாய்ப்பு வசதிகள் படைத்த கட்சிகளிடமன்றோ நாம் இன்றைக்குப் போர் நடத்துகிறோம்! சர்வாதிகாரத்தின் வாயிலிருந்து ஜனநாயகத்தை மீட்கும் போரையன்றோ தொடர்ந்து நடத்துகிறோம்.

புளிய மரத்தின் கிளையைப் பிடித்து ஒருவன் உலுக்குகிறான்! புளியம்பழங்கள் கீழே கொட்டுகின்றன! அதைப் போலவே தென்னை மரத்தை அசைப்பதின் மூலம் இளநீர்களைக் கீழே விழ வைக்க முடியுமா? முடியாதல்லவா? அதற்குத் தென்னையில் ஏற வேண்டுமல்லவா? நான் கீழே நின்று கொண்டிருப்பேன் - என் தாகத்தை உணர்ந்து இளநீர் தானாகவே என் காலடியில் வந்து விழும் என்று காத்திருப்பவன் - ஏமாந்துதானே போக வேண்டும்!

இரு தொகுதிகளிலும் இளநீர்க் குலைகள் ஆம்! வெற்றியின் அறிகுறிகள் குலுங்கிக் கொண்டிருக்கின்றன! அண்ணாந்து பார்த்து ஆனந்தப் பரவசமடைகிறேன்!

அதோ பார் அண்ணே! வெற்றியின் சின்னம் குலை குலையாகக் காட்சியளிக்கிறது! பிறகேன் உனக்குச் சந்தேகம்? என்று நீ என்னைக் கேட்கிறாய்; புரிகிறது!

ஆனாலும் உடன்பிறப்பே! நீ லாவகமாக மரத்தில் ஏறி இளநீர் கீழே விழுந்து தெறித்துப் போகாமல் கையுடன் ஒரு குலையைக் கொண்டு வந்தால்தானே - கோடையின் வெப்பந்தணிய அவற்றை அருந்தி மகிழ முடியும்!

அதனால்தான் சொல்லுகிறேன், உன் உழைப்பையும் தோழமைக் கட்சிகளின் ஆற்றல் மிக்க செயல் வீரர்களின் உழைப்பையும் நான் கண்டு மகிழ்ச்சியுறும் அதே நேரத்தில் - இன்னும் கொஞ்சம் கவனம் தேவை என்று!

பூமியைக் குடைந்தேன்! சுரங்கம் அமைத்தேன்! பாறையுடன் கலந்திருந்த தங்கத்தைப் பக்குவமாகப் பிரித்தெடுத்தேன்! ஒளி விடும் அணி மணி செய்தேன்! இப்படியொருவன், தன் திறமையை விளக்கிடும்போது பூரிப்புதான் ஏற்படுகிறது! ஆனால் செய்த அணி மணிகளைத் திருடன் ஒருவன் எப்படியோ கவர்ந்து சென்று

விட்டான் என அந்தத் திறமைசாலி பெருமூச்சு விடும்போது - பூத்து விரிந்த பூரிப்பு வாடிப் போய் உதிர்ந்து விடுகிறதல்லவா?

அதுபோலத்தான் நாகை, தஞ்சை தொகுதிகளில் வெற்றியெனும் பசும்பொன் அணியை உருவாக்கினோம். திடீரெனப் பறித்துக் கொண்டோடி விட்டான் ஒரு பலே திருடன் - என்று தேர்தல் களத்தின் முடிவுரை அமைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

மிகப் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்!

தேர்தல் பணிகள் எவ்வாறு அமைந்திட வேண்டுமென நான் உனக்குத் திட்டம் வகுத்துத் தர வேண்டுமா? அதில் உன் திறமை நாடறிந்த ஒன்று!

தேர்தல் பணியாற்ற தி.மு.க. தொண்டர்கள் அல்வாவும் பழரசமும் கேட்கிறார்களாம் என்று அமைச்சர் ஒருவர் பேசியிருக்கிறார் பார்த்தாயா?

அவர் நிலைக்கு அந்தப் பேச்சு! என் செய்வார் பாவம்! அவரை ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற வைக்க 1957 முதல் 1971 வரையில் பசியை மறந்து நீ பட்டபாட்டினை அவர் மறந்து விடுவது இயற்கைதானே! உன் வியர்வையால் விளைந்த மேடைகளில் ஏறி வார்த்தைகளால் விளையாடி விட்டுப் போன சுகவாசிக்கு - என் அருமை உடன்பிறப்பே! நீ அல்வா கேட்கிறாய் தேர்தல் பணியாற்ற - என்று பேசத் தோன்றுகிறது!

உன் உழைப்பு, எத்தனையோ வெற்றிகளை ஈட்டித் தந்திருக்கிறது! உன் உறுதி இந்த கழகத்தின் கட்டுக்கோப்பைச் சிதறவிடாமல் பாதுகாத்திருக்கிறது! நெருக்கடி காலத்து நெருப்புக் குழம்பிலும் கழகமெனும் மலரை வதங்க விடாமல் காப்பாற்றிய பெருமை உனக்கு உண்டு! வேல்கள் பல என் விழிகளிலும், விலாப்புறங்களிலும், இதயத்திலும் துளைத்து என்னைச் சித்திரவதை செய்த நேரத்திலும் - துரோக சக்திகள் என் முதுகில் கட்டாரிகளைப் பாய்ச்சிய நேரத்திலும் - என் உடன்பிறப்பே! உன் திருமுகத்தைப் பார்த்துத் தானே அத்தனை கொடுமைகளையும் நான் தாங்கிக் கொண்டேன்!

எனவே நீயிருக்க எனக்கு என்ன பயம்?

இருந்தாலும் கூற வேண்டியவற்றைக் கூற வேண்டிய சமயத்தில் குறிப்பிடாமல் இருந்து விடக்கூடாதல்லவா?

இந்தக் கடிதம் உன் கைக்கு வரும் நேரம் - நீ வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்துக் கொண்டிருப்பாய்!

உன் மணிக்கரங்கள், கழகத்தின் தோரணங்களைக் கட்டிக் கொண்டிருக்கும்!

தஞ்சையில் உதயசூரியன் சின்னங்களையும் - நாகையில் கதிர் அரிவாள் சின்னங்களையும் - உழைத்து உழைத்துத் தழும்பேறிய உன் கைகள் வரைந்து கொண்டிருக்கும்!

உடன்பிறப்பே! தொடர்ந்து பணியாற்று! தொய்வில்லாமல் பணியாற்று! வெற்றிக் கனிகளைக்கொண்டு வா! அந்தக் கரங்களை எடுத்து என் கண்ணில் ஒத்திக் கொண்டு உனக்கு வாழ்த்துப் பாட நான் காத்துக் கொண்டிருக்கிறேன்!

நீ கூலிப்பட்டாளமல்ல! கொள்கைக் குன்றம்! இலட்சியத்தின் வடிவம்! அயராமல் மட்டும் உழைப்பாயானால் நீ அடியெடுத்து வைக்கின்ற இடமெல்லாம் வெற்றிக் கொடிதான் பறக்கும்!

அந்தக் கொடியினைப் பறக்க விட என் குலக்கொழுந்தே! உதவாதினி ஒரு தாமதம் என உடனே புறப்படு பணியாற்றிட!

அன்புள்ள,

மு. க.

(31-05-1979)

குறிப்பு : இந்தக் கடிதத்தை, தஞ்சைத் தொகுதியிலேயுள்ள கழக அமைப்புகளும், கழகச் சார்பு மன்றங்களும் துண்டு அறிக்கையாக அச்சிட்டு வெளியிடுமாறு வேண்டப்படுகிறது.

662. அந்த வாழ்த்து போதும் எனக்கு!

உடன்பிறப்பே,

தஞ்சைத் தரணியில் எங்கேயோ ஒரு கோடியில் - இன்றுள்ள நாகைத் தொகுதியில் அடங்கிய திருக்குவளை கிராமத்தில் - கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் காவிரி ஒப்பந்தம் ஏற்பட்ட 1924-ஆம் ஆண்டு பிறந்து இன்றளவும் அந்த ஒப்பந்தம் நிலை பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிற இயக்கத்தில் இணைந்துள்ள நான் ஏறத்தாழ நாற்பதாண்டு காலப் பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரன்.

திருவாரூர் பள்ளி மாணவனாக இருந்தபோதே பதினான்காம் வயதிலேயே மொழி காக்கும் போரில் ஈடுபட்டு அரசியலில் அடியெடுத்து வைத்து விட்டேன்.

இன்று என்னைக் கொள்கை ரீதியாகவும் - அமைப்பு முறையோடும் - வளர்ந்துள்ள ஒரு இலட்சியக் கழகத்தின் தலைவனாக ஏற்றி வைத்து நீயும் மற்ற உடன்பிறப்புக்களும் ஜனநாயக ரீதியில் எடுக்கின்ற முடிவுகளைச் செயல்படுத்த அன்புக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் கொள்கை விளக்கத் துண்டு அறிக்கைகளை மக்களிடம் விநியோகிக்கும் தொண்டனாக - கூட்ட விளம்பரங்களைச் சுவரில் ஒட்டியும், ஒலிபெருக்கிகள் மூலமாக வீதிவீதியாக முழங்கியும் பணியாற்றிடும் ஊழியனாக - இயக்கத் தலைவர்களுக்கு மேடைபோட்டுக் கொடுத்து அவர்தம் விளக்கங்களை மக்களறியச் செய்த செயலாளனாக - எதிரிகளின் கல் வீச்சு, கத்தி வீச்சு, அடிதடிகளை ஏற்று உடலில் தழும்புகளைப் பெற்றும் - சிறைச்சாலைக் கூண்டுக்குள் அடைபட்டும் - இயக்கத்தின் படைவீரர்கள் பட்டியலில் இடம் பெற்ற ஒரு ஆளாக - பொது வாழ்வுப் படிகளில் அடியெடுத்து வைத்துப் பெரியாரின் அன்பு அரவணைப்பிலும் பேரறிஞர் அண்ணாவின் பாசப் பிணைப்பிலும் வடிவமும் உருவமும் பெற்று - உடன்பிறப்பே! உன் உறுதுணையால் தொடர்ந்து உழைக்கும் நெஞ்ச உறுதியும்

பெற்றுள்ள நான், வருகிற ஜூன் மூன்றாம் நாளுடன் அகவை ஐம்பத்தி ஐந்தைக் கடக்கிறேன்.

ஓடிமறைந்த கடந்த காலத்து நினைவுகள் என் உள்ளத்தில் பசுமையாகத்தான் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. என்னுடன் உறவாடிய சிலர், நட்புக் கொண்டிருந்த சிலர், இன்று வெவ்வேறு இடங்களில் இருப்பினும் - இருக்கும் இடத்திற்கு ஏற்றவாறு கடந்த காலத்தை மறந்துவிட்டு என் மீது கணைகள் வீசுகிற கட்டாயத்திற்கு ஆளானாலும் கூட அவர்களின் உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் அவ்வப்போது மணம் வீசிக் கொண்டு தானிருக்கிறது.

நெருப்புமிழும் வாசகங்களால் அவர்கள் என்னைத் தாக்கியபோதிலும் அவர்தம் நெஞ்சத்தில் எனக்கென இருக்கும் இடத்தை எண்ணிப் பார்க்கிறேன். அதனால் அந்தத் தாக்குதல் என்னைத் தகிக்கவில்லை. பிறந்தநாள் வரும் இந்தக் குறிப்பிட்ட நாளில் மட்டுமல்ல; என் பிறந்த நாளின்போது கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார்களே அந்த நாட்களிலே கூட எரிமலையாகவில்லை என் இதயம்! என் செய்வது? அவர்கள் நிலை அவ்வாறு! என்றுதான் எண்ணிக் கொண்டேன்.

உடன்பிறப்பே! பிறந்தநாள் செய்தி உனக்கென எழுதவந்து சிந்தனைகள் வேறெங்கோ சிறகடித்துப் பறக்கத் தொடங்கிவிட்டன மன்னித்துக்கொள்!

என் பிறந்த நாள் ஏறத்தாழ பத்தாண்டுகளாக ஏதோ ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது!

கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கும் திட்டம், விதவைகள் உதவித் திட்டம், திக்கற்ற சிறுவர்களுக்கான கருணை இல்லங்கள் திட்டம் எனப் பல்வேறு சமுதாயநலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் பரவலாக அமைந்திட ஒவ்வொரு ஆண்டும் பிறந்தநாள் விழா பயன்படுத்தப்பட்டிருக்கிறது! அதற்கெனக் குவிந்த நிதிகளால் அந்தத் திட்டங்கள் சிறப்புறச் செய்யப்பட்டன!

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு - என் பிறந்த நாளில் வழக்கு நிதியைக் குவித்திருக்கிறாய்! கழக வளர்ச்சி நிதியை வழங்கியிருக்கிறாய்!

இதோ இந்த ஆண்டும் என் பிறந்த நாளில் உன் கடமை, கழகத்திற்கு நிதி தருவதுதான்!

அதுவும் தேர்தல் நிதி எவ்வளவு அவசியம் என்பதை நீ உணராமல் இருக்க முடியாது! தொடர்ந்து நாம் சந்திக்க இருக்கிற தேர்தல்களுக்கெல்லாம் நீதானே நிதியினை அள்ளித் தர வேண்டும்!

கழகத்திற்கென நான் கேட்டு நீ இல்லையென்று கை விரித்தது உண்டா?

தஞ்சை, நாகை தொகுதியில் பணியாற்றுகிற என் உடன்பிறப்புக்களுக்கு என்மீது கொஞ்சம் கோபம்! நேரிலும் பார்த்துச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன் - அறிக்கை வாயிலாகவும் தெரிவித்திருக்கின்றேன். அவர்கள் யாரும் பிறந்த நாள் வாழ்த்துக் கூற சென்னைக்கு வரக்கூடாதென்று!

மற்ற வெளி மாவட்டங்களில் உள்ள உடன்பிறப்புக்கள் கூட, வழிச் செலவு செய்து கொண்டு சென்னைக்கு வருகிற பணத்தை மிச்சப்படுத்தி தேர்தல் நிதிக்கெனப் பண விடைத்தாள் மூலம் தலைமைக் கழக முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்பதே என் அன்பு வேண்டுகோள்!

கலைஞர் அணிக்குக் கஜானாவைப் பற்றிக் கவலைப்படக் காரணமில்லை என்று நண்பர் நாஞ்சிலார் - கூடக் கூறியிருக்கிறார். ஆமாம்! உண்மைதான்! கழக உடன்பிறப்பே! நீயே இந்த இயக்கத்தின் கஜானாதான்! அதைத்தான் அவர் சொல்லியிருப்பார்!

பஸ் முதலாளிகள், வட்டிக் கடை வேந்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள், தேங்காய் வியாபாரிகள்தான் இன்றைய ஆளுங்கட்சியின் கஜானாக்கள்! நிதியமைச்சரின் மனசாட்சிக்குத் தெரிந்த உண்மைதான் இது!

இந்தக் கடிதம் உனக்கு எழுதிக் கொண்டிருக்கும்போதுகூட கோவை மேட்டுப்பாளையத்திலிருந்து ராமுகுட்டி என்ற ஒரு நண்பர் எனக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்துள்ளார்! என்ன தெரியுமா? ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐம்பது வேன்கள் தஞ்சை, நாகை தொகுதிகளுக்கு அனுப்ப வேண்டுமென போக்குவரத்துத்துறை அமைச்சரின் கட்டளைக்கேற்ப, ஆங்காங்குள்ள டிப்டி டிரான்ஸ்போர்ட் கமிஷனர்கள் - ஆர்.டி.ஓ.க்களுக்கு (R.T.O.) அவசரத் தாக்கீதுகளை தொலைபேசி மூலம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்களாம்!

மத்திய புலனாய்வுத்துறையினர் ஆராய வேண்டிய விவகாரம் இது!

நமது நிதி அமைச்சரின் கவனத்திற்கே கூட வராமல் இவை யெல்லாம் நடைபெறக் கூடும்!

எனவேதான் அவர் இந்தியாவே தஞ்சைக்கு வரக் கூடும் கஜானாவைப் பற்றிக் கவலையில்லை என்று கூறியிருக்கிறார்!

இந்தியா, முதன் முதலாகத் தமிழ்நாட்டுக்கு வந்தது 1977 நாடாளுமன்றத் தேர்தலின்போதுதான்! அதைப் பெற்று தேர்தல் நடத்திய கட்சியாயிற்றே நிதியமைச்சரின் கட்சி! அந்த நினைவில் தன்னைப் போலவே பிறரையும் கருதுகிறார் போலும்!

அப்போதுதானே ஜார்ஜ் டவுன் வங்கியொன்றில் இருபது லட்ச ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் - சில்லறை நோட்டுக்களாக மாற்றப்பட்டன. அதற்கான உத்திரவு டெல்லியிலே இருந்து வந்தது.

சட்டப் பேரவையிலேயே நான் இதைச் சொன்னேன். முதல்வரோ அல்லது நிதியமைச்சரோ பதிலேதும் கூறவில்லையே!

இந்தக் கூத்தெல்லாம் நண்பர் நாஞ்சிலார் அவர்களின் கவனத்திற்கு வராமலே நடைபெற்றவை! அவர் என்ன செய்வார் பாவம்!

எனவே உடன்பிறப்பே! கழகத்தின் கஜானா நீயே தான்! நீ தரும் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்தான் நமக்கு இலட்சங்கள்! ஆயிரங்கள்! கோடிகள்! உழைப்பெனும் செல்வம் நிறைந்துள்ள கஜானாவன்றோ நீ!

அந்த உழைப்பைத்தான் ஓய்வின்றித் தரவேண்டும் தஞ்சையிலும் நாகையிலும் என்று, சென்ற கடிதத்தில் நான் உன்னை வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

நாகை, தஞ்சை தொகுதிகளில் வெற்றியெனும் பசும் பொன் அணியை உருவாக்கினோம் - திடீரெனப் பறித்துக் கொண்டு ஓடி விட்டான் ஒரு பலே திருடன் என்று முடிவுரை அமையக் கூடாது! பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

என்று அந்தக் கடிதத்தில் எச்சரித்து எழுதியிருந்தேன்.

நண்பர் நாஞ்சிலார் அவர்களுக்கு அந்த உதாரணம் பிடிக்கவில்லை. வேறு ஒரு உதாரணம் தந்துள்ளார்.

காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் தட்டிக் கொண்டு சென்று விட்டான் என்பது போல் உதாரணம் இருக்கலாம் என்று விரும்புகிறார்!

எதை எண்ணிக்கொண்டு அப்படிச் சொல்கிறாரோ; எனக்குத் தெரியாது!

நான் பொன் என்று குறிப்பிட்டேன்! அவர் பெண் என்று குறிப்பிடலாம் என்கிறார்!

எப்படியோ இரண்டுமே எச்சரிப்பதற்குப் பயன்படும் உதாரணங்கள்தான்!

உடன்பிறப்பே! நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டு மென்பதற்குத்தான் என் பிறந்த நாளன்று தஞ்சை, நாகைத் தொகுதிகளின் பணிகளை விட்டுவிட்டுச் சென்னைக்கு வராதே! என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்!

தஞ்சை வேட்பாளர் அன்பிலே கூட நான் மட்டும் வருகிறேனே என்று குழைந்தார்! இப்போது சென்னைக்கு வரவேண்டாம்; டெல்லிக்குப் போ! என்று கூறிவிட்டு வந்திருக்கிறேன்.

மன்னை, நான் எப்படி வராமல் இருக்க முடியும்? என்று கேட்டார்!

நீங்களும் - தலைமைக் கழக செயலாளர்களும் - மற்றுமுள்ள தஞ்சை நாகைத் தொகுதி கழக முன்னணித் தளபதிகளும் - அந்தத் தொகுதிகளில் தொடங்கியுள்ள தேர்தல் பணியை ஜூன் மூன்றாம் நாளன்றும் அங்கிருந்து தொடர்ந்து நடத்துவதைத்தான் என் பிறந்தநாள் வாழ்த்தாகக் கருதுகிறேன் என்று கூறியுள்ளேன்.

ஆகவே, உடன்பிறப்பே! உன் அயராத உழைப்பே எனக்களிக்கும் அன்பான பிறந்த நாள் வாழ்த்து! அந்த வாழ்த்து போதும் எனக்கு! நீ இருக்குமிடத்திலிருந்தே அந்த வாழ்த்தினை வழங்கிடுக!

அன்புள்ள,

மு. க.

(02-06-1979)

663. இன்னமும் நடிக்கிறார் அவர்!

உடன்பிறப்பே,

திருச்சியில் நடனவிழா ஒன்றில் பேசிய முதலமைச்சர் சிந்தியுள்ள அற்புதக் கருத்துக்கள் - அறைகூவல்கள் - அனைத்தையும் படித்துப் பார்த்தேன். அந்த நடன விழாவில் ஏழு லட்ச ரூபாய் நிதியாகச் சேர்ந்ததாம்!

அந்த நிதி எப்படிச் சேர்க்கப்பட்டது? யார்? யார் - இருபதாயிரம் - முப்பதாயிரம் -ஐம்பதாயிரம் - என்று கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள்? அதற்காக ஒரு அமைச்சர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன என்பதையெல்லாம் நாடறியும்! ஆனால் முதலமைச்சர் நடனவிழாவில் என்ன பேசியிருக்கிறார் தெரியுமா?

எங்களிடம் பணம் இருந்தால் ஏன் இப்படி மடிப்பிச்சை எடுக்கிறோம்.

உண்மைகளைத் தவிர வேறு எதுவுமே சொல்ல மாட்டேன் என்று தன்னைப் பற்றி அடிக்கடி கூறிக்கொள்கிற முதலமைச்சர், இப்படிப்பட்ட ஒரு மகா பெரிய உண்மையை திருச்சி நடன விழாவில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அந்த ஏழு லட்ச ரூபாயும் மடிப்பிச்சை எடுத்துத்தான் சேர்த்தது என்று அவர் அண்ணாவின் மீதும் அவரது சத்தியத் தாயின் மீதும்கூட ஆணையிட்டுக் கூறுவார்!

அந்த ஏழு லட்சத்தில் பஸ் முதலாளிகளை நெருக்கிப் பிடித்து வாங்கிய பணமே இல்லை! பெரிய வணிகர்களை சுற்றுலா மாளிகைகளுக்கு வரச் சொல்லிக் கட்டாயப்படுத்தி வசூலித்த பணமே கிடையாது! எல்லாமே மடிப்பிச்சை பணந்தானாம்! நாட்டு மக்களை நம்பச் சொல்கிறார்!

அதுமட்டுமா? அதே நடன நிகழ்ச்சியில் இன்னொன்றும் கூறியிருக்கிறார். அரிஜனங்களுக்கு தி.மு.க. ஆட்சியில்

இலவசமாகக் கட்டித் தரப்பட்ட சுமார் நாற்பதாயிரம் வீடுகளும் அட்டை வீடுகளாம்! தொட்டால் இடிந்து விழுகின்றனவாம்! வீடுகளை விட்டு மக்கள் வெளியே வந்து சமைத்துச் சாப்பிட்டு மைதானத்தில் தூங்குகிறார்களாம்!

இதுவும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கூறிய உண்மைதான்! 1977க்குப் பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியில் கட்டப்பட்ட ஓரிரு பள்ளிக்கூடங்களும் இடிந்து விழுந்து விட்டன என்ற செய்திகள்தான் ஏடுகளில் வெளிவந்தன.

தி.மு.க. ஆட்சியில் அரிஜனங்களுக்குக் கட்டித் தரப்பட்ட நாற்பதாயிரம் வீடுகளும் நாலாயிரம் ரூபாயிலிருந்து ஐயாயிரம் ரூபாய் வரை செலவிட்டுக் கட்டப்பட்ட காங்கரீட் வீடுகள்! நாற்பதாயிரம் வீடுகளில் ஒரு நாலு வீடுகளில் ஏதாவது பழுது ஏற்பட்டிருக்கலாம் - ஆனால் முதலமைச்சர் நாற்பதாயிரம் வீடுகளுமே அட்டை வீடுகள் என்று ஒரேயடியாக அடித்து விட்டார்!

இன்னமும் சினிமா செட்டுக்களில் மேக்அப் போட்டுக்கொண்டு நிற்கும் நினைவிலேயே நண்பர் எம்.ஜி.ஆர். இருக்கிறார்.

எதிர்க்கட்சிக்காரர்கள் அ.தி.மு.க.காரரை அடித்து விட்டால் அது வன்முறையாம்! சரி, ஒத்துக் கொள்வோம்! மறுக்க முடியாது! உண்மைதான்! வன்முறையேதான்! நாகை தொகுதியில் ஒரு வாரத்துக்கு முன்பு மார்க்சிஸ்ட் தோழர் சிங்காரவேலுவை அ.தி.மு.க.வினர் வெட்டிக் கொலை செய்தார்களே! அதற்கு எம்.ஜி.ஆர். அகராதியில் நீதி - தர்மம் - நேர்மை - சத்தியம் - என்று அர்த்தங்களாம்! அடடாவோ! இப்படியல்லவா ஒரு முதலமைச்சர் உண்மைகளைப் பிளந்து வைக்க வேண்டும்!!!

எனது தாய் - என்னை ஆளாக்கிய அண்ணா - என்னை வழி நடத்தும் நீதி, தர்மம் - இவைதான் நான் வணங்கும் தெய்வங்கள்! தவறு செய்தவர்களை சமூகக் குற்றவாளிகளை நான் அனுமதிக்கப் போவதில்லை.

ஆகா! என்னே கண்டிப்பு! என்னே அழுத்தம் திருத்தமான பேச்சு! புட்லூர் தண்டபாணி என்ற அ.தி.மு.க.வைச் சேர்ந்த காண்ட்ராக்டர் எப்படிக் கொல்லப்பட்டார்? யாரால் கொல்லப் பட்டார்? ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.தான் அந்தக் கொலைக்குக் காரணம் என்பதற்கான பல்வேறு ஆதாரங்களையும் -

அந்தக் காண்ட்ராக்டரிடம் அந்த எம்.எல்.ஏ. வற்புறுத்தி நாற்பதாயிர ரூபாய் அளவுக்குப் பணம் வாங்கியதில் ஏற்பட்ட தகராறுகளையும் சான்றுகளுடன் - சட்டப் பேரவையில் நான் விளக்கமாக எடுத்துச் சொல்லி ஒரு ஆண்டு முடியப்போகிறது?

நீதியினாலும் தர்மத்தினாலும் வழிநடத்திச் செல்லப்படுகிற இந்தப் புனிதவான் அந்தக் குற்றவாளிகள்மீது இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?

குற்றவாளிகளை, அவர்கள் யாராயிருந்தாலும் தண்டித்தே தீருவேன் என்கிற இந்த அரசாங்கத்தின் இலட்சணம்தான் நாகைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியிலேயே நாட்டு மக்களுக்கு தெளிவாகப் புரிந்து விட்டதே!

நான் செல்லுகிற இடமெல்லாம் என் பின்னாலேயே வந்து என் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லப் போகிறாராம்! திருச்சி நடன விழாவில் அறிவித்திருக்கிறார். தி.மு.க. ஆட்சியில் ஊழல்களாம்! அவற்றைப் பட்டியல் போட்டுக் காட்டப் போகிறாராம்! அவர் முன்புபோட்ட பட்டியலில் இருப்போர் பெரும்பாலும் இன்று அவர் பக்கத்தில்தான் இருக்கிறார்கள்! பக்திப் பஜனை பாடுகிறார்கள்!

ஜனாதிபதியிடம் கொடுத்த புகார்ப் பட்டியலில் அனைத்துக்கும் எம்.ஜி.ஆரே பொறுப்பேற்றுக் கொள்வதாக உறுதி அளித்து எழுதிக் கொடுத்திருந்தார். பிறகு அந்தப் புகார்களை ஷா கமிஷன் புகழ் இந்திரா காந்தியார் சர்க்காரியா கமிஷனுக்கு அனுப்பியபோது இந்த மாவீரன் எம்.ஜி.ஆர். அவர்கள், ஜனாதிபதியிடம் கொடுத்த புகார்களைப் பற்றி நேரடியாகத் தனக்கு எதுவும் தெரியாது - சேலத்து வக்கீல் ஒருவர் சொல்லித்தான் - எனக்குத் தெரியுமே தவிர, வேறொன்றறியேன் பராபரமே என்று ஓடி ஒளிந்துவிட்டார்! சர்க்காரியா கமிஷன் முன்னால் சாட்சியாக வரமுடியாது என்று வக்கீல் வைத்து வாதாடினார்! அந்தச் சூராதிசூரர் தான் இப்போது மீண்டும் குற்றச்சாட்டுக்களுடன் வரப்போகிறாராம்!

வரட்டும்! சந்திக்கத் தயாராக இருக்கிறோம்!

ஷா கமிஷன் - மாருதி கமிஷன் - குரோவர் கமிஷன் - இத்தனை கமிஷன்களின் முன்னால் நின்றவர்கள், நிற்பவர்கள் -

உலவுகின்ற இந்திரா காங்கிரஸ் புனிதமான கட்சியாம்! அதற்காகத் தஞ்சையில் ஓட்டு வேட்டையாடுவாராம் எம்.ஜி.ஆர்.!

சர்க்காரியா கமிஷனுக்கு இவரது முயற்சியால் ஆளாக்கப் பட்டவர்களைத் தனது துதிபாடிகளாக வைத்துக்கொண்டு என்னையும் கழக ஆட்சியையும் இழித்தும் பழித்தும் பேசுவாராம்!

பஸ் முதலாளிகளிடம் அறுபது லட்சத்துக்குமேல் லஞ்சம் இந்த ஆட்சியில்!

வட்டிக்கடை வேந்தர்களிடம் சுமார் இருபது லட்சம் லஞ்சம் இந்த ஆட்சியில்!

கப்பல் பேரத்தில் கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சம் பெற திட்டம் தீட்டப்பட்டு - அது அம்பலத்துக்கு வந்துவிட்ட காரணத்தால் - இப்போது வேறு ஒரு கப்பல் பேரத்தில் கால் வைத்துள்ள ஆட்சி இந்த ஆட்சி!

தியேட்டர்காரர்களிடம் பல லட்ச ரூபாய் கட்சி நிதி என்ற பெயரால் லஞ்சம் இந்த ஆட்சியில்!

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் - உள்ளே

இருக்குமாம் ஈரும் பேனும்!

இந்தப் பழமொழிக்கேற்ப நடக்கிற - ஆட்சியின் முதலமைச்சர்தான் பரிசுத்தவானாக நாட்டுமக்களின் முன்னால் இன்னமும் நடித்துக் கொண்டிருக்கிறார்!

அன்புள்ள,

மு. க.

(06-06-1979)

664. என் எண்ணமெல்லாம் உன் மீதே!

உடன்பிறப்பே,

தஞ்சையிலும் நாகையிலும் சிற்றூர், பேரூர், நகரங்கள் என்று நாள் முழுதும் தேர்தல் பணிகளை மேற்கொண்டிருக்கிறேன். என்னைப் போலவே பொதுச் செயலாளரும், பொருளாளரும், கழக முன்னணித் தலைவர்களும் அலைந்து திரிந்து அயராது உழைத்து வருகின்றனர். நான் இந்தத் தொகுதிகளில் எந்தக் குக்கிராமத்தில் இருந்தாலும், எந்த மூலையில் இருந்தாலும் - நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று அறிந்து கொள்கின்ற அவாவில்தான் துடித்துக் கொண்டிருப்பேன் என்று உனக்குத் தெரியும்.

பதாகைகளைத் தயாரித்துக் கட்டிக் கொண்டிருப்பாய்!

தோரணங்களை வீதிக்கு வீதி தொங்கவிட்டுக் கொண்டிருப்பாய்!

வேட்பாளர் பற்றிய விளம்பரச் சுவரொட்டிகளைப் பொதுமக்கள் பார்வையில் படும்படியாக ஒட்டி அவற்றைப் பாதுகாத்துக் கொண்டிருப்பாய்!

வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்து அந்தப் பணியை முடித்திருப்பாய்!

வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து நமது தேர்தல் சின்னத்தை நினைவுபடுத்திக் கொண்டிருப்பாய்!

இரவு பகல் எனக்கு உறக்கமும் ஓய்வும் இல்லாதது போலவே உனக்கும் ஓய்வு உறக்கம் அற்றுப் போயிருக்கும்!

இடையிலே ஏழெட்டு நாள்கள் கூட இல்லை! இந்த நாள்களில் ஒரு நாளைக்கூட, ஒரு மணி நேரத்தைக்கூட, ஏன், ஒரு விநாடியைக்கூட வீணாக்காமல் நீ பணிபுரிந்தாக வேண்டும்!

இன்றே செய்க! அதுவும் நன்றே செய்க! எனும் மொழியை மறவாமல் பம்பரமெனச் சுழன்றிட வேண்டும்! நாளைக்குச் செய்து

கொள்ளலாம் - காலையில் வேண்டாம்; மாலையில் பார்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் எண்ணுவது கூட தேர்தலில் நமது வெற்றியைப் பாதிக்கும்.

எதிர் தரப்பினர் ஆட்சி அதிகாரத்தையும் -பணப் பெட்டிகளையும் நம்பியிருக்கின்றனர்.

அந்த இரு முனைகளையும் சந்திக்க வேண்டிய முறைப்படி நாம் சந்தித்தாக வேண்டும்.

தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தை இந்தத் தேர்தலில் காப்பாற்ற வேண்டுமென்று பேசிய தஞ்சை மாவட்ட இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள், இன்னும் தங்களுடைய பழைய பண்ணைக்காரர் பாணியிலேயே தனிப்பட்டோர் விமர்சனங்களில் இறங்கியுள்ளனர். தமிழக முதலமைச்சருக்குத் தனிப்பட்டவர்களை விமர்சிப்பதும் தரக்குறைவாகப் பேசுவதும் வாடிக்கையான ஒன்று.

ஆத்திரத்தில் இருக்கிறார்கள் என்று புரிகிறது! எனவே ஆபாச அர்ச்சனைகளில் இறங்கியுள்ளனர். இந்த நிலை தொடருமானால் பழைய புராணங்கள் கட்டுக்கட்டாக நம்மிடம் இருக்கின்றன. அந்தக் கதாகாலட்சேபங்களில் கழகத்தினர் ஈடுபட அதிக நேரமாகாது!

உடன்பிறப்பே, அவர்கள் அந்த அர்ச்சனைகளுக்கிடையே நெற்களஞ்சியத்தில் நுழையும் பெருச்சாளிகளைப் போலவும் - ஆட்டு மந்தைக்குள் நுழையும் நரிகளைப் போலவும் - தொகுதிகளில் சில பகுதிகளில் நுழையத் திட்டம் வகுத்திருக்கின்றனர் என்ற தகவல்கள் வந்துள்ளன.

வேட்டிகளாம்!
சேலைகளாம்!
கரன்சி நோட்டுக்களாம்!
கட்டுக்கட்டாக வருமாம்! கத்தை கத்தையாகப்
புழங்குமாம்!

அத்துடன் வதந்திகளையும் தங்கள் தேர்தல் கருவிகளாகப் பயன்படுத்திட முன்வந்துள்ளனர். அவர்கள் அணிக்குத்தான் வெற்றி வாய்ப்பு இருப்பது போல செய்திகளைக் கிளப்பி விடுகிறார்கள். அந்தத் தொகுதியில் ஓட்டு வராது! இந்தத் தொகுதியில் குறையும்! தோழமைக் கட்சி அணியினர் சரியாக

வேலை செய்யவில்லை! இப்படியெல்லாம் கோயபல்ஸ் பிரச்சாரம் செய்து வாக்காளர்களைக் குழப்புவதற்குப் பார்க்கிறார்கள்.

எதிரிகளின் எல்லா வகையான போர் முறைகளையும் லாவகமாகவும் - துணிவாகவும் - முறியடிக்கக் கூடிய திறமை உனக்கு உண்டு!

நீ ஏந்தியிருக்கிற கொடி - தியாகிகள் பலர் சிந்திய ரத்தத்தில் தோய்ந்தது!

அந்தக் கொடியுடன் உலவிக் கொண்டேயிரு! உறக்கம் உன் விழிகளைத் தழுவத் துடிக்கலாம்! ஜூன் 18ஆம் தேதிக்கு மேல் வருக என்று அதற்கு விடை கொடுத்து அனுப்பி விடு!

வெற்றிச் செய்தி கிடைத்த பிறகுதான் பசியின் நினைவே வர வேண்டும்! ஓய்வு என்ற வார்த்தைக்கே அதுவரையில் இடமிருக்கக்கூடாது!

எங்கே பார்க்கலாம்; என் ஆருயிர் உடன்பிறப்பே! எழுந்து நில்! சிங்கமென நிமிர்ந்து நில்! பீடு நடை போடு! உன் பாதம் படாத இடமே இருக்கக்கூடாது! ஒவ்வொரு வாக்காளரையும் நீ தெரிந்துவைத்திருக்க வேண்டும்! ஒருமுறைக்குப் பலமுறை அவர்களிடம் கருத்து விளக்கம் கூற வேண்டும்!

உன் உழைப்புதான் வெற்றிக்கு வித்து! உன் வியர்வைதான் வெற்றியின் அடையாளம்! நீ, காட்டும் திறன் தஞ்சையிலும் நாகையிலும் வாகை மாலைகளாக மாறட்டும்!

இனி ஒரு விநாடியும் தாமதிக்காமல் கடமைகளை வகுத்துக்கொண்டு காரியமாற்றக் கிளம்பிடுக! நான் தஞ்சை மாவட்டத்தில் எங்கிருந்தாலும் நீ உனக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் எப்படிப் பணியாற்றுகிறாய் என்பதைத்தான் விசாரித்துக் கொண்டிருப்பேன்.

உழைத்திடு!
உழைத்திடு!
உன்மத்தர்கள் ஆட்சிக்குப் பாடம் புகட்ட உழைத்திடு!

அன்புள்ள,

மு. க.

(10-06-1979)

665. வெற்றிக் காற்று வீசுகிறது!

உடன்பிறப்பே,

ஒருநாள் முரசொலியில் நெல்லை மாவட்டத்தினர், தஞ்சையில் ஆற்றுகின்ற தேர்தல் பணியின் திறம் குறித்துச் செய்தி வந்தாலும் வந்தது. அடடா! மற்ற மாவட்டக் கழகங்களின் கோபத்தை பார்க்க வேண்டுமே! ஆர்வத்துடன் பணியாற்றுகிறவர்களை மேலும் ஊக்கத்துடன் பணியாற்றத் தூண்டி விடுவதற்கு நான் கடைப்பிடிக்கும் முறையை முரசொலியில் உள்ளவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள், அவ்வளவுதான்!

செல்லமாகக் கோபித்துக் கொள்ள எல்லா மாவட்டக் கழகங்களும் உரிமை கொண்டவை எனினும், நெல்லையை விடத் திறம்படத் தொண்டாற்றினோம் என்ற சிறப்பினைப் பெற அவைகள் வியூகம் வகுத்துக்கொண்டு உழைத்திடும் பாங்கினை நான் நேரிலேயே காணுகிறேன். ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு விதத்தில் என் பாராட்டுக்களைப் பெற இருக்கின்றன.

உடன்பிறப்பே, நானும் நாகை, தஞ்சைத் தொகுதிகளில் உன்னுடன் இணைந்து ஊண் உறக்கமின்றி உழைத்திடுகிறேன் என்பதை நீ அறிவாய்! மாலை ஐந்து மணிக்கு தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. மறுநாள் காலை ஐந்து மணிக்குத்தான் முடிவடைகின்றன. ஒவ்வொரு இரவும் ஐம்பதுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள்! பல்லாயிரக்கணக்கான வாக்காளர்களைச் சந்திக்கும் வாய்ப்புக்கள்!

கண் எரிகிறது! கால் வலிக்கிறது! தொண்டை புண்ணாகிறது! பசி, துளைத்தெடுக்கிறது!

இந்தத் துன்பங்கள் அத்தனையுமே பறந்தோடி விடுகின்றன; வழி நெடுகிலும் காத்திருக்கும் மக்களைக் காணுகிற போதும் உன்னைக் காணுகிறபோதும்!

தஞ்சையிலிருந்துதான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். இது உன் கைக்குக் கிடைக்கும்போது இடையிலே தேர்தலுக்கு நான்கு நாட்கள் மட்டுமே இருக்கக்கூடும்.

அயராது உன் பணி தொடர்கிறது என்ற போதிலும் - அடிக்கடி உனக்கு நினைவுபடுத்துவது என் கடமையல்லவா?

வீட்டுக்கு வீடு சென்று ஒருமுறைக்குப் பத்துமுறை வாக்காளர்களைச் சந்தித்து விட்டாயா?

அவர்களுக்கு அளிக்க வேண்டிய விளக்கமனைத்தும் அளித்து விட்டாயா?

அவர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லும் நாள் வரையில் அவர்களுடன் நீ கொண்ட தொடர்பை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொண்டேயிருக்கிறாயா?

ஓட்டுக்களை விலைக்கு வாங்கலாம் என்று சந்தடியின்றி, வருகின்றவர்களைச் சூழ்ந்து நின்று அவர்கள் வந்தவழியிலேயே திரும்பிப் போக - அமைதியான முறையில் விழிப்புடன் இருக்க அறவழித் தொண்டர்களின் பட்டியல் தயாராகி விட்டதா?

விரக்தியடைந்துள்ள எதிரிகள் அராஜகம் போன்ற எல்லா வன்முறைகளிலும் ஈடுபடுவர்! ஈடுபடத் தொடங்கிவிட்டனர் இப்போதே!

காவல்துறையினர், மேலிடத்து ஆணைப்படி கடுமையாக நடந்துகொள்வர்!

எதற்கும் கலங்காதே! தேர்தல்களோடு முடிந்து விடுவதல்ல அரசியல்! நாம் நடத்தும் அரசியல், அடுத்த தலைமுறையின் நல்வாழ்வுக்காகவும் - மானமுள்ள வாழ்வுக்காகவும் நடத்தப்படுவதாகும்!

எனவே, அடக்குமுறைகள்! வழக்குகள்! மிரட்டல்கள்! இப்படி அடுக்கடுக்காகக் கணைகள் கிளம்பும்!

அவற்றைத் தடுத்து முன்னேற நமது தோழமை அணியின் கட்டுப்பாடே கவசமும் கேடயமும் ஆகும்!

அண்ணன் தந்த அரசியல் நாகரிகம் எனும் கட்கமேந்தி இந்தத் தேர்தல் களத்தில் நிற்கிறோம்!

இரண்டு தொகுதிகளிலும் வெற்றிக் காற்றே வீசுகிறது!

காற்றின் சுகத்தில் கண்ணயர்ந்து விடாமல், கடமையாற்றிடுக!

நான்கைந்து நாட்கள்தான்! உழுது பயிரிட்டு அறுவடைக்குத் தயாராக இருக்கிறது கழனி! அதில் மாடுகள் நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்! பாதுகாத்துக் கொள்!

உன்னை நம்பித்தான் - உன் உழைப்பை நம்பித்தான் - நான் என் உடல்நிலைக்கென ஓய்வுகூடக் கொள்ளாது உழைத்துக் கொண்டிருக்கிறேன்!

உறங்காமல் உழைத்திடு;
என் ஆருயிர் உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(13-06-1979)

666. தோழமை அணி தொடர்ந்திடும் பணி!

உடன்பிறப்பே,

நாகை நாடாளுமன்றத் தொகுதியில் ஒரு இடைத் தேர்தல் நடந்ததையும், அதில் அ.தி.மு.க. அமைச்சர்கள் முகாமிட்டு சைக்கிளில் சென்று வாக்குகள் கேட்டதையும், பஸ்களில் ஏறிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று சுவர்களில் அ.தி.மு.க. தேர்தல் விளம்பரங்களை ஒட்டியதையும், ஒரு அமைச்சர் பெண்களின் கால்களில் விழுந்து ஓட்டுக் கேட்ட புகைப்படங்கள் ஏடுகளில் வெளி வந்ததையும், தமிழ்நாடு முழுவதுமிருந்து வந்த அ.தி.மு.க. அடியாட்கள் மதுரை குண்டர்களின் அரசன் தலைமையில் (இது எம்.ஜி.ஆர். சூட்டிய பட்டம் - நான் சூட்டியதல்ல) நாகைத் தொகுதியில் அராஜகங்கள் நடத்தியதையும், பல லட்ச ரூபாய்கள் நாகைத் தொகுதியில் வாரி இறைக்கப்பட்டதையும், இறுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் தோல்வியுற்றதையும் தமிழ்நாட்டில் உள்ள சில பத்திரிகையாளர்கள் மறந்தே போய் விட்டனர். தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதியில் மட்டும் தான் தேர்தல் நடந்து தி.மு.க. தோல்வியுற்று - இந்திரா காங்கிரஸ் வென்றதாக அவர்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது போலும்!

ஆளுங் கட்சியான அ.தி.மு.க. இரண்டு ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு நாகையில் சந்தித்துள்ள முதல் தோல்வியைப் பற்றி அந்த ஏடுகள் நினைத்துப் பார்க்கக் கூடத் தயாராக இல்லை.

அதற்கு மாறாக ஆளுங் கட்சியான அ.தி.மு.க. நாகை நாடாளுமன்றத் தொகுதியில் அதிக ஓட்டுகள் வாங்கியிருப்பதாக அந்த ஏடுகள் மகிழ்ச்சி ஆரவாரம் வேறு செய்கின்றன.

அ.தி.மு.க.வும், இந்திரா காங்கிரசும் அவற்றுடன் சில கட்சிகளும் இணைந்திருந்து பெற்ற ஓட்டுகள் அவை என்ற கணக்கைக் கூட அந்த ஏடுகளால் மறைக்க முடிகிறது! பாவம், அவ்வளவு ஆசை அந்த ஏடுகளுக்கு அ.தி.மு.க. மீது!

ஏன்? முதலமைச்சரே கூட நாகைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தந்தது என்பதையோ அதனால் தங்கள் கட்சியின் ஓட்டு எண்ணிக்கை அதிகமானது என்பதையோ ஒப்புக்குக் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே!

1977-இல் நடைபெற்ற தஞ்சைத் தொகுதி நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கட்சியின் கூட்டணி பெற்ற மொத்த வாக்குகள் ஒரு லட்சத்துத் தொண்ணூற்று ஓராயிரம்!

இப்போது தி.மு.க.வின் தோழமைக் கட்சி அணி பெற்றுள்ள வாக்குகள் இரண்டு லட்சத்துப் பதினேழாயிரம்!

அதாவது இருபத்தாறு ஆயிரம் வாக்குகள் அதிகம்!

1977 தஞ்சை நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., இ.காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, முஸ்லீம் லீக் ஆகிய அணியினர் பெற்ற வாக்குகள் இரண்டு லட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரம்!

இப்போது இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க. மற்றுமுள்ள கட்சிகள் இணைந்த அணி பெற்றுள்ள வாக்குகள் மூன்று லட்சத்து ஒன்பதாயிரம்!

அதாவது இருபதாயிரம் வாக்குகள் மட்டுமே அதிகம்!

வாக்குகள் கணக்கைச் சொல்லி தஞ்சையில் தி.மு.க. பெற்ற தோல்வியை நான் திரைபோட்டு மறைக்க விரும்பவில்லை. ஆனால் சில ஏடுகள் தஞ்சைத் தொகுதியில் தி.மு.க. வேரோடு வீழ்ந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொள்கின்றனவே! அந்த ஏடுகளுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே இந்திரா காங்கிரசும், அ.தி.மு.க.வும் இணைந்து நின்று போட்டியிடாவிட்டால் இந்திரா காங்கிரஸ் இரண்டாவது இடத்தையும், அ.தி.மு.க. மூன்றாவது இடத்தையும்தான் பெற்றிருக்கும். தி.மு.க. அணி முதல் இடத்தைப் பெற்று ஏராளமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கும். அதற்குச் சான்று தேவையென்றால் 1977-இல் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற சட்டமன்றத் தொகுதிகளின் ஓட்டு எண்ணிக்கைகளை அந்த ஏடுகள் கூட்டிக் கழித்துப் பார்த்துக் கொள்ளலாம்!

1977-இல் நாகை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியக் கம்யூனிஸ்டு, இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க., முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் அணி பெற்ற மொத்த வாக்குகள் இரண்டு லட்சத்து எழுபத்தி எட்டாயிரம்!

இப்போது அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் மற்றுமுள்ள சில கட்சிகள் இணைந்து பெற்றுள்ள வாக்குகள் இரண்டு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரம்!

1977-இல் தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளின் அணி, நாகை நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகள் இரண்டு லட்சத்து முப்பத்தி ஏழாயிரம்!

இப்போது அந்த அணியுடன் இந்திய கம்யூனிஸ்டு, முஸ்லீம் லீக் இணைந்து பெற்றுள்ள வாக்குகள் இரண்டு லட்சத்து எண்பத்து எட்டாயிரம்! அதாவது அதிக வாக்குகள் ஐம்பதாயிரத்திற்கு மேல்!

நாகையில் அ.தி.மு.க. அணிக்குக் குறைந்துள்ள வாக்குகள் ஆறாயிரம்! நமது அணிக்கு அதிகமானது ஐம்பதாயிரம்!

பதிவான வாக்குகள் தஞ்சையைப் பொறுத்த மட்டில் 1977ஐ விட இப்போது ஐம்பத்தி ஏழாயிரம் அதிக மென்பதையும் நாகையில் 1977ஐ விட இப்போது பதிவான வாக்குகள் நாற்பத்தி ஏழாயிரம் அதிகமென்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறி விடக் கூடாது.

அதே சமயம் 1973 திண்டுக்கல் தேர்தலில் எந்தெந்த அணிகள் போட்டியிட்டன என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

தி.மு.கழகம், முஸ்லீம் லீக், பார்வார்டு பிளாக், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகள் ஒரு அணி!

அ.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, போன்ற கட்சிகள் மற்றொரு அணி!

பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான பழைய காங்கிரஸ் இன்னொரு அணி!

இந்திரா காங்கிரஸ் கட்சி, பிறிதோர் அணி!

அதேநிலை தஞ்சை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் இப்போது ஏற்பட்டு நான்குமுனைகூட அல்ல; மும்முனைப் போட்டியே உருவாகியிருந்தால் முடிவு எவ்வாறு இருந்திருக்கும் என்பதை 1977 நாடாளுமன்றத் தேர்தல் ஓட்டுக்களையும்,

சட்டமன்றத் தேர்தல் ஓட்டுக்களையும் கணக்கெடுத்துப் பார்த்து அந்த ஏடுகள் விமர்சனம் செய்திருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும்.

அதைவிடுத்து அந்த ஏடுகள் நமது கழகத்தின் மீதும், தோழமை அணியின் மீதும் உள்ள வெறுப்பைக் கக்கிடவே முழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு வெற்றி அளித்ததின் வாயிலாக கருணாநிதி அரசுக்கு எதிராக இந்திராகாந்தி எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் மக்கள் ஏற்று ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும்.

என்று 'மெயில்' ஏடு எழுதியிருக்கிறது.

ஆனால் 'இந்து'வோ, அ.தி.மு.க.வின் செல்வாக்கு முனை முறியவில்லை என்பதைத் தஞ்சைத் தேர்தல் முடிவு காட்டுகிறது எனத் தலையங்கம் தீட்டுகிறது. இந்திரா காங்கிரஸ் அந்தத் தொகுதியில் நின்றதையே 'இந்து' மறந்துவிட்டது.

தஞ்சையில் இந்திரா காங்கிரஸ் வென்றதால் கழக அரசின் மீது இந்திரா எடுத்த நடவடிக்கைகள் நியாயமாகிவிட்டதாம்! மெயில் எழுதித் தள்ளிவிட்டது.

1977-இல் இந்திரா கட்சியையே மாற்றி, ஜனதா கட்சியை அமரச் செய்தார்களே! மக்கள் - அப்போது 'மெயில்' ஏடு இந்திராவின் எமர்ஜன்சியை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதைத் தலையங்கம் தீட்டி நாட்டுக்கு உணர்த்தியதா? அல்லது அந்த ஏட்டின் நாலாயிரம் வாசகர்களுக்காவது சொன்னதா?

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் நடைபெற்ற சில இடைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் தோல்வி அடைந்திருக்கிறதே அந்தத் தோல்வியின் மூலம் இந்திரா மீது இப்போது ஜனதா அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் நியாயம்தான் என்று மக்கள் ஒப்புக் கொண்டுவிட்டார்கள் என்றாவது 'மெயில்' என்றைக்காவது தலையங்கம் தீட்டியதுண்டா?

தஞ்சையில் இந்திரா காங்கிரஸ் வென்றதை அ.தி.மு.க.வின் வெற்றியென்று கூப்பாடு போடுகிற 'இந்து' ஏட்டாளர், நாகையில் அ.தி.மு.க. தோற்றதற்கு மட்டும் சப்பைக்கட்டு போடுவானேன்? வீரப்பனுக்குப் பயந்து கொண்டா?

உடன்பிறப்பே, நாகையில் எம்.ஜி.ஆர். அரசின் எல்லாவிதமான அத்துமீறிய நடவடிக்கைகளுக்கும் ஈடுகொடுத்து நமது தோழமைக் கட்சிகளின் அணி வெற்றி பெற்றிருக்கிறது!

தஞ்சைத் தொகுதியில் நமது தோல்வியை நாம் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை! அதற்குத் திரை போட்டுப் பூசி மெழுக விரும்பவில்லை!

தஞ்சைத் தொகுதியில் இந்திரா காங்கிரசுக்கு ஏற்கனவே உள்ள பலத்தின் பின்னால்தான் எம்.ஜி.ஆர். ஒளிந்துகொண்டு போரிட முடிந்தது!

அந்த பலம் இந்திரா காங்கிரசுக்கு நாகைத் தொகுதியில் இல்லை. எம்.ஜி.ஆர். கட்சி அங்கே வீழ்ந்தது. நாகைத் தொகுதியில் நமது அணி பெற்றுள்ள பலம், தமிழக முழுதும் பரவலாக இருக்கிறது!

நமது அணியின் வலிமை வளர்பிறையாக இருக்கும்!

இந்திரா காங்கிரஸ் உடைந்து கொண்டேயிருக்கிறது! கர்நாடகம் பல மாநிலங்களில் தொடர்கதையாகும்! அ.தி.மு.க.வுக்கு நாகைகள் காத்திருக்கின்றன!

எனவே அந்த அணி தேய்பிறைதான் இனிமேல்!

தஞ்சைத் தோல்வி கண்டு கலங்காமல் தடந்தோள் தட்டிக் கிளம்பிடுவோம்; தமிழ்நாட்டு நலன்கள் காத்திடவும் - இந்திய ஜனநாயகத்திற்கு மீண்டும் விபத்து வராமல் தடுத்திடவும் - நமது தோழமை அணி தொடர்ந்திடும் நற்பணிகளை!

அன்புள்ள,

மு. க.

(23-06-1979)

667. இதோ ஒரு நெருப்புக்கோழி!

உடன்பிறப்பே,

நாகை, தஞ்சை இடைத்தேர்தல்களின் ஓட்டுக்கள் எண்ணி முடிக்கப்பட்டு இறுதி முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. 18-ஆம் தேதி இரவு 10.30 மணி! முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நிருபர்களை அழைத்து விடுகிறார், அறிக்கை கொடுப்பதற்காக! அறிக்கையும் தயாராகிறது. அதற்குள் நாகையில் தோழர் முருகையன் அவர்கள் வெற்றிபெற்றுவிட்டார் என்று அதிகாரப்பூர்வமாக செய்தி வானொலி வாயிலாக (இரவு 11 மணிக்குள்ளாக) வெளியிடப்படுகிறது. தஞ்சையில் இந்திரா காங்கிரஸ் அதிக ஓட்டுக்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருக்கிறது என்ற அதிகாரப்பூர்வமான செய்தி! எனினும் இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை. அதே இரவு 11 மணிக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவசர அவசரமாக பத்திரிகைகளுக்கு அறிக்கையை வழங்கி விடுகிறார். காலை வரையில் கூட காத்திருக்கவில்லை தஞ்சைத் தேர்தல் முடிவுக்காக!

அறிக்கையில் நாகைத் தொகுதியில் ஆளுங் கட்சி தோற்றுவிட்டதைப் பூசி மெழுகிவிட்டு தஞ்சையில் தி.மு.க. தோற்றுவிட்டதால் அது எதிர்க்கட்சியாக இருக்கவும் தகுதியில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். இந்த அறிக்கை சென்னை தினத்தந்தி 19-ஆம் தேதி காலையிலும் மற்றும் எம்.ஜி.ஆர். கட்சி ஏடுகளில் மாலையிலும் வெளிவந்துள்ளது.

தஞ்சைத் தொகுதியில் எங்கள் அணிக்கு ஏற்பட்ட தோல்வியை ஒப்புக் கொள்கிறோம். அதேபோல நாகைத் தொகுதியில் அவர்களது அணிக்கு ஏற்பட்ட தோல்வியை எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொள்ளாமல் அதற்கு மாறாகத் தஞ்சைத் தொகுதி முடிவின் அடிப்படையில் தி.மு.கழகம், சட்டசபையில்

எதிர்க்கட்சியாகக் கூட இருக்கத் தகுதியற்றுவிட்டது என அறிவித்திருக்கிறார்.

நாகைத் தொகுதியில் அரசு இயந்திரம் முழுவதும் முடுக்கி விடப்பட்ட பிறகும் அ.தி.மு.க. தோல்வியடைந்திருக்கிறதே! அது ஆளுங் கட்சியாக நீடிக்கத் தகுதி இழந்துவிட்டது என்று நாங்களும் சொல்லலாம் அல்லவா?

ஆளுங்கட்சி அணியாக இருக்கத் தகுதி படைத்தது எது? எதிர்க்கட்சி அணியாக இருக்கத் தகுதி படைத்தது எது? எம்.ஜி.ஆர். அறிவித்துள்ள இந்தத் தகுதியை ஆராய அவரது கூற்றின் அடிப்படையிலேயே சட்டமன்றத்துக்கான பொதுத் தேர்தலை நடத்த அவர் தயாராக இருக்கிறாரா? அவர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இக் கேள்வியை எழுப்புகிறேன்.

அரசியலில் மிகச் சாதாரண அறிவு படைத்தவர்கள்கூட இதைப் புரிந்துகொள்வார்கள்! தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கத் தகுதியற்றது என்று ஒரு இடைத் தேர்தலை வைத்து பொறுப்புள்ள ஒரு முதலமைச்சர் அறிக்கை விடும்பொழுது, அப்படியானால் அதே இடைத்தேர்தல் முடிவை வைத்து ஆளுங் கட்சியை விமர்சிக்கிற உரிமை எதிர்க்கட்சிகளுக்கு மட்டும் இல்லையென்று அவசரக்காரர்களும் - ஆத்திரக்காரர்களும் - ஏன்தான் துள்ளிக்குதிக்கிறார்களோ தெரியவில்லை!

தேர்தல் முடிவு முழுவதும் அறிவிக்கப்படாத நிலையில் இரவோடு இரவாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கத் தகுதியற்றுவிட்டது என்று பிரகடனப்படுத்தினார்.

எது எதிர்க்கட்சி? எது ஆளுங்கட்சி? அந்தத் தகுதியை அறிந்துகொள்ள பொதுத் தேர்தலை நடத்தத் தயாரா? என்று நான் கேட்டுவிட்டு, அந்தக் கேள்விகூட நான் நாகை இடைத் தேர்தலின் முடிவை வைத்துக் கேட்கவில்லை! எம்.ஜி.ஆர். அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இக்கேள்வியை எழுப்புகிறேன் என்றும் விளக்கியிருக்கிறேன்.

இதைப் புரிந்துகொள்ளாமல் ஆகா! ஊகு! கருணாநிதி சட்டமன்றத் தேர்தலை நடத்தத் தயாரா? என்று கேட்கிறார். இடைத் தேர்தல் முடிவை யொட்டி எங்கேயாவது இப்படி நடந்ததுண்டா? யாராவது இவ்வாறு கேட்டதுண்டா?

என்று ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

எங்கேயாவது அல்லது எப்போதாவது ஒரு முதலமைச்சர் ஒரு இடைத் தேர்தலின் முடிவை வைத்து எதிர்க்கட்சியைப் பார்த்து நீ எதிர்க்கட்சியாக இருக்கத் தகுதியற்று விட்டாய் என்று அறிவித்ததாகச் செய்தி உண்டா?

எம்.ஜி.ஆரின் அறிக்கைக்குப் பிறகுதானே என் அறிக்கை! முழுப்பூசணியை சோற்றிலே மறைப்பது போல எம்.ஜி.ஆர். கூறியதை அப்படியே மறைக்க முயற்சி செய்து, நான் அளித்த பதிலை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு அமைச்சர்கள் திசை திருப்புவானேன்?

1973 திண்டுக்கல்லில் ஆளுங்கட்சியாக இருந்த கழகம் தோல்வியடைந்தபோது எம்.ஜி.ஆர். என்ன அறிக்கை விடுத்தார்?

மக்களுடைய திண்டுக்கல் தீர்ப்பை ஏற்று கருணாநிதி அரசு ஒரு வினாடிகூட பதவியில் இருக்க அருகதையில்லையென்று புரட்சித் தலைவர் அறிக்கை.

இப்படிக் கொட்டையெழுத்தில் அன்றைய தென்னகம் ஏட்டில் செய்தி வரவில்லையா? அதுமட்டுமல்ல, திண்டுக்கல் தேர்தலையொட்டி எம்.ஜி.ஆர். விடுத்த அறிக்கையில்,

இந்தியப் பேரரசு சுணக்கமின்றி உடனடி விசாரணைக் கமிஷன் அமைத்து தி.மு.க. அரசைப் பதவியிலிருந்து விலக்க வேண்டும்.

என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நாகையில் எம்.ஜி.ஆர். கட்சி தோற்றதிற்காக அதைக் கலைக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் சிபாரிசு செய்யவும் இல்லை. செய்யப் போவதுமில்லை.

ஆனால் எம்.ஜி.ஆரோ அதே பாணியில் இப்போதும் முழங்குகிறார்! தஞ்சையில் தோற்றுவிட்ட தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும் தகுதியை இழந்துவிட்டதென்று!

அதற்கு நாம் பதில் சொன்னால் கோபம் வருகிறது அவரை வலம் வருகிறவர்களுக்கு!

திடீரென்று திராவிடர் இயக்கப் பாரம்பரியம் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். திராவிடர் இயக்கத்தின் வீடணர்கள், சுக்ரீவர்கள், அனுமான்களால்தான் அப்படி யெல்லாம் பேச முடியும்! எழுத முடியும்! ஏன் என்றால் இறுதி வரையில் பதவியை அனுபவித்து விட்டு இனி அடுத்த வீட்டு இலையைப் போய்ப் பார்ப்போம் என்று ஓடுகிறவர்களுக்கு அரசியலில் வெட்கமோ, கூச்சமோ இருப்பதில்லை அல்லவா?

உடன்பிறப்பே, திராவிடர் இயக்கத்தில் எம்.ஜி.ஆருக்கு அபாரமான பிடிப்பாம்! அந்த இயக்கத்தைக் கட்டிக் காக்க அவரை விட்டால் ஆள் இல்லையாம்!

வாதத்திற்காக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். நானோ அல்லது நமது கழகத்தினரோ அப்படி விரும்பவில்லை. ஆனாலும் வாதத்திற்காக இதனை நினைவுபடுத்துகிறேன்.

தஞ்சை நாகை இடைத் தேர்தல்கள் உச்ச கட்டத்திலிருக்கும் போது திடீரென எம்.ஜி.ஆர். ஒரு அறிவிப்பைச் செய்தார்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, தஞ்சையில் தி.மு.க.வுக்குத் தரும் ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டு இந்திரா காங்கிரசை ஆதரிக்க முன் வந்தால், நாகையில் அ.தி.மு.க.வும் வாபஸ் வாங்கிக் கொண்டு இந்திய கம்யூனிஸ்டை ஆதரிக்கும்.

உடன்பிறப்பே! ஒருக்கணம் சிந்தித்துப் பார்! திராவிடர் இயக்கத்தில் நீண்ட நெடுங்காலம் ஊறித் திளைத்தவர் என்று பாயிரம் பாடப்படுகிற எம்.ஜி.ஆர். அவர்கள் தஞ்சையில் தி.மு.கழகத்தைத் தோற்கடிக்க இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தன்னோடும் இந்திரா காங்கிரசோடும் வந்து சேர வேண்டுமென்று அவசர அழைப்பு விடுத்தார்! நாகைத் தொகுதியையும் அ.தி.மு.க. விட்டு விடுவதாக அறிவித்தார்!

அதாவது, அவரது கருத்தின்படி நாகையில் அ.தி.மு.க. வாபஸ்! தஞ்சையிலும் தி.மு.க. வரக்கூடாது! சுருக்கமாகச் சொன்னால் எம்.ஜி.ஆரின் எண்ணம், தன் கட்சியைக் கூட இறுதி நேரத்தில் வாபஸ் வாங்கிக் கொண்டு தி.மு.க.வை தஞ்சையில் வீழ்த்தி விட வேண்டும் என்பதுதான்!

ஏன்; அந்தத் திராவிட இயக்கப் பாதுகாவலர் (?) பின்வருமாறு அறிவித்திருக்கக் கூடாதா?

நாகையில் தி.மு.கழகம், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்குத் தரும் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு அ.தி.மு.க.வை ஆதரித்தால், அ.தி.மு.க. தஞ்சையில் இந்திரா காங்கிரசுக்குத் தரும் ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டு தி.மு.க.வை ஆதரிக்கும்.

திராவிடர் இயக்கப் பாதுகாவலர் ஆயிற்றே! பெரியாரின் உண்மைத் தொண்டராயிற்றே! பேரறிஞர் அண்ணாவின் ஒரே தம்பியாயிற்றே! ஏன் அவர் இதுபோல் அறிவிக்கவில்லை? அந்த நினைப்பு அவருக்கு இயல்பாகப் பிறந்திருக்க வேண்டுமல்லவா? பிறக்கவில்லையே என்ன காரணம்?

ஒருவேளை அப்படி அறிவித்திருந்தால் அதைத் தி.மு.கழகம் ஏற்றுக் கொண்டு விடுமோ? என்று கேட்கிறாயா?

எம்.ஜி.ஆரின் திடீர் அறிவிப்பு கண்டு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாணசுந்தரனார் அவர்கள் என்ன பதிலைச் சொன்னாரோ, அதே பதிலைத்தான் கழகத் தலைமையும் எம்.ஜி.ஆருக்குச் சொல்லியிருக்கும்.

தோழமைக் கட்சிகளினூடே மித்திர பேதம் செய்ய முயற்சி செய்யாதீர்! என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் உடனடியாகத் தந்த பதில்தான் தி.மு.க.வின் பதிலாகவும் இருந்திருக்கும்.

ஏன் இந்த வாதத்தை எடுத்து வைக்கிறேனென்றால் திராவிடர் இயக்கம் - பெரியார் - அண்ணா - என்ற இனிப்பான வார்த்தைகளை வாரியிறைத்து வலைவீசப் பார்க்கிறார்களே! ஏற்கனவே பதவியெனும் ஆசை வலையிலே சிக்கிக் கொண்டவர்கள் - அவர்களின் சுய உருவத்தை, என் உடன்பிறப்பே! நீ மீண்டும் ஒருமுறை காண வேண்டுமென்பதற்காகத்தான்!

தேர்தல்களில் வென்று பதவிகளில் அமர்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதல்ல திராவிடர் இயக்கம்! பதவிகள் வரும், போகும்! அதைப் பெறுவதற்காகவோ அல்லது அதில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காகவோ கொள்கையற்றவர்களுக்குப் பல்லக்கு தூக்கிக் கொண்டிருப்பவன் உண்மையான திராவிட இயக்கத்துக்காரனல்ல! ஆம், அவன் சுயமரியாதைக்காரனே அல்ல!

ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தி.மு.கழகம் இன்னும் ஐம்பதாண்டு காலத்திற்குக் குறையாமல் பணியாற்ற வேண்டியிருக்கிறது என அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் கூறியதை நாம் மறந்து விடவில்லை.

இன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர் சலுகைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுப் பாழாகி வருகிறது! தாழ்த்தப்பட்டோர் - சிறுபான்மையோர் - விவசாயிகள் வதைக்கப்படுகின்றனர். தொழிலாளர் வர்க்கம் திட்டமிட்டு நசுக்கப்படுகிறது. பெரியார் கொள்கைக்கும் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கும் விரோதமான காரியங்கள் - அந்த கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் நபர்களின் தூண்டுதலோடு நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பரிபாலனம் நடக்கவில்லை! மாறாகப் பழி வாங்கும் நடவடிக்கைகள்தான் பெருகிடக் காண்கிறோம். லஞ்சப் பணம் கோடிக்கணக்கில் நடமாடுகிறது. ஊழல்கள் கப்பல் கப்பலாகப் பெருகிடுகின்றன!

இத்தகைய மக்கள் விரோத ஆட்சி இன்று இந்திரா காங்கிரசைத் துணைக்குச் சேர்த்துக்கொண்டு நாகையில் தோற்று - தஞ்சையில் எதிர்க்கட்சியான தி.மு.க.வை தோற்கடித்திருக்கிறது!

இரண்டு ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் நாகை இடைத்தேர்தலில் கிடைத்த தோல்வியை அ.தி.மு.க. மறைக்க முனைவது நெருப்புக் கோழி தன் தலையை மட்டும் பொந்துக்குள் விட்டுக் கொண்டு உடல் முழுதும் மறைந்து விட்டதாக எண்ணிக் கொள்ளும் என்பார்களே; அதைப் போலத்தான் இருக்கிறது!

தொடர்ந்து ஆளுங் கட்சி தோல்விகளைத் தழுவிக் கொள்ளத்தான் போகிறது. தேர்தலுக்காக மட்டுமல்ல, நமது தோழமைக் கட்சி அணி! நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போல தமிழ்நாட்டு நலன்கள் காத்திடவும் இந்தியாவில் மீண்டுமொரு முறை சர்வாதிகாரம் பரவவிடாமல் தடுக்கவும் நமது அணிக்கு நிரம்ப வேலையிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(24-06-1979)

668. எதிர்காலப் பலன்களை எட்டுவது எப்படி?

உடன்பிறப்பே,

ஜாதகம் பார்ப்பது, ஆரூடம் கணிப்பது, கைரேகை பார்த்துச் சொல்வது போன்ற செயல்களில் என்றைக்குமே நம்பிக்கையில்லாதவன் நான்.

ஆனால் சில சமயம் சில ஆரூடக்காரர்கள், கைரேகை பார்ப்போர் என்னை நெருங்கி என் எதிர்காலத்தைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்களிடம் நான் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறேன், அவற்றில் எனக்கு நம்பிக்கையில்லையென்று!

உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. தயவு செய்து பிறந்த நாள் - நேரம் - ஆகியவற்றைச் சொல்லுங்கள் என்பார்கள்.

அதுதான் எல்லோருக்கும் தெரிந்த நாளும் நேரமுமாயிற்றே - என் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தொகுத்து எழுதும்போதே அவைகளை விவரமாகச் சொல்லியிருக்கிறேனே! அதில் என்ன ரகசியம் என்று நான் பதில் அளித்து அவர்களை அனுப்பி வைப்பேன்.

சில நாட்களுக்குப் பிறகு அவர்களிடமிருந்து எனக்கு நீண்ட கடிதம் வரும்.

நட்சத்திரம், லக்னம், ராசி இவற்றுக்கான பலன்களை எழுதி எல்லையற்ற சிறப்பு அம்சங்களை எடுத்துச் சொல்லி ஜாதகம் கணித்திருப்பார்கள். சிரித்துக் கொண்டே அவற்றைப் படித்துப் பார்ப்பேன்.

அவர்கள் சொன்னது போல எதுவும் இதுவரையில் நடந்தது இல்லை.

சில ஆரூடக்காரர்கள் அடிக்கடி தொலைபேசி வாயிலாக எனக்கு அன்புத் தொல்லை கொடுப்பார்கள்.

என் பிறந்த நாள் - பெயர் ராசி - இவைகளை வைத்து எதிர்காலப் பலன்களைத் தொலைபேசி வாயிலாகக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

எனக்கு அறவே நம்பிக்கையில்லையென்றாலும் அன்புடன் அவர்கள் அக்கறை மிகுந்தவர்களாகப் பேசும் போது எப்படித் தட்டிக் கழிக்க முடியும்.

என்னைப் பற்றிய எதிர்காலப் பலன் சொல்வதற்கு முன்வந்தவர்கள் யாருமே என்னிடம் அதற்கான பணமோ காசோ எதுவுமே கேட்டதில்லை.

அதனால் அவர்களின் முகத்திலடித்துப் பேசி விரட்டி விடும் செயலை நான் மேற்கொள்ள இயலவில்லை.

இந்திரா காந்திக்கு ஆரூடம் பார்ப்பதாகக் கூறிக்கொள்கிற ஒருவர் 1971-ஆம் ஆண்டு இறுதியில் என் இல்லத்திற்கு வந்தார். கை ரேகை பார்க்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நான் எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. பெரியார், அண்ணா வழியில் வந்தவன் என்று எவ்வளவோ கூறியும் அவர் விடுவதாக இல்லை. அவரது ஆசைக்காகக் கையை நீட்டினேன்.

எதிர்காலத்தைப் பற்றி அளந்து கொட்டினார். ஒரு ஆரூடக்காரரைப் போல அல்ல; அரசியல்வாதியைப் போல பல விஷயங்களைப் பரவலாகப் பேசினார். அவர் சொன்னது எதுவும் நடக்கவில்லை. அவர் சொல்லும்போதே எனக்குத் தெரிந்ததுதான் அது!

அதே நண்பர் சமீபத்தில் சண்டே என்ற ஆங்கில இதழில் நண்பர் மனோகரன் அவர்கள் என் ஜாதகத்தை வாங்கிக்கொண்டு போய் 1972-இல் அவரிடம் காட்டியதாகவும், அவர் சொன்ன எதிர்காலப் பலன்களின் அடிப்படையில் நண்பர் மனோகரன் அவர்கள் சுதாரித்துக்கொண்டு தி.மு.க.விலிருந்து எச்சரிக்கையாக முன்கூட்டியே விலகிவிட்டதாகவும் கூறியிருப்பது அப்பட்டமான பொய்யாகும். இது நண்பர் மனோகரன் அவர்களுக்கே இழிவு கற்பிக்கும் செயலாகும்.

1971-இல் கட்சியில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக அரசியல் ரீதியாக நண்பர் மனோகரன் விலகினாரே தவிர, ஆரூட ரீதியாக விலகினார் என்று இந்திராவின் சோதிடர் விளக்குவது ஏற்க முடியாத ஒரு செய்தியாகும்.

சோதிடம், இரேகை சாத்திரம் போலவே தான் ஏடு படிப்பது என்ற காரியமும்! அண்மைக் காலமாக ஏடு படிப்பது என்ற ஆரூடம் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

பல முக்கியமான ஊர்களில் அந்த ஏடுபடிப்போர் இருக்கிறார்கள். அவர்களிடமுள்ள ஏடுகளில் உலகத்தில் பிறந்த அத்தனை பேருடைய பெயர்களும் - அவர்களின் கடந்த காலம் - நிகழ் காலம் - எதிர்காலம் பற்றிய குறிப்புகளும் இருக்கின்றனவாம். உலகில் இதுவரை பிறந்து மறைந்துள்ள கோடிக்கணக்கான மக்கள் - இனியும் பிறக்கப் போகிற பல்லாயிரம் கோடி மக்களின் குறிப்புகள் எப்படித்தான் அந்த ஏடுகளில் அடங்குமோ தெரியவில்லை!

கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு எங்கேயோ ஒரு ஊரில் சென்று ஏடு படித்து விட்டுக் குறிப்பெழுதிக் கொண்டு வந்த நண்பர் ஒருவரை, முன்னால் அமைச்சர் ஒருவர் என்னிடம் அனுப்பிவைத்தார். நான் அந்த நண்பரைத் திரும்ப அனுப்பி விட்டேன். நண்பரோ விடவில்லை. மீண்டும் மீண்டும் வந்தார். நான் என் கருத்தைக் கூறியதோடு, அவர் எழுதிக்கொண்டு வந்துள்ள குறிப்புக்களைப் பொறுமையாகக் கேட்க நேரமில்லையென்றும் சொல்லி அனுப்பிவிட்டேன்.

பிறகு அவரை அழைத்துக் கொண்டு அந்த முன்னாள் அமைச்சரே அலுவலகத்திற்கு வந்து விட்டார். நானும் கழகத்து முன்னணித் தலைவர்களும் அமர்ந்திருந்தோம்.

ஏடு படித்துக் குறிப்பெழுதிக் கொண்டு வந்திருக்கும் நண்பர் என்னதான் சொல்லுகிறார் எனக் கேளுங்களேன் என்று அந்த முன்னாள் அமைச்சர் எங்களை வற்புறுத்தினார். பொழுதுபோக்காக இருக்கட்டுமேயென்று அதைக் கேட்பதற்கு தயாரானோம்.

அவர் படித்ததில் அல்லது விளக்கியதில் எதுவும் தெளிவான குறிப்பாக இல்லை. ஏதோ ஒரு வார்த்தைக்கு எத்தனையோ பொருள்கள் நல்லதாகவும் எடுத்துக் கொள்ளலாம். கெட்டதாகவும் எடுத்துக் கொள்ளலாம். வந்த நண்பர் என்னவோ நல்லவர்தான்! ஏடு படித்தது எங்களிடம் எடுபடவில்லை!

இன்னமும் படித்து பட்டம் பெற்ற நண்பர்கள் பலரும், அறிவுத் தெளிவு படைத்த பலரும்கூட, ஆரூடம், ஏடு, இரேகை, சாதகம் எல்லாம் கிரகங்களின் கணக்கு! அதில் ஒன்றும் தெய்வீகமில்லை! எனவே அவைகளைப் பார்ப்பதில் தவறில்லை! என்று வாதிடுவதை நம்மால் காண முடிகிறது.

அவை உண்மையாகவே இருக்கட்டுமே; அவைகளை முன்கூட்டித் தெரிந்து கொள்வது தேவைதானா?

உதாரணமாக ஒருவருக்கு இன்னும் ஒரு வருடத்தில் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும் என்று சோதிடர் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதை முன்கூட்டியே தெரிந்து கொண்டால் ஒரு வருடத்தில் சாக வேண்டியவர் ஆறு மாதத்தில் அதே கவலையால் செத்து விட நேரிடுமல்லவா? நடப்பது நடந்தே தீரும் என்கிறபோது அவற்றை முன்கூட்டி தெரிந்து கொண்டு கஷ்டப்படுவானேன்?

சரி, நல்ல விஷயங்களுக்காகவே சோதிடம் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். வசிட்டர் பார்த்துக் குறித்துக் கொடுத்த நல்ல நாளில் தானே இராமன் முடி சூடிக் கொள்ளாமல் காடேக நேரிட்டது என்று இராமாயணமே கூறுகிறது!

சாதகப் பொருத்தம் பார்த்து நடைபெற்ற திருமணங்கள் எத்தனை! அவற்றில் மனைவியை இழந்தோர் கிடையாதா? மாங்கல்யமிழந்தோர் தொகைதான் என்ன குறைவா?

சோதிடம், ஏடு, இரேகை இவற்றில் தெய்வீகமில்லை யென்றும் ஏதோ சில வகைக் கணக்கு என்றும் புதிய கோலம் பூண்டு அந்தப் புரட்டுகள் இப்போது புறப்பட்டிருக்கின்றன!

என் இளமைப் பருவத்திலேயே என்னை வளர்த்த வீட்டாரை ஏமாற்றிட முனைந்த சோதிடப் புரட்டரை நான் நேருக்கு நேராக அம்பலப்படுத்திய கதையை ஏற்கனவே நெஞ்சுக்கு நீதி நூலில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

அன்று முதல் இன்று வரை என் அனுபவத்தில் சோதிடம் என்பது தெய்வீகமெனக் கூறப்பட்டாலும் சரி! அல்லது ஒரு விஞ்ஞானக் கணக்கு என விவரிக்கப்பட்டாலும் சரி! அதில் நம்பிக்கை எள்முனையளவும் எனக்கு ஏற்பட்டதில்லை.

பாவம்! ஆசையாகச் சொல்கிறவர்கள் முகத்தை முறிக்கக்கூடாதே என்று செவிமடுத்திருப்பேனேயல்லாமல் அவர்கள் சொன்ன பலன்களை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு அவற்றை எதிர்பார்த்து ஏமாந்து போனவனல்ல!

இந்தக் கடிதம், இந்திரா காந்தியின் சோதிடர் வெளியிட்ட கருத்துக்கு மறுப்பாக மட்டுமல்ல! பொதுவாக, நமது மக்கள் இத்தகைய எதிர்காலப் பலன்களை சோதிடத்தின் மூலம் பெற முனையாமல் சோர்வற்ற உழைப்பின் மூலம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்துவதற்காகவும் எழுதப்படுவதாகும்.

அன்புள்ள,

மு. க.

(26-06-1979)

669. ஒப்பிட்டுக் காட்டுக!
உண்மைகளை உணர்த்துக!

உடன்பிறப்பே,

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் திரு. ஓ.வி. அளகேசன் அவர்கள் தஞ்சை, நாகை இடைத்தேர்தல்களில் எம்.ஜி.ஆர். அரசின் அத்துமீறிய நடவடிக்கைகளையும், ஜனநாயக விரோதப் போக்குகளையும், அரசின் செலவில் செய்யப்பட்ட தேர்தல் நேரத்து விளம்பரங்களையும் தேர்தல் கமிஷனுக்குச் சுட்டிக்காட்டி விரிவான கடிதம் எழுதியிருப்பதாக ஏடுகளில் செய்தி கண்டேன்.

அவர் எழுதியுள்ள கடிதத்திற்கு சான்றுகள் வழங்கும் வண்ணம் இதோ அரசாங்க விளம்பரங்கள்!

இங்கே இணைத்திருக்கும் விளம்பரங்கள் சிறிய அளவில் பிளாக் செய்யப்பட்டவை. ஆனால் இவைகள் ஏடுகளில் அரைப் பக்கம், கால் பக்கம், முழுப்பக்கம் என்ற அளவில் தேர்தலுக்கு நாலைந்து நாட்களுக்கு முன்பிருந்தே வெளியிடப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு எந்த அரசும் இதுவரை இந்தச் சலுகைகளை வழங்கியதில்லை என்ற விமர்சனப் பிரச்சாரத்துடன் இந்த விளம்பரங்கள் ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டன அரசின் செலவில்!

அதேபோல் இந்த விளம்பரங்கள் ஆயிரக்கணக்கில் வண்ண வண்ணச் சுவரொட்டிகளாக அரசின் செலவில் அச்சியற்றப்பட்டு அரசின் அதிகாரிகளால் தஞ்சை, நாகை ஆகிய இரு தொகுதிகளிலும் பட்டி தொட்டியெங்கும் தேர்தல் நேரத்தில் ஒட்டப்பட்டிருந்தன. எல்லா விளம்பரங்களிலும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கரம் கூப்பி ஓட்டுக் கேட்கும் புகைப்படங்கள் காட்சியளித்தன!

விளம்பரமே விரும்பாத முதலமைச்சர் என்று பெரிய விளம்பரம்! அரசாங்கம் வெளியிடும் எம்.எல்.ஏ.க்களுக்கான டைரியிலிருந்து - தேர்தல் நேரத்தில் அரசாங்கச் செலவிலும் முதலமைச்சருக்கு ஏடுகளிலும் சுவர்களிலும் விளம்பரம்! இதற்குப் பெயர் ஊழல் இல்லாத ஆட்சி! புனிதமான ஆட்சி! இப்படியொரு பொருத்தமற்ற பாராட்டு இந்த ஆட்சியைப் பற்றி!

திண்டுக்கல் இடைத் தேர்தலின் போது தி.மு.க. ஆட்சி நடைபெற்றது! தேர்தல் பிரச்சாரத்திற்கென ஏடுகளில் தரப்பட்ட எந்த விளம்பரமும் அரசாங்கச் சார்பிலோ - அரசாங்கச் செலவிலோ செய்யப்படவில்லை! தி.மு.கழகத் தலைமை நிலையத்தின் செலவிலேயும் பொறுப்பிலேயும்தான் அந்த விளம்பரங்கள் அப்போது தரப்பட்டன. தி.மு.க. என்று விளம்பரங்களின் முடிவில் குறிப்பிட்டுள்ளதை நான் இணைத்துள்ள மாதிரி விளம்பரங்களில் காணலாம்.

ஆனால் இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடந்திருப்பது என்ன?

நாற்பது கோடி ரூபாய் கடன் சலுகையாம்! எந்த விவசாயியும் அந்தச் சலுகையால் பயன் பெற்றதாகக் கூறவில்லை. கட்சிச் சார்பற்ற விவசாயிகளின் சங்கங்களானாலும் அல்லது அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய விவசாயிகளின் சங்கங்களானாலும் இந்த நாற்பது கோடி ரூபாய் கடன் சலுகையென்பது ஒரு கண்துடைப்பு வேலை என்றுதான் தெரிவித்திருக்கின்றன.

அதற்குத் தேர்தல் வேளையில் இத்தனை விளம்பரங்கள் ஏன்? அதுவும் அரசாங்கப் பணத்தை வாரி இறைத்து? இதற்கு எம்.ஜி.ஆர். சொல்லப் போகும் பதில் என்ன?

தஞ்சை, நாகை தேர்தலுக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு அதாவது 12-6-79 தேதியன்று மட்டும் - தினமணி, தினமலர், தினத்தந்தி, மக்கள் குரல் மற்றும் சில ஏடுகளில் நான்கு பக்கங்களில் விளம்பரங்கள்!

தக்காவிக் கடன் பற்றி ஒரு விளம்பரம். வாணிபப் பயிர் நில மேம்பாட்டுக் கடன் பற்றி ஒரு விளம்பரம். கிணற்றுக்கான கடன் பற்றி ஒரு விளம்பரம். இத்தனையும் அரசின் செய்தித்துறை விளம்பரங்கள்! நான்காவதாக மின்சார வாரியத்தின் செலவில் ஒரு விளம்பரம்! இத்தனையும் அந்த ஏடுகளில் நான்கு பக்கங்களில்!

மறுநாள் 13-6-79 தேதியன்று தினமணி, தினத்தந்தி, தினமலர், மக்கள் செய்தி, அண்ணா, தினகரன், மக்கள்குரல், மாலைமுரசு, மற்றும் சில ஏடுகளில் மூன்று பக்கங்களில் தனித்தனியாக மூன்று கால் பக்க விளம்பரங்கள்!

ஒவ்வொன்றும் விவசாயிகளுக்கான கடன் சலுகைகள் என்ற பெருந்தலைப்பில் அரசின் செலவில் வெளியிடப்பட்ட விளம்பரங்கள்தான்!

அடுத்த நாள் 14-6-79 தேதியன்று வாடிய பயிருக்கு மழையென அரசின் உதவிகள் என்ற தலைப்பில் தினமணி, தினகரன், தினத்தந்தி, தினமலர், மக்கள்குரல், அண்ணா, மற்றும் சில ஏடுகளுக்கு அரைப்பக்க விளம்பரம்! அதிலும் விளம்பரம் விரும்பாத முதல்வர் வாக்காளர்களைக் கும்பிட்டு நிற்கும் கோணத்தில் புகைப்படம், தவறாது இடம் பெற்றிருந்தது!

இஃதன்னியில் வீட்டுவசதித் துறையில் தமிழ்நாடு விரைந்து முன்னேறுகிறது என்ற விளம்பரம் 14, 15 ஆகிய நாட்களில் அந்தத் துறையின் சார்பில் எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக வாடிய உழவர்க்குக் கோடி நன்மைகள் என்ற தலைப்பில் 15-6-79, 16-6-79 ஆகிய நாட்களில் தினமணி, தினத்தந்தி, மாலைமுரசு முதலிய ஏடுகளில் அரைப்பக்க விளம்பரங்கள்!

இந்த விளம்பரத் தொகுப்புக்கள் சிலவற்றை இந்து, எக்ஸ்பிரஸ் ஆகிய ஏடுகளிலும் அரசின் செலவில் வெளியிட்டிருக்கிறார்கள். உடன்பிறப்பே, திண்டுக்கல் இடைத்தேர்தலின் போது கழக அரசின் சாதனைகளை கட்சியின் செலவில் விளம்பரப்படுத்திக் கொண்ட நிலையையும் - இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியில் அரசின் சாதனைகளை இடைத்தேர்தல் நேரத்தில் அரசின் செலவிலேயே அரசு முத்திரையோடு விளம்பரப்படுத்திக் கொண்டுள்ள நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி, உண்மைகளை ஊருக்கு உணர்த்தவே இந்தக் கடிதம் எழுதி, விளம்பரங்களின் மாதிரிப் பிரதிகளையும் இத்துடன் இணைத்திருக்கிறேன்.

பகல்வேடதாரிகளின் முகமூடியைக் கிழிக்க இவற்றைப் பயன்படுத்திக்கொள்க!

அன்புள்ள,

மு. க.

(27-06-1979)

670. அறிக்கையும் அவலமும்! 1

உடன்பிறப்பே,

இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுகிறதாம் இந்த ஆட்சிக்கு! விழா எடுக்க வேண்டுமென்று அறிக்கைகள் பறக்கின்றன! எம்.ஜி.ஆர். அரசின் இரண்டு ஆண்டு காலச் சாதனைகளை பட்டிதொட்டியெல்லாம் பரப்புவதற்கு ஏற்பாடுகளாம்! அதில் முக்கியமாகத் தஞ்சையில் இந்திரா காங்கிரஸ் பெற்ற வெற்றி குறித்து மட்டுமே வீர முழக்கங்கள் ஒலிக்கப்பட வேண்டுமாம். நாகையில் ஆளுங்கட்சி தோல்வியடைந்ததைப் பற்றியோ அல்லது நாகையில் ஒரு இடைத்தேர்தல் நடந்தது பற்றியோ மக்களை நினைக்க விடாமல் ஒரேயடியாக இருட்டடிப்புச் செய்து விட வேண்டுமாம்.

இரண்டாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடுமாறு விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மிக முக்கியமான பகுதிகள் எவையெவை தெரியுமா?

தந்தை பெரியார் கொள்கை வழிநின்று பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றி மக்களின் ஆதரவை - நம்பிக்கையைப் பெற்று ஆட்சி நடக்கிறது.

இதனை விழா நிகழ்ச்சிகளின்போது விளக்கிட வேண்டுமாம்.

பெரியாரின் கொள்கை வழி நிற்பதாகக் கூறிக் கொள்பவர்கள் பெரியாருக்குக் காட்டும் மரியாதை எத்துணை மகத்தானது தெரியுமா?

வேலூரில் பெரியார் நூற்றாண்டு விழா! ஊர்வலத்தை ஒரு மேடையில் நின்று முதல்வர் பார்வையிட்டு - ஊர்வலத்தில் செல்பவர்களை ஆசீர்வதித்து அனுப்புவார் என்பதற்காகச் சுமார் பதினைந்தாயிர ரூபாய் செலவில் ஒரு சிறப்பு மேடை! அலங்காரங்கள் ஏராளம்! அய்யோ பாவம்! ஊர்வலத்தில் தலைவர்கள் அம்போ என்று போனார்கள்! முதல்வர் அந்தப் பெருமைமிகு மேடைக்கு வரவேயில்லை. மேடை காலியாகவே கிடந்தது! விழா நிகழ்ச்சிக்கு மட்டும் முதல்வர் தாமதமாக வந்தார்.

அது கூட வரவில்லை காஞ்சிபுரத்தில் பெரியார் விழாவுக்கு! முதல்வர் வசதிக்காக என்ற பெயரால் இரண்டு முறை தேதிகள் தள்ளி வைக்கப்பட்டன. ஆனால் காஞ்சிபுரம் பெரியார் நூற்றாண்டு விழாவுக்கு முதலமைச்சர் போகாமலே தட்டிக் கழித்து விட்டார்!

அதைவிடக் கொடுமை திருச்சியிலே! ஊர்வலத்தில் அணிவகுத்து வருவோரைக் காணவும் வாழ்த்தவும் முதல்வர் நின்று தரிசனம் தரும் அழகிய மேடையொன்று மிகக் கரிசனத்துடன் அமைக்கப்பட்டிருந்தது.

திருச்சியிலேயிருந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெரியார் விழா ஊர்வலம் காண அந்த மேடைக்குப் போகவே இல்லை. நள்ளிரவு வரையில் விழா நடத்துவோர் காத்திருந்தனர்.

ஜெயங்கொண்டம் நிகழ்ச்சிக்குச் சென்ற எம்.ஜி.ஆர். திரும்பவும் திருச்சியில் வந்து ஓய்வெடுத்துக் கொண்டாரே தவிர விழாவுக்கு வரவில்லை.

ஆனால் அடுத்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அதே திருச்சியில் நடன விழா ஒன்றுக்கு முதலமைச்சர் தலைமையேற்று நீண்ட பேருரையொன்றினை நிகழ்த்தினார்.

பெரியாரின் குடும்பத்தைப் பற்றி மாசு கற்பித்து எழுதிய ஆஸ்தானக் கவிராயரை அரசு நியமித்துள்ள பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினரே கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனராம்.

அதுபற்றி முதல்வர் அந்தக் குழுவினர் மீது கோபங்கொண்டார் என்று செய்தி வந்ததே தவிர வேறு நடவடிக்கை எதுவும் இதுவரையில் எடுத்திடவில்லை.

உடன்பிறப்பே! பெரியாரின் கொள்கை வழி நடப்பதாகக் கூறிக் கொள்பவர்கள் பெரியாருக்குத் தந்துள்ள மரியாதைப் பட்டியல் இது!

பெரியாரும், அண்ணாவும் அவர்தம் வழி வந்த நாமும் கண்ணேபோல் காத்து வரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை மெல்ல மெல்லச் சாகவிடும் குறிக்கோள் கொண்டது எம்.ஜி.ஆர். அரசு என்பதை இரண்டாண்டு காலத்து நடைமுறை விளைவுகளின் வாயிலாக பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்கள் அறிந்து கொண்டுதானேயிருக்கிறார்கள்!

பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்களாம்!

அண்ணாவின் பெயரால் வைக்கப்பட்டுள்ள கட்சிக்கே ஆரம்பித்துச் சுமார் எட்டாண்டு காலமாகியும் அனைத்து அமைப்புக்களிலும் எல்லாமே நியமனங்கள்தான்! பாவம், ஜனநாயகம்!

இந்த அழகில் - ஆட்சியில் வேறு அண்ணாவின் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்களாம்!

1966-ஆம் ஆண்டு மாநிலங்களவையில் உரையாற்றிய அண்ணா அவர்கள் பிரதமர் இந்திராவைப் பார்த்து சொன்னார், எமர்ஜன்சியை இன்னமும் வைத்துக்கொண்டு ஜனநாயகம் குறித்துப் பேச உங்களுக்குத் தகுதி இல்லை! என்பதாக!

அப்போது இருந்தது சாதாரண எமர்ஜன்சிதான்! அதையே எதிர்த்து முழக்கினார் ஜனநாயகக் காவலர் அறிஞர் அண்ணா!

ஆனால் 1975-இல் இந்திரா பிரகடனப்படுத்திய எமர்ஜன்சி மிகப் பயங்கரமானது!

இரண்டு லட்சம் அரசியல்வாதிகளை விசாரணையின்றி மிசா கைதிகளாக சிறையிலடைத்து வதைத்தது!

அந்த எமர்ஜன்சியைத் தி.மு.கழகம், செயற்குழுத் தீர்மானத்தின் மூலம் கண்டித்துக் குரல் எழுப்பியது!

ஆனால் அண்ணாவின் ஜனநாயக நெறியைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் எம்.ஜி.ஆர். அந்த எமர்ஜன்சியை வரவேற்றுப் பாராட்டி உடனே இந்திரா காந்தி அம்மையாருக்குத் தந்தி கொடுத்தார்.

அதுமட்டுமல்ல! இப்போதும் எமர்ஜன்சியை ஆதரித்தது சரிதான் என்றும், அதைப் பிரகடனப்படுத்தியது தவறில்லையென்றும் கூறிக்கொண்டு வருகிறார்.

விழா பற்றிய அறிக்கையில், உடன்பிறப்பே! இன்னொரு பகுதி என்ன தெரியுமா?

நாணயமாக - நேர்மையாக - உண்மையாக - லஞ்ச ஊழல்களுக்கு இடம் தராமல் எம்.ஜி.ஆர். அரசு நடக்கிறதாம்.

இப்படி அந்த அறிக்கை கூறுகிறது! அதுபற்றி விளக்கமாக நாளைய கடிதத்தில் எழுதுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(28-06-1979)

671. அறிக்கையும் அவலமும்! 2

ஒய்யாரக்கொண்டையாம் தாழம்பூவாம்!

உடன்பிறப்பே,

1976-ஆம் ஆண்டு சென்னை சிறைச்சாலையில் மிசா கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த தி.மு.க., தி.க., மார்க்சிஸ்டு, பழைய காங்கிரஸ், மற்றும் சில அரசியல் கட்சியினரை மிருகத்தனமாகத் தாக்கினர்.

ஓரிருவரைப் பூட்ட வேண்டிய கொட்டடிகளில் எட்டு பேர் ஒன்பது பேரைப் பூட்டிக் கொடுமை புரிந்தனர்.

அந்த அக்கிரமங்கள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. ஜனதா ஆட்சி உருவான பிறகு, கவர்னர் பட்வாரி அவர்கள் தமிழகத்தில் பொறுப்பேற்றவுடன் மிசா காலத்தில் சென்னை சிறைக் கொடுமைகளைப் பற்றி விசாரித்து அறிக்கை தருவதற்காக நீதிபதி இஸ்மாயில் கமிஷனை நியமித்தார். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை முற்றுப்பெற்று வெளியிடப்படும்போது எம்.ஜி.ஆர். ஆட்சி ஏற்பட்டு விட்டது.

அந்த அறிக்கை என்ன ஆயிற்று? என்று சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளும் குரல் எழுப்பிய பிறகு ஒருநாள் சட்டமன்றத்தில் முதல் அமைச்சர் சொன்னார், அது கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது - இன்னமும் அரசுக்குத் திருப்பி அனுப்பப்படவில்லையென்பதாக!

முதலமைச்சர் இப்படிப் பதில் சொன்ன அடுத்த நாளே கவர்னர் அதை மறுத்து அந்த அறிக்கை அரசாங்கத்திடமிருந்து தனக்கு இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லையென்று கூறி விட்டார்.

முதலமைச்சர் இவ்வாறு சட்டமன்றத்திற்குத் தவறான தகவலைத் தரலாமா? என்று அவையிலேயே கேட்டோம். முதல்வர் மழுப்பினார்.

நான் கவர்னருக்கு அனுப்பச் சொல்லி அதிகாரிகளிடம் கொடுத்து விட்டேன். அவர்கள் அனுப்பாமல் இருந்து விட்டார்கள். அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படியொரு பதிலைச் சொன்னார். இதுவரையில் அந்தப் பொறுப்பற்ற அதிகாரியின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து முதலமைச்சர் எந்தவிதமான அறிவிப்பையும் கடந்த ஓராண்டு காலத்திற்குள் செய்திடவில்லை.

எம்.ஜி.ஆர். அரசு, நாணயமான அரசு என்று விழாவுக்கான அறிக்கை தயாரிக்கிறார்களே, அந்த நாணயத்திற்கு இதைவிட எடுத்துக்காட்டு ஏதாவது வேண்டுமா?

அதுதான் போகட்டும்! 1978-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை அரசின் சார்பில் அச்சிட்டுக் கொடுத்துவிட்டார்கள்!

அந்த அறிக்கையில் சிறையில் நடைபெற்ற கொடுமைகள் உண்மைதான் என்றும், அதற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

1978 முடிந்து 1979-ஆம் ஆண்டிலும் பாதி முடிவடையப் போகிறது. இந்த ஒன்றரை ஆண்டுக் காலமும் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் இல்லை. கோப்புகள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

நாணயமும் நேர்மையும் உள்ள அரசாங்கம் - இந்த அரசாங்கம் என்று விழா எடுக்கச் சொல்லி அறிக்கை கூறுகிறதல்லவா? நாணயத்துக்கும் நேர்மைக்கும் இப்போது பொருள் புரிகிறதா?

இந்திராவுக்கு கறுப்புக்கொடி காட்டச் சென்ற அன்னை மணியம்மையார் அவர்களை போலீஸ் அதிகாரிகள் நாராச நடையில் திட்டினார்கள் என்று அந்த அம்மையாரே

கையெழுத்திட்டுச் சோமசுந்தரம் கமிஷன் முன்னால் வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள்.

அந்த அதிகாரிகளுக்குப் பரிசும், பதவி உயர்வுகளும் அளிக்கப்பட்டதே தவிர அவர்கள் மீது ஒரு எள்ளளவு - அல்லது எள்ளின் முனையளவு நடவடிக்கையாவது உண்டா?

நேர்மை எப்படிக் கொடி கட்டிப் பறக்கிறது பார்த்தாயா?

திருவில்லிபுத்தூர் கூட்டத்திற்குச் சென்று திரும்பிய இளங்கொழுந்து இளஞ்செழியன் வழிமறித்துக் கொல்லப்பட்டான். காரில் கல் எறிந்து அந்தப் பாலகனைக் கொன்றார்கள்!

கல்லால் அவன் உயிர் போகவில்லை. கல் எறிந்ததால் கார் விபத்துக்கு உள்ளாகி அவன் செத்து விட்டான் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை விட்டார்!

மாநில ஆட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோ, அது கொலையும் அல்ல! கொலை முயற்சியும் அல்ல! என்று மதுரைக் கூட்டத்திலே தீர்ப்பு வழங்கி - போலீசார் புலன் விசாரணைக்கே இடமில்லாமல் செய்துவிட்டார்.

அடடா! நேர்மை எப்படி நிமிர்ந்து நிற்கிறது பார்த்தாயா?

இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கு அந்தக் கொலையைவிட மர்மமாக அடங்கிப் போய்விட்டது! இது எங்களுக்கு ஒரு சவால்! கண்டுபிடித்தே தீருவோம்! என்று காவல்துறை அதிகாரிகள் தோள் தட்டினர்! பிறகு அவர்களை எந்த சக்தி தடுத்ததோ தெரியவில்லை! சவாலின் வால் அறுந்து போய்விட்டது!

முப்பத்தி மூன்று இடங்களில் காயப்படுத்தப்பட்டு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி எம்.பி. முருகையன் கொல்லப்பட்டார்!

கொலை செய்தது ஒருவனல்ல, பலர்! இப்படி நாடே சொன்னது! அந்தச் சதி செய்தவர்களே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்! அந்த வட்டார முழுவதும் இதே கருத்தைத் தெரிவித்தது!

புலன் விசாரணை ஒரு போலி நாடகமாக இருந்ததே தவிர, ஆளுங்கட்சியினர் தப்புவதற்கு வழிவகை செய்யப்பட்டதே தவிர, அங்கே நீதி எங்கே? நேர்மை எங்கே? நாணயம் எங்கே?

தஞ்சை மார்க்சிஸ்ட் தலைவர் வெங்கடாசலம் என்ன ஆனார்? எப்படிக் கொல்லப்பட்டார்? இதுபற்றி அக்கறையுடன் விசாரிப்பதற்காகச் சொல்ல வேண்டிய முதல்வர் தஞ்சைத் தேர்தலிலும், நாகை தேர்தலிலும் கேலி பேசினார் மேடைகளில்! இரண்டு ஆண்டுக்கு மேலாகிறது வெங்கடாசலம் வீழ்த்தப்பட்டு! இதுவரை ஏதாவது விசாரணை அறிக்கை உண்டா?

நீதி, நேர்மை, நாணயம் - அரசோச்சுகிறதாம் எம்.ஜி.ஆர். ஆட்சியில்! இதற்காக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா எடுக்க வேண்டுமாம்!

அ.தி.மு.க. காண்ட்ராக்டர் புட்லூர் தண்டபாணி கொலை! அவரே கைப்பட எழுதியுள்ள கடிதங்களின்படி பணத் தகராறு காரணமாக ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர்தான் அவரது கொலைக்குக் காரணம் என்றாகிறது! அத்தனை ஆதாரங்களையும் சட்டமன்றத்தில் படித்துக் காட்டினேன். நாணயமுள்ள அரசாம்! நேர்மையான அரசாம்! இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

நாணயம்
நேர்மை
உண்மை
லஞ்ச ஊழல் இல்லாமை

எம்.ஜி.ஆர். அரசு தனக்குத் தானே படித்துக் கொள்ளும் பாராட்டுப் பத்திரம் இது!

எம்.ஜி.ஆர். கொடுத்த புகார்ப் பட்டியலில் யார் யார் ஊழல் பேர்வழிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தார்களோ, அவர்கள் எல்லாம் மிகப்பெரும் பகுதியினர் இன்று எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலே! அவர்களிலே ஒருவர்தான் அறிக்கையே விடுகிறார், இது ஊழலற்ற அரசு என்று!

நித்தநித்தம் லஞ்சம் வாங்குகிற ஒரே ஒரு அமைச்சர் இவர்தான் என்று எம்.ஜி.ஆர். புகாரில் குறிப்பிட்டாரே, அவர்தான் இன்று ராஜ்யசபாவில் எம்.ஜி.ஆர். கட்சிக்குத் தலைவி!

நெக்லஸ் என்றும், பாடப் புத்தக ஊழல் என்றும் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டு, சர்க்காரியா கமிஷன் வரையில் வந்த விவகாரங்களுக்குரியவர்தான் இன்று எம்.ஜி.ஆர். கட்சியின் பொதுச்செயலாளர்!

எம்.ஜி.ஆர். புகாரில் குண்டர்களின் அரசன் என்றும் - நாணயமற்றவர் என்றும் சிறப்பிக்கப்பட்டவர்தான் இன்று எம்.ஜி.ஆர். கட்சியில் மேயர்!

மிசாக் கைதிகளை விடுவிக்க ஒரு லட்ச ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று எம்.ஜி.ஆர். அவர்களாலும் அவரது தளபதிகளாலும் குற்றம் சாட்டப்பட்டவர்தான் இன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில் தூதுவர்!

உடன்பிறப்பே, தி.மு.க. அமைச்சரவை மீதோ - தி.மு.க. தலைவர்கள் மீதோ 1972-இல் கொடுக்கப்பட்ட புகார்களை அப்போதே நாம் மறுத்திருக்கிறோம்! சர்க்காரியா கமிஷனிலும் மறுத்திருக்கிறோம்! அந்த கமிஷனில் அதிகாரிகளும், மற்ற சாட்சிகளும் எப்படி மிரட்டப்பட்டனர் என்பதையும் நாட்டுக்கு அறிவித்திருக்கிறோம்.

கமிஷன் அறிக்கைகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளும் - இனிமேலும் தொடரப்படக்கூடிய வழக்குகளும் - நீதிமன்றங்களின் விசாரணைக்குப் பிறகே சரியானவைகளா? தவறானவைகளா? என்று தெரியும்.

அதற்குள் அவசரப்பட்டு நம் மீது புழுதியை வாரித் தூற்றுகிற எம்.ஜி.ஆரும் அவரது கட்சியினரும், தங்கள் பக்கத்தில் நிற்போரையும் பாத பூஜை செய்வோரையும், பதவி பெற்று உலா வருவோரையும், ஒரு முறையாவது திரும்பிப் பார்த்துக்கொள்ள வேண்டாமா?

அ.தி.மு.க. எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போது சட்டமன்றத்தில் பேசிய காரசாரமான உரைகளும், கடுமையான விமர்சனங்களும், குறிப்பிட்ட சில அமைச்சர்களுடன் நடத்திய மோதுதல்களும் 1972 முதல் 1975 முடிய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளாக அச்சியற்றப்பட்டிருக்கின்றனவே அவற்றை மறுபதிப்பாக - மலிவுப் பதிப்பாக வெளியிட முடியுமே!

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்! உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!

என்ற கிராமியப் பழமொழிக்கு உதாரணமாகத் திகழும் இந்த உத்தமர்களா (?) ஊழல் பற்றியும், நேர்மை பற்றியும், நாணயம் பற்றியும் உதடு கிழியப் பேசுவது? இன்னும் இருக்கிறது நிறைய! அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன் அவற்றை!

அன்புள்ள,

மு. க.

(29-06-1979)

672. அறிக்கையும் அவலமும்! 3

புனித ராஜ்யம் ஒரு போலித்திரை!

உடன்பிறப்பே,

13-2-74 மாலைமுரசு பத்திரிகையில் பெருந்தலைவர் காமராசர் கூறிய கருத்து ஒன்று வெளியாகியிருந்தது.

எம்.ஜி.ஆர். அவர்கள், தாய்க் குலத்தைத் தாசிக்குலம் என்றும், தமிழ்நாட்டுப் பெண்கள் அவர்களது கணவன் பேச்சைக் கூடக் கேட்கமாட்டார்கள், தனது பேச்சைத்தான் கேட்பார்கள் என்றும் பேசியதைக் காமராசர் அவர்கள் கடுமையாகக் கண்டித்துக் கூட்டங்களில் பேசிய காலம் அது!

அப்போதுதான் 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி பதின்மூன்றாம் நாள் மாலைமுரசு இதழில் அவர் பேசியதாகக் கீழ்க்கண்டவாறு வெளியாகியிருந்தது.

நடிப்பில்தான் தகராறு! கருணாநிதியின் கணக்கில் தவறு இல்லை.

என்று அவர் எம்.ஜி.ஆர். பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

உடனே எம்.ஜி.ஆர். கட்சியின் ஏடான தென்னகம் கொதித்து எழுந்தது. 15-2-74-இல் காமராசர் விழுங்குகிறார் என்ற தலைப்பில் விளிம்பு கட்டிய செய்தியொன்று வெளியிட்டது.

அதில் கருணாநிதியின் கணக்கில் தவறில்லையா? காமராசரே! உமக்கு இவ்வளவு தடுமாற்றம் ஆகாதய்யா! என்று கேலி புரிந்திருந்தது! இதுவரையில் ஊழல் ஊழல் என்று கரடியாய்க் கத்தியதெல்லாம் பொய்தானா? என்று காமராசரைச் சாடியது அந்தத் தென்னகம் இதழ்!

உடன்பிறப்பே, அந்தத் தென்னகம் வாங்கிய கட்டிடம் - அதற்கென வாங்கிய இயந்திரம் - இவற்றில் எல்லாம் எவ்வளவு

ஊழல் மலிந்து கிடக்கிறது என்பது சிதம்பர ரகசியமல்ல! அப்போதே அம்பலத்திற்கு வந்து விட்ட விவகாரங்கள் தான்!

அந்தத் தென்னகத்தின் ஆசிரியராக இருந்த கே.ஏ. கிருஷ்ணசாமி இப்போது அமைச்சர்களிலே ஒருவர்! ஊழலை ஒழிப்பதே தான் பிறவி எடுத்ததின் பயன் என்று அவர் உரக்கப் பேசும்போது சிரிப்புத்தான் வருகிறது!

1977-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர்.ஆட்சி உருவாகிறது! 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் தேதியன்று தமிழ்நாடு பாடப் புத்தக நிறுவனத்திற்கும் குவாலிடி பிரிண்டர்ஸ் முழு உரிமையாளரான கே.ஏ. கிருஷ்ணசாமிக்கும் தேசிய மயமாக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் தொடர்பான அச்சு வேலைகளைச் செய்து தருவது பற்றிய ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிறது. நாற்பது லட்ச ரூபாய்க்கான ஒப்பந்தம்.

அதாவது அவர்கள் கட்சி ஆட்சிக்கு வந்த அடுத்த ஆண்டே இப்படியொரு ஒப்பந்தம்! இதில் ஊழலே இல்லையாம்! பரவாயில்லை! டெண்டர் விட்டுக் கொடுத்தார்களா, இல்லையா? தெரியாது!

அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட பிறகு 28-3-78 அன்று கே.ஏ. கிருஷ்ணசாமி மேலவைத் தேர்தலில் நின்று மேலவை உறுப்பினராகிறார். அடுத்து 7-5-78 அன்று அவர் அமைச்சராக்கப்படுகிறார்.

இனிமேல் - குவாலிடி பிரிண்டர்ஸ் உரிமையாளர் என்ற நிலையில் பாட நூல் நிறுவனத்தின் ஒப்பந்தக்காரராக இருக்கக் கூடாதென்று கிருஷ்ணசாமி முடிவுக்கு வருகிறார்.

எனவே அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டுத் தன் வேலையைப் பார்க்கலாம் என்று நினைத்தாரா என்றால் அதுதான் இல்லை! அந்த ஒப்பந்தத்தை மாற்றி குணாளன் என்பவரின் பெயரில் இருக்கிற மேகலை எண்டர்பிரைசிஸ் என்ற நிறுவனத்திற்குத் தருமாறு 10-4-78 அன்று பாட நூல் நிறுவனத்துக்குக் கடிதம் எழுதுகிறார்.

அவர் விருப்பப்படியே செய்வதற்குத் தனி நடவடிக்கை எடுக்கப்படுமென்று 12-4-78-இல் பதில் எழுதுகிறது பாட நூல்

நிறுவனம்! ஆனால் அப்படித் தனி நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை!

அவசர அவசரமாக கே.ஏ. கிருஷ்ணசாமி குறிப்பிட்ட மேகலை எண்டர்பிரைசிசுக்கு ஒப்பந்தம் மாற்றிக் கொடுக்கப்பட்டு விடுகிறது.

அந்த மேகலை நிறுவன உரிமையாளர் குணாளன் யார் தெரியுமா? கே.ஏ. கிருஷ்ணசாமியின் அண்ணன் மாணிக்கம் அவர்களின் மகன்!

பாட நூல் நிறுவனம் அரசுடன் தொடர்புடையது என்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது! அந்த நிறுவனத்தில் அமைப்பாளர் கிருஷ்ணசாமி, நாற்பது லட்ச ரூபாய்க்கான ஒப்பந்தம் செய்து கொள்கிறார்! அமைச்சர் கிருஷ்ணசாமியான பிறகு அந்த ஒப்பந்தத்தை அவரே அவரது சகோதரர் மகனுக்கு மாற்றிக் கொடுக்க ஆணை (?) பிறப்பிக்கிறார்.

இதற்குப் பெயர் ஊழலற்ற அரசாம்! முறைகேடுகளே இல்லாத துரைத்தனமாம்!

அமைச்சர் ஒருவரின் காரை எடுத்துக்கொண்டு அவரது அன்னையார் நாள்தோறும் குதிரைப் பந்தயத்துக்குப் போவார்களாம்! அதற்கு அமைச்சரின் செக்யூரிடிப் போலீசும் காவல் காத்திடக் கூடவே போவாராம்!

இந்த ஊழலை புகைப்படத்துடன் சட்டமன்றத்தில் காட்டியதற்குப்பிறகு அமைச்சர் மூன்று நாட்கள் சட்டமன்றத்துக்கே வரவில்லை.

பிறகு ஒருநாள் ஏதோ ஒரு மழுப்பல் அறிக்கையைப் படித்துவிட்டு வருத்தம் தெரிவித்துக் கொண்டு அந்த முறைகேட்டை மறைத்தே விட்டார்கள்.

சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் கல்லூரிக்கு எதிரே ஜோன்ஸ் சாலையும் அண்ணா சாலையும் சந்திக்குமிடத்தில் ஒரு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அண்ணா மூலிகைப் பண்ணை என்ற பெயர்ப் பலகையும் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார். அந்தச் சாலையை அகலப்படுத்தும் வரையில் அவர் அந்த இடத்தை காலி செய்ய

தேவையில்லையென்று அதிகாரியொருவரே அனுமதியும் வழங்கியிருக்கிறார்.

உடன்பிறப்பே! இதெல்லாம் அதிகார துஷ்பிரயோகம், ஊழல், முறைகேடு என்ற பட்டியலில் வராது போலும்! நேர்மை, உண்மை என்ற தலைப்புக்களில்தான் வரும்போலும்!

ராஜா முகமது என்ற அமைச்சர் சென்னை மாநகராட்சியில் செகரட்டரியாக இருந்தபோதே ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதற்காக முறைகேடான வகையில் முயற்சிகளை மேற்கொண்டதற்கான ஆதாரங்களை அவர் எழுதிய கடிதங்கள் வாயிலாகவே சட்டமன்றத்தில் விளக்கிக் கூறப்பட்டது!

அவர் அமைச்சரான பிறகு அவர் குடும்பத்துக்கு வாங்க இருந்த தோப்பு ஒன்றின் சம்பந்தமான சில கடிதப் போக்குவரத்துக்களை சட்டமன்றத்திலேயே படித்துக் காட்டியிருக்கிறேன்.

அதன் விபரம் வருமாறு:-

1978-இல் ஒரு கடிதம் சென்னையிலிருந்து பெரியகுளம் செல்கிறது. பெரியகுளத்தைச் சேர்ந்த கே. சீனிவாசன் என்ற வழக்கறிஞர் சென்னைக்கு வருகிறார். சென்னைக்கு வந்த அவர், ஒரு கடிதத்தை ராசா முகமது அவர்களுடைய தந்தையிடம் கொடுத்து அனுப்புகிறார். என்ன கடிதம் தெரியுமா?

டியர் அழகிரிசாமி,

இன்று நான் உனக்கு எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். இப்பவும் நம் தோப்பை கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கி விட்டேன். இந்த லெட்டர் கொண்டு வரும் நம் மந்திரியின் தகப்பனார் திரு. காதர் மைதீன் ராவுத்தர் அவர்களிடம் உடனே தோப்பை ஒப்புவித்து விடவும். மாயாண்டியையும், அவர் மனைவியையும் அவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்வதாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் பேசி வேலை செய்யச் சொல்லியும் தோப்பை (பொசஷன்) Possession கொடுத்துவிட்டு எனக்கு உடனே தபால் எழுதவும்.

இப்படிக்கு,

கே. சீனிவாசன்.

இப்படி நேரில் கொடுத்து அனுப்பிய கடிதம் போதாது என்று இன்லண்ட் கடிதம் ஒன்றை தபாலில் அனுப்புகிறார். அது வருமாறு:-

6, விஸ்வநாதன் தெரு,

சென்னை 28

15-2.78

டியர் அழகிரிசாமி,

நான் நேற்று உனக்கு தபாலில் எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். அதன் பிறகு பார்ட்டி வந்து தோப்பு கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். உனக்கும் நேற்று மந்திரி அவர்கள் தகப்பனார் மூலம் லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கிறேன். அவர் கொண்டு வந்து கொடுப்பார். தோப்பை உடனடியாக, அவரிடம் ஒப்புவித்து விடவும். நீ கணக்கை உடனே அனுப்பு. பணம் அனுப்பி விடுகிறேன். நான் இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் மதுரைக்கு வரப்போகிறேன். அப்பொழுது நீ அங்கு வந்தால் எல்லா விவரமும் பேசிக் கொள்ளலாம். தோப்பை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு எனக்கு உடனே பதில் போடவும். இங்கு எல்லோரும் சௌக்கியம். அங்கு எல்லோருடைய சௌக்கியத்திற்கும் உடனே பதில் போடவும்.

இப்படிக்கு,

கே. சீனிவாசன்.

தந்தை வாங்கினார் என்று ராசா முகமது சொல்லலாம். தந்தை வாங்குவதாக இருந்தால் பெரியகுளத்திலேயே பணத்தைக் கொடுத்திருக்கலாம். சென்னையில் அல்லவா தோப்புக்கான விலை பேசப்பட்டு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது!

இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில், அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் எல்லோரும் இதுபற்றி பேசத் தலைப்பட்டு மேடைகளிலும் இதுகுறித்து கூறப்பட்டு, அந்தக் காரியம் இடையே அப்படியே நின்றுவிட்டது. எனவே நடைபெற்ற ஒரு ஊழல் - அந்த ஊழலுக்காக சம்பாதிக்கப்பட்ட பணம் - அவைகள் அப்படியே

இருக்கின்றன. நடந்த விஷயங்களைத்தான் இந்தக் கடிதங்கள் நமக்குத் தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன.

இதனை அமைச்சர் சட்டமன்றத்தில் பொதுப்படையாக மறுத்தாரே தவிர, நான் கடிதங்களில் படித்துக் காட்டிய விபரங்கள் அப்படியேதான் இன்னமும் ஆதாரபூர்வமாக உயிரோடிருக்கின்றன.

இந்த விபரங்களைச் சட்டமன்றத்தில் சொல்லாமல் வெளியே சொன்னால் சொன்னவர் மீது வழக்குப் போடப்படும் என்று கூட மிரட்டினார்கள்! எத்தனையோ மிரட்டல்களில் அது ஒரு மிரட்டல்!

அப்படியொரு வழக்குப் போடப்பட்டால் இன்னும் பல விஷயங்களை அம்பலத்திற்குக் கொண்டு வர முடியும் என்பதற்காகவே இக்கடிதம் எழுதுகிறேன்.

மற்றவர்களை ஊழல் பேர்வழிகள் என்று கூறிக்கொண்டு, தங்களை மகாத்மாக்களாக மக்களிடம் காட்டிக்கொண்டு ஏமாற்றும் வேலையை இவர்கள் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்தால் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்.

புனித ராஜ்யம் என்ற போலித் திரை கிழிக்கப்பட்டு, இவர்கள் புரிந்துள்ள ஊழல்கள், பொதுமக்கள் முன்னிலையில் காட்சிப் பொருள்களாக வைக்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை! இன்னும் உண்டு ஏராளமாக! எழுதத்தான் நேரமில்லை! தொடர்ந்து எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(30-06-1979)

673. அறிக்கையும் அவலமும்! 4

நெருப்புக்கு ஏன் பஞ்சுமெத்தை?

உடன்பிறப்பே,

1957-ஆம் ஆண்டு என்று நினைவு! தோழர் சம்பத் அவர்கள் நம்முடன் இருந்த கால கட்டம்! முகவை மாவட்டக் கழக மாநாடு தேவகோட்டையில் நடைபெறுகிறது! மாநாட்டுச் செயலாளராக ஒருவர் பொறுப்பேற்றிருந்தார். சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் மாநாடு! இரண்டாம் நாள் ஞாயிறன்று முற்பகல் நிகழ்ச்சி முடிவடைகிறது! மாலை நிகழ்ச்சி நாலு மணிக்குத் தொடங்குகிறது! பரபரப்புடன் ஓடிவருபவரைப் போல அந்தச் செயலாளர் ஓடிவந்தார். அண்ணா, நாவலர், பேராசிரியர், சம்பத், என்.வி.என்., நான் எல்லோரும் இருக்கிறோம்.

அண்ணா! பணத்தை அடித்துப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்றார் அந்த மாநாட்டுச் செயலாளர்!

ஏது பணம்? எந்தப் பணம்? எவ்வளவு பணம்?

அண்ணா வியப்புடன் கேட்டார்.

மாநாட்டு வசூல் பணம்! புக்கிங் ஆபீசிலிருந்து எடுத்துக்கொண்டு போனேன். கடைத் தெருவில் நாலைந்து பேர், வழிமறைத்து அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். மொத்தம் நாலாயிர ரூபாய்! என்றார் பரபரப்புக் காட்டிய அந்த நண்பர்.

மாநாட்டில் வசூலான பணத்தை நீ ஏன் எடுத்துக்கொண்டு போனாய்? எங்கே எடுத்துக்கொண்டு போனாய்?

அண்ணா கேள்விகளைத் தொடுத்தார்.

பணத்தைப் பாங்கில் போட எடுத்துப் போனேன் அண்ணா!

என்றார் பரபரப்பாளர்.

ஓகோ! தேவகோட்டையில் ஞாயிற்றுக்கிழமை கூட பாங்கு உண்டோ?

அண்ணா மிக அமைதியாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு எங்களைத் தனது அழகிய குறும்புப் பார்வையால் வளைத்தார்.

பிறகு அன்றைய மாநாட்டு நிகழ்ச்சியில் அண்ணா உற்சாகமாகவே கலந்து கொள்ளவில்லை. சம்பத்தைக் கூட சிறிது நேரமே பேசச் சொன்னார். இரவு நானும் நண்பர்களும் நடிக்கும் நாடகம் வேறு! அதில் பத்து காட்சிகளைக் குறைத்து நாடகத்தை விரைவில் முடித்து விட்டு வா! விரைவில் திருச்சிக்குப் போகலாம் என்று எனக்கும் கடுமையாகக் கட்டளையிட்டார். சில நாட்களுக்குப் பிறகு அந்த மாநாட்டுச் செயலாளரின் மோசடி குறித்து முகவை மாவட்டக் கழகம் திருத்தங்கல் என்னும் ஊரில் கூடி விவாதித்து அந்த நண்பரை கழகத்திலிருந்து சில ஆண்டுக்காலம் தள்ளி வைத்து தீர்மானம் நிறைவேற்றித் தலைமைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்தது. அண்ணா அவர்களும் அந்தத் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார்.

யார் அந்த நண்பர்? அவரை யாரென்று நமது நாவலருக்கு நன்றாகத் தெரியும். அந்த நண்பர், இப்போது ஊழலைக் கருவறுக்க உரத்த குரல் எழுப்புவேன் என்கிறார். ஆண்டுக்கு இரண்டு மலர்களை வெளியிட்டு அரசாங்கத் தயவோடு ஐம்பதாயிரம் அறுபதாயிரம் என்று சம்பாதித்துப் பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மூன்று ரூபாய் மட்டுமே மதிப்புள்ள மலர்கள்; நூல் நிலையச் சிறப்புப் பதிப்பு என்ற பெயரால் பத்து ரூபாய் விலைக்கு அரசின் ஆதரவோடு வாங்கப்படுகின்றன!

நாணயம் - நேர்மை - உண்மை - ஊழலில்லாமை - இத்தனை கல்யாண குணங்களும் கொண்ட அரசாம் இது! அதனால் இதற்கு இரண்டாம் ஆண்டு விழாக் கொண்டாட வேண்டுமாம். உடன்பிறப்பே, ஒரு சேதி தெரியுமா உனக்கு? சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் பிறந்த நாள் விழாவிலே ஒரு மகத்தான சோக

நாடகமே நடைபெற்றிருக்கிறது. மதுவிலக்கு அவசரச் சட்டம் - அதையொட்டி சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட கடுமையான சட்டம் - இவற்றை தி.மு.கழகம், தக்க காரணங்களைக் காட்டி கண்டித்தது அல்லவா? அதை விமர்சித்து ம.பொ.சி. அவர்கள் ஒரு நூலில் ஏதோ காரசாரமாகக் குறிப்பிட்டிருக்கிறாராம்! அவர் நிலைக்கு இப்போது அவர் கடைப்பிடிக்க வேண்டிய காரியம் அது! அதை அவர் செய்துள்ளார்! அத்துடன் நில்லாமல், அவரது தந்தையார் குடித்து விட்டு வீட்டில் துணைவியாரை அடிப்பாராம்! அதை உருக்கமுடன் சிலம்புச் செல்வர் அந்த நூலில் எழுதியுள்ளாராம்! அதை அந்தப் பிறந்தநாள் விழாவில் முதலமைச்சர் படித்துக் காட்டிவிட்டு அவரே அழுதுவிட்டாராம்! குரல் தழுதழுத்ததாம்! வந்திருந்தோர் அனைவரும் அழுதனராம்! ஒரே வேதனை வெள்ளமாம்!

ஆவும் அழுத; அதன் கன்று அழுத; அன்று அலர்ந்த
பூவும் அழுத; புனல் புன் அழுத கள் ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத கால்வயப்போர்
மாவும் அழுத; .....

இராமன் காடு செல்வது கேட்டு இத்தனையும் அழுதன என்று கம்பன் பாடுகிறான்!

நமது முதல்வர் அழுதபோது -
மக்கள் அழுத; மன்றில் இருந்தோர் அழுத
மாவீரன் அருகிருந்து அழுத;

என்றல்லவா கவிதை எழுதிட வேண்டும். ஏனெனில் மதுவரக்கனைக் கொப்பரைகளில் போட்டுக் கொதிக்க வைத்துக் கொல்லச் சொல்லி அதற்கென மாதந்தோறும் கள்ளச் சாராய வியாபாரிகளிடம் பல்லாயிரக்கணக்கில் கப்பம் வாங்குவோர் சிலர் முதல்வருக்குப் பக்கத்திலும், எதிரிலும் அமர்ந்து முதல்வரோடு சேர்ந்து அழுத காட்சியை டிராஜிடி நாடகங்களில் தலைசிறந்தவரான ஷேக்ஸ்பியரால் கூட வர்ணிக்க முடியாது என அந்த விழாவுக்குச் சென்று வந்தோர் கூறுகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு அமைச்சர்! ஆமாம், அந்த மாவட்டத்துக்காரர்! என் எலும்பை உடைத்துச் சுவை பார்க்க

வேண்டுமென்று அறைகூவல் விடுத்து அந்த நல்ல நாளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் அன்பர்! அவரது உடன்பிறப்பு ஒருவராம்! கிழக்கு மேற்கு ராமநாதபுர மாவட்டங்களில் அசைக்க முடியாத சாராய சாம்ராஜ்யத்தை உருவாக்கித் தனது சகோதரர் தயவோடு பரிபாலனம் செய்து கொண்டிருக்கிறாராம்!

நேர்மை - நாணயம் - உண்மை - லஞ்ச ஊழல் இல்லாமை - என்ற மயில்கள் இந்த ஆட்சியில் எப்படித் தோகை விரித்தாடுகின்றன; பார்த்தாயா?

பண்பாடு பற்றிப் பேசவும் இவர்கள் சில நேரங்களில் பாய்ந்தோடி வருகிறார்கள்!

மாலை 3.30 மணிக்கு அண்ணா சிலையருகே வந்து முதலமைச்சர் மக்களுக்குத் தரிசனம் கொடுக்கப் போகிறார் என்பதற்காகக் காலை 10 மணிக்கு அந்த வழியே சென்ற பாங்கோ ஆறுமுகத்தின் சவத்தைக் கீழே தள்ளி, கொள்ளிச் சட்டியை உடைத்து, தாழ்த்தப்பட்ட மக்களின் இதயத்தில் வேலால் குத்தியதுமல்லாமல், அப்படிச் செய்தது சரிதான் என்றும் அமைச்சர்கள் வாதிட்டார்களே - அது நேர்மையின் எடுத்துக்காட்டுதானே! உண்மையின் பிரதிபலிப்புத்தானே! பண்பாட்டின் உச்சக் கட்டம்தானே!

வாகைக்குளத்தில் ஐந்து விவசாயிகளைச் சுட்டு வீழ்த்தியது! அதில் இரண்டு தாய்மார்களைப் பிணமாக்கியது! இரண்டு ஆண்டு கால ஆட்சியில் சுமார் இருபது பேரைச் சுட்டுக் கொன்றிருப்பது! தொழிற்சங்கங்களை உடைக்கத் துடிப்பது! அரசு அலுவலர் சங்கத்தைப் பிளந்திடப் போட்டிச் சங்கம் அமைப்பது! எல்லாமே சாதனைகள்தானே!

இந்தச் சாதனைகளை எடுத்துச் சொல்ல விழா கொண்டாடத்தானே வேண்டும்?

குறவஞ்சி படத்திலே ஒரு வசனம் எழுதியிருந்தேன்;
நெருப்புக்கு ஏன் பஞ்சு மெத்தை?
இந்த நெறியற்ற ஆட்சிக்கு ஏன்
மணிவிழா?

அதே கேள்வியைத்தான் இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் பாதிக்கப்பட்டோர் இந்த ஆட்சியைப் பார்த்துக் கேட்கிறார்கள்!

சாதனை என்ற பெயரால் வேதனைகள் இத்துடன் முடிந்ததா? இன்னும் உண்டு! பொறுத்திரு! எழுதுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(01-07-1979)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

நவம்பர் 2022